
# தீர்ப்பு

(நாவல்)

கற்பனைச் சிற்பி

பசுந்தீவு கோவிந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய அறிவித்தல்

## கரைச்சி பிரதேச சபை– கிளிநொச்சி
## பொது சன நூலகம்
### கிளிநொச்சி/முரசுமோட்டை/
### வட்டக்கச்சி/ ஸ்கந்தபுரம்

நீங்கள் எடுத்துச் செல்லும் புத்தகத்தில், கீறுதல், வெட்டுதல், கிழித்தல், அழித்தல், அழுக்குப் படியவிடல் மற்றும் ஊறுபடுத்தல்களைச் செய்யவேண்டாமென மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம். புத்தகங்களை நீங்கள் எடுக்கும் பொழுது இப்படியான குறைபாடுகளைக் கண்டால் நூலகப் பொறுப்பாளருக்கு உடன் தெரிவிக்கவும். இல்லையேல் நீங்கள் எடுத்துச் சென்ற புத்தகம் நல்ல நிலையில் இருந்ததெனக் கருதப்படுவதுடன் ஊறுபடுத்தல்களுக்கு நூலகப் பொறுப்பாளரினால் விதிக்கப்படும் தண்டத்தை நீங்கள் ஏற்க வேண்டி ஏற்படும் என்பதனையும் அறியத் தருகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்ப்பு

(நாவல்கள்)



கற்பனைச் சிற்பி

**பசுந்தீவு கோவிந்தன்**

**வெளியீடு:**

கோ. சரோசினிதேவி
63-331 Trudelle St.
Scarborough, ON.
M1J 3J9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு: ஏப்ரல், 2010

பதிப்புரிமை: ஆசிரியருக்கே

அச்சமைப்பு: மா. கனகசபாபதி


அச்சிட்டோர்: VIVEKA PRINTERS
100 - 1911 KENNEDY ROAD
TORONTO, ON.
M1P 2L9
416-410-6401






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



07084

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்"
எனும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க
என்னை அவையத்து
முந்தியிருக்கச் செய்த
எனது பெற்றோராகிய உங்களுக்கு
இந்நூலைச்
சமர்ப்பணம் செய்வதிற்

7084



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

| | பக்கம் |
| --- | --- |
| முன்னுரை | 05 |
| அணிந்துரை | 09 |
| கதாசிரியர் உரை | 15 |
| ஆதி அருள்நெறி மன்றத்தின் பார்வையில் | 20 |
| தீர்ப்பு | 23 |
| கனடா முதியவர் | 185 |
| இணைப்பு -1 | 269 |
| இணைப்பு - 2 | 299 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

கல்கி, சாண்டில்யன் போன்ற இந்திய நாவல் ஆசிரியர்களும் நந்தி, முருகையன் போன்ற இலங்கை எழுத்தாளர்களும் நாவல், சிறுகதை என்பவற்றின் மூலம் அரசியல், வாழ்க்கை, சூழல் சமூகப்புரட்சி போன்ற படைப்புக்களை எழுதி வாசகர் மனங்களைத் தாமே கவர்ந்துள்ளனர்.

இருபதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலும் இருபத்தோராம் நூற்றாண்டிலும் இலங்கையில் ஏற்பட்ட சுதந்திரப் போராட்டத்தின் காரணமாகப் புலம்பெயர்ந்து மக்கள் உலகின் பலபாகங்களிலும் வாழ்ந்துவர ஆரம்பித்தனர். தற்போது உலகில் ஏற்பட்டுள்ள பொருளாதார வளர்ச்சி, பல்லினமக்களின் வாழ்க்கை வேறுபாடு, தொழில்நுட்பக் கருவிகள் என்பவற்றின் காரணமாகக் கவிதைகள், கட்டுரைகள், நாவல்கள் என்பவற்றைப் பலரும் எழுதத் தொடங்கினர். பத்திரிகைகளிலும் இணையத்தளங்களிலும் உடனுக்குடன் வாசிக்க வசதி ஏற்பட்டது.

இந்தவகையிற் பசுந்தீவு கோவிந்தன் தனது படைப்புக்களில் வீரம், காதல், ஊழல், துப்பறிதல் போன்றவற்றுடன் கருத்துப்புரட்சி, நவரசம், தாயக உணர்வு, தமிழீழப் போராட்டம், தமிழ் மக்களின் சமுதாயப்புரட்சி ஆகியவற்றைக் கையாள்வதன் மூலம் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறார். இவர் தனது கற்பனைத்திறன் மூலம், தான் சொல்ல வந்ததை வாசகர்கள் அறிந்து கொள்ளக்கூடிய இலகுவான மொழிநடையில் எழுதி, அடுத்து நடப்பது என்ன என்பதை அறிய வேண்டுமென்ற ஆவலைத் தூண்டுகின்ற சிந்தனை ஓட்டத்தை உருவாக்கும்திறமை கொண்டவர். இவர் உபயோகிக்கும் பழமொழிகள் பொருத்தமான இடங்களில் அமைகின்றன. இதிலிருந்து இவரது வாழ்வில் இவரொரு எழுத்தாளர் மட்டுமல்ல வாசகராகவும் இருக்கிறார் என்பதை அறிய முடிகின்றது.

இவரது முதல் வெளியீடு **வாடாத ரோசா** ஆகும். இதில் நான்கு குறுநாவல்களை வெளிப்படுத்தி வாசகர்களின் மனங்களை ஈர்ந்துள்ளார். இதில் இவர் கண்ட வெற்றியே அடுத்த வெளியீட்டை உருவாக்கக் களம் அமைத்துக் கொடுத்தது. இவரின் கற்பனா சக்தியும் எழுத்தாற்றலும் வளர அடி எடுத்துக் கொடுத்த பெருந்தகை பிரபல பல்வைத்திய நிபுணர் ஆதிகணபதி சோமசுந்தரம் என்பதை மறுக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது இரண்டாவது வெளியீடு **தீர்ப்பு** என்பதாகும். இதிற் தீர்ப்பு, கனடா முதியவர் என்ற இரு குறுநாவல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இவையும் முரசொலிப் பத்திரிகையிற் தொடர்ந்து வெளிவந்தவை. பலரின் பாராட்டைப் பெற்றவை. அடுத்து என்ன சொல்லப்போகிறார் என்ற நிலைக்குக் கொண்டு செல்லும் கற்பனைத் திறன் கொண்டவை.

தீர்ப்பு என்னும் நாவல் தமிழீழத்தை மையமாகக் கொண்டு எழுதப்பட்டது. இதில் நாகதேவன் என்று ஒரு பணக்காரனை உருவாக்கித் தம்பணத்தைக் கொண்டு நாட்டில் ஏற்படுத்திய கெட்ட செயல்களையும் உள்ளூரில் உள்ள அரச ஊழியர்களைத் தன் காலடியில் வைத்துச் செய்த கொடுமைகளையும், இவற்றின் உண்மைத்தன்மையை வேணியென்ற துப்பறியும் பாத்திரத்தின் மூலம் வெளிப்படுத்தியதும், தமிழீழத்தில் இருந்த நீதிநிர்வாக முறையை எண்ணக் கருவாக வைத்துத் தனது கற்பனா சக்தியினால் உண்மையான தீர்ப்பை நிறைவேற்றியதையும் பார்க்கும்போது இவரது சிந்தனா சக்திக்கு யாருமே ஈடுகொடுக்கமாட்டார்கள் என்பது எனது நம்பிக்கை.

இவர் ஆக்கிய முருகன் என்னும் பாத்திரத்தின் மூலம் பாலியல் வல்லுறவுக்குட்பட்டவர்களின் பரிதாப நிலையையும், மக்கள் அவர்கள் மேல் வைத்திருக்கும் எண்ணக் கருத்துக்களையும் வியாக்கியானங்களையும் எத்தனை முறை படித்தாலும், மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டும்.

இவரது சில சிந்தனைகளின் சிறப்பைக் கீழே தருகின்றேன். அடுத்து என்ன சொல்கிறார் என்பதைக் கதையை வாசிப்பதன் மூலம் அறிந்து கொள்ளுங்கள்.

1. சட்டத்தின் விசாரணை முடிந்து கோவை நிரந்தரமாய் மூடப்பட்டாலும் சமூகத்தின் விசாரணை முடிந்தபாடில்லை. குற்றவாளி சட்டத்தின் பிடிக்குள் அகப்படாமற் தப்பித்துக் கொள்ளலாம். ஆனாற் சமூகத்தின் பார்வையில் இருந்து தப்பித்துக் கொள்வது என்பது இயலாத காரியம்"...
2. 'உங்களுடைய உணர்வை, சூழ்நிலையின் தேவையை, அதன் அவசியத்தை, மனச்சாட்சியின் குமுறலை, நீதியின் தீர்ப்பை, மானிட தர்மத்தின் அறைகூவலை வெளிப்படுத்திய வேண்டுகோளாகவே"...
3. எம் ஒவ்வொருவரிடமும் ஓர் உயிர்தான் உண்டு. அது ஒரு தடவைதான் போகப்போகின்றது. அது ஒரு உன்னதமான காரியத்துக்காகப் போனால்"....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சிங்கத்துடன் சீண்டினால் அது என்ன செய்யும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். சிறுபிள்ளைத்தனமாக என்னுடன் சீண்ட வேண்டாம்"...

5. ஒழுக்கம் பெண்களுக்கு மட்டும் உரிய விடயமல்ல. ஆண்களுக்கும் உரிய விடயம்தான். ஒழுக்கம் கெட்ட ஆண்களும் இருக்கிறார்கள், பெண்களும் இருக்கிறார்கள்"...

கனடா முதியவர் என்ற இரண்டாவது நாவல் தமிழீழத்தையும், கனடாவையும், இந்தியாவையும் மையமாகக் கொண்டு ஆக்கப்பட்டுள்ளது.

இதில் விசாலாட்சி, முரளி, சஞ்சயா ஆகியவர்களை முக்கிய பாத்திரங்களாக அமைத்துள்ளார். விசாலாட்சியின் மகன் கனடாவில் ஒரு வங்கியிற் தொழில்புரிந்து வருகின்றார். இவர் தாயாரை ஸ்பொன்சர் செய்து கனடாவுக்கு அழைத்து இருவரும் அன்பாக வாழ்கின்றனர். தாயார் மகனுக்கு விவாகம் செய்ய விரும்பி நீ யாரையும் காதலிக்கிறாயா என்று கேட்டார். அவரும் வங்கியிற் தன்னோடு தொழில்புரியும் ஒருவரை விரும்புகிறேன் என்று கூறுகிறார். தாயும் பெண்ணைப் பார்த்து விவாகம் செய்து வைக்கிறார். சில காலத்தின் பின் மாமி மருமகள் யுத்தம் ஆரம்பமாகிறது. தாய் கனடாவை விட்டுத் தமிழீழம் செல்ல விரும்புகிறார். மகனும் சம்மதிக்கிறார். அங்கு தனது வீட்டிற் தனிமையாய் இருக்கிறார். பின்னர் மூத்த மகளுடன் இருக்கப் புறப்பட்டவர் அங்கு யுத்தவீரர்களாலும் அவர்களுடன் இயங்கும் சிலராலும் பாதிக்கப்பட இந்தியா செல்ல விரும்பிக் குடும்பத்தவருடன் கள்ளத்தோணி மூலம் இந்தியா செல்கின்றார். செல்லும் வழியிற் சென்ற வள்ளம் கடலிலே மூழ்க மருமகன் மாத்திரம் தப்ப ஏனையோர் அனைவரும் இறக்கின்றனர். இதுதான் கதையோட்டம்.

இக்கதையில் வரும் ஆசிரியரின் சில கற்பனைகள்:

1. "மருமகள் தொலைபேசி எடுத்த நேரம் வானொலியில் முதியோர் நிகழ்ச்சி போய்க் கொண்டிருந்தது. அதிற் பங்குபற்றுவதற்காகத் தொலைபேசியைக் காதுக்குள் வைத்துக் கொண்டிருந்தேன். அரைமணித்தியாலத்துக்குப் பிற்பாடுதான் எனக்குத் தொடர்பு கிடைத்தது".

2. அம்மாவின் கதையைக் கேட்டு ஆச்சரியமடைந்த முரளி "யார் அம்மா சொன்னது உங்களுக்கு மாதாமாதம் ஆயிரம் டொலருக்குமேற் பணம் வருகிறதென்று"...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. "தம்பி நான் உன்மீதும் உனது மனைவி மீதும் கொண்ட வெறுப்பின் காரணமாய்த் திரும்பிப் போகிறேன் என்று தப்பாக எண்ண வேண்டாம்".

மேற்கூறப்பட்ட சொற்றொடர்களை அறிய இக்கதையைப் பலமுறை படித்துக் கதையின் உயிரோட்டத்தை அறிந்து கொள்ளுங்கள். உங்கள் வாசிப்பு பசுந்தீவு கோவிந்தனின் எழுத்தாற்றலையும், அவரின் சிந்தனாசக்தியையும் வளர்க்கும்.

கதையின் தன்மைக்கேற்பப் பாத்திரப்படைப்புகள் சமகாலத்துக்குப் பொருத்தமான யதார்த்தமுள்ள உயிரோட்டமானதாக அமைந்திருப்பதும் தான் எடுத்த பாத்திரத்தை வாசகர்கள் விளங்கிக் கொள்ளத் தேவையான இடத்திற் பொருத்தமான பழமொழிகளைப் புகுத்தி எழுதுவதும் இவருக்குள்ள விசேட திறமையாகும். இவரது படைப்புக்கள் தொடர்ந்து வெளிவர வாசகர்கள் அனைவரும் கைகொடுக்க வேண்டும் என்பது எமது விருப்பமாகும்.

எனவே அவரது சிந்தனாதோட்டத்திற் பல்வேறு மலர்கள் மலர்ந்து மணம்பரப்ப உதவுவோம். வளர்க அவரது சிந்தனாசக்தி. வாழ்க அன்புக் கோவிந்தன்.

நன்றி
வணக்கம்.

கனடா
6-11-2009

கா. நாகலிங்கம்
முந்நாள் அதிபர்
உருத்திரபுரம்
இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

பேராசிரியர் இளையதம்பி பாலசுந்தரம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - கனடா வளாகம்.

21ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட கால இலக்கியங்கள் இதுவரை காலமும் மக்களின் அகப்புற வாழ்க்கைமுறைகள், சமயம், தத்துவம், அரசியல், சமூகம், தேசியவிடுதலைப் போராட்டங்கள் முதலான பல்வேறு விடயங்களைப் பொருள்களாகக் கொண்டே வரையப்பட்டுவரலாயின. கடந்த மூன்று தசாப்தங்களாகத் தமிழகத்திலிருந்தும் ஈழத்திலிருந்தும் புலம்பெயர்ந்து பிறநாடுகளில் வாழும் தமிழ் மக்களின் வாழ்வியலும், அவர்களது அகப்புறச் சூழல்களும், பொருளாதாரச் சிக்கல்களும், பல்லினப் பண்பாட்டுத் தாக்கங்களும், மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியின் பயன்பாட்டுப் பெறுபேறுகளும் சமூகப் பிரக்ஞையுள்ள எழுத்தாளர்களது படைப்புகளிற் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாகப் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் பல்வேறு கலாச்சார சூழல்களில் அமைந்த புதுவாழ்வு முறைகளையும், புதிய சமூக, பொருளாதார அனுபவங்களையும் சித்தரிக்கும் இலக்கியங்களும் புதுமைநெறி கொண்டனவாகவே அமையவேண்டும் என எதிர்பார்ப்பது காலத்தின் தேவையாகிறது. அவ்வகையிற் கனடாவிற் புலம்பெயர்ந்து வாழும் பசுந்தீவு கோவிந்தனின் படைப்புக்கள் எவ்வாறு அமைந்திருக்கின்றன என்பதை வாசகர்கள் படித்தறிந்து அவரது படைப்புக்களுக்கு மதிப்பளிப்பார்களென நம்புகிறேன்.

புலம்பெயர் இலக்கியம் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் இலக்கியத் தோட்டத்திற் தடம்பதித்து வளர்ந்து வருகின்றது. கவிதை, சிறுகதை, குறுநாவல், நாவல், நாடகம். கட்டுரை, இலக்கியம் என்ற பல்துறை வீச்சுகளிற் பல்வேறு படைப்புகள் நூல்களாக வெளிவந்துகொண்டிருக்கின்றன. கனடா, ஐரோப்பிய நாடுகள், அவுஸ்திரேலியா முதலான இடங்களிலிருந்து வெளிவரும் இலக்கியப் படைப்புகள் எம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. புலம்பெயர்நாடுகளின் தொழில்நுட்ப வசதிகளும், ஆங்குள்ள பொருளாதார வசதிகளும் இத்தகைய வெளியீடுகளுக்குப் பக்க பலமாக இருப்பதென்பதும் உண்மையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையத்தளங்களிற் பல நூற்றுக் கணக்கானோர் கவிதைகள், கட்டுரைகள் எழுதுகிறார்கள். அவற்றின் வாசகர் எண்ணிக்கைப் பரப்பும் விசாலமானது.

கடந்த காலங்களைப் போன்று காத்திருந்து தொடர்கதைகளுக்காகவும் சிறுகதைகளுக்காகவும் சஞ்சிகைகள் வாங்கிப் படிக்கும் நிலைமை இப்போது மாறிக்கொண்டு வருவது நவீன ஊடகத்துறை வளர்ச்சியின் பயன்பாடென்றே கூறவேண்டும். அவ்வவ் நாடுகளில் வெளிவரும் வார இறுதிப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பன அவ்வவ்நாட்டு வாசகர்களின் இலக்கியத் தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்யாவிட்டாலும் ஓரளவுக்கேனும் ஈடுசெய்து வருகின்றன என்பதை இலக்கிய ஆர்வலர்கள் அறிவர். அவ்வகையிற் பசுந்தீவு கோவிந்தனின் படைப்பிலக்கியம் கனடாவிற் குறிப்பாக ஒன்ராறியோ மாகாணத்தில் வாழும் தமிழ் வாசகர்களால் அறியப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

கனடாவில் வாழும் தமிழ் எழுத்தாளர்களிற் பசுந்தீவு கோவிந்தன் கடந்த ஆறு ஆண்டுகளாகக் குறுநாவல்களை கனடா முரசொலி வாரப்பத்திரிகையில் எழுதி வருகின்றார். தான் எழுதிய தொடர்கதைகளில் வாடாத ரோசா, இலட்சியம், கனடா மாப்பிள்ளை, கானல் நீர் என்ற நான்கு குறுநாவல்களைத் தொகுத்து **வாடாத ரோசா** என்ற தலைப்பில் 2007 இல் வெளியிட்டிருந்தார். அவரது எழுத்துகளிற் சமூகக் கண்ணோட்டம், புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் வாழ்வியல் நிலைப்பாடுகள் என்பன இழையோடும் தன்மை கொண்டிருக்கின்றன. அத்துடன் தாயக மண்வாசனையுடன் இணைந்த கதாபாத்திரங்களைச் சிருட்டிப்பதில் பசுந்தீவு கோவிந்தன் அவர்களின் எழுத்தாற்றல் துல்லியமாகப் புலப்படுகின்றது. அதுபோன்று புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலுள்ள தமிழ்க் குடும்பங்கள் மத்தியிலும், தனிநபர் வாழ்க்கையிலும் எற்படும் சவால்கள், அவலங்கள், பிரச்சினைகள் முதலானவற்றையும் வெளிப்படுத்தி, சமூகப் பொறுப்புணர்வையும், சமூகக் கண்ணோட்டத்தையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் வகையில் பசுந்தீவு கோவிந்தனின் எழுத்தாற்றல் அமைந்திருத்தல் குறிப்பிடத்தக்கது.

கற்பனைகள் ஆகாயத்திலிருந்து குதிப்பவையல்ல என்பது வாசகர்களாகிய நீங்கள் அறியாத விடயமல்ல. பார்த்தவை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டவை, தெரிந்தவை, அறிந்தவை, அனுபவித்தவை, என்பவற்றிலிருந்துதான் கற்பனைகள் உருவாகும் (2007 : 6) என்ற உண்மையைத் தானாகவே எழுத்துருவிற் தந்து, கற்பனைக் கதைகள் புனைந்துள்ள பசுந்தீவு கோவிந்தனின் படைப்புகள் யதார்த்தமாக அமைவதில் வியப்பில்லை. **அவரது எழுத்து நடையே அலாதியானது. வளமான சொற்கட்டும், உணர்ச்சி ததும்பும் சொல் வளங்களும் பசுந்தீவு கோவிந்தனின் எழுத்து நடைக்கு வளம் சேர்த்துள்ளன.** அந்நூலுக்கு வாசகர் மத்தியிற் கிடைத்த பெரு வரவேற்பினாற் தூண்டப்பட்ட பசுந்தீவு கோவிந்தன் அவர்கள் தொடர்ந்தும் பல குறு நாவல்களைப் பத்திரிகையில் எழுதி வந்தார். அவற்றுட் தீர்ப்பு, கனடா முதியோர் என்ற இரு குறுநாவல்களைத் தேர்ந்தெடுத்துத் **'தீர்ப்பு'** என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளார்.

இந்நூலிலிடம் பெறும் குறுநாவல்கள் இரண்டிலும் தனிமனிதன், குடும்பம், சமூகம் என்ற அடிப்படையில் எத்தகு சமூக, பொருளாதார, வாழ்வியற் பிரச்சினைகள், அவலங்கள், கலாச்சாரத் தாக்கங்கள் என்பன இடம்பெற்றுள்ளன? அவற்றுக்கான எத்தகைய மாற்றங்களை பசுந்தீவு கோவிந்தன் தன் எழுத்துக் களிற் குறிப்பிடுகிறார்? எத்தகைய சமூக மாற்றங்களை எதிர்பார்க் கிறார் என்பதில் அவரது எழுத்தின் ஆற்றலைக் கண்டறிந்து கொள்ளலாம். அவரது கதாபாத்திரங்கள் எவ்வாறு அவரது குறிக்கோளை நிறைவேற்றுவனவாக அமைந்துள்ளன என்பதும் படித்தறிய வேண்டியனவாகும்.

**தீர்ப்பு, கனடா முதியவர்** என்ற இரு குறுநாவல்களும் கனடா முரசொலிப் பத்திரிகையினூடாக வாசகர்களுக்கு நன்கு அறிமுகமானவை. **தீர்ப்பு** என்ற குறுநாவலின் கதைக்களம் தாயகத்தில் இடம்பெறுவதாக அமைந்துள்ளது. பொருளாதார பலமும், அரசியல் அதிகாரிகளின் பக்க பலமும் பெற்றிருந்த நாகதேவனும் அவனது கையாட்களும் மனிதப் படுகொலை களுக்கும் அடாவடித்தனங்களுக்கும் அஞ்சாத நயவஞ்சகர்களாகச் சமூகத்தில் உலாவுகின்றனர். சமூக அநியாயம், அதிகாரத் துஷ்பிரயோகம், அரசியற் செல்வாக்கு, மற்றும் பணபலமும் உள்ளவர்கள், பல்வேறுபட்ட சமூகக் குற்றங்களைப் புரிந்துவிட்டு இலகுவாகத் தப்பித்துக்கொள்ளுதல், அப்பாவிப் பொதுமக்கள்மீது வீண்பழிகள் சுமத்தி அவர்களைத் தண்டனைகளுக்கு ஆளாக்குதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன இடம்பெறுதல் புதியனவல்ல. இதனைப் பின்னணியாகக் கொண்டு, அவற்றை வேரோடு இல்லாதொழிக்கும் முயற்சிகளுக்கு ஆதரவு அளிக்கும்வகையில் இக்கதை புனையப்பட்டுள்ளது. வேணி என்ற கதாபாத்திரத்தைத் துணிகரமாகப் படைத்து அக்கதாபாத்திர மூலம் அநியாயங்கள் அழிக்கப்படுவதற்குரிய திட்டங்களைக் கதைப்போக்கிற் புனைந்திருக்கும் பாங்கு பாராட்டத்தக்கது. ஈழத்தில் ஒரு காலக்கட்டத்தில் நிலவிய உறுதியான, நீதி தளம்பாத உள்ளூர் நீதி நிர்வாகக் கட்டமைப்பின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதாகவே இக்கதை அமைந்துள்ளது. இக்கதை பசுந்தீவு கோவிந்தனின் துணிகரமான எழுத்தாற்றலையும், பாத்திரப் படைப்பின் திறமைகளையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

பசுந்தீவு கோவிந்தனின் எழுத்துநடை கிராமிய மொழிவழக்கைத் தழுவியதாகவும், அனைவராலும் புரிந்து கொள்ளத்தக்கதாகவும் அமைந்திருப்பதோடு, மிகவும் எளிமையும், கற்பனைவளமும், தக்க இடங்களிற் பழமொழிகளைப் பயன்படுத்தித், தான்சொல்ல வந்த கருத்துகளை மிகச் செம்மையாக வெளிப்படுத்தியுள்ளமையும் பாராட்டத்தக்கதாக அமைந்துள்ளன. கதைகளில் அவர் கையாளும் பழமொழிகள் தாயக மக்களின் பேச்சுவழக்கினையும், அவருக்குள்ள மொழியாற்றலையும் வெளிப்படுத்துவனவாக அமைகின்றன. எடுத்துக்காட்டாக, "பருந்தின் கூட்டிற் பச்சைக்கிளி இடம்கேட்ட கதைதான", "ஆட்டுக்குட்டி நனைவதைப் பார்த்து ஓநாய் அழுத கதை", "சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டி", "சர்க்கரைப் பந்தலிற் தேன்மாரி பொழிந்தது போன்ற சந்தோசம்" முதலான பற்பல பழமொழிகளைக் குறிப்பிடலாம். கதைநிகழ்வுகள் யதார்த்தமாக அமைந்தாலும் அவற்றைத் தனது கற்பனையாற்றலாற் படைத்துக்காட்டும் விதம் இலக்கிய நயம் வாய்ந்தது.

இத்தொகுப்பில் இடம்பெறும் **"கனடா முதியவர்"** என்ற கதையின் களம் தாயகம், கனடா, தமிழகம் ஆகிய மூன்றிடங்களையும் தொடுத்து நிற்கிறது. கனடாவில் வாழும் தமிழ்க் குடும்பங்களைச் சேர்ந்த பெரும்பாலான முதியவர்கள் அனுபவிக்கும் மன வேதனைகள், அல்லல்கள் அளவற்றன என்று கூறுவதைச் சிலர் ஏற்க மறுத்தாலும் இது நடைமுறை உண்மை என்பதைக் குறிப்பிடுதல் நன்மை பயப்பதாகும். பெற்றோர் தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்காகச் செய்த தியாகங்கள் அர்ப்பணிப்புகள் எல்லாவற்றையும் பிள்ளைகள் மறந்து செயற்படும்நிலை என்பது மிகப் பரிதாபமானது. ஆனாற் பிள்ளைகளுக்காக, அவர்களின் நல்வாழ்வுக்காகப் பெற்றோர் தாம் அனுபவிக்கும் கஷ்டங்களையும் மனவேதனைகளையும் அவர்கள் வெளிப்படுத்துவதில்லை. இந்நிலைமை பெற்றோருக்கு மட்டுமன்றி மாமன் மாமிமாருக்கும் சமமாகவே நிகழ்கின்றன.

தமிழகத்தில் நிலவும் மாமியார் கொடுமைகள் பற்றிய செய்திகளை அங்கிருந்து வெளிவரும் இலக்கியங்கள், திரைப்படங்கள், சின்னத்திரை நாடகங்கள் என்பன வெளிப்படுத்துகின்றன. அதேபோன்று கனேடிய சமூகத்தில் நிலவும் மருமகள் / மருமகன் கொடுமைகள் பற்றிக் கனடிய இலக்கியங்கள் எழுதப் பின்னின்ற நிலையில், துணிவுடன் பசுந்தீவு கோவிந்தன் அவர்கள் இந்நாவலில் அவைபற்றி எழுதியிருப்பது அவர் கொண்டுள்ள சமூக அக்கறையின் பார்வையையும் சமூக சீர்திருத்த நோக்கையும் கோடிட்டுக் காட்டுகின்றன. அவ்வகையில் முதலில் அவருக்கு எனது பாராட்டுகள். குடும்பஸ்தர் ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய வகையில் இந்நூல் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கனடாவிலே, தாய் விசாலாட்சியுடன் வாழும் முரளி, தன்னுடன் வங்கியில் வேலை செய்யும் சஞ்சயா என்ற பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்துகொள்கிறான். அவர்களின் குடும்ப வாழ்க்கைப் பயணத்தில், முதலில் மருமகள் மாமியை வெறுத்தொதுக்கிறாள். பின்னர் மனைவியுடன் மகனும் சேர்ந்துகொள்கிறான். அவர்கள் முதியோர் சமூகக்கொடுப்பனவு நிதியைச் சுரண்டி வாழ்வதோடு, அம்முதியவருக்கு பல்வேறு மனவேதனைகளையும் அழுத்தங்களையும் கொடுக்கின்றனர். அவற்றைப் பொறுக்க முடியாத தாய், அவர்களாவது நிம்மதியாக வாழட்டும் என நினைத்து, தான் இலங்கைக்குச் செல்கிறார். அங்கு இராணுவத்தினரின் கொடூரமான வன்செயல்களால் அங்கும் வாழமுடியாமல், இந்தியாவுக்குக் கடல்வழியாக அகதியாகச் செல்லும்போது பரிதாபமாகக் கடலில் மூழ்கி இறக்கிறார். இத்தகைய கொடுமைகளை எல்லாம் பசுந்தீவு கோவிந்தன் சமூகத்திற் பார்க்கிறார். அவற்றை மிகவும் சாதுரியமாக எழுத்தில் தந்திருக்கிறார். இக்கதை புலம்பெயர் இலக்கியத் தோட்டத்திற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுந்தீவு கோவிந்தன் அவர்களுக்கு நல்லதொரு இடத்தைப் பெற்றுக்கொடுக்கும். இலக்கியம் வெறும் கலையாக மட்டுமன்றிச் சமூகக் கண்ணோட்டம் உடையதாக அமையும்போதே அது வாழ்வியல் இலக்கியமாகின்றது என்ற உண்மையை இக்கதைத் தொகுப்பு யதார்த்தமாக்குகிறது.

கலாநிதி. இ. பாலசுந்தரம்
ரொறன்ரோ,
கனடா
12-10-2009


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதாசிரியர் உரை

**எ**னது முதலாவது நூலாகிய "வாடாத றோசா" விற்கு வாசகர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற ஆதரவைத் தொடர்ந்து இந்நூலை வெளியீடு செய்கிறேன். இந்நூல் கடந்த ஆறுவருடங்களில் நான் எழுத்துத்துறையிற் பெற்றுக்கொண்ட அனுபவத்தையும் அடைந்திருக்கும் வளர்ச்சியையும் வெளிப்படுத்துமாப்போல் அமைந்துள்ளது என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை. இருந்தபோதும் எனது நம்பிக்கைக்கு அர்த்தம் கிடைக்கச் செய்வது வாசகர்களாகிய உங்களுடைய கைகளிற்தான் தங்கியுள்ளது என்பதை நான் ஒருபோதும் மறந்துவிடப் போவதில்லை.

இந்நூலிலுள்ள இரண்டு கதைகளும் நிசமும் நிழலும் கலந்த படைப்புக்கள் என்பதை வாசகர்களாகிய நீங்கள் அறிந்துகொள்வதற்கு அதிக நேரம் பிடிக்காது. கற்பனை என்பது ஆகாயத்திலிருந்து குதிப்பவையல்ல. கற்பனைக்குரிய தளம் உலகில் இடம்பெறும் நிகழ்வுகளாய்த்தான் இருக்குமென்பது நான் கூறித்தான் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற அவசியமும் இல்லை. நான் எடுத்துக்கொண்ட கருவிற்கு, வலுச்சேர்க்கும் முகமாகச் சில நிகழ்வுகளை எனது கதைகளில் இணைத்துள்ளேன். அந்த நோக்கத்தைத் தவிர எவரையும் தாக்குவதற்காகவோ அன்றிச் சாடுவதற்காகவோ அவற்றை நான் கையாளவில்லை என்பதை உறுதிபடக் கூறிவைக்க விரும்புகிறேன்.

தர்மத்தைத் தழுவியே மனிதகுலம் வாழவேண்டும், பெற்றோர்களை ஒருபோதும் அநாதரவாய் விட்டுவிடப்படாது என்பவைதான் நான் இங்கு வாசகர்களுக்குச் சொல்லவிளையும் விடயங்களாகும். அவற்றைச் சுற்றியே கதைகள் புனையப்பட்டுள்ளன. அதற்காக நிசமும் நிழலும் சேர்ந்த கலவை பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு எனது எழுத்தாற்றலைப் பிரயோகித்துக் கதைகளை வளமடையச் செய்துள்ளேன் என்பதை வாசகர்களாகிய நீங்கள் இவற்றை வாசிக்கும்பொழுது இலகுவாகப் புரிந்துகொள்வீர்கள்.

காதல் வீரம், சோகம், தியாகம், மமதை, ஆணவம், கொடுமை, சுயநலம், ஊழல், அராசகம், அக்கிரமம், அநியாயம், அதிகாரதுற்பிரயோகம், துப்பறிதல், காசியம் போன்ற மனிதவுள்ளத்தின் வேறுபட்ட வெளிப்பாடுகளை இக்கதைகளிற்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரப்பியுள்ளேன். இவற்றின்மூலம் பாத்திரங்கள் உயிரூட்டப்பட்டுள்ளன என்பதையும் இவற்றின் மூலம் கதைகள் யதார்த்த நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளன என்பதையும் கதைகளை இரசித்துப் படிக்கும்போது நீங்கள் நிச்சயம் அறிந்துகொள்வீர்கள்.

தமிழ் இனம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் நாகரீகமடைந்த இனமென்று சொல்லப்படுகின்றபோதிலும், மனித நேயத்திற்கு ஒவ்வாத பல விடையங்கள் நம்மிடையே பொதிந்து கிடக்கின்றன என்பது மறுக்கவோ, மறைக்கவோ முடியாத உண்மைகளாகும். அவைகள் நிச்சயம் களையப்பட வேண்டியவையுமாகும். படித்தவர்கள், பண்டிதர்கள், பாவலர்கள் என்று கருதப் படுபவர்கள்கூட இந்த மனித நேயத்திற்கு ஒவ்வாத விடயங்களுக்கு உடந்தையாயும் உறுதுணையாயும் இருந்துவருகின்றார்கள்.

அத்தோடு எமது சமுதாயத்திலுள்ள இன்னொரு முக்கியமான குறைபாடுடைய விடயம் கற்பனையான / மனோபாவமான வாழ்க்கை முறை (sentimental life). அதாவது, உண்மையை / யதார்த்தத்தை மறைத்து, வெளிவேசம் கொண்ட வாழ்க்கையை எமது மக்கள் விரும்புகிறார்கள். பச்சடியோடு பழஞ்சோற்றைச் சாப்பிட்டுவிட்டு, பத்துப் பதார்த்தங்களுடன் பசுமதி அரிசிச் சோறு சாப்பிட்டவர்கள் போன்று பாசாங்குபண்ண முயல்கிறார்கள். இந்தவகை வெளிவேச வாழ்க்கை மூலம் நம்மால் எதையும் இந்த உலகிற் சாதிக்க முடியாது, ஆபத்தில் மாட்டிக்கொள்வதையும் அழிந்து போவதையும்தவிர. இந்த மனோபாவம் ஒழிக்கப்பட வேண்டும். உண்மையை ஒத்துக்கொண்டு, முன்னேறுவதற்கு உறுதியோடு பாடுபடவேண்டும். அப்படிச் செயற்படுவதன் மூலம்தான் நாம் இந்த உலகத்தில் எதையேனும் சாதிக்க முடியும். அதற்காகத்தான் **வேணி** என்ற பாத்திரத்தை உருவாக்கிச் சாதனை புரியவைத்துள்ளேன்.

எமது சமுதாயத்திலுள்ள இன்னொரு குறிப்பிடத்தக்க குறைபாடு சமூகத்தின் உயர்மட்டத்தில் உள்ளவர்கள் (V.I.P) என்ன தவறைப் பண்ணினாலும் அதைப் பெரிதுபடுத்தாமலும் கண்டு கொள்ளாமலும் விட்டுவிடுவது. அதேவேளையில் யாரேனும் அப்பாவிகள் சந்தர்ப்ப சூழ்நிலையால் அல்லது தெரிந்துந் தெரியாமல் ஏதேனும் தவறு செய்துவிட்டால் அதைப் பெரிதுபடுத்தி, அவர்களைத் திருந்தி வாழுவதற்குக்கூடச் சந்தர்ப்பம் வழங்காமல், மட்டம் தட்டுவது. எமது சமுதாயத்தின் இன்றைய கேவல நிலைக்கு இதுவும் ஒரு முக்கிய காரணம். இதனாற்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்களின் சமூக பாதுகாப்பு நீதிமன்றை உருவாக்கினேன்.

இந்தக் கதைகள் மக்களுடைய பெரும் வரவேற்பைப் பெற்று, எழுத்துத்துறையில் எனக்கோர் சிறந்த வெற்றியைப் பெற்றுத் தருமென்று உறுதியாய் நம்புகிறேன்.

இரண்டு கதைகளும் பேச்சு வழக்கிலும் சம்பாசணை வடிவிலும் எழுதப்பட்டிருக்கின்ற படியினால் இலக்கணத் தமிழைத் தேடி நேரத்தை வீணாக்காதீர்கள்.

கதைகளை வாசிக்கும்பொழுது இவற்றில் வரும் பாத்திரங்களாக உங்களை உருவகப்படுத்திக் கொள்ளுங்கள். அப்போதுதான், உங்களால் எல்லா மனித உணர்வுகளையும் அனுபவித்துக் கதைகளை நன்றாக இரசிக்க முடியும்.

கதைகளில், இடையிடையே ஆங்கிலப் பதங்களும் வடமொழிப் பதங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதுவே இன்றைய யதார்த்தமாய் இருக்கின்றபோதும், இயன்ற அளவிற்கு அவைகளைத் தவிர்த் துள்ளேன். இதுவரை தனித்தமிழ்ப் பிரயோகம் நடைமுறைக்குச் சாத்தியப்படாததால் என்மீது குறைகூறவேண்டாம். அப்படியொரு காலம் வரும்போது அதைப்பற்றிச் சிந்திப்போம். சம்பாசணை வடிவிற் கதைகள் எழுதப்பட்டிருப்பதனால் மேற்கோட் குறிகள், கேள்விக்குறிகள், ஆச்சரியக்குறிகள், கொம்மா என்பவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து வாசிக்கத் தவறவேண்டாம். கதைகளை வாசிக்கும்பொழுது முதலிற் குறைகளைத் தேடாமல் நிறைகளை ஏந்தி வாசிக்கவும். இறுதியில் நிறைகளும் குறைகளும் அடங்கிய உங்களுடைய விமர்சனங்கள் நிச்சயம் வரவேற்கப்படும்.

இந்த இரண்டு கதைகளும் ஈழத்தமிழர்களின் தற்போதைய நிலமையையும் அதனால் நாம் மனதிற்கொள்ள வேண்டிய சில முக்கிய அம்சங்களையும் கருத்திற்கொண்டு எழுதப்பட்டுள்ளன. இக்கதைகளைப் படிப்பதன் மூலம் மனித நேயத்திற்கு ஒவ்வாத பத்தாம் பசலிக்கொள்கைகளை அகற்றிவிட வேண்டுமென்பதும் மனித நேயத்திற்கும் இறைவன் கொடுத்த மனச்சாட்சிக்கும் உரிய முறையில் வாழவேண்டுமென்பதும் அதன்மூலம் சாதனைகளை ஏற்படுத்திச் சமூக சுதந்திரம் பெற்ற சமுதாயமாக தமிழினம் வாழவேண்டுமென்பதும் எனது குறிக்கோள்களாகும்.

எனது எழுத்திற் சில இலட்சியங்கள் குறிக்கோள்கள் இருக்கின்றபோதும், முக்கியமாக இக்கதைகளைப் பொழுது போக்கிற்காக வாசிப்பதற்கு மட்டுமே எழுதியுள்ளேன். அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர்களைச் சோர்வடையாது பார்த்துக்கொள்வதிலேயே எனது பெருமளவு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எனவே வேறுபட்ட கோணங்களில் விமர்சனம் செய்வதைத் தவிர்த்துக்கொள்வது ஆரோக்கியமாய் அமையும்.

பல்வேறு படங்களைக் கதைகளின் இடையிற் புகுத்தியுள்ளேன். கதைகளை வாசித்துக்கொண்டு போகும்போது வாசகர்களுடைய உணர்வுகளைச் சந்தர்ப்பம் சூழ்நிலைக்கேற்ப எழுச்சியடையச் செய்யும் முகமாகவே அவற்றைப் புகுத்தியுள்ளேன். ஆனபடியாற் தர்க்கரீதியாக அவற்றை நோக்கி நேரத்தை வீணடிக்கவேண்டாமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இவைகள் பொழுது போக்கிற்காக எழுதப்பட்ட கதைகள் என்பதை இறுதிவரை மனதிற்கொள்ளவும்.

இந்நூலுக்கு முன்னுரை வழங்கிச் சிறப்பித்துள்ள எனது மிதிப்பிற்குரிய முந்நாள் அதிபர் கா. நாகலிங்கம் அவர்களுக்கும் இந்நூலுக்கு அணிந்துரை எழுதி என்னை ஊக்கப்படுத்தியும் இந் நூலை அழகுபடுத்தியுமுள்ள மதிப்பிற்குரிய பேராசியர் இ. பாலசுந்தரம் அவர்களுக்கும் என்றென்றும் நன்றியுடைவனாய் இருக்கின்றேன். எனது கதைகள் திறம்பட அமையச் செவ்வை பார்த்து உதவிய எனது அன்பிற்குரிய நண்பன் திரு. சோ. நடராஜசர்மா அவர்களுக்கும் எனது மதிப்புக்குரிய முந்நாள் அதிபர் கா. நாகலிங்கம் அவர்களுக்கும் இந்நூலை அழகுற அச்சமைப்புச் செய்துகொடுத்த திரு. மா. கனகசபாபதி அவர்களுக்கும் முன் அட்டைப்படம் வரைந்து கொடுத்த எனது மருமகன் செல்வன் முரளீதரன் கோணேஸ்வரம்பிள்ளை அவர்களுக்கும் எனது எழுத்திற்குத் தொடர்ந்து ஊக்கமளித்துக் கொண்டிருக்கும் எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம் அவர்களுக்கும் இந்நூலை அழகுற அச்சிட்டுக் கொடுத்த அச்சகத்தாருக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுவதிற் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அத்தோடு எனது முதலாவது நூலாகிய **வாடாத ரோசாவிற்கு** பேராதரவை வழங்கிய வாசக நேயர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கடந்த ஆறு ஆண்டுகளாக எனது படைப்புக்களுக்கு ஆதரவு அளித்துவரும் அத்தனை உள்ளங்களுக்கும் இந்த நிமிடத்தில் மனநெகிழ்வோடு மீண்டும் ஒருமுறை நன்றி கூறுகிறேன்.

நீங்கள் தரும் உற்சாகத்துடனும் வாழ்த்துக்களுடனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துத் துறையில், உச்சத்தைப் பிடிக்க முடியாவிட்டாலும், குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைவேன் என்பது எனது அசைக்கமுடியாத நம்பிக்கை

வாழ்த்துங்கள் ... வளர்கிறேன்!

இங்ஙனம்
பணிவன்புடன்
பசுந்தீவு கோவிந்தன்

416 431 6587
63-331 Trudelle St.
Scarborough, On. M1J 3J9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதி அருள்நெறி மன்றத்தின் பார்வையில் .........

பசுந்தீவு கோவிந்தனின் படைப்புக்களை ஆரம்பத்திலிருந்து அதாவது 2003ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து பிரசுரித்துவரும் ஒரே பத்திரிகை என்ற பெருமையைக் "கனடா முரசொலி" பெற்றுள்ளது என்பதை இங்கு மகிழ்ச்சியோடு சொல்லிவைக்க விரும்புகிறோம். **வாடாத றோசாவிற் தொடங்கித் தீர்ப்பு** வரை எட்டுத் தொடர்கதைகளை எழுதிப் பிரசுரிக்கச் செய்துள்ளார் பசுந்தீவு கோவிந்தன். தற்போது "கிழக்கும் மேற்கும்" என்னும் வாழ்க்கைச் சித்திரம் வெளிவந்து கொண்டிருக்கின்றது என்பதை வாசகர்களாகிய நீங்கள் அறிவீர்கள்.

இவருடைய படைப்புக்களை இடைவிடாது எமது பத்திரிகையிற் பிரசுரிப்பதற்கு முக்கிய காரணம் அவற்றிற்கு வாசகர்களிடமிருந்து கிடைக்கும் வரவேற்பேயாகும் என்பதை ஆத்மசுத்தியோடு கூறுகிறோம். பத்திரிகையை எடுத்தவுடன் முதலில் இவருடைய கதையைத்தான் படிப்போமென்று அநேக வாசகர்கள் எங்களிடம் கூறியுள்ளார்கள்.

இவருடைய எழுத்தில் நாங்கள் காணும் முக்கிய அம்சம் என்னவென்றாற் கதைகளில் வரும் பாத்திரங்கள் உயிரோட்டம் உள்ளவையாயும் படைப்புக்கள் யதார்த்தம் கொண்டவையாயும் அமைந்திருப்பதாகும். அத்தோடு யாவரும் இலகுவில் விளங்கக் கூடிய எழுத்தாற்றலும் இவரிடமுண்டு. பழமொழிகளை நிறையவே பயன்படுத்துவதன் மூலம் சொல்ல விளைவதைச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் வெளிப்படுத்தும் வல்லமை இவருக்குக் கைவந்த கலை. இவர் தனது கதைகளிற் சித்தரிக்கமுயலும் ஒரு காட்சியை வாசகர்களின் மனக்கண்முன் அப்படியே கொண்டுவந்து நிறுத்தும் ஆற்றல் இவருக்குரிய ஒரு விசேட சிறப்பம்சமாகும். இவை யாவற்றிற்கும் மேலாக இவருடைய கற்பனா சக்தி அபாரமானது என்பதை இவருடைய கதைகளைப் படித்து இரசித்த அனைவரும் ஏற்றுக்கொள்வர்.

இவை யாவற்றையும் கவனத்திற் கொண்டே இவருக்கு ஆதி அருள்நெறி மன்றம் **"கற்பனைச் சிற்பி"** என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. இது மிகவும் பொருத்தமான காரியமென்றே நாங்கள் கருதுகிறோம்.

பசுந்தீவு கோவிந்தன் தனது முயற்சியின் தொடராக அவருடைய படைப்புக்களில் இரண்டைத் தொகுத்துத் தனது இரண்டாவது நூலாகத் "தீர்ப்பு" என்னும் தலைப்பில் இந்நூலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு செய்கிறார். இவருடைய இந்நூல் இவர் கடந்த ஆறு ஆண்டுகளில் எழுத்துத் துறையிற் பெற்றுள்ள வளர்ச்சியையும் அடைந்துள்ள முன்னேற்றத்தையும் எடுத்துக் காட்டுவதுபோல் அமைந்துள்ளதென்றால் மிகையாகாது. பசுந்தீவு கோவிந்தனுடைய இந்நூல் வாசகர்களுடைய பெரும் வரவேற்பைப் பெறுவதன் மூலம், இவரது இந்த முயற்சிக்குப் பெருவெற்றியை ஈட்டிக்கொடுக்க வேண்டுமென்று உளமார வாழ்த்துகிறோம்.

வாழ்க தமிழ்! வளர்க எழுத்தாளரே!!

இங்ஙனம்
டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம்
ஆதி அருள்நெறி மன்றம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்ப்பு

## அங்கம் 1

**வட** தமிழ் ஈழத்தின் கீழக்கரையில் ஒரு கிராமம், அதன் பெயர் தாமரைக்குளம். அதன் கிழக்குப்பகுதி கடலும் கடல் சார்ந்த நிலமும் சேர்ந்த நெய்தல் நிலம். மேற்குப் பகுதி வயலும் வயல்சார்ந்த நிலமும் கொண்ட மருதநிலம். நிலமகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம்மலர்ந்த பூமியென்றால் மிகையாகாது. அந்தப் பூமியை வாழ்விடமாய்க் கொண்ட மக்கள் உண்மையிலேயே கொடுத்து வைத்தவர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். மருத நிலமும் நெய்தல் நிலமும் ஒன்று சேர்ந்த ஒரு கிராமத்தின் இயற்கை வளத்தை யாரேனும் சொல்லித்தான் மக்கள் அறிய வேண்டுமென்ற அவசியமில்லை. அதுமட்டுமல்ல அக்கிராமம் உதயசூரியன் முதலில் முத்தமிடும் பூமியுங்கூட. உதய சூரியனின் செங்கதிர்களிற் குளித்துத் தமது நாளாந்தக் கடமைகளை ஆரம்பிக்கும் அந்தக்கிராம வாசிகள் இயல்பாகவே தூய உள்ளம் படைத்தவர்கள். பரம்பரை பரம்பரையாகச் செல்வச் செழிப்புடன் இன்புற்று வாழ்ந்து வந்தார்கள் அந்தக் கிராமவாசிகள். அது வந்தாரையும் வாழவைத்த பூமி என்றாலும் மறுப்பதற்கில்லை. அந்தக் கிராமத்தின் நெய்தல் நிலப்பகுதியில் அமைந்துள்ள பிரதான வீதியோரமாக இருமருங்கும் இரண்டு பெரிய மரமுந்திரிகைத் தோட்டங்கள். ஒவ்வொன்றும் ஆயிரம் ஏக்கர் பரப்பளவைக் கொண்டவை. வீதியின் கிழக்குப் பக்கமாய் அமைந்துள்ள தோட்டத்தின் பிரதான வீதியை அண்மித்துப் பெரிய ஒரு வங்களா நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அந்த வங்களா அதன் சொந்தக்காரனுடைய பொருளாதார வளத்தையும், பெருமையையும் வெளிப்படுத்துமாப்போல் அமைந்திருந்ததென்றால் மிகையாகாது. இவற்றின் சொந்தக்காரன் ஒரு பெரிய புள்ளி, அவன் பெயர் நாகதேவன்.

இவன் பெரிய பணக்காரன். இந்த மரமுந்திரிகைத் தோட்டங்கள் மட்டுமல்ல, ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்திலும் ஈடுபட்டிருந்தான் நாகதேவன். யாழ்ப்பாணத்தில் வீடுவளவு காணிபூமி என்று ஏகப்பட்ட சொத்துக்கள். நாகதேவன் பணக்காரன் மட்டுமல்ல, பெரிய அளவில் அரசியற் செல்வாக்குப் படைத்தவனும்கூட. பொலிஸ் திணைக்களத்தில் எதையும் சாதிக்கக்கூடிய அளவிற்கு இவனுக்கு மதிப்பும் மரியாதையும் இருந்தது என்றால் யாரும் மறுப்பதற்கில்லை. தாமரைக்குளம் பிரதேச சபை இவனுடைய காலடியிற் கிடந்தது என்றால் மிகையாகாது. பிரதேச சபையில் இவன் சொல்லுவதுதான் சட்டம். அந்த அளவிற்கு இவனுடைய பணவலிமை பிரதேச சபை உறுப்பினர்களை ஆட்டிப்படைத்தது. இவனுடைய ஜீப் வண்டியைக் கண்டால் வீதியால் நடந்து செல்பவர்கள் விலகி வழிவிட்டுக் கொடுப்பார்கள். அது வண்டி போவதற்கு வழி விட்டுக் கொடுப்பது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்ல, முக்கியமாய் அவனுக்கு வழங்கப்படும் மரியாதையாயும் கருதப்பட்டது. நாகதேவன் வருகிறான் என்றாற் சிறுபிள்ளைகூட மரியாதை கொடுக்கும்.

இளம் பெண்களைக் கண்டாற் கோழிக் குஞ்சை வல்லூறு பார்ப்பது போன்று பார்ப்பான். பார்ப்பதோடு மட்டும் நின்றுவிட மாட்டான், கதையைக் கொடுத்துத் தனது வஞ்சகச் சிரிப்பிற்குள் விழுத்தி விடுவான். அவனைச் சூழ ஒரு கூட்டமே இருந்தது. அவனுடைய தோட்டத்தில் வேலை செய்யும் கூலியாட்கள் மட்டுமல்ல, அவன் போடும் எலும்புத் துண்டைச் சுவைத்துச் சாப்பிடும் அடியாட்களும் அவனைச் சுற்றியிருந்தனர்.



ஒருநாள் நாகதேவன் தனது அடியாட்களுடன் வங்களா விறாந்தையிலிருந்து சுவாரஸ்யமாகப் பேசிக்கொண்டிருந்தான். காலை பத்து மணி இருக்கும், இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க ஓர் இளம் பெண் எதிர்பாராத விதமாய் அந்த வங்களாவின் முற்றத்தில் வந்து நின்றாள். களையிழந்த முகம், களைத்துச் சோர்வடைந்த உடல், கலைந்து போன கூந்தல். மொத்தத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநாதரவாக விடப்பட்ட ஒரு பெண்ணைப் போன்று அவள் காட்சி கொடுத்தாள். நாகதேவன் அவளைக் காலிருந்து தலைவரை ஏறஇறங்கப் பார்த்தான். அந்த நிலையிலும் அவளுடைய கட்டான உடற்கவர்ச்சியைப் பார்த்து ரசித்த நாகதேவன், "உனக்கு என்ன வேண்டும்?" என்று மெத்தனமாகக் கேட்டான். உடனே அந்தப் பெண் கூப்பிய கைகளோடு, "ஐயா, உங்களுடைய தோட்டத்தில் அல்லது வங்களாவில் எனக்கு ஒரு வேலை கொடுங்கள். நான் உங்களுக்கு நாய் போன்று நன்றியுடையவளாக இருந்து உழைப்பேன்," என்றாள். எப்பொழுதும் நாகதேவன் புதிய முகங்களைக் கண்டாற் சந்தேகம் கொள்வது வழக்கம். இவள் மீதும் சந்தேகம் கொண்ட நாகதேவன், "உன்னை எனக்கு முன்பின் தெரியாது. உனது ஊர்பேர் தெரியாது. இப்படிப்பட்ட ஒரு பெண்ணுக்கு யார் வேலை கொடுப்பான்? நான் எப்படி உனக்கு வேலை தரமுடியும்?" என்று கேட்டு வாய் மூடியதுதான் தாமதம் அந்தப் பெண், "எனது பெயர் மகிழம்பூ. நான் நாவற்காட்டைச் சேர்ந்தனான். எனது பெற்றோர் எனக்குக் கல்யாணம் செய்துவைப்பதற்கான ஆயத்தங்களைச் செய்தனர்" என்று சொல்லி முடிப்பதற்குட் குறுக்கிட்ட நாகதேவன், "கல்யாணம் செய்துவைப்பது நல்லவிடையம்தானே. கட்டான கவர்ச்சியான மேனியை வைத்திருக்கிறாய். கல்யாணத்தைப் பண்ணிக்கொண்டு அனுபவிக்க வேண்டியதுதானே," என்று சொல்லிவிட்டு அவனது அடியாட்களைப் பார்த்துச் சிரித்தான். அவங்களும் சேர்ந்து ஏளனமாய்ச் சிரித்தனர். சிரிப்பொலி அடங்க அந்தப் பெண் தொடர்ந்து, "அந்த மாப்பிள்ளை ஒரு குடிகாரன், ஊதாரி, ஊர்சுற்றி, தன்னையே காப்பாற்ற வக்கில்லாதவன். அவனைப்பற்றி எனக்கு ஏற்கனவே தெரியும். அதனால் அந்தக் கல்யாணத்திற்கு நான் மறுப்புத் தெரிவித்துவிட்டேன். ஆனால் என்னுடைய பெற்றோர் எனது விருப்பயீனத்தை அலட்சியம் செய்துவிட்டு அவனைத்தான் கட்டிக் கொள்ளவேண்டும் என்று என்னை வற்புறுத்துகின்றார்கள். அவனைக் கட்டிக் கொண்டு மாரடிப்பதைவிட எங்காவது சென்று பிச்சை எடுத்துச் சீவிப்பது மேல் என்று எண்ணிக்கொண்டு வீட்டைவிட்டு ஓடிவந்துவிட்டேன். உங்களுடைய தோட்டத்தில் வேலை கொடுத்தால் உங்களுக்கு விசுவாசமாக உழைப்பேன் ஐயா!" என்று இரந்து கேட்டபொழுது அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர்த்துளிகள் உதிர்ந்தன.

பருந்தின் கூட்டிற் பச்சைக்கிளி இடம் கேட்ட கதைதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அப்பிராணியின் கதையைக் கேட்டதும் நாகதேவனுக்கு வாய் ஊறியது. "கொடுத்து வைத்தனான், எனது கூடுதேடி வந்து நிற்கின்றது பச்சைக்கிளி ஒன்று, அனுபவிக்க வேண்டியதுதான்," என்று தன்னுக்குள் கதைத்துக் கொண்டான். இச்சையிருந்தபோதும், மேலும் சந்தேகம் கொண்ட நாகதேவன் "சரி, உனக்கு வேலை கொடுத்துவிட்டேன் என்று வைத்துக் கொள்ளுவம். அப்புறம் உன்னுடைய பெற்றோர் வந்து எங்களுடைய பிள்ளையை விடுங்கள் என்று கேட்டால், அல்லது பொலிசைக் கூட்டிவந்து கேட்டால் அந்த நேரத்தில் நீ என்ன சொல்லுவாய்?" என்ற கேள்வியைப் போட்டான். அவன் பருந்து, தான் பச்சைக்கிளி என்பதை உணராத அந்தப் பெண் எப்படியும் வேலையைப் பெற்றுவிட வேண்டும் என்ற ஒரே எண்ணத்தில், "ஐயா! எனக்கு இப்பொழுது இருபத்தைந்து வயது. என்னுடைய விருப்பம் இல்லாமல் என்னுடைய பெற்றோர் தங்களுக்குமட்டும் பிடித்த ஒரு மாப்பிள்ளைக்கு என்னைத் திருமணம் செய்து வைக்க முடியாது. எனது பெற்றோர் பொலிசைக் கூட்டிவந்தால் எனது வீட்டில் நடந்த கதை முழுவதையும் பொலிசிற்குச் சொல்லிப் பெற்றோருடன் செல்லுவதற்கு நான் மறுத்துவிடுவேன். வயது வந்த என்னை எனது விருப்பம் இல்லாமல் எனது பெற்றோருடன் போகும்படி பொலிஸ் வற்புறுத்த முடியாது. பொலிசில்லாமல் அவர்கள் மட்டும் தனித்து வந்தால் இங்குள்ள எல்லோருக்கும் மத்தியில் அவர்களுடைய மாப்பிள்ளையைப் பற்றிக் கிளிக்கிற கிளிப்பில் வாயைப் பொத்திக்கொண்டு வந்த வழியே போகப்பண்ணுவேன். இதில் நீங்கள் எந்தச் சந்தேகமும் கொள்ள வேண்டியதில்லை ஐயா! நீங்கள் எனக்கு வேலையைக் கொடுத்தால் என்னைக் காப்பாற்றிக் கொண்டு இங்கேயே உங்களுக்கு விசுவாசமாய் இருந்துவிடுவேன் ஐயா," என்று கூறியதும், மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிய நாகதேவன், "சபாஸ்! நீ ஒரு புத்திசாலிப் பெண். உன்னைப் போன்ற புத்திசாலிப் பெண்கள்தான் எனக்கு வேண்டும்," என்று சொல்லி இரு கைகளையும் தட்டி எக்காளச் சிரிப்புச் சிரித்தான்.

ஒன்றும் அறியாத அந்த அப்பாவிப் பெண்ணும் மெதுவாகச் சிரித்துக் கொண்டாள். கதையைத் தொடர்ந்த நாகதேவன், "உனக்கு என்ன வேலை செய்யத் தெரியும்?" என்று முகாமைத்துவம் கலந்த தொனியிற் கேட்டான். அவனுடைய கேள்வியினாற் சற்றுப் பதட்டம் அடைந்த அந்தப் பெண் சிறிது

87084



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசித்துவிட்டு, "கூலிவேலை செய்யத் தெரியும், சமையல் வேலை செய்யத் தெரியும், வீடுவாசலைச் சுத்தம் செய்யும் வேலை தெரியும்," என்று சொல்லிக்கொண்டு போக இடையிற் குறுக்கிட்ட நாகதேவன், "நான் களைத்துப்போய் வரும்போது எனது கால்களை அமுக்கிவிடும் வேலையை செய்யத் தெரியுமா?" என்று நயவஞ்சகச் சிரிப்புச் சிரித்துக்கொண்டே கேட்டான். அப்படியான தொழிலைச் செய்து பழக்கமில்லாதபோதும் எப்படியாவது அங்கு வேலையைப் பெற்றுவிட வேண்டும் என்ற அவாவில், "நன்றாகக் கால் அமுக்கிவிடத் தெரியும் ஐயா! இதைத்தானும் உங்களுக்குச் செய்யமுடியாவிட்டால் நான் என்ன பெண்?" என்று அவனுடைய முகத்தைப் பார்த்து அவனில் அதீத அக்கறை கொண்டவள் போன்று கேட்டாள். கேள்வியைத் தொடர்ந்து மயக்கம் கலந்த ஒரு புன்சிரிப்பை உதிர்த்தாள்.

அவளின் புன்சிரிப்பில் மயங்கிய நாகதேவன், ஆட்டுக்குட்டி நனைவதைப் பார்த்து ஓநாய் அழுத கதையாக, அந்தப் பெண்ணைப் பார்த்து, "தோட்டத்தில் வேலை செய்தால் நீ கஸ்டப்பட வேண்டிவரும். அதை நான் விரும்பவில்லை. உன்னுடைய பொன் போன்ற மேனி வெயிலில் வேலை செய்வதின் மூலம் கறுத்துப் போவதை என்னால் பார்க்கமுடியாது. நீ வங்களாவிற் சமையற்காரப் பெண்களுக்கு உதவி செய்ய வேண்டும். உடம்பைக் கவனமாய்ப் பார்த்துக்கொள்ள வேண்டும்," என்று கூறிவிட்டு, "வேலாசி, இங்க வா," என்று குரல் கொடுத்தான். உடனே ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒரு திடகாத்திரமான பெண், "என்ன ஐயா, கூப்பிட்டீங்களா?" என்று கேட்டுக்கொண்டு மிக்க மரியாதையோடு அவனுக்கு முன் வந்து நின்றாள்.

உடனே நாகதேவன் அந்தப்பெண்ணைக்காட்டி, "இவளுடைய பெயர் மகிழம்பூ. இவள் இங்கு வேலைகேட்டு வந்திருக்கிறாள். இவளை உங்களுக்கு உதவியாக வைத்துக் கொள்ளுங்கோ. இவளைக் கடுமையாக பாடுபடுத்த வேண்டாம். உடம்பைக் கொஞ்சம் கவனித்துக் கொள்ளச் சொல்லு. அலுமாரியில் இருக்கின்ற புடவைகளில் எடுத்துக்கொடு கட்டிக்கொள்ளச் சொல்லி. சந்தணச் சோப் போட்டுக் குளிக்கச் சொல்லு. சம்போ போட்டு முழுகச் சொல்லு. உனக்குத் தெரியுமல்லே அழுக்கோடு இருப்பது எனக்குப் பிடிக்காதென்று. இளம் பெம்பிளை, கவனமாய்ப் பார்த்துக் கொள்," என்று சொல்லி முடிப்பதற்குள் வேலாசி, "இதென்ன ஐயா! இதெல்லாம் நீங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லியே தெரியவேண்டும். இருபது வருட சேவையில் ஐயாவினுடைய ரேஸ்ற் தெரியாமலேயே இவ்வளவு நாளும் சமைக்கிறேன். பெண்ணை வேலைக்குச் சேர்த்துவிட்டீங்களல்லே! விடுங்கோ! மிச்சத்தை நான் பார்த்துக் கொள்ளுகிறேன். அப்புறம் சாப்பிட்டுப் பார்த்துவிட்டுச் சொல்லுங்கோ ரேஸ்ரை," என்று சொல்லியதன் மூலம் தனக்கு நாகதேவனுடைய எதிர்பார்க்கைகள் எல்லாம் புரியுது என்பதைக் காட்டிக்கொண்டாள் வேலாசி.

மகிழம்பூ வேலைக்குச் சேர்ந்து மூன்றாம் நாள் அறுபது வயது மதிக்கத்தக்க ஓர் ஆணும், ஐம்பத்தைந்து வயது மதிக்கத் தக்க ஒரு பெண்ணும் நாகதேவனின் வங்களாவிற்கு வந்தனர். இவர்கள் வருவதை அவதானித்த வேலாசி விறாந்தைக்கு வந்து, "நீங்கள் யார்? உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டாள். அதற்கு அந்த நபர், "நாங்கள் மகிழம்பூவினுடைய அப்பாவும் அம்மாவும். எங்களுடைய மகள் இங்கு வேலைக்குச் சேர்ந்திருக் கிறாள் என்று அறிந்தோம். அவளைப் பார்த்துக் கதைத்து அவளைக் கூட்டிப் போகலாம் என்று வந்திருக்கிறோம்," என்று மிகவும் தாழ்மையாகச் சொன்னார்கள். இவர்களுடைய வரவை எதிர்பார்த்திருந்தபடியினால் அதைப்பற்றிப் பெரிதாய் அலட்டிக்கொள்ள விரும்பாத வேலாசி, "இப்பொழுது முதலாளி ஐயா இங்கு இல்லை. அவர் வெளியே போயிருக்கிறார். ஆனபடியால் போயிட்டு அப்புறம் வாங்கோ," என்று சொல்லியதும், அந்த நபர், "அப்புறம் என்றால் எவ்வளவு நேரம் கழித்து வரவேண்டும்?" என்று பயபக்தியோடு கேட்டார். இவர்களுடன் பேசுவதற்கு முதலாளி ஐயா விரும்புவார் என்பதை ஏற்கனவே வேலாசி தெரிந்து வைத்திருந்தபடியினால், அவர் மதியச் சாப்பாட்டிற்கு வரக்கூடிய நேரமாய்ப் பார்த்து, "மூன்று மணித்தியாலம் கழித்து ஒரு மணியளவில் வாருங்கோ. அப்பொழுது ஐயா சாப்பிட்டுவிட்டு ஓய்வு எடுத்துக் கொண்டிருப்பார், அந்த நேரத்தில் உங்களுடைய மகளைப் பற்றிப் பேசலாம்," என்று கூறி இருவரையும் அனுப்பிவிட்டாள் வேலாசி.

இருவரும் சரியாக ஒரு மணிக்குத் திரும்பவும் வந்தனர். அப்பொழுது முதலாளி நாகதேவன் சுங்கான் குடித்துக் கொண்டு விறாந்தையில் இருந்த ஈசிக்கதிரையிற் படுத்து ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தான். விறாந்தைக்கு அருகாமையில் வந்த இருவரும் கூப்பிய கைகளோடு "வணக்கம் ஐயா," என்றனர். உடனே அவர்கள்மீது பார்வையைச் செலுத்திய நாகதேவன், "உங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன வேண்டும்?" என்று கேட்டான். அதற்கு அந்த மனிதன், "ஐயா, நாங்கள் மகிழம்பூவினுடைய பெற்றோர். எங்களுடைய மகள் உங்களுடைய வங்களாவில் வேலைக்குச் சேர்ந்திருக்கிறாள் என்று கேள்விப்பட்டோம். அவளைப் பார்த்து அவளுடன் கதைத்து அவளைக் கூட்டிச் செல்லலாம் என்று வந்திருக்கின்றோம் ஐயா," என்று மிகப்பணிவான குரலிற் சொன்னான். எந்தப் புதுமுகத்திலும் சந்தேகம் கொள்ளும் நாகதேவன் இவர்கள் மகிழம்பூவினுடைய பெற்றோர்தானா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளும் நோக்குடன் அவர்களைப் பார்த்து, "உங்களுடைய மகள் உங்களுக்குத் தெரியாமல் ஏன் இங்கு வந்து வேலைக்குச் சேர்ந்திருக்கிறாள்?" என்ற கேள்வியைப் போட்டான். தங்களுடைய குடும்ப விவகாரத்தை வெளிப்படுத்த விரும்பாதபோதும் வேறுவழியின்றி உண்மையைச் சொல்ல முடிவு செய்த அந்த மனிதன், அதாவது மகிழம்பூவின் தந்தை, "அது... வந்து,.. ஐயா... அவளுக்கு ஒரு கல்யாணம் பேசினோம். மாப்பிள்ளை வேறுயாருமல்ல, என்னுடைய தங்கச்சியின் மகன்தான். அந்த மாப்பிள்ளையை மகிழம்பூ விரும்பவில்லை. நாங்கள் அவனைத்தான் கட்டிக்கொள்ள வேண்டுமென்று கொஞ்சம் வற்புறுத்தினோம். அதனால் அவள் எங்களுக்குத் தெரியாமல் வீட்டைவிட்டு வெளிக்கிட்டு வந்துவிட்டாள். அப்புறம் நாங்கள் மூன்று நாளாய் அவளைத் தேடி அலைந்து கடைசியாக இன்றுதான் அவள் இங்கு நிற்பதாய் அறிந்தோம். அதுதான் அவளைக் கூட்டிப் போகலாம் என்று வந்திருக்கின்றோம். நீங்கள்தான் ஐயா பெரிய மனசு பண்ணி அவளுக்குப் புத்திசொல்லி அவளை எங்களுடன் அனுப்பிவைக்க வேண்டும். நீங்கள் செய்யப்போகும் இந்த உதவியை நாங்கள் கடைசிவரைக்கும் மறக்கமாட்டோம் துரை," என்று பணிவாகவும் மன்றாட்டமாகவும் கேட்டார். தந்தையினுடைய கதையைக் கேட்டுவிட்டு எக்காளச் சிரிப்புச் சிரித்த நாகதேவன், "ஏன் உங்களுடைய பொண்ணு அந்த மாப்பிள்ளையை வெறுக்கிறாள் என்பதைச் சொல்ல வில்லையே? அங்கதானே விசயம் இருக்கின்றது," என்று சொல்லி விட்டு ஒருமாதிரிப் பார்த்தான் அவர்களை.

இந்தக் கேள்வி வரும் என்பதை மகிழம்பூவின் தந்தை ஏற்கனவே உணர்ந்திருந்தபடியினால் அதிர்ச்சியோ ஆச்சரியமோ அடையாமல் நிதானமாக, "அது.. ஐயா... வந்து... அவன் இடைக்கிடை தண்ணி போட்டுவிட்டுக் குழப்படி பண்ணுவான். வேலைவெட்டி இல்லாமல் ஊரைச்சுற்றி வருவான். இருந்தபோதும் கல்யாணம் ஒன்றைப் பண்ணிக் காற்கட்டுப் போட்டுவிட்டால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பம் பெண்சாதி பிள்ளை என்று வரும்போது திருந்தத்தானே வேண்டும் ஐயா. நாங்களும் அல்லற்பட்டனாங்கள். சீதனவாதனம் என்று கொடுத்து நல்ல மாப்பிள்ளை எடுக்க எங்களால் முடியாது. இது ஒன்றுக்குள்ள ஒன்று, கட்டி வைத்துவிட்டால் அவன் திருந்தி உழைக்கப் பிளைக்கத் தொடங்குவான், தனது குடும்பத்தைக் காப்பாற்றுவான் என்ற ஒரு நம்பிக்கைதான் ஐயா. மகிழம்பூ எங்களுடைய மூத்தபிள்ளை. இவளுக்குப் பின்னால் இன்னும் இரண்டு குமர்ப்பிள்ளைகள் இருக்கின்றார்கள். எங்களுக்கும் வயது போகின்றது. எல்லாக் குமர்ப்பிள்ளைகளையும் வீட்டில் வைத்துக் கொண்டிருந்து எத்தனை காலத்திற்கென்று நாங்கள் அவர்களைக் காப்பாற்றுவது. மூத்த பிள்ளையைக் கரையேற்றிவிட்டாற்தானே காலகதியில் மற்றப் பிள்ளைகளுக்கும் ஒரு வழியைப் பார்க்கலாம். இதைப் புரிந்துகொள்ளாத பிள்ளை வீட்டைவிட்டு ஓடிவந்துவிட்டது. நீங்கள்தான் ஐயா அவளுக்குப் பத்தி சொல்லி அவளை எங்களுடன் அனுப்பிவைக்க வேண்டும்," என்று மறுபடியும் பணிவாகக் கேட்டுக்கொண்டார் அந்தத் தந்தை. எல்லாவற்றையும் கேட்டுவிட்டு மறுபடியும் ஏளனச்சிரிப்புச் சிரித்துக் கொண்ட நாகதேவன் "பிள்ளை கல்யாணம் பண்ணிக்கொண்டு நல்லாயிருக்குமோ அல்லது கெட்டுப்போகுமோ என்று எண்ணிப் பார்க்காது, உன்னுடைய பொறுப்பிலிருந்து அந்தப் பிள்ளையை வெளியே தள்ளிவிட முயற்சிக்கிறாய்.

அந்த மாப்பிள்ளையைக் கட்டிக்கொண்டு தான் நல்லாய் வாழமுடியாது, அவனுடன் தன்னால் மாரடிக்க முடியாது என்பதைப் புரிந்துகொண்ட உன்னுடைய மகள் புத்திசாலித்தனமாகத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு உங்களுக்குச் சொல்லாமல் வீட்டைவிட்டு வெளிக்கிட்டு வந்து விட்டாள். அப்படிப்பட்ட புத்திசாலிப் பெண்ணுக்கு நான் எப்படி அப்பா ஆலோசனை சொல்ல முடியும்? அவள் வயது வந்த பெண்பிள்ளை, நல்லதுகெட்டது தெரிந்த பருவம், அவளுக்குப் போய் நீ சொல்லுவதை வைத்துக்கொண்டு நான் எப்படி அறிவுரை கூறமுடியும்? முடியாது, முடியவே முடியாது. நீயும் உன்னுடைய மகளும் பட்டபாடு. நான் அவளைக் கூப்பிட்டு உங்களுக்கு முன்னால் விடுகின்றேன். நீ சொல்லக்கூடிய புத்தியைச் சொல்லிப்பார். அத்தோடு அவள் உன்னுடன் வந்தால் கூட்டிக்கொண்டு போ, நான் மறிக்கவில்லை. ஏதோ அநாதை என்று சொல்லிக்கொண்டு இங்கு வந்தாள். பார்க்கப் பாவமாய்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடந்தது. குமர்ப்பிள்ளை, அலைந்து திரிய முடியாது, காலம் கெட்டுக்கிடக்கு, அதனாற் பாவம் பார்த்து எனது வங்களாவில் வேலைபோட்டுக் கொடுத்தேன், அதுவும் பாடில்லாத வேலை," என்று உத்தமபுருசன் போன்று கூறிய நாகதேவன், "வேலாசி" என்று குரல் கொடுத்தான்.

அவன் கூப்பிடுவான் என்று எதிர்பார்த்து நின்றவள் போன்று கணப் பொழுதில், "கூப்பிட்டீங்களா ஐயா?" என்று கேட்டுக்கொண்டு வேலாசி நாகதேவன் முன் வந்துநின்றாள். நாகதேவன் வேலாசியைப் பார்த்து, "இவங்கள் மகிழம்பூவினுடைய அப்பாவும் அம்மாவுமாம். மகிழம்பூவைப் பார்த்துப் பேசி அவளைக் கூட்டிக்கொண்டு போவதற்கு வந்திருக்கிறார்கள். மகிழம்பூவை வரச்சொல்லு," என்றான். காலால் இடும் கட்டளையைத் தலையால் ஏற்றுக்கொள்ளும் வேலாசி கண்மூடி முளிப்பதற்குள் மகிழம்பூவுடன் வந்து நின்றாள். மகளைக் கண்ட சந்தோசத்தில் அப்பாவும் அம்மாவும் வாய் நிறையச் சிரித்துவிட்டு, "என்ன பிள்ளை இப்படிச் செய்து போட்டாய்! பேசாமல் பறையாமல் நீ உன்பாட்டிற்கு வீட்டை விட்டுக் கிளம்பி வந்துவிட்டாய். நாங்கள் உன்னைக் காணாமற் துடிச்சுப்போனம். மூன்று நாளாய் நாங்கள் உன்னைத் தேடி அலையாத இடம் கிடையாது. கடைசியாக ஒருவாறு நீ இங்கு இருக்கிறாய் என்று கேள்விப்பட்டு உன்னைக் கூட்டிப்போகலாம் என்று வந்திருக்கிறோம். எங்களோடு வந்துவிடு பிள்ளை," என்று சொல்லிக் கெஞ்சிக் கேட்டனர். கதையைத் தொடர்ந்த அம்மா, "பெத்தமனம் எவ்வளவு வேதனைப்படுகின்றது, தெரியுமா பிள்ளை. உனக்கெங்க தெரியப்போகின்றது. பெத்தமனம் பித்து பிள்ளை மனம் கல்லு என்று சும்மாவா சொல்லிவைத்தாங்க. நீ உன்பாட்டில் வெளிக்கிட்டு வந்திருக்கிறாய். மச்சான் உனக்காகக் காத்துக் கிடக்கிறான். அவனுக்கு நாங்கள் என்ன பதில் சொல்லுவது? கொஞ்சம் யோசித்துப்பார் பிள்ளை. நடந்ததை மறந்துவிடுவம். நீ எங்களோடு வந்துவிடு பிள்ளை," என்று இரந்து கேட்டாள். உடனே மகிழம்பூ, "நீங்கள் என்ன செய்வீங்களோ ஏதுசெய்வீங்களோ எனக்குத் தெரியாது. அந்தக் குடிகாரன் ஊதாரி, ஊர்சுற்றியைக் கட்டிக்கொண்டு என்னால் மாரடிக்க முடியாது. என்னுடைய வழியைப் பார்க்க எனக்குத் தெரியும். எனக்கு நல்ல காலையும் கையையும் ஆண்டவன் தந்திருக்கிறான். அவற்றை வைத்துக் கொண்டு என்னால் உழைத்து என்னைக் காப்பாற்ற முடியும். உங்களுடைய கல்யாணமும் வேண்டாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லெடுப்பும் வேண்டாம். நீங்கள் வந்த வழியே போய்ச் சேருங்கோ. கிளம்புங்கோ! கிளம்புங்கோ!!" என்று தூக்கி எறிந்து கதைத்தாள்.

நாகதேவன் எதை எதிர்பார்த்தானோ அது நடந்துவிட்டது. அதனால் ஏற்பட்ட மகிழ்ச்சியில் கைகளைத் தட்டி, "சபாஸ் மகிழம்பூ! சபாஸ்!!" என்று சொல்லி எக்காளச் சிரிப்புச் சிரித்தான். அத்துடன் நின்றுவிடாமல், "உனக்கு விளங்கிய அளவிற்கு உன்னைப் பெத்ததுகளுக்கு விளங்கவில்லையே இந்த உலகத்தைப் பற்றிச் சரியாய். என்ன செய்வது, பாவம். இன்னும் ஏன் நிற்கிறீங்கள்? உங்கள் மகள் சொன்னமாதிரி வந்த வழியே போய்ச் சேருங்கோ," என்று சொன்னவன், தனது சேட்டுப் பொக்கற்றிலிருந்து ஐந்நூறு ரூபாவை எடுத்து நீட்டிக் கொண்டு, "இந்தாங்கோ இதைச் செலவிற்கு வைத்துக் கொள்ளுங்கோ," என்றதும், இதைப் பார்த்துக் கொண்டு நின்ற மகிழம்பூ உடனே, "பார்த்தீங்களா? நான் வேலைக்குச் சேர்ந்து மூன்று நாட்கள்தான். நீங்கள் என்னைத் தேடி வந்துவிட்டீர்களென்று ஐயா பெரிய மனசுபண்ணி ஐந்நூறு ரூபாவை உங்களுடைய செலவிற்காகக் கொடுக்கிறார். இப்பவாவது நான் வேலைக்குச் சேர்ந்திருக்கின்ற இடத்தைப் பற்றிப் புரிந்துகொள்ளுங்கோ. ஏன் பார்த்துக் கொண்டு நிற்கிறீங்கள்? வாங்கிக் கொண்டு போங்கோ," என்றாள்.

பணத்தை மகிழ்ச்சியாக இரண்டு கைகளாலும் பெற்றுக் கொண்ட தந்தை நாகதேவனைப் பார்த்து, "ஐயா ஒரு வேண்டுகோள், நாங்கள் இப்ப போயிட்டு வாறம். எங்களுடைய மகளை மாதம் ஒரு தடவை வந்து பார்ப்பதற்கு அனுமதி தரவேண்டும்," என்று இரந்து கேட்டார். இதைக் கேட்ட மகிழம்பூ, "ஐயா பெரிய மனசு படைத்தவர். கல்நெஞ்சுக்காரன் அல்ல. அவருடைய இரக்க குணத்தை இப்போது பார்த்தீங்களல்லே," என்று சொல்லி முடிப்பதற்குள் நாகதேவன் வேண்டாவெறுப்பாக, "சரி, வந்து பார்த்துவிட்டுப் போங்கோ. ஆனால் கூட்டிக்கொண்டு போற எண்ணத்தோடு வரவேண்டாம்," என்றான். உடனே மகிழம்பூ, "இப்ப ஐயாவை யார் என்று பார்த்தீங்களல்லே? இனி நின்மதியாய்ப் போயிட்டு வாங்கோ. கல்யாணம் கில்யாணம் என்று சொல்லிக் கொண்டு இந்தப்பக்கம் வரப்படாது. சும்மா வந்து பார்த்துக் கதைத்துவிட்டுப் போகவேண்டும்," என்று சொன்னதும் நாகதேவன் சந்தோச மிகுதியால் வாய்விட்டுச் சிரித்துவிட்டான். தொடர்ந்து சிரித்துக் கொண்டு, "கெட்டிக்காரப் பொண்ணு. உன்னை எனக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரொம்பப் பிடிச்சுப்போச்சு. உனக்குக் கெதியிற் பதவி உயர்வு கொடுக்கப் போகிறேன்," என்று சொல்லி அவளுடைய தோளிற் தட்டிக் கொடுத்தான்.

இப்பொழுது மகிழம்பூ நாகதேவனுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாகிவிட்டாள். இவ்வளவு கெதியிற் தன்மீது மகிழம்பூ நம்பிக்கை வைப்பாளென்று நாகதேவன் எதிர்பார்த்திருக்கவில்லை. தனது இலக்கை எதிர்பார்த்ததைவிட விரைவில் அடையலாம் என்ற மகிழ்ச்சியினாற் பத்து வருடங்களாக வேலாசியின் வேலையாயிருந்த சந்தையிற் சாப்பாட்டுச் சாமான்கள் வாங்கும் பொறுப்பையும் அதற்குரிய பணத்தையும் மகிழம்பூவிடம் ஒப்படைத்தான். ஜீப் வண்டியில் சந்தைக்குச் சாமான்கள் வாங்கச் செல்லும்பொழுது இதுவரை சாரதிக்குப் பக்கத்தில் முன்சீற்றில் அமர்ந்திருந்த வேலாசி பின்னுக்கு அனுப்பப்பட்டு, இப்பொழுது அந்த இடத்தில் மகிழம்பூ உட்கார்ந்து கொண்டாள். இந்த மாற்றம் வேலாசியின் மனதிற்குட் சங்கடத்தை ஏற்படுத்தியபோதும், நாகதேவனின் குணத்தை அவள் நன்கு அறிந்திருந்தபடியினால் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. நாகதேவன் காலால் இட்ட கட்டளையைத் தலையால் ஏற்றுச் செய்வதுதான் வேலாசியின் பழக்கம். அதனாற்தான் இருபது வருடங்கள் அவனுடன் நிற்கமுடிந்தது. இருபது வருடங்களுக்கு முன் வேலாசி தோட்டத்தில் வேலைக்குச் சேர்ந்தபொழுது அவளுக்கு வயது முப்பது. பார்வைக்கு இருபது வயது மதிக்கத்தக்க கட்டுக்குலையாத பெண்ணாக இருந்தாள். முதலிற் தோட்டத்திற் தோட்ட வேலைக்காரியாக வேலைக்குச் சேர்ந்த வேலாசிக்கு காலப்போக்கில் அவளின் உடற்கவர்ச்சியில் மயங்கி வங்களாவில் வேலை கொடுத்தான் நாகதேவன்.

அந்தக் காலத்தில் நாகதேவனுக்கு உடற்பசி எடுக்கும்போதெல்லாம் அதற்கு வேலாசி தீனிபோடுவது வழக்கம். இப்பொழுது அவளுடைய உடற்கட்டுக் குலைந்துவிட்டது, மார்பு சரிந்துவிட்டது. இப்பொழுதெல்லாம் நாகதேவனுக்குத் தேவைப்படுவது கட்டுக்குலையாத இளம்பெண்கள். இந்த நிலையில் வேலாசி அங்கு தொடர்ந்து வேலைக்கு அமர்த்தப்பட்டிருப்பதே ஒரு நன்றிக்கடன்தான். பதவி வேண்டாம் வேலையில் இருந்தாற்போதும் என்ற நிலைதான் வேலாசியின் நிலமை தற்பொழுது. இருந்தபோதும் வேலாசிக்கு மனதிற்குட் கொஞ்சம் வருத்தமிருக்கத்தான் செய்தது. இதைச் சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களிலேயே புரிந்துகொண்டாள் மகிழம்பூ. அதற்காகத் தனக்குக் கிடைத்த பதவியை விட்டுக்கொடுக்கவா முடியும்! வேலாசி இவ்வளவு காலமாக நாகதேவனுடன் ஒட்டிக்கொண்டிருப்பதற்கு முக்கிய காரணம் சம்பளத்திற்கு மேலால் அவளுக்குப் பணம் தேவைப்படும்போதெல்லாம் பார்த்துப் பாராமற் கேட்கும் பணத்தைக் கொடுப்பான் நாகதேவன். அதற்குரிய நன்றியும் விசுவாசமும் வேலாசியின் அடிமனத்திற் பதிந்து கிடந்தன என்றால் மறுப்பதற்கில்லை.

ஒருநாட் பொருட்களை வாங்குவதற்காக மகிழம்பூ சந்தைக்குப் புறப்பட்டபொழுது வேலாசிக்கு வேறு சில முக்கிய வேலைகள் வங்களாவில் இருந்தபடியினால் மகிழம்பூ அன்று சாரதியுடன் ஜீப் வண்டியில் தனியே சென்றாள். பொருட்களை வாங்கிக் கொண்டு திரும்பிய மகிழம்பூ வேலாசியுடன் சேர்ந்து சமையலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாள். அப்பொழுது வேலாசியிடம், "வேலாசி அக்கா, நான் இன்று சந்தையில் சாமான்கள் வாங்கிக்கொண்டு நின்றபொழுது நாற்பது வயது மதிக்கத்தக்க ஒருநபர் என்னிடம் வந்து, "நீ நாகதேவனின் வங்களாவிலா வேலை செய்கிறாய்?" என்று கேட்டான். நான் 'ஆம்' என்று பதில் அளித்தேன். அப்புறம், வாலாம்பிகை என்ற ஒரு பெண் அப்பகுதியில் ஆறுமாதத்திற்கு முன் கொலை செய்யப்பட்டாள், அதைப்பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா? என்று கேட்டான். கொலை என்று சொன்னதும் எனக்குப் பயம் வந்துவிட்டது. அவன் இரகசியப் பொலிசாக இருப்பானோ என்ற எண்ணமும் தோன்றியது. எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. மனதை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டு, "நான் அங்கு வேலைக்குச் சேர்ந்து இரண்டு கிழமைகள்தான். அதற்கு முன் நான் இந்தப் பகுதியில் வசிக்கவுமில்லை. அதனால் அதைப்பற்றி எனக்கொன்றும் தெரியாது," என்று சொன்னேன்.

அதற்கு அந்த ஆள், "வாலாம்பிகை கொலைபற்றிக் கேள்விப் பட்டாவது இருக்கின்றீர்களா?" என்று கேட்டான். அப்பொழுது எனக்கு உண்மையிலேயே என்ன சொல்வதென்று தெரியவில்லை. அதைப்பற்றிக் கேள்விப்படக்கூட இல்லை என்று சொன்னால் நான் எல்லாவற்றிற்கும் பொய் சொல்லுகிறேன் என்று நினைப்பான் என எண்ணிக்கொண்டு, "கேள்விப்பட்டிருக்கிறேன்," என்று சொன்னேன். அத்தோடு அவன் விடவில்லை, "என்ன கேள்விப் பட்டீங்கள்?" என்று கேட்டான். அதற்கு நான் யோசித்துவிட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


"அந்தக் கொலையைப் பற்றிப் பத்திரிகைகளிற் செய்தி வந்தது. அதை ஆட்கள் வாசித்துவிட்டு அதைப்பற்றிப் பேசிக்கொண்டதை கேள்விப்பட்டிருக்கிறேன். அதற்கு மேல் எனக்கொன்றும் தெரியாது. மேற்கொண்டு அதைப்பற்றி ஒரு கேள்வியும் கேட்கவேண்டாம். கொலை என்றதும் எனக்குப் பயமாயிருக்கு," என்று சொல்லிவிட்டு நான் அந்த இடத்தைவிட்டு வேகமாய் நழுவிவிட்டேன். சிறிது தூரம் சென்று திரும்பிப் பார்த்தேன் வருகிறானாவென்று. அவன் வரவில்லை, திரும்பிப் போய்விட்டான். அதற்குப் பிறகு கெதிப்பண்ணிச் சாமான்களை வாங்கிக் கொண்டு உடனே வந்துவிட்டேன்," என்று கூறியவள் தொடர்ந்து, "உங்களுக்கு அக்கா, இதைப்பற்றி, அதாவது அந்தக் கொலையைப் பற்றி ஏதும் தெரியுமா?" என்று பயம் கலந்த தொனியிற் கேட்டாள்.

இவை யாவற்றையும் கேட்டுவிட்டு அந்த ஆள் இரகசியப் பொலிசாகத்தான் இருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்ட வேலாசி மகிழம்பூவை உசார் நிலையில் வைக்கும்பொருட்டு, "அந்த ஆள் சொன்னதுபோன்று ஆறு மாதத்திற்கு முன் வாலாம்பிகை என்ற ஓர் இளம்பெண் கொலை செய்யப்பட்டு எங்கள் தோட்டத்திற்குப் பக்கத்துத் தோட்டத்தில் உள்ள துரவொன்றில் போடப்பட்டிருந்தாள். சில நாட்களுக்குப்பின் உடல் அழுகிய நிலையில் அந்தத் தோட்டத்தில் வேலை செய்த கூலியாட்களால் காணப்பட்டு, பின் அவர்கள் பொலிசிற்கு அறிவித்திருந்தனர். அதைத் தொடர்ந்து பொலிஸ் விசாரணைகள் நடைபெற்றன. கொலையாளி இன்றுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. நீ சொல்லுவதை வைத்துப் பார்க்கும்போது பொலிஸ் கொலைகாரனைக் கண்டுபிடிப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றார்கள் போல் தோணுகின்றது. நீ எதற்கும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். யாரும் நமது முதலாளியைப் பற்றியோ அல்லது தோட்டத்தில் அன்றி வங்களாவில் நடக்கும் நிகழ்வுகள் பற்றியோ ஏதும் கேட்டால் அவர்களுக்கு ஒன்றும் சொல்லப்படாது. எனக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்லிவிடவேண்டும்," என்று சற்று கண்டிப்பு கலந்த தொனியில் சொன்னாள் வேலாசி.

சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டி, என்ற பழமொழிக்கிணங்க வேலாசி கூறிய ஆலோசனை மகிழம்பூ மனசில் சந்தேகத்தைக் கிளப்பிவிட்டது. வேலாசியின் ஆலோசனையைக் கேட்ட மகிழம்பூ, "உடனே யாரும் என்ன கேட்டாலும் ஒன்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குத் தெரியாது என்று சொல்லும் அளவிற்கு இங்கு இரகசியங்கள் உண்டா அக்கா? அப்படியேதும் இருந்தால் அவற்றில் ஒன்றிரண்டையாவது சொன்னாற்தானே நானும் அவற்றைப் புரிந்துகொண்டு விழிப்பாக இருக்கலாம் அக்கா," என்று மெதுவான குரலிற் கேட்டாள். மகிழம்பூவிற்கு எப்படிப் புரியவைக்கிறது என்று தெரியாத வேலாசி, "அப்படிப் பெரிய இரகசியங்கள் ஒன்றுமில்லை. ஆனால் வாலாம்பிகையின் கொலையில் நம்மளுடைய முதலாளியையும் பொலிசும் இந்தக் கிராம மக்களும் சந்தேகிக்கின்றார்கள். ஆனால் அதற்கும் முதலாளிக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என்பது எனக்கு நன்கு தெரியும். அது பொலிசிற்குத் தெரியாதுதானே. அவர்கள் யார்மீதும் சந்தேகப்படுவது இயற்கை தானே. அவர்களுடைய தொழில் அப்படிப்பட்டது. இன்று உன்னைக் கேட்டதுபோன்று இனிமேல் யாரும் கேட்டால், தெரிந்து தெரியாமல் உழறிவிடப்படாது என்பதற்காகத்தான் முன்னேற்பாடாய் உனக்குச் சொல்லி வைக்கிறேன், புரியுதா மகிழம்பூ?" என்று சிறிது அழுத்திச் சொன்னாள். வேலாசி கதைசொன்ன பாணியிலிருந்து மேலும் சந்தேகம் கொண்ட மகிழம்பூ, "யார் அக்கா அந்த வாலாம்பிகை? ஏன் அக்கா அவளைக் கொலை செய்தாங்கள்? யார் கொலை செய்தாங்கள் என்று இதுவரை சட்டத்திற்குத் தெரியாவிட்டாலும் சமூகத்திற்கு நிச்சயம் தெரிந்துதானே இருக்கவேண்டும்?" என்ற கேள்விகளைப் போட்டாள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் 2



**வா**லாம்பிகை நமது அயற்கிராமமான நாவற்தோப்பிற் பிறந்தவள். அவள் பிறந்தது ஒரு கஸ்டப்பட்ட விவசாயக் குடும்பத்தில் . அவளுடைய தந்தையார் தான் செய்த தோட்டத்தில் இருந்து பெற்ற வருமானத்தைக் கொண்டும், இடையிடையே செய்த கூலிவேலையில் இருந்து பெற்ற வருமானத்தைக் கொண்டும் மூன்று பிள்ளைகளைக் கொண்ட அந்தக் குடும்பம் சீவித்து வந்தது. இவள் அந்தக் குடும்பத்தில் இரண்டாவது பிள்ளை. இவளுக்கு ஓர் அக்காவும் ஒரு தம்பியும் இருக்கின்றார்கள். இவள் தனது ஆரம்பக் கல்வியை நாவற் தோப்பிலுள்ள ஆரம்ப பாடசாலையிலும், ஆறாம் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்புவரை தாமரைக்குளம் மகா வித்தியாலயத்திலும் கற்றிருந்தாள். இவள் வறிய குடும்பத்திற் பிறந் திருந்தாலும் இவளுக்குப் பிரமதேவன் கொடுத்த இயற்கை அழகு பிரமிக்கத்தக்கது. மாவெள்ளை நிற மேனியையும் கருங்கூந்தலையும் கொண்ட வாலாம்பிகையின் முகத்தைக் கலைந்த கூந்தலுடன் பார்க்கும்பொழுது கருமுகிலின் நடுவே தோன்றும் பூரணைச் சந்திரன்போல் அது காட்சி அளிக்கும். முத்துப்போன்ற பல்வரிசை, கிளிச்சொண்டு போன்ற மூக்கு, சிரிக்கும் பொழுது குழிவிழும் கன்னங்கள், கயல் விழிகள், காதளவோடிய கடைக்கண் புருவங்கள், குரும்பைமுலைகள், சுமாரான உயரமும் ஒச்சட்டையான உடல் அமைப்பையும் கொண்ட வாலாம்பிகை நடந்து போகும் பொழுது அவளுடைய உடல் அழகையும் நடையழகையும் ரசிக்காத எந்த ஆணும் இருக்கமுடியாது. ஏன், அவளுடைய அழகைப் பார்த்துப் பல பெண்கள்கூடப் பொறாமைப்படுவார்கள் என்று சொன்னால் மறுப்பதற்கில்லை.



அவளுடைய நடையிலிருந்து அவள் தன்னம்பிக்கை கொண்ட ஒரு பெண் என்பதைப் புரிந்து கொள்ளலாம். அந்தப் பின்தங்கிய கிராமத்தில், வறிய குடும்பத்தில் இப்படியான ஓர் அழகான பெண் இருந்தாள் என்றால்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னால் மட்டுமல்ல எவராலும் இலகுவில் நம்பவே முடியாது. பிரமதேவனின் அற்புதப் படைப்புகளில் இவளும் ஒருத்தியென்றால் மிகையாகாது. அவளுடைய அழகைப்பற்றிப் பல சந்தர்ப்பங்களிற் பலர் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அதையிட்டு அவள் தலைக்கனம் கொள்வதில்லை. பாடசாலையிற் படிக்கும் காலத்திற் சக பிள்ளைகளோடு மிகவும் அன்பாதரவாய்ப் பழகுவாள். எப்பொழுதும் சிரித்துக் கதைத்துக் கலகலப்பாயிருக்கும் சுபாவம் உடையவள். அவளுடன் இருக்கும்பொழுது மனதிற் கவலையைச் சுமந்திருப்பவர்களும் தங்களுடைய கவலையை மறந்து சந்தோசம் அடைவார்கள். ரொம்ப இரக்க குணமும், உதவிசெய்யும் மனப்பாங்கும் உடையவள். பாடசாலை முடிந்து வீடு செல்வதற்குப் பேரூந்தில் ஏறும்போது வயோதிபர்களையும் சிறுவர்களையும் முதலில் ஏறவிட்டு அதன்பின்தான் அவள் ஏறுவாள். இந்த அவளுடைய நல்லகுணத்தாற் பேருந்தில் அவளுக்கு இடமில்லாமல் அடுத்த பேருந்திற்காகக் காத்திருந்து அதிற்சென்ற அனுபவங்களும் அவளுக்கு உண்டு. பேரூந்தில் இருந்து செல்லும்பொழுது முதியோரைக் கண்டால் எழுந்து தனது இருக்கையை அவர்களிடம் கொடுத்துவிட்டுத் தான் நின்று பிரயாணம் செய்யும் பெரும் குணமும் அவளிடமிருந்தது. பழக்கவழக்கம் பண்பாட்டிற் சிறந்து விளங்கியது மட்டுமல்ல, படிப்பிலும் சுமாரான கெட்டித்தனம் இருந்தது. பாடசாலைக்கு ஒழுங்காக வருவது, வீட்டுப் பாடங்களைத் தவறாமற் செய்வது, குறிப்பிட்ட நேரத்திற்குள் வகுப்பிற் கொடுக்கப்படும் வேலைகளைச் செய்துமுடிப்பது போன்ற அவளுடைய பழக்கம் ஆசிரியர்கள் மத்தியில் மதிப்பையும் மரியாதையையும் அவளுக்கு ஏற்படுத்தியிருந்தது. அவளுடைய சுறுசுறுப்பு பாடசாலையில் எல்லோரையும் கவர்ந்த விடயமாகும். மொத்தத்தில் எல்லோரினதும் பாராட்டிற்குரிய மாணவியாகவே பாடசாலையிற் காணப்பட்டாள்.

அவள் பன்னிரண்டாம் வகுப்பிற் படித்துக் கொண்டிருந்த பொழுது முருகதாஸ் என்னும் பெயருடைய ஓர் ஆசிரியர் புதிய நியமனம் பெற்றுத் தாமரைக்குளம் மகாவித்தியாலயத்திற்கு வந்தான். அவர் இருபத்தைந்து வயதுடைய வாலிபர். அவரை முருகன் என்று சுருக்கமாக அழைத்தார்கள். அவர் பெயரில் மட்டுமல்ல அழகிலும் பெயருக்குப் பொருத்தமாப்போல் முருகக் கடவுளைப் போன்று அழகனாகவே இருந்தார் என்றால் மிகையாகாது. பாடசாலையிற் கடமைக்காகச் சேர்ந்துகொண்ட முதல்நாளே அவர் வாலாம்பிகையைப் பார்த்தபொழுது அவளுடைய அழகு முருகனை ஆச்சரியப்பட வைத்தது. ஆரம்ப நாட்களிற்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளிமான் போன்று துள்ளித்திரிந்த அவளுடைய அழகை ரசித்தான். நாட்கள் செல்லச் செல்ல அவளுடைய பழக்கவழக்கம் பண்பாடு, சுறுசுறுப்பு, கலகலப்பு, மற்றையோருக்கு உதவி செய்யும் சுபாவம், இரக்க குணம் என்பவற்றாற் பெரிதும் ஈர்க்கப்பட்டான். இவள்தான் என்னுடைய மனைவியாக வரவேண்டுமென்று மனதார விரும்பினான். சாதிவெறி பிடித்த இந்தச் சமுதாயத்தில் என்ன சாதி, என்ன மதம், எந்த ஊர் என்பவற்றைப் பொருட்படுத்தாமல் அவளை நேசித்தான். அவளில்லையேல் எனக்குத் திருமணமில்லை, திருமணமில்லையேல் எனக்கு வாழ்க்கை இல்லை என்று முடிவெடுத்தான். இது ஒருவகைப் பயித்தியம், ஆம் இதுதான் காதற் பயித்தியம், ஒருதலைக் காதல்.

அவள் ஓர் ஆசிரியையாய் இருந்திருந்தால் அவளுடன் பேசிப்பழகி உரிய நேரத்தில் தனது காதல் விவகாரத்தை வெளிப்படுத்தலாம். ஆனால் அவள் ஒரு மாணவி, அதுகும் அந்தப் பாடசாலையிற் படித்துக் கொண்டிருக்கும் மாணவி. பாடசாலையிற் படித்துக் கொண்டிருக்கும் ஒரு மாணவியை அதே பாடசாலையிற் கற்பித்துக் கொண்டிருக்கும் ஓர் ஆசிரியர் காதல் பண்ணுகிறார் என்று தெரியவந்தால் அது பாடசாலைக் கலாச்சாரம் பண்பாட்டிற்கு ஒத்துவராது என்பதை உணர்ந்து கொண்ட முருகன் அவள் பன்னிரண்டாம் ஆண்டுப் பரீட்சை எழுதி முடித்து வீடு செல்லும்வரை பொறுமையாகக் காத்திருந்தான். வேறு வார்த்தையிற் சொன்னால், தனது காதலைவிடத் தமிழர் கலாச்சாரம் பண்பாட்டிற்கு முன்னுரிமை கொடுத்து நடக்கத் தீர்மானித்துக் கொண்டான் முருகன். பரீட்சை முடிந்து பாடசாலையைவிட்டு அவள் விலகும்வரை ஓர் ஆசிரியர் மாணவர்களோடு எப்படி நடந்து கொள்ளுவாரோ அப்படியே முருகனும் வாலாம்பிகையுடன் நடந்து கொண்டான்.

பன்னிரண்டாம் வகுப்புப் பரீட்சை முடிவடைந்த அன்று முருகன் அவளிடம் சென்று, "எப்படி வாலாம்பிகை பரீட்சை எழுதினீர்கள்? நன்றாக எழுதினீர்களா? பாடங்கள் இலகுவாக இருந்தனவா? அன்றிக் கடுமையாக இருந்தனவா? என்று கேள்விகளைக் கேட்டான். அதற்கு வாலம்பிகை இயற்கையான பாணியிற் கன்னத்திற் குழி விழச் சிரித்துவிட்டு, "அவ்வளவு கடுமையாக இருக்கவில்லை. அதற்காக இலகுவாக இருந்தது என்று கூறிவிட முடியாது. என்னைப் பொறுத்தவரை முடிந்த அளவிற்கு நன்றாகச் செய்திருக்கின்றேன். இருந்தபோதும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரப்போகும் பெறுபேற்றைப் பார்த்தாற்தான் உண்மை தெரியவரும். அதுவரை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்,'' என்று மகிழ்ச்சியோடு சொன்னாள். கதையைத் தொடர்ந்த முருகன், "பரீட்சைப் பொறுபேறுகள் வரும்வரை பாடசாலைக்குத் தொடர்ந்து வருவீர்களா? அல்லது பாடசாலைக்கு வருவதை நிறுத்திவிடு வீர்களா? என்று ஆதங்கம் நிறைந்த குரலிற் கேட்டான். இதற்குரிய பதில் வாலாம்பிகையிடம் ஏற்கனவே இருந்தபடியினால் யோசிக்காமல் உடனே, "நான் பாடசாலைக்கு தொடர்ந்து வரமாட்டேன் சார். வீட்டில் நின்றால் பெற்றோருக்கு தோட்ட வேலைகளில் உதவி பண்ண முடியும். அத்தியாவசியமின்றிப் பாடசாலைக்குச் செல்வதனால் ஏற்படும் செலவுகளையும் நிறுத்த முடியும். பெறுபேறு வரும்வரை புதிதாகப் படிப்பதற்கு ஒன்றுமில்லை. இந்த நிலையிற் பெற்றோருக்குத் தொடர்ந்து கஸ்டம் கொடுக்க விரும்பவில்லை,'' என்று தன்னுடைய குடும்பப் பொருளாதார நிலமையை மறைமுகமாகச் சொல்லுவதுபோன்ற பாணியிற் சொன்னாள்.

அப்பொழுது மேலும் அவளுடன் பேசவேண்டும் என்று விரும்பிய முருகன், "பரீட்சைப் பெறுபேறுகள் வந்தபிற்பாடு என்ன செய்வதாக உத்தேசம்? பல்கலைக்கழகம் சென்று படிப்பதற்கான உத்தேசம் உண்டா?" என்று கேட்டான். எதையும் ஒழித்து மறைத்துப் பேசும் சுபாவமில்லாத வாலாம்பிகை, "பல்கலைக்கழகம் சென்று படிக்கும் அளவிற்கு எனது குடும்பத்திற்குப் பொருளாதார பலம் கிடையாது. பரீட்சையிற் சித்தியடைவேன் என்று நம்புகிறேன். பெறுபேறு வந்ததும் ஏதாவது ஒரு வேலை தேடவேண்டும். உழைத்துக் குடும்பத்திற்கு உதவி செய்ய வேண்டும். அப்பாவிற்கு வயதாகிக்கொண்டு செல்லுகின்றது. தொடர்ந்து தோட்ட வேலைகளை அவரால் செய்ய முடியாது. ஆனபடியால் முடிந்த விரைவில் நான் வேலை ஒன்று தேடவேண்டும்,'' என்று தனது குடும்ப நிலமையையும் தனது எதிர்காலத்திட்டத்தையும் ஒழிவு மறைவின்றிக் கூறினாள்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தனது விருப்பத்தை அவளிடம் சொல்லிவிட வேண்டுமென்று விரும்பிய முருகன் "வாலாம்பிகை, உங்களுடன் ஒரு முக்கிய விடையம் பற்றிக் கதைக்க வேண்டும். நீங்கள் தொடர்ந்து பாடசாலைக்கு வரமாட்டீங்கள் என்று சொல்லுகின்றீர்கள். அப்படியானால் இனிமேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களைச் சந்திக்க முடியாது. ஆகையினால் இன்றைக்கே அதைப்பற்றிக் கதைத்துவிடலாமோ என்று நினைக்கிறேன்," என்று சொன்னதும், வாலாம்பிகை, "அப்படி என்ன சார் முக்கிய விடையம்?" என்று பகிடியாகக் கேட்டாள். தொண்டையிற்குள் சாப்பாடு அடைத்து விழுங்கவும் முடியாமல் கக்கவும் முடியாமல் நின்றவன்போன்று வாயடைத்து நின்ற முருகன் மனோதைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "நீங்கள் ஒரு மாணவியாகவும், நான் ஓர் ஆசிரியராகவும் இருந்தபடியினால் இவ்வளவு நாளும் இந்த விடயம் பற்றிப் பேசமுடியவில்லை. இன்றுடன் அந்த உறவு முடிவடைகின்றது. இனிமேல் உங்களைச் சந்திக்கவும் முடியாது. ஆனபடியினாற்தான் இன்றே கதைத்துவிடலாம் என்று நினைக்கிறேன்," என்று தயக்கத்தோடு சொன்னான். குழந்தை உள்ளம் படைத்த அவளின் மனம் எதையும் ஆழமாகச் சிந்திக்காது விளையாட்டுத்தனமாக, "சொல்லுங்க சார் விடயம் என்னவென்று," எனச் சிரித்துக் கொண்டே கேட்டாள்.

விடையத்தை எப்படி ஆரம்பிப்பது என்று அறியாத முருகன், "நீங்கள் இப்பொழுது குழந்தை உள்ளம் படைத்த சின்னப்பெண்ணாகவே இருக்கின்றீர்கள். அதனாற்தான் நான் என்னத்தைப் பற்றிக் கதைக்கப் போகிறேன் என்பதை ஊகிக்க முடியாமற் குறும்புத் தனமாய்ப் பேசுகின்றீர்கள். நான் கதைக்கப்போகும் விடயம் பெரியவர்கள் சேர்ந்து பேசும் விடயம். இந்தப் பொறுப்பைப் பெரியவர்களிடம் விட்டால் என்னுடைய இலட்சியக் கோட்டையை உடைத்துவிடுவார்களோ என்ற பயத்தினாற்தான் நானே கதைக்க முடிவுசெய்தேன். இதைப்பற்றி என்னுடைய அப்பா அம்மாவிடம் போய்ச்சொன்னால் அவர்கள் ஊர், பேர், சாதி, சமயம் என்று பார்த்து என்னுடைய கனவில் மண்ணை அள்ளிப்போட்டு விடுவார்களோ என்று எண்ணும்போது, வேண்டாம் வேண்டாம், அப்படியான ஓர் எதிர்க்கணியமான முடிவை என்னால் நினைத்துப் பார்க்கவே முடியாது. ஆனபடியினால் நானே முயற்சி செய்து அதில் வெற்றியடைய வேண்டும்," என்று முருகன் சொல்லிக் கொண்டு போகவே வாலாம்பிகை சிறிது பாரதூரமாகச் சிந்திக்கத் தொடங்கினாள். அப்பொழுது அவளுடைய முகத்தில் மாற்றம் ஏற்பட்டது. எதுவும் பேசாமல் நிலத்தைப் பார்த்துக்கொண்டு நின்றாள். இதை அவதானித்த முருகனுக்கு சிறிது பயம் பீடிக்கத் தொடங்கியது. நேரடியாகக் கேட்கும்போது வெட்டொன்று துண்டிரண்டாக மறுத்துவிடுவாளோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது ஏசிப்போடுவாளோ என்று எண்ணியபோது, அதனால் வரும் ஏமாற்றத்தை அல்லது அவமானத்தை எப்படித் தாங்கிக் கொள்வது என்று யோசித்தான். எப்படியும் இதைக் கேட்டுத்தானே ஆகவேண்டும். எது நடந்தாலும் அது என்னுடனேயே இருந்துவிட்டுப் போகட்டும். இதற்குமேல் பயப்படுவது கோழைத்தனம். கோழைக்கும் காதலுக்கும் ஒத்துவராது. கோழையாயிருந்து காதலைக் கோட்டை விடுவதைவிட, மனோதைரியத்துடன் கேட்டறிந்து என்ன முடிவு வந்தாலும் அதை ஏற்றுக் கொள்வது மேல் என்று முடிவு செய்தான்.

சிறிதுநேரம் மௌனமாயிருந்த முருகன் அதைக் கலைத்துக்கொண்டு, "நான் ஒரு முடிவிற்கு வந்துவிட்டேன், என்ன நடந்தாலும் பரவாயில்லை. என்னுடைய மனதில் உள்ளதை அப்படியே சொல்லுகிறேன். அதாவது நான் உங்களை மனப்பூர்வமாய்க் காதலிக்கிறேன். இதுவரை நமக்கிடையில் இருந்த உறவு ஆசிரியர் மாணவி என்பது. ஓர் ஆசிரியர் மாணவி ஒருவரைக் காதலிக்கிறார் என்றால் அது பாடசாலைக் கலாச்சாரத்திற்கு ஒவ்வாதது. அதனால் உங்களுடைய படிப்பு முடியும்வரை காத்திருந்தேன். இனிமேல் நீங்கள் பாடசாலைக்கு வரமாட்டீர்கள் என்று கூறிவிட்டீர்கள். ஆனபடியினால் இனிமேல் நான் உங்களைக் காதலிப்பதில் தப்பொன்றுமில்லை. இதுவரை என்னுடைய காதல் ஒருதலைக் காதலாகவே இருந்தது. இது இருபக்கக் காதலாய் மாறவேண்டும். இறுதியில் உங்களைத் திருமணம் செய்து எனதுமனைவியாக ஆக்கிக் கொள்ள வேண்டும். நீங்கள் இல்லையென்றால் எனக்குக் கல்யாணம் இல்லை. கல்யாணம் இல்லையென்றால் எனக்கு வாழ்க்கை இல்லையென்று எனது வெட்கத்தை விட்டுச் சொல்லுகிறேன்.

நீங்கள் எதிர்பார்த்திராத ஒரு விடையத்தை நான் இப்பொழுது திடீரென்று கூறும்பொழுது உங்களுக்கு அதிர்ச்சியாய் இருக்கலாம், அன்றியும் மனம் குழப்பமடையலாம். ஆனபடியினால் முடிவை இப்போது உடனடியாய்க் கூறவேண்டுமென்ற அவசியமில்லை. நன்றாக யோசித்து முடிவெடுப்பதற்கு வேண்டிய கால அவகாசத்தை எடுத்துக் கொள்ளுங்கோ. முடிவு தாமதமாக வந்தாலும் அது சாதகமான முடிவாக இருக்கவேண்டும் என்பதுதான் எனது எதிர்பார்க்கை. இதில் தோல்வி கிடைத்தால் அதைத்தாங்கிக் கொள்ளும் அளவிற்கு என்னிடம் தைரியமில்ல. அதற்காக என்னை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒரு கோழை என்று கருதிவிட வேண்டாம். காதற் தோல்வி பெரிய மனோதைரிய சாலிகளையும் உலுக்கிவிடும். காதலை உரிய நேரத்தில் வெளிப்படுத்தத்தவறிய பலர் தங்கள் காதலிற் தோல்வி கண்டது நீண்ட வரலாறு. இன்னும் சிலர் தங்களுடைய காதலை இறுதிவரை வெளிப்படுத்தாமல் தங்களுக்குள்ளேயே வைத்து வேதனைப்பட்டு அழிந்து போனவர் களும் உண்டு. நான் அந்தப் பட்டியலில் சேரவிரும்பவில்லை. அதனாற்தான் கிடைத்த இன்றைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எனது உண்மைக் காதலை உங்களிடம் வெளிப்படுத்துகிறேன். முதலில் பெரும் தயக்க மாகத்தான் இருந்தது. பின் மனதில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு வெளிப்படுத்திவிட்டேன். எனது எதிர்கால வாழ்க்கை உங்களுடைய முடிவிற்தான் தங்கியுள்ளது,'' என்று சிறிது ஏக்கம் கலந்த தொனியிற் கூறிமுடித்தான்.

எல்லாவற்றையும் மௌனமாகக் கேட்டுக்கொண்டு நின்ற வாலாம்பிகை தலையை நிமிர்த்தி முருகனை ஒரு பார்வை பார்த்துச் சிரித்துவிட்டு, "என்மீது ஏன் சார் உங்களுக்குக் காதல் வந்தது?'' என்று கேட்டாள். இது ஒரு குறும்புத்தனமான கேள்வியாக இருந்தபோதும் அதற்குரிய விளக்கத்தைக் கொடுக்க வேண்டிய நிலையில் முருகன் இருந்தான். உடனே முருகன், "காதல் காரணத்தோடு வருவதில்லை என்று அனுபவசாலிகள் கூறுவார்கள். இருந்தபோதும் காதல் வருவதற்கு சிலபல பின்னணிகள் இருக்கத் தான் செய்கின்றன. நான் உங்களை முதலில் பார்த்தபொழுது உங்களுடைய அழகு என்னைக் கவர்ந்தது. வேறு வார்த்தையிற் சொன்னால் உங்களுடைய உருவம் என்னுடைய மனதில் பதிந்துவிட்டது. அப்புறம் உங்களுடைய குணம், நடை, உடை, பாவனை, உங்களுடைய குறும்புத்தனம், மற்றையவர்களுடன் எந்நேரமும் கலகலப்பாகப் பழகும் சுபாவம், உங்களுடைய சுறுசுறுப்பு, மற்றயைவர்களுக்கு உதவி செய்யும் உங்களுடைய பழக்கம், அழகிருந்தும் கர்வமில்லாத இனிமையாகப் பழகும் தன்மை,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்நம்பிக்கையை வெளிப்படுத்தும் உங்களுடைய நடை, இவையெல்லாம் என்னை மிகவும் கவர்ந்தன. இவற்றையெல்லாம் பார்க்கும்போதும் நினைக்கும்போதும் சந்தோசப்பட்டுக்கொள்வேன். உங்களைப் பார்க்கும்பொழுதும் நினைக்கும்பொழுதும் சந்தோசம் அடைகிறேன் என்றால், உங்களுடன் வாழும்பொழுது என்னால் எவ்வளவு சந்தோசமாய் இருக்க முடியும் என்று எண்ணிப் பார்க்கும்போது நீங்கள்தான் என்னுடைய மனைவியாக வரவேண்டும் என்ற முடிவிற்கு என்னை இட்டுச் செல்லுகின்றது. நீங்கள் கேட்டதற்காக இவற்றையெல்லாம் சோடித்துக் கூறுகிறேன் என்று கிஞ்சித்தும் எண்ண வேண்டாம், உண்மையைத்தான் கூறுகிறேன்.

ஆரம்பத்தில் உங்களுடைய அழகையும், கண்களையும், செயற்பாடுகளையும் பார்த்து ரசித்த நான், நாட்கள் செல்லச் செல்ல உங்களை என் மனைவியாக ஆக்கிக்கொள்ள வேண்டு மென்று முடிவுசெய்தேன். இப்பொழுது நீங்கள் இல்லையென்றால் எனக்கு வாழ்க்கையில்லை என்றாகிவிட்டது," என்று கூறியதும் வாலாம்பிகைக்கு என்ன சொல்வது என்று புரியவில்லை. ரொம்பப் புத்திசாலிப் பொண்ணு, ஏதாவது சொல்லியாக வேண்டும் என்ற நிற்பந்தத்தில், "நீங்கள் சார் உங்களுடைய தெய்வீகக் காதலை வெளிப்படுத்தி விட்டீர்கள். இதற்கு என்னுடைய இந்தக் குறும்புத்தனமான குரங்கு மனம் என்ன சொல்லப்போகின்றது என்று பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்," என்று பகிடியாகச் சிரித்துக் கொண்டே சொன்னாள். தொடர்ந்து, "அப்ப நான் போயிட்டு வரட்டுமா சார்?," என்று வெகுளித்தனமாய்க் கேட்டாள். உடனே முருகன், "ஒரு நிமிடம்," என்று கூறி அவளை நிறுத்தி விட்டு, "உங்களுடைய பதிலை எப்போது அறிவது? எங்கே அறிவது? என்று சொன்னாற்தானே நான் அதை எதிர்பார்க்க முடியும், அத்தோடு என்னுடைய மனதிற்கு ஆறுதலாயும் இருக்கும்," என்று சற்று தழதழத்த குரலில் கேட்டான்.

முருகனின் ஆவலையும் ஏக்கத்தையும் புரிந்துகொண்ட வாலாம்பிகை, "பாடசாலை ஆரம்பிப்பதற்கு இன்னும் இரண்டு கிழமைகள்தான் இருக்கின்றன. பாடசாலை ஆரம்பித்த பிற்பாடு நான் இங்கு ஒருநாள் வருவேன். அன்று மதிய உணவு இடைவேளை நேரத்தில் நாங்கள் இதைப் பற்றிப் பேசிக் கொள்ளலாம். என்ன திகதியில் வரமுடியும் என்று இப்பொழுது என்னால் கூறமுடியாது. எனினும் உங்களுடைய மனோநிலையைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்துகொண்டிருக்கின்றபடியால் பாடசாலை தொடங்கிய முதல் வாரத்தில் வருவதற்கு முயற்சிக்கிறேன். அப்படி வரமுடியாவிட்டால் மறுவாரத்தில் வருவேன், அதையிட்டு மனதைக் குழப்பிக் கொள்ள வேண்டாம் சார்,'' என்று சர்வசாதாரணமாகச் சொல்லிவிட்டு விலகினாள் வாலாம்பிகை. உடனே முருகன், "திரும்ப வந்து என்னைச் சந்தித்துக் கதைக்கும்பொழுது சார் போட்டுக் கதைக்கப்படாது'', என்று வழிந்த சிரிப்புடன் கேட்டுக் கொண்டான். பதிலுக்கு வாலாம்பிகை, "எல்லாவற்றிற்கும் காலம் பதில் சொல்லும் சார். அதுவரையும் பொறுமையாகக் காத்திருப்பதுதான் சிறந்த வழி,'' என்று அசட்டுச் சிரிப்புடன் சொல்லிவிட்டுச் சென்றாள். அவள் சென்று மறையும் வரை அவளுடைய அழகையும் நடையையும் பார்த்து ரசித்துக் கொண்டு நின்ற முருகன், "குறும்புத்தனமான பொண்ணு, எதைச் சொன்னாலும் பாரதூரமாக எடுத்துக் கொள்ளாமற் பதில் சொல்லிவிட்டுப் போகிறாள். என்னுடைய ஆசைக்கு ஆண்டவன்தான் வழிபண்ண வேண்டும்,'' என்று தனக்குள்ளேயே பேசிக்கொண்டான்.

முருகனைவிட்டு விலகிச் சென்றாலும் வாலாம்பிகையின் எண்ணங்கள் எல்லாம் அவனையே சுற்றிச் சுற்றி வந்தன. ஐந்து அடி ஆறு அங்குல உயரம், வண்டிதொந்தி இல்லாத ஒச்சட்டையான உடல், நிமிர்ந்த கம்பீரமான நடை, நேரான பார்வை, மேவி இழுத்த அழகான தலைமுடி, ஆண்மையை வெளிப்படுத்தும் எடுப்பான மீசை, எவரையும் கவரும் மென்மையான சிரிப்பு, மொத்தத்தில் முருகன் ஓர் அழகான இளைஞன். முருகனுடைய அந்த அழகான தோற்றம் அவள் மனதில் அடிக்கடி வந்து தோன்றியது. அவனுடைய தோற்றத்தை மனத்தில் காணும் போதெல்லாம் அவளுடைய மனதில் எழுந்த இன்ப அலைகள் உடல் முழுவதும் பரந்து ஊர்ந்து செல்வதை அவளால் உணர முடிந்தது. முருகன் தன்னுடன் கதைத்தவற்றை அவள் இரைமீட்டுப் பார்த்தபொழுது தன்னுக்குள் அவள் சிரித்துக் கொண்டாள். உடலிலும் உள்ளத்திலும் கிழுகிழுவென்ற உணர்வு, ஓடித்திரிய வேண்டும்போல் இருந்தது. உடல் இருப்புக் கொள்ளாது உந்திக் கொண்டிருந்தது. பேருந்தில் வீட்டிற்குச் சென்று கொண்டிருந்த பொழுது அவளுக்குத் தான் ஆகாயத்திற் பறப்பது போன்றிருந்தது. பேருந்திலிருந்து இறங்கி வீட்டிற்கு நடந்து சென்று கொண்டிருந்த பொழுது தன்னை ஏதோ ஒரு சக்தி அழைத்துச் செல்வதுபோல் உணர்ந்தாள். வீட்டிற்குச் சென்ற பிற்பாடும் எங்கு போனாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எங்கு பார்த்தாலும் முருகனின் தோற்றம், முருகன் கதைப்பதுபோன்ற பிரமை. வழமையாக வாலாம்பிகை இரவு பத்து மணிக்கெல்லாம் நித்திரையாகிவிடுவாள். இன்று இரவு பத்துமணியாகியும் நித்திரை வருவதற்கு மறுத்தது. இதுவரை காலமும் கஸ்டங்கள், துன்பதுயரங்கள்தான் நித்திரையைக் குழப்பும் என்று அறிந்திருந்த வாலாம்பிகைக்கு இன்றைய அனுபவம் புதிதாகவும் புதிராகவு மிருந்தது. தலையணையை இறுக அணைத்துக்கொண்டு புரண்டுபுரண்டு படுத்தாள். கண்ணை இறுக மூடிக்கொண்டு படுத்துப் பார்த்தாள். அப்பொழுதும் முருகனின் அழகுத் தோற்றமே மனதிற்குட் தோன்றியது.



இப்பொழுது நேரம் இரவு பன்னிரண்டு மணி. கிராமம் முழுவதும் ஒரே அமைதி, மயான அமைதி. உயிரினங்கள் மட்டுமல்ல மரம், செடி, கொடி எல்லாமே தூங்குகின்றன. என்னால் மட்டும் தூங்க முடியவில்லை, ஏன்? ஏன் என்னால் மட்டும் தூங்க முடியவில்லை? எனக்குக் காதல் வந்துவிட்டதா? இதுதான் காதலா? இவைதான் காதலுக்கான அறிகுறிகளா? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே! எனக்கு இப்பொழுது நித்திரை வேண்டும். உடன் நித்திரையாக வேண்டும். இதற்கு மேலும் என்னாற் பொறுத்திருக்க முடியாது. தன்னுக்குட் புலம்பிக் கொண்டாள் வாலாம்பிகை. கவலைமட்டும்தான் மனக்களைப்பையும் உடற்சோர்வையும் ஏற்படுத்தும் என்று இதுவரை எண்ணியிருந்த வாலாம்பிகைக்கு, அதிக மகிழ்ச்சிகூட மனக்களைப்பையும் உடற்சோர்வையும் ஏற்படுத்துமென்று பின்னிரவு இரண்டுமணிவரை நித்திரையில்லாது இருந்தபொழுது உணர முடிந்தது. அப்புறம் தன்னை அறியாமலேயே அவள் நித்திரையாகிவிட்டாள்.

கனவில் வந்த காட்சிகள் யாவும் காதற் காட்சிகளாகவே இருந்தன. பனிபடர்ந்த பசும்புற்றரையில் முருகனோடு கைகோர்த்து நடந்து செல்கிறாள். சினிமாக் காட்சிகளில் வருவதுபோற் பூங்காவில் ஓடிப்பிடித்து விளையாடுகின்றார்கள். கனவின் தொடரில், ஒரு பெரிய தென்னந்தோப்பு. அங்கு கிடந்த ஒரு தென்னங்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குற்றியில் இருவரும் சோடியாக அமர்ந்திருக்கின்றனர். அதன் ஊடாகத் தவழ்ந்துவரும் தென்றற்காற்று இருவரினதும் உடல்களை வருடிச் செல்கின்றது. அப்பொழுது இருவரினதும் உள்ளங்களில் இன்ப உணர்வு ஊற்றெடுக்கிறது. அங்கே ஓர் ஆலமரம். அதன் கிளையில் இரண்டு பச்சைக் கிளிகள். அவைகள் கொஞ்சி மகிழும் காட்சி. என்ன அற்புதம். அதை முதலில் அவதானித்த முருகன், "அங்கபார் வாலாம்பிகை, ஒரு காதல் சோடியை. என்ன அற்புதமாகக் கொஞ்சி மகிழ்கின்றனவென்று." கூறியதும், அவையிரண்டும் கொஞ்சி மகிழ்வதையும், இடையிடையே கீ.. கீ என்று தங்களுக்குள் ஏதோ பேசிக்கொள்வதையும் பார்த்த வாலாம்பிகைக்கு எதிர்பாராத ஓர் இன்ப அதிர்ச்சி. அவள் உடம்பெல்லாம் ஒரு கிழுகிழு உணர்வு ஊர்ந்து பரவிச் செல்வதை அவளால் உணரமுடிகின்றது. அப்பொழுது அவள் முருகனுடன் மேலும் நெருக்கமாய் ஒட்டிக்கொள்கிறாள்.

உடனே முருகன் அவளை இறுக அணைத்துக்கொண்டு, "அவை நமக்குக் காதற் பாடம் சொல்லித்தருகின்றனபோற் தோணவில்லையா வாலாம்பிகை," என்கிறான். உண்மைதான், என்கிறாள். அப்புறம் இருவரும் கொஞ்சும் கிளிகள் சொல்லிக்கொடுத்த பாடத்தைப் பின்பற்றி இன்பத்திற் திளைத்துத் தங்களை மறந்திருந்த பொழுது கீச்கீச் என்று ஓர் அபயக்குரல் ஆலமரத்திலிருந்து வந்தது. திடுக்கிட்டு என்னவென்று பார்த்தனர். ஓர் அண்டங்காகம் அந்த மரக்கிளையிலிருந்தது. அந்தப் பச்சைக்கிளிகளின் காதலைப் பொறுக்கமாட்டாத அந்த அண்டங்காகம் அந்தக் காதற் சோடியை விரட்டிவிட்டது. அப்பொழுது வாலாம்பிகை முருகனைப் பார்த்து "அண்டங்காகங்கள் வல்லூறுகள் நம்மைப் பார்ப்பதற்கு முன்னர் நாம் இந்த இடத்தில் இருந்து போய்விடவேண்டும்," என்றாள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு முருகன் "நீ சொல்வது வாஸ்தவம் தான்," என்றான். எழும்பி நடந்தனர். அப்பொழுது தென்னந்தோப்புக் காவல் நாய் ஒன்று அவர்களை நோக்கி உறுமிக்கொண்டு விரைந்து வந்தது. வாலாம்பிகை பயத்தினால் முருகனுக்குப் பின்னால் ஒழித்துக் கொள்கிறாள். நாய் அவர்களை நெருங்க நெருங்க உக்கிரமாக உறுமியது. உடனே முருகன் பக்கத்திற் கிடந்த ஒரு தென்னம் மட்டையை எடுத்து ஓங்கி ஓர் அடி அடித்தான் நிலத்தில். அந்த அதிர்ச்சியில் விழித்துக் கொண்டாள். "ஆ! இதுவரை வந்த காட்சிகள் வெறும் கனவா? கனவேதான்!" ஒருபுறம் இன்பமாக இருந்தபோதும், மறுபுறம் சிறிது வெட்கமாயும் இருந்தது. கனவிலும் நினைவிலும் முருகனுடைய காட்சிகள்தான். நிறுத்துவம் என்றாலும் முடியவில்லை. ஓ! இது காதலின் பிரதிபலிப்புத்தான். காதற் பயித்தியம் தலைக்கு ஏறிவிட்டதுபோலும். அப்படியானால், முருகனை நான் காதலிக்கிறேனா? உண்மையாகவே காதலிக்கிறேனா? ஆம். நான் முருகனைக் காதலிக்கிறேன், உண்மையாகவே நான் முருகனைக் காதலிக்கிறேன். இதற்கு இனி வைத்தியமில்லை. இது பயித்தியமாக மாறுவதற்கு முன் முருகனிடம் நானும் காதலிக்கிறேன் என்று சொல்லிவிட வேண்டியதுதான். இதற்கு ஒரே மருந்து அதுதான் என்று தன்னுக்குட் புலம்பிக் கொண்டாள் வாலாம்பிகை.

பாடசாலை மறுபடியும் ஆரம்பிப்பதற்கு இன்னும் ஏழு நாட்கள் இருக்கின்றன. ஏழு நாட்களும் எப்போ கழியப் போகின்றன என்று அவள் மனம் ஏங்கியது. ஒவ்வொரு நாட்களும் ஒவ்வொரு வருடம் கழிவது போன்று இருந்தது அவளுக்கு. கனவிலும் நினைவிலும் முருகனோடு இருந்தபடியினால் அதிலும் ஒரு சுகம், இன்பம் இருக்கத்தான் செய்தது. இருந்தபோதும் மனதிற் பல கேள்விகள் எழுந்தவண்ணம் இருந்தன. நான் ஏன் முருகனைக் காதலிக்கிறேன்? அவன் என்னைக் காதலிப்பதனாலா நான் அவனைக் காதலிக்கிறேன்? அவன் என்னைக் காதலித்தால் நான் அவனைக் காதலிக்க வேண்டுமா? வேறு யாரும் என்னைக் காதலித்தால் அவர்களையும் காதலிக்க முடியுமா? ஒன்றுமே புரியவில்லையே? என்று கேள்விகள் அவளுடைய மனதில் எழுந்தவண்ணம் இருந்தன. அதற்குரிய விடைகளை அவளாற் கண்டுபிடிக்க முடியவில்லை. இதனாற்தான் காதலுக்குக் கண் இல்லை என்று பெரியவர்கள் சொன்னார்களோ? சரி... காரணம் எதுவாக இருந்தாலும் நான் முருகனை மனப்பூர்வமாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலிக்கிறேன். இதை இனிமேல் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. இந்த உண்மையைப் பாடசாலை தொடங்கியவுடன் முருகனிடம் சொல்லிவிட வேண்டியதுதான். அவரும் என்னுடைய காதலுக்காகக் காத்துக்கிடக்கிறார். எனது காதல் இல்லையேற் தனக்கு வாழ்க்கை இல்லையென்கிறார். அவர் கூறுவது உண்மை தானா? அவர் உண்மையாகவே என்னைக் காதலிக்கிறாரா? அல்லது எனது அழகை அனுபவிப்பதற்கு வேடம் போடுகின்றாரா? இந்தக்காலத்து இளைஞர்களை உடனே நம்பிவிட முடியாது, என்று இன்னொரு மனம் கேள்விகளைக் கேட்டது. இந்த மனத்தினுடைய கேள்விகளும் நியாயமானதுதான். இவைகளுக்கும் விடை கண்டு பிடிக்கத்தான் வேண்டும். காதற் பயித்தியம் பிடித்தவள் போன்று அவரிடம் போய் நானும் உங்களைக் காதலிக்கிறேன் என்று கூறுவது ஆபத்தாக முடிந்துவிடுமோ? நல்லகாலம், இப்பொழுதாவது இந்த மூளை வந்தது, முடிவெடுப்பதற்கு இன்னும் நாட்கள் இருக்கின்றன. பாடசாலை தொடங்குமன்று போய்ச் சொல்லத்தான் வேண்டுமென்ற அவசியமில்லை. போதியகால அவகாசம் எடுத்துச் சிந்திக்க வேண்டும். போனவுடன் அவசரப்பட்டு நானும் உங்களைக் காதலிக்கிறேன் என்று சொல்லப்படாது. காதலின் பெயரால் ஏமாற்றப்பட்டவர்கள், வஞ்சிக்கப்பட்டவர்களுடைய பட்டியல் நீண்டது. இவ்வாறு ஞானம் பிறந்தவள் போன்று சிந்திக்கத் தொடங்கினாள் வாலாம்பிகை.

இன்று ஜனவரி மாதம் மூன்றாந்திகதி, புதிய வருடத்திற்காகப் பாடசாலைகள் ஆரம்பமாகின்றன. இருவரும் காத்துக் கிடந்த நாள் வந்துவிட்டது. அவர்களுக்கு ஒரு புதிய யுகம் பிறந்தது போன்ற உணர்வு. முருகன் பாடசாலைக்கு வந்து விட்டான். பாடசாலையைச் சுற்றுமுற்றும் பார்க்கிறான். விசேடமாக வாலாம்பிக்கையின் வகுப்பறைப் பக்கமாய் அடிக்கடி நோட்டமிடுகிறான். அந்தப் புள்ளிமான் துள்ளித்திரியும் காட்சிகள்தான் அவனுடைய மனக்கண்முன் தோன்றுகின்றன. எப்பொழுது மதிய உணவு இடைவேளை வரும்? என்று மனம் ஏங்குகின்றது. ஒவ்வொரு மணித்தியாலமும் ஒவ்வொரு நாளாய்க் கழிந்து செல்வது போன்ற ஓர் உணர்வு. வாலாம்பிகை இன்று வருவாளா? வந்தாலும் நல்ல முடிவோடு வருவாளா? என்ற கேள்விகளை ஒரு மனம் கேட்டுத் தவிக்கின்றது. கட்டாயம் வருவாள், அவள் ரொம்ப நல்லவள், சொன்ன சொல்லு தவறாமல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடப்பவள், எனது உணர்வுகளை நிச்சயம் புரிந்திருப்பாள் என்று இன்னொருமனம் சமாதானம் சொல்லி மனதில் தெம்பை ஏற்படுத்துகின்றது.

அவள் ஏன் என்னைக் காதலிக்கப்படாது? இல்லை... இல்லை.... அப்படிச் சொல்லுவது தவறு. அவள் ஏன் என்னுடைய காதலை ஏற்றுக் கொள்ளப்படாது? எனக்கு அழகில்லையா? அறிவில்லையா? படிப்பு இல்லையா? பதவி இல்லையா? அவளைக் கண்கலங்காமற் காப்பாற்றிக் குடும்பம் நடத்த முடியாதா? ஏன் என் காதலை அவள் ஏற்றுக் கொள்ளப்படாது? என்று இன்னொரு மனம் கேள்விகளைக் கேட்டு அவனைக் காதலுக்குத் தகுதியாக்கிக் கொண்டது, தன்நம்பிக்கையை வளர்த்துக் கொண்டது. அன்று வருட ஆரம்பநாளாய் இருந்தபடியினாற் படிப்பித்தலில் அதிக கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இருக்கவில்லை. அதனால் அன்றைய அவனுடைய மனக்குளப்பம் அவனுடைய கடமையைப் பெரிதும் பாதிக்கவில்லை, எனவே கடமையிற் தப்புப் பண்ணுகிறேன் என்ற எந்தக் குற்ற உணர்வும் அவன் மனதை உறுத்தவில்லை. முருகன் கணிதத்தில் ஒரு வேங்கை. கணிதத்தையே அநேகமான வகுப்புகளுக்குக் கற்பித்து வந்தான். மிகவும் கடமை உணர்வுடைய ஓர் ஆசிரியர் என்று எல்லோரும் பேசும் அளவிற்கு ஓர் ஆண்டிலேயே தன்னை வளர்த்துக் கொண்ட பெருமை அவனுக்குண்டு. அதனால் இன்று தனிமையில் யோசித்துக் கொண்டிருந்ததை யாரும் கணக்கெடுக்கவில்லை. காதலுக்காக ஏங்குவதிலும், அதற்காகக் காத்துக்கிடப்பதிலும் ஒருவகைச் சுவை இருக்கத்தான் செய்கிறது. அந்த உணர்வுடன் மனதைச் சமாதானப்படுத்திக் கொள்கிறான்.

இப்பொழுது நேரம் பன்னிரண்டு மணி முப்பது நிமிடங்கள். மதிய உணவு இடைவேளைக்கான மணி ஒலிக்கின்றது. மாணவர்களும் ஆசிரியர்களும் வகுப்பறைகளைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றார்கள். முருகன் தாமரைக்குளம் ரவுணிலுள்ள உணவகம் ஒன்றில் மதிய உணவு சாப்பிடுவது வழக்கம். வழமையாக மதிய உணவு இடைவேளை மணி அடித்ததும் சாப்பாட்டிற்காகச் சென்றுவிடுவான். இன்று வகுப்பறையை விட்டு வெளியே வந்தவன், அதுவும் கடைசியாக வெளியே வந்தவன் விறாந்தையில் நின்று கேற்றைப் பார்த்தபடி அவள் வருகின்றாளா என்று நோட்டமிட்டான். கேற்றைப் பார்த்துக் கொண்டு நின்ற முருகன் திடீரென்று, "ஓ! வருகிறாள், வாலாம்பிகை வருகிறாள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலாம்பிகை வருகிறாள், சொன்னபடி வருகின்றாள்," என்று தனக்குட் பேசிக்கொண்டு, அவனுடைய மட்டற்ற மகிழ்ச்சி புன்சிரிப்பாக வெளிப்பட அவளை வரவேற்பதற்குத் தயாராகினான். வந்தவள் நெருங்க நெருங்க அவள் வாலாம்பிகை அல்ல நீலாம்பிகை என்று தெரிந்ததும், தன்னுடைய கண்களையே அவனால் நம்பமுடியவில்லை. கண்களில் ஏதும்பிழை வந்துவிட்டதோ, அல்லது காதலுக்குக் கண்ணில்லை என்பார்கள், இதைத்தானோ," தன்னுக்குள் புலம்பி எரிச்சலைத் தீர்த்துக் கொண்டான். வாலாம்பிகையும் நீலாம்பிகையும் தோற்றத்தில் ஒற்றுமை உடையவர்கள். தூரத்துப் பார்வைக்கு நீலாம்பிகை வாலாம்பிகை போன்று தோன்றியதிற் தப்பொன்றுமில்லை என்று தனக்குட் கூறித் தன்மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டான்.

மறுபடியும் ஆவலோடு எதிர்பார்க்கத் தொடங்கினான். ஓர் இளம் பெண் வருகிறாள். வாலாம்பிகையின் தோற்றமுடையவள் தான். வாலாம்பிகையின் அதே தோற்றம், வாலாம்பிகையின் அதே நடை. தன்னுடைய கண்களையே நம்ப முடியாதவனாய், கண்களைக் கைக்குட்டையாற் துடைத்துவிட்டுப் பார்க்கிறான். நன்றாக உற்றுப் பார்க்கிறான். பாடசாலைக்கு வரும்போது வாலாம்பிகை காவ்சாறியுடன் வருவாள், இவளோ முளுச்சேலை அணிந்து வருகிறாள். குருத்துப் பச்சை நிறச்சட்டையுடன் பெரிய புள்ளிகள் விழுந்த பச்சை நிறச்சாறி உடுத்தி வருகிறாள். தாவணி காற்றிற்குப் பறக்கின்றது! அப்பொழுது கானகத்து மயில் ஒன்று தோகை விரித்தாடுவது போன்ற ஒரு காட்சி. அவளுடைய மாவெள்ளை நிறம் முகத்திற் பிரகாசிக்கின்றது. தோளிலே ஒரு கைப்பை தொங்குகின்றது. ஆனால் அதேநடை, வாலாம்பிகையின் நடை. அவள் நெருங்க நெருங்க முருகனின் நம்பிக்கை அதிகரிக்கின்றது, முகம் மகிழ்ச்சியால் மலர்கின்றது! அவன் தன்னை அறியாமலேயே சிரிக்கின்றான். அவளும் சிரிக்கிறாள். இடைவெளி குறையக் குறைய இருவரினதும் சிரிப்பு மேலோங்குகின்றது. அவளுடைய முத்துப்போன்ற பற்கள் சந்திரன் போன்ற முகத்தினூடாகப் பிரகாசிக்கின்றன. மேலும் அண்மிக்கிறாள். அவளேதான், வாலாம்பிகைதான். சந்தோச மிகுதியினால் முருகனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவள் கட்டியிருந்த சாறியில் அவளுடைய அழகைப் பார்த்ததும் முருகன் சொக்கிப் போனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுடைய அடர்த்தியான நீண்ட கருங்கூந்தலை இரட்டைப் பின்னலாகப் பின்னியிருந்தாள். அவளுடைய இயற்கைத் தோற்றம், அவளுடைய நிறம், போட்டிருந்த சட்டை, உடுத்தியிருந்த சேலை, இரட்டைப் பின்னல் எல்லாவற்றையும் உற்று நோக்கியபொழுது மொத்தத்திற் தேவலோகக் கன்னிகை போன்று காட்சி கொடுத்தாள் என்றால் மிகையாகாது. முருகனின் முன் வந்து நின்ற வாலாம்பிகை அவனைப் பார்த்து, "என்ன சார் அதிக நேரம் காத்திருக்கப் பண்ணிவிட்டேனா?" என்றாள். அவளின் அழகில் மயங்கி நின்ற முருகனால் அவள் கேட்டதைக் கிரகிக்க முடியவில்லை. அவளை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டு நின்றான். முருகனுக்கு என்ன நடந்தது என்பதைப் புரிந்துகொள்ளாத வாலாம்பிகை, "என்ன சார், என்னுடன் கோபமா?" சற்றுச் சத்தமாய்க் கேட்டாள். அப்போது சுயநினைவிற்கு வந்த முருகன் திடீரென்று, "சொறி, கொஞ்சம் தடுமாறிப் போய்விட்டேன். உங்களுடைய அழகைப் பார்த்ததில் மனம் கொஞ்சம் மயங்கிவிட்டது. தெரியாதே, இதுவும் ஒரு வாலிப வயதுக் கோளாறுதான். மன்னித்துக் கொள்ளுங்கோ," என்று கூறிய முருகன் தொடர்ந்து, "அதுசரி, நான் உங்களிடம் சொன்னனான் அல்லே என்னை இனிமேல் சார் என்று கூப்பிட வேண்டாம் என்று. நீங்கள் சார் என்று என்னைக் கூப்பிடுவது எனக்குச் சுத்தமாய்ப் பிடிக்கவில்லை. இந்த நேரத்திலிருந்து அப்படிக் கூப்பிடுவதை நிறுத்திவிடுங்கோ," என்று சிரித்துக் கொண்டு சிறிது கண்டிப்பான தொனியிற் சொன்னான்.




அவனுடைய எதிர்பார்ப்பபைப் புரிந்துகொண்ட போதும், யதார்த்தத்தைச் சொல்ல விளைபவள் போன்று, "சொல்லிப் பழக்கப்பட்ட வாய் என்னை அறியாமலேயே சொல்லுகின்றது. போதாததிற்கு இப்பொழுது நான் பாடசாலையில் நின்று கொண்டிருக்கிறேன். போகப்போக எல்லாம் சரியாகிவிடும், யோசிக்காதீங்கோ," என்றாள் வாலாம்பிகை. அவளுடைய முடிவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவதற்கு ஆவலோடு காத்திருந்த முருகனால் மேலும் பொறுத்திருக்க முடியவில்லை. உடனே "முடிவு எடுத்துவிட்டீர்களா? என்ன, நல்ல முடிவுதானே?" என்று சிரித்துக்கொண்டே கேட்டுவிட்டுப் பதிலுக்காக அவளுடைய முகத்தையே பார்த்துக்கொண்டு நின்றான். அவனுடைய ஆவலைப் புரிந்துகொண்ட வாலாம்பகை தரையைப் பார்த்துக்கொண்டு வெட்கத்தோடு மெதுவாக புன்சிரிப்பை உதிர்த்தபடி, "நான் உங்களை விரும்புகின்றேனோ அல்லது விரும்பவில்லையோ என்பது ஒருபுறமிருக்க, நீங்கள் உங்களுடைய காதலை வெளிப்படுத்தியதிலிருந்து என்னுடைய மனம் நினைவிலும் கனவிலும் உங்களையே சுற்றிச் சுற்றி வருகின்றது! சிறிது நேரம் மறந்திருப்பம் என்றாலும் முடியுதில்லை. அப்படியானால் அதன் அர்த்தம் என்ன?" என்று கேட்டுவிட்டுத் தலையைச் சிறிது உயர்த்தி தனது கயல்விழிகளால் கடைக் கண்பார்வையைச் செலுத்தி இதழ்களுக்குட் புன்னகைத்தாள்.



அப்பொழுது புன்சிரிப்புடன் கூடிய காதளவோடிய கடைக்கண் பார்வையிலிருந்து வந்த மன்மத பாணம் அந்தக் கட்டிளங்காளையின் உள்ளத்தைத் துளைத்தது. சில கணங்கள் மயங்கி நின்றான். மறு கணம் மயக்கம் தெளிந்து, "தாங்ஸ்! ரொம்பத் தாங்ஸ்!!. நீங்கள் பாடசாலையால் விலகிய நாளிலிருந்து இன்றுவரை என்னுடைய மனம் உங்களுடைய பதிலுக்காக ஏங்கிக் கொண்டிருந்தது. வெட்கத்தை விட்டுச் சொன்னால் சரியாக உண்ண முடியவில்லை, சரியாக உறங்க முடியவில்லை, வழமைபோன்று மற்றையவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடிய வில்லை. இவற்றை அவதானித்த என்னுடைய அம்மா, "என்னடா உனக்கு நடந்தது?" என்று கேட்டா. ஒருநாள் இரண்டுநாள் என்றால் பொய் சொல்லலாம். இரண்டு கிழமைக்கு எப்படிப் பொய் சொல்வது? உண்மையை அம்மாவிடம் சொல்லிப் போட்டன். நீங்கள் சம்மதம் தெரிவித்துவிட்டீர்கள் என்று அம்மாவிடம் சொன்னால் அவா மிகவும் சந்தோசப்படுவா. அதுமட்டுமல்ல அம்மா உங்களை நேரிற் பார்த்தால் அசந்து போய்விடுவா என்று கூறியவன் மணிக்கூட்டை திடீரென்று பார்த்துவிட்டு மதிய உணவு இடை வேளை முடிவதற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் இருபது நிமிடங்கள்தான் இருக்கின்றன. வாருங்கள் போய் கடையிற் சாப்பிடுவம், மிகுதியை சாப்பிட்டுக்கொண்டு பேசலாம் என்றான். சிறிது யோசித்துவிட்டு, "இங்குள்ள கடைக்காரர்கள் எல்லோருக்கும் என்னை நன்றாகத் தெரியும். நாங்கள் இருவரும் போய் சேர்ந்து சாப்பிடுவதை அவர்கள் பார்த்தால் வித்தியாசமாக எண்ணுவார்கள். அதை நான் இப்பொழுது விரும்பவில்லை. எனவே வழமைபோன்று நீங்கள் போய்ச் சாப்பிடுங்கோ, நான் வீட்டிற்குப் போகிறேன்," என்றாள் வாலாம்பிகை.

வாலாம்பிகை கூறியதை ஒரேயடியாக உதாசீனம் செய்ய விரும்பாத முருகன், "நீங்கள் கூறுவதிலும் அர்த்தமிருக்கத்தான் செய்கின்றது. இருந்தபோதும் இந்த நேரத்திலிருந்து நாங்கள் காதலர்களாகிவிட்டோம். நமது காதல் விவகாரத்தை நீண்ட நாட்களுக்கு மறைத்து வைத்திருக்க வேண்டும் என்று விரும்புவன் அல்ல நான். அப்படியிருந்திருந்தால் அம்மாவிடம் இதைப்பற்றி கூறியிருக்கமாட்டேன். திருட்டுத்தனமாய்க் காதல் பண்ணுவதில் எனக்கு ஒப்புதல் இல்லை. எனவே நமது காதல் விரைவில் வெளிவரத்தான் போகின்றது. அதற்குக் கட்டியமாக நம்மிருவரையும் ஒன்றாய்ப் பார்க்கட்டுமேன் இன்று. அதனால் நாம் என்னத்தை இழக்கப் போகின்றோம். நான் உங்களைக் கல்யாணம் செய்யப் போவது நிச்சயம். அப்புறம் நீங்கள் ஏன் மற்றையவர்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்? இந்த நாட்டில் நான்தான் ஓர் இளைஞன் என்றில்லை. எத்தனையே இளைஞர்கள் உள்ளனர். நீங்கள் ஓர் அழகான கவர்ச்சியான பெண். வேறு இளைஞர் யாரும் என்னைப்போல் உங்களைக் காதலிக்க முயற்சிக்கலாம் அல்லவா? உங்களுக்கு ஏன் அந்த வீண் தொல்லை? நானும் நீங்களும் காதலர்கள் என்று தெரிந்துகொண்டால் மற்றையவர்கள் ஒதுங்கிக் கொள்வார்கள். ஆனபடியினால் இன்று நாமிருவரும் சென்று ஒன்றாய்ச் சாப்பிடுவது ஒருவகையில் நன்மையான காரியம் தான். இனிமேல் உங்களை எந்த வகையிலும் விட்டுக் கொடுக்க நான் தயாராயில்லை," என்று சற்று விளக்கமாய்ச் சொன்னான்.

முருகனுடைய கருத்துக்களை அமைதியாகக் கேட்டுவிட்டு, அவன் சொல்லுவதிலும் ஆழ்ந்த அர்த்தம் இருக்கின்றது என்பதைப் புரிந்துகொண்ட வாலாம்பிகை, "உங்களோடு கதைத்து வெல்லுவது என்பது முடியாத காரியம். வாங்க இருவரும் கடைக்குப் போவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்கு நேரமாகின்றது," என்று சொல்லிவிட்டு இருவருமாகக் கடைக்குச் சென்றனர். அப்பொழுது எதிர்பராத விதமாக நீலாம்பிகை குறுக்கிட்டாள். அவள் வாலாம்பிகையை முதல் முறையாகச் சாறியிற் பார்த்தபொழுது அவளுடைய அழகைப் பார்த்துப் பிரமித்துப்போன அதேவேளை, அவள் முருகனுடன் நெருக்கமாக நடந்து வருவதைப்பார்த்து ஆச்சரியம் அடைந்தாள். உடனே தன்னைச் சுதாகரித்துக்கொண்டு, "வாலாம்பிகை, உன்னை இந்தச் சாறியிற் பார்க்கும்பொழுது இந்திரலோகத்து அழகிபோற் தோணுகின்றாய். என்னுடைய கண்ணே பட்டிடும்போலிருக்கு," என்று சிரித்துக்கொண்டே சொல்லிவிட்டு வாயிற் கையை வைத்தாள். உடனே வாலாம்பிகை, "போடீ! உனக்கு எப்பொழுதும் என்னோடு பகிடிதான். நான் ஒன்றும் இந்திரலோகத்துப் பெண்ணில்லை. நானும் உன்னைப் போன்று சாதாரண ஒரு பெண்தான். இனிமேல் இப்படியெல்லாம் வர்ணிக்காதே," என்று அன்பும் பகிடியும் கலந்த தொனியிற் சொன்னாள். பதிலுக்கு வாய்விட்டுச் சிரித்துக்கொண்ட நீலாம்பிகை, "அது போகட்டும், இருவரும் இப்பொழுது எங்கு போகின்றீர்கள்?" என்று சற்று சீரியசாகக் கேட்டாள். அவளுடைய கேள்வியிலிருந்து அவளுடைய மனோநிலையைப் புரிந்துகொண்ட வாலாம்பிகை உண்மையை அவளிடம் சொல்லிவிட வேண்டுமென்று எண்ணிக் கொண்டு, புன்முறுவலை வரவழைத்த நிலையில், "முருகன் சார் என்னைக் காதலிக்கிறாராம். இந்தச் செய்தியை பாடசாலை முடிவன்று எனக்குத் தெரியப்படுத்தியிருந்தார். அதற்கு இன்று நானும் சம்மதம் தெரிவித்துவிட்டேன்.

எங்களுடைய காதலுக்குக் கட்டியம் கூறுவதுபோன்று சாப்பாட்டுக் கடைக்கு என்னை அழைத்துச் செல்கிறார். அவருடைய ஆசைக்கு மதிப்பளித்து நானும் கூடச் செல்லுகிறேன். திருட்டுக்காதல் பண்ணுவதற்குச் சாருக்கு விருப்பமில்லையாம். அதில் எனக்கும் இசைவில்லை. முதல் முதலாய் உற்ற நண்பி என்ற ரீதியில் இந்த விவகாரத்தை உன்னிடம் வெட்கமோ தயக்கமோ இல்லாமற் சொல்லுகிறேன்," என்று சர்வசாதாரணமாய்க் கூறினாள். இதைக் கேட்ட நீலாம்பிகை, "இந்தச் செய்தியைக் கேட்கும்பொழுதும், உங்கள் இருவரையும் ஒன்றாகப் பார்க்கும் பொழுதும் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியாக இருக்கின்றது. என்னுடைய மகிழ்ச்சியை எப்படி வெளிப்படுத்துவதென்றே தெரியவில்லை," என்று கூறியவள் உடனே வாலாம்பிகையைக் கட்டித் தழுவி முத்தமிட்டுத் தனது பெருமகிழ்ச்சியை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்திக் கொண்டாள். தொடர்ந்து, "சும்மா சொல்லப்படாது நல்ல சோடிப்பொருத்தம். முருகக்கடவுளைப் போன்று அழகான மாப்பிள்ளை, அவருக்கு ஏற்றாற்போல அழகான பொண்ணு தெய்வானை போன்று. நீங்கள் நல்லாயிருக்க வேண்டும். ஆனால் வள்ளி ஒன்று வராமல் பார்த்துக்கொள் வாலாம்பிகை," என்று கூறிவிட்டு விழுந்து விழுந்து சிரித்தாள். அவர்களும் சேர்ந்து சிரித்தனர். கதையைத் தொடர்ந்த நீலாம்பிகை, "மேலும் உங்களைத் தாமதித்து வைக்க நான் விரும்பவில்லை. சந்தோசமாய்ப் போயிட்டு வாங்கோ, எனது வாழ்த்துக்கள்," என்றுகூறி விடைபெற்றுச் சென்றாள்.

இருவரும் சாப்பிட்டுக் கொண்டிருந்த பொழுது முருகன் அவளையே பார்த்து அவளுடைய அழகை ரசித்துக் கொண்டிருந்தான். அதை அவதானித்த வாலாம்பிகை, "என்ன முருகன்! சாப்பாட்டைப் பார்த்துச் சாப்பிடுவதை விட்டிட்டு என்னையே பார்த்துக் கொண்டிருக்கின்றீங்கள். அப்படி என்ன இருக்கின்றது என்மீது? இன்றுதான் முதன் முதலாய்க் காண்பவர் போற் பார்த்துக் கொண்டிருக்கிறீங்கள்," என்று சிரித்துக் கொண்டே கேட்டாள். உண்மையை மறைக்க விரும்பாத முருகன், "உங்களைப் பல மாதங்களாய்ப் பார்த்திருந்தபோதும், இன்று உங்களை இந்த உடையிற் பார்க்கும்போது ரொம்ப அழகாய் இருக்கின்றீர்கள். பார்த்துக் கொண்டே இருக்கவேண்டும்போற் தோணுகின்றது. கொடுத்து வைத்தனான், உங்களைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தபடியாற் சாப்பாட்டின் சுவையே தெரியவில்லை. இயற்கையிற் புதைந்து கிடக்கும் இன்ப இரகசியங்கள் எவ்வளவு விநோதமானது," என்று கூறிக்கொண்டு போக, பிற்பகல் வகுப்புகள் ஆரம்பிக்க இன்னும் சில நிமிடங்கள்தான் இருக்கின்றன என்பதை உணர்ந்த வாலாம்பிகை, இதழ்களிற் புன்முறுவல் ததும்ப, "ரசித்தது போதும் சாப்பிட்டுவிட்டுக் கிளம்புங்கோ, பின்னேர வகுப்புக்கள் ஆரம்பமாகப் போகின்றன. உங்களைக் காணவில்லை என்று மாணவர்கள் ஏதும் நினைப்பார்கள். நீங்கள் பிந்திப்போவதற்கு நான் ஒருபோதும் காணரமாய் இருக்கப்படாது. பார்க்கின்ற சனங்களும் ஏதும் தப்பாக எண்ணக்கூடும்," என்று சிறிது அழுத்தம் கொடுக்கும் பாணியிற் சொன்னாள்.

சாப்பிட்டுவிட்டு இருவரும் வெளியே வந்தபொழுது, முருகனைப் பார்த்து, "நீங்கள் உடனே வகுப்பிற்குப் போங்கோ,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பேரூந்தில் வீட்டிற்குப் போகிறேன்,'' என்றாள். அப்பொழுது ஏதோ திடீரென்று ஞாபகத்திற்கு வந்தவன் போன்று, ''இனி எப்பொழுது நான் உங்களைச் சந்திப்பது?'' என்று சிறிது ஏக்கத்தோடு கேட்டான் முருகன். முருகனின் ஆவலைப் புரிந்துகொண்ட வாலாம்பிகை, மறுபடியும் பாடசாலைக்குச் சென்று அவரைச் சந்திக்க விரும்பாதவளாய், ''இனிமேல் நான் பாடசாலைக்கு வந்து உங்களைச் சந்திக்கமாட்டேன். இனிமேலும் உங்களை அங்கு வந்து சந்திப்பது பாடசாலைக் கலாச்சாரத்திற்கு ஒவ்வாதது. பாடசாலை காதல் பண்ணும் இடமாக ஒருபோதும் இருக்கப்படாது. ஆனபடியால் வருகின்ற சனிக்கிழமை தாமரைக்குளம் சந்தையிற் சாமான்கள் வாங்க வந்தவர் போன்று நில்லுங்கோ. நான் சரியாகப் பத்து மணிக்கு வந்து சந்திக்கிறேன். மிகுதியை அப்புறம் பேசிக்கொள்ளலாம். நான் போயிட்டு வாறன் முருகன்,'' என்று கூறிவிட்டுச் சென்றாள் வாலாம்பிகை.

வரப்போகும் சனிக்கிழமைக்காகக் காத்திருந்து சோர்வடைந்த முருகனுக்கு வெள்ளிக்கிழமை பிறந்ததும் இனம் தெரியாத ஒரு தெம்பு வந்தது. 'நாளை சனிக்கிழமை, எனது அன்பிற்குரிய காதலியைச் சந்திக்கப் போகிறேன். நினைத்துப் பார்க்க எவ்வளவு இன்பமாகவிருக்கின்றது. உடம்பெல்லாம் இன்ப உணர்வுகள் ஊர்ந்து செல்கின்றன. ஆகாயத்திற் பறந்து முகிற்கூட்டங்களிற் தோய்வது போன்ற உணர்வு' தனக்குள் பேசிக்கொண்டான். வெள்ளி இரவு அவனுக்கு சரியாகத் தூக்கம் வரவில்லை. இன்ப உணர்வுகளால் உடம்பெல்லாம் கூசியது. புரண்டு புரண்டு படுத்தான். தலையணையை இறுக அணைத்துக் கொண்டு படுத்தான். அரைகுறைக் கோழி உறக்கத்துடன் அதிகாலை நான்கு மணிக்கெல்லாம் விழித்துக் கொண்டான். அதற்குமேல் நித்திரை வரமறுத்தது. ஆறுமணிவரை காதலியைப் பற்றிய சிந்தனையோடும் இன்ப எண்ணங்களோடும் நேரத்தை ஒருவாறு கழித்தவன், ஆறுமணிக்கெல்லாம் எழும்பி, குளித்துச் சாமி கும்பிட்டுவிட்டுக் காலை உணவு சாப்பிடுவதற்காகச் சாப்பாட்டு மேசையிற் போய் உட்கார்ந்தான். அம்மா பரிமாறிக்கொண்டிருந்த பொழுது, "அம்மா, இன்று நான் என்னோடு படித்த ஒரு நண்பனைச் சந்திக்கப் போகின்றேன். பெரும்பாலும் மத்தியானச் சாப்பாட்டிற்கு வரமாட்டேன் என்று நினைக்கிறேன். கடையிற் சாப்பிட்டுவிட்டு சினிமாப்படம் ஒன்று பார்த்துவிட்டுத்தான் வருவேன். ஆனபடியால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சம் வரப்பிந்தினாலும் என்னைக் காணவில்லையென்று எண்ண வேண்டாம்,'' என்று கூறியவன் சாப்பிட்டு முடிந்ததும் நேரே தனது அறைக்குச் சென்று உடையை மாற்றினான். வழமையிற் சுமாராக உடையணிந்து செல்பவன் இன்று இன்னும் சற்று நேர்த்தியாக வெளிக்கிட்டுச் சென்றான். காரணம் வாலாம்பிகையின் அழகிற்கும் கவர்ச்சிக்கும் தன்னுடைய தோற்றம் பொருத்தமாக அமைய வேண்டும் என்ற எண்ணம்தான். சோடிப்பொருத்தம் சிறப்பாக அமையும்போது யாரும் கேலி பண்ணவோ, கிண்டல் பண்ணவோ முயற்சிக்க மாட்டார்கள் என்பது முருகனின் தீர்மானம்.

போகும்பொழுது அவளுக்கு ஏதாவது வாங்கிச் செல்ல வேண்டும் என்று நினைத்து மனம்குழம்பிய முருகன், 'அவளுக்கு என்ன பிடிக்குமென்று தெரியவில்லையே,' என்று தன்னுக்குட் கேட்டுவிட்டு, "சரி.... அங்கு போய் அவளிடம் கேட்டு அப்புறம் வாங்கிக் கொடுப்பம்,'' என்று தனது மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டான். முற்றத்தில் நிறுத்தப்பட்டிருந்த உந்துருளியில் ஏறிக்குந்தியவன் அதை ஸ்ராட் பண்ணினான். ஓர் உளக்கலிலேயே அது உறுமிக்கொண்டு ஸ்ராட் ஆகியது. "அம்மா, போயிட்டு வாறன்,'' என்று குரல் கொடுத்தான். விறாந்தையில் நின்றபடியே அம்மா, "கவனமாய்ப் போயிட்டு வா தம்பி,'' என்று கூறி விடை கொடுத்தாள். உந்துருளி உறுமிக்கொண்டு தாமரைக்குளத்தை நோக்கிப் புறப்பட்டது. சரியாய் ஒன்பது மணி நாற்பத்தைந்து நிமிடத்திற்குத் தாமரைக் குளத்தை அடைந்த முருகன் தாமரைக்குளம் சந்தை ஓரமாக உந்துருளியை நிறுத்திவிட்டு வாலாம்பிகை கேட்டுக்கொண்டதுபோல் சந்தையிற் சாமான் வாங்க வந்தவன் போன்று நின்றுகொண்டிருந்தான். சரியாகப் பத்து மணி ஐந்து நிமிடத்திற்கு வாலாம்பிகை வந்தாள். செம்மஞ்சள் நிறச்சட்டையிலும் சாறியிலும், குண்டியில் முட்டும் இரட்டைப் பின்னல்களுடன் அவளைப் பார்த்தபொழுது அவனுக்கு ஆச்சரியமாகவிருந்தது என்றால் மறுப்பதற்கில்லை. அந்த உடையில் அவன் எதிர்பார்த்திராத அளவிற்கு அழகு தேவதை போன்று காட்சி கொடுத்தாள் வாலாம்பிகை. அவளுடைய அழகில் மயங்கிய முருகனுக்கு அவளை அப்படியே அள்ளிவாரி எடுத்துத் தோளிற் போட்டுக் குழந்தைகளுடன் விளையாடுவது போன்று விளையாடத் தோன்றியது. மக்கள் கூட்டம் நிறைந்த பொதுச் சந்தையில் எப்படி முடியும்? அவள் அருகிற் சென்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியணைத்து முத்தம் கொடுக்க வேண்டும் போலிருந்தது, அதுவும் முடியவில்லை. இவ்வளவு கொள்ளை ஆசைகளை ஆண்டவன் உள்ளத்தினுட் படைத்து வைத்திருக்கும் அதே நேரத்தில், அவ்வளவிற்கும் எவ்வளவு கட்டுப்பாடுகளை மனிதன் போட்டிருக்கிறான் என்று தன்னுக்குட் புலம்பிக் கொண்ட முருகன் சிறிது யோசித்துவிட்டு, மனிதன் 'மனிதனாக வாழுவதற்குக் கட்டுப்பாடுகள் அவசியம்தான்,' என்று எண்ணி மனதைச் சமாதானப் படுத்திக்கொண்டான்.

அருகிற் சென்ற வாலாம்பிகை, "எப்படி முருகன் இருக்கின்றீங்கள்? நல்லாயிருக்கின்றீங்களா?" என்று மிகுந்த அக்கறையோடு கேட்டாள். அவளின் உணர்வுகளைப் புரிந்து கொண்ட முருகன், "நான் மிகவும் நல்லாயிருக்கிறேன். நீங்கள் எப்படி இருக்கின்றீர்கள்?" என்று கேட்கவே, "நானும் ரொம்ப நல்லாயிருக்கிறேன்," என்று கூறிய வாலாம்பிகை, "அடுத்து என்ன பிளான்?" என்று கேட்டாள். அவளுடைய அழகில் மயங்கி நின்ற முருகன் அவளுடைய கேள்விக்குப் பதில் சொல்லுவதற்குமுன் அவளை நெருக்கமாய் அணுகி, "அடுத்த பிளானைப்பற்றிச் சொல்லுவதற்கு முதல் உங்களுடைய அழகைப் பார்க்கும்போது அள்ளிப் பருகவேண்டும் போலிருக்கு. அன்று பச்சை நிறச் சாறியிற்தான் அழகாயிருந்தாய் என்று பார்த்தால், இன்று செம்மஞ்சள் நிறச்சாறியில் அதிலும் பார்க்க அழகாயிருக்கின்றாயே!. உங்களாற் சாறி அழகாயிருக்கா? அல்லது சாறியால் நீங்கள் அழகாயிருக்கின்றீர்களா? என்பது எனக்குப் புரியாமல் இக்கின்றது," என்று தனது உள்ளக்கிழுகிழுப்பை மகிழ்ச்சியோடும் மயக்கத்தோடும் கூறிய பொழுது, அவனுடைய உள்ள உணர்வுகளைப் புரிந்தவளாய், அவனுக்கு ஆறுதல் அளிப்பதுபோன்று, "இரண்டும்தான் முருகன், அதனாற்தான்-ஆள்பாதி ஆடைபாதி- என்று பழமொழி வைத்தார்கள். இதற்குப் போய்ப் பெரிய ஆராட்சி செய்து கொண்டிருக்கின்றீர்கள்," என்று சிரித்துக் கொண்டு கூறவே, கதையைத் தொடர்ந்த முருகன், "உங்களுடைய அழகிற்கு ஈடுகொடுக்கக்கூடிய முறையிற்தான் நான் இன்று வெளிக்கிட்டு வந்திருக்கிறேன். எப்படி இருக்கிறேன் இன்றைய உடுப்பில்?" என்று அசடுவழியச் சிரித்துக்கொண்டு கேட்டான். அவனுடைய எதிர்பார்க்கையைப் புரிந்துகொண்ட வாலாம்பிகை "நீங்கள் இயற்கையாகவே அழகான ஆண்பிள்ளைதான். அதனாற்தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுடைய அம்மா அப்பா உங்களுக்கு முருகன் என்று பெயர் வைத்தார்கள் போலும். இன்று உங்களுடைய உடையில் ரொம்ப எடுப்பாயிருக்கின்றீர்கள். சும்மா சொல்லப்படாது என்னுடைய கண்ணே பட்டிடும்போலிருக்கு, கவனம்! குமரியள் பார்த்துக் கண் அடிப்பாளவை," என்று சொல்லிவிட்டு விழுந்து விழுந்து சிரித்தாள். அவளுடன் சேர்ந்து சிரித்துக் களிப்படைந்த முருகன் தொடர்ந்து, "உங்களுடன் வரும்போது ஒருத்தியும் கண் அடிக்கமாட்டாளவ. நம்மிருவரையும் பார்த்தவுடன் பொருத்தமான சோடிதான் என்று எண்ணுவார்களே தவிர, கண் அடிக்கின்ற அளவிற்கு எந்தவொரு குமரியும் முயலமாட்டாள்," என்று சீரியஸாகச் சொன்னான் முருகன். அதற்கு வாலாம்பிகை, "நீங்கள் கூறுவது வாஸ்தவம்தான் முருகன்," என்று அவனுடைய கூற்றை ஆமோதிப்பவள் போன்று அன்பு கலந்த தொனியிற் சொன்னாள்.

அவளுடைய கதையைக் கேட்டுப் புன்முறுவல் செய்த முருகன் ஏதோவொரு விடையத்தை ஞாபகப்படுத்த முயன்றவன் போன்று, "ஏதோ உங்களிடம் கேட்பதற்கு நினைத்தனான், கதையிற்குள் மறந்து போனேன். ஞாபகத்திற்கு வருகுதில்லை," என்று கூறிக்கொண்டு மேலும் கீழும் பார்த்த முருகன் சில வினாடிகளில், "ஓ!ஓஓ!!... ஞாபகம் வந்து விட்டது! ஞாபகம் வந்துவிட்டது!! அதாவது உங்களுடைய வாலாம்பிகை என்ற பெயர் கூப்பிடுவதற்கு கொஞ்சம் நீளமாய்க் கிடக்கு. உங்களை வீட்டில் அம்மா அப்பா எப்படிக் கூப்பிடுவார்கள்?" என்று உரிமை கலந்த தொனியிற் கேட்டான். அவனின் உள்ளம் தன்னை நெருங்கி வந்து கொண்டிருக்கின்றது என்பதை உணர்ந்து கொண்ட வாலாம்பிகை அவனுடைய இதயத் துடிப்பபைப் புரிந்து கொண்டவள் போன்று எந்தத் தயக்கமும் இல்லாமல், அடி மனத்திலிருந்து வந்த உள்ள உணர்வோடு, "எங்க வீட்டில் என்னை அம்மா அப்பா அக்கா எல்லோரும் "பட்டு" என்று ரொம்பப் பாசத்தோடு கூப்பிடுவார்கள்," என்று சொன்னதும், இதைக்கேட்ட முருகன், "அருமையான பெயர், பொருத்தமான பெயர், காஞ்சிப் பட்டு மாதிரித்தான் நீங்கள் இருக்கின்றீர்கள். இந்த நிமிடத்திலிருந்து நானும் உங்களைப் பட்டு என்றே கூப்பிடுகின்றேன், சரியா?" என்றான் சற்று உணர்ச்சியோடு. உடனே அவள், "உங்களுக்குப் பிடித்திருந்தால் அப்படியே கூப்பிடுங்கோ. அப்படிக் கூப்பிடுவது எனக்கும் பிரியதம்தான். அம்மா அப்பாவிடமிருந்து கிடைத்த பாசம் உங்களிடமிருந்தும் கிடைக்க வேண்டும் என்பதுதான் எனது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரவா," என்று கனிவோடு கூறினாள். அவளுடைய உணர்வுகளுக்கு மெருகூட்ட விரும்பிய முருகன், "யோசிக்க வேண்டாம் பட்டு, நான் உங்களோடு ரொம்பப் பாசத்தோடு நடந்து கொள்வேன். நான் உங்களை மட்டுமல்ல உங்களுடைய ஆன்மாவையும் நேசிக்கிறேன். நான் கூறும் இந்த வார்த்தைகள் என்னுடைய வாயிலிருந்து வரவில்லை, எனது அடிமனதில் இருந்து வருகின்றன," என்று கூறிவிட்டு உடனே அவளுடைய கையைப் பிடித்து அன்போடு முத்தம் கொடுத்தான். பதிலுக்கு அவளும் அவனுடைய கையைப் பிடித்து பாசத்தோடு முத்தம் கொடுத்தாள். இரு இளம் உள்ளங்களிலிருந்து ஊற்றெடுத்த பாசம் ஒருங்கே சங்கமித்த பொழுது ஏதேதோ செய்யத்தூண்டியது. ஆனால் நின்று கொண்டிருந்த இடம் பொதுச்சந்தை. அதற்கு மேல் எதுவும் செய்ய முடியவில்லை.

திடீரென்று கையிற் கட்டியிருந்த மணிக்கூட்டைப் பார்த்த முருகன், "இன்று நாம் ஒருக்கால் யாழ்ப்பாணம் போகவேண்டும் பட்டு. இப்பொழுது புறப்பட்டாற்தான் நீர் திரும்ப நேரத்திற்கு வீட்டிற்குப் போக முடியும். அதிக நேரம் தாமதித்தால் உங்களைக் காணவில்லை என்று அம்மா அப்பா கவலைப்படுவார்களல்லோ?" என்றான். தூரப் பிரயாணம் போகும் திட்டத்தோடு வாலாம்பிகை வராதபடியினால், சிறிது கலக்கம் அடைந்த வாலாம்பிகை, "இன்று கட்டாயம் யாழ்ப்பாணத்திற்குப் போகத்தானா வேண்டும்? இன்னொரு நாளைக்குப் போனாலென்ன முருகன்?" என்று தாழ்ந்த குரலிற் கேட்டாள். இன்று எப்படியும் அவளை யாழ்ப்பாணம் கூட்டிப் போகவேண்டுமென்று முருகன் ஏற்கனவே தனக்குள் முடிவு செய்திருந்தபடியினால், "நான் இன்று உங்களுக்கு ஒரு பொருள் வாங்கித் தரவேண்டுமென்று தீர்மானித்துவிட்டேன். அது யாழ்ப்பாணத்திற்தான் கிடைக்கும். அது என்ன பொருள் என்று இப்பொழுது சொல்ல முடியாது. வாங்கும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது பார்த்துக் கொள்ளுங்கோ," என்று கூறிவிட்டுத் தனது உந்துருளியில் ஏறி உட்கார்ந்து கொண்ட முருகன், "ஏதும் சாட்டுப்போக்குச் சொல்லாமற் பின்னுக்கு ஏறி உட்காருங்கோ பட்டு," என்று உரிமையோடு கேட்டுக் கொண்டான். இதற்குமுன் உந்துருளியிற் பிரயாணம் செய்து பழக்கமின்மையால் அதன் மீது ஏறி உட்காருவது வாலாம்பிகைக்குப் பெரும் சிரமமாய் இருந்தது. ஒருவாறு அவனுடைய தோளைப் பிடித்து கையைப் பிடித்து ஏறி உட்கார்ந்து கொண்ட வாலாம்பிகை உந்துருளி ஓட ஆரம்பித்த போது பயத்தினால் அவனுடைய இடுப்பை இறுகப் பற்றிக் கொண்டாள். தாய்க்குரங்கு மரக்கிளையிற் தாவிப்பாயும்போது எப்படிக் குட்டிக்குரங்குகள் அம்மாவினுடைய வயிற்றை இறுகப் பற்றிக்கொள்ளுங்களோ அந்த மாதிரி உந்துருளியின் வேகம் அதிகரிக்க அதிகரிக்க வாலாம்பிகை முருகனின் இடுப்பை இறுகப் பற்றிக் கொண்டாள். அந்தக் குரங்குப்பிடி முருகனுக்கு முதல் அனுபவமாயும் சற்று இடைஞ்சலாய் இருந்தபொழுதும் அதிலிருந்து கிடைத்த ஒருவகை இன்பம் உடல் முழுவதும் பரவியதை அவனால் உணர முடிந்தது என்றால் மறுப்பதற்கில்லை. உந்துருளி உறுமிக் கொண்டு யாழ்ப்பாணம் நோக்கிப் பறந்தது. நேரே யாழ்ப்பாணம் கன்னாதிட்டி வீதிக்குச் சென்ற உந்துருளி ஒரு நகைக் கடைக்கு முன்னால் நிறுத்தப்பட்டது.

நகைக்கடைக்குட் பட்டுவைக் கூட்டிச் சென்ற முருகன், "தங்க வளையல் வேண்டுமா? அல்லது தங்கச் சங்கிலி வேண்டுமா?" என்று கேட்டான். இப்படியொரு நிகழ்வை எதிர்பார்த்திராத வாலம்பிகைக்கு இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லுவது சிறிது சிரமமாயிருந்தது. முருகனுடைய ஆசையை நோகடிக்கப்படாது என்று தீர்மானித்த வாலாம்பிகை சிறிது யோசித்துவிட்டு, "எனக்குத் தங்கவளையல் ரொம்பப் பிடிக்கும்," என்றாள். பல்வேறு டிசைன்களிற் தங்கவளையல்களைக் காட்டினார் கடைக்காரர். கதையோடு கதையாக கடைக்காரர் முருகனைப் பார்த்து, "தாங்க கட்டிக்கப்போற பொண்ணா?"' என்றார் சிரித்துக்கொண்டே. பதிலுக்குச் சிரித்துவிட்டு, "எப்படி அச்சொட்டாய்க் கண்டுபிடித்தீர்கள்?" என்றான் முருகன். மறுபடியும் சிரித்துக் கொண்ட கடைக்காரர், "சோடிப் பொருத்தத்தை வைத்துத்தான் ஐயா. பொருத்தமென்றால் அந்தமாதிரிப் பொருத்தம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாவூறு படுத்தக்கூடாது, பெண் மூக்கும் முழியுமாய் அம்சமாய் இருக்கிறாங்க," என்று கூறவே இதுவரை மௌனமாக இருந்த வாலாம்பிகை இதழ்கள் நிறைந்த புன்சிரிப்புடன் "முதலாளி ஐயா, ரொம் பத்தான் ஐஸ் வைக் கிறீங்க,'' என்றாள். உடனே கடைக்காரர், ''நோ! நோ!! அப்படி ஒன்றுமில்லை, என்னுடைய மனதிற் பட்டதைப் பட்டென்று வெளிப்படையாச் சொல்லிவிட்டேன், அவ்வளவும்தான்," என்று வாய்நிறையச் சிரித்துக் கொண்டே சொன்னார். எல்லோரும் சேர்ந்தே சிரித்தனர். தனக்குப் பிடித்த டிசைனைத் தெரிவுசெய்த பட்டு முருகனைப் பார்த்து, "எத்தனை சோடி வாங்கப் போகின்றீங்கள் முருகன்?" என்றாள். சந்தர்ப்பத்தைப் பார்த்திருந்தவர் போன்று கடைக்காரர், "பெம்பிளையின் மனம் திருப்திப்படும்படியாக வாங்கிக் கொடுங்க மாப்பிள்ளை," என்றார். "அப்படியா!" என்று முதலாளியைப் பார்த்து புன்முறுவல் செய்த முருகன், "உங்களுக்கு எத்தனை சோடி வேணும் பட்டு?" என்று வாலாம்பிகையிடம் கேட்டான். "எனக்கு இரண்டு சோடி போதும்," என்றாள். அதைக் கேட்ட கடைக்காரர் அசடுவழிய, "சிக்கனமான பெண்" என்று சொல்லிவிட்டு இரண்டு சோடி வளையல்களை எடுத்துப் பெட்டியில் வைத்துப் பக்குவமாயப் பெண்ணின் கையிற் கொடுத்தபின் முருகனிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு, "மறுபடியும் வாங்கோ ஐயா, தாலி மற்றும் நகைகள் தேவையான பொழுது, நல்ல விலைபோட்டுத் தருவேன்," என்று கூறி அன்போடு வழியனுப்பி வைத்தார்.

வெளியில் வந்த முருகன் மணிக்கூட்டைப் பார்த்தான், நேரம் பிற்பகல் பன்னிரண்டரை. நேரே கே.கே.எஸ். வீதியிலுள்ள சைவக் ஹோட்டலுக்குச் சென்ற இருவரும் மதியச் சாப்பாட்டை அங்கு முடித்துக் கொண்டனர். சாப்பிட்டு முடிந்ததும், "சினிமாப்படம் ஒன்று பார்க்கப் போவமா பட்டு?" என்று கேட்டான். தான் வீடு திரும்ப வேண்டிய நேரத்தைக் கவனத்திற் கொண்ட வாலாம்பிகை, சிறிது யோசித்துவிட்டு, "இன்றைக்குப் படம் வேண்டாம் முருகன், படம் பார்த்துவிட்டு வீடு செல்ல நேரம் போதாது. இன்னொரு நாளைக்குப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கலாம். அத்தோடு நீங்கள் மறுபடியும் இன்று தாமரைக் குளத்திற்கு வந்து அலைய வேண்டாம். என்னைப் பேருந்தில் ஏற்றிவிடுங்கோ. நான் நேரே வீட்டிற்குப் போகிறேன். நீங்களும் வீட்டிற்குப் போங்கோ. தாமதித்தால் உங்களுடைய அம்மாவும் அப்பாவும் உங்களைக் காணவில்லையென்று நினைப்பினம்," என்றாள். அவள் கூறுவதிலும் அர்த்தமிருக்கத்தான் செய்கின்றது என்பதை உணர்ந்துகொண்ட முருகன், "நீர் புத்திசாலித்தனமாய்க் கூறும்போது அதை நான் மறுப்பது தப்பு. அந்தத் தப்பைச் செய்ய நான் விரும்பவில்லை. நான் இப்பொழுது தாமரைக்குளத்திற்கு வந்து மறுபடியும் யாழ்ப்பாணத்திற்குத் திரும்பிவருவது என்பது அலைச்சல்தான். அப்ப... நீர் சொன்னபடியே செய்வம்," என்று கூறிவிட்டு அவளைப் பேருந்து நிலையத்திற்கு அழைத்துச் சென்று பேருந்தில் ஏற்றி வழியனுப்பி வைத்தான்.



## அங்கம் 3


**ஆ**றேழு மாதங்களாய் இந்தக் காதற் சோடி சிட்டுக் குருவிகளாய்க் காதல் வானிற் சிறகடித்துப் பறந்து திரிந்தது.



கடைத்தெருக்கள், சந்தைகள், சினிமாத் தியேட்டர்கள், பூந்தோட்டங்கள், கோவில்கள், கடற்கரைகள் என்று இன்பமாய்ப் பொழுதுபோக்கித் திரிந்தனர். இளமைக் கோலங்கள் எழுதப்படாத காவியமாக நீண்டு சென்றன. கம்பன் அறிந்திருந்தால் இன்னொரு காவியம் படைத்திருப்பான். இன்பத்திற்கும் ஓர் எல்லையுண்டு, இது இயற்கையின் நியதி. நிசவாழ்க்கையை மறந்து இன்பமே உலகமென்று சிறிதுகாலம் வாழ்ந்த முருகனுக்கு ஞானம் பிறந்தது போன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள், "என்னை எப்பொழுது கல்யாணம் பண்ணிக்கப் போகிறீங்கள்?" என்று வாலாம்பிகையிடம் கேட்டான். எப்போ ஒருநாள் இந்தக் கேள்வி வரும் என்பதைத் தெரிந்திருந்தபோதும், இன்று எதிர்பார்த்திராத விதமாய் இந்தக் கேள்வி வந்தபடியினாற் சிறிது தடுமாற்றமடைந்த வாலாம்பிகை சிறிது யோசித்துவிட்டு, "நான் கேட்க வேண்டிய கேள்வியை நீங்கள் கேட்கின்றீங்கள். அதற்காக முதலில் நன்றி. காதற் சோடிகள் எப்பொழுதும் காதலர்களாக இன்புற்றுத் திரிவதில் எனக்கும் உடன்பாடில்லை. நீண்டகாலம் திரிந்தால் நம்மைப் பார்ப்பவர்களுக்கும் நம்மைப்பற்றி வித்தியாசமாக எண்ணத் தோன்றும். ஆனபடியினாற் கல்யாணம் செய்துகொள்வதில் எனக்கும் நிறைய ஆசையும் அக்கறையும் உண்டு.



ஆனாற் கல்யாணத்தைவிட முக்கியமானது ஒன்று உண்டு," என்று அவள் சொல்லி முடிப்பதிற்குள், "கல்யாணத்தைவிட முக்கியமானதா? அதென்ன பட்டு," என்று ஆச்சரியத்தோடு கேட்டான் முருகன். உடனே புன்முறுவலை வரவழைத்துக் கொண்ட வாலாம்பிகை, "ஆமாம், கல்யாணத்தைவிட முக்கியமானதுதான். அதற்குப் பிறகுதான் கல்யாணம். அதாவது முதலில் எனக்கு ஒரு வேலை வேண்டும். நான் க. பொ. த. உயர்தர வகுப்பு சித்தியடைந்துள்ளேன். இந்தத் தராதரத்துடன் ஒரு வேலை தேட முடியும். வேலையொன்றிற்கு விண்ணப்பித்துவிட்டு அரசியற் செல்வாக்குக் கொண்ட ஒருவருடைய உதவியை நாடினால் வேலை நிச்சயம் கிடைக்கும். இதுதான் எம்நாட்டுத் தொழிற்சந்தைக் கலாச்சாரம். அரசியற் செல்வாக்குள்ள ஒருவருடைய உதவியைப் பெறுவதற்குப் பணம் வேண்டும். அரசியற் செல்வாக்குள்ள ஒருவரைக் கண்டுபிடித்தல், அதற்குரிய பணத்தைத் தேடுதல், இவற்றையெல்லாம் ஒன்றுசேர்த்து தொழில் ஒன்றைப் பெறுதல் என்பவற்றிற்குக் கால அவகாசம் வேண்டும்.

இன்றைய வாழ்க்கைச் செலவையும் வாழ்க்கை முறையையும் மனதிற்கொள்ளும்போது உங்களுடைய உழைப்பை மட்டும் வைத்துக் கொண்டு வாழ்க்கை நடாத்த முடியாது. தற்போதைக்கு நடாத்த முடிந்தாலும் எதிர்காலத்தில் இரண்டு மூன்று பிள்ளைகள் என்று வரும்போது தனித்து உங்களுடைய வருமானத்துடன் குடும்பம் நடத்துவது என்பது பெரும் சிரமமான விடயம். அதுமட்டுமல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சையிற் சித்தியடையும்வரை படித்துவிட்டு, எனது எதிர்காலம் முழுவதையும் இல்லத்தரசியாக மட்டும் வாழ்ந்து முடிப்பது என்பது புத்திசாலித்தனமாக எனக்கும் படவில்லை. அப்படியான ஒரு வாழ்க்கையை ஏற்றுக்கொள்ளுவதற்கு என் மனம் தயாராகவுமில்லை," என்று சொல்லிக்கொண்டு போக இடையிற் குறுக்கிட்ட முருகன், "நீங்கள் பிள்ளைகுட்டி என்று வரும்போது என்று கூறினீர்கள், அப்படியாயின் எத்தனை பிள்ளைகள் பெற்றுக்கொள்ள உங்களுக்கு விருப்பம் என்னும் கேள்வி என்னுடைய மனதில் எழுகின்றது, இதற்கு நீங்கள் இப்போது பதில் சொல்லுவதற்கு விரும்புகின்றீர்களா பட்டு?" என்று சிரித்துக்கொண்டே கேட்டான். பதிலுக்குச் சிரித்துவிட்டு சிறிது வெட்கத்துடன், "எனக்கு மூன்று பிள்ளைகள் பெற்றுக்கொள்ள விருப்பம். முதல் பிறக்கும் இரண்டு பிள்ளைகளும் பெண்பிள்ளை களாகவிருந்தால் இரண்டு பிள்ளைகள் போதும்," என்று சொல்லிவிட்டு ஒரு கடைக்கண் பார்வை பார்த்துப் புன்னகைத்தாள். அவளின் அந்தப் பார்வையில் மயங்கிய முருகன் தனது இடது கையினால் அவளை அணைத்துக் கொண்டு, "பொருத்தமான ஆசைதான்," என்று கூறிவிட்டு ஒரு முத்தம் கொடுக்க முயன்றான். அப்பொழுது அவன் உணர்ச்சிவசப்படுகிறான் என்பதைத் தெரிந்து கொண்ட வாலாம்பிகை சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, "சனங்கள் பார்க்கின்றார்கள். இந்த இடத்திலேயா முத்தம் தருவது? பொருத்தமான இடத்தில் இன்னொரு நாளைக்கு," என்று கூறித் தடுத்துவிட்டு, "கோபமா?" என்று தலையை உயர்த்தி மெதுவாய்க் கேட்டாள். நிலமையைப் புரிந்துகொண்ட முருகன், "சீ...சீ.. அப்படி ஒன்றுமில்லை. நீங்கள் சொல்லுவதிலும் நியாயம் இருக்கத்தான் செய்கின்றது. நான் சிறிது உணர்ச்சிவசப் பட்டுவிட்டேன். அதனால் நின்ற சனங்களை நான் கவனிக்க வில்லை," என்று தனது தவறை உணர்ந்துகொண்டவன் போன்று சொல்லிச் சமாளித்துக்கொண்டான்.

கதையைத் தொடர்ந்த வாலாம்பிகை, "நான் வேலை யொன்று தேடாவிட்டாற் பாடுபட்டுப் படித்த எனது படிப்பு வீணாய்ப் போய்விடும். எனது படிப்பிற்கும், அதற்காக நான் செலவு செய்த காலம், மற்றும் நான் பட்ட சிரமம் என்பவற்றிற்கும் ஓர் அர்த்தம் ஏற்பட வேண்டுமாயிருந்தால் நான் ஒரு வேலை தேடியே ஆகவேண்டும். அத்தோடு என்னுடைய பெற்றோர் வயோதிபர் களாகும் பொழுது அவர்களுக்கு நான் உதவ வேண்டுமாயிருந்தால் நான் வேலை செய்து உழைக்க வேண்டும். இவற்றையெல்லாம் மனதிற் கொண்டுதான் திருமணத்திற்கு முன் வேலை ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியம் என்ற முடிவிற்கு வந்தனான். முதலிற் கல்யாணம் பண்ணிக்கொண்டால் அப்புறம் வேலை தேடுவதென்பது சிரமமான காரியமாகிவிடும்," என்று விபரமாய்க் கூறியவள், இறுதியில், "நான் சொல்லுவது சரிதானே முருகன்?" என்று சிறிது தயக்கத்தோடு கேட்டாள். அவள் கூறியவற்றின் நியாயப்பாட்டை உள்ளூர ஏற்றுக்கொண்ட முருகன், "நீர் சொல்லுவது சரியோ அல்லது பிழையோ என்பதைவிட, உம்முடைய எண்ணத்தைக் காரணத்தோடு விளங்க வைக்கும்பொழுது அதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். நீங்களும் வேலை செய்து உழைத்தால் குடும்ப வாழ்க்கையை வசதியாக இடஞ்சலின்றி நடத்தலாம் என்பது உண்மையான உண்மை. பிறகு எப்படி மறுப்புத் தெரிவிக்க முடியும்? குடும்பப் பொறுப்பு வருவதற்கு முன்னமே பொறுப்பாகச் சிந்திக்கிறீர்கள். அது வரவேற்கத் தக்க விடயம்.

வேலை தேடுவதற்கு நானும் முயற்சி செய்து பார்க்கிறேன். நீரும் முயற்சி செய்யும்," என்று கூறியவன் தொடர்ந்து, "கல்யாணத்திற்கு முதல் என்னுடைய அம்மா அப்பா உங்களை ஒருக்காற் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். பேசிச் செய்யும் கல்யாணமாக இது இருந்திருந்தால் அவர்கள் உங்கள் வீட்டிற்கு வந்து பெண்ணைப் பார்த்திருப்பார்கள். இது காதற் கல்யாணமாகையால் உங்களைப் பார்ப்பதற்கு அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. மகனுக்கு வரப்போகும் பெண்ணை அதாவது வருங்கால மருமகளை அவர்கள் பார்க்க விரும்புவது நியாயமானதுதானே. மணவறைக்கு வரும்வரை பொறுத்திருங்கள் என்று நான் கேட்பது நியாயமற்றது. உங்களை அவர்களுக்குக் காட்டவேண்டியது என்னுடைய கடமையும்கூட. ஆனபடியால் எப்பொழுது எங்களுடைய வீட்டிற்கு வருவீர்கள் என்று இப்பொழுது சொல்லுங்கோ," என்று கேட்டான். அவனுடைய கேள்வியின் நியாயப்பாட்டை மனதார ஏற்றுக்கொண்ட வாலாம்பிகை எந்தத் தாமதமும் இல்லாமல், "ஒரு நல்ல நாளாய்ப் பார்த்துச் சொல்லுங்கோ, நான் வருகிறேன்," என்று சர்வசாதாரணமாய்க் கூறினாள். அதற்கான ஆயத்தங்களை ஏற்கனவே செய்திருந்த முருகன் வாலாம்பிகையின் ஒப்புதலை அடுத்து, "நான் முன்னேற்பாடாக ஒரு நாளைப் பார்த்து வைத்திருக்கிறேன். வருகின்ற சனிக்கிழமை எந்தக் குறையும் இல்லாத சிறந்த நாள். அன்று அமிர்தசித்த யோகத்தோடு கூடிய பௌர்ணமி. பௌர்ணமியை நிறைந்த நாளென்று பெரியவர்கள் கூறுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகு காலத்தைக் கழித்து முற்பகல் பதினொரு மணிக்குமேல் எப்பொழுதும் வரலாம்," என்று கூறிக்கொண்டு செல்லவே குறுக்கிட்ட வாலாம்பிகை, "வயதிற் குறைந்தவராயிருந்தாலும் நல்ல நாளைப்பற்றி நிறையவே தெரிந்து வைத்திருக்கின்றீர்கள். கேட்பதற்கு மிகவும் சந்தோசமாயிருக்கின்றது," என்று பெருமையோடு சொன்னாள். கதையைத் தொடர்ந்த முருகன், "சனிக்கிழமை மதியச் சாப்பாட்டிற்கு எங்களுடைய வீட்டிற்கு வாங்கோ," என்று கேட்டுவிட்டுத் தொடர்ந்து, "நீங்கள் தாமரைக் குளம் பேரூந்து நிலையத்திற் பத்து மணிக்கு வந்து நில்லுங்கோ. நான் அதே நேரத்திற்கு அங்கு வந்து உங்களைக் கூட்டிச் செல்லுகிறேன்," என்று கூறி விடைபெற்றுச் சென்றான்.

மறுநாள் வெள்ளிக்கிழமை காலை படுக்கையால் எழும்பிய முருகன் பாடசாலைக்குச் செல்வதற்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டு காலைச் சாப்பாட்டிற்காக மேசைக்குச் சென்று உட்கார்ந்தான். அம்மா உணவைப் பரிமாறினாள். செய்தியைச் சொல்லுவதற்கு இதுதான் பொருத்தமான நேரம் என்று எண்ணிய முருகன், "அம்மா, நாளைக்கு உங்களுடைய வருங்கால மருமகள் நமது வீட்டிற்கு வருகின்றா," என்று சொன்னதும், "நாளை நல்ல நாளா என்று பார்த்தியே தம்பி," என்று மிகுந்த அக்கறையோடு கேட்டாள் அம்மா. உடனே முருகன், "அதெல்லாம் ஏற்கனவே பார்த்துவிட்டேன் அம்மா. நாளை நல்ல நாள், அமிர்தசித்த யோகத்தோடு கூடிய பௌர்ணமி, இராகு காலம் கழித்துப் பதினொரு மணியளவிற் கூட்டி வருகிறேன். மதியச் சாப்பாட்டிற்கு வரும்படி கேட்டுள்ளேன். பிறகென்ன, மருமகளுக்குச் சமையலில் உங்களுடைய கைவண்ணத்தைக் காட்ட வேண்டியதுதானே. தேவையான சாமான்களுக்கு ஒரு சிட்டை எழுதித் தாங்கோ. பாடசாலை முடிந்து வரும்போது அவற்றை வாங்கி வருகிறேன். அப்பாவிற்கும் விடையத்தைச் சொல்லுங்கோ," என்றான். அதற்கு, "சரி.... தம்பி," என்று கூறிய அம்மா ஏதோ ஞாபகத்திற்கு வந்தவள் போன்று "அப்பாவிற்கு இந்த விடயத்தை நான் சொல்லுவதைவிட நீ நேரடியாக அப்பாவிடம் கூறுவதுதான் பொருத்தமாயிருக்குமென்று நான் நினைக்கிறேன் தம்பி," என்றதும் அம்மா கூறியதைக் கேட்டுச் சிறிது பதட்டப்பட்ட முருகன், சின்னப்பிள்ளையாட்டம், "அப்பாவிடம் இதைப்பற்றி நேரடியாகக் கூறுவதற்குக் கொஞ்சம் பயமாயும் வெட்கமாயும் கிடக்கம்மா. நீங்கள் முதலிற் சொல்லுங்கோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அப்புறம் பாடசாலையால் வந்து அப்பாவிடம் சொல்லுகிறேன்," என்று சொல்லிவிட்டுச் சாமான்களின் சிட்டையை வாங்கிக் கொண்டு பாடசாலைக்குப் புறப்பட்டான்.

பாடசாலை முடிந்து வீட்டிற்கு வந்த முருகன் வாங்கிவந்த பொருட்களையெல்லாம் அம்மாவிடம் கொடுத்துவிட்டு வழமைக்கு மாறாக வீட்டையும் முற்றத்தையும் சுத்தம் செய்வதிலும், பொருட்களை ஒழுங்குபடுத்துவதிலும் மும்மரமாக ஈடுபட்டான். அதைப் பார்த்ததும் அம்மாவிற்குச் சிரிப்பே வந்துவிட்டது. உடனே "பொண்ணு வரப்போகிறா என்று ஓடி ஓடி வேலை செய்கிறாய் தம்பி. கொடுத்து வைத்த பொண்ணு. காதலுக்கு எவ்வளவு சக்தி இருக்கின்றது என்பது இதிலிருந்து விளங்குகின்றது," என்று சிரித்துக் கொண்டே சொன்னாள் அம்மா. அம்மா சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பகிடி விடுகிறா என்பதைத் தெரிந்து கொண்ட முருகன் தனது எண்ணத்தை வெளிப்படுத்த விளைந்தவன் போன்று, "முதற் பார்வையில் ஒருத்தர்மனதில் என்ன படிகின்றதோ அது வாழ்நாள் முழுவதும் அந்நபரின் மனதில் இருக்குமென்று அறிஞர்கள் கூறுகின்றார்கள் அம்மா. ஆனபடியால் அவா வரும்போது முதற்பார்வையில் நல்ல காட்சி அவாவினுடைய மனதிற் படியும்படி வீடுவளவைச் சுத்தமாயும் அழகாயும் வைத்திருக்க வேண்டும். வீட்டையும் வளவையும் பார்த்து விட்டு நாம் எப்படிப்பட்ட மனிதர்களென்றும், நாம் எப்படியாய் வாழுகிறோம் என்றும் இலகுவாய் எடைபோட்டு விடுவார்கள். எனவே முதன் முதலாய் ஒரு நபர் நமது வீட்டிற்கு வரும்போது மிகவும் விழிப்பாயிருக்க வேண்டும். அதுவும் நமது வீட்டிற்கு மருமகளாய் வரப்போகும் ஒரு பெண்ணின் மனதில் நல்ல அபிப்பிராயத்தைப் படிய வைப்பதிற்தான் நம்மளுடைய திறமையின் பெருமை தங்கியுள்ளது. அதற்காகத்தான் அம்மா இத்தனை வேலைகளும். நான் வேலை செய்வது அம்மாவிற்குப் பகிடியாய்க் கிடக்கின்றது," என்று சொல்லி முடிக்கக் கேற் திறந்து சத்தம் கேட்டது. எட்டிப் பார்த்தான் முருகன், அப்பா வருகிறார். அவரைக் கண்டுகொள்ளாதவன் போன்று தனது வேலையைத் தொடர்ந்தான் முருகன்.

கணவன் வருவதை அவதானித்த முருகனின் அம்மா விறாந்தைக்கு வந்தாள். அந்த வேளையில் மகனின் சுறுசுறுப்பான வேலையைச் சிறிது நோட்டமிட்ட அப்பா பிரமித்துப் போய் இன்று இவனுக்கு என்ன நடந்தது என்று மனதிற்குள் எண்ணிக்கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விக்குறியுடன் மனைவியை ஏறிட்டுப் பார்த்தார். கணவனின் பார்வையிலிருந்து அவர் என்னத்தைக் கேட்க விளைகிறார் என்பதைப் புரிந்து கொண்ட மனைவி விடையத்தைத் தெியப்படுத்து வதற்கு இதுதான் தக்கதருணம் என்று எண்ணிக்கொண்டு நாளைக்கு உங்களுடைய வருங்கால மருமகளை மகன் கூட்டி வருகின்றாராம். அதன் பிரதிபலிப்புத்தான் இவ்வளவு சுறுசுறுப்பும் வேலைகளும். உடனே வாய்நிறையச் சிரித்துவிட்டு, "அதுதானே பார்த்தேன்! என்னடா புதினமாய் இன்று மகன் வேர்க்கக் களைக்க வேலை செய்கிறானென்று." அப்பாவும் அம்மாவும் பேசிக்கொண்டதை கூர்மையாகக் கேட்டுக்கொண்டு நின்ற முருகன் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தானும் விடயத்தை அப்பாவிடம் சொல்லிவிட வேண்டுமென்று முடிவுசெய்து கொண்டு அவர்கள் பேசியதைத் தான் கேட்டுக்கொள்ளாதவள் போன்று பயபக்தியோடு அப்பாவின் முன் வந்து தாழ்ந்த குரலில், "அப்பா, உங்களுடைய மருமகள் நாளைக்கு நமது வீட்டிற்கு வரப்போகிறேன் என்று அடம்பிடித்தாள். நான் அதற்குச் சம்மதம் தெரிவித்திருக்கிறேன். அதுதான் வீடுவளவைச் சுத்தம் செய்துகொண்டிருக்கிறேன் அப்பா," இதழ்களுக்குட் புன்சிரிப்பை வரவழைத்துக் கொண்டு சொன்னான்.



மகனின் பயபக்தியோடு கலந்த வார்த்தைகளைக் கேட்ட அப்பா தலையைச் சொறிந்து கொண்டு ஏதோ யோசித்து விட்டு, "நாளை நல்ல நாளா என்று பார்த்தியா தம்பி?" மிகுந்த அக்கறையோடு கேட்டார். முந்திரிக் கொட்டையாட்டம் கதையைக் கேட்டுவிட்டு முந்திக்கொண்ட அம்மா, "கந்தப்பு மாஸ்ரரின் மகனல்லே. மீனுக்குஞ்சுக்கு முக்குளிச்சா காட்ட வேண்டும். அவன் எல்லாம் ஏற்கனவே பார்த்துவிட்டான்," என்றாள்.

எல்லாவற்றையும் கேட்டு மகிழ்ச்சியிற் பூரித்துப்போன கந்தப்பு மாஸ்ரர் மனைவியோடு தனகுவது போன்று, "நீ என்னப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்திரம் சம்பிரதாயத்திற் குறைஞ்ச ஆளே? நீயும் பேரெடுத்த சாத்திரியாரின் மகள்தானே. நம்மளுடைய கல்யாணத்திற்கு உங்களுடைய அப்பர் பார்த்த சாத்திரம்தானே நமக்கு இதுவரை கைகொடுத்துக் கொண்டிருக்கின்றது,'' என்று மனுசியைத் தூக்கிவைக்குமாப்போல் ஒரு போடல் போட்டார். கணவனின் மகிழ்ச்சியைப் புரிந்து கொண்ட தெய்வானை மகனுக்கும் மன மகிழ்ச்சியை ஏற்படுத்தும் பொருட்டு, "நீங்கள் சொல்லுவது உண்மைதான். அத்தோடு காதலுக்கு ஒரு பிரத்தியேகச் சக்தி இருக்கப்பா. அதுதான் நம்ம மகனை இப்படியெல்லாம் இயக்கிக் கொண்டிருக்கின்றது. நீங்கள் என்ன சொல்லுகிறீங்கள்?" என்று கூறிவிட்டுத் தெய்வானை கணவனின் பதிலுக்காக அவரின் வாயை அணிலை ஏறவிட்ட நாய்மாதிரிப் பார்த்துக் கொண்டிருந்தாள். மனைவியின் ஆவலைப் புரிந்து கொண்ட கந்தப்பு மாஸ்ரர், "நீ கூறுவதும் ஏற்புடையது தான் அப்பா. காதலினாற்தான் உலகமே இயங்கிக் கொண்டிருக்கின்றது என்று பெரியவர்கள் சொல்லும்போது நம்மளுடைய பிள்ளை என்ன, அதற்கு விதிவிலக்கா?" என்று மனைவியைப் பார்த்துக் கூறியபின், தலையைக் குனிந்து சொண்டிற்குள் சிரித்துக் கொண்டு. "மருமகள் வருகின்ற சாட்டிலாவது வீடுவளவு சுத்தமாகட்டேன்'' என்று கூறிவிட்டு வீட்டிற்குட் சென்றார். எல்லாம் சுத்தம் செய்து ஒழுங்குபடுத்த இரவு பத்து மணி ஆகிவிட்டது. அதற்கப்புறம் இரவு உணவைச் சாப்பிட்டுவிட்டுப் படுக்கைக்குச் சென்றான் முருகன்.


காலதாமதமாய்ப் படுக்கைக்குச் சென்றிருந்தபோதும் உடனே நித்திரை வரமறுத்தது. வாலாம்பிகையின் நினைவுகள் அவனைப் புரட்டி எடுத்தன. அவன் கட்டிலிற் புரண்டு புரண்டு படுத்தான். மனம் கற்பனை உலகிற் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தது. புதிய புதிய எண்ணங்கள், இன்ப உணர்வுகள் மனதையும் உடலையும் சூழ்ந்துகொண்டு வேடிக்கை பார்த்தனவென்றால் மறுப்பதற்கில்லை. இன்ப உணர்வுகளாயிருந் தாலும் அவையும் மூளையைக் களைப்படையச் செய்யும் என்னும் உண்மையை அவனால் இப்பொழுது உணர முடிந்தது. உடலும் உள்ளமும் களைப்படைந்திருந்த படியினால் நடுநிசியளவிற் கற்பனை உலகிற் சிறகடித்தபடியே உறங்கிவிட்டான்.

அழகான பெரிய பூங்கா, அங்குமிங்குமாக வானளாவிய பெரிய மரங்கள். அவற்றைப் பற்றிப் படர்ந்துள்ள வண்ண வண்ண மலர்களைக் கொண்ட கொடிகள், மரங்களுக்கிடையே அழகான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூஞ்செடிகள், பூஞ்செடிப் பாத்திகளுக்கும், மரங்களுக்கும் இடையே பச்சைப்பசேல் என்ற புற்தரைகள், புற்தரையின் மத்தியில் இடையிடையே சிறிய பூமரங்கள். கண்ணைக் கவரும் பல வர்ணப் பூக்கள். பூக்களைச் சுற்றி வண்டுகளும் தேனீக்களும் வண்ணாத்திப்பூச்சிகளும் வட்டமிட்டுப் பறந்தவண்ணமிருந்தன. அவைகள் எழுப்பிக் கொண்டிருந்த ரீங்கார ஒலிகள் காதிற்கு இன்பமளித்தன. அவை இடையிடையே மலர்களில் அமர்ந்து தேனை உறுஞ்சி உண்டு களிப்படைந்தன. வண்டுகளின் ரீங்கார ஓசை பூங்காவைத் தனியதோர் உலகமாகப் பரிணமிக்கச் செய்தது என்றால் மிகையாகாது. பூந்தோட்டத்தின் ஓரமாக அழகான ஒரு நீரோடை. இடைவிடாத சழசழ என்ற சத்தத்துடன் தெளிந்த நீர் ஓடிக் கொண்டேயிருந்தது. அந்த நீரோடை ஓரமாகப் பசுமை நிறைந்த மரங்கள், மரங்களின்மீது பலவகையான பறவைகள் தத்தமக்குரிய இராகங்களுடனான கீதங்களை எழுப்பிக் கொண்டிருந்தன. காலை பத்துமணி, சூரியன் தனது வெப்பக் கதிர்களைப் பரப்பிக் கொண்டு மேல் நோக்கி நகர்கிறான். தென்றற்காற்று பூந்தோட்டத்தை வருடிச் செல்கின்றது! ஆகா! என்ன இன்பம்! என்ன அழகு! இயற்கையின் அதிசயம் சொற்களால் வர்ணிக்க முடியாதவை.



இந்த அற்புத வேளையில் முருகனும் வாலாம்பிகையும் பூந்தோட்டத்தினுள் நுழைகின்றனர். முருகனுடைய இடது கையும் வாலாம்பிகையினுடைய வலது கையும் கோர்த்த வண்ணம் ஒருவரோடு ஒருவர் ஒட்டி உரசிக்கொண்டு மெதுவாக நடைபோடு கின்றனர். இயற்கையின் அற்புதக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


காட்சிகளை ரசித்துக்கொண்டு பூந்தோட்டத்தைச் சுற்றி ஆடி அசைந்த வண்ணம் செல்கின்றனர். ஆகா! இயற்கை எவ்வளவு இன்பமானது! ரம்மியமானது! பறவைகளின் இசைகளையும், வண்டுகளின் ரீங்காரங்களையும், நீரோடையின் சழசழ ஓசையையும் தவிர வேறு சத்தமேயில்லை, ஒரே இன்பமான அமைதி.



அங்குமிங்குமாகச் சில காதலர்கள் மரங்களின் கீழ் உட்கார்ந்து இன்பம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். சுற்றுலாப்பயணிகளும் பொதுமக்களும் வந்து கொண்டிருக் கின்றார்கள். ஒரு தடவை பூங்காவைச் சுற்றி வந்த முருகனும் வாலாம்பிகையும், அப்புறம் நீரோடை ஓரமாக ஒரு மரத்தின் கீழ் உட்கார்ந்து கொள்ளுகின்றனர். நீரோடையின் சழசழ சத்தமும், பறவைகளின் வேறுபட்ட இசைகளும், இயற்கையின் அற்புத அழகும் அவர்களை இன்ப உலகத்திற்கு அழைத்துச் செல்லுகின்றன. முருகனின் மடிமீது வாலாம்பிகை அப்படியே சாய்ந்தாள். தாவணி சரிகின்றது, அவளுடைய குரும்பை முலைகள் முருகனை மயங்கவைக்கின்றன. லௌகீக இன்பத்தில் மயங்கிய முருகன் அவளுடைய மார்பகங்களில் முகத்தைப் புதைத்து முத்தமிடுகிறான். அவனுடைய இரு கைகளும் அவளுடைய முதுகின் கீழாற் சென்று அவளைத் தூக்கி இறுக அவனுடன் அணைத்துக் கொள்ளுகின்றன, ஆசை தீர முத்தமிடுகிறான், மேலும் மேலும் முத்தமிடுகிறான், அவள் இன்பத்தில் மயங்குகிறாள், அவனும் மயங்குகிறான். பூங்காவனத்தில் இருப்பதை இருவரும் மறந்துவிட்டார்கள். திடீரென்று நீரோடையில் ஏதோ ஒரு பொருள் விழுந்த சத்தம், முருகன் விழித்துக் கொண்டான். அப்பொழுதுதான் அவனுக்குத் தெரிந்தது தான் கண்டதெல்லாம் கனவென்று. கனவை நினைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நினைத்து மகிழ்ந்து கொண்டான்.

அந்த இன்ப உணர்வோடு வழமைக்கு மாறாக அதிகாலையே எழுந்து கொண்ட முருகன் புறப்படுவதற்காகத் தன்னைத் தயார்படுத்துவதிற் சுறுசுறுப்பாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தான். மகனின் ஆவலைப் புரிந்து கொண்டவள் போன்று முருகனின் தாயார் தெய்வானையும் மகனைத் தொடர்ந்து எழுந்து காலைச்சாப்பாடுகளைத் தயாரித்துவிட்டு மகனுடைய வருகைக்காகக் காத்திருந்தாள். காலை உணவை முடித்துக் கொண்ட முருகன் புறப்படுவதற்குத் தயாராகின்றான். அப்பாவும் அம்மாவும் முற்றத்திற்கு வந்து, "மருமகளைக் கூட்டி வரும்போது உந்துருளியை மிகக் கவனமாக ஓட்ட வேண்டும். முதன் முதலாக வரும்போது எந்த அபசகுனமான நிகழ்வும் ஏற்படக்கூடாது. கவனமாய்ப் போய்க் கவனமாய்ப் பொண்ணைக் கூட்டிவா தம்பி," என்று கூறி வழியனுப்பி வைத்தனர்.


இப்பொழுது நேரம் பத்துமணி நாற்பது நிமிடங்களாகிக் கொண்டிருந்தது. மகனுடையதும் மருமகளுடையதும் வருகைக்காக அம்மாவும் அப்பாவும் வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கின்றார்கள். நேரம் முற்பகல் பதினொரு மணியை அண்மிக்கின்றது, உந்துருளிச் சத்தம் கேட்கின்றது. மகன்தான் வருகிறான் போலும் என்று கருதிய அம்மாவும் அப்பாவும் வீட்டு வாசலுக்கு வருகின்றனர். உந்துருளி உறுமிக் கொண்டு வந்து கேற்றில் நின்றது, முருகனும் வாலாம்பிகையும்தான். பின்னுக்கு அமர்ந்திருந்த வாலாம்பிகை முதலில் இறங்குகிறாள். அவளைத் தொடர்ந்து முருகன் இறங்குகிறான். இருவரும் தலைக்கவசம் அணிந்திருந்தபடியினால் அவர்களுடைய முகத்தை உடனே பார்க்க முடியவில்லை. மருமகளைப் பார்த்துவிட வேண்டுமென்ற ஆவல் இருவருக்கும் அதிகரிக்கின்றது. வாலாம்பிகை தனது தலைக்கவசத்தை மெதுவாகக் கழற்றுகிறாள். விறாந்தையில் நின்றபடியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலாம்பிகையைப் பார்த்த முருகனின் அம்மா ஆச்சரியத்தோடு மூக்கில் விரலை வைத்துக் கொண்டு கணவனைப் பார்த்து, "என்னப்பா! இவ்வளவு ஓர் அழகான பெண் தாமரைக்குளத்தில் இருக்கா அப்பா? என்னால் நம்பவே முடியவில்லை. என்னுடைய கண்ணே பட்டிடும் போலிருக்கு," என்றாள். உடனே கணவர், "நீ சொல்லுவது உண்மைதான் அப்பா, பிரமதேவனுடைய அபூர்வ படைப்புக்களில் இதுவும் ஒன்றுபோற் தெரியுதப்பா, நாவூறுபடுத்திப் போடாத. அப்புறம் பொண்ணுக்கு ஏதும் நடந்தாலும் கொண்டாலும் அந்தப் பாவமும் பழியும் நம்மை வந்து சேர்ந்துவிடும். நம்மளுடைய மனச் சாந்திக்காக நான் என்னதான் சொன்னாலும் இது ஓர் ஆபத்தான அழகாக என் அடிமனதிற் தோணுது தெய்வானை," என்றார்.

அதைக் கேட்டு மனக்குழப்பம் அடைந்த தெய்வானை, "எனக்குப் புத்தி சொல்லிப்போட்டு, அதிற்குள்ள என்னப்பா சாபம் போடுவதுபோன்று ஏதோ சொல்லுகின்றீங்கள். நம்மளுடைய மகன் என்ன அழகில எடுப்பில குறைந்தவனே! அவன் தனக்குப் பொருத்தமான ஒரு பெண்ணைத்தான் தேர்ந்துள்ளான். அங்கு ஓர் ஆபத்தும் வராது, உங்களுடைய வாயைச் சும்மா வைத்திருங்கோ," என்று சிறிது கண்டிப்பான தொனியிற் சொன்னாள்.

அவள் உடுத்திருந்த றோஸ்நிறச் சாறியில் அவளுடைய முகமும் கைகளும் றோஸ் நிறமாகவே தெரிந்தன. மூக்கும் முழியுமாக அப்படி ஓர் அம்சமான தோற்றம். முருகன் கொடுத்து வைத்தவன் என்று மனதிற்குள் எண்ணிக் கொண்ட அம்மாவும் அப்பாவும் அவர்கள் இருவரும் சோடியாக வருவதைப் பார்த்து மனம் பூரித்து நின்றனர். வாசலடிக்கு வந்த மகனையும் மருகளையும் வாசலில் நிறுத்தி, திருஷ்டி சுத்திப் போட்டு, அப்புறம், "வலதுகாலை எடுத்துவைத்து வா பிள்ளை," என்று கூறிக்கொண்டு முன் சென்ற அம்மா, தனது உணர்வுகளை அடக்கி வைத்திருக்க முடியாத நிலையில், "உங்கள் இருவரையும் பார்க்கும்போது இராமாயணத்திற் கவிச் சக்கரவர்த்தி கம்பன் பார்த்த இராமபிரானும் சீதாபிராட்டியும் ஞாபகத்திற்கு வருகின்றது. என்னுடைய





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணே பட்டிடும்போலிருக்கு,'' என்று தனது உணர்வு களை வெளிப்படையாகவே சொன்னபின், வாலாம்பிகையைப் பார்த்து, ''மகாலட்சுமி மாதிரி ரொம்ப அழகாகவும் அம்சமாகவும் இருக்கின்றீங்கள். என்னுடைய மகன் கொடுத்து வைத்தவன்,'' என்று தனது உள்ளக்கிடைக்கைளை வெளிப்படுத்தினாள். அந்தப் பெத்த மனம் அந்த வேளையில் அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை எனலாம்.

கதையைத் தொடர்ந்த தெய்வானை வாலாம்பிகையைப் பார்த்து, ''உங்களுடைய கல்யாணம் முடிந்தவுடன் நீங்கள் இங்கு வந்து எங்களுடன் இருந்து கொள்ளுங்கோ. எங்களுக்கு இவன் ஒருத்தன்தான் பிள்ளை. இந்த வீடு வளவு மற்றும் எங்களுடைய சொத்து சுதந்திரம், எல்லாவற்றிற்கும் மேலாக எங்களுடைய அன்பு பாசம் நேசம் எல்லாமே உங்கள் இருவருக்கும்தான். நீங்கள் இங்கு சந்தோசமாக நிம்மதியாகச் சுதந்திரமாக வாழமுடியும். ஆனால் ஒரு வேண்டுகோள், அதாவது எங்களைப் போன்று ஒரு பிள்ளைமட்டும் பெறாமல் நீங்கள் மூன்று நான்கு பிள்ளைகள் பெற்றுக் கொள்ள வேண்டும். இயலாத காலத்தில் எங்களை அன்பாதரவாகப் பார்த்துச் சாக்காட்டினாற் போதும்,'' என்று கூறியபொழுது நாணம் கலந்த புன்சிரிப்புடன் வாலாம்பிகை முருகனைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டினாள். பதிலுக்கு முருகனும் கண்ணைச் சிமிட்டிவிட்டுச் சிரித்தான். அவனுடைய முகபாவனையும் சிரிப்பும் அம்மா கூறுவது வாஸ்தவம்தான் என்று கூறுவதுபோன்று வாலாம்பிகை மனதிற்பட்டது.

கதையைத் தொடர்ந்த தெய்வானை வாலாம்பிகையைப் பார்த்து, ''உங்களுடைய இந்தக் காதல் விவகாரம் உங்களுடைய அம்மா அப்பாவிற்குத் தெரியுமா பிள்ளை?'' என்று பக்குவமாய்ச் சிரித்துக் கொண்டே கேட்டாள். எதையும் ஒழித்து மறைத்துப் பேசும் சுபாவமில்லாத வாலாம்பிகை, ''இன்னும் நான் அவர்களுக்குச் சொல்லவில்லை அத்தை. விரைவில் சொல்லவிருக்கிறேன். உங்களுடைய சம்மதத்தையும் அறிய ஆவலாயிருந்தேன். இன்று அதை அறிந்துவிட்டேன். எனவே இனிமேற் தாமதமில்லாமல், எந்தவித கவலையும் பயமுமில்லாமல் எனது பெற்றோருக்குத் தெரியப்படுத்துவேன். எனக்குச் சிறிது அவகாசம் தரவேண்டும்,'' என்றதும் புத்தி சொல்வதுபோன்று தெய்வானை, ''மேலும் தாமதிக்காமல் உங்களுயைட அம்மா அப்பாவிற்குச் சொல்லுங்கோ பிள்ளை. அப்பதான் நாங்கள் உங்களுடைய வீட்டிற்கு வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தம் கலக்க முடியும். நீங்கள் ஒருவரை ஒருவர் விரும்பினாலும் நாங்கள் எங்களுடைய சம்பிரதாயங்களையும் சடங்குகளையும் ஒதுக்கிவிட முடியாதுதானே. எல்லாவற்றையும் முறைப்படி செய்ய வேண்டும் என்பதுதான் எங்களுடைய ஆசை. எங்களுக்கு முருகன் ஒரே பிள்ளையானபடியினாற் கல்யாண வீட்டைச் சீராய்ச் சிறப்பாய்ச் செய்யவேண்டும் என்பது எங்களுடைய நீண்டநாட் கனவு. எங்களுடைய கனவு நிறைவேறுவதற்கு உங்களுடைய ஒத்துழைப்பும் வேண்டும். திருமணவிழா என்பது இருபகுதியாரும் சேர்ந்து செய்யும் கொண்டாட்டம். இதில் இரு பகுதியினரும் சம பங்காளிகளாகப் பங்குபற்ற வேண்டும்," என்று தன்னுடைய ஆதங்கத்தை வெளிப்படுத்தினாள்.

மாமா மாமியின் அபிலாசைகளைத் தெரிந்துகொண்ட வாலாம்பிகை, "நீங்கள் கூறுவது ஏற்கப்பட வேண்டியதுதான் அத்தை. நான் விரைவில் இந்த விடையத்தை எனது பெற்றோருக்குத் தெரியப்படுத்தி, அவர்களுடைய சம்மதத்தைப் பெற்று அப்புறம் உங்களை அங்கு அழைத்துச் செல்லுவதற்கு ஆவன செய்கிறேன். நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம், போதுமா மாமி!" என்றாள். மருமகளின் பக்குவமான கதையைக் கேட்டு மனம் பூரித்துப் போன தெய்வானை "அது போதும் மருமகள்," என்று நிறைந்த முகமலர்ச்சியுடன் கூறிய வேளையில் ஏதோ திடீரென்று ஞாபகத்திற்கு வந்தவள்போன்று மணிக்கூட்டைப் பார்த்துவிட்டு, "நேரம் ஒரு மணி ஆகப்போகின்றது வாருங்கோ சாப்பிடுவம்," என்று கூறிவிட்டு வேகமாகக் குசினிக்குச் சென்றாள். அதைத் தொடர்ந்து முருகன், வாலாம்பிகை, முருகனின் அப்பா மூவரும் சாப்பாட்டு மேசைக்குச் சென்று அமர்ந்து கொண்டனர். தெய்வானை சாப்பாட்டைப் பரிமாறினாள். எல்லோரும் சுவைத்துச் சாப்பிடத் தொடங்கினர். சாப்பிட்டுக் கொண்டிருந்த பொழுது கந்தப்பு மாஸ்ரர், அதுதான் முருகனின் அப்பா மருமகளைப் பார்த்து, "எப்படி மருமகள் எனது ஆத்துக்காரியின் சமையல் இருக்கின்றது?" என்று காசியமாய்க் கேட்டார். மாமனாரின் குறும்புத்தனத்தைப் புரிந்து கொண்ட வாலாம்பிகை, "சும்மா சொல்லக்கூடாது, நான் இந்த வீட்டிற்கு உங்களுடைய மருமகளாய் வருவதற்கு முன் மாமியிடம் சமையல் கற்றுக் கொண்டுதான் வரவேண்டும். இல்லாவிட்டால் எனது சமையலை முருகன், மன்னிக்க வேண்டும், எனது வருங்காலக் கணவர் குப்பை வாளியிற் கொட்டிவிடக்கூடும்," என்று சிரித்துக் கொண்டே சொன்னாள். இதைக் கேட்டு மாமியாரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமையலை மறைமுகமாகப் புகழ்கிறாள் என்பதை உணர்ந்து கொண்ட கந்தப்பு மாஸ்ரர், "எங்களுடைய குடும்ப வாழ்க்கையின் ஆரம்பநாட்களில் நானும் சில வேளைகளிற் குப்பைவாளியிற் கொட்டியிருக்கிறேன் சாப்பாட்டை. அப்புறம் எங்களுடைய அம்மாதான் மனுசிக்குச் சமையல் கற்றுக் கொடுத்தவா," என்று சொல்லிவிட்டுச் சிரித்தார். எல்லோரும் சேர்ந்து சிரித்தனர்.

சாப்பிட்டு முடிந்ததும், உங்களுடைய றூமைப் பார்க்கலாமா முருகன்?" என்று கேட்டாள் வாலாம்பிகை. "பார்க்கலாமே," என்று மிகவும் குசாலாய்ச் சொன்ன முருகன், "வாங்கோ காட்டுகிறேன்" என்று கூறிவிட்டு முன்னுக்குச் சென்றான். அவனைத் தொடர்ந்து றூமிற்குள் சென்ற வாலாம்பிகை அவனின் கட்டிலில் இருந்து கொண்டு, "றூமை ரொம்ப அழகாகவும் துப்பரவாகவும் வைத்திருக்கிறீங்கள். பார்ப்பதற்கு மிகவும் சந்தோசமாய் இருக்கின்றது," என்று கூறியதும், பதிலுக்கு "ரொம்பத் தாங்ஸ்" என்று கூறிக்கொண்டு அவளுக்கருகில் ஒட்டினாற்போல் உட்கார்ந்தான் முருகன். அவளும் அவனுடைய ஆசையை உதாசீனம் செய்ய விரும்பாதவள் போன்று இருந்தாள். அப்பொழுது அவன் தனது இடது கையை அவளின் பின்புறத்தாற் போட்டு அவளுடைய இடது இடுப்பைப் பிடித்துத் தன்னுடன் இறுக அணைத்துக் கொண்டு இடுப்பிற் கிள்ளினான். வெட்கமும் கூச்சமும் ஒன்றுசேர அவள் அவனது மடியிற் சாய்ந்தாள். அப்படியே கட்டியணைத்துக் கொண்டு அவளுடைய கொழுகொழு கன்னத்தில் முத்தமிட்டான். அப்பொழுது அவனுடைய இடது கை அவளுடைய மார்பகங்களிற் பட்டு உராசியது. மடியில் சாயவைத்து முத்தம் கொடுத்தது அவளுக்கு இதமாகவும் இன்பமாகவும் இருந்தது. அப்பொழுது அவளுடைய மார்பகங்கள் விம்மித்தணிவதை அவனால் உணர முடிந்தது.



இருவரும் இன்பத்தில் மூழ்கியிருந்த இந்த நேரத்தில் முருகனின் அம்மா, "தம்பி முருகன்" என்று குரல் கொடுத்தாள். அம்மா உள்ளுக்குள் வந்தாலும் என்ற அச்ச உணர்வினால் உடனே வாலாம்பிகையை விலத்திவிட்டுத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென்று எழுந்து வாசலடிக்குச் சென்றான் முருகன். வாலாம்பிகைக்கு ஒரே சிரிப்பு, தம்பியினுடைய சேட்டைக்கு இது வேண்டும் என்று கூறியவள் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு எழுந்து வாசலடிக்கு வந்து அவனின் பின்தோழிற் கிள்ளிவிட்டு, "உங்களுடைய குழப்படிக்கு இதுதான் நல்ல மருந்து, நல்ல நேரம் பார்த்து அம்மா கூப்பிட்டிருக்கிறா," என்று கூறிவிட்டு விழுந்து விழுந்து சிரித்தாள். வாலாம்பிகையின் கிண்டற் கதையைக் கேட்ட முருகன் அசடுவழிந்தபடி, "பொறு வாறன், அம்மா வந்துவிட்டுப் போகட்டும்," என்று கூறிவிட்டு ஒன்றும் செய்யாதவன் போன்று அம்மாவின் வருகைக்காக வாசலில் நின்றான். கையில் ஒரு கடிதத்துடன் வந்த அம்மா, "இந்தக் கடிதம் நேற்று வந்தது தம்பி, தருவதற்கு நான் மறந்துவிட்டேன். என்ன முக்கிய கடிதமோ தெரியவில்லை. அதுதான் ஞாபகம் வந்தவுடன் கூப்பிட்டனான் தம்பி," என்று கூறிக் கொண்டு கடிதத்தைக் கொடுத்தாள். தொடர்ந்து றூமிற்குள் நின்றாற் திரும்பவும் குழப்படி பண்ணுவார் என்பதைப் புரிந்து கொண்ட வாலாம்பிகை அத்தருணத்தில், "உங்களுடைய றூமைப் பார்த்தது போதும், நான் வெளியிற் போகிறேன்," என்று கூறிக் கொண்டு வெளியே வந்தவள் வாசலில் நின்று தலையைத்திருப்பி ஒரு கடைக்கண் பார்வை பார்த்து ஒரு நக்கற் சிரிப்புச் சிரித்துவிட்டு வெளியேறினாள். அவளினது கயல்விழிகளின் கடைக்கண் பார்வையும் சிரிப்பும் ஏமாந்து போனீங்களே என்று அவனுக்குக் கூறுவது போன்று பட்டது. அதைத் தொடர்ந்து ஏமாற்றம் கலந்த அசடு வழிந்த சிரிப்போடு முருகனும் வெளியே வந்தான்.

வெளியில் வந்த வாலாம்பிகை மணிக்கூட்டைப் பார்த்துவிட்டு, "நான் வீடு செல்லுவதற்கு நேரமாகின்றது. இப்பொழுது புறப்பட்டாற்தான் நான் நேரத்திற்கு வீடு போய்ச் சேரலாம். வீட்டிற்குப் போவதற்குத்தாமதித்தால் என்னைக் காணவில்லை என்று அம்மா அப்பா கவலைப்படுவார்கள்," என்றாள். இந்தக் காதல் விவகாரம் வாலாம்பிகையின் பெற்றோருக்கு இன்னும் தெரியாதபடியினால் வாலாம்பிகை கூறுவதில் அர்த்தமுண்டு என்பதை உணர்ந்து கொண்ட முருகனின் அப்பாவும் அம்மாவும், "மருமகள் சொல்லுவது சரிதான் தம்பி, ஆனபடியால் மேலும் நேரம் தாழ்த்தாமல் மருமகளைக் கொண்டுபோய் விட்டிட்டு வாங்கோ," என்று மகனைக் கேட்டுக் கொண்டனர். அப்பொழுது திடீரென்று ஏதோ ஞாபகத்திற்கு வந்ததுபோன்று முருகனின் அம்மா,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு நிமிடம் பிள்ளை!" என்று சொல்லிவிட்டு தனது அறையிற்குள் அவசரமாய்ச் சென்றாள். ஒரு சில நிமிடங்களிற் பதக்கத்துடன் கூடிய இரட்டைப்பட்டு முத்துச் சங்கிலியை இரண்டு கைகளிலும் பிடித்துக் கொண்டு வந்து, "முதன்முதல் வீட்டிற்கு வந்த மருமகளை வெறுங்கையோடு திருப்பி அனுப்பப்படாது. இது எங்களுடைய அன்பளிப்பு, போட்டுக் கொள்ளுங்கோ," என்று கூறிக்கொண்டு நீட்டினாள். உடனே வாலாம்பிகை முருகனைப் பார்த்துப் புன்னகைத்தாள். அவளின் பார்வையினதும் புன்சிரிப்பினதும் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட முருகன், "அம்மா அன்போடு தருகின்றாவல்லே, வாங்கிக் கொள்ளுங்கோ," என்று புன்னகைத்த படியே சொன்னான். முகத்தில் மகிழ்ச்சியும் இதழ்களில் உவகையும் பொங்க வாலாம்பிகை, "நீங்களே உங்களுடைய கைகளாற் போட்டுவிடுங்கோ மாமி," என்று கூறிக்கொண்டு குனிந்து கழுத்தை நீட்டினாள். "நீங்கள் நல்லாயிருக்க வேண்டும்" என்று வாழ்த்திக்கொண்டு சங்கிலியைப் போட்டவுடன் அப்படியே மாமியாரின் காலில் விழுந்த வாலாம்பிகை மாமியாரின் கால்களைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

எழுந்து பார்த்தபொழுது தெய்வானையின் கண்களிலிருந்து சில கண்ணீர்த் துளிகள் உதிர்வதை அவதானித்த வாலாம்பிகை, "ஏன் மாமி அழுகின்றீர்கள்? நான் ஏதும் தப்புப் பண்ணிவிட்டேனா?" என்று தாழ்ந்த குரலிற் கேட்டாள். பதட்டப்பட்ட தெய்வானை, "இல்லை! இல்லை! இது அழுகையல்லப் பிள்ளை ஆனந்தக் கண்ணீர். சந்தோச மிகுதியால் எனக்குத் தெரியாமலேயே கண்ணீர் வந்துவிட்டது," என்று கூறிக் கொண்டு வாலாம்பிகையின் இரு கன்னங்களிலும் முத்தமிட்டுத் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டாள். புன்சிரிப்புடன் எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்ட வாலாம்பிகை இருவரையும் பார்த்து, "போயிட்டு வருகிறேன் மாமா! போயிட்டு வருகிறேன் மாமி," என்று கூறியவள் அப்புறம் முருகனைப் பார்த்து, "புறப்படுவமா மாப்பிள்ளை," என்று வாய் நிறையப் புன்னகைத்தபடியே கேட்டாள். அவளின் அந்தக் காசியமான பேச்சைக் கேட்டு எல்லோரும் கலகலவென்று சிரித்தனர். சிரிப்போடு சிரிப்பாக, "புறப்படுவம் பெண்ணே," என்று கூறிய முருகன் முதலிற் சென்று உந்துருளியில் ஏறிக் கொண்டான். மறுபடியும், "போயிட்டு வருகிறேன் மாமா! போயிட்டு வருகிறேன் மாமி," என்று கூப்பிய கைகளுடன் வேண்டிக் கொண்ட வாலாம்பிகை விறாந்தையிலிருந்து இறங்கிச் சென்று உந்துருளியில் முருகனுக்குப் பின்னால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்கார்ந்து கொண்டாள். ஒரே உதையில் உந்துருளி இயங்க ஆரம்பித்தது. எல்லோரும் கைகளை அசைத்துக் கொண்டனர். அப்பொழுது கந்தப்பு மாஸ்ரர், "மாப்பிள்ளையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொள் மருமகள், சரி போயிட்டு வாங்கோ," என்று உரத்த குரலிற கூற உந்துருளி உறுமிக் கொண்டு புறப்பட்டது.



## அங்கம் 4

**க**ல்யாணத்தை விரைவிற் செய்துவைக்க வேண்டுமென்று முருகனின் பெற்றோர் முருகனை அடிக்கடி கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து, முருகனும் வாலாம்பிகையும் வேலை தேடும் முயற்சியில் மும்மரமாய் ஈடுபட்டனர். அப்பொழுது தாமரைக்குளம் பிரதேச சபையில் உருவான உதவிச் செயலாளர் பதவிக்கான வெற்றிடம் பற்றி வர்த்தமானிப் பிரசுரத்தில் வெளியாகியது. அந்த உதவிச் செயலாளர் பதவிக்கு முயற்சி செய்ய வாலாம்பிகையும் முருகனும் முடிவு செய்தனர். உள்ளூருக்குள் வேலை கிடைத்தால் வாழ்க்கை சந்தோசமாயும் சிக்கனமாயும் அமையும் என்ற எண்ணத்துடன் எப்படியும் அந்த உதவிச் செயலாளர் பதவியைப் பெற்றுவிட வேண்டுமென்று வாலாம்பிகை தீர்மானித்தாள். அந்தப் பிரதேச சபை அலுவலகத்தைக் கட்டுவதற்கு அரசாங்கத்திற்கு நிலம் கொடுத்து உதவி செய்தவர் நாகதேவன் என்பதைத் தெரிந்துகொண்ட வாலாம்பிகை அவனுடைய உதவியின் மூலம் இந்தப் பதவியைப் பெறலாம் என்று ஊகித்துக் கொண்டாள். நாகதேவன் உள்ளூருக்குட் பிரதேச சபைத் தலைவராகவும், முதலாளியாகவும், பணக்காரனாகவும் இருந்தது மட்டுமல்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு அரசியற் செல்வாக்குப் படைத்தவனாயும் இருந்தான் என்பதை ஏற்கனவே நன்கு தெரிந்திருந்தாள் வாலாம்பிகை. நாகதேவனின் உதவியைப் பெற்றுக் கொண்டால் வேலை கிடைத்தது மாதிரித்தான் என்பதைப் புரிந்து கொண்ட வாலாம்பிகை அவனுடைய ஆதரவைப் பெறும்பொருட்டு ஒருநாள் தனது தந்தையாருடன் நாகதேவனின் வங்களாவிற்குச் சென்றாள்.


நாகதேவனுக்கு இளம் பெண்களைக் கண்டால் நன்கு பிடிக்கும். வாலாம்பிகையைப் பார்த்த நாகதேவனுக்கு நுனிநாக்கில் நீர் ஊறியது. அவளைக் கண்டதும் கழுகுப் பார்வை பார்த்தான். அவள் அவனை நெருங்கியதும் மிகவும் நல்லவன் போன்று பல்லுத் தெரியச் சிரித்துக் கொண்டு, "என்ன!.... சின்னப் பொண்ணும் அப்பாவும் வந்திருக்கின்றீர்கள். என்ன விசயம்?" என்று தேன் சொட்டச் சொட்டக் கேட்டான். உடனே வாலாம்பிகையின் தந்தை தோழிற் கிடந்த சால்வையை எடுத்துக் கமக்கட்டுக்குள் வைத்துக் கொண்டு கூப்பிய கைகளோடு பணிவாக, "ஐயாவிடம் ஓர் உதவி கேட்டு வந்திருக்கிறோம்," என்றார். உடனே நாகதேவன், "உதவியா? அது என்ன உதவி?" என்று ஆணவம் கலந்த தொனியிற் கேட்டான். விடயத்தைச் சொல்லத் தயாராகவிருந்த வாலாம்பிகை, "ஐயா தாமரைக்குளம் பிரதேச சபையில் ஓர் உதவிச் செயலாளர் வெற்றிடம் நிரப்பப்படவிருப்பதாய் வர்த்தமானி அறிவித்தல் மூலம் தெரிந்து கொண்டேன். அந்தப் பிரதேச சபை அலுவலகம் கட்டுவதற்கு நீங்கள்தான் காணி கொடுத்து உதவியதாயும் அறிந்தேன். உங்களுடைய அரசியற் செல்வாக்கு நாடறிந்த விடயம். நான் பன்னிரண்டாம் வகுப்புப் பரீட்சையிற் திறமைச்சித்தி அடைந்துவிட்டு வேலை தேடிக் கொண்டிருக்கிறேன். இந்த உதவிச்செயலாளர் பதவிக்கும் விண்ணப்பம் செய்துள்ளேன். நீங்கள் மனம் வைத்தால் இந்த உதவிச்செயலாளர் பதவியை எனக்குப் பெற்றுத்தர முடியும் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை. அதனாற்தான் உங்களுடைய உதவியை நாடி வந்திருக்கிறேன்," என்று மிகவும் பணிவான குரலிற் கச்சிதமாகக் கூறினாள். மகள் விடயத்தைக் கூறிமுடித்தவுடன் கதையைத் தொடர்ந்த அப்பா, "ஐயா, நாங்கள் கஸ்டப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தனாங்கள். பொருளாதார நெருக்கடியின் மத்தியிற்தான் என்னுடைய மகளைப் பன்னிரண்டாம் வகுப்புவரை படிக்க வைத்தேன். மேற்கொண்டு படிப்பதற்குரிய தகுதியும் திறமையும் இருந்தபோதும் பொருளாதாரக் காரணங்களுக்காக என்னுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகள் படிப்பை நிறுத்திக் கொண்டாள். இந்த வேலையை என்னுடைய மகளுக்குப் பெற்றுக் கொடுத்தால் என்னுடைய மகளின் படிப்பிற்கு ஓர் அர்த்தம் உண்டாகும். அத்துடன் நாங்கள் எங்களுடைய வாழ்நாள் முழுவதும் உங்களுக்கு நன்றியுடையவர்களாக இருப்போம். பெரிய மனசு பண்ணி இந்த வேலையை எனது மகளுக்குப் பெற்றுக் கொடுங்கள் ஐயா," என்று கரம்கூப்பிச் சிரம்தாழ்த்திக் கேட்டுக் கொண்டார்.

தேடி அலைந்து செலவு செய்து பெறவேண்டிய பொருள் வாசல்படி தேடி வந்துநிற்கும்போது நாகதேவன் முடியாது என்றா சொல்லுவான். நாகதேவனைப் பொறுத்தமட்டில் இளம் பெண்களெல்லாம் அனுபவிக்கப்படும் சடப்பொருட்கள்தான். அனுபவித்து விட்டுத் தூக்கி வீசும் சடலங்கள்தான். இந்தப் பதவியை வாலாம்பிகைக்கு மிக இலகுவாகப் பெற்றுக் கொடுக்க நாகதேவனால் முடிந்தபோதும் அதைக் காட்டிக்கொள்ள விரும்பாத நாகதேவன், "இது கொஞ்சம் சிரமமான விடயம், இருந்தபோதும் நீங்கள் எனது அயற்கிராமத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பதனாலும், உங்கள் வாழ்நாள் முழுவதும் நீங்கள் நன்றி உடையவர்களாக இருப்பீர்கள் என்று கூறுவதனாலும் நான் முயற்சி பண்ணிப் பார்க்கிறேன். எதற்கும் இரண்டு கிழமை கழித்து மறுபடியும் என்னை வந்து பாருங்கோ," என்று கூறியவன் அவளிடமிருந்து விண்ணப்பப்படிவத்தின் பிரதிகளைப் பெற்றுக்கொண்டு அவள் நடந்துசென்றபோது அவளுடைய பின் அழகைப் பார்த்து வாயூற ரசித்துக் கொண்டிருந்தான்.



தனது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாத நாகதேவன் "அனுபவிக்கக் கொடுத்து வைத்தனான். தேவலோகக் கன்னிகை போன்று வந்திட்டுப் போகிறாள். அமுக்கியிட வேண்டியதுதான். வாழ்நாள் முழுவதும் நன்றியுடைய வளாய் இருப்பேன் என்று கூறிவிட்டுப் போகிறாள், நமக்கேன் அவ்வளவு காலத்திற்கு. கொங்கை சரியுமட்டும் நன்றியுடைய வளாயிருந்தாற் போதும்," என்று தன்னுக்குட் பேசிக் கொண்டான்.

இவனுடைய புலம்பலை அறையுக்குள் நின்று கேட்டுக் கொண்டிருந்த வேலாசி வெளியே வந்து, "என்ன சார்! ரொம்பக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குசியாயிருக்கின்றீர்கள்! ஏதும் விசேசமோ?'' என்று ஒன்றும் தெரியாதவள்போற் கேட்டாள். வங்களாவின் கேற்றை நோக்கி நடந்து போய்க்கொண்டிருந்த வாலாம்பிகையைக் காட்டி, "அங்கபார் வேலாசி, அழகுத் தேவதையொன்று வந்துவிட்டுப் போய்க் கொண்டிருக்கின்றது. அந்தக் காலத்தில் நீ வேலை தேடி வந்தபோது இருந்ததுபோன்று அவளுடைய பின்பக்கம் இருக்கின்றது. உன்னுடைய அழகில் மயங்கித்தானே உனக்கு நான் வேலை கொடுத்தனான், உன்மீது அனுதாபப்பட்டு அல்ல,'' என்று சொல்லி வாய்மூடுவதற்குட் குறுக்கிட்ட வேலாசி, "என்ன சார்! இதுகும் புரியாமலா இருபது வருடங்களாய் உங்களுடன் இருக்கின்றேன். அதை விடுத்து விசயத்திற்கு வாருங்க சார். அவளுடைய பின் அழகைத்தான் இப்பொழுது எனக்குக் காட்டுகின்றீர்கள். ஆனால் அவளின் முன் அழகை யன்னலின் ஊடாகப் பார்த்துவிட்டேன். ரொம்பப் பலே! பலே! ஐயாவினுடைய ரேஸ்ரை எனக்குத் தெரியாதா? பிரமாதம்! கொடுத்து வைத்தனீங்கள், அனுபவிப்பதற்கென்றே கொடுத்து வைத்தனீங்கள்,'' என்று சொல்லிவிட்டு ஒரு விசிறல் விசிறிக் கொண்டு திரும்பி நடந்தாள். உடனே, "இங்கு நில் வேலாசி, நான் சொல்வதைக் கேள், உன்னுடைய சேவை எனக்குத் தேவை. அவளுக்கு இந்த வேலையைப் பெற்றுக் கொடுத்திட வேண்டியதுதான். அப்புறம் இங்கு அவள் வந்து போகும்போதெல்லாம் இடவன் மாடுபோல நீதான் ஆளை வளைத்துப் பிடித்துக் கொடுத்திட வேண்டும்,'' என்று புன்சிரிப்புடன் சொன்னான். எல்லாவற்றையும் புரிந்து கொண்டவள் போன்று வேலாசி, "விடுங்க சார்! குரும்பை முலைக் கூந்தற்காரி அகப்பட்டிருக்கிறாள். என்ன செய்ய வேண்டுமென்று நீங்கள் சொல்லித்தானாக்கும் எனக்குத் தெரியவேண்டும். என்னுடைய சேர்விஸ் என்ன சார்? குரும்பை முலைக் குமரியைக் கண்டதும் ஐயாவிற்கு இளமை பேருகின்றது. கொடுத்து வைத்தனீங்கள், அனுபவிக்கக் கொடுத்து வைத்தனீங்கள் என்று சொல்லுகிறேன்,'' என்று கூறியவள் தலையைச் சாய்த்துக் கண்ணைச் சிமிட்டிவிட்டுச் சென்றாள். எப்படியிருந்தபோதும் வேலாசியும் ஒரு பெண்ணல்லவா, அவளுடைய மனச்சாட்சி, "பச்சைக் கிளி ஒன்று வல்லூறின் கூடுதேடி வந்திட்டுப் போகின்றது. பாவம், அதனுடைய தலைவிதியும் என்னுடைய தலைவிதியைப் போன்றது தானாக்கும். நாம் என்ன செய்ய முடியும்,'' என்று தனக்குட் பேசிக்கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகதேவன் கேட்டுக்கொண்டபடி இரண்டு கிழமைகள் கழித்து வாலாம்பிகையும் அவளுடைய தந்தையும் நாகதேவனின் வங்களாவிற்கு வந்தனர். அன்று இருவரையும் முற்றத்தில் நிற்க வைத்துப் பதில் சொல்லி அனுப்பிய நாகதேவன் இன்று அவர்கள் இருவரையும் வரவேற்று விறாந்தையிலிருந்த கதிரைகளில் இருக்க வைத்து தேனீர் கொடுத்தான். தேனீரை மிகவும் பயபக்தியோடு வாங்கிக் குடித்த இருவரும் அவனுடைய பதிலுக்காக வளர்த்த நாய் முகத்தைப் பார்த்தது போன்று அவனுடைய முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களுடைய பார்வையிலிருந்து அவர்களின் ஆவலைப் புரிந்துகொண்ட நாகதேவன் மலர்ந்த முகத்தோடு சிரித்தபடியே, "விசயம் வெற்றி! இன்னும் மூன்று மாதத்தில் அப்பதவி வெற்றிடம் நிரப்பப்படும். அன்று உங்களுடைய கடமையை நீங்கள் ஆரம்பிக்கவிருக்கின்றீர்கள். அதற்கு முன் உங்களுக்கான நியமனக்கடிதமும், பயிற்சி பற்றிய கடிதமும் கிடைக்கும், சந்தோசம்தானே?" என்றான். கதிரையில் இருந்த இருவரும் உடனே எழுந்துவிட்டார்கள். ஆனந்தமிகுதியால் அவர் களுக்கு என்ன செய்வதென்றே தெியவில்லை. அவர்களுக்குக் கையும் ஓடவில்லைக் காலும் ஓடவில்லை. நிலமையை ஓரளவிற்குச் சுதாகரித்துக் கொண்டு வாலாம்பிகையின் தந்தை, "ரொம்ப நன்றி ஐயா! ரொம்ப நன்றி!! உங்களுடைய இந்த உதவிக்கு நாங்கள் என்ன கைமாறு செய்வதென்று எங்களுக்குத் தெரியவில்லை. எங்களால் முடிந்த எந்த உதவியைக் கேட்டாலும் நாங்கள் செய்யத் தயாராயிருக்கின்றோம் ஐயா!" என்று கூப்பிய கைகளுடன் சொல்லி முடிக்கவே, தந்தைக்கு மகள் சளைத்தவள் இல்லைப் போன்று வாலாம்பிகை, "ரொம்பத் தாங்ஸ் சேர்! உங்களுடைய இந்த உதவியை நாங்கள் ஒருபோதும் மறக்க மாட்டோம். அப்பா கூறியதுபோன்று எங்களால் முடிந்த எந்த உதவியைக் கேட்டாலும் அதைச் செய்வதற்கு நாங்கள் பின்நிற்கமாட்டோம்," என்று கூறிவிட்டுக் குழைந்து வளைந்து நெழிந்து நின்றாள்.

அந்த வேளையில் வாலாம்பிகைக்கும் தந்தைக்கும் ஏற்பட்ட ஆனந்தத்தைவிட நாகதேவனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி அளவுகடந்தது என்றால் மறுப்பதற்கில்லை. காரணம் பொண்ணு தன்னுடைய வலையில் விழுந்துவிட்டாள் என்பதுதான். அந்த உண்மையைக் காட்டிக் கொள்ளவிரும்பாத நாகதேவன் அவர்கள் கூறியதிற்குப் பதிற்கதை சொல்லுவது போன்று, "நீங்கள் ஓர் உதவியும் எனக்குச் செய்ய வேண்டாம். நீங்கள் என்னுடைய அயற்கிராமத்தைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தவர்கள். உங்களுடைய சந்தோசம் என்னுடைய சந்தோசம் போன்றது. உங்களுக்காக என்னால் முடிந்த ஒரு சிறிய உதவியைத்தான் செய்துள்ளேன். பெரிதாக நான் ஒன்றையும் வெட்டிப் புடுங்கவில்லை," என்று சொல்லி முடிப்பதிற்குட் குறுக்கிட்ட வாலாம்பிகையின் தந்தை, "ஐயாவிற்கு இது சிறிய விடையமாயிருந்தாலும், எங்களைப் பொறுத்த மட்டில் இது ஒரு மிகப் பெரிய உதவியாகும். எனவே அதற்குரிய முறையில் நன்றி உடையவர்களாயிருக்க வேண்டியது எங்களுடைய கடமை," என்று மிகவும் உணர்ச்சிததும்பக் கூறினார். கதையைத் தொடர்ந்த நாகதேவன், "அது உங்களுடைய பெருந்தன்மை. அது வேண்டாமென்று நான் கூறவில்லை. நான் சொல்ல விளைவது என்னவென்றால், நான் செய்த இந்த உதவியை உங்களுடைய மனதில் வைத்திருந்தாற் போதும். நீங்கள் வேறொன்றும் செய்ய வேண்டியதில்லை. நீங்கள் சந்தோசமாய்ப் போயிட்டுவாங்கோ. நியமனக்கடிதம் வந்ததும் எனக்குத் தெரியப்படுத்துங்கோ," என்று கேட்டுக் கொண்டான். நாகதேவனுடைய கதையிலிருந்து நாகதேவன் பெரும்குணம் படைத்த ஒரு மனிதன் என்று கருதிய வாலாம்பிகையும் அவளுடைய தந்தையும் அவனுடைய காலில் விழுந்து நமஸ்காரம் பண்ணாத குறையாக, நன்றியும் வணக்கமும் அளித்துவிட்டு மகிழ்ச்சி பொங்க வீடு சென்றனர்.

இந்த மகிழ்ச்சியான விடயத்தை உடனே முருகனுக்குத் தெரியப்படுத்த விரும்பிய வாலாம்பிகை, அன்றே தாமரைக்குளம் ரவுணுக்குச் சென்று மதிய உணவு இடைவேளை நேரத்தில் முருகனைச் சந்தித்து, "முருகன் நமது கல்யாணத் திற்கான நாள் நெருங்கி வந்துகொண்டிருக்கின்றது, சந்தோசம் தானே?" என்றாள். இவள் ஏன் திடீரென்று இப்படிக் கூறுகிறாள் என்பதைப் புரிந்து கொள்ளாத முருகன், "என்ன வாலாம்பிகை சொல்லுகிறாய்? வேலையொன்று தேடிய பிற்பாடு தான் கல்யாணம் என்று கூறிய நீ, திடீரென்று கல்யாண நாள் நெருங்கி



வருகின்றது என்கிறாய், என்ன நடந்தது?" மனதை மாற்றிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாயா? என்று வியப்போடு கேட்டான். முகத்தில் உவகை பொங்கப் புன்சிரிப்புடன், "வாலாம்பிகை கொள்கையிலிருந்து ஒருபோதும் மாறமாட்டாள். அதுதான் வாலாம்பிகையின் சிறந்த பண்பு," என்று சொல்லிக் கொண்டுபோக, உடனே முருகன், "அப்படியானால் உங்களுக்கு வேலை கிடைத்துவிட்டது என்று கூறுகின்றீர்கள், அப்படித்தானே?" என்று கேட்ட மறுகணமே, "அப்படித்தான், வேலை கிடைத்து விட்டது, உதவிச்செயலாளர் பதவி கிடைத்துவிட்டது, அப்புறம் என்ன கல்யாணம்தான்," என்று கைகால் தெரியாத ஆனந்தத்தோடு சொன்னாள். அந்தக் கணமே, "அப்படியா!" என்று கேட்டுக் கொண்டு அவளைக் கட்டிவாரித்தூக்கி ஒரு சுத்தல் சுத்தி இறக்கினான் முருகன். அப்புறம் வேலை கிடைத்த விபரத்தை விளக்கமாய்ச் சொன்னாள் வாலாம்பிகை. மூன்று மாதத்தில் உள்ளூருக்குள் வேலை கிடைக்கப் போகின்றது என்னும் விடயம் வாலாம்பிகைக்கு மட்டுமல்ல முருகனுக்கும் பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

இந்த வேளையிற் தனது பெற்றோரை எண்ணிப் பார்த்த முருகன், "நான் இந்த விடையத்தை எனது அம்மா அப்பாவிற்குச் சொன்னால் அவர்கள் இரண்டு விதத்தில் அதீத சந்தோசம் அடைவார்கள். ஒன்று உங்களுக்கு வேலை கிடைத்த சந்தோசம், மற்றையது நமது கல்யாணம் கெதியில் நடைபெறப் போகின்றது என்னும் சந்தோசம். எப்பொழுது கல்யாணம் நடக்கும், எப்பொழுது நீங்கள் மருமகளாக வந்து எமது வீட்டிற்கு விளக்கேற்றி வைப்பீர்கள் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள் எனது பெற்றோர்கள். எனது கல்யாணம் என்னைவிட எனது பெற்றோருக்குத்தான் முக்கியமாகத் தேவைப்படுகின்றது என்று சொன்னாற் சாலவும் பொருந்தும். இந்தச் செய்தியைக் கேட்டு நான் அடைந்த மகிழ்ச்சியைவிட, அவர்கள் அடையப்போகும் மகிழ்ச்சி மிகப்பெரிதாக இருக்கும் என்பதிற் சிறிதளவும் சந்தேகமில்லை," என்று கூறியவன், "அப்ப.... இனிமேல் உங்களைச் செயலாளர் அம்மா என்றுதான் கூப்பிட வேண்டும்," என்று பகிடியாய்ச் சொன்னான். அதற்குப் பதில் அளிக்குமாப்போல், "நீங்கள் அப்படியொன்றும் கூப்பிட வேண்டியதில்லை, வழமைபோன்று பட்டு என்று கூப்பிட்டாற்போதும்," எனச் சிறிது கோபத்தோடு கூறிவிட்டுத் திடீரென்று சிரித்தாள், முருகனும் சேர்ந்து சிரித்தான். தொடர்ந்து பேசிய முருகன், "சந்தோசமாய்க் கொண்டாடப்படவேண்டிய விடயம் இது. அதற்கு என்னிடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது பணம் இல்லை,'' என்று கூறிச் சமாளித்துக் கொண்டான். இருந்தபோதும் உடனே அங்குள்ள உணவகத்திற்கு வாலாம்பிகையை அழைத்துச் சென்று மதிய உணவை இருவரும் சாப்பிட்டனர்.

அன்று பாடசாலை முடிந்ததும் வேறு எங்கும் சென்று நேரத்தைப் போக்காமல் நேரே உந்துருளியில் வீட்டிற்குச் சென்று அதை முற்றத்தில் வழமைபோன்று நிறுத்திவிட்டு, "அம்மா'' என்று கூப்பிட்டுக் கொண்டு வீட்டிற்குட் சென்றான். மகனின் வழமைக்கு மாறான தொனியைக் கேட்டு வெளியே வந்த தெய்வானை மகனின் முகமலர்ச்சியையும் புன்சிரிப்பையும் பார்த்துவிட்டு, "என்ன.... மாப்பிள்ளை இன்று குசாலாய் நிற்கிறீங்கள்! ஏதும் விசேசமே?'' என்றாள். உடனே முருகன், "விசேசம்தான் அம்மா! ஒரு தித்திக்கும் செய்தியோடு வந்திருக்கிறேன். அதை நீங்கள் கேட்டால் ஆனந்தத்தில் அதிர்ந்துபோவீங்கள்,'' என்று கூறவே, விடயத்தை அறிவதற்கு ஆர்வம் கொண்ட தெய்வானை, "புதிர்போடாமல் விடயத்தைச் சொல்லு தம்பி,'' என்று கேட்டதும் "உங்களுடைய மருமகள் உங்கள் வீட்டிற்கு விளக்கேற்றுவதற்கு விரைவில் வரப்போகின்றாள். நல்ல நாளாய்ப் பாருங்கோ,'' என்றான். தெய்வானை பொறுமையை இழந்தவள் போன்று, "மறுபடியும் புதிர்போடாமல் விடையத்தை நேரடியாய்ச் சொல்லு தம்பி'' என்றாள். மேலும் அம்மாவின் பொறுமையைச் சோதிக்க விரும்பாத முருகன், "மருமகளுக்கு உதவிச் செயலாளர் பதவி கிடைத்துவிட்டது. இன்னும் மூன்று மாதத்தில் வேலையை ஆரம்பிக்கப் போகின்றா,'' என்று சொல்லி வாய்மூடுவதிற்குள், "அப்படியா! ரொம்ப நல்லதாய்ப் போய்ச்சு!!'' என்று ஆச்சரியத்தோடு கேட்டவள் ஏதோ திடீரென்று ஞாபகத்திற்கு வந்தவள் போன்று, "எங்க தம்பி வேலை செய்யப் போகிறா?'' என்று கேட்டுவிட்டு பதிலுக்காக மகனுடைய வாயைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அம்மாவின் கேள்வியிலிருந்து அவவின் மனோநிலையைப் புரிந்துகொண்ட முருகன், "எங்காவது தூரதேசத்திற்கு மருமகள் போய்விடுவாளோ என்ற ஏக்கத்துடன் கேட்கிறீங்கள், அப்படித்தானே அம்மா?'' என்றான். மகன் தன்னுடைய எதிர்பார்க்கையைப் புரிந்து கொண்டான் எனத் தெரிந்துகொண்ட தெய்வானை, "ஆம் தம்பி, மருமகளுக்குத் தூரதேசத்தில் வேலை கிடைத்தால் அவ அங்கே நீ இங்கே என்று இருக்கக் குடும்ப வாழ்க்கை சந்தோசமாகப் போகமாட்டாது தம்பி, அதுதான் கேட்டனான்,'' என்றாள். அம்மா தன் மீது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கும் பாசத்தைப் புரிந்து கொண்ட முருகன், "நீங்கள் என்மீது கொண்டிருக்கின்ற அக்கறை புரிகிறது அம்மா. அவ தூர தேசத்திற்குப் போகவில்லை. அவவினுடைய அயற் கிராமத்தில் உள்ள பிரதேசசபை அலுவலகத்திற்தான் வேலை செய்யப் போகின்றா. இப்ப சந்தோசம்தானே அம்மா?" என்றதும் தெய்வானை, "சர்க்கரைப் பந்தலிற் தேன்மாரி பொழிந்தது போன்ற சந்தோசம. தம்பி, நான் இந்தக்கிழமையே சாத்திரியாரிடம் சென்று கல்யாணத்திற்கான நாள் ஒன்றைப் பார்க்கிறேன். அப்பா வெளியே போய்விட்டார். அவர் வந்தவுடன் விடயத்தைச் சொல்லி ஆகவேண்டியவற்றைச் செய்கிறோம். உங்களுடைய கல்யாணம் விரைவில் நிறைவேற வேண்டுமென்பதுதான் எங்களுடைய விருப்பமும். அதற்கு ஆண்டவன் வழிவிட்டிருக்கிறான். எல்லாம் நல்லபடியாயே நடக்கும்," என்று கூறிமுடித்தாள்.

நாகதேவன் கூறியதுபோன்று மூன்று மாதத்தாற் குறிப்பிட்ட திகதியில் உதவிச் செயலாளர் பதவி வெற்றிடம் நிரப்பப்பட்டது. எதிர்பார்த்தபடி அன்று வாலாம்பிகை தனது பதவியை ஏற்றுக் கொண்டாள். அன்றைய நிகழ்வில் நாகதேவன், முருகன், வாலாம்பிகையின் பெற்றோர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். வாலாம்பிகைக்கும் முருகனுக்கும் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத மகிழ்ச்சி. அப்பொழுது வாலாம்பிகை முருகனை நாகதேவனுக்கு அறிமுகம் செய்து வைத்தாள். இருவரும் கை களைக் குலுக்கிக் கொண்டபொழுது நாகதேவன் நயவஞ்சகச் சிரிப்புடன் ஒரு நரிப் பார்வை பார்த்தான். நிகழ்ச்சிகள் முடியும்வரை நாகதேவன் வைத்த கண் வாங்காது வாலாம்பிகையைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான். காமவெறி அவனின் கண்களில் வெளிப்பட்டது. இதை யாரும் கண்டுகொள்ளவில்லை. பதவியேற்பு நிகழ்வு முடிந்து வீடு சென்றபொழுது முருகனும் வாலாம்பிகையும் நாகதேவனிடம் சென்று தங்களுடைய நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்ததுடன் தங்கள் இருவருக்கும் விரைவிற் திருமணம் நடைபெறவுள்ளதாயும் வெளிப்படுத்தினர். அதைக் கேட்ட நாகதேவன் குள்ளநரிச் சிரிப்புடன், "அப்படியா! ரொம்ப நல்லது. என்னையும் கவனித்துக் கொள்ளுங்கள்," என்று பொடிவைத்துப் பேசினான். அவனுடைய இந்தக் கூற்றை ஆழமாகச் சிந்திக்காத முருகனும் வாலாம்பிகையும் இறுதி வணக்கத்தையும் செலுத்திவிட்டு வீடு சென்றுவிட்டனர்.

அன்றிலிருந்து வாலாம்பிகை பேரூந்தில் அலுவலகத்திற்குச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வது வழமையாகவிருந்தது. அலுவலகம் அவளுடைய வீட்டிலிருந்து இரு மைல் தூரத்திற்குள் இருந்தபடியினாற் பேருந்துப் பிரயாணம் நீண்டதாக இருக்கவில்லை. இப்பொழுதெல்லாம் அவளுடைய கிராமத்தைச் சேர்ந்தவர்கள் வாலாம்பிகையைப் பார்க்கும்போதெல்லாம் செயலாளர் அம்மா என்றே அழைத்தனர். அந்தப் பின்தங்கிய கிராமத்தில் அவளுக்கு நல்ல மதிப்பும் மரியாதையும் கிடைத்தது என்றால் மறுப்பதற்கில்லை. வாலாம்பிகைக்கு மட்டுமல்ல அவளுடைய பெற்றோரும் அந்தக் கிராமத்து மக்களால் உயர்வாக மதிக்கப்பட்டனர். இந்த நிலையிலும் வாலாம்பிகை வழமைபோன்று அந்தக் கிராமத்து மக்களிடம் மிகவும் அன்பாகவும் பணிவாகவும் நடந்துகொண்டாள். அவளுடைய அந்தப் பெருந்தன்மையான குணத்தைப் பற்றிச் சிலர் அவளிடமே கூறியிருந்தனர். இவ்வாறு மதிப்புடனும் மகிழ்ச்சியுடனும் மூன்று மாதங்கள் கழிந்தோடின.

ஒருநாள் திடீரென்று வாலாம்பிகையைக் காணவில்லை. அன்று அவள் அலுவலகத்திற்கு வரவில்லை என்று மற்றைய ஊழியர்கள் சொன்னார்கள். இச்செய்தி கீழக்கரை மாவட்டச் செயலாளருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. உடனே மாவட்ட அலுவலகத்திலிருந்து உத்தியோகத்தர்கள் வாலாம்பிகையின் வீட்டிற்குச் சென்றனர். அப்பொழுது அவளுடைய பெற்றோர் வழமைபோன்று அவள் அலுவலகத்திற்குச் சென்றுவிட்டாள் என்று கூறினர். இச்செய்தி அக்கிராமம் அயற்கிராமங்கள் முழுவதும் பரவியது. உடனே தாமரைக்குளம் பொலிசிற் புகார் செய்யப்பட்டது. வாலாம்பிகை காணாமற்போன செய்திகேட்டு அவளுடைய பெற்றோர் மட்டுமல்ல அந்தக் கிராமமே அதிர்ச்சியிலும் சோகத்திலும் மூழ்கியது. பெற்றோர் அயலவர்களுடன் சேர்ந்து தீவிரமாய்த் தேடினர். அந்தக் கிராம மக்கள் எல்லோரும் சேர்ந்து தேடினர். தாமரைக்குளம் காவற்றுறையினர் சந்தேகத்தின் பேரிற் பலரையும் பிடித்து விசாரணை செய்தனர். அதிற் சில இளைஞர்கள் பொலிசாராற் தாக்கப்பட்டனர். இன்னும் சிலர் சித்திரவதை செய்யப்பட்டனர். குறிப்பாக அந்தப் பகுதி இளைஞர்களே பொலிசின் அராஜகத்திற்கு உட்படுத்தப்பட்டனர் என்றால் மிகையாகாது. தேடுதல் முயற்சி வாலாம்பிகையின் குடும்பத்தினராலும் கிராம மக்களாலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. முதலாம், இரண்டாம், மூன்றாம் நாட்களென்று நாட்கள் கழிந்து கொண்டிருந்தன. ஆனால் எந்தத் தடையமும் கிடைக்கவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் செல்லச் செல்ல கிராமமக்கள் பலரும் பலவாறாய்க் கதைக்கத் தொடங்கினர். சிலர் அவள் தன் காதலனுடன் ஓடிவிட்டாள் என்று பேசிக் கொண்டனர். வேறு சிலர் கிளிநொச்சிப் பேரூந்திற் சென்றதைக் கண்டோம் என்றனர். இன்னும் சிலர் ஒதியமலைப் பேரூந்திற் பார்த்தோமென்றும் கதைத்தனர். இவைகள் யாவும் வதந்திகளாயும், பொய்யும் புரளிகளாயும் இருந்தனவேயன்றி அவற்றில் எந்த உண்மைகளும் இருக்கவில்லை. அவளை விரும்பாத சிலர் திட்டமிட்டு இந்த வதந்திகளைப் பரப்பிவிட்டிருந்தனர். பொதுமக்களிடமிருந்து வாலாம்பிகையின் காதல் விவகாரத்தை அறிந்த பொலிசார் விசாரணை என்ற போர்வையில் முருகனைப் பிடித்து கடுமையான விசாரணைக்குட்படுத்தினர், குண்டாந்தடியாற் தாக்கினர். தலைகீழாய்த் தொங்கவிட்டுக் கடுமையாகத் தாக்கினர், சித்திரவதை செய்தனர். ஆனால் எந்தப் பிரயோசனமும் கிடைக்கவில்லை. சிலராற் பரப்பப்பட்ட வதந்திகளை நம்பித் தேடுதலில் ஈடுபட்டவர்கள் கீழக்கரைப் பிரதேசம் முழுவதும் அலைந்து திரிந்தபோதும் ஒன்றும் பலன் அளிக்கவில்லை. நான்காம் நாள் நாகதேவனுடைய மரமுந்திரிகைத் தோட்டத்திற்கு அருகாமையிலுள்ள ஒரு மாந்தோட்டத்தில் அமைந்திருந்த துரவொன்றினுள் ஒரு பெண்ணின் சடலம் உருக்குலைந்த நிலையிற் கிடப்பதை அங்கு வேலைசெய்யும் தொழிலாளர்கள் கண்டனர். இச்செய்தி காட்டுத்தீபோற் கீழக்கரைப் பிரதேசம் முழுவதும் மட்டுமல்ல யாழ்ப்பாணக்குடாநாடு, கிளிநொச்சிப் பிரதேசம் முழுவதும் பரவியது. உடனே அந்தத் தோட்ட நிர்வாகத்தினராற் பொலிசிற்கு முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிசார் சென்று பார்வையிட்டபொழுது சடலம் மிகவும் சிதைந்து காணப்பட்டதால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. உடனே வாலாம்பிகையின் பெற்றோரும் உறவினரும் அழைத்துச் செல்லப்பட்டனர். புடவையையும் வேறு சில தடையங்களையும் வைத்து இறந்தவர் தங்களுடைய மகள்தான் என்பதைப் பெற்றோர் உறுதி செய்தனர். அயலவர்களும் இந்த உடல் வாலாம்பிகையினுடையதுதான் என்பதை உறுதிப்படுத்தினர். அப்புறம் அவ்விடத்திற்குச் சென்று விசாரணை மேற்கொண்ட நீதிபதி கொலை எனத் தீர்ப்பளித்ததுடன், பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு அத்துடன் கொலையாளிகளைக் கண்டுபிடிக்கும்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிசாரை வேண்டிக் கொண்டார்.

புலன்விசாரணை அப்பொழுது கீழக்கரை மாவட்டப் பொலிஸ் அத்தியட்சகராகவிருந்த குஞ்சிபண்டா தலைமையில் நடைபெற்றது. கொழும்பிலிருந்து விசேட பொலிஸ் துப்பறியும் பிரிவும் வரவழைக்கப்பட்டது. இந்த மர்மக்கொலை கீழக்கரையை மட்டுமல்ல யாழ்ப்பாணக் குடாநாடு கிளிநொச்சிப் பிரதேசம் முழுவதையும் பெரும் பரபரப்பிற்குள்ளாக்கியிருந்தது. பத்திரிகைகள் எல்லாம் செய்திகளைப் பலவாறாக வெளியிட்டன. கொழும்பிலிருந்து வந்த விசேட புலன் விசாரணைப் பிரிவிற்கும் விசாரணை செய்யப்பட்டவர்களுக்கும் இடையில் நாகதேவன் மொழி பெயர்ப்பாளராகச் செயற்பட்டான். குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் மிகவும் அக்கறையோடு செயற்படுவதாக நாகதேவன் தன்னைக் காட்டிக்கொண்டான். இதை வாலம்பிகையின் பெற்றோரும் நம்பிவிட்டனர். நாகதேவனின் தூண்டுதலினாற் கொழும்பிலிருந்து வந்த விசேட புலன்விசாரணைப்பிரிவினர் பல இளைஞர்களைக் கடுமையான புலன்விசாரணைக்கு உட்படுத்தினர். அப்பொழுது பல இளைஞர்கள் கொடுமைப்படுத்தப்பட்டனர், அன்றியும் சித்திரவதைக்கும் உட்படுத்தப்பட்டனர். ஒருமாதம் தொடர்ந்து நடைபெற்ற புலன்விசாரணையில் வாலாம்பிகையின் பெற்றோர் திருப்திப்படக்கூடிய முறையில் நாகதேவன் செய்திகளைப் பரிமாறிக்கொண்டான். வேறு வார்த்தையிற் சொன்னால் வாலாம்பிகையின் பெற்றோரைத் திருப்திப்படுத்துவதிலேயே நாகதேவன் குறியாகச் செயற்பட்டான்.

மூன்று மாதங்கள் கழித்தும் கொலையாளிகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று கீழக்கரை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் குஞ்சிபண்டா நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்தார். அதைத்தொடர்ந்து இந்தக் கொலை சம்பந்தமான கோவை மூடப்பட்டது. வாலாம்பிகையின் மரணம் மர்மமாகவே இருந்து வந்தது. வாலாம்பிகையின் பெற்றோரும் உறவினரும் இதுதான் அவளுடைய தலைவிதி என்று எண்ணித் தங்களுடைய மனதைத் தேற்றிக் கொண்டனர். சட்டத்தின் விசாரணை முடிந்து கோவை நிரந்தரமாய் மூடப்பட்டாலும் சமூகத்தின் விசாரணை முடிந்தபாடில்லை. குற்றவாளி சட்டத்தின் பிடிக்குள் அகப்படாமல் தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் சமூகத்தின் பார்வையிலிருந்து தப்பித்துக் கொள்வது என்பது இயலாத காரியம். இந்த உண்மையை மனித சமூகம் காலாதிகாலமாக அறிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருக்கின்றது. அரசியற் செல்வாக்கு, பணபலம் படைத்தவர்கள் குற்றங்களைப் புரிந்துவிட்டு இலகுவாகத் தப்பித்துக் கொள்ளுவதும் அல்லது அந்தக் குற்றங்களை ஒன்றுமறியாத அப்பாவிகளின் தலைமீது சுமத்துவதும் தொடர்கதையாகவே இருக்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மை. இவை யாவற்றையும் சமூகம் அறிந்தே வைத்திருக்கின்றது. இதன் அடிப்படையிற் தாமரைக்குளம் சமூகம் நாகதேவனுக்கும் இந்தக் கொலைக்கும் ஏதோவொரு வகையிற் தொடர்பு இருக்கின்றது என்னும் உண்மையை அடிமனதிற் கொண்டிருந்தது.

அப்பிரதேச மக்கள் இதைத் துருவித் துருவி ஆராயத் தொடங்கினார்கள். நாகதேவன் மொழிபெயர்ப்பாளராகச் செயற்பட்டபொழுது செய்த குழறுபடிகளையும், தனக்கு வேண்டாத இளைஞர்களைப் பொலிசாரைக் கொண்டு கடுமையாகத் தாக்குவித்ததையும் வைத்துப் பார்த்தபொழுது அப்பகுதி மக்களுக்கு நாகதேவன்மீது ஏற்பட்ட சந்தேகம் வலுப்பெற்றது. தாமரைக்குளம் பிரதேச மக்களுக்கு நாகதேவன்மீது நல்ல அபிப்பிராயம் இல்லாதிருந்தபோதும், இந்தக் கொலை சம்பந்தமாய் அவனைத் தொடர்புபடுத்துவதற்குப் போதிய ஆதாரங்கள் தேவைப்பட்டன. காரணம், வாலாம்பிகைக்கு இந்த உதவிச் செயலாளர் பதவியைப் பெற்றுக் கொடுத்தவன் நாகதேவன். அப்படிப்பட்டவன் இவளை ஏன் கொலை செய்ய வேண்டும்? என்ற கேள்வி சமூகத்தின் மத்தியிலும் வாலாம்பிகையின் குடும்பத்தின் மத்தியிலும் எழுந்தது. இந்தக் கட்டத்திற்தான் ஒரு முக்கிய செய்தி வாலாம்பிகையின் நெருங்கிய நண்பி ஒருத்தியிடமிருந்து வெளிவந்தது. அதாவது வாலாம்பிகை பிரதேசசபை அலுவலகத்தில் கடமையிலிருந்தபொழுது ஒருநாள் நாகதேவன் அங்கு சென்று யாருமற்ற நேரம்பார்த்து அவளிடம் பாலியற் சேட்டை புரிந்திருக்கிறான். அதைப் பொறுத்துக்கொள்ள முடியாத வாலாம்பிகை காலில் கிடந்த செருப்பைக் கழற்றிக்காட்டி தாறுமாறாக ஏசி அவனை விரட்டியடித்திருக்கிறாள். தன்னுடைய இச்சை நிறைவேறாது போனதையிட்டு ஆத்திரம் அடைந்த நாகதேவன், "நான் உன்னைப் பார்த்துக் கொள்ளுகிறேன்," என்று கூறிவிட்டுச் சென்றுள்ளான். இந்தக் கதையை வெளியிற் சொல்ல விரும்பாத வாலாம்பிகை தனது மனதிற்குட் போட்டுப் புழுங்கிவிட்டு இறுதியிற் தனது உற்ற நண்பி ஒருத்திக்குச் சொல்லியுள்ளாள். இந்தச் செய்தியைக் கேட்டதும் ஏற்கனவே மக்கள் கொண்டிருந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தேகம் வலுப்பெற்றது.

இந்த உண்மையைத் தொடர்ந்து நாகதேவனின் தூண்டுதலினாற் பாதிக்கப்பட்ட இளைஞர்கள் உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடிக்கும் விடயத்திற் தீவிரம் காட்டினர். வாலாம்பிகையின் பெற்றோரும் அந்த இளைஞர்களுடன் ஒத்துழைக்க ஆரம்பித்தனர். உண்மைக் கொலையாளியைக் கண்டுபிடிக்காது போனால் இப்படிப்பட்ட கொலைகள் எதிர்காலத்திலும் நிகழலாம் என்று அப்பிரதேசப் பெரியோர்களும் புத்திஜீவிகளும் இளைஞர்களும் உணர்ந்து கொண்டதைத் தொடர்ந்து உண்மைக் குற்றவாளியைக் கண்டு பிடிப்பதற்கு அதீத அக்கறை காட்டினர். இந்தக் கட்டத்திற்தான் மகிழம்பூ, நாகதேவனிடம் வேலைக்குச் சேர்ந்தாள்.

மகிழம்பூ ஒருநாள் நாகதேவனின் ஜீப்வண்டியிற் சாரதியுடன் ஓதியமலைச் சந்தைக்குச் சென்றுகொண்டிருந்தாள். புதுக்காட்டுச் சந்தியை ஜீப் வண்டி நெருங்கிக் கொண்டிருந்தபொழுது ஒரு வயோதிபர் கையைக் காட்டினார். உடனே மகிழம்பூ சாரதியிடம் வண்டியை நிறுத்தும்படி கேட்டாள். வண்டி வயோதிபருக்கு அருகில் நிறுத்தப்பட்டது. உடனே மகிழம்பூ தலையை நீட்டி, “என்ன பெரியவர் வேண்டும்?” என்று கேட்டாள். அதற்கு அந்த முதியவர், “நான் ஒதியமலைச் சந்தைக்குப் போகவேண்டும். என்னை உங்கள் வண்டியில் ஏற்றிச் செல்லுவீர்களா?” என்று கேட்டார். முதியவர் மீது அனுதாபம் கொண்ட மகிழம்பூ, “நாங்களும் அங்குதான் போய்க்கொண்டிருக்கின்றோம். வந்து ஏறுங்கள் பெரியவர், கவனமாய் ஏறுங்கள் பெரியவர்,” என்று கூறிப் பெரியவரை ஜீப்வண்டியில் ஏற்றிக் கொண்டாள். அருகில் இருந்த பெரியவரைப் பார்த்து, “நீங்கள் யார் பெரியவர்? உங்களுடைய பெயர் என்ன? நீங்கள் எங்கு இருக்கின்றீர்கள்? என்று சில கேள்விகளைக் கேட்டாள். வஞ்சகமில்லாத அந்தப் பெரியவர், “நான் வாலாம்பிகையின் அப்பா, நான் நாவற்தோப்பில் வசிக்கிறேன், இப்பொழுது ஒதியமலைச் சந்தைக்குப் போய்க் கொண்டிருக்கிறேன்,” என்று அமைதியாகப் பதில் அளித்தார். இதைக் கேட்ட மகிழம்பூ வாலாம்பிகையைப் பற்றி அறிவதற்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது என்பதைப் புரிந்துகொண்ட போதும், ஜீப் வண்டி சந்தையைச் சென்றடையும்வரை அதைப்பற்றி எதுவும் கதைக்கவில்லை. காரணம் தான் இந்தக் கொலை சம்பந்தமாகக் கதைப்பது சாரதிக்குத் தெரியப்படாது என்பதற்காக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீப்வண்டியைச் சாரதியுடன் வீதியோரமாய் நிறுத்திவிட்டுச் சந்தைக்குட் சென்ற மகிழம்பூ பெரியவரிடம் கதையோடு கதையாக வாலாம்பிகையின் கொலை சம்பந்தமாய்ப் பல கேள்விகளைக் கேட்டாள். அவளுடைய கேள்விகளுக்கு ஆர்வத்தோடு பதில் அளித்த பெரியவர் இறுதியிற் தாங்கள் நாகதேவனைத்தான் சந்தேகப்படுவதாயும், அதற்கு ஆதாரமாக வாலாம்பிகையின் நண்பி சொன்ன கதையையும், மொழிபெயர்ப்பின்போது நாகதேவன் செய்த குழறுபடிகளையும், தனக்குப் பிடிக்காத இளைஞர்களைப் பழிவாங்கியதையும் எடுத்துக் காட்டினார். எல்லாவற்றையும் கேட்டுக்கிரகித்துக் கொண்ட மகிழம்பூ, "எனக்கு நேரமாகின்றது பெரியவர், நான் சாமான்களை வாங்கிவிட்டேன்," என்று கூறி விடைபெற்றுக்கொண்டு சென்றாள்.

இப்பொழுது மகிழம்பூவிற்கு நாகதேவன் மீதும் வேலாசிமீதும் சந்தேகம் ஏற்படத் தொடங்கியது. தன்னுடைய உயிருக்கும் ஆபத்து வரலாம் என்று எண்ணிய மகிழம்பூ மிகவும் தந்திரமாயும் ஜாக்கிரதையாயும் நாகதேவனுடன் நடந்து கொள்ள வேண்டுமென்று தனக்குட் தீர்மானித்துக் கொண்டாள். அன்றிரவு பதினொரு மணியளவில் மகிழம்பூ படுத்திருந்த அறைக்கதவில் யாரோ தட்டும் சத்தம் கேட்டது. வேலாசிதான் ஏதும் தேவைக்காக வந்து தட்டுகிறாள்போலும் என்று எண்ணிய மகிழம்பூ உடனே எழுந்துசென்று கதவைத் திறந்தாள். எதிரில் நின்றது வேலாசி அல்ல நாகதேவன். மதுபோதையில் நின்றான். விஸ்க்கி மணம் குப்பென்று அடித்தது. கண்கள் சிவந்து காணப்பட்டன, கழுகுப்பார்வை பார்த்தான். மதுபான வெறியும் காமவெறியும் அவனுடைய முகத்தில் ஒருங்கே தென்பட்டன. தள்ளாடிக்கொண்டு உள்ளே வந்து கதவைச் சாத்தினான். எப்போ ஒருநாள் இப்படி நடக்குமென்று மகிழம்பூ தெரிந்து வைத்திருந்தபடியினால் அவள் அதிர்ச்சியடையவில்லை. மனதைத் திடப்படுத்திக் கொண்டாள். மிருகத்திடமிருந்து தப்பமுடியாது இன்றைக்கு என்று உணர்ந்து கொண்டாள். சிறிது முன்நகர்ந்த நாகதேவன், "நான் இன்றைக்கு உன்னோடுதான் படுக்கப் போகிறேன்," என்று கூறிவிட்டு அவளின் தோழிற் கையைப் போட்டு அணைத்துக் கொண்டு கட்டிலிற் குந்தினான். அது கிங்சைஸ் மெத்தை. ஒரு ஆளுக்கு ஏன் கிங்சைஸ் மெத்தை போட்டிருக்கிறான் என்று முன்பு பல தடவைகள் மகிழம்பூ சிந்தித்திருந்தாள். இப்பொழுதுதான் அதற்கான விடை கிடைத்தது. அப்புறம் தனது ஆசைதீர அவளைப் புரட்டியெடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகதேவன் இறுதியில் தனது காமப்பசியைத் தீர்த்துக் கொண்டான்.

வாலைக்குமரியுடன் பாலியலில் ஈடுபட்டது அவனுக்கு எல்லையில்லாத இன்பத்தை அளித்தது. மகிழ்ச்சியில் மதிமயங்கி நின்றான். அப்பொழுது அவளைக் கட்டி அணைத்துக்கொண்டு, "அவள் இவ்வாறு நடந்திருந்தால் ஏன் அவளை நான் கொலை செய்யப்போறன்," என்றான். ஏற்கனவே சந்தேகம் கொண்டிருந்த மகிழம்பூ "யாரைப்பற்றி ஐயா சொல்லுகின்றீங்கள்," என்று இசைவாகக் கேட்டாள். அறிவை இழந்திருந்த நாகதேவன், "அவள்தான் அந்த உதவிச்செயலாளர், அவள் எனக்கு இப்படி உதவுவாள் என்று எண்ணிக் கொண்டு அவளுக்கு வேலை பெற்றுக் கொடுத்தேன். அவள் எனக்குச் செருப்பைத் தூக்கிக் காட்டுகிறாள். நாகதேவன் யாரென்று அவளுக்குத் தெரியவில்லை. அவளுடைய கதையை ஒரேயடியாய் முடிச்சுவிட்டேன். நீ தங்கமான பொண்ணு, என்னைப் புரிந்துகொண்டு நடக்கிறாய், எனக்குச் சந்தோசத்தைக் கொடுக்கிறாய். நாளையிலிருந்து இந்த வங்களாவிற்கு நீ தான் ராணி, சரியா?" என்று சொல்லி வாய்மூடுவதிற்குள், "ஓம் ஐயா, நானும் இப்ப ரொம்பச் சந்தோசமாய் இருக்கிறேன்," என்றாள் மகிழம்பூ.



## அங்கம் 5

மறுநாட் காலை மகிழம்பூவினுடைய அம்மாவும் அப்பாவும் அவளைப் பார்ப்பதற்காக நாகதேவனின் வங்களாவிற்கு வந்தனர். அப்பொழுது விறாந்தையில் உட்கார்ந்திருந்த நாகதேவன் அவர்களைக் கண்டதும், "என்ன மகளைப் பார்க்க வந்திருக்கிறீங்கள் போலும்?" என்றான். உடனே மகிழம்பூவின் அப்பா தனது தோழிற் கிடந்த சால்வையை எடுத்துக் கமக்கட்டுக்குள் வைத்துக் கொண்டு மிகவும் பணிவோடு தலையைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குனிந்து, "மகளைப் பார்த்துவிட்டுக் கையோடு கூட்டிப் போகலாம் என்று வந்திருக்கிறோம் ஐயா," என்று சொல்லி முடிப்பதற்குட் கோபப்பட்ட நாகதேவன், "கூட்டிப் போகவா?" என்று ஆணவத்தோடு கேட்டான். அவனுடைய மனநிலையைப் புரிந்து கொண்ட மகிழம்பூவின் அம்மா, "இல்லை ஐயா, அது வந்து எங்களுடைய கடைசி மகள் அதாவது மகிழம்பூவினுடைய கடைசித் தங்கை பெரியபிள்ளை ஆகிவிட்டாள். நாளைக்குத் தண்ணி வார்க்க இருக்கிறோம். அதுதான் மகிழம்பூவைக் கூட்டிச் சென்றுவிட்டு மறுநாளே திரும்ப அழைத்து வந்துவிடுவோம் ஐயா. நாளைக்கு ஒருநாள் மட்டும்தான் ஐயா எங்களுடன் நிற்பாள். தயவுசெய்து ஐயா பெரிய மனசுபண்ணி மகிழம்பூவை இன்று எங்களுடன் அனுப்பிவைக்க வேண்டும்," என்று மிகவும் பணிவாக வேண்டினாள். தாயின் கதையைக் கேட்டுத் திருப்தியடைந்த நாகதேவன், "நாளைக்கு மட்டும் என்றாற் பிரச்சினை இல்லை, கூட்டிப் போகலாம். ஆனால் மறுநாட் காலை மகிழம்பூ இங்கு நிற்க வேண்டும். இங்கு இப்போது எல்லாம் மகிழம்பூதான். அவளிடம் எல்லாப் பொறுப்பு களையும் ஒப்படைத்து விட்டேன். அவளை எனக்கு நல்லாய்ப் பிடித்துப்போய்விட்டது. அவள் இல்லாமல் இங்கு எதுவுமே செய்ய முடியாது. சுருக்கமாய்ச் சொன்னால் அவள் இல்லாவிட்டால் என் மண்டையே வெடித்துப் போய்விடும். ரொம்பக் கெட்டிக்காரப் பெண். எல்லாவற்றையும் புரிந்து கொண்டு நடக்கும் ஆற்றல் படைத்தவள். கெட்டிக்காரப் பெண், புத்திசாலிப் பெண், சாமர்த்தியமான பெண். அவளில்லாமல் இனிமேல் என்னால் ஒன்றும் செய்ய முடியாது," என்று கூறி முடித்தவன், மகிழம்பூ! என்று குரல் கொடுத்தான். குசினியிற்குள் நின்ற மகிழம்பூ வந்து, "கூப்பிட்டீங்களா ஐயா?" என்று பணிவோடு கேட்டாள். அந்த வேளையில் அப்பாவையும் அம்மாவையும் பார்த்துவிட்டு மசிந்து கொண்டு நின்றாள்.

அவளைப் பார்த்துப் புன்சிரிப்புச் செய்த நாகதேவன், "உன்னுடைய செல்லத்தங்கச்சி பெரியபிள்ளை ஆகிவிட்டாளாம், நாளைக்குத் தண்ணிவார்ப்பாம். அப்பா . அம்மா உன்னைக் கூட்டிப்போக வந்திருக்கின்றார்கள். போயிட்டு நாளை மறுநாட் காலையிலேயே இங்கு வந்துவிட வேண்டும். தெரியும்தானே நீ இல்லாமல் இங்கு ஒன்றும் செய்ய முடியாதென்று," கூறவே உடனே மகிழம்பூ, "ஓம் ஐயா! நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். என்னுடைய பொறுப்புக்களை நான் நன்கு உணர்ந்துள்ளேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை கொண்டாட்டம் முடிந்தவுடன் தாமதமின்றித் திரும்பி வந்துவிடுவேன்," என்று நம்பிக்கை ஊட்டும் தொனியிற் சொன்னாள். அவளின் பதிலைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த நாகதேவன் உடனே அறையிற்குட் சென்று திரும்பிவந்து, "இதிற் பத்தாயிரம் ரூபாய் இருக்கின்றது, செலவிற்காக வைத்துக்கொள்," என்று கூறிப் பணத்தை மகிழம்பூவிடம் கொடுத்தான். பணத்தைப் பெற்றுக் கொண்ட மகிழம்பூ மகிழ்ச்சி பொங்க உடையை மாற்றிக் கொள்வதற்காக ரூமிற்குட் சென்றாள். அப்பொழுது நாகதேவன் மகிழம்பூவினுடைய பெற்றோரைப் பார்த்துக் கடைசிப் பிள்ளையை யும் இரண்டு மூன்று வருடங்கள் கழித்து இங்கு கொண்டு வந்து சேர்த்து விடுங்கோ. நான் நன்கு கவனித்துக் கொள்ளுவேன். அத்தோடு அக்காவிற்கும் உதவியாயிருக்கலாம். நல்ல சம்பளமும் கொடுப்பேன். மகிழம்பூ இப்போது இங்கு என்ன மாதிரி இருக்கின்றாள் என்று உங்களுக்குத் தெரிகின்றதுதானே. அவள் தான் இங்கு ராணி. சாமத்திய வீட்டுச் செலவிற்கென்று பத்தாயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறேன். ஜாம் ஜாம் என்று சாமத்தியச் சடங்கை நடத்துங்கோ," என்று சொல்லிக் கொண்டிருக்க ராணி மாதிரிப் புறப்பட்டு வந்த மகிழம்பூ மிகவும் மரியாதையாகப் புன்சிரிப்புத் தவழ, "போயிட்டு வாறன் ஐயா," என்றாள். அவளின் அழகைப் பார்த்து உணர்ச்சிவசப்பட்ட நாகதேவன் அவளைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டிவிட்டுப் புன்சிரிப்புடன், "போயிட்டு வா மகிழம்பூ," என்று கூறி முதுகிற் தட்டி வழியனுப்பி வைத்தான்.

நாகதேவன் கேட்டுக்கொண்டபடி மகிழம்பூ நாளை மறுநாட் காலை திரும்பி வரவில்லை. நாகதேவனுக்குப் பெரும் ஏமாற்றமாக இருந்தது. இருந்தபோதும் பேரூந்துப் பிரயாணத்தில் ஏதும் தாமதம் ஏற்பட்டிருக்கலாம், வந்துவிடுவாள், அவள் வராமல் விடுவதற்குக் காரணமில்லை. இதுவரை அவளை நல்லாய்த்தான் நடத்தியிருக்கிறேன். அன்று அவளோடு இன்பமாயிருந்ததிற்கும் அவள் எந்த மறுப்பும் தெரிவிக்கவில்லை. அவளும் அன்றைய இரவை இன்பமாய்த்தான் கழித்தாள். ஆனபடியால் அவள் கட்டாயம் வருவாள் என்று தன்னுக்குட் பேசித் தனது மனதைத் திருப்திப்படுத்திக் கொண்டான். அன்று மதியமாகியும் அப்புறம் பின்னேரமாகியும் மகிழம்பூ வரவில்லை. நேரம் இரவு ஏழு எட்டு, ஒன்பது, பத்துமணியென்று போய்க்கொண்டிருந்தது. ஒவ்வொரு மணித்தியாலம் கடக்கும்போதும் அவன் வங்களாவிலிருந்த சுவர் மணிக்கூடு அலாம் அடித்து நேரத்தை அவனுக்கு ஞாபகம் ஊட்டிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தது. நேரம் செல்லச் செல்ல நாகதேவன் பொறுமையை இழந்து கொண்டிருந்தான். ஆனால் அவள் வருவாள் என்ற நம்பிக்கையை மட்டும் இழக்கவில்லை. இரவு பத்துமணிக்கு நாகதேவன் தன்னுடைய கையாட்களுடன் தண்ணி அடிக்கத் தொடங்கினான். மிகச் சுவாரஸ்யமாகத் தண்ணி அடித்துப் பேசிக் கொண்டிருந்தனர். இடையிடையே மகிழம்பூவை இன்னும் காண வில்லை என்று சொல்லித் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தான் நாகதேவன்.

இப்பொழுது நேரம் இரவு பதினொரு மணி. ஒரு ஜீப் வண்டி உறுமிக் கொண்டு வந்து வங்காளவின் முற்றத்தில் நின்றது. மகிழம்பூதான் ஜீப் வண்டியில் வந்துள்ளாள் போலும் என்று எண்ணிய நாகதேவன் வாயைப் பிழந்து கொண்டு எழுந்தான். ஜீப் வண்டியிலிருந்து இராணுவ உடையில் ஆயுதம் தாங்கிய ஆறு இளைஞர்கள் குதித்தனர். அதில் நான்கு பேர் வங்களாவைச் சுற்றி நான்கு திசைக்கும் வேகமாய்ச் சென்றனர். மிகுதி இருவரும் நாகதேவனையும் கையாட்களையும் நோக்கி விறாந்தைக்குச் சென்றனர். நிலமையை அவதானித்த நாகதேவனின் கையாட்கள் ஐந்துபேரும் தண்ணி அடியை நிறுத்திவிட்டு நிலமையைக் கவனித்தபடி அச்சத்தோடு நின்றனர். நாகதேவனை நெருங்கிய ஓர் இளைஞன், "நீ தானா நாகதேவன்?" என்று கடுமையான தொனியிற் கேட்டான். நாகதேவனுக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது. அந்த இளைஞனுடைய கேள்விக்குப் பதில் சொல்லாத நாகதேவன் அந்த இளைஞனைப் பார்த்து, "நீங்கள் யாரடா? நீங்கள் ஏண்டா இங்கு வந்தனீங்கள்? என்னுடைய வங்களாவிற்குள் என்னுடைய அனுமதியின்றி அத்துமீறி நுழைந்தது மட்டுமல்லாமல் என்னைக் கேள்வியும் கேட்கிறீங்கள். உங்களுடைய கேள்விகளுக்கு நான் பதில் சொல்லத்தானா வேண்டும்? என்னை யார் என்று நினைத்துக் கொண்டீங்கள்? நாகதேவனென்று என்னுடைய பெயரைச் சொன்னாற் தாமரைக் குளப் பிரதேசமே நடுங்கும். தாய்முலையிற பால் குடித்துக் கொண்டிருக்கும் பிள்ளைகூட நாகதேவன் வருகிறான் என்றால் பால் குடிப்பதை நிறுத்தும். என்னுடைய அரசியற் செல்வாக்கும் பணபலமும் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? பொலிஸ் திணைக்களம் என்னுடைய சுண்டுவிரலிற்குள் ஆடும். நான் நினைத்தாற் செய்ய முடியாதது எதுவுமேயில்லை. அப்படிப்பட்ட என்னிடம் வந்து கேள்வி கேட்கிறீங்கள், கேள்வி! என்னடா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுக்கி நாய்களா! போங்கடா வெளியே பொறுக்கிப் பையன்களா!!" என்று ஆவேசத்தோடு முழங்கினான்.

எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டு நின்ற ஆயுதம் தாங்கிய மற்றைய இளைஞன் ஒரு விசில் அடித்தான். வங்களாவைச் சுற்றி நின்ற மற்றைய நால்வரும் உடனே பாய்ந்து வந்தனர். விசில் அடித்த இளைஞன் ஏதோ சைகையைக் காட்டினான். உடனே பாய்ந்து வந்த நால்வரில் இருவர் மறுபடியும் கோடிப்பக்கம் போனார்கள். மறுபடியும் ஏதோ சைகையைக் காட்டினான். உடனே இருவரும் நாகதேவனின் கையாட்களை நோக்கித் தங்களுடைய ஆயுதங்களைக் குறிவைத்தனர். கையாட்கள் ஐந்துபேரும் பயந்து நடுங்கிக் கைகளை உயர்த்திக் கொண்டு, "எங்களை ஒன்றும் செய்துவிடாதீர்கள், நாங்கள் ஒரு தப்பும் பண்ணவில்லை, நாங்கள் ஒரு தப்பும் பண்ணவில்லை," என்று கத்தி அழுதனர். இதைப் பார்த்த நாகதேவனுக்குக் கோபம் மேலும் பொங்கிக் கொண்டு வந்தது. பொறுமையை இழந்த நிலையில், "டேய்! இங்கு வந்து என்னடா அட்டகாசம் பண்ணுகின்றீங்கள்? இப்ப வெளியிற் போகப் போகின்றீங்களா? இல்லையா?" என்று கோபத்தோடு கத்தினான். கத்தி வாய் மூடுவதற்குட் பூட்ஸ் காலால் ஓர் அடி நாகதேவனின் அடிவயிற்றில் விழுந்தது. நாகதேவன் அம்மா என்று குழறிக் கொண்டு குனிந்து அடிவயிற்றைப் பொத்தினான். கழுத்தாங்குத்தியில் அடுத்தது விழுந்தது. ஐயோ என்று அலறிக் கொண்டு குப்புற விழுந்தான். தூக்கி ஒரே வீசல், முற்றத்திற் போய்க் குப்புற விழுந்தான். இரு இளைஞர்களும் பூட்ஸ் காலால் உதைத்தனர். உருட்டி உருட்டி உதைத்தனர். வேதனை தாங்க முடியாத நாகதேவன், "நீங்கள் என்ன சொன்னாலும் செய்கிறேன். என்னை உதைக்க வேண்டாம," என்று கெஞ்சினான்.

உதையை நிறுத்திய இரு இளைஞர்களும் அவனைக் கையிற் பிடித்துத் தூக்கி, "ஏறடா ஜீப் வண்டியில்" என்றனர். பயந்து நடுங்கிய நாகதேவன் அழுதுகொண்டு சென்று ஜீப் வண்டியில் ஏறினான். அடுத்து நாகதேவனின் கையாட்கள் மீது கையைக் காட்டி, "வந்து ஏறுங்கடா ஜீப் வண்டியில்," என்று அந்த இரு இளைஞர்களும் சத்தமிட்டனர். அவர்களும் பயந்து நடுங்கிக் கொண்டு வந்து ஜீப் வண்டியில் ஏறிக் கொண்டனர். மற்றைய இளைஞன் விசில் அடித்தான். கோடியில் நின்ற இருவரும் பாய்ந்து வந்தனர். நாகதேவன் உட்பட ஆறு பேருடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களையும் கறுப்புத் துணியாற் கட்டினார்கள். ஜீப் வண்டி உறுமிக் கொண்டு வேகமாகப் புறப்பட்டுச் சென்றது. இவையெல்லாவற்றையும் அறையிற்குட் பயந்து நடுங்கிக் கொண்டு நின்ற வேலாசி யன்னல் ஊடாகப் பார்த்துக் கொண்டு நின்றாள். இவ்வளவு துணிவுடன் நாகதேவனின் வங்களாவிற்குள் வந்து அவனை அடித்து உதைத்து ஜீப் வண்டியில் ஏற்றிச் செல்லுகின்றபடியால் இவன்கள் இயக்கப் பொடியன்களாய்த்தான் இருக்க வேண்டும் என்று தன்னுள் எண்ணிக் கொண்ட வேலாசி, மறுபடியும் பொடியன்கள் வந்து தன்னை விசாரித்தால் என்னமாதிரிப் பதில் சொல்லவேண்டும் என்பதைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினாள். இரவு முழுவதும் வேலாசிக்கு நித்திரையில்லை. அத்தோடு மகிழம்பூ மீதும் வேலாசி சந்தேகம் கொள்ளத் தொடங்கினாள்.

நாகதேவனையும் கையாட்களையும் ஒரு வீட்டிற்குக் கொண்டு சென்ற இளைஞர்கள் கையாட்கள் ஐவரையும் ஓர் அறையிலும், நாகதேவனைத் தனியாக இன்னொரு அறையிலும் வைத்துப் பூட்டினார்கள். ஒரு மணித்தியாலம் கழித்துக் கையாட்கள் இருந்த அறை திறக்கப்பட்டது. சுமாரான உயரமும், கம்பீரமான தோற்றமும், கூர்மையான பார்வையும் கொண்ட ஓர் இளைஞன் அறையினுள் நுழைந்தான். இரு இளைஞர்கள் ஆயுதங்களைத் தாங்கியபடி வாசலின் இருபக்கமும் நின்றனர். எல்லோரும் சீருடையிற் காணப்பட்டனர். அறையினுள் நுழைந்த இளைஞன் ஐவரையும் பார்த்து, "நான்தான் எங்களுடைய இயக்கத்தின் கீழக்கரைப் பிரதேசத்திற்குப் பொறுப்பாளன். உங்களைக் கைதுசெய்து வரும்படி நான்தான் எனது தோழர்களுக்கு உத்தரவிட்டேன். நாகதேவனும் அவனுடைய கையாட்களாகிய நீங்களும் வாலாம்பிகை என்னும் இளம் பெண்ணைக் கடத்திக், கற்பழித்து, சித்திரைவதை செய்து, இறுதியிற் கொலை செய்ததாக உங்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தக் கொலை சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்தினுடைய புலன்விசாரணைகள் முற்றுப்பெற்றுக், கொலையாளியைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்ற இறுதி அறிக்கையுடன் அந்தக் கோவை நிரந்தரமாக மூடப்பட்டுவிட்டது என்பது உண்மைதான். அதன் பிற்பாடு சமூகப் பாதுகாவலர்கள் என்ற முறையில் நாங்கள் இந்தச் கொலை பற்றிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலன்விசாரணைகளை ஆரம்பித்தோம். பல மாதங்களாக நாங்கள் மேற்கொண்ட விடாமுயற்சியால் இந்தக் கொலையின் சூத்திரதாரி நாகதேவன்தான் என்றும், நாகதேவனும் அவனுடைய கையாட்களும் சேர்ந்துதான் இந்தக் கொலையைச் செய்தார்கள் என்றும் சந்தேகமின்றித் தெரியவந்துள்ளது. அதற்கு வேண்டிய முழு ஆதாரங்களையும் பெற்றுக் கொண்ட பிற்பாடே உங்களைக் கைது செய்துள்ளோம். இந்தக் கொலை சம்பந்தமான விசாரணை எங்களுடைய சமூக பாதுகாப்பு நீதிமன்றில் நடைபெறும். இந்தக் கொலை எங்களுடைய நீதிமன்றில் நிரூபிக்கப்படும்போது அதற்குரிய தண்டனை உங்களுக்கு வழங்கப்படும்," என்று கூறிய அந்தப் பொறுப்பாளர் தொடர்ந்து அவர்களுடைய பெயர், விலாசம், தொழில், கைவிரல் அடையாளம், புகைப்படம் என்பவற்றைப் பெற்றுக்கொண்டு, தாங்கள் மறுபடியும் அழைக்கும்போது தங்களுடன் வந்து நீதிமன்ற விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் அவர்களைப் போகும்படி அனுமதித்தான். பொறுப்பாளரின் அனுமதியைத் தொடர்ந்து நான்கு இளைஞர்கள் அவர்களை இங்கு கொண்டு வந்தது போன்று கண்களைக் கறுப்புத் துணிகளாற் கட்டி ஜீப் வண்டியில் ஏற்றிச் சென்று பின்னிரவு மூன்று மணியளவில் நாவற்தோப்புச் சந்தியில் இறக்கிவிட்டனர்.

மறுநாள் இரவு பத்துமணியளவில் நாகதேவன் வைக்கப்பட்டிருந்த அறை திறக்கப்பட்டது. அதே பொறுப்பாளர் தனது கையில் ஒரு குண்டாந்தடியுடன் அறையினுட் கம்பீரமாய் நுழைந்தான். வேறு இரு இளைஞர்கள் ஆயுதம் தாங்கியபடி வாசலின் இருபக்கமும் நின்றனர். அப்பொழுது நாகதேவன் சோர்வடைந்து காணப்பட்டான். அவனுடைய உடல்நிலையைக் கவனித்த பொறுப்பாளர் நாகதேவனைப் பார்த்து, "குடிப்பதற்கு உனக்கு ஏதாவது தேவையா?" என்று கேட்டான். தாகத்தோடிருந்த நாகதேவன் "ஆம்," என்று மட்டும் பதில் சொன்னான். வெளியிற் சென்ற பொறுப்பாளி ஒரு கிளாஸ் குளிர்பானத்துடன் வந்து, "இந்தா, இதைக்குடி" என்று சொல்லிக் கொடுத்தான். குடித்த பிற்பாடு கிளாசைத் திரும்பப் பெற்றுக் கொண்ட பொறுப்பாளர் அதைக் கொண்டு போய் வெளியில் வைத்துவிட்டுத் திரும்பி வந்து, ஏதாவது சொல்லுவதற்கு விரும்புகிறாயா?" என்று நாகதேவனைப் பார்த்துக் கேட்டான். "ஆம்" என்று சொன்ன நாகதேவன் தொடர்ந்து, "ஏன் என்னை அடைத்து வைத்திருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றீர்கள்?'' என்று கேட்டுவிட்டுப் பொறுப்பாளரின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். "நல்ல கேள்வி, நீ காரணத்தை அறியவேண்டியது அவசியம்தான்,'' என்று கூறிய பொறுப்பாளி தொடர்ந்து, "நீ இந்த நாட்டிற் பணம் படைத்த ஒரு முதலாளி, பெரிய செல்வாக்குப் பெற்ற ஒரு பிரமுகர், அத்துடன் அரசியற் செல்வாக்கு ஆட்பலம் எல்லாமே உனக்கு உண்டு. காவற் திணைக்களம் உன்னுடைய சுண்டு விரலிற்குள் ஆடும். நீ நினைத்த எதையும் உன்னாற் செய்ய முடியும். உன்னாற் செய்யமுடியாத காரியமே இந்தப் பிரதேசத்திற் கிடையாது என்பது யாவரும் அறிந்த உண்மை. அதை நானும் ஏற்றுக் கொள்ளுகிறேன்.

உன்னுடைய இந்த அகங்காரத்தினால் ஒன்றும் அறியாத அப்பாவி ஏழைப் பெண்ணான வாலாம்பிகையைக் கடத்தி, கற்பழித்து, சித்திரவதை செய்து, இறுதியிற் கொலை செய்து இறந்த உடலைப் பக்கத்து மாந்தோட்டத் துரவிற்குட் போட்டிருக்கிறாய்,'' என்று சொல்லி முடிப்பதற்குட் குறுக்கிட்ட நாகதேவன், "எனக்கும் அந்தக் கொலைக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது. அந்தப் பிள்ளைக்கு வேலை பெற்றுக் கொடுத்ததே நான்தான். அப்புறம் நான் ஏன் அந்தப் பிள்ளையைக் கொலை செய்ய வேண்டும்?'' என்று ஒன்றும் தெரியாதவன்போற் கதைத்தான். அவனுடைய பொய் வார்த்தைகளைக் கேட்டு பொறுமையிழந்த பொறுப்பாளர் குண்டாந்தடியைக் காட்டிக்கொண்டு கடுமையான தொனியில், "உன்னுடைய கதையை நிறுத்து, உன்னுடைய கதையைக் கேட்க நான் இங்கு வரவில்லை. ஏன் உன்னை அடைத்து வைத்திருக்கிறோம் என்பதைச் சொல்லுவதற்காக மட்டும்தான் நான் இங்கு வந்திருக்கிறேன். நான் சொல்லி முடிக்கும்வரை நீ வாய்திறக்கப்படாது, ஜாக்கிரதை,'' என்று எச்சரித்துவிட்டுத் தொடர்ந்து, "நீ கொலைசெய்தது மட்டுமல்ல உனது செல்வாக்கைப் பயன்படுத்திப் பொலிஸ்காரர்களைக் கொண்டு உனக்குப் பிடிக்காத இளைஞர்களை நையப்புடைத் திருக்கிறாய். விசேடமாக வாலாம்பிகையின் காதலன் முருகனைத் தலைகீழாய்த் தொங்கவிட்டுத் தாக்கிச் சித்திரவதை செய்திருக்கிறாய்.

கொழும்பிலிருந்து வந்த புலன் விசாரணைக்குழுவிற்கு மொழிபெயர்ப்பாளர் என்ற ரீதியிற் பல குழறுபடிகளைச் செய்திருக் கிறாய். வாலாம்பிகையைக் காணவில்லையென்று தேடியவர்களுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனது கையாட்களைக் கொண்டு வதந்திகளைப் பரப்பி அவர்களைக் கீழக்கரை மாவட்டம், கிளிநொச்சிப்பகுதி, யாழ்க்குடாநாடு முழுவதும் அலையவைத்திருக்கிறாய். உனது செல்வாக்கைப் பயன்படுத்திப் புலன்விசாரணை மேற்கொண்ட வர்களைக் கொண்டு குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று அறிக்கை சமர்ப்பிக்கச் செய்துள்ளாய். இவ்வாறு ஏகப்பட்ட குற்றச்சாட்டுகள் உன்மீது சுமத்தப்பட்டுள்ளன. உனது பணபலத் தையும் செல்வாக்கையும் பயன்படுத்தி இலங்கை அரசாங்கத்தின் சட்டத்திற்குள் மாட்டிக் கொள்ளாமற் தப்பிக் கொண்டாய். அது உன்னுடைய கெட்டித்தனமென்று நீ எண்ணுகிறாய். ஆனாற் சமூக பாதுகாவலர் என்ற ரீதியில் நாங்கள் பல மாதங்களாக மேற்கொண்ட தீவிர புலன்விசாரணையின் மூலம் நீதான் கொலையாளி என்று தெரிய வந்துள்ளது. இதனால் உன்னைக் கைதுசெய்து வரும்படி உத்தரவிட்டேன். உன்மீது சுமத்தப்பட்டுள்ள இந்தக் குற்றச் சாட்டுக்கள் சமூக பாதுகாப்பு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும். அங்கு நீ குற்றமற்றவன் என்பதை நிரூபிப்பதற்குப் போதிய சந்தர்ப்பம் உனக்கு வழங்கப்படும். அங்கு நீ குற்றமற்றவன் என்பதற்கான எல்லா உண்மைகளையும் வெளிக்கொணரலாம். நாங்கள் உன்னைச் சந்தேகப்பட்டுவிட்டோம் என்பதற்காக எந்தப் பாகுபாடும் காட்டப்பட மாட்டாது. மிகச் சுதந்திரமாக நீயோ அன்றி உன்னைச் சார்ந்தவர்களோ உண்மையை முன்வைக்கலாம். விசாரணையின்போது உன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் அதற்குரிய தண்டனை எங்களுடைய சட்ட திட்டங்களுக்கமைய வழங்கப்படும். அப்பொழுது நீ மட்டுமல்ல உன்போன்றவர்களும் தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி நீதிதேவதையை விலைகொடுத்து வாங்கமுடியாது என்பதை உணர்வார்கள். குற்றம் இழைத்தவன் எந்த ரூபத்திலாவது தண்டனையை அனுபவித்தே ஆகவேண்டும். இதுதான் இயற்கையின் நியதி. இதற்கு நீ மட்டுமல்ல யாரும் விதிவிலக்காக முடியாது. நீ எதைச்சொல்ல விரும்பினாலும் அவற்றைக் கூறுவதற்கு நீதிமன்றிற் சந்தர்ப்பம் வழங்கப்படும். நிரபராதிகள் எவரையும் நாங்கள், அதாவது எங்கள் நீதிமன்றம், ஒருபோதும் தண்டிக்கமாட்டாது என்பதை மட்டும் என்னால் உறுதியாகக் கூறமுடியும். எனவே நீங்கள் உண்மையான நிரபராதியாய் இருந்தால் நிச்சயமாக நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை,'' என்று கூறி முடித்து விட்டு வெளியே சென்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் 6

**மூ**ன்றாவது நாட் சமூகப் பாதுகாப்பு நீதிமன்றம் கூடியபோது வாலாம்பிகையின் கொலைவழக்கு மட்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நீதிபதி மன்றுக்கு வந்தபொழுது வழக்குத் தொடுநர், புலன்விசாரணைப் பொறுப்பாளர், மகிழம்பூ, நாகதேவனின் கையாட்கள் ஐந்துபேர், வாலாம்பிகையின் காதலன் முருகன், வாலாம்பிகையின் தந்தை, மற்றும் பல சாட்சிகள் நீதிமன்றில் சமூகமளித்திருந்தனர். நீதிமன்றம் கூடிய சில நிமிடங்களால் நாகதேவன் ஆயுதம் தாங்கிய இரு இளைஞர்களால் மன்றிற்குள் அழைத்து வரப்பட்டான். வழக்கு காலை சரியாகப் பத்து மணிக்கு ஆரம்பமாகியது.

நீதிபதி: நீதிமன்றம் தனது கடமையை ஆரம்பிக்கின்றது. எல்லோரும் அமைதியாக இருக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள். (வழக்குத்தொடுநரைப் பார்த்து) வழக்குத் தொடுநர் அவர்களே, நாகதேவன் மீதான குற்றப் பத்திரிகையை வாசிக்கவும்.

வழக்குத்தொடுநர்: கனம் நீதிபதி அவர்களே! நாகதேவன் மீது எட்டுக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன. அவற்றில் முதலாவது வாலாம்பிகை என்னும் இளம் பெண்ணைக் கடத்தி, கற்பழித்து, சித்திரவதை செய்து, இறுதியிற் கொலை செய்துள்ளார். இரண்டாவது நாகதேவன் தனது செல்வாக்கைப் பயன்படுத்திக் காவற்துறையினரைக் கொண்டு தனக்குப் பிடிக்காத அப்பகுதி இளைஞர்களைத் தாக்கிச் சித்திரவதை செய்துள்ளார். மூன்றாவது வாலாம்பிகையின் காதலன் முருகனைப் பொலிசாரைக் கொண்டு தலைகீழாய்த் தொங்கவிட்டுக் கடுமையாகத் தாக்கி சித்திரவதை செய்துள்ளார். நான்காவது வாலாம்பிகையைக் காணவில்லை என்று தேடியவர்களின் மத்தியிற் தனது கையாட்களைக் கொண்டு வதந்திகளைப் பரப்பி அவர்களைக் கீழக்கரை மாவட்டம், யாழ்க்குடாநாடு முழுவதும் அலையச் செய்துள்ளார். ஐந்தாவது கொழும்பிலிருந்து வந்த புலன்விசாரணைக் குழுவிற்கு மொழிபெயர்ப்பாளராகச் செயற்பட்டு உண்மைகளைத் திரித்துக் கூறிப் பல குழறுபடிகளைச் செய்துள்ளார். ஆறாவது தனது செல்வாக்கைப் பயன்படுத்திப் புலன்விசாரணைக்குழுவைக் கொண்டு கொலையாளியைக் கண்டுபிடிக்க முடியவில்லையென்று அறிக்கை சமர்ப்பித்துள்ளார். ஏழாவது தனது செல்வாக்கைப் பயன்படுத்தி கீழக்கரை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரைக் கொண்டு கொலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தமான விசாரணைக் கோவையை நிரந்தரமாக மூடியுள்ளார். எட்டாவது அவருடைய வங்களாவில் வேலைக்கு நின்ற மகிழம்பூ என்னும் இளம்பெண்ணைப் பாலியல் பாலாத்காரத்துக்கு உட்படுத்தியுள்ளார். மேற்கூறப்பட்ட எட்டுக் குற்றங்களையும் நாகதேவன் புரிந்துள்ளார் நீதிபதி அவர்களே.

நீதிபதி: (நாகதேவனைப் பார்த்து) உம்மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்களை வழக்குத் தொடுநர் வாசித்தபொழுது அவற்றை நன்கு கிரகித்துக் கொண்டீரா?

நாகதேவன்: ஆம், கிரகித்துக் கொண்டேன்.

நீதிபதி: நீர் குற்வாளியா? அல்லது சுற்றவாளியா?

நாகதேவன்: நான் சுற்றவாளி. இங்கு என்மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றங்களுக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது. அவை யாவும் அபாண்டமான பொய். வேண்டுமென்றே திட்டமிட்டு இக்குற்றங்களை என்மீது சுமத்தியுள்ளனர்.

நீதிபதி: உம்மீது வேண்டுமென்று ஏன் இந்தக் குற்றங்களைச் சுமத்த வேண்டும்? அதற்கான அவசியம் என்ன?

நாகதேவன்: (பணிவற்ற முறையில்) அதை அவர்களிடம்தான் கேட்கவேண்டும். சிலவேளை என்மீது கொண்ட பொறாமை காரணமாய் இருக்கலாம்.

நீதிபதி: புலன்விசாரணைப் பொறுப்பாளரை விசாரணைக்கு அழைக்கிறேன். (புலன்விசாரணைப் பொறுப்பாளர் ரங்கன் கூண்டில ஏறிக்கொண்டார்)

நீதிபதி: (புலன்விசாரணைப் பொறுப்பாளர் ரங்கனைப் பார்த்து) நாகதேவன்தான் இந்தக் கொலையைச் செய்தான் என்பதற்கு உங்களிடம் என்ன ஆதாரங்கள் இருக்கின்றன என்று இந்த நீதிமன்றிற்குத் தெரியப்படுத்தவும்.

பொறுப்பாளர் ரங்கன்: கனம் நீதிபதி அவர்களே! எங்கள் புலன்விசாரணைப் பிரிவைச் சேர்ந்த வேணி என்னும் இளம்பெண்ணை நாகதேவனுடைய வங்களாவில் வேலைக்கு அமர்த்தி வேலைக்காரியாக நடிக்கச் செய்தோம். அவள் இரண்டு மாதம் மகிழம்பூ என்னும் பெயருடன் அங்கு வேலை செய்து வந்தாள். நாகதேவன் காமவெறி பிடித்த ஒரு கொடூரமானவன் என்பதையும், அவனுக்கு இளம்பெண்களுடன் பாலியல் உறவு வைத்துக்கொள்வதில் அலாதிப் பிரியம் என்பதையும் அந்தச் சமூகத்தில் உள்ளவர்கள் மூலம் ஏற்கனவே அறிந்திருந்தோம். இதனால் மகிழம்பூவைக் கொண்டு முக்கிய உண்மைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும் என்ற எதிர்பார்க்கையுடன் அவளை நாகதேவன் வங்களாவிற்கு வேலைக்காரி ரூபத்தில் அனுப்பி வைத்தோம். நாங்கள் எதிர்பார்த்ததுபோல் எங்களுடைய முயற்சிக்கு வெற்றி கிட்டியது.

ஒருநாள் இரவு நாகதேவன் மதுபோதையில் மகிழம்பூ உறங்கிக் கொண்டிருந்த அறையினுள் சென்று பாலியல் பாலாத்காரம் புரிந்து தனது சிற்றின்ப இச்சையைத் தீர்த்துக் கொண்டான். அவளுடன் இருந்தபொழுது ஏற்பட்ட இன்பக் களிப்பினாலும் மகிழம்பூ மீது கொண்ட அதீத நம்பிக்கையினாலும் அத்தருணத்தில் வாலாம்பிகையின் கொலை சம்பந்தமான சில முக்கிய உண்மைகளை உளறிவிட்டான். இவனுடைய வாயிலிருந்து இக்கொலை சம்பந்தமாக ஏதாவது உண்மைகள் வருமென்று ஆர்வத்தோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த மகிழம்பூ இவன் கூறியவைகளைத் தன்னுடன் தயார் நிலையில் வைத்திருந்த ரேப்றெக்கோடரில் பதிவுசெய்து கொண்டாள். அன்றிரவே எங்களுக்கு இந்த உண்மையைத் தெரியப்படுத்தினாள். அன்று காலை மகிழம்பூவினுடைய பெற்றோராக நடித்த எங்களுடைய இரு உளவாளிகள் அங்கு சென்று, மகிழம்பூவினுடைய தங்கை பெரியபிள்ளையாகி விட்டதாயும், அதற்கான கொண்டாட்டத்தில் மகிழம்பூ கலந்துகொள்ள வேண்டும் என்று கூறி அவளை அழைத்து வந்துவிட்டனர். ரேப்றெக்கோடரில் பதியப்பட்டிருந்த உண்மையைக் கேட்டபிற்பாடு நாகதேவனைக் கைதுசெய்து வரும்படி இராணுவப் பிரிவிற்கு உத்தரவிட்டேன்.

நீதிபதி: (நாகதேவனைப் பார்த்து) புலன் விசாரணைப் பொறுப்பாளர் ரங்கன் இங்கு கூறிய செய்திகள் பற்றி நீர் ஏதாவது கூறவிரும்புகின்றீரா?

நாகதேவன்: ஆம், புலன் விசாரணைப் பொறுப்பாளர் ரங்கன் கூறியவற்றில் எந்தவித உண்மையும் இல்லை. யாவும் புனைகதை. நான் ஒருபோதும் அப்படி நடந்து கொள்ளவில்லை.

நீதிபதி: உம்முடைய வங்களாவில் மகிழம்பூ என்ற ஓர் இளம்பெண் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தாளா?

நாகதேவன்: அப்படி ஒரு பெண்ணை எனக்குத் தெரியவே தெரியாது.

நீதிபதி: உம்முடைய வங்களாவில் வேறு யாரேனும் பெண்கள் வேலை செய்கின்றனரா?

நாகதேவன்: ஆம், வேலாசி என்னும் ஒரு பெண் இருபது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்களுக்கு மேலாக எனது வங்களாவில் வேலை செய்து வருகின்றாள். தற்பொழுதும் வேலை செய்கிறாள்.

நீதிபதி: (வழக்குத் தொடுநரைப் பார்த்து) மகிழம்பூ என்று அழைக்கப்படும் உளவாளி வேணியை விசாரணை செய்ய விரும்புகிறேன்.

(வேணி விசாரணைக் கூண்டில் ஏறிக் கொண்டாள்.)

நீதிபதி: (வேணியைப் பார்த்து) நீங்கள் நாகதேவனின் வங்களாவில் மகிழம்பூ என்னும் பெயருடன் இரண்டு மாதம் வேலைக்காரியாக வேலை செய்தீர்களா?

வேணி: ஆம் நீதிபதி அவர்களே! இரண்டு மாதங்கள் வேலைக் காரியாக வேலை பார்த்தேன்.

நீதிபதி: உம்மோடு வேறு பெண்கள் யாரேனும் அங்கு வேலை செய்தார்களா?

வேணி: ஆம் நீதிபதி அவர்களே! வேலாசி என்னும் பெயருடைய நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒரு பெண் வேலை பார்த்தாள்.

நீதிபதி: நீர் அங்கு வேலை செய்த காலத்தில் வாலாம்பிகையின் கொலையைப்பற்றி வேலாசி ஏதாவது உங்களுக்குச் சொல்லியிருக்கிறாளா?

வேணி: ஆம் நீதிபதி அவர்களே! இந்தக் கொலையைப் பற்றி பொலிஸ் எங்களுடைய முதலாளிமீதும் சந்தேகம் கொண்டுள்ளது. ஆனபடியால் இந்தக் கொலையைப்பற்றி யாரேனும் கேள்வி கேட்டால் அவர்களுக்குப் பதில் சொல்லப்படாது. இந்த விடையத்தில் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும் என்று மட்டும் சொல்லியிருக்கிறாள்.

நீதிபதி: நீர் நாகதேவனின் வங்களாவில் வேலை செய்த காலத்தில் நாகதேவன் உம்மோடு எப்படி நடந்து கொண்டான்?

வேணி: என்னை அவன் முழுமையாக நம்பிவிட்டபடியினால் சமையல், சாப்பாடு, அதற்கான பொருட்களை வாங்குதல் போன்ற எல்லா அலுவல்களையும் என்னுடைய பொறுப்பிலேயே விட்டிருந்தான். போகும்போதும் வரும்போதும் இடையிடையே பாலியல் சேட்டைகள் புரிவான். பணம் சம்பளத்திற்கு மேலால் தருவான். ஒருநாள் இரவு மதுபோதையில் என்னுடைய அறையினுள் நுழைந்து என்னைப் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தித் தனது சிற்றின்ப இச்சையைத் தீர்த்துக்கொண்டான். அப்பொழுது அவருக்குக் கிடைத்த மட்டற்ற மகிழ்ச்சியினால் வாலாம்பிகையின் கொலையைப் பற்றிய முக்கிய சில வார்த்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை உழறிவிட்டான். அவற்றை நான் ரேப்றெக்கோடரில் பதிவு செய்துகொண்டேன். அன்றிரவே இந்த விடையத்தை புலன் விசாரணைப் பொறுப்பாளர் ரங்கனுக்கு தெரியப்படுத்தினேன். மறுநாட் காலை எனது பெற்றோராய் நடித்த உளவாளிகள் வந்து எனது தங்கைக்கு சாமத்தியச் சடங்கு என்று சொல்லி என்னைக் கூட்டிச் சென்றனர். அப்பொழுது நாகதேவன் செலவிற்கென்று சொல்லிப் பத்தாயிரம் ரூபாய் எனக்குக் கொடுத்தார். அத்துடன் மறுநாளே திரும்ப வந்துவிட வேண்டுமென்று கட்டளையிட்டிருந்தான்.

நீதிபதி: (நாகதேவனைப் பார்த்து) இந்த இளம் பெண்ணை நீர் பார்த்திருக்கின்றீரா? இவர் உம்முடைய வங்களாவில் வேலை செய்தவரா?

நாகதேவன்: நான் இந்தப் பெண்ணைப் பார்த்ததும் இல்லை, இப்பெண் என்னுடைய வங்களாவில் வேலை செய்யவும் இல்லை. இவள் இங்கு கூறியவை யாவும் படுபொய்.

வேணி: (சற்று உணர்ச்சிவசப்பட்ட நிலையில்) நீதிபதி அவர்களே! நாகதேவன் பச்சைப் பொய் சொல்லுகிறான். அவன் கூறுவதை நம்பவேண்டாம் ஐயா.

நீதிபதி: (வேணியைப் பார்த்து) நீர் அங்கு வேலை செய்ததிற்கு உங்களுடைய உளவாளிகளைத் தவிர வேறு சாட்சிகள் உண்டா?

வேணி: ஆம் நீதிபதி அவர்களே! என்னுடன் வங்களாவில் வேலை செய்த வேலாசியை விசாரணை செய்தால் உண்மையை அறிய முடியும்.

நீதிபதி: வேலாசியை விசாரணை செய்ய விரும்புகிறேன். (வேலாசி விசாரணைக் கூண்டில் ஏறிக் கொண்டாள்)

நீதிபதி: (வேலாசியைப் பார்த்து) உங்களுடைய பெயர் என்ன?

வேலாசி: என்னுடைய பெயர் வேலாசி.

நீதிபதி: எவ்வளவு காலமாய் நாகதேவனின் வங்களாவில் வேலை பார்த்து வருகிறாய்?

வேலாசி: இருபது வருடங்களுக்கு மேலாக நான் அங்கு வேலை செய்து வருகிறேன்.

நீதிபதி: நீண்டகாலமாய் அவருடன் வேலை செய்து கொண்டிருக்கின்றபடியினால் அவரைப் பற்றி நீர் நன்றாக அறிந்திருப்பீர். அவர் உங்களுடன் எவ்வாறு நடந்து கொண்டார் என்பதைப் பற்றிச் சொல்லமுடியுமா?

வேலாசி: என்னுடைய இளமைக்காலத்தில் என்னுடன் பாலியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியாக உறவு வைத்திருந்தார். என்னுடைய இளமையும் கவர்ச்சியும் சரியத் தொடங்கியதும் படிப்படியாக அந்த உறவை நிறுத்திக் கொண்டார். அவர் இளம் பெண்களை நாடித் திரிபவர் என்பதில் உண்மையிருக்கின்றது. இடையிடையே இவருடைய கையாட்கள் இளம் பெண்களை வங்களாவிற்கு அழைத்து வருவார்கள். சாப்பாடு, சம்பளம், உடுபுடவை எல்லாம் நல்லபடியாய்க் கொடுத்தார். அவற்றில் எந்தக் குறையுமில்லை

நீதிபதி: உங்களுடைய இளமைப்பருவத்தில் உங்களுடன் பாலியல் ரீதியாக உறவு வைத்திருந்தார் என்று கூறினீர்கள். உங்களுடைய பூரண சம்மதத்துடன் அந்தவகையான உறவை வைத்திருந்தாரா? அல்லது உங்களுடைய சம்மதம் இல்லாமல் வைத்திருந்தாரா?

வேலாசி: நீதிபதி அவர்களே! அவரைப் பகைத்துக் கொண்டால் உள்ளுக்கும் வாழமுடியாது வெளியிலும் வாழமுடியாது. அப்படிப்பட்ட நிலையில் வேலைக்காரியான நான் என்ன சார் பண்ண முடியும்! இதிலிருந்து என்னத்தைச் சொல்ல விளைகிறேன் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளுவீர்கள் என்று நம்புகிறேன் நீதிபதி அவர்களே.

நீதிபதி: புரிகின்றது, என்னத்தைக் கருதிச் சொல்லுகிறீர் என்பது எனக்கு நன்றாகவே புரிகின்றது. மகிழம்பூ என்னும் இளம் பெண் நாகதேவனின் வங்களாவில் உங்களுடன் வேலை செய்தாளா? அப்படியாயின், எவ்வளவு காலம் வேலை செய்தாள்?

வேலாசி: ஆம் நீதிபதி அவர்களே. இரண்டுமாதம் மகிழம்பூ என்னுடன் அங்கு வேலை செய்தாள். மகிழம்பூ வேலைக்குச் சேர்ந்து சில நாட்களிலேயே நாகதேவன் அவள்மீது அதிக நம்பிக்கை வைத்து என்னுடைய பொறுப்பிலிருந்த வேலைகளை அவளிடம் கொடுத்து என்னை அவளின்கீழ் வேலை செய்யும்படி பணித்திருந்தார்.

நீதிபதி: வாலாம்பிகையின் கொலை சம்பந்தமாக ஏதாவது அறிந்துள்ளீரா?

வேலாசி: நாகதேவன்தான் இந்தக் கொலையைச் செய்திருக்க வேண்டுமென்று அந்தச் சமூகத்திலுள்ள மக்கள் பேசிக்கொண்டதைக் கேட்டிருக்கிறேன். அதற்குமேல் எனக்கு ஒன்றும் தெரியாது நீதிபதி அவர்களே.

நீதிபதி: (நாகதேவனைப் பார்த்து) வேலாசி இங்கு கூறியதைப் பற்றி நீர் என்ன கருதுகிறீர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகதேவன்: வேலாசி சொன்னவை யாவும் உண்மைக்குப் புறம்பானவை. இந்த இளைஞர் கூட்டம் இவ்வாறு சொல்லும்படி அவளுக்குப் பயிற்சி கொடுத்து நிற்பந்தித்திருக்கிறார்கள். ஆதலினாற்தான் அவள் உண்மைக்குப் புறம்பாகக் கூறியுள்ளாள்.
நீதிபதி: இருபது வருடங்களாக உங்களுக்காக உழைத்தவள் இத்தருணத்தில் ஏன் பொய் சொல்லவேண்டும்?
நாகதேவன்: பயத்தின் காரணமாகத்தான் உண்மைக்குப் புறம்பாய் சொல்லிக் கொடுத்ததை அப்படியே இங்கு கூறியுள்ளாள்.
நீதிபதி: அப்படியானால் மகிழம்பூ என்னும் இளம்பெண் உங்களுடைய வங்களாவில் வேலை பார்க்கவில்லை என்று உறுதியாகக் கூறுகின்றீர்கள், அப்படித்தானே?
நாகதேவன்: ஆம், அப்படித்தான். மகிழம்பூ என்ற இளம்பெண் என்னுடைய வங்களாவில் வேலை செய்யவில்லை, வேலை செய்யவில்லை, வேலை செய்யவில்லை.
நீதிபதி: (புலன்விசாரணைப் பொறுப்பாளர் ரங்கனைப் பார்த்து) ரங்கன், மகிழம்பூ என்று அழைக்கப்படும் வேணி நாகதேவனுடைய சில கூற்றுக்களை ரேப்றெக்கோடிங் மூலம் பதிவு செய்துள்ளதாய்க் கூறினீர்கள். அவற்றைக் கேட்பதற்கு நான் விரும்புகிறேன்.
ரங்கன்: இதுதான் ஐயா அந்த ரேப் (என்று கூறிக் கொண்டு நீதிபதியிடம் கொடுத்தார்)
ரேப் ஓடத்தொடங்கியது. பின்வரும் கூற்றுக்கள் அதிலிருந்து வந்தன. "அவள் இப்படி நடந்திருந்தால் ஏன் அவளைக் கொலை செய்யப்போறன். யாரைப்பற்றி ஐயா சொல்லுகிறீங்கள்? அவள்தான் அந்த உதவிச்செயலாளர். அவள் எனக்கு இப்படி உதவுவாள் என்று வேலை பெற்றுக் கொடுத்தேன். அவள் எனக்குச் செருப்பைத் தூக்கிக் காட்டுகிறாள். நாகதேவன் யாரென்று அவளுக்குத் தெரியவில்லை, கதையை முடிச்சுவிட்டேன். நீ தங்கமான பெண், என்னைப் புரிந்து நடக்கிறாய். நாளையிலிருந்து நீதான் இந்த வங்களாவிற்கு இராணி, சரியா? ஓம் ஐயா!"
நீதிபதி: (நாகதேவனைப் பார்த்து) இந்த ரேப்பில் கதைப்பது நீரும் மகிழம்பூ, என்றழைக்கப்படும் வேணியும்தானே? இதில் பதியப்பட்டிருப்பது உங்கள் இருவருடைய குரல்கள் தானே?
நாகதேவன்: அது... வந்து.... என்னுடைய குரல் போன்றுதான் இருக்கின்றது. ஆனால் என்னுடைய குரல் இல்லை.
நீதிபதி: இது உம்முடைய குரல் இல்லையென்றால், எப்படி இந்த ரேப்பிற்கு வந்தது?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகதேவன்: அது.... வந்து.... வேறு யாரோ என்னுடைய குரலில் பேசிப் பதிந்துள்ளார்கள். நான் இப்படி ஒருபோதும் எந்தச் சந்தர்ப்பத்திலும் பேசவில்லை. இது என்னுடைய கூற்று இல்லையென்று உறுதியாகக் கூறுகின்றேன்.

நீதிபதி: (பொறுப்பாளர் ரங்கனைப் பார்த்து) வேணியிடம் சில கேள்விகள் கேட்பதற்கு விரும்புகிறேன்.

(வேணி கூண்டில் ஏறிக்கொண்டாள்.)

நீதிபதி: எந்தச் சந்தர்ப்பத்தில் நாகதேவன் இப்படி உம்முடன் பேசினான்?

வேணி: நாகதேவன் என்னிடம் பாலியற் பாலாத்காரம் புரிந்து தனது காமப்பசியைத் தீர்த்துக் கொண்ட பிற்பாடு அவர் மிகவும் மகிழ்ச்சியாகக் காணப்பட்டார். என்னை அப்பொழுது அணைத்துக் கொண்டு இந்தக் கூற்றுக்களைக் கூறினார். இதில் வரும் குரல்கள் என்னுடையதும் நாகதேவனுடையதும்தான். இதில் எந்த சந்தேகமும் இல்லை நீதிபதி அவர்களே.

நீதிபதி: அப்புறம் என்ன நடந்தது?

வேணி: அப்புறம் அரைமணித்தியாலம் கழித்து நாகதேவன் வெளியிற் சென்றுவிட்டான். அதைத் தொடர்ந்து நான் உளவுப்பிரிவுப் பொறுப்பாளர் ரங்கனுக்குக் கையடக்கத் தொலைபேசி மூலம் விடையத்தைத் தெரியப்படுத்தினேன். காலையில் எனது அம்மா அப்பாவாக நடித்த இரு உளவாளிகள் வந்து எனது தங்கையின் சாமத்தியச் சடங்கிற் பங்குபற்ற வேண்டுமென்று கூறி என்னை அழைத்துச் சென்றுவிட்டார்கள். நான் புறப்படுவதற்கு முன் நாகதேவன் ரூபாய் பத்தாயிரம் என்னிடம் கொடுத்தார். இதுதான் அந்தப் பணம் (என்று கூறிப் பணக்கட்டை நீதிபதியிடம் கொடுத்தாள்)

நீதிபதி: நாகதேவனின் வாயால் உண்மையை வரவழைப்பதற்கு நீங்கள் மேற்கொண்ட முயற்சியில் உங்களுக்கு ஏற்பட்ட அனுபவம் எந்தவொரு தமிழ்ப் பெண்ணுக்கும் ஏற்புடைத்தல்ல, ஏற்படவும் கூடாது. இருந்தபோதும் சந்தர்ப்பம் சூழ்நிலையால் நிகழ்ந்துவிட்டது. இதனால் உங்களுடைய உள்ளம் எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றது? எதற்காக இந்தக் கேள்வியைக் கேட்கிறேன் என்றால், அப்படிப் பாதிக்கப்பட் டிருந்தால் அதற்குரிய பரிகாரம் ஏதாவது உண்டா என்பதைக் கண்டறிவதற்காகத்தான். நான் என்னத்தைக் கருதுகிறேன் என்று நீங்கள் புரிந்துகொள்ளுவீர்கள் என்று நம்புகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேணி: நீதிபதி அவர்களே, நீங்கள் கருதுவது எனக்கு நன்றாகவே புரிகின்றது. இதற்குரிய பதிலை ஓரிரண்டு வசனங்களில் என்னால் சொல்ல முடியாது. சிறிது நீண்ட விளக்கம் கொடுக்க வேண்டும். அதற்கு உங்களுடைய அனுமதியை வேண்டிநிற்கிறேன் நீதிபதி அவர்களே.

நீதிபதி: பிரச்சினை இல்லை, வேண்டிய நேரத்தை நீங்கள் எடுத்துக் கொள்ளலாம்.

வேணி: நன்றி நீதிபதி அவர்களே, நாகதேவன்தான் இந்தக் கொலையைச் செய்திருக்க வேண்டுமென்று எமது இளைஞர்கள் வலுத்த சந்தேகம் கொண்டபொழுது, இந்த உண்மையை எப்படி வெளிக்கொணரலாம் என்று அவர்கள் கலந்தாலோசிக்கத் தொடங்கினர். அந்த வேளையில் இந்த யோசனையை அதாவது நான் வேலையாளாக நடிக்கப்போகும் யோசனையை முன்வைத்தது நான்தான். இதற்குச் சில காரணங்கள் உண்டு.

நானும் தாமரைக்குளம் கிராமத்தைச் சேர்ந்தவள். எனக்கு நாகதேவனைப் பற்றி ஏற்கனவே நன்கு தெரியும். இவன் ஒரு காமவெறியன் என்பது எனக்கு மட்டுமல்ல இந்தக் கிராமத்திலுள்ள அநேகருக்குத் தெரியும். இவன் இந்தக் கிராமத்திற் செய்த நிரூபிக்கப்படாத காமவெறியாட்டங்கள் பற்றியும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். எனினும் இதற்கு முன் இவனது காமவெறியாட்டம் எதுவும் யாரையும் கொலை செய்யும் அளவிற்குச் செல்லவில்லை. ஆனால் வாலாம்பிகை விடயத்தில் இவனின் காமவெறியாட்டம் எல்லைமீறிக் கொலை செய்யும் அளவிற்குச் சென்றுவிட்டது.

தனது காமவெறிக்கு உடன்படாத வாலாம்பிகையைக் கடத்தி, கற்பழித்து, சித்திரைவதை செய்து இறுதியிற் கொடூரமாகக் கொலை செய்துள்ளான். இதைத் தெரிந்து கொண்டதும் என்னாற் தாங்க முடியவில்லை. இனிமேலும் இவனை விட்டுவைத்தால் அப்பாவி மக்கள் வாழும் இந்தக் கிராமத்தில் எந்தப் பெண்ணும் கற்புடனும் நிம்மதியுடனும் வாழமுடியாது என்ற முடிவிற்கு வந்தேன். இந்தக் கிராமத்து மக்கள் ஒன்றும் அறியாத, பயந்த சுபாவமுடைய, கல்வியறிவு குறைந்த அப்பாவி மக்கள். இதுதான் நாகதேவனுக்கும் அவனுடைய அடியாட்களுக்கும் வாய்ப்பாக அமைந்தது. இந்தச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்நிலையில் இந்தக் கொலையின் சூத்திரதாரியையும் அதற்கு உடந்தையாக இருந்தவர்களையும் கண்டறிந்து உரிய தண்டனை வழங்காவிட்டால், எதிர்காலத்தில் நாகதேவனுடைய காமவெறியாட்டத்திற்கு மட்டுமல்ல அவனுடைய அடியாட்களின் காமப் பசிக்கும் இந்தக்கிராம அப்பாவிப் பெண்கள் இரையாக வேண்டி ஏற்படும் என்பது மறுக்க முடியாத உண்மை. இதை இதுவரை நிகழ்ந்தேறிய சில கசப்பான நிகழ்வுகளிலிருந்து உறுதிப்படுத்திக் கொண்டேன். இதனால் என்னை அழித்தாவது இதற்கு முடிவு கட்ட வேண்டுமென்று உறுதி பூண்டு கொண்டேன். இதன் பிரதிபலிப்புத்தான் எனது நடிப்பு. அதில் நான் ஏற்றுக்கொண்ட பாத்திரம்தான் மகிழம்பூ.

நாகதேவனின் வங்களாவிற்கு நான் மகிழம்பூவாகச் சென்றபொழுது, உயிருடன் திரும்பி வருவேன் என்று நான் நம்பியிருக்கவில்லை. இருந்தபோதும், நான் உயிருடன் திரும்பி வந்து இன்று உங்கள்முன் பேசிக்கொண்டிருக்கிறேன் என்றால் இதற்குக் காரணம் யார் செய்த புண்ணியமோ தெரியவில்லை. நான் நாகதேவனின் வங்களாவிற்கு வேலைக்காரியாகச் சென்ற சமயம் எனது உயிரைத் துச்சமாக எண்ணியே சென்றேன். வேறு வார்த்தையிற் சொன்னால் என்னுடைய உயிர் எந்த நேரத்திலும் நாகதேவனாற் பறிக்கப்படலாம் என்ற எண்ணம் எனது மனதிற் பதிந்து கிடந்தது. அதைப்பற்றி நான் சிறிதுகூடக் கவலைப்படவில்லை. அப்பொழுது எனக்கு வேண்டப்பட்டதெல்லாம் எனது உயிரல்ல, எனது கிராமப் பெண்களின் பாதுகாப்புத்தான். எனது கிராமத்துப் பெண்கள், விசேடமாக இளம்பெண்கள் பாதுகாப்பாக, நின்மதியாக வாழவேண்டும் என்பதுதான் எனது ஒரே இலட்சியமாக இருந்தது. எனது மரணத்தின் மூலம் எனது கிராமத்துப் பெண்கள் விடுதலை பெற்றார்கள், நிம்மதி அடைந்தார்கள், அவர்களுக்குப் பாதுகாப்புக் கிடைத்தது என்று அறிந்தால் எனது ஆத்மா நிச்சயம் சாந்தியடையும் என்ற எண்ணத்துடன்தான் எனது மரணத்தையும் பொருட்படுத்தாமல் இந்தத் துப்பறியும் முயற்சிக்கு முன்வந்தேன்.

எம் ஒவ்வொருவரிடமும் ஓர் உயிர் தானுண்டு. அது ஒரு தடவைதான் போகப்போகின்றது. அது ஓர் உன்னதமான காரியத்திற்காகப் போனால் அது பாராட்டுக்குரியது, போற்றத்தக்கது. நான் செய்யப்போன விடயத்தில் இறைவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பக்கம், நீதிநியாயம் என்பக்கம், தர்மம் என்பக்கம் இருந்தன. அதனால் எனக்கு வெற்றி கிடைத்தது. இதுதான் வெற்றியின் இரகசியம். இயற்கையின் நியதியும்கூட.

அந்தத் துர்ப்பாக்கிய நிகழ்வு நடந்தபொழுது நான் நானாக இருக்கவில்லை. அந்த வேளையில் ஒவ்வொரு நிமிடமும் நான் நெருப்பாற்றைக் கடந்துகொண்டிருந்த உணர்வில் மூழ்கியிருந்தேன். என்னை முற்று முழுவதாய்க் கலியுகக் கடவுள் கண்ணபிரானிடம் ஒப்படைத்திருந்தேன்.

நான் நானாக இருக்கவில்லை. கண்ணா என்னைக் காப்பாற்றடா என்று வேண்டினேன். திரும்பத்திரும்ப வேண்டினேன். நடந்தது எதுவுமே எனக்குத் தெரியாது. அதனால் எனது மனம் எந்தவகையிலும் பாதிக்கப்படவில்லை நீதிபதி அவர்களே.

இங்குள்ள சிலர் நினைக்கலாம் உண்மையை வரவழைக்க வேறு ஏதும் வழியினைப் பின்பற்றியிருக்கலாமே என்று. இது நான் விரும்பிப் பின்பற்றிய வழியல்ல. நாகதேவன் ஒரு கொடூர நச்சுப்பாம்பு. தெரிந்து தெரியாமல் அல்லது தற்செயலாக தட்டினால் முட்டினால், தொட்டாற் சுரண்டினால் உடனே கொத்திவிடும். இவன் சாதாரண நாகபாம்பல்ல. நாகபாம்புகளில் மிகக் கொடிய நஞ்சைக் கொண்ட கார்க்கோடகன். கார்க்கோடகனுடைய பல்லுப்படத் தேவையில்லை, அதன் மூச்சுப்பட்டாலே போதும், மறுகணமே மரணம்தான். இப்படிப்பட்ட கார்க்கோடகனுடைய புற்றுக்குள் நின்றுகொண்டு எப்படி நான் நினைத்த அல்லது நீங்கள் நினைக்கும் வழிகளைப் பின்பற்ற முடியும்? ஆடினால் அசைந்தால் கொத்திப்போடுவான். அப்படி ஏதும் நடந்திருந்தால் எனது இலட்சியம் கோட்டை விடப்பட்டிருக்கும். அந்த வேளையில் எனது உயிரைவிட எனது இலக்குத்தான் முக்கியமாய் இருந்தது.

ஆனபடியால் இந்த நீதிமன்றத்தில் நின்றுகொண்டு எனது அன்பிற்குரிய மக்களாகிய உங்களைப் பார்த்துக் கேட்பதென்னவென்றால், எனக்கு ஏற்பட்ட அனுபவத்தையிட்டு யாரும் அதிகம் அலட்டிக்கொள்ள வேண்டாம். நாகதேவனின் வாயிலிருந்து உண்மையைக் கொணர்ந்த செயலை ஒரு சாதனையாகவே நான் கருதுகிறேன். சாதனை புரிய வேண்டுமாயிருந்தாற் சோதனைகளையும் வேதனைகளையும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன்? அவமானத்தைக்கூடத் தாங்கித்தான் ஆகவேண்டும். எனக்கு ஏற்பட்ட அனுபவத்தை நல்ல மனத்தோடு பார்த்தால் அது தப்பாகப்படாது. கெட்ட மனத்தோடு பார்த்தால் அது தப்பாகப்படும். நிலைமையைப் புரிந்துகொண்டு நல்ல மனத்தோடு பார்த்து உங்கள் மனங்களை ஆரோக்கியமாய் வைத்துக் கொள்ளும்படி வேண்டுகிறேன்.

நீதிபதி அவர்களே, சிறிது உணர்ச்சிவசப்பட்டுப் பேசி விட்டேன் என்று நினைக்கிறேன். வேண்டுமென்று நான் அப்படி நடந்து கொள்ளவில்லை. இவையாவும் உண்மையின், தர்மத்தின் வெளிப்பாடு. எல்லாவற்றையும் உள்வாங்கித் தீர்ப்பளிக்கும்படி பணிவுடன் வேண்டுகிறேன்.

நீதிபதி: உங்களுடைய இந்த நீண்ட உரையை ஓர் உரை யென்று சொல்ல முடியாது. உங்களுடைய உணர்வை, சூழ்நிலையின் தேவையை, அதன் அவசியத்தை, மனச்சாட்சியின் குமுறலை, நீதியின் தீர்ப்பை, மானிடதர்மத்தின் அறைகூவலை வெளிப்படுத்திய வேண்டுகோளாகவே கருதுகிறேன். இதை நான் மட்டுமல்ல அனைவரும், எதிரிகள் உட்பட, கேட்டிருப்பினம். அதற்குரிய பிரதிபலன் நிச்சயமாய்க் கிடைக்கும். தர்மம் ஒருபோதும் சந்தையில் விலைபோவதில்லை. ஆனபடியினாற் தான் இன்றுவரை உலகம் அழிந்து போகாமல் இருக்கின்றது, நீங்கள் போகலாம்.

நீதிபதி: (பொறுப்பாளர் ரங்கனைப் பார்த்து) இந்தக் கொலை சம்பந்தமாக வேறு சாட்சிகள் உண்டா?

ரங்கன்: ஆம் நீதிபதி அவர்களே, கொலை செய்யப்பட்ட வாலாம்பிகையின் நண்பி சாந்தமதியின் சாட்சியம் இந்த வழக்கிற்கு மிகவும் முக்கியமாகக் காணப்படுகின்றது. அவரை விசாரிக்க வேண்டும் ஐயா.

நீதிபதி: சாந்தமதியை விசாரிக்க விரும்புகிறேன்.

(சாந்தமதி வந்து கூண்டில் ஏறிக்கொண்டாள்)

நீதிபதி: உங்களுடைய பெயர் என்ன?

சாந்தமதி: என்னுடைய பெயர் சாந்தமதி

நீதிபதி: கொலை செய்யப்பட்ட வாலாம்பிகையை எவ்வளவு காலமாக உமக்குத் தெரியும்?

சாந்தமதி: நாங்கள் இருவரும் ஆறாம் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்புவரை ஒன்றாகவே படித்தோம். அவவினுடைய உற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பியும்கூட.

நீதிபதி: இந்தக் கொலை சம்பந்மாய் நீங்கள் என்ன கூறுவதற்கு விரும்புகின்றீர்கள்?

சாந்தமதி: வாலாம்பிகைக்கு உதவிச் செயலலளர் பதவி கிடைத்த பிற்பாடு அவர் கடமையிலிருக்கும் நேரம்பார்த்து அவவைச் சந்திப்பதற்காக ஒருநாட் பிரதேசசபை அலுவலகத்திற்குச் சென்றேன். நாங்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்தபொழுது நான் அவவிடம், "உள்ளூருக்குள் உங்களுக்கு நல்ல வேலை கிடைத்துவிட்டது. நீங்கள் ரொம்ப அதிஷ்டக்காரி," என்று கூறினேன். அதற்கு அவள், "நீ சொல்வதிலும் அர்த்தமிருக்கத்தான் செய்கின்றது. இருந்தபோதும் மனதிற்குப்பிடிக்காத சில காரியங்களும் நடந்து கொண்டிருக்கின்றன. அதுதான் எனக்குப் பயமாய்க்கிடக்கு," என்று சொன்னாள். உடனே நான், "என்ன வாலாம்பிகை சொல்லுகிறாய்? நீ பயப்படுகின்ற அளவிற்கு என்ன நடக்கின்றது?" என்று வியப்புடன் கேட்டேன். அவள் அப்பொழுது, "நீ என்னுடைய உற்ற நண்பி என்றபடியினால் இதை உன்னிடம் சொல்லுகிறேன். இதைப்பற்றி நீ வேறுயாரிடமும் சொல்லப்படாது," என்று என்னிடம் உறுதிமொழி பெற்றுக்கொண்டு பின்வருமாறு கூறினாள். "நாகதேவன் மூன்று நாட்களுக்கு முன் இங்கு வந்தான். அப்பொழுது இங்கு யாரும் இருக்கவில்லை. உள்ளுக்கு வந்து என்னுடன் கதைத்துக் கொண்டு நின்றவன் எதிர்பாரதவிதமாக என்மீது கையைப் போட்டுப் பாலியல் ரீதியாகச் சேட்டை செய்யத் தொடங்கினான். இது எனக்குப் பிடிக்காத விடையம் என்று பல தடவை சொல்லியபோதும் அவன் அதைக் கேட்கவில்லை. இறுதியிற் பொறுமையை இழந்த நான் எனது செருப்பைக் கழற்றி இனி இதுதான் பேசும் என்று கோபத்தோடு கூறினேன். உடனே அவன் உன்னைப் பார்த்துக் கொள்ளுகிறேன் என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டான். அதுதான் யோசனையாயிருக்கு சாந்தமதி," என்று கூறினாள். இவ்வாறு அவள் கூறிச் சிலநாட்களில் அவள் கொலை செய்யப்பட்டுவிட்டாள். எனவே இந்தக் கொலைக்கும் நாகதேவனுக்கும் தொடர்பு இருக்க வேண்டுமென்று நான் உறுதியாக நம்புகிறேன் ஐயா.

நீதிபதி: இந்த விடையத்தைப் பொலிசாரிடம் கூறினீரா?

சாந்தமதி: இல்லை ஐயா, நான் பொலிசாரிடம் கூறவில்லை.

நீதிபதி: இந்த முக்கிய உண்மையை ஏன் பொலிசாரிடம் கூறவில்லை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தமதி: நாகதேவனுடைய அரசியற் செல்வாக்கையும் பணபலத்தையும் நான் நன்கு அறிவேன். இந்தக் கொலை நடந்த பிற்பாடு பொலிசாரைக் கொண்டு இந்தக்கிராமத்து இளைஞர்களைத் தாக்கியதையும் சித்திரவதை செய்ததையும் நான் நன்கு அறிவேன். பொலிசார் நாகதேவனின் கையிற்குள் ஆடுகின்றார்கள் என்பதையும் நன்கு தெரிந்திருந்தேன். எனவே இதைப்பற்றிப் பொலிசாரிடம் முறைப்பாடு செய்தாற் பொலிசாரும் நாகதேவனும் சேர்ந்து என்னையும் கொலை செய்வார்கள் என்று எண்ணியபடியால் இதைப்பற்றிப் பொலிசாரிடம் கூறுவதற்கு நான் முயற்சிக்கவில்லை. இளைஞர்கள் இந்த விடையத்திற் தலையிட்டு புலன்விசாரணை செய்கிறார்கள் என்று அறிந்ததும் அவர்களிடம் இந்த உண்மையைச் சொன்னேன். அவர்கள் மூலம்தான் நான் இந்த நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன்.

நீதிபதி: இளைஞர்கள் இவ்வாறு சாட்சி சொல்லும்படி உங்களை வற்புறுத்தினார்களா?

சாந்தமதி: இல்லை நீதிபதி அவர்களே! எனது நண்பிக்காக எனது சுயவிருப்பத்தின் பேரிற்தான் நான் சாட்சி சொல்லுகிறேன். என்னை யாரும் வற்புறுத்தவுமில்லை, இவ்வாறு கூறும்படி சொல்லித்தரவுமில்லை. நான் கூறியது யாவும் நான் அறிந்த உண்மை. உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை.

நீதிபதி: சரி நீங்கள் போகலாம். (பொறுப்பாளர் ரங்கனைப் பார்த்து) வேறு யாராவது சாட்சிகளைச் சமர்ப்பிக்கப் போகின்றீர்களா?

ரங்கன்: ஆம் நீதிபதி அவர்களே, வாலாம்பிகையின் தந்தையார் மருதப்புவைச் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

நீதிபதி: மருதப்புவை விசாரிக்க விரும்புகிறேன்.

(மருதப்பு வந்து கூண்டில் ஏறிக்கொண்டார்)

நீதிபதி: உங்களுடைய பெயர் என்ன?

மருதப்பு: என்னுடைய பெயர் மருதப்பு.

நீதிபதி: கொலையுண்ட வாலாம்பிகை உங்களுக்கு என்ன முறை?

மருதப்பு: வாலாம்பிகை என்னுடைய மகள்.

நீதிபதி: உங்களுடைய மகளைக் கொலை செய்தது நாகதேவன் தான் என்பதை நீங்கள் நம்புகின்றீர்களா?

மருதப்பு: ஆம் நீதிபதி அவர்களே! நிச்சயமாக நம்புகிறேன்.

நீதிபதி: ஏன் அப்படி நினைக்கின்றீர்கள்?

மருதப்பு: ஆரம்பத்தில் நாகதேவன் மீது எனக்குச் சந்தேகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவில்லை. அவன் என் மகளுக்கு வேலை பெற்றுக் கொடுத்தவன். அவன் ஒரு நல்ல மனிதன். அவன் இந்தக் கொலையைச் செய்திருக்கமாட்டான் என்றுதான் எண்ணியிருந்தேன். அவனை ஒரு நல்ல மனிதன் என்று நம்பியபடியாற்தான் எனது மகளுக்கு வேலை பெற்றுத் தரும்படி கேட்டு அவனிடம் சென்றிருந்தேன். ஆனபடியால் உடனே அவன்மீது சந்தேகம் கொள்ளுவதற்கு என்னால் முடியவில்லை. பிற்பாடுதான் அவனைப்பற்றிய உண்மைகளை என்னால் அறியமுடிந்தது. சாந்தமதி கூறிய செய்தியும், கொழும்பிலிருந்து வந்த புலனாய்வுப் பிரிவினர்க்கு மொழிபெயர்ப்புச் செய்தபொழுது, அவன்விட்ட குழறுபடிகளும் என்னைச் சந்தேகம் கொள்ள வைத்தன. "இங்குள்ள இளைஞர்கள் மீதும், மகளின் காதலன் மீதும்தான் சந்தேகப்படுகிறேன்," என்று நான் கூறியவற்றிற்கு மாறாக மொழிபெயர்ப்பு செய்துள்ளான். நான் அப்படிக் கூறவில்லை. அதனாற் பொலிசார் இளைஞர் களையும் காதலன் முருகனையும் விசாரணை என்ற போர்வையிற் கடுமையாகத் தாக்கிச் சித்திரவதை செய்துள்ளனர். நாகதேவன் தனக்குப் பிடிக்காத இளைஞர்களையே பொலிசாருக்குக் காட்டிக் கொடுத்துள்ளான். தொகுத்துச் சொன்னால் இந்தக் கொலையையும் செய்துவிட்டுத் தனக்குப் பிடிக்காத இளைஞர்களையும் முருகனையும் பழிவாங்கியுள்ளான். இது அவன் செய்த அநியாயத்தின் உச்சக்கட்டம் நீதிபதி அவர்களே. இதெல்லாம் அவன் திட்டம் போட்டுச் செய்த சதிவேலை. இவற்றை மனிதநேயம் கொண்ட எவரும் மன்னிக்கவே முடியாது.

நீதிபதி: உங்களுக்கு ஆங்கிலம் தெரியுமா?

மருதப்பு: இல்லை ஐயா!

நீதிபதி: அப்படியாயின் நீங்கள் கூறியவற்றை அவர் தனக்குச் சாதகமாக மாற்றி மொழிபெயர்த்துச் சொன்னது உங்களுக்கு எப்படித் தெரியவந்தது?

மருதப்பு: நல்ல கேள்வி ஐயா, இந்தக் கேள்வியை நீங்கள் கேட்பீர்கள் என்று எனக்குத் தெரியும். அதற்குத் தயாராகவே வந்துள்ளேன். எனது மருமகன், அதாவது எனது தங்கையின் மகன், அவனுக்கு ஆங்கிலத்திலும் தமிழிலும் போதிய அறிவுண்டு. கொழும்பிலிருந்து வந்த புலன்விசாரணை அதிகாரிகள் என்னை விசாரணை செய்தபொழுது அவர் என்னுடன் இருந்தார். நாகதேவன் நான் சொல்லியவற்றிற்கு மாறாக தனக்குச் சாதகமாக மொழிபெயர்த்தபொழுதும் பயத்தின் காரணமாக அந்த இடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகதேவனின் குழறுபடியைச் சுட்டிக்காட்ட அவர் முன்வரவில்லை. அவருக்கும் நாகதேவனுடைய செல்வாக்கையும் சக்தியையும் ஏற்கனவே நன்கு தெரியும். விசாரணை முடிந்து எல்லோரும் போனபிற்பாடு என்னிடம் நாகதேவன் செய்த குழறுபடிகளை விளக்கமாகச் சொன்னார். அதன்பின்பாடுதான் நாகதேவன் மீது எனக்குச் சந்தேகம் ஏற்படத் தொடங்கியது. அதைத் தொடர்ந்து சமூகத்திலிருந்து கிடைத்த செய்திகளும், எனது மகளின் நண்பி சாந்தமதியிடம் இருந்து கிடைத்த செய்திகளும் எனது சந்தே கத்தை உறுதிப்படுத்துபவைபோல் அமைந்தன. இவை யாவற்றையும் வைத்துப் பார்க்கும்பொழுது உண்மையான கொலையாளி நாகதேவன்தான் என்பது எனது இறுதி முடிவு நீதிபதி அவர்களே.

நீதிபதி: சரி நீங்கள் போகலாம் (பொறுப்பாளர் ரங்கனைப் பார்த்து) வேறு சாட்சிகள் யாரையேனும் சமர்ப்பிக்க விரும்புகின்றீர்களா?

ரங்கன்: ஆம் நீதிபதி அவர்களே, வாலாம்பிகையின் காதலன் முருகனைச் சமர்ப்பிக்கவுள்ளேன்.

(முருகன் வந்து கூண்டில் ஏறிக்கொண்டான்)

நீதிபதி: உங்களுடைய பெயர் என்ன?

முருகன்: எனது பெயர் முருகதாஸ். முருகன் என்றும் அழைப்பார்கள்.

நீதிபதி: எவ்வளவு காலமாய் வாலாம்பிகையைக் காதலித்தீர்?

முருகன்: ஒரு வருடமாய்க் காதலித்தேன். நாங்கள் இருவரும் கருத்தொருமித்த காதலர்களாக இருந்தோம். சில மாதங்களுக்கு முன் நாம் திருமணம் செய்துகொள்வோம் என்று அவவிடம் சொன்னேன். அதற்கு அவ, "எனக்கு ஒரு வேலை கிடைத்து நான் உழைக்கத் தொடங்கிய பிற்பாடுதான் நாம் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்று," சொல்லித் திருமணத்தைப் பிற்போடும்படி கேட்டுக் கொண்டார். அவவிற்கு வேலை கிடைத்த பிற்பாடு அதற்கான ஆயத்தங்களைச் செய்தோம். நாங்கள் திருமணம் செய்துகொள்ளப் போகிறோம் என்று மிகவும் மகிழ்ச்சியோடு இருந்தோம். இந்தக் கட்டத்திற் துர்அதிஸ்டவசமாக இவ்வாறு நடந்துவிட்டது.

நீதிபதி: உங்களுடைய காதல் விவகாரம் உங்களுடைய பெற்றோருக்கும் வாலாம்பிகையின் பெற்றோருக்கும் தெரியுமா?

முருகன்: ஆம் நீதிபதி அவர்களே, வாலாம்பிகையை எங்களுடைய வீட்டிற்கு நான் இருதடவை கூட்டிச் சென்றுள்ளேன். நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றுதடவை அவர்களுடைய வீட்டிற்குச் சென்றிருந்தேன். அவவிற்கு வேலைகிடைத்த பிற்பாடு எனது பெற்றோர் எங்களுடைய திருமணத்திற்கு ஆயத்தமாகியிருந்தார்கள். நான் எனது பெற்றோருக்கு ஒரே பிள்ளை. எனது பெற்றோர் எனது திருமணத்தைச் சிறப்பாகச் செய்வதற்கு மிகவும் ஆர்வத்தோடு இருந்தார்கள்.

நீதிபதி: நீங்கள் என்ன தொழில் செய்கின்றீர்கள்?

முருகன்: நான் தாமரைக்குளம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றுகிறேன்.

நீதிபதி: இந்தக்கொலை சம்பந்தமாகப் பொலிசார் உம்மை விசாரணைக்கு உட்படுத்தினார்களா? அப்படியாயின் அங்கு என்ன நடந்தது?

முருகன்: ஆம் நீதிபதி அவர்களே, விசாரணைக்கு உட்படுத்தினார்கள். என்னைப் பாடசாலையில் வைத்து அழைத்துச் சென்று விசாரணைக்குட்படுத்தினார்கள். அப்பொழுது, "இந்தக் கொலைக்கும் உனக்கும் தொடர்பு இருக்க வேண்டும், உண்மையைச் சொல்லடா, என்று சொல்லி என்னைக் கடுமையாகத் தாக்கினர். இறுதியில் என்னைத் தலைகீழாய்த் தொங்கவிட்டுக் குண்டாந்தடியால் உடல் முழுவதும் தாக்கினர். அப்பொழுது பொலிஸ் இன்ஸ்பெக்டர் 'நாகதேவன் ஐயாவிற்கு உதவாத பொண்ணு உனக்குப் பெண்டாட்டியாய் ஆகமுடியுமாடா, ராஸ்கல்' என்று சொல்லித் தாக்கினார். அதிலிருந்து நான் புரிந்து கொண்டேன் இது முழுவதும் நாகதேவனுடைய திட்டமிட்ட வேலைதான் என்று.

நீதிபதி: நாகதேவன் தப்பான முறையிற் தன்னுடன் நடந்து கொள்ள முயற்சிக்கிறான் என்று எப்போதாவது வாலாம்பிகை உங்களிடம் கூறினாவா?

முருகன்: அப்படி ஒன்றும் கூறவில்லை.

நீதிபதி: சரி, நீங்கள் போகலாம். (பொறுப்பாளர் ரங்கனைப் பார்த்து) ரங்கன், வேறுசாட்சிகள் யாரையேனும் சமர்ப்பிக்க விரும்புகின்றீர்களா?

ரங்கன்: ஆம் நீதிபதி அவர்களே, நாவற்தோப்புச் சந்தியில் அமைந்திருக்கும் ஒரு கடை உரிமையாளர் இராமனைச் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

(இராமன் வந்து கூண்டில் ஏறிக்கொண்டார்)

நீதிபதி: உங்களுடைய பெயர் என்ன? நீர் என்ன தொழில் செய்கிறீர்?

இராமன்: என்னுடைய பெயர் இராமன். நான் நாவற்தோப்புச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தியில் சிறிய கடையொன்று வைத்திருக்கிறேன்.

நீதிபதி: இந்தக் கொலை சம்பந்தமாக இந்த நீதிமன்றில் என்ன கூறுவதற்கு விரும்புகின்றீர்கள்?

இராமன்: வாலாம்பிகை காணாமற் போனநாளிலிருந்து அவ வினுடைய உடல் கண்டுபிடிக்கப்படும்வரை அவவின் உறவினரும், அந்தக் கிராம மக்களும் விசேடமாக இளைஞர்களும் தேடித் திரிந்தனர். இரண்டாவது நாள் இங்கு நின்றுகொண்டிருக்கும் நாகதேவனின் கையாள் செல்லன் எனது கடைக்கு வந்து சிகரட் வாங்கிப் புகைத்துக் கொண்டு, "வாலாம்பிகையை நான் நேற்று ஓதியமலையிற் பார்த்தேன். அவள் அப்பொழுது சங்கோடைக்குச் செல்லவிருந்த பேருந்தில் ஓர் இளைஞனுடன் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தாள்," என்று என்னிடம் சொன்னான். நான் இந்தச் செய்தியை வாலாம்பிகையின் உறவினரிடம் சொன்னேன். அவர்கள் ஓதியமலை, சங்கோடையெல்லாம் சென்று தேடினார்கள். நாகதேவனுடைய மற்றைய கையாட்கள், "நாங்கள் வாலாம்பி கையைக் கிளிநொச்சிக்குச் சென்றுகொண்டிருந்த பேருந்திற் பார்த்தோம், இறாற்குழிக்குச் சென்ற பேருந்திற் பார்த்தோம்," என்று வாலாம்பிகையின் உறவினர்களிடம் கூறியதாய் மறுநாள் அறிந்தேன். நாகதேவன் திட்டமிட்டுத் தேடுபவர்களை அலையச் செய்வதற் காகவும், தன்மீது மற்றையவர்கள் சந்தேகம் கொள்ளாதிருப் பதற்காகவும் தனது கையாட்களைக் கொண்டு பரப்பிய வீண் வதந்திகள்தான் இவைகள் என்ற உண்மையை வாலாம்பிகையின் உடல் கண்டுபிடிக்கப்பட்ட பிற்பாடு என்னால் உணர முடிந்தது.

உடல் கண்டெடுக்கப்பட்டு மூன்றாவது நாள் என்னைக் கடையில்வைத்துக் கைதுசெய்த பொலிசார், பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுசென்று, "உனக்கும் இந்தக் கொலைக்கும் தொடர்பு இருக்கவேண்டும், அல்லது இந்தக் கொலையைப்பற்றி நீ தெரிந்திருக்கவேண்டும், உண்மையைச் சொல்லடா நாயே," என்று சொல்லி என்னைக் கடுமையாகத் தாக்கினர். அப்பொழுது பொலிஸ் இன்பெக்டர், "நாகதேவன் ஐயாவைப் பகைத்துக்கொண்டு நீ வியாபாரம் செய்ய முடியாது, தெரியுமாடா?" என்று கேட்டு குண்டாந்தடியினாற் பலமாகத் தாக்கினார். என்னைப்போன்று வேறு பல இளைஞர்களும் பொலிசாரால் விசாரணை என்ற போர்வையிற் கடுமையாகத் தாக்கப்பட்டதாயும், அப்பொழுதும் நாகதேவனுடைய பெயர் பிரஸ்தாபிக்கப்பட்டதாயும் அறிந்தேன். நாகதேவனுக்கு இந்தக் கிராமத்து இளைஞர்களைப் பிடிக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தனக்கு வேண்டாத இளைஞர்களை பொலிசாரைக் கொண்டு கடுமையாகத் தாக்கியும் சித்திரவதை செய்துமுள்ளான்.. இளைஞர்கள் மத்தியில் ஒரு பீதியை ஏற்படுத்தி அவர்களைத் தனது அடக்குமுறையில் வைத்திருப்பதே நாகதேவனின் இந்தச் செயலின் நோக்கமாகும். அத்துடன் கொலையைத் திசைதிருப்புவதற்கும் இந்த முயற்சியைப் பயன்படுத்தியுள்ளான்.

நீதிபதி: நீங்கள் இப்பொழுதும் கடை நடாத்திக் கொண்டிருக் கின்றீரா?

இராமன்: ஆம் நீதிபதி அவர்களே, நடாத்திக் கொண்டிருக்கிறேன்.

நீதிபதி: நாகதேவனோ அல்லது அவருடைய கையாட்களோ உமக்கு இப்போது ஏதாவது தொல்லை கொடுக்கிறார்களா?

இராமன்: நாகதேவனுடைய கையாட்கள் அவ்வப்போது வந்து சிகரட் வாங்கிச் செல்வார்கள். பெரிதாகத் தொல்லை தருவ தில்லை. ஆனால், "எங்களுடைய ஐயாவைப்பற்றி யாராவது ஏதும் கதைத்தால் அதை எங்ளுக்குச் சொல்லவேண்டும்," என்று நிபந்தனை போட்டிருக்கின்றார்கள்.

நீதிபதி: (அங்கு நிறுத்தப்பட்டிருந்த நாகதேவனுடைய கையாட்கள் ஐந்து பேரையும் காட்டி) இவர்களில் யாராவது உமது கடைக்கு வந்திருக்கிறார்களா?

இராமன்: இந்த ஐந்து பேரும் எனது கடைக்கு வருவது வழக்கம். இவர்களை எனக்கு நன்கு தெரியும். இடது பக்கத்தில் நிற்பவன் பெயர் புடையன். இவன்தான் இவர்களுக்குத் தலைவன். இவன்தான் எனக்கு அந்த நிபந்தனை விதித்தவன்.

நீதிபதி: வேறு ஏதாவது சொல்ல விரும்புகின்றீரா?

இராமன்: இவர்களைக் கண்டால் நான் மிகவும் பயபக்தியோடு நடந்து கொள்வேன். காரணம் பயம், என்னையும் கொலை செய்து விடுவார்கள் என்ற பயம். வேறொன்றும் சொல்லுவதற்கில்லை ஐயா.

நீதிபதி: நீர் போகலாம் (பொறுப்பாளர் ரங்கனைப் பார்த்து) ரங்கன், வேறு சாட்சிகள் யாரையேனும் சமர்ப்பிக்கப் போகின்றீர்களா?

ரங்கன்: இல்லை நீதிபதி அவர்களே, அவ்வளவு பேரும்தான்.

நீதிபதி: உங்களுடைய கடமை உணர்விற்கும் நீங்கள் மேற்கொண்ட முயற்சிக்கும் ரொம்பப் பாராட்டுக்கள் ரங்கன்.

ரங்கன்: என்னுடைய கடமையை என்னால் இயன்ற அளவிற்கு நிறைவாகச் செய்திருக்கிறேன் என்று நம்புகிறேன் நீதிபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களே.

நீதிபதி: (அங்கு நிறுத்தப்பட்டிருந்த நாகதேவனின் கையாட்கள் ஐந்து பேரையும் பார்த்து) இந்த நீதிமன்றிற் சாட்சியம் அளித்தவர் களையும், அவர்களால் அளிக்கப்பட்ட சாட்சியங்களையும் நன்கு கவனித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். நீங்கள் ஏதாவது சொல்லுவதற்கு விரும்புகிறீர்களா?

செல்லன்: (ஐவரில் ஒருவன்) நீதிபதி அவர்களே, இந்தக் கொலை சம்பந்தமாக எனக்குத் தெரிந்த உண்மைகள் யாவற்றையும் இங்கு கூறுவதற்கு விரும்புகிறேன். இந்தக் கொலையை நாகதேவனோ அல்லது இங்கு என்னுடன் நின்று கொண்டிருக்கும் நான்கு பேரோ செய்ததை நான் என்னுடைய கண்களாற் காணவில்லை. ஆனால் இவர்களினாற்தான் இந்தக் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன்.

நீதிபதி: கண்களாற் பார்க்காமல் எப்படி உறுதியாகக் கூறமுடியும் இவர்கள்தான் செய்தார்கள் என்று?

செல்லன்: நீதிபதி அவர்களே, நம்முன்னோர் சொல்லி வைத்துள்ளார்கள் 'கண்ணால கண்டதும் பொய் காதால கேட்டதும் பொய் தீர விசாரித்து அறிந்ததுதான் மெய்' என்று. அந்த வகையில் எனக்குத் தெரிந்த சில உண்மைகளைக் கூற விரும்புகிறேன். வாலாம்பிகை காலையில் வீட்டிலிருந்து அலுவலகம் நோக்கிப் புறப்பட்ட பிற்பாடு காணாமற் போயிருந்தாள். அன்று இரவு எட்டுமணியளவில் நான் நாகதேவனின் வங்களாவிற்குச் சென்றிருந்தேன். அப்பொழுது வங்களாவின் பின்புறத்தில் உள்ள ஓர் அறையில் அவள் அடைத்துவைக்கப்பட்டிருந்ததை யன்னல் ஊடாக நான் பார்த்தேன். அப்பொழுது தலைமுடி ஆடைகள் கலைந்த நிலையில் மிகவும் அலங்கோலமாய்க் காணப்பட்டாள். மிகவும் களைப்படைந்து காணப்பட்டாள். யன்னல் ஊடாக என்னைக் கண்டதும் குடிப்பதற்குத் தண்ணீர் தரும்படி இரந்து கேட்டாள். அவளைப் பார்க்கப் பாவமாயிருந்தது. குடிப்பதற்குத் தண்ணீர் கொடுத்தேன். நான் நாகதேவனுக்கு எடுபிடி வேலைகள் செய்து அவன் கொடுப்பதைக் குடிப்பதும் சாப்பிடுவதும் உண்மைதான். ஆனாற் கொலை செய்யும் அளவிற்கு நான் ஒரு கொடியவன் அல்ல. கடைக்கார இராமன் சொன்னது உண்மை. அதாவது அவருடைய கடைக்குச் சென்று, "வாலாம்பிகையைச் சங்கோடையில் ஓதியமலை செல்லவிருந்த பேரூந்தில் ஓர் இளைஞனுடன் பார்த்தேன்," என்று சொன்னேன். அப்டிக் கூறும்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை அனுப்பி வைத்தது இங்கு நின்று கொண்டிருக்கும் புடையன்தான். நாகதேவனின் கையாட்களுக்கு இவன்தான் தலைவன் என்பதும் உண்மை. நான் மறுநாள் நாகதேவனின் வங்களாவிற்குச் சென்று பார்த்தபொழுது அடைத்து வைக்கப் பட்டிருந்த வாலாம்பிகையைக் காணவில்லை. ஆனபடியினால் நாகதேவனுக்கும் புடையனுக்கும் தெரியாமல் இந்தக் கொலை நடந்திருக்க முடியாது நீதிபதி அவர்களே.

நீதிபதி: புடையன் கையாட்களின் தலைவன் என்று சொன்னீர்கள். இரண்டாவது இடத்தில் யார் இருக்கிறான்?

செல்லன்: (சுட்டிக்காட்டி) இதோ இங்கு நின்றுகொண்டிருக்கிறான். இவன் பெயர் சாரை. புடையனுக்கு அடுத்தபடியாக நாகதேவ னுடைய வலது கை இவன்தான்.

நீதிபதி: (பொறுப்பாளர் ரங்கனைப் பார்த்து) ரங்கன், இங்கு நின்று கொண்டிருக்கும் புடையன், சாரை இவர்கள் இருவர் மீதும் வேறு ஏதாவது குற்றச்சாட்டுகள் உண்டா?

ரங்கன்: ஆம் நீதிபதி அவர்களே, இவர்கள் இருவர் மீதும் கொள்ளை, பாலியற் பலாத்காரம் புரிந்த வழக்குகள் போடப்பட்டிருக் கின்றன. அந்த வழக்குகளை இந்த வழக்கின்பிற்பாடு சமர்ப்பிக்கவிருக்கின்றோம். இவர்கள் இருவர் மீது மட்டுமல்ல இவர்களுக்கருகில் நின்று கொண்டிருக்கிறான் ஒரு கட்டையன், இவன் பெயர் கொம்பேறி. இவன் மீது அநேக திருட்டுக் குற்றச்சாட்டுகள் பதியப்பட்டிருக் கின்றன. இவனுடைய வழக்கையும் இதன் பிற்பாடு சமர்ப்பிக்க விருக்கின்றோம்.

நீதிபதி: (பொறுப்பாளர் ரங்கனைப் பார்த்து) இவர்கள் எல்லோரும் பாம்பினுடைய பெயர்களைக் கொண்டிருக்கின்றார்கள். இதற்கு ஏதாவது காரணம் உண்டா?

ரங்கன்: ஆம் நீதிபதி அவர்களே, தாங்கள் பாம்புக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்றும், தங்களை யாரும் பகைத்துக் கொள்ளக் கூடாதென்றும், தங்களைக் கண்டால் விலகிப் போகவேண்டு மென்றும், இவ்வாறு மக்கள் மத்தியில் ஒரு பீதியை ஏற்படுத்தித் தங்களுடைய காரியங்களை இலகுவாகச் செய்வதுதான் இதன் நோக்கம்.

நீதிபதி: (புடையனைப் பார்த்து) புடையன், நீர் ஏதாவது கூற விரும்புகின்றீரா?

புடையன்: ஆம், என்மீதும் எனது மதிப்பிற்குரிய ஐயா நாகதேவன்மீதும் சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகள் யாவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென்றே உருவாக்கப்பட்ட புனைகதைகள். இங்கு சாட்சியம் அளித்தவர்களெல்லாம் இந்த இளைஞர் கும்பலினுடைய கையாட்கள். அவர்கள் கூறியவற்றில் எந்த உண்மையுமில்லை. அவர்கள் அவ்வாறு கூறும்படி இந்த இளைஞர்களால் நிற்பந்திக்கப் பட்டிருக்கிறார்கள். எங்களைக் கைது செய்து இப்படி ஒரு நீதிமன்றில் விசாரிப்பதற்கு அவர்களுக்கு எந்த உரிமையோ அதிகாரமோ கிடையாது. ஆயுதத்தைக் கையில் வைத்துக்கொண்டு எதேச்சாதிகாரமாய் நடந்து கொள்ளுகின்றார்கள். வாலாம்பிகையின் கொலைபற்றிச் சட்டப்படி விசாரித்து விசாரணை முடிந்துவிட்டது. அதைத் திரும்ப இங்கு விசாரிப்பதற்கு உங்களுக்கும் அதிகாரமில்லை. ஆனபடியால் எங்களை உடனே வீடு செல்வதற்கு அனுமதிக்க வேண்டும்.

நீதிபதி: (சாரையைப் பார்த்து) நீர் ஏதாவது கூறுவதற்கு விரும்புகின்றீரா?

சாரை: ஆம் நீதிபதி அவர்களே, எனது கஸ்டம் காரணமாகவும், வறுமை காரணமாகவும் சில திருட்டுக்கள் செய்தது உண்மைதான். நாகதேவன் கொடுத்த மதுபானத்திற்கும், அவன் போட்ட சாப்பாட் டிற்கும் ஆசைப்பட்டு அவனுடைய எடுபிடி ஆளாகத்திரிந்ததும் உண்மைதான். ஆனால் இந்தக் கொலைக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது நீதிபதி அவர்களே.

நீதிபதி: நாகதேவன்தான் இந்தக் கொலையைச் செய்திருப்பான் என்று நீர் எண்ணுகின்றீரா?

சாரை: சரியாகத் தெரியாமல், ஆதாரமில்லாமல் அப்படி என்னால் எண்ண முடியாது நீதிபதி அவர்களே. பெண்கள் விடையத்திற் பலயீனமானவர்தான் என்பது மட்டும் எனக்குத் தெரியும். அதை வைத்துக் கொண்டு கொலை செய்திருப்பார் என்ற முடிவிற்கு என்னால் வரமுடியாது ஐயா.

நீதிபதி: (நாகதேவனைப் பார்த்து) நாகதேவன், விசாரணைகள் முடிவடைந்துவிட்டன. கடைசியாக நீங்கள் ஏதாவது கூறுவதற்கு விரும்புகின்றீரா?

நாகதேவன்: ஆம், எனக்கும் இந்தக் கொலைக்கும் எந்த விதசம்பந்தமும் கிடையாது. இளைஞர் கூட்டமொன்று என் மீதும் எனது உதவியாட்கள் மீதும் கொண்ட வெறுப்பின் காரணமாக இக்கொலையை என்மீது சுமத்தும் பொருட்டு இல்லாத கதைகளை உருவாக்கி, அதைச் சோடித்துவிட்டு, அதை உண்மையென்று நிரூபிப்பதற்காகச் சாட்சிகளை ஒழுங்குபடுத்தி, அவர்களுக்கு இவ்வாறு கூறும்படி பயிற்சி கொடுத்து இந்த நீதிமன்றில் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரணையை அரங்கேற்றுகிறார்கள். இப்படியான ஒரு நீதிமன்றை உருவாக்குவதற்கோ இதில் எங்களை நிறுத்தி விசாரணை செய்வதற்கோ இந்த இளைஞர் குழுவிற்கு எந்த உரிமையோ அதிகாரமோ கிடையாது. சமூகத்தைப் பாதுகாப்பதற்கு இவர்கள் யார்? இவர்கள் செய்வதே சமூகவிரோதச் செயல். ஆயுதங்களைக் கையில் வைத்துக் கொண்டு அராஜகம் பண்ணுகிறார்கள். சமூகத்தைப் பாதுகாப்பதற்கு அரசாங்கமும் சட்டமும் இருக்கின்றன. அவைகள் தங்களுடைய கடமைகளைச் செவ்வனவே செய்து கொண்டிருக்கின்றன. வாலாம்பிகை கொலை விடயத்திலும் சட்டம் தனது கடமையைச் சரியாகச் செய்துள்ளது. இந்த நிலையில் உங்களை நீதிபதியாகவும் இதை ஒரு நீதிமன்றமாகவும் எப்படி நாங்கள் ஏற்றுக் கொள்வது? ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. இந்தக் கொலை சம்பந்தமாக இலங்கை அரசாங்கம் உரிய முறையிற் செயற்பட்டு இறுதியிற் கொலைகாரரைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று முடிவுசெய்து அதற்கான கோவையையும் மூடிவிட்டது.

இந்தக் கொலைக்கு உங்களிடம் ஆதாரங்கள் இருந்தால் அந்த வழக்கை மறுபடியும் திறந்து விசாரணைகளை நடாத்த உரிய நடவடிக்கைகளை எடுக்கலாம். அதைவிடுத்து இந்த இளைஞர் கூட்டம் சமூகப் பாதுகாப்பு நீதிமன்றம் என்று போடும் நாடகத்திற்கு நாங்கள் அடிபணிய முடியாது. நீங்கள் செய்வதெல்லாம் சட்டவிரோதமான செயல். இதைப் பயங்கரவாதம் என்றே சொல்ல விரும்புகிறேன். உங்கள் பலம், நீதியெல்லாம் உங்கள் கைகளில் இருக்கும் ஆயுதங்கள்தான். நாங்கள் அரசாங்கத்தையும் சட்டத்தையும் எப்பொழுதும் மதிப்பவர்கள். நாட்டின் அரசாங்கத்தையும் சட்டத்தையும் மீறி இப்படிச் செயற்படுவதைப் பயங்கரவாதம் என்று கூறாமல் வேறு எப்படிக் கூறுவது? வாலாம்பிகை தனக்கொரு வேலை பெற்றுத்தரும்படி எனது உதவியைக் கேட்டு என்னுடைய வீட்டிற்கு வந்தபொழுது அவள்மீது அனுதாபப்பட்டுச் சிரமத்தின் மத்தியிலும் அந்த வேலையை அவளுக்குப் பெற்றுக் கொடுத்தேன். இது யாவரும் அறிந்த உண்மை. இப்படியான பரோபகார சிந்தனையுள்ள என்மீது அபாண்டமாகக் கொலைப்பழியைச் சுமத்தி, ஆயுதமுனையில் இங்கு கொண்டுவந்து சமூக பாதுகாவலர் என்ற போர்வையில் அராஜகம் புரியும் உங்களை நல்லவர்கள் என்று நாங்கள் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆயுதம் சிலவற்றைக் கைகளில் எடுத்துக் கொண்டால் எதையும் செய்யலாம் என்று எண்ணிவிடப்படாது. இந்த நாட்டில் ஓர் அரசாங்கமும் அதற்கான சட்டமும் இருக்கின்றன என்பதை நீங்கள் மறந்துவிடப்படாது. என்மீது உங்களுக்குச் சந்தேகமிருந்தால் அதைப்பற்றிப் பொலிசிற் புகார்செய்து சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். அதைவிடுத்து ஆயுத முனையில் இங்கு என்னை நிறுத்தி விசாரிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். தண்டனைக் குரிய செயலை நீங்களே புரிந்து கொண்டு, எங்களுக்குத் தண்டனை வழங்குவதற்கு நீங்கள் நீதிமன்றம் நடாத்துகின்றீர்களென்றால் நீங்கள் எப்படிப்பட்ட பயங்கரக் குற்றவாளிகள் என்பதை நான் சொல்லித்தான் நீங்கள் தெரிய வேண்டுமென்றில்லை. உங்களுக்குச் சக்தியிருந்தால் என்னை விடுதலை செய்துவிட்டுச் சட்டரீதியாக என்னுடன் மோதிப்பாருங்கள். அப்பொழுது உங்களுடைய திறமை வெளிப்படும். இப்படி ஒழிந்து மறைந்து கோழைத்தனமாய்ச் செயற்படாதீர்கள். உங்களுடைய தவறை உணர்ந்து கொண்டு மேலும்தாமதிக்காமல் என்னைக் கொண்டு வந்த மாதிரியே எனது வீட்டிற்குக் கொண்டுசென்று விடவேண்டும். அவ்வாறு எனது உதவியாளர்களையும் உடனே அவர்களுடைய வீடு செல்ல அனுமதிக்கவேண்டும். அப்படிச் செய்தால் உங்க ளுடைய இந்தத் தவறை மன்னிப்பதற்ககுத் தயாராகவுள்ளேன். தவறினால் இதனால் ஏற்படப்போகும் பாரதூரமான பின்விளைவுகளை நீங்கள் எல்லோரும் அனுபவிக்க வேண்டிவரும் என்பதைக் கூறிவைக்க விரும்புகிறேன். சிங்கத்துடன் சீண்டினால் அது என்ன செய்யும் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். சிறுபிள்ளைத்தனமாக என்னுடன் சீண்டவேண்டாம். இதற்குமேல் நான் எதுவும் கூறவேண்டியதில்லை.

நீதிபதி: சபாஷ்! சபாஷ் நாகதேவன்!! ரொம்ப அழகாகப் பேசுகின்றீர்கள். உங்களுக்கு ஆங்கிலத்தில் மட்டுமல்லத் தமிழிலும் நல்ல திறமை இருக்கின்றது. அதற்காக உன்னைப் பாராட்டுகிறேன். ஆனால் ஓர் உண்மையை நீர் புரிந்துகொள்ள வேண்டும். பேச்சுத்திறமையால் நீதியைக் குழிதோண்டிப் புதைத்துவிடமுடியாது. உம்மை உங்களுடைய வீட்டிற்கு அனுப்புவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறேன். அதற்குமுன் சிலவற்றை உங்களுக்கு விளங்க வைக்க வேண்டிய கடமைப்பாடு நீதிபதி என்ற முறையில் எனக்குண்டு.

ஒரு நாட்டின் அரசாங்கத்திற்கு அதிகாரத்தைக் கொடுத்து வைப்பவர்கள் அந்த நாட்டுமக்கள். அவர்கள்தான் அதிகாரத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான சொந்தக்காரர்கள். அரசாங்கத்திடம் மக்களாற் கொடுக்கப்பட்ட அதிகாரம் துஸ்பிரயோகம் செய்யப்படும்போது, அது மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும்போது அந்த அதிகாரத்தை அரசாங்கத்திடமிருந்து திரும்பப் பெற்றுக்



கொள்வதற்கு அந்த நாட்டு மக்களுக்கு உரிமையுண்டு. அதைத்தான் இப்பொழுது இந்த இளைஞர்கள் செய்து கொண்டிருக்கின்றார்கள். இப்பொழுது அதிகாரம் அரசியற் செல்வாக்குப் படைத்தவர்களாலும், பணம் படைத்தவர் களினாலும் தங்களுடையதும் தங்களைச் சார்ந்தவர் களுடையதும் நன்மைக்காக மட்டும் பயன்பத்தப் படுவதன் மூலம் அது துஸ்பிரயோகம் செய்யப்படுகின்றது. நீதிநியாயம் சாதாரண மக்களுக்குக் கிடைப் பதில்லை. நீதித்துறையும் பொலிஸ் திணைக்களமும் சேர்ந்து மக்களுக்கு நீதியை வழங்கக் கடமைப்பட்டிருந்தபோதும், அவை அரசியற் செல்வாக்கும் பணபலமும் படைத்தவர்களுடைய கைப்பொம்மைகளாகிக் கிடக்கின்றன. அவை தமது கடமைகளைச் செய்யத் தவறிவிட்டன. அரசியற் செல்வாக்கும் பணபலமும் படைத்தவர்கள் செய்யும் குற்றங்கள் கொடுமைகளை மறைத்து அவர்களைப் பாதுகாக்கும் திணைக்களங்களாக மாறிவிட்டன. அவர்களுடைய கைகளிற்குள் இவையிரண்டும் ஆடுகின்றன. இதனால் மக்களுக்கு நீதி கிடைக்காமற் போய்விட்டது. அவர்களுக்கு இளைக்கப்படும் அநீதிகளைத் தட்டிக் கேட்பதற்கு யாரும் இல்லை. இதற்கு ஒரு நல்ல உதாரணம் வாலாம்பிகையின் கொலையும், அந்தக் கொலையாளிகள் கண்டுபிடிக்கப்படாமையும். இதனாற் சாதாரண மக்கள் இளைஞர்களின் உதவியை நாடுகின்றார்கள். எப்படியாவது தங்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். அதற்காக இளைஞர்களுடன் சேர்ந்து ஒத்துழைக்கிறார்கள். அதன் ஒரு வெளிப்பாடுதான் இந்த இளைஞர் குழுவும் இந்த நீதிமன்றமும்.

இந்த இளைஞர்கள் செய்வதைப் பயங்கரவாதமென்றும் அராஜகம் என்றும் நீங்கள் கூறினால் உங்களைப் போன்றவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கு இளைக்கும் அநீதிகளையும் கொடுமைகளையும் என்னவென்று மக்கள் கூறுவது? உங்களுடைய செயல்கள் மக்களைப் பொறுத்தவரை பயங்கரவாதமாயும் அராஜகமாயும்தான் தோன்றுகின்றன. இந்த இளைஞர்களை இவ்வாறு செயற்பட வைத்தது உங்களைப் போன்றவர்கள்தான். ஆனபடியினால் இளைஞர்களைக் குற்றம் சொல்லுவதிற் பிரயோசனம் இல்லை. குற்றம் செய்யும் நீங்கள் இளைஞர்கள் அளிக்கும் தண்டனையைப் பெற்றுத்தான் ஆகவேண்டும். நீதிதேவதை குற்றம் இளைத்தவர் களை எந்த ரூபத்திலாவது தண்டித்தே தீருவாள். இது இயற்கையின் நியதி. இதிலிருந்து யாரும் தப்பிவிட முடியாது. நீதிதேவதை பெரியவன் சிறியவன், செல்வாக்குப் படைத்தவன் செல்வாக்கு அற்றவன், பணம்படைத்தவன் ஏழை என்று ஒருபோதும் வித்தியாசம் பார்ப்பதில்லை. குற்றம் செய்தவன் தண்டனை பெறுவான் உப்பைத் தின்றவன் தண்ணீர் குடிப்பான். இதுதான் இயற்கையின் நியதி. நீ எப்படி இதிலிருந்து விதிவிலக்குப் பெற முயற்சிக்கலாம்? நீ குற்றம் இளைக்கவில்லை என்று என்னிடம் சொல்லலாம், மற்றையவர்களிடம் சொல்லலாம், ஆனால் உன் மனச்சாட்சியிடமும் நீதி தேவதையிடமும் சொல்லமுடியாது. ஏனென்றால் இரண்டிற்கும் நீ செய்த குற்றத்தை ஒருபோதும் ஒழிக்கமுடியாது. நீதிதேவதை எந்த ரூபத்திலாவது உன்னைத் தண்டிக்கும்போது நீயே உணர்ந்து கொள்வாய் நீதியை அழிக்க முடியாது என்று. அப்பொழுது நீயே உனக்குச் சாட்சியாவாய். நீதிதேவதை தனது கடமையைச் செய்யத் தவறியிருந்திருந்தால் மனிதகுலம் எப்பவோ அழிந்திருக்கும். நீதியும் அழியப்போவ தில்லை, மனிதகுலமும் அழியப்போவதில்லை.

இளைஞர்கள் செய்வது தப்பாக இருக்கலாம். ஆனால் அதைத் தப்பு என்று சொல்லும் யோக்கியதை உமக்கோ அன்றி உம்மைப் போன்றவர்களுக்கோ கிடையாது. ஒரு கொலை காரனுக்குத் தண்டனை வழங்குவதைப் பயங்கரவாதம் என்று அழைத்தால், ஓர் அப்பாவி இளம்பெண்ணைக் கடத்திக் கற்பழித்து சித்திரவதை செய்து இறுதியில் கொலை செய்வதை என்னவென்று அழைப்பது? அது மகாபயங்கரவாதமாச்சே. என்னை விடுதலை செய்துவிட்டு சட்டரீதியான முறையில் என்னுடன் மோதிப்பாருங்கள் என்று சவால் விட்டீர். நீதிதேவதை நீர் சொல்லுகின்ற நீதித்திணைக்களம் பொலிஸ் திணைக்களத்திற்குக் கட்டுப்பட்டவள் அல்ல, இவைகளுக்கு அப்பாற்பட்டவள். நீர் கூறுகின்ற பாதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியாகத்தான் சென்று நீதி வழங்கவேண்டும் என்ற தேவை நீதிதேவதைக்குக் கிடையாது. மனித சமுதாயத்தைப் பாதுகாப்பது தான் நீதி. அது ஒருபோதும் அழிவதில்லை. அதை யாரும் விலைகொடுத்து வாங்கமுடியாது. செல்வாக்குப் படைத்தவர்கள், பணம் படைத்தவர்கள், ஆணவம் கொண்டவர்கள் அதை உணர்வதில்லை. வாலாம்பிகையின் கொலை சம்பந்தமான கோவை நிரந்தரமாக மூடப்பட்டுவிட்டது என்று கீழக்கரைமாவட்ட பொலிஸ் அத்தியட்சகரைக் கொண்டு சொல்லிவித்ததுடன் நீர் தப்பிவிட்டீர் என்றும், நீர் பெரிய கெட்டிக்காரன் என்றும் எண்ணியிருந்திருப்பீர். நீதிதேவதை உமக்குத் தண்டனை வழங்கும்வரை உம்மைப் பின்தொடரப் போகிறாள் என்று நீர் கனவிற்கூட எண்ணியிருக்க மாட்டீர். இப்போ பார்த்தீரா என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்று. மகிழம்பூ என்னும் வேணியிடம் நீர் செய்த கொலையை உன்னுடைய வாயாலேயே சொல்ல வைத்திருக்கிறாள், இதுதான் நீதிதேவதை. நீரும் உம்முடைய கையாட்கள் ஐந்துபேரும் வீடு செல்வதற்கு இப்பொழுது அனுமதிக்கப்படுகின்றீர்கள். நீங்கள் உங்களுடைய வீடுகளுக்குப் போகலாம்.

நாகதேவன்: கடைசி நேரத்திலாவது உங்களுடைய தவறை உணர்ந்து எங்களை விடுவிப்பதற்கு மிகவும் நன்றி.

நீதிபதி: (பொறுப்பாளர் ரங்கனைப் பார்த்து) ரங்கன், இவர்களை விடுவித்து அவரவர் வீடுகளுக்கு அனுப்பிவிடவும்.

ரங்கன்: அப்படியே செய்கிறேன் நீதிபதி அவர்களே.

நீதிபதி: (எல்லோரையும் பார்த்து) வாலாம்பிகை கொலை சம்பந்தமான வழக்கு விசாரணை இத்துடன் முடிவடைந்துவிட்டது. தீர்ப்பு வழங்கல் தற்போது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கூடியவிரைவில் தீர்ப்பு அறிவிக்கப்படும். அதைத் தொடர்ந்து உரிய நேரத்தில் உரிய முறையிற் தீர்ப்பிற்குரிய தண்டனையும் வழங்கப்பட்டு அது நிறைவேற்றப்படும். இங்கு சாட்சியம் அளித்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அத்துடன் இந்த வழக்கைத் திறம்பட நடாத்துவதற்கு உதவிய உளவுத்துறைப் பொறுப்பாளர் ரங்கனுக்கும் அவருடைய குழுவினருக்கும் விசேடமாக மகிழம்பூவாக நடித்த வேணிக்கும் எனது நன்றிகளும் பாராட்டுக்களும். இத்துடன் இந்நீதிமன்றம் இன்று கலைகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அங்கம் 7

**அ**ன்றிரவு ஒரு மணியளவில் நாகதேவன், புடையன், சாரை, கொம்பேறி நால்வரையும் ஜீப்வண்டியில் ஏற்றிச்சென்று நாகதேவனின் வங்களாவில் இறக்கிவிட்டனர். மற்றைய அனைவரும் பாதுகாப்பாகத் தங்களுடைய வீடுகளுக்குச் செல்ல வசதிகள்செய்து கொடுக்கப்பட்டன. வங்களாவை வந்தடைந்ததும் நாகதேவனுக்கு மறுபடியும் தைரியம் வந்துவிட்டது. புடையனையும் சாரையையும் பார்த்து, "நான் குடுத்த குடுவையில் நீதிபதிக்கிருந்த பெடியன் நல்லாய்ப் பயந்து போனான். அதனாலதான் நம்மை வீட்டிற்குக் கொண்டுவந்து இறக்கிவிட்டுப் போகிறான்கள். இவன்களுக்கு நான் யாரென்று இனிமேற் காட்டுகிறேன். நீங்கள் ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். நான் இருக்கும்வரை அவன்களால் நம்மை ஒன்றும் பண்ண முடியாது. இனித்தான் என்னுடைய சக்தியைக் காட்டப் போகிறேன். என்னோடு இருபது வருடங்களுக்கு மேலாக இருந்து சாப்பிட்டுப் பிளைத்த அந்த வேலாசி என்ற தாசிகூட நன்றிகெட்ட நாயாக மாறி எனக்கெதிராகச் சாட்சி சொல்லிப்போட்டாள். அவளுக்கு வைக்கிறேன் வேட்டு. பெடியன்களுடைய தைரியத்தில் எனக்கு அடங்கி ஒடுங்கி வாழ்ந்தவன்களெல்லாம் என்னை எதிர்க்கத் துணிந்துவிட்டான்கள். அவன்களுக்கெல்லாம் நல்ல பாடம் கற்பிக்கிறேன்," என்று கூற நாகதேவனின் வாய்ப்பந்தலைக் கேட்டுக்கொண்டிருந்த புடையன், "ஐயா, நீங்கள் கூறுவதை நான் மறுக்கவில்லை. ஆனால் இனிமேற்தான் நாம் கவனமாய் இருக்க வேண்டும். நடந்து முடிந்த விசாரணையில் அளிக்கப்பட்ட சாட்சியங்களை வைத்துப் பார்க்கும்போது நாங்கள்தான் கொலையாளிகள் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. நீதவானுக்கிருந்த பெடியனுடைய தொகுப்புரையும் உங்களைக் குற்றவாளியாகக் கண்டிருப்பது போலத்தான் அமைந்திருந்தது. தீர்ப்பு இனித்தான் வழங்கப்படவிருக்கிறது. தீர்ப்பு வழங்கப்பட்டு அது உரிய நேரத்தில் நிறைவேற்றப்படும் என்றும் கூறியிருக்கிறான். என்ன தீர்ப்பை வழங்கப் போகிறான்கள், அதை எப்படி நிறைவேற்றப் போகிறான்கள் என்பது யாருக்கும் தெரியாது. நம்மை வீட்டிற்குக் கொண்டுவந்து விட்டுள்ளார்கள் என்பதற்காக நம்மை நிரந்தரமாக விடுதலை செய்துள்ளார்கள் என்று தப்பாக எண்ணப்படாது. பெடியன்கள் இலேசான ஆட்களல்ல, அவன்கள் எதையும் செய்வான்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவம் பொலிசையே எதிர்க்கும் பெடியன்களுக்கு நாம் ஒரு தூசு. சிலவேளை மரணதண்டனை வழங்கி அதையும் நிறைவேற்றக்கூடும். ஆனபடியால் இனித்தான் நாம் ரொம்ப ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும் ஐயா.

இனிமேல் நீங்கள் ஐயா, இந்த வங்களாவிற்கு அடிக்கடி வருவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கோ. வரநேரும்போது இரவு வேளைகளைத் தவிர்த்துப் பகல் நேரத்தில் வாருங்கோ. பகல் நேரத்தில் வரும்போதும் பொலிஸ் பாதுகாப்புடன் வந்து போங்கோ. மற்றும்படி உங்களுடைய யாழ்ப்பாண வீட்டிற் தங்கிப் பாதுகாப்புடன் இருப்பதுதான் உங்களுக்கும் நல்லது எங்களுக்கும் நல்லது. என்னுடைய மூளைக்கு எட்டியதைச் சொல்லியுள்ளேன். நான் கூறியவற்றில் ஏதும் தப்பிருந்தால் என்னை மன்னித்துக் கொள்ளுங்கோ,'' என்று சொல்லி முடிக்க இதைக் கேட்டுக் கொண்டிருந்த சாரை, "ஐயா, புடையன் சொல்லுவது எனக்கும் சரியாகத்தான் படுகின்றது. பெடியன்கள் இலேசான ஆட்களில்லை. அவன்களைச் சாதாரணமாய் எண்ணினால் நமது உயிருக்கே ஆபத்தாய் முடியலாம். விசாரணையைப் பார்க்கும்போது நம்மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன போன்றுதான் தோன்றுகின்றது. நாங்கள் இப்போது வீட்டிற்கு வந்துவிட்டமே என்று எண்ணப்படாது. மறுபடியும் வந்து நம்மைக் கைது செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அவன்கள் அப்படிப்பட்ட ஆட்கள். நாமள் மறுபடியும் கூடித்திரிந்தால் அவன்கள் மேலும் நம்மைக் கண்காணிப்பான்கள். ஆனடியால் இனிமேல் நாம் விலகி நடந்து கொள்ளுவதுதான் புத்திசாலித்தனம்,'' என்று சொல்லி வாய் மூடுவதற்குள் உணர்ச்சிவசப்பட்ட நாகதேவன், "போங்கடா பயந்தாங்கொள்ளிகளா! இவன்களுக்குப் பயந்து நான் வீட்டிற்குள் முடங்கிக் கிடப்பதா! ஒருபோதும் நடக்காது. எனது பலத்தைக் கொண்டு இந்தப் பெடியன்களுக்கு நல்ல பாடம் புகட்டுகிறேன். நான் எப்படிப்பட்ட ஆள் என்று இருந்து பாருங்கோ, போகப்போகத்தான் புரியும் உங்களுக்கும்,'' என்று கர்ச்சித்தான்.

புடையன் நாகதேவனைச் சமாதானப்படுத்தும்பொருட்டு, "ஐயா, எங்களுடைய மனதிற்பட்டதை நாங்கள் வெளிப்படையாய்ச் சொன்னோம். அது தப்பென்றால் எங்களை மன்னித்துக் கொள்ளுங்கோ. நாங்கள் மற்றையவர்களைப் போன்று உங்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு மாறமாட்டோம். எங்களால் இயன்ற உதவியை எப்பொழுதும் செய்துகொண்டுதான் இருப்போம்,'' என்றான். உடனே சாரையும் புடையன் சொன்னதிற்கு ஒத்தூதுவதைப் போன்று, "நாங்கள் ஒருபோதும் உங்களைவிட்டு விலகிப் போகமாட்டோம். நாங்கள் நன்றியுள்ள நாய்கள் ஐயா,'' என்றான். இதைக்கேட்டு ஆறுதலடைந்த நாகதேவன், "இப்பதான் நீங்கள் உண்மையைப் புரிந்துள்ளீர்கள். ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம்,'' என்று கூறியவன் தொடர்ந்து, "நாமள் நல்லாய்க் களைத்துப்போனம், வாங்கோ வெளிநாட்டுச் சரக்கு இருக்கு அடிச்சிட்டுச் சாப்பிடுவம்,'' என்று கூறி அறையிற்குள் இருவரையும் அழைத்துச் சென்றான்.

மறுநாள் நாகதேவனின் ஜீப்வண்டி தாமரைக்குளம் பிரதான வீதியாற் சென்றுகொண்டிருந்தபொழுது அதன்மேற் கல் வீசப்பட்டது. அடுத்தநாள் இரவு ஜீப்வண்டி சென்றுவிட்டுத் திரும்பி வந்தபொழுது பாதைக்குக் குறுக்காகத் தடைகள் போடப்பட்டிருந்தன. மக்கள் தன்னை எதிர்க்கத் தொடங்கிவிட்டார்கள் என்பதன் வெளிப்பாடே இந்தச் செயல்கள் என்பதைப் புரியத் தொடங்கிய நாகதேவன் சிறிது ஆழமாகச் சிந்திக்கத் தொடங்கினான். புடையனும் சாரையும் சொன்னவற்றில் அர்த்தம் உண்டு என்பதை உணரத்தலைப்பட்டான். அதைத் தொடர்ந்து தாமரைக்குளம் பிரதேசத்திற் தனது நடமாட்டத்தைக் குறைத்துக் கொண்ட நாகதேவன் இடைக்கிடை வரும்போது பொலிஸ் பாதுகாப்புடன் வந்து சென்றான். இது தாமரைக்குளப் பிரதேச மக்களுக்கு ஆறுதலையும் மகிழ்ச்சியையும் கொடுத்தது என்றால் மறுப்பதற்கில்லை.

வாலாம்பிகையின் கொலை சம்பந்தமான வழக்கு விசாரணை நடந்து முடிந்து ஆறுமாதங்கள் கடந்துவிட்டன. நாகதேவனும் கையாட்களும் எண்ணினார்கள் இளைஞர்களுடைய ஆட்டம் முடிந்துவிட்டது என்று. பொலிஸ், இராணுவத்தினருடைய நடமாட்டமும் ரோந்து நடவடிக்கைகளும் தாமரைக்குளப் பிரதேசத்தில் அதிகரிக்கத் தொடங்கியது. இது நாகதேவனுக்கும் கையாட்களுக்கும் மேலும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. தனது செல்வாக்கிற்கும் பணபலத்திற்கும் முன்னால் இளைஞர்களால் தொடர்ந்து ஆட்டம்போட முடியவில்லை என்று நாகதேவன் உறுதியாக நம்பினான். அதைத் தொடர்ந்து தனது நடமாட்டத்தைச் சிறிது சிறிதாகத் தாமரைக்குளப் பிரதேசத்தில் அதிகரிக்கத் தொடங்கினான்.

இன்று சனிக்கிழமை, சனிக்கிழமையென்றால் நாகதேவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுக்கு நல்லெண்ணை முழுக்குடன் கூடிய விசேடநாள். சனிக்கிழமைகளில் யாழ்ப்பாணத்து வீட்டிற் தங்கிநின்று தனது செல்வாக்குமிக்க நண்பர்களுடனும் பெரிய புள்ளிகளுடனும் கூடிக் குடித்து வெறித்துக் கும்மாளமடித்து மகிழ்வது வழக்கம். அதன் ஓர் அங்கமாகக் காலையில் ஒரு நண்பனைச் சந்தித்துவிட்டு பதினொரு மணியளவில் வீடு திரும்பினான். தனது பென்ஸ் காரில் வந்திறங்கிய நாகதேவன் காரை வீட்டின்முன் நிறுத்திவிட்டுக் கதவைத்திறந்து கொண்டு கீழே இறங்கினான். அப்பொழுது, "டேய் நாகதேவா," என்று ஓர் இளைஞன் கூப்பிடும் சத்தம் வந்தது. என்னைப் பார்த்து "டேய் நாகதேவா" என்று கூப்பிடும் அளவிற்குத் தைரியம் உள்ளவன் யாரடா என்ற இறுமாப்புடன் சத்தம் வந்த திசையை நோக்கி முறாய்த்துப் பார்த்தபொழுது ஐம்பதுமீற்றர் தூரத்தில் ஒரு மரத்தின் கீழ் நின்றுகொண்டிருந்த ஓர் இளைஞன் ஒரு நவீன ரகத் துப்பாக்கியை நாகதேவனின் நெஞ்சைக் குறிவைத்து நீட்டியதைக் கண்டதும் பதறிப்போன நாகதேவன், ஆணவம் மட்டுமல்ல ஐம்புலன்களும் அடங்கி ஒடுங்கிய நிலையில், "என்னைச் சுட்டிடாத! என்னைச் சுட்டிடாத!!", என்று கெஞ்சும் குரலிற் கத்தினான்.

உடனே அந்த இளைஞன், "உன்னுடைய உயிர் போகப் போகின்றது என்று தெரிந்ததும் உன்னுடைய ஆணவம் மமதை யெல்லாம் அடங்கி உயிருக்காகக் கெஞ்சுகிறாய், பார்த்தியா! ஏன்? உனது உயிருக்கு அவ்வளவிற்கு மதிப்புக் கொடுக்கிறாய், அப்படித்தானே? உயிர் அந்தளவிற்கு பெறுமதிமிக்க ஒன்று. அதை நானும் ஒத்துக் கொள்ளுகிறேன். இப்படித்தானே அந்த வாலாம்பிகை என்ற பெண்ணும் தனது உயிருக்காக உன்னைக் கெஞ்சியிருக்கும். உன்னுடைய காலைப்பிடித்துக் கிராவி அழுதிருக்கும். உன் காலில் விழுந்து மண்டியிட்டுக் கேட்டிருக்கும். அப்பொழுது நீ இரங்கினியா? கருணை காட்டினியா? இல்லையே!! இப்பமட்டும் உன்னுடைய உயிர் போகப்போகின்றது என்று தெரிந்ததும் கெஞ்சுகிறாய், கிராவுகிறாய்" என்றதும்,

"தப்புத்தான், நான் செய்தது தப்புத்தான், என்னை மன்னித்து வாழவிட்டிடுங்கோ. என்னைக் கொன்றிட வேண்டாம், என்னைக் கொன்றிட வேண்டாம்," என்று நடுங்கிக்கொண்டே இரந்து வேண்டினான். உடனே அந்த இளைஞன், "அப்ப... நீதானே அந்தப் பெண்ணை கொலை செய்தனீ?" என்று கேட்டதும், பதில் சொல்லத் தட்டுத்தடுமாறிய நாகதேவன் சிறிது யோசித்துவிட்டு, "நீ என்ன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுகிறாய்! நான் கொல்லவில்லை, அவளை நான் கொல்ல வில்லை", என்று புலம்பினான். உடனே முதலாம் வெடி தீர்ந்தது. குண்டு தலைக்கு மேலாற் போனது என்பதை உணராத நாகதேவன், "அடா பாவி! என்னைக் கொன்றுவிட்டாயா?" என்று அலறினான். சில விநாடிகளிற் தான் சாகவில்லை என்பதை உணர்ந்து கொண்ட நாகதேவன் அந்த இளைஞனை விழித்துப் பார்த்தான். உடனே இளைஞன், "நீ என்ன சொன்னாய்? என்னைப் பார்த்துப் பாவி என்று சொன்னாய். நான் உன்னைக் கொன்றுவிட்டேன் என்று எண்ணிக் கொண்டு என்னைப் பாவி என்று சொன்னாய். அப்படியென்றால் வாலாம்பிகையை ஈவிரக்கமின்றிக் கொலை செய்த நீயும் ஒரு பாவிதானே?"

என்று கேட்டதும், உண்மையை ஒப்புக்கொண்டாவது தனது உயிரைக் காப்பாற்றிவிட வேண்டுமென்ற வேகத்தில், "நானும் பாவிதான்," என்றான். உடனே அந்த இளைஞன், "அப்ப... நீதானே வாலாம்பிகையைக் கொலை செய்தனீ?" என்று கேட்டான். உடனே, "நான்தான் வாலாம்பிகையைக் கொலை செய்தனான்," என்று உரத்த குரலிற் சொன்னான் நாகதேவன்.

கதையைத் தொடர்ந்த இளைஞன், "அப்ப... மகிழம்பூவாக நடித்த வேணியிடம் நீ சொன்னதெல்லாம் உண்மைதானே?" என்று கேட்டதும், மேலும் உண்மைகளை ஒழிக்க முடியாது என்பதையும், உண்மையைச் சொல்லியாவது உயிரைக் காப்பாற்றிவிட வேண்டுமென்ற எண்ணத்திலும், "உண்மைதான், அவள் ரேப்பில் பதிந்ததெல்லாம் உண்மைதான்," என்று மார்பால கண்ணீர் வழிந்தோடிய நிலையிற் சொன்னான். உடனே இளைஞன், "அப்படியானால் நீ நீதிமன்றத்திற் சொன்னதெல்லாம் பொய்தானே? சொன்னதும் பேசியதும் பொய்யும், நடிப்புந்தானே?" என்று கேட்டான். உண்மை முழுவதையும் சொன்னால் தன்னை மன்னித்து விடுவான்கள், எனவே உண்மை முழுவதையும் ஒத்துக் கொண்டாவது உயிரைக்காப்பாற்றி விடவேண்டுமென்ற எண்ணத்தில் உயிர்ப்பிச்சை கேட்பவன் போன்று, "நான் சொன்னதெல்லாம் பொய்தான். நான் நடந்துகொண்ட தெல்லாம் நடிப்புத்தான்," என்றதும், அந்த இளைஞன், "சரி... என்னுடைய கடமை முடிந்து விட்டது. உண்மையை உன்னுடைய வாயால் சொல்லிவித்து அதை ஒத்துக் கொள்ளப் பண்ணவேண்டும் என்பதுதான் எனக்குக் கொடுக்கப்பட்ட வேலை. இப்பொழுது எனது வேலை முடிந்து விட்டது. உனக்கும் எனக்கும் இடையில் எந்தக் கொடுக்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கலும் கிடையாது. கொடுக்கல் வாங்கல் நரகாசுரனுக்கும் கண்ணபிரானுக்கும் இடைப்பட்டது. அதை கண்ணபிரானே பார்த்துக் கொள்ளுவான். நான் போயிட்டு வாறன்,'' என்று கூறிவிட்டு ஓர் ஓட்டைச் சைக்கிளில் ஏறிப் புறப்பட்டான். உடனே நாகதேவன், "இனிமேல் எனக்கு மரணதண்டனை வழங்கமாட்டீங்கள்தானே?'' என்று ஆர்வத்துடன் கேட்டான். சயிக்கிளை நிறுத்திய இளைஞன் தலையைத்திருப்பி, "அது என்னுடைய கையில் இல்லையப்பா. அதுதானே சூசகமாய்ச் சொன்னேன் கொடுக்கல் வாங்கல் நரகாசுரனுக்கும் கண்ணபிரானுக்கும் இடைப்பட்டதென்று. அவனே பார்த்துக் கொள்ளுவான். எனது கடமை இத்துடன் முடிந்துவிட்டது,'' என்று மறுபடியும் கூறிவிட்டுத் தொடர்ந்து சென்றான். மறுகணமே நாகதேவன்,

"பண உதவி ஏதும் தேவைப்பட்டால் என்னிடம் வாருங்கோ,'' என்று உரத்த குரலிற் சொன்னான். அதற்கு இளைஞன் சைக்கிளில் ஓடிக்கொண்டபடியே,

"கண்ணபிரானுக்குப் பணம் தேவையென்றால் அவன் உன்னிடம் வருவான். அப்பொழுது இருவரும் பேசிக்கொள்ளுங்கோ,'' என்று சொல்லிக்கொண்டு வேகமாகச் சென்று மறைந்தான்.

ஒதியமலையில் நாகதேவனுக்கு நூறு ஏக்கர் நெல் வயற்காணி உண்டு. வேளாண்மைக் காலத்தில் இடையிடையே நாகதேவன் அங்கு சென்று வருவது வழக்கம். விசாரணை



முடிந்து சரியாக ஏழாவதுமாதம் ஒரு வெள்ளிக்கிழமை மதியம் பன்னிரண்டு மணியளவில் நாகதேவன் அங்கு சென்று விட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்தபோது ஒதியமலைச் சந்தியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டான். இந்தச் செய்தி யாழ்ப்பாணக் குடாநாடு, கீழக்கரைப் பிரதேசம், கிளிநொச்சி முழுவதும் காட்டுத்தீ போற் பரவியது. தாமரைக்குளம் மக்கள் அன்று தீபாவளிப் பண்டிகை கொண்டாடினார்கள் என்றால் மிகையாகாது. தாமரைக்குளம் பிரதேசத்தின் நரகாசுரன் அழிக்கப்பட்ட திருநாள் அன்று.


நாகதேவனின் மரணத்தைக் கேள்விப்பட்டதும் வேலாசிக்கு அவளையே தெரியாமல் வந்த ஒரு கவலை அவளது நெஞ்சை இறுக்கியது. அதன் விளைவாகச் சில கண்ணீர்த்துளிகள் அவளது கண்களில் இருந்து உதிர்ந்தன. இதற்குரிய காரணம் தின்சோற்றுக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன் என்பதை உணர்ந்து கொண்ட வேலாசி மறுநிமிடமே மனதைத் தேற்றிக்கொண்டு,

"நாமென்ன செய்வது! வினை விதைத்தவன் வினை அறுப்பான், தினை விதைத்தவன் தினை அறுப்பான். இதுதான் உலக நியதி. உலக நியதியை யாரால் நிறுத்த முடியும்! எல்லாம் அவன் செயல்!!" என்று மனதினுட் கூறிக்கொண்டு சாதாரண நிலைக்குத் திரும்பினாள் வேலாசி.

அடுத்தகிழமை புடையன் சுட்டுக் கொல்லப்பட்டு, அவன் உடல் மின்கம்பத்தோடு கட்டப்பட்டது. இரண்டு கிழமைகள் கழித்து சாரை சுடப்பட்டு அவனது உடலும் மின்கம்பத்தோடு கட்டப்பட்டது. இவ்வாறு மூவருக்கும் வழங்கப்பட்ட தண்டனை நிறைவேற்றப் பட்டது. கொடியவர்களின் அழிவைப் பார்த்து மக்கள் மகிழ்ச்சியிற் திழைத்தனர். சட்டம் சிலவேளை தடுமாறலாம், ஆனால் தர்மம் எப்போதும் பழிவாங்கியே தீரும். தர்மதேவதை ஒருபோதும் தூங்குவதேயில்லை.



## அங்கம் 8

**நா**கதேவனும் அவனுடைய அடியாட்களும் இறந்து ஓராண்டு கடந்தோடிவிட்டது. தாமரைக்குளம் காவல் நிலையத்தில் வேலை பார்த்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரும் இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டார்கள். இப்பொழுதும் முருகன் தாமரைக்குளம் மகாவித்தியாலயத்திலேயே கடமையாற்றி வந்தான். அவனுடைய பெற்றோர் மாற்றம் பெற்றுக்கொண்டு யாழ்ப்பாணத் திற்கு வரும்படி அவனை வற்புறுத்தியபோதும் அவன் அதற்குச் சம்மதிக்கவில்லை. அந்தக் கிராமத்தைவிட்டுப் போவதற்கு அவனு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைய மனம் இடங்கொடுக்கவில்லை என்றால் ஏற்புடைத்தாகும்.

ஒருநாள் மதிய உணவு இடைவேளையிற் தாமரைக்குளம் பொதுச்சந்தைக்கு முருகன் சென்றுகொண்டிருந்தபொழுது எதிர்பாராதவிதமாக வேணியைச் சந்திக்க நேர்ந்தது. அவளைக் கண்டவுடன் அவளுடன் நிறையப் பேசவேண்டும்போல் இருந்தது. ஆனால் உடனே பேச்சு வரமறுத்தது. அவனுடைய முகத்தையும் கண்களையும் கூர்ந்து அவதானித்த வேணி, அவன் ஏதோ கதைக்க முனைகிறான் ஆனால் அவனால் முடியாமல் இருக்கின்றது என்பதைப் புரிந்துகொண்டு, சரி தானாவது கதையை ஆரம்பிப்பம் என்ற எண்ணத்துடன், "எப்படி முருகன் இருக்கின்றீங்கள்?" என்று கேட்டதுதான் தாமதம் அவனுடைய முகம் சிவந்தது, முகத் தசைகள் உதடுகள் துடித்தன. மேகம் கறுத்தது, மின்னல் கிளித்தது, இடி முழங்கியது, திடீரென்று மழை பொழிந்தது போன்று அவனுடைய கண்களிலிருந்து பொலுபொலுவெனக் கண்ணீர்த் துளிகள் உதிர்ந்தன. எதிர்பாராத விதமாய் வீறிட்டு அழத் தொடங்கினான். உடனே அவனுடைய வலது கை காற்சட்டைப் பையிற்குட் சென்று கைக்குட்டையை எடுத்துவந்தது. முகத்தைப் பொத்திக் கொண்டான். இருந்தபோதும் உடனே அழுகையை நிறுத்த முடியவில்லை. சிறிது நேரம் விம்பி விம்மி அழுதான். வேணி எதுவுமே பேசவில்லை. அழுதால் மனக்குமுறல் குறையும் என்ற எண்ணத்துடன் பேசாமல் நின்றாள் வேணி. சில நிமிடங்கள் கழித்து அழுகையை நிறுத்திக்கொண்ட முருகன் கைக்குட்டையால் முகத்தை நன்கு துடைத்துக் கொண்டு,

"சொறி, என்னை மன்னித்துக்கொள்ளுங்கோ. உங்களைப் பார்த்ததும் என்னை அறியாமலேயே அழுகை வந்துவிட்டது. உங்களுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தியிருந்தால் மன்னித்துக் கொள்ளுங்கோ," என்றதும், "அப்படி ஒன்றுமில்லை. அழுதால் மனப்பாரம் குறையு மென்று அனுபவசாலிகள் சொல்லுவார்கள். அதனாற்றான் அழுகை முடியும்வரை நான் பேசாமல் நின்றேன். உங்களுடைய அழுகை யிலிருந்து ஒன்றுமட்டும் வெளிப்படை. அதை நான் சொல்லித்தான் நீங்கள் தெரியவேண்டுமென்றில்லை,"

என்று கூறியதும், "உண்மைதான் வேணி. என்னுடைய மனதிற்குள் நிறைந்திருக்கும் கவலைகளையும் வேதனைகளையும் நான் சொல்லித்தான் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற அவசியமும் இல்லை.

உங்களைச் சமூகப் பாதுகாப்பு நீதிமன்றிற் கடைசியாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்த பிற்பாடு இப்பொழுதுதான் மறுபடியும் பார்க்கிறேன். ஏனோ தெரியாது உங்களைப் பார்த்தவுடன் என்னை அறியாமலேயே அழுகை வந்துவிட்டது. காரணம், என்னை நன்கு அறிந்த உங்களை மறுபடியும் சந்தித்தது எனது நெருங்கிய உறவொன்றைச் சந்தித்தது போன்ற உணர்வை ஏற்படுத்தியிருந்தது," என்று சொன்ன முருகன் தொடர்ந்து,

"நீங்கள் எப்படி இருக்கின்றீங்கள்?" என்று கேட்டான்.

"எனக்கென்ன குறைச்சல். நான் நல்லாய்த்தான் இருக்கிறேன்," என்று சொல்லிவிட்டு, "நான் கேட்டதிற்கு நீங்கள் இன்னும் பதில் சொல்லவில்லையே? என்றாள் வேணி.

"என்னைப்பற்றிச் சொல்ல என்ன கிடக்கு! எல்லாம் முடிஞ்ச கதை. ஆனால் என்னுடைய தொழிலை மட்டும் கைவிடாமல் ஒழுங்காய்ச் செய்து வருகிறேன். தொழிலை விட்டால் மற்றையவர்களுக்குப் பாரமாய் அமைந்துவிட வேண்டிய நிலமை ஏற்படும். அல்லது பிச்சைக்காரனாக மாறவேண்டி வரும். அவற்றை நான் விரும்ப வில்லை. அவற்றிற்கும் மேலாகப் பாடசாலையிற் கற்பிக்கும் மணித்தியாலங்கள்தான் எனது நிம்மதியான நேரம் என்றால் மறுப்பதற்கில்லை.

இப்பொழுதும் தாமரைக்குளம் மகாவித்தியாலயத்திற்றான் கற்பித்துக் கொண்டிருக்கிறேன். என்னமோ ஏதோ தெரியாது இந்தக் கிராமத்தை விட்டுப் போவதற்கு மனம் வருகுதில்லை. பாடசாலை அதிபரும் இங்கேயே தொடர்ந்து தொழில் புரியும்படி கேட்டுக்கொண்டார். மாணவர்களுக்கும் என்மீது ரொம்பப்பிரியம். அம்மாவும் அப்பாவும் யாழ்ப்பாணத்திற்கு வரும்படி வற்புறுத்து கிறார்கள். பொறுத்திருந்து பார்ப்பம் காலம் என்ன பதில் சொல்லுகிறதென்று," தனது உள்ளக்கிடக்கையைச் சொல்லி முடித்த முருகன் தொடர்ந்து,

"ஒரு வருடத்திற்குப் பிற்பாடு உங்களை மறுபடியும் பார்க்கிறேன். தப்பில்லை என்று எண்ணினால் வாங்கோவேன் அந்தக் கடையிற் தேனீர் அருந்திவிட்டுப் போகலாம். உங்களுடைய உயிரையே பணயம் வைத்துக் கொலைகாரன்களைக் கண்டுபிடித்து அவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுக் கொடுத்த உங்களுக்கு இதைத்தானும் செய்யாவிட்டால் என்ன மனிதன் நான்," என்றான்.

உடனே சிறிதாய்ப் புன்னகைத்துவிட்டு, "தேனீர் குடிக்கப் போவதிற் தப்பென்ன இருக்கு! உங்களுடைய விருப்பத்தை ஏன் கெடுப்பான். எனக்கு அப்படிச் செய்து பழக்கமும் இல்லை. வாங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவம்,'' என்றாள். இருவரும் அருகிலிருந்த உணவகத்திற்குச் சென்று உட்கார்ந்து கொண்டனர். பையன் ஒருவன் வந்து, "என்ன சார் சாப்பிடுகிறீங்கள்?'' என்றான். உடனே முருகன், "இரண்டு கீரை வடையும் இரண்டு வாழைப்பழமும் கொண்டு வா தம்பி அப்புறம் இரண்டு தேனீர் கொண்டு வா,'' என்றதும், பையன் நான்கு வடையும் இரண்டு வாழைப்பழமும் கொண்டு வந்து வைத்தான். அதைப் பார்த்த வேணி, "என்ன முருகன், இரண்டு வடை கேட்டதற்கு நான்கு வடை கொண்டு வந்து வைத்து விட்டுப் போகிறான்,'' என்றாள். அதற்கு "இதுதான் வியாபாரம். முதலாளி நல்ல பயிற்சி கொடுத்து வைத்திருக்கிறார் பையனுக்கு. சாப்பிட்டுக்கொண்டு போகும்பொழுது அதன் சுவை பிடித்துக் கொண்டால் நான்கையும் சாப்பிட்டு விடுவினம் என்ற எதிர் பார்க்கைதான். பிடித்துக் கொண்டால் இரண்டை மட்டுமல்ல மூன்றையும் சாப்பிடலாம் நீங்கள்,'' என்றான் சிரித்துக் கொண்டே. பதிலுக்கு வேணி சிரித்துவிட்டு,

"நானா! இந்தப் பெரிய வடை மூன்றையா?'' என்று ஏக்கம் கலந்த தொனியிற் கேட்டாள். "உங்களை யாரும் வற்புறுத்த வில்லை. சுவை பிடித்துக் கொண்டாற்தான் என்றேன்,'' எனச் சொல்லியதும், புன்நகைத்தபடியே ''அப்படியா'', என்று கூறிக்கொண்டு வடையை எடுத்துச் சாப்பிடத் தொடங்கினாள். அவளைத் தொடர்ந்து முருகனும் சாப்பிடத் தொடங்கினான். சாப்பிட்டு முடித்துத் தேனீரும் குடித்தாகிவிட்டது. முருகன் ஒரு தடவை பையனை நிமிர்ந்து பார்த்தான். பையனுக்குப் புரிந்துவிட்டது புறப்படத் தயாராகிவிட்டார்களென்று. மறுநிமிடம் கணக்குச் சிட்டையோடு வந்தான் பையன். அவன் பல மாதங்களாக முருகனுக்கு உணவு பரிமாறுகின்றவன் என்ற முறையிலோ என்னவோ அவர்களிடம் ஏதோ கேட்க வேண்டும்போல் அவனது வாய் துருதுருத்தது. முருகன் சிட்டையைப் பெற்றுக்கொண்டு எழுந்தபொழுது, "சார் கட்டிக்கப் போற பொண்ணா? மூக்கும் முழியுமாய் ரொம்ப அழகாயிருக்கிறாங்க மகாலட்சுமி மாதிரி,'' என்றான் சிரித்துக் கொண்டே. பதிலுக்குச் சிரித்துவிட்டு,

"விடமாட்டீங்களே, ஓர் இளம் பொண்ணும் ஆணும் சேர்ந்து போனால்,'' என்றதும். "அப்படி ஒன்றுமில்லை சார். வழமையாகத் தனியனாக வருவீங்கள். இன்று சோடிப்பொருத்தமான ஒரு பெண்ணோடு வந்திருக்கிறீங்கள். உங்கள் மீது அன்பும் மதிப்பும் வைத்திருக்கிறவன் என்ற முறையில் வாய் துருதுருவென்றிருந்தது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டுவிட்டேன், அவ்வளவும்தான். தப்பாக ஒன்றும் எடுத்து விடாதீங்க சார்,'' என்று பணிவுடன் வேண்டினான். உடனே முருகன் சிரித்துவிட்டு,

''இதிலென்ன தம்பி தப்பிருக்கு? நானும் சும்மா பகிடியாய்த்தான் சொன்னேன். அப்ப... போயிட்டு வரட்டுமா?'' என்று கூறிக்கொண்டு வெளியேறினார்கள் இருவரும். வெளியே வந்ததும் வேணியைப் பார்த்து, ''பையனுக்கு என்னுடைய பழைய கதையொன்றும் தெரியாது. அதனாற்தான் கேட்டவன் அப்படி. வஞ்சகமில்லாத தங்கமான பையன். நான் அங்கு போகும்போதெல்லாம் அந்தப் பையன்தான் என்னைக் கவனிப்பான்,'' என்று சொன்னான்.

''ஓ அப்படியா! அவன் கேட்டதிற் தப்பொன்றுமில்லை. அந்தப் பையன் உங்களோடு கள்ளங்கபடம் இல்லாமல் அன்பாதரவாய்ப் பழகுகின்றபடியால் வெளிப்படையாய் வஞ்சகமில்லாமல் அப்படிக் கேட்டான். அது பரவாயில்லை. நம்மைப் பார்க்கும் இன்னும் எத்தனை பேர் எம்மிடம் கேட்காவிட்டாலும் தங்கள் மனதிற்குள் என்னென்னவோ எல்லாம் நினைத்துக் கொண்டு போகின்றார்களோ, யாருக்குத் தெரியும்? வாலாம்பிகை உயிருடன் இருந்திருந்தால் இந்த நிலமை ஏன் உங்களுக்கு உருவாகியிருக்கப் போகின்றது. அது போகட்டும், அவளுடைய தலைவிதிப்படி அவள் போய்ச் சேர்ந்தாள் என்று வைத்துக் கொள்ளுவம். அதை ஞாபகப்படுத்தி உங்களுடைய மனவேதனையைப் புதுப்பிக்க விரும்பவில்லை,'' என்று கூறியவள் தொடர்ந்து, ''நான் கேட்கிறேன் என்று குறை நினைக்க வேண்டாம். வாலாம்பிகை இறந்தும் இரண்டு வருடங்களாகப் போகின்றது. இனிமேலும் நீங்கள் இப்படியே தனிமரமாய் நின்று வாறவன் போறவன்களுடைய நொட்டற் கதைகளுக்கு ஏன் ஆளாகவேண்டும்.

நான் உங்களிலும் பார்க்க வயதிற் குறைந்தவள். உங்களைப் போன்று அதிகம் படித்தவளும் அல்ல. ஆனபடியால் உங்களுக்குப் புத்திமதி சொல்லுவதற்கு எனக்குத் தகுதி இல்லை என்பதை நான் உணர்வேன். இருந்தபோதும், உங்களைப் பற்றி நன்கு அறிந்தவள் என்ற ரீதியில் எனது மனதிற் பட்டதைச் சொல்ல விரும்புகிறேன். வாழ்க்கையிற் சோதனைகள், வேதனைகள், இழப்புக்கள், அவமானங்கள் வருவது இயற்கை. இவற்றை எந்தக் கொம்பனாலும் தடுத்து நிறுத்த முடியாது. இவைகள் அனைத் தையும் தாண்டித்தான் நாம் வாழ்ந்து முடிக்க வேண்டும். இவை களைக் கண்டு பயந்து, சோர்ந்து கோழையாகப் போய்விடக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையை வெறுத்து ஒதுக்கிவிடக்கூடாது. நமது வாழ்க்கையை நாமே அழித்துக் கொள்ளவும் கூடாது. இப்படியெல்லாம் எமது முற்சந்ததியினர் செய்திருந்தால் எமது மனிதகுலம் எப்பவோ அழிந்திருக்கும். அப்படி நடந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் எமது முன்னோர் வாழ்க்கை வாழ்வதற்கே என்று அழுத்தம் திருத்தமாய்ச் சொல்லி வைத்தார்கள்.

என்னடா, எனது உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல் இப்படியெல்லாம் கதைக்கிறாளே என்று நினைக்க வேண்டாம். மற்றையவர்களுடைய உணர்வுகளை நன்கு புரிந்துகொள்பவள் நான். ஆனபடியாற்தான் நான் என்னையே தியாகம் செய்து எனது கிராம மக்களைக் காப்பாற்ற முற்பட்டேன், அதில் வெற்றியும் பெற்றேன். இன்று எந்தவொரு பெண்ணும் எனது கிராமத்தில் நடு இரவிற்கூடத் தனியாகப் போய்வர முடியும்.

நீங்கள் எனது கிராமத்தில் நிகழ்ந்த மிகப்பெரிய ஒரு கொடிய நிகழ்வினாற பாதிக்கப்பட்டு வாழ்க்கையை இழந்து நிற்கிறீர்கள். இந்தக் கிராமத்தைச் சேராதவராய் இருந்தபோதும், இந்தக் கிராமத்துப் பெண் ஒருத்தியைக் காதலித்த படியினாற்தான் உங்களுக்கு இந்த நிலமை ஏற்பட்டது. நான் இந்தக் கிராமத்தைச் சேர்ந்தவள் என்ற முறையில் உங்களுடைய இழப்பில், சோகத்தில் எனக்கும் பங்குண்டு. அந்த வகையில் உங்களுக்கு ஆலோசனை கூறுவதற்கு எனக்கும் உரிமையுண்டு. அந்தத் துர்ப்பாக்கிய நிகழ்வு ஏற்பட்டு இரண்டு வருடமளவில் கடந்து சென்றுவிட்டபோதும், இந்தக் கிராமத்தை விட்டுப்போக மனம் ஒப்புதல் அளிக்கவில்லை என்று கூறுகின்றீர்கள். தொடர்ந்தும் இந்தக் கிராத்திற்தான் வாழப்போகின்றீர்கள் என்று விரும்பினால் அதற்கு என்னால் உதவ முடியுமா என்பதை அறியத் தயாராய் இருக்கிறேன். முடிந்தால் நிச்சயம் உதவி பண்ணுவேன். நான் உங்களிடம் எதிர்பார்ப்ப தெல்லாம் நீங்கள் உங்களுக்கென்று ஒரு புதிய வாழ்க்கையைத் தைரியத்தோடு ஆரம்பித்து, எதிர்காலத்திற் சீரும் சிறப்புமாய் வாழவேண்டும் என்பதுதான். அப்படி நீங்கள் வாழ்ந்தாற்தான் நான் செய்த சேவைக்கும் தியாகத்திற்கும் அர்த்தமேற்படும். இப்படி உங்களைத் தனிமரமாய்ப் பார்க்கும்போது எனது மனம் உண்மையிலேயே பெரும் சங்கடத்திற்குட்படுகின்றது. இதற்காகவா இந்தப்பெரிய தியாகத்தைச் செய்தனான்?

டாக்டர்கள் சில நோயாளிகளிடமிருந்து அவர்களுடைய மாசுபட்ட இரத்தத்தை வெளியே எடுத்துவிட்டுச் சுத்தமான புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தம் ஏற்றுவார்கள். அதுபோன்று உங்களுக்கு, தற்போது உங்களுடைய உள்ளத்தில் உறைந்து கிடக்கும் மாசு படிந்த எண்ணங்களையும் உணர்வுகளையும் வெளியே எடுத்துப்போட்டு, புதிய எண்ணங்களையும் உணர்வுகளையும் புகுத்தவேண்டும். அந்த வேலையை இந்த நிமிடத்திலிருந்தே செய்யுங்கோ. உங்களை நீதிமன்றத்திற் பார்த்த பிற்பாடு இன்றுவரை சந்திக்காத படியினால் உங்களுடைய விடயத்தில் எதுவும் செய்ய எனக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. இனிமேல் விடமாட்டேன். இனிமேல் உங்களை எங்கு சந்திப்பது?'' என்று கேட்டுவிட்டுப் பதிலுக்காக விழித்துப் பார்த்தாள். அவளுடைய பார்வையிலிருந்து இனிமேற் தப்பித்துக்கொள்ள முடியாதுபோலும் என்று எண்ணிய முருகன்,

"உங்களுடைய வீடு எங்குள்ளது என்று சொல்லுங்கோ நானே வந்து உங்களைச் சந்திக்கிறேன். உங்களுடைய கிராமத்தின் மீது மட்டுமல்ல, உங்களுடைய கிராமத்திற்கு வந்ததற்காக என்மீதும் இவ்வளவு அக்கறை காட்டுகின்றீர்களே, அப்படிப்பட்ட உங்களை இன்றுடன் தூக்கி எறிந்தது போன்று நடந்துகொண்டால் என்னுடைய படிப்பிற்கும் அறிவிற்கும் மட்டுமல்ல, ஆண்டவன் கொடுத்த பகுத்தறிவிற்கே அர்த்தமற்றுப் போய்விடும். கல்யாணம் பண்ணுவதா விடுவதா என்பது அப்புறம் பார்க்கிற விடயம்.

இப்போது நீங்கள் உங்களுடைய கிராமத்தின்மீதும், என்மீதும் காட்டுகின்ற அன்பு, பாசம், அக்கறை இருக்கே அதற்கு நான் தலைவணங்குகிறேன். ஆனபடியால் வெகுவிரைவில் நான் உங்களை மறுபடியும் பார்ப்பேன், போதுமா?'' என்றான் சிறி யபுன்னகையுடன். பதிலுக்குப் புன்நகைத்தபடியே "விலாசத்தைச் சொல்லுகிறேன் கவனமாய்க் கேளுங்கோ,'' என்றவள் தொடர்ந்து "எனது வீடு தாமரைக்குளம் கிராமத்தின் தென்கிழக்கு மூலையில் அமைந்துள்ளது. அதாவது கடற்கரையை அண்டிய பகுதி. அந்த இடத்தைச் சங்கோடை என்று அழைப்பார்கள். சங்கோடைச் சந்திக்கு எப்படிப் போவது என்று கேட்டால் எவரும் சொல்லுவார்கள். சங்கோடைச் சந்திக்கு வந்து அதில் நின்றுகொண்டு புறோக்கர் செல்லக்கண்ணு வீடு எங்குள்ளதென்று கேளுங்கோ பச்சைக் குழந்தைகூடக் காட்டிவிடும். அப்புறம் என்ன, போயிட்டு வரட்டுமா?'' என்று கேட்டவள் புன்னகைத்துவிட்டுத் திரும்பி வேகமாக நடக்கத் தொடங்கினாள். அவளின் நடையின் வேகம், துடிப்பு, நிதானம், உடல் அசைவுகள் எல்லாம் அவள் சுறுசுறுப்பும் தன்நம்பிக்கையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட ஒரு பெண் என்பதை வெளிப்படுத்தி நின்றன. சில நிமிடம் தன்னை அறியாமலேயே அவளைப் பார்த்துக் கொண்டு நின்றான் முருகன். அந்தளவிற்கு அவள் கவர்ச்சியானவள் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

வேணியைச் சந்தித்ததிலிருந்து முருகனுடைய மனம் பெரும்மாற்றம் பெறத் தொடங்கியது. தனது எதிர்காலம் தன்னுடைய காதலி வாலாம்பிகையின் ஞாபகத்துடனேயே முடிவடைய வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்த முருகனுக்கு வேணி அளித்த ஆலோசனைகளும், அவளுடனான சந்திப்பும் அவனைத் தலைகீழாய்ப் புரட்டிப் போட்டன என்றால் மிகையாகாது. இதனாற் பின்வந்த நாட்களில் வாலாம்பிகையின் ஞாபகம், தனது எதிர்காலம் இரண்டையும் போட்டுப் புரட்டிப் புரட்டி அடித்ததில் அவனுடைய மண்டையே வெடித்திடும் போலிருந்தது. வேறு வார்த்தையிற் சொன்னால் வாலாம்பிகையின் ஞாபகம், பெற்றோரின் வற்புறுத்தல், வேணியின் ஆலோசனைகள் எல்லாம் சேர்ந்து ஒரு மாதமளவில் அவனைப் புரட்டி எடுத்ததெனலாம். இறுதியில் வாழ்வா? சாவா? என்ற முடிவிற்கு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. சிந்திக்கத் தொடங்கினான். மனித வாழ்க்கையில் வேதனை, சோதனை, சாதனை, இலாபம், நட்டம், வெற்றி, தோல்வி, பிறப்பு, இறப்பு இவை யாவும் இயற்கை. இவற்றிற்கான காரணங்களைச் சந்தர்ப்பம் சூழ்நிலைக்கேற்பப் பலர் பலவாறு கூறினாலும், இவற்றிற்கான உண்மைக் காரணங்களை இதுவரை எவரும் கண்டுபிடித்தது மில்லை, அவற்றை வெற்றி கொண்டதும் இல்லை. இவற்றிற்கான போராட்டந்தான் மனிதனுடைய வளர்ச்சியாகக் கருதப்படுகின்றது.

அப்பாவிப் பெண் வாலாம்பிகை கொலை செய்யப்பட்டாள், ஏன்? அவளைக் கொலை செய்த நாகதேவனும் அவனுடைய கையாட்களும் கொலை செய்யப்பட்டார்கள், ஏன்? இன்று தமிழ் மக்கள் வகை தொகையின்றிக் கொலை செய்யப்படுகின்றார்கள், ஏன்? எது நடந்தாலும் அவற்றை ஏற்றுக்கொண்டு முடிந்தால் வாழவேண்டிய நிலையிற்தான் மனிதன் இருக்கிறான். அதற்கு மேல் அவனால் எதையும் தடுத்து நிறுத்த முடிவதில்லை. விஞ்ஞானம், தொழில்நுட்பம், அறிவியல், ஆராட்சி என்று மனிதன் அலட்டிக் கொள்கிறான். அவற்றின் வளர்ச்சியின் உச்சம்தான் அணுவாயுத உற்பத்தி. அது எதற்குப் பயன்படுகின்றது? தன்னைத்தானே அழித்துக் கொள்ளுவதற்குத்தானே! அறிவியல், அரசியல் விஞ்ஞான வளர்ச்சி என்றெல்லாம் பெருமை பேசுகிறான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன். இன்று இலங்கையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அட்டூழியங்களை, கொலைவெறி ஆட்டங்களை, மனித அவலங் களைத் தடுத்து நிறுத்த இவற்றால் முடிந்ததா? இல்லையே!! இவற்றை எல்லாம் பார்க்கும்போது மனிதனின் ஆட்டம் - சுத்திச் சுத்திச் சுப்பர் கொல்லையிற்குட்தான் - என்பது போன்றுதான் தென்படுகின்றது. இதுதான் யதார்த்தம். மனிதனால் இயற்கையை வெல்ல முடியாது. கடவுள் நம்பிக்கை உடையவர்கள் மனிதனாற் கடவுளை வெல்ல முடியாது என்பார்கள். ஏன்? என்று கேட்கிறீர்களா? மனிதனின் செயற்பாடுகள் எல்லாம் இறைவனின் எதிர்பார்க்கைக்கு எதிரானவை. மனிதனுக்கு இறைவன் கொடுத்த மனச்சாட்சியை அவன் தூக்கி எறிந்துவிட்டு, தனக்கென்று ஒரு மனச்சாட்சியை உருவாக்கிக்கொண்டு அதன்படி அவன் அட்டூழியங்களைப் புரிகிறான். இந்த நிலையில் எப்படி மனிதன் வெல்லுவதை இறைவனால் அனுமதிக்க முடியும்? என்று பலவாறு சிந்தித்த முருகன் இறுதியில் எது எப்படியாயினும் பிறந்த மனிதன் வாழ்ந்துதான் ஆகவேண்டும் என்ற எம்முன்னோர் முடிவிற்கு வந்தான். இறைவன் ஏன் நம்மைப் படைத்தான்? துன்பம், துயரம், இழப்புக்களைக் கண்டு நம்மை நாமே அழித்துக் கொள்ளு வதற்காகவா? இல்லை! இல்லவே இல்லை!! வாழ்க்கை வாழ்வதற்கே. வாராது வந்தாலும் சோராதே மனமே. வாழ்! வாழ்ந்து முடி!! மிகுதி ஆண்டவனைப் பொறுத்தது. வாழ்க்கை என்பது போராட்டம். அதில் வெற்றி பெறமுயற்சிப்பதுதான் உனது கடமை. கடமையைச் செய்வதுதான் உனது உரிமை. இதுதான் இயற்கையின் நியதி.

இவ்வாறு பல நாட்களாக ஞானம் பெயர்ந்தவன்போன்று சிந்தித்தபின் இறுதியில் ஒரு முடிவிற்கு வந்தான் முருகன், வாழ்ந்துதான் ஆகவேண்டும். எனது காதலிமீது நான் வைத்திருக்கும் அன்பு, பாசம் என்பவற்றைக் காரணம் காட்டி நான் என்னுடைய எதிர்காலத்தை அழித்துக் கொள்வேனேயானால் அந்த அன்பிற்கும் பாசத்திற்கும் காதலுக்கும் அர்த்தம் என்ன? அவையெல்லாம் கொலைச் சாதனங்களா? இருக்கவே முடியாது! அப்படி இருக்கவே முடியாது!! அன்பு, பாசம், காதல் என்பன மனிதனை வாழ வைப்பவை, உண்மையாகவே வாழவைப்பவை. அப்படிப்பட்ட உன்னத தூய சக்திகளின் பெயரால் என்னை நான் அழித்துக் கொள்ளலாமா? அப்படி அழித்துக் கொண்டால் அவற்றை நான் கொச்சைப்படுத்துவதுபோல் ஆகுமல்லவா? அன்பு, பாசம், காதலைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொச்சைப்படுத்துவது மகா பாவமல்லவா? எனவே நான் வாழ்ந்துதான் ஆகவேண்டும். அவற்றின் பெயரால் நான் வாழ்ந்துதான் ஆகவேண்டுமேயொழிய என்னை நான் அழித்துக்கொள்ளப்படாது.

இறந்துபோன காதலியையோ அன்றிக் காதலனையோ சாட்டாக வைத்து ஒருவர் வாழாதிருப்பது, கோழைகள், பச்சோந்திகள், வக்கற்றவர்கள் செய்யும் செயலாகும். நான் எனது காதலிமீது வைத்திருக்கும் அன்பு, பாசம், காதல் உண்மையானால் நான் வாழ்ந்துதான் ஆகவேண்டும். எந்தவொரு மடிந்துபோன காதலனோ காதலியோ, தனக்குப்பின் தனது காதலியோ அன்றிக் காதலனோ தனக்காக வாழாதிருந்து மடிந்து போகவேண்டும் என்று விரும்பமாட்டார்கள். அப்படியிருக்கும்போது நான் எனது காதலி வாலம்பிகையின் பெயரால் வாழாதிருந்து அழிந்துபோவது நிச்சயம் அவளுக்கு நான் செய்யும் துரோகமாகும். எனவே நான் வாழ்ந்துதான் ஆகவேண்டும். அப்பொழுதுதான் அவளின் ஆத்மா சாந்தியடையும்.

எந்தவொரு காதலியோ தனது காதலனைப் பார்த்து, "நான் எதிர்பாராத விதமாய் இறந்துவிட்டால், நீயும் உடனே இறந்துபோ அல்லது எனக்காக இறுதிவரை வாழாதிரு" என்று கூறமாட்டாள். ஆனாற சிலர் இறந்துபோன காதலிக்காக அல்லது காதலனுக்காக மரணத்தைத்தழுவும் சம்பவங்களும், வாழாதிருக்கும் நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன. ஏன்? இவர்கள்தான் உண்மைக் காதலர்களா? இல்லை, நிச்சயமாக இல்லை. உடன்கட்டை ஏறும் கொடூரமான சமூக விதிகளைத்தாண்டி வந்ததுதான் இன்றைய எமது சமூகம். அதன் எச்சங்களிற் சில வெளிப்பாடுகள்தான் இன்று நடைபெறும் சில துர்ப்பாக்கிய நிகழ்வுகள். உனக்கது தேவையா? மிடுக்கிருந்தால் வாழ்ந்து காட்டு. எத்தனையோ பெண்கள் வாழ்க்கைக்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களில் ஒருத்திக்கு வாழ்க்கை கொடப்பா. அதைவிடுத்துக் காதலியின் பெயரால் உன்னுடைய கோழைத்தனத்திற்கும் இயலாமைக்கும் காரணம் கற்பிக்க முயற்சிக்க வேண்டாம். அது நீ உனது காதலிக்குச் செய்யும் மகா துரோகம்.

வாலாம்பிகையின் மரணம் ஒரு தியாகம். அது அவளின் கிராமத்திற்கான தியாகம். அவளின் கிராமத்து மக்களுக்கு ஒரு நிரந்தர பாதுகாப்புக் கிடைக்க வேண்டுமென்பதற்கான தியாகம். அவளுடைய இந்த மகாபெரும் தியாகத்திற்கு அர்த்தம் கிடைக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமாயிருந்தால் நீ வாழ்ந்துதான் ஆகவேண்டும். அதுவும் இந்தக்கிராமத்துப் பெண் ஒருத்திக்கு நீ வாழ்வளித்து வாழ வேண்டும் என்று அவனுடைய மனச்சாட்சி கூறிமுடித்தது.

விழித்துக் கொண்டான், முருகனுக்குப் புத்துணர்ச்சி ஏற்பட்டது, புதுத்தென்பு பிறந்தது. வேணி கூறியவாறு புதிய இரத்தம் ஏற்றப்பட்டது போன்ற ஓர் உணர்வு தென்பட்டது. மனதில் ஒரு தெளிவு, இனிமேற் குழப்பத்திற்கு இடமேயில்லை என்ற ஒரு முடிவு.

இன்று சனிக்கிழமை, வேணியைக் கண்டு கதைத்து ஆறு கிழமைகள் சென்றுவிட்டன. காலை பத்து மணியளவில் முருகனின் உந்துருளி தாமரைக்குளத்தின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள சங்கோடை நோக்கிப் புறப்பட்டது. சங்கோடைச் சந்தியை அடைந்த முருகன் அங்கு நின்றுகொண்டிருந்த ஒரு பெரியவரை அணுகி,

"ஐயா, நான் யாழ்ப்பாணத்திலிருந்து வந்துள்ளேன். புறோக்கர் செல்லக்கண்ணுவைப் பார்க்கவேண்டும். அவருடைய வீடு எங்குள்ளது என்று சொல்ல முடியுமா பெரியவர்?" என்று கேட்டான். உடனே பெரியவர்,

"புறோக்கர் வீடா தம்பி, அங்கபாரும் அந்த மூன்றாவது வீடு. சிவப்புக் கேற் போட்ட வீடு தம்பி," என்றதும்,

"ரொம்ப நன்றி ஐயா," என்று கூறிவிட்டு அந்த வீடு நோக்கிச் சென்றான்.

உந்துருளியைக் கேற்றில் நிறுத்திவிட்டு உள்ளே சென்று கதவிற் தட்டினான். கதவைத் திறந்த வேணி முருகனைப் பார்த்ததும் ஆச்சரியம் அடைந்த நிலையில், "முருகன் நீங்களா! என்னால் நம்பவே முடியவில்லை. ஒரு நிமிடம் பொறுங்கோ," என்று கூறிவிட்டுக் கண்களைத் துடைத்துக் கொண்டு மறுபடியும் சிரித்தபடியே நன்றாய் விழித்துப் பார்த்தாள். மறுகணம், "வாங்கோ முருகன், உள்ளுக்கு வாங்கோ," என்று கேட்டதும் பாதணிகளைக் கழற்றி வாசற்படியில் வைத்துவிட்டு, "உங்களுடைய கண் பார்வையில் ஏதாவது குறைபாடு உண்டா?" என்று சிரித்தபடியே கேட்டுக்கொண்டு உட்சென்றவன் தொடர்ந்து, "ஏன் கேட்கிறேன் என்றால், முதலில் பார்த்தீங்கள், நம்பமுடியவேயில்லை என்றீங்கள். அப்புறம் கண்ணைத் துடைத்துவிட்டு நன்றாய் விழித்துப் பார்த்தீங்கள். அதுதான்," என்று ஒரு மென்சிரிப்புடன் சொல்லிக் கொண்டு போக, உடனே வேணி புன்னகைத்தபடி "அதுவா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது... வந்து... என்னுடைய வேண்டுதலை ஏற்று வந்துவிட்டீங்களா என்பதை உங்களைப் பார்த்தவுடனே என்னால் நம்பமுடியவில்லை, அதுதான் அப்படி. கண்ணில் பிழையொன்றுமில்லை. மனதிற்தான் ஒரு சிறிய நம்பிக்கையீனம் இருந்தது. அதுவும் இப்பொழுது நிவிர்த்தியாகிவிட்டது,'' என்று கூறிவிட்டுக் கலகலவென்று மனம்விட்டுச் சிரித்தாள். முருகனும் கலகலவென்று சேர்ந்தே சிரித்தான். அப்படியே சிரித்துக்கொண்டு சென்றதும் முருகனைப் பார்த்து, "இதில் உட்காருங்கள் முருகன்,'' என்று முன்னிருந்த செற்றியைக் காட்டி வேண்டிக்கொண்டாள். முருகன் உட்கார்ந்து கொண்டதும்,

"எப்படி முருகன் எங்களுடைய வீட்டைக் கண்டுபிடித்தீங்கள்? சிரமப்பட்டீங்களா?" என்று கேட்டாள். உடனே முருகனுக்கு வேணி விலாசம் சொன்ன விடையம் ஞாபகத்திற்கு வந்தது. இதள்கழுக்குள் சிரித்துக் கொண்டு,

''நான் சங்கோடைச் சந்தியை அடைந்ததும், அதில் நின்று கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தேன். அப்போது பச்சைக் குழந்தையொன்று போய்க்கொண்டிருந்தது. உடனே சென்று அந்தக் குழந்தையிடம் 'புறோக்கர் செல்லக்கண்ணு வீடு எங்குள்ளது என்று சொல்ல முடியுமா பெரியவர்?' என்று கேட்டேன். அந்தக் குழந்தை சிரித்தபடியே மூன்று விரல்களை நீட்டிக் கொண்டு உங்களுடைய வீட்டுப்பக்கமாய் கையைக் காட்டியது. தொடர்ந்து சிவப்பு சிவப்பு என்று மழலை மொழியிற் சொன்னது. எனக்கு உடனே புரிந்து விட்டது மூன்றாவது வீடு சிவப்பு கேற் என்று. அந்தப் பச்சைக் குழந்தை அச்சொட்டாய்ச் சொன்னபடியினால் ஒரு பிரச்சினையுமில்லாமல் வந்து சேர்ந்துவிட்டேன்,'' என்றதும் வேணி விழுந்து விழுந்து சிரித்தாள். அவளுடன் சேர்ந்து முருகனும் சிரித்தான். சிலவினாடிகள் சிரிப்பு நீடித்தது. சிரிப்பு நின்றபாடாயில்லை. இதை அவதானித்த முருகன்,

"சிரித்தது போதும், விடயத்திற்கு வாங்கோ,'' என்றான். ஒருவாறு வேணி வலிந்து சிரிப்பை நிறுத்தியதும் அவளைப் பார்த்து,

''நீங்கள்தானே அன்று சொன்னீங்கள் பச்சைக்குழந்தையைக் கேட்டாலும் உங்கள் வீட்டைக் காட்டிவிடும் என்று. அதுதான் கேட்டேன்,'' என்றதும் மறுவினாடியே ஒரு மருண்ட பார்வை பார்த்துவிட்டு,

''இதுதானே வேண்டாமென்கிறது. ஒரு பேச்சுக்குச் சொன்னேன் அப்படி,'' என்றாள், "நான் என்ன இப்ப சீரியேசாகவா சொன்னேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் ஒரு பகிடியாய்....", என்று தொடர, "சரிசரி... புரியுது புரியுது," என்று சொல்லிவிட்டு "அப்பா இங்க வாங்கோவேன். ஒரு முக்கியமான நபர் வந்திருக்கிறார்," என்று குரல் கொடுத்தாள் வேணி. "வருகிறேன் பிள்ளை," என்று சொல்லிவிட்டுச் சிலவிநாடிகளில் வந்த தந்தைக்கு முருகனைக் காட்டி, "இவர்தான் அப்பா முருகன். இவரைப்பற்றி நான் உங்களுக்குப் பல தடவைகள் சொல்லியிருக்கிறேன். இவர் இப்பொழுதும் நமது மகா வித்தியாலயத்திற்தான் கற்பித்துக் கொண்டிருக்கிறார். சென்றமாதம் இவரை நான் எதிர்பாராத விதமாகச் சந்திக்க நேர்ந்தது. அப்பொழுது இவருடைய எதிர்காலம் பற்றி எனது மூளைக்கு எட்டிய அளவிற்குச் சில ஆலோசனைகளைக் கூறியிருந்தேன். இன்று நமது வீடு தேடி வந்துவிட்டார், நல்லதாய்ப் போய்ச்சு. இந்த வேளையில் நீங்களும் உங்களுடைய அனுபவத்தைக் கொண்டு சில புத்திமதி களைக் கூறலாம்தானே அப்பா," என்று சொன்னவள் இடையில் ஏதோ ஞாபகத்திற்கு வந்தவள் போன்று, "நீங்கள் இருவரும் பேசிக் கொண்டிருங்கோ, நான் தேனீர் தயாரித்துக் கொண்டு வாறன்," எனக் கூறிவிட்டுக குசினிக்குட் சென்றாள்.

அப்பொழுது எதிரிலிருந்த செற்றியில் உட்கார்ந்துகொண்ட செல்லக்கண்ணு முருகனை அனுதாபத்தோடு பார்த்தார். சில வினாடிகள் எதுவும் பேசாமலிருந்தவர் அப்புறம் மௌனத்தைக் கலைத்துக் கொண்டு,

"எப்படித் தம்பி இருக்கின்றீங்கள்?" என்று அனுதாபம் கலந்த தொனியிற் கேட்டார்.

"நான் நல்லாயிருக்கிறேன்," என்று கூறிய முருகன் ஒரு மரியாதையின் நிமித்தம், "நீங்கள் எப்படி இருக்கிறீங்கள் ஐயா?" என்று கேட்டதும்,

"எனக்கென்ன தம்பி குறைச்சல், நான் நல்லாயிருக்கிறேன்," என்று கூறிய செல்லக்கண்ணு தொடர்ந்து, "தம்பி, உங்களைப் பற்றிய எல்லா விபரங்களையும் மகள் எனக்கு விளக்கமாய்க் கூறியிருக்கிறாள். உங்களுக்கு உதவ வேண்டுமென்பதில் அவள் மிகவும் அக்கறையாய் இருக்கிறாள். அவள் ஒரு வித்தியாசமான பொண்ணு. அவள் தன்னைப்பற்றி ஒருபோதும் கவலைப்படுவதில்லை. எப்பொழுதும் மற்றையவர்களைப் பற்றித்தான் கவலைப்படுவாள். இது அவளுடைய இயற்கைச் சுபாவம். அதுவும் ஒருவகையில் நல்லதுதான். அதுகிடக்கட்டும் தம்பி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்கு ஏற்பட்ட அனுபவம் வேறு எவருக்கும் ஏற்படக்கூடாது. என்ன செய்வது, நாம் செய்த கன்மவினையோ என்னவோ சிலவேளைகளில் வேண்டாதவை எதிர்பாராதவிதமாய் நிகழ்ந்து விடுகின்றன. அதற்காக நமது பிறப்பையோ, நமது வாழ்க் கையையோ வெறுத்து ஒதுக்கிவிடப்படாது. அப்படிச் செய்வது முற்றிலும் தப்பு. நீங்கள் படித்தனீங்கள், அதற்கும் மேலாக நீங்கள் ஆசிரியராகத் தொழில் புரிபவர், அதாவது நமது எதிர்காலச் சந்ததியை உருவாக்குபவர். நான் உங்களுக்கு அதிகம் சொல்ல வேண்டியதில்லை. அப்படிச் சொல்லி என்னை நான் ஓர் அதிகப்பிரசங்கியாய்க் காட்டிக் கொள்ளவும் விரும்பவில்லை.

ஆண்டவன் தந்த பகுத்தறிவை நாம் நல்ல முறையிற் பயன்படுத்த வேண்டும். ஏதும் உதவி தேவைப்பட்டாற் தயக்கமின்றி என்னிடம் கேட்கலாம், நான் உங்கள் அப்பா மாதிரி,'' என்று சொல்லிக் கொண்டு போக, தேனீருடனும் சிற்றுண்டியுடனும் வந்தாள் வேணி. "சாப்பிடுங்கோ முருகன்" என்று கூறிக்கொண்டு முன்னிருந்த ரீபோயில் அவற்றை வைத்தவள் அப்படியே தந்தைக்குப் பக்கத்தில் இருந்த செற்றியில் அமர்ந்து கொண்டாள். அந்த வேளையில், ''எனக்குக் கொஞ்சம் வேலைகிடக்கு, நீங்கள் பேசிக்கொண் டிருங்கோ,'' என்று கூறிவிட்டு எழுந்து சென்றார் செல்லக்கண்ணு. முருகன் சிற்றுண்டியைச் சாப்பிடத் தொடங்கினான். சிற்றுண்டிகளை நன்கு சுவைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்த முருகன் இடையில், ''உங்களுடைய சிற்றுண்டி ரொம்பச் சுவையாய் இருக்கின்றது. யார் செய்தாங்க? நீங்கள்தான் செய்தீங்களா?'' என்று சிறிய புன்சிரிப்புடன் கேட்டான். முருகனின் வினாவுதலைக் கேட்டதும் சிரிப்பு வந்துவிட்டது வேணிக்கு. பதிலுக்குச் சிரித்துக் கொண்டே, ''யாரைப் பார்த்து என்ன கேள்வி கேட்கிறீங்கள்! நானாவது! சிற்றுண்டியாவது!! இவையெல்லாம் செய்யத் தெரிந்தால் நான் இப்படியே இருப்பேன்?'' என்றாள். பதிலுக்கு "வேறு எப்படி இருப்பீர்கள்?'' என்றான். அவளும் "நான் பெரிய மனுசியாகவல்லோ இருப்பேன்,'' என்றாள்.

"அப்ப... நீங்கள் உங்கள் வீட்டில் இப்பவும் சின்ன மனுசியாய்த்தான் இருக்கின்றீங்கள், அப்படித்தானே?'' என்றான்.

''புரிந்துகொண்டாற் சரி,'' என்றாள். ''அப்படியானால், அன்று பெரிய மனுசிமாதிரி எனக்குக் கனக்கவெல்லாம் புத்தி சொன்னீங்கள். இப்போ சிறிய மனுசிதான் என்பதைப் புரிந்து கொண்டாற் சரி என்கிறீங்கள். உங்களைப் பெரிய மனுசி என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிக்கொண்டுதானே உங்களுடைய வீட்டிற்கு வந்துள்ளேன். இப்போ சின்னமனுசி என்றால், எப்படி? என்னுடைய வருகை ஏமாற்றத்தில் முடிந்துவிடுமோ?" என்று கூறிவிட்டு முகம்மலர வாய்நிறையச் சிரித்தான். அவனுடைய உள்ளத்தைப் புரிந்து கொண்ட வேணி பதிலுக்குப் பதில் என்ற வகையில், "சீ..சீ.. அந்தவிடையத்தில் நான் பெரிய மனுசிதான். அதற்கும் சிற்றுண்டி செய்வதற்கும் என்ன தொடர்புண்டு. அதுமட்டுமல்ல, எனக்கு என்னதான் வல்லமை இருந்தாலும் வீட்டில் அம்மா அப்பாவிற்கு நான் சின்ன மனுசிதானே!" என்று கூறிவிட்டு ஒரு கனிந்த புன்சிரிப்போடு அவனை உற்று நோக்கினாள். அவனும் அதேவகையான கனிந்த சிரிப்போடு அவளை உற்று நோக்கினான். இரண்டு உள்ளங்களும் ஏதோ பேசிக்கொண்டன. அந்த நிமிடத்தில் ஏதோ திடீரென வெளித்தவள் போன்று,

"நான் சொன்ன விடையம்பற்றி என்ன முடிவு எடுத்துள்ளீர்கள்?" என்று கேட்டதும்

"நல்ல முடிவுதான்," என்றான். "நல்ல முடிவுதான் என்றால்" என விழித்தாள்.

"நல்ல முடிவுதான் என்றால், உங்களுடைய எண்ணத்திற்குச் சார்பான முடிவுதான்," என்று சொல்லி வாய்மூடுவதற்குள் அவளை அறியாமலேயே மகிழ்ச்சியின் மேலீட்டால் இரண்டு கைகளையும் தட்டிக்கொண்டு,

"ரொம்பச் சந்தோசம், ரொம்ப ரொம்பச் சந்தோசம். இந்த விடயத்தில் நான் ஒரு சின்னப்பொண்ணுதான். ஆனால் எனது அப்பா ஒரு கல்யாணப் புறோக்கர். அவருடைய உதவியைப் பெற்று உங்களுக்குப் பிடிச்ச ஒரு பெண்ணைக் கண்டுபிடிப்பேன், சரியா?" என்றாள். உடனே முருகன்,

"அது அப்புறம் பார்க்கின்ற விடயம். அந்த விடயத்திற்காக நான் இன்று இங்கு வரவில்லை. உங்கள் மீது வைத்திருக்கும் அன்பு, மதிப்பு, மரியாதையின் நிமித்தம் உங்களுடன் உங்கள் அப்பா அம்மா இருவரையும் பார்த்துவிட்டுப் போகலாம் என்றுதான் வந்தனான். உங்களையும் உங்கள் அப்பாவையும் பார்த்து விட்டேன். உங்கள் அம்மா எங்கே?" என்று கேட்டான்.

"அம்மாவா? அம்மா அயலிலுள்ள வீடொன்றிற்குப் போய்விட்டா. அவவினுடைய அவசர உதவியை வேண்டி அழைப்பொன்று வந்தது. ஒரு குழந்தை மூச்சுவிட இயலாமல் அவதிப்படுவதாய் ஒருவர் ஓடிவந்து அம்மாவிடம் சொன்னார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த கணம் அம்மாவை நான் வீட்டிற் பார்க்கவில்லை. அம்மா கிராமிய முறையில் முதலுதவி அளிப்பதில் வல்லவர், அனுபவசாலியும்கூட. எவராவது அவவினுடைய உதவியை வேண்டி வந்தால், அடுத்த நிமிடம் அம்மாவை நாங்கள் இங்கு பார்க்க முடியாது. அது அப்பாவிற்குச் சோறு போட்டுக் கொண்டிருக்கும் நேரமாயிருந்தாலும் கவலையில்லை. உடனே சோறு போடுவதையும் நிறுத்திவிட்டுப் போய்விடுவா. இதை அப்பா நன்றாய்ப் புரிந்து வைத்திருக்கிறார். அதனால் அவரே சாப்பாட்டைப் போட்டுச் சாப்பிட்டுக் கொள்வார். அதைப்பற்றி அவர் கவலைப்பட மாட்டார். அப்புறம் அம்மா வந்ததும், "போன காரியம் எப்படி அப்பா முடிஞ்சுது? எல்லாம் நல்லாய்த்தானே முடிஞ்சுது!" என்று கேட்பார். உடனே அம்மா,

"எல்லாம் ஆண்டவன் அருளால் நல்லாய் முடிஞ்சுது," என்பார். அதற்கு அப்பா, "ஆண்டவன் அருள் ஒரு பக்கமிருக்கட்டும். அதை நான் இல்லையென்று சொல்லவில்லை. இருந்தபோதும் உன்னுடைய கைராசி இருக்கே, அதற்கொரு சக்தி இருக்கப்பா எனச் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்வார்," என்று சொல்லிக் கொண்டுபோகக் கதவு திறந்து சத்தம் கேட்டது. உடனே,

"அம்மாதான் வாறாபோற் தெரியுது," என்று சொல்லிக்கொண்டு வேணி இருக்கையைவிட்டு எழுந்தபொழுது, "பிள்ளை வேணி," என்று கூப்பிட்டுக்கொண்டு தாய் உள்ளே வந்தாள். தாயைப் பார்த்த வேணி வாஞ்சையோடு,

"எப்படி அம்மா பிள்ளை இருக்கு? பிள்ளைக்கு ஒரு ஆபத்தும் இல்லையே?" என்று கேட்டாள். மகளின் ஆதங்கத்தைப் புரிந்துகொண்ட தாய்,

"பிள்ளைக்கு ஓர் ஆபத்துமில்லை. சளி நாசியை அடைத்துக் கொண்டது. அதை நான் உறுஞ்சி இழுத்து அடைப்பை எடுத்துவிட்டேன். இப்போ பிள்ளை நலமாயிருக்கு. திரும்பவும் அப்படி வந்தால் உடனே வைத்தியசாலைக்குக் கொண்டு போகும்படி சொல்லியிருக்கிறேன்" என்றதும்

"அதுதானே பார்த்தேன். அம்மா போனால் இயமனுடைய கையிலிருக்கின்ற பிள்ளையையும் பறித்துக்கொண்டு வருவா. பிறகேன் கவலை! அம்மா, நீங்கள் அளிக்கின்ற முதலுதவிகளைத் தற்போதைய டாக்டர்கள்கூட அளிக்க முடியாது. அந்தளவிற்கு ஓர் அனுபவமும் மனோதைரியமும் உங்களிடம் உண்டு," என்று கூறிக்கொண்டு போகக் குறுக்கிட்டதாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ என்னைப்பற்றிப் புகழ்ந்தது போதும்," என்று சொல்லி மகளின் கதையை நிறுத்திவிட்டு,
"இது யார் தம்பி? புதுமுகமாய்த் தெரியுது!" என்று கேட்டுவிட்டு ஏற இறங்கப் பார்த்தாள். தாயின் பார்வையிலிருந்து அவவின் மனோநிலையைப் புரிந்துகொண்ட வேணி,

"இவர்தான் அம்மா முருகன்," என்று சொல்லிவாய் மூடுவதற்குள்,

"அடா கடவுளே! நீங்களா தம்பி முருகன்? உங்களைப்பற்றி எனது மகள் ஆதியோடந்தமாய் எல்லாம் சொல்லியிருக்கிறாள். போனது போகட்டும், எல்லாவற்றையும் ஒரு கெட்ட கனவாய் எண்ணிக்கொண்டு அவற்றை மறந்துவிடுங்கோ. இனிமேல் நீங்கள் ஒரு புதிய மனிதனாய் வாழவேண்டும்," என்று கூறிக்கொண்டு ஓர் ஆசீர்வாத முத்தம் கொடுத்தவள்,

"நீங்கள் நல்லாயிருக்க வேண்டும்," என்று வாழ்த்திவிட்டு, மகளைப் பார்த்து,

"தம்பிக்குத் தேனீர், சிற்றுண்டி சாப்பாடு ஏதும் கொடுத்தியே பிள்ளை?" என்று கேட்டாள். தாயின் உணர்வுகளைப் புரிந்துகொண்ட வேணி,

"தேனீர் சிற்றுண்டி எல்லாம் கொடுத்தேன் அம்மா. சாப்பாட்டிற்கு இன்னும் நேரம் வரவில்லைத்தானே. இப்பதானே பன்னிரண்டு மணி. சரியான நேரத்திற்கு நீங்கள் வந்துவிட்டீங்கள். சமையலில் உங்களுடைய கைவரிசையைக் காட்ட வேண்டியதுதானே! உங்களுடைய சிற்றுண்டியைச் சாப்பிட்டுவிட்டு ஏற்கனவே அசந்து போயிருக்கிறார். மதியச் சாப்பாட்டிலும் உங்களுடைய," என்று சொல்லிக்கொண்டு போகக் குறுக்கிட்ட முருகன்,

"நோ... நோ... என்னை மன்னித்துக் கொள்ள வேண்டும். மதியம் சாப்பிட்டுவிட்டுப் போக எனக்கு நேரமில்லை. பன்னிரண்டு மணிக்கு இன்னொரு முக்கிய விடையமுண்டு. இன்னொரு நாளைக்கு மதியமோ அன்றி இரவோ சாப்பிடக்கூடிய முறையில் வருகிறேன்," என்று கூறிக்கொண்டு இருக்கையை விட்டு எழுந்தான். முருகனின் அவசர அலுவலைப் புரிந்துகொண்டவள் போன்று,

"அப்படியாயின் இன்று போய்விட்டு இன்னொரு நாள், அலுவல்கள் ஏதும் இல்லாதநாளாய்ப் பார்த்து வாங்கோ, ஆறுதலாய் நின்று சாப்பிட்டுவிட்டுப் போகக்கூடிய மாதிரி, சரியா?" என்றதும்,

"நிச்சயமாக, வெகுவிரைவில் மறுபடியும் வருவேன் ஒரு பிடி பிடிச்சிட்டுப் போகக்கூடியமாதிரி, போதுமா?" என்றான் சிரித்துக் கொண்டே. இதைக்கேட்டு வேணியின் அம்மாவும்கூட சிரித்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டாள். அடுத்த வினாடி வேணியின் அம்மாவைப் பார்த்துக் கூப்பிய கரங்களுடன்,

"அப்ப.... நான் போயிட்டு வாறன் அம்மா," என்று கூறிவிட்டு வெளியேறினான். அவனைப் பின்தொடர்ந்து சென்ற வேணி கேற்வரை போய், அதில் நின்றுகொண்டு,

"நான் உங்களுடைய எதிர்காலம் சம்பந்தமாய் முயற்சி பண்ணுவேன். ஒன்றுக்கும் யோசிக்கவேண்டாம்," என்றாள். இதைக் கேட்டும் கேட்காதவன்போல் சென்று உந்துருளியில் ஏறிக்கொண்ட முருகன் வேணியைப் பார்த்து, "ஏதோ பெரிய மனுசிமாதிரிப் பேசுகிறீங்கள். எது என்னவானாலும் நீங்கள் என்மீது வைத்திருக்கின்ற அன்பிற்கும் மதிப்பிற்கும் தலை வணங்குகிறேன்," என்று கூறிக்கொண்டு மிதித்தான் உந்துருளியை. ஒரு மிதியிலேயே அது பற்றிக்கொண்டது. மறுகணம், "போயிட்டு வாறன் வேணி," என்று கூறிக் கையை அசைத்துக் கொண்டு புறப்பட்டான்.

"கவனமாய்ப் போயிட்டு வாங்க முருகன்," என்று கூறிப் பதிலுக்குக் கை அசைத்து வழியனுப்பி வைத்தாள் வேணி. அவன் சென்று சந்தியாற் திரும்பும்வரை அவனைப் பார்த்துக்கொண்டு நின்ற வேணி அப்புறம் வீட்டிற்குட் சென்றாள்.



## அங்கம் -9

**ம**றுநாட் காலை தந்தையிடம் சென்ற வேணி, 'அப்பா, நேற்று இங்கு வந்துவிட்டுப் போன முருகன் இருக்கிறாரே, அவரைப்பற்றி உங்களுக்கு எல்லாமே தெரியும். ரொம்பவும் தங்கமான பையன். அவர் இப்படியே தனி மரமாய் நிற்பதைப் பார்க்க எனது மனதிற்குச் சங்கடமாயிருக்கின்றது. இந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்தைவிட்டுப் போவதற்கும் அவரதுமனம் இடம் கொடுக்குதில்லையாம். ஆனபடியால் அவருக்கொரு பெம்பிளை பாருங்கோவேன் அப்பா,'' என்று அனுதாபம் கலந்த தொனியில் வேண்டினாள். அப்பொழுது மகளின் வேண்டுதலைக் கருசனையோடு செவிமடுத்த செல்லக்கண்ணு,

''உன்னுடைய அக்கறையும் அனுதாபமும் எனக்குப் புரியுது பிள்ளை. அதைமட்டும் வைத்துக்கொண்டு எப்படி நான் பெம்பிளை பார்க்க முடியும்? அவருடைய விருப்பத்தை அறியாமல். அவர் இதைப்பற்றி உன்னிடம் எப்பவாவது கதைத்திருக்கிறாரா?'' என்று ஒரு கேள்வியைப் போட்டார். அப்பாவின் கேள்வி அர்த்தமுள்ளது தான் என்பதைப் புரிந்துகொண்ட வேணி,

''உங்களுடைய கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதுதான் அப்பா. அவருடைய காதலி இறந்து இரண்டு வருடங்கள் கழிந்துவிட்டன. நான் அவருடன் கதைத்த அளவில் அவருடைய மனதில் இப்பொழுது குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனபடியினால் நல்லதோர் பெண்ணைப் பார்த்து ஒழுங்குபடுத்தினால் அவர் நிச்சயம் உடன்படுவார் அப்பா,'' என்றாள். மகளின் வேண்டுகோளை உதாசீனம் செய்ய விரும்பாத செல்லக்கண்ணு,

''சரி...அப்படியானால் முயற்சிக்கலாம்,'' என்று கூறிய சில வினாடிகளில் ஏதோ ஞாபகத்திற்கு வந்தவர்போன்று,

''பிள்ளை வேணி, நம்ம சங்கோடைச் சண்முகத்தினுடைய மகள் செங்கமலம் இருக்கிறாளல்லே, அவள் ஒரு ரீச்சரல்லே. அந்தப் பெண் நமது அயற்கிராமம் மல்லிகைத்தீவிலுள்ள ஒரு பாடசாலையிற்தான் ரீச்சராக வேலைசெய்கிறா. அவவினுடைய அப்பா மகளுக்கு ஒரு மாப்பிள்ளை பார்க்கும்படி கேட்டு என்னிடம் குறிப்பும் படமும் தந்திருக்கிறார். எனக்கும் பெண்ணைத் தெரியும். ரொம்பவும் அழகான பெண். செங்கமலம் என்ற பெயருக் கேற்றாற்போல், செக்கச் செவேலென்ற மேனி, ஒச்சட்டையான உடம்பு, நீண்ட கருங்கூந்தல். முருகனுடைய அழகிற்கும் எடுப்பிற்கும் நல்ல பொருத்தமான பெம்பிளை. இரண்டுபேரும் சேர்ந்தாற் பார்ப்பவர் கண்ணைக் கவரும் சோடியாய் அமையும். நீ என்ன பிள்ளை சொல்லுகிறாய்?'' என்று கேட்டதுதான் தாமதம்,

''ஓம் அப்பா, எனக்கும் அவவைத் தெரியும். நல்ல சோடிப் பொருத்தம். அதுமட்டுமல்ல, இருவரும் ஆசிரியர்களாய் இருக்கின்றபடியினால் அவர்கள் ஒருவரையொருவர் விரும்பு வதற்கான வாய்ப்பும் உண்டு'' என்று சொல்லிக்கொண்டு போகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுக்கிட்ட செல்லக்கண்ணு,

"சரியாய்ச் சொன்னாய் பிள்ளை. கையில வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவானேன். பையனுடைய முடிவை அறிந்து என்னவென்று சொல்லு, காரியத்தைக் கச்சிதமாய் முடித்து வைக்கிறேன்," என்றதும் இதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த வேணி,

"சரி.. அப்பா, நான் இயன்ற கெதியில் முருகனுடைய முடிவை அறிந்து என்னவென்று சொல்லுகிறேன்," என்று கூறிவிட்டுத் தனது அறையுக்குட் சென்றாள்.

அடுத்த வாரம் புதன்கிழமை காலை பத்து மணி, முருகன் பத்தாம் வகுப்பிற் கணிதம் கற்பித்துக் கொண்டு நின்றான். அந்த வேளையில் அங்கு வந்த அதிபர் வகுப்பறையின் வாசலில் நின்று கொண்டு ஒரு கடிதத்தை நீட்டினார். விரைந்து சென்று அதைப் பெற்றுக்கொண்ட முருகன் மேல்விலாசத்தைப் பார்த்து விட்டு அதைச் சட்டைப் பையில் வைத்துக் கொண்டார். அனுப்பியவர் பெயர் வேணி என்றிருந்தபடியினால் அதை உடனே வாசிக்க வேண்டும்போல் மனம் உந்தியது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் தெய்வ வாக்குகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பவன் முருகன். அதனாற் கடமையின் முக்கியத்துவத்தை உணர்ந்து மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு கற்பித்தலைத் தொடர்ந்தான். மதியம் பன்னிரண்டு மணிக்கு மதிய உணவு இடைவேளைக்கான மணி ஒலித்தது. தாமதியாது வழமையாய் உணவு சாப்பிடும் உணவகத்திற்குச் சென்று ஓர் ஓரமாய் உட்கார்ந்து கொண்டான். கடிதத்தை ஆவலுடன் பிரித்தான். அப்பொழுது வழமையாய் உணவு பரிமாறும்பையன் வந்து,

"சாப்பிடுவமா சார்?" என்றான்.

"கொஞ்சம் பொறுங்கோ அப்பன்," என்று கூறிவிட்டுக் கடிதத்தை ஆர்வத்தோடு பிரித்துக் கொண்டிருந்தான். அதை அவதானித்த பையன்,

"ஏதோ முக்கிய கடிதம்போலும்," என்று தன்னுள் எண்ணிக்கொண்டு விலகிச் சென்றுவிட்டான். இருந்தபோதும் இடைக்கிடையே நோட்டமிட்டுக் கொண்டிருந்தான். கடிதத்தை அவசரமாயும் அதேவேளை பக்குவமாயும்பிரித்த முருகன் அக்கறையோடு வாசிக்கத் தொடங்கினான்.

"அன்பின் முருகனுக்கு, வேணியாகிய நான் பணிவுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதிக்கொள்வது, நலம், நலம் அறிய ஆவல். உங்களுடைய எதிர்கால வாழ்க்கை விடையமாய் அன்று உங்களுடன் பேசியதோடு நின்றுவிடாமல், விரைந்து எனது அப்பாவுடனும் பேசினேன். காரணம் எனது அப்பா ஒரு கல்யாணப் புறோக்கர். நான் கதைத்த வுடனேயே கச்சிதமாய் ஒரு பெண்ணைக் கண்டுபிடித்துவிட்டார். என்னால் நம்பவே முடியவில்லை. சொல்லிவைத்தாற் போன்று அப்படியொரு பொருத்தம். சும்மா சம்பிரதாயத்திற்காகச் சொல்ல வில்லை. உண்மையில் முருகனுக்கேற்ற தெய்வானை. குணம் நடையில் எந்தக் குறையும் இல்லை. தொழில் ஆசிரியர், பெயர் செங்கமலம். அன்பும் பண்பும் அனுபவமும் நிறைந்த குடும்பம். இதற்கு மேல் என்ன வேண்டும்? வேண்டுமாயின் தயங்காமல் கேளுங்கோ.

விரைந்த பதிலை எதிர்பார்க்கிறேன்."

இங்ஙனம்
உங்கள் அன்பிற்குரிய
ந. வேணி.

கடிதத்தை வாசித்து முடித்ததும் தலையை நிமிர்த்திப் பார்த்தான். அதேகணத்திற் பையனும் பார்த்தான். வரும்படி கையைக் காட்டினான் முருகன். வேகமாய் வந்த பையன், "சார் சாப்பிடத் தயாரா?" என்றான்.

"தயார்," என்றான் முருகன். வழமையான நேரத்தைவிடச் சிறிது நேரம் சென்றுவிட்டதை உணர்ந்த பையன் விரைந்து செயற்பட்டான். வேறு வார்த்தையிற் சொன்னால் நெப்போலிய னுடைய குதிரை போன்றவன் முருகனுக்கு உணவு பரிமாறும் பையன். நெப்போலியன் காலையிற் தன்னை நோக்கி வரும்போது அதற்குத் தெரியுமாம் என்ன திட்டத்தோடு இன்று வருகிறானென்று. அதற்கேற்றபடி தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ளுமாம் அந்தக் குதிரை. அது விபத்தில் இறந்தபொழுது அதைக் கட்டிப்பிடித்துக் கொண்டு ஒருமணித்தியாலம் அழுதானாம் நெப்போலியன். நான் சொல்ல வருவதென்னவென்றால் நெப்போலியனுக்கு வாய்த்தாற் போற் குதிரை, முருகனுக்கு வாய்த்துள்ளான் உணவு பரிமாறும் பையன். இயற்கையின் கோலங்களில் இதுவும் ஒன்று.

வழமையாக உணவை ரசித்து ருசித்து மெதுவாக மென்று சாப்பிடும் முருகன் இன்று ஏனோதானோ என்று சாப்பிடத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கினான். இதையும் அந்தப் பையன் அவதானிக்கத் தவறவில்லை. முருகனின் வழமைக்கு மாறான இந்தத் தடுமாற்றத்திற்குக் காரணம் கடிதத்தை வாசித்த பிற்பாடு அவன் மனம் சாப்பாட்டின்மீது படியாததுதான். வேறு விதமாய்ச் சொன்னால் கை ஊட்டிக் கொண்டேயிருந்தது, வாய் சாப்பிட்டுக் கொண்டே யிருந்தது. ஆனால் மனம் முழுவதாய் வேணியின் கடிதத்தைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தது. தன்னுட் பேசத் தொடங்கினான்.

"வேணி, நீ ஓர் அபூர்வப் பிறவி. உன்னைப்பற்றி என்னாற் புரிந்து கொள்ளவே முடியவில்லை. நீ வாழவேண்டிய ஒரு பெண், உன் வயது அதற்குரியது, என்னிலும் வயது குறைந்த பெண். என்னடாவென்றால்? உன்னை நீ மறந்து எனக்கு வாழ்க்கை தேடுகிறாய்! என்ன அதிசயம்? என்னால் நம்பவே முடியவில்லையே! என்னுடைய காதலியைக் கொலை செய்த கொலை காரனைக் கண்டு பிடிப்பதற்காக உன்னுடைய உயிரைப் பணயம் வைத்து அந்தப் பாவியினுடைய வங்களாவிற்குள் நுழைந்ததுமட்டுமல்ல, எக்காரணங் கொண்டும் போன இலட்சியத் தைக் கோட்டை விட்டுவிடக்கூடாது என்பதற்காக உனது பெண்மையையே சில நிமிடங்கள் தியாகம் செய்தாய். இப்பொழுது எனக்குப் புதுவாழ்வு பெற்றுத்தர இடைவிடாது முயற்சிக்கிறாய். நீ என்ன மனிதப்பிறவியா? அல்லது கலியுகக் கடவுள் மாயக் கண்ணனின் மறு அவதாரமா? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே! நீ மனித ரூபத்தில் வந்து என்னைச் சோதிக்கிறாயா? ஏதுமே தெரியவில்லையே! அதையெல்லாம் அறியுமளவிற்கு ஆன்மீக சக்தி எனக்குக் கிடையாது. எனது கழங்கமில்லா மனதில் உள்ளதை எழுதவுள்ளேன். வாசித்துத் தெரிந்துகொள்," என்று தனக்குள்ளேயே கூறிக்கொண்டவன் மறுகணம் சாப்பாட்டு இலையைப் பார்த்தான். இலையில் எதுவுமே இல்லை. கையும் வாயும் தங்களுடைய கடமைகளைச் செய்து முடித்துவிட்டன. அடுத்த வினாடி பையனைக் கூப்பிடும் எண்ணத்துடன் தலையை நிமிர்த்திப் பார்த்தான். உடனே சிட்டையை நீட்டினான் தயாராய் நின்ற பையன். நம்பவே முடியவில்லை, எல்லாமே கனவு கண்டதுபோல் இருந்தது முருகனுக்கு. சிட்டையைப் பெற்றுக் கொண்ட முருகன் பணத்தைச் செலுத்திவிட்டு வெளியேறினான். அந்த வேளையில் அவன் அவனாகவே இருக்கவில்லை. மனம் ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று வெள்ளிக்கிழமை, வேணியின் வீட்டுக் கேற்றில் சைக்கிள் மணி ஒலித்தது. அதைக் கேட்ட வேணியின் அம்மா, "பிள்ளை வேணி, கேற்றில் மணிச்சத்தம் கேட்கிது, தபாற்காரன் போல், ஒருக்காற் பார்பிள்ளை," என்று குசினியுக்குள் நின்றபடியே குரல் கொடுத்தாள். உடனே வீட்டின் வாசலிற்கு வந்து எட்டிப்பார்த்த வேணி தபாற்காரனைக் கண்டதும் வேகமாய் நடந்து சென்று கடிதத்தைப் பெற்றுக்கொண்டாள். மறுகணம் மேல் விலாசத்தைப் பார்த்தாள். கடிதம் முருகனிடமிருந்து வந்துள்ளது. அப்படியானால் இது தனது கடிதத்திற்குரிய பதிலாகத்தான் இருக்க வேண்டும். அப்பொழுது அவள்மனம் பேசத்தொடங்கியது. வாய் முணுமுணுத்தது.

"அப்ப... செங்கமலத்திற்கும் முருகனுக்கும் திருமணம் நடக்கப் போகின்றது. நான் போட்டதிட்டம் நிறைவேறப் போகின்றது, முருகனுக்கு புதுவாழ்வு ஒன்று கிடைக்கப்போகின்றது. அவருக்கு கிடைத்த ஏமாற்றத்திற்கும், அவர் அனுபவித்த துன்பம் துயரம் வேதனைகளுக்கும் ஒரு நிவாரணம் கிடைக்கப் போகின்றது. அதைப் பார்த்து நான் சந்தோசமடையப் போகிறேன். என்னுடைய தியாகத்திற்கு அர்த்தம் ஏற்படப் போகின்றது. நல்ல இரண்டு உள்ளங்கள் சங்கமமாகப் போகின்றன. சபாஸ்!" என்று கூறி அவளுடைய உள்ளம் துள்ளிக் குதித்தது. அந்த மகிழ்ச்சியுடன் வீட்டிற்குள் நுழைந்த வேணி தனது அறையினுட் சென்று கதிரையில் உட்கார்ந்துகொண்டு கடிதத்தைப் பிரித்தாள். அந்த வேளையில்,

"என்ன பிள்ளை வேணி, கடிதத்தைப் பெற்றுக்கொண்டாயா? யார் போட்டிருக்கினம்?" என்று குசினியிற்குள் நின்றபடியே கேள்விகளைக் கேட்டாள் அம்மா. தாயின் அக்கறையைப் புரிந்து கொண்ட வேணி,

"ஓம் அம்மா, கடிதத்தைப் பெறறுக்கொண்டேன். சென்ற கிழமை நமது வீட்டிற்கு வந்த முருகன்தான் போட்டிருக்கிறார்," என்றதும் "சரி..சரி...ஏதும் சொல்லக்கூடிய புதினமிருந்தால் எனக்கும் சொல்லு," என்று கூறிவிட்டுத் தனது சமையல் வேலைகளிற் கவனம் செலுத்தினாள் அம்மா. அப்புறம் கடிதத்தை வாசிக்கத் தொடங்கினாள் வேணி,

"எனது மதிப்பிற்குரிய வேணிக்கு, நலம், நலமறிய ஆவல். உங்களுடைய கடிதம் கிடைக்கப்பெற்று யாவும் வாசித்தறிந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் கடிதத்திற்கும், நீங்கள் என்மீது கொண்டிருக்கும் அக்கறைக்கும் ரொம்ப நன்றி!

நீங்கள் என்ன பிறப்பென்று எனக்கே புரியவில்லை. நீங்கள் என்ன தெய்வப்பிறவியா? அல்லது மனிதப்பிறவிதானா? திருமணத்திற்காகத் துடித்துக் கொண்டிருக்க வேண்டிய ஒரு பெண், தனக்குத் திருமணம் எப்போ வரும் என்று ஏங்கிக் கிடக்க வேண்டிய வயதில், அவற்றையெல்லாம் மறந்துவிட்டு எனது காதலியின் கொலைகாரனைக் கண்டுபிடிக்க உங்களுடைய உயிரையும் பெண்மையையும் பணயம் வைத்துச் செயற்பட்டதுடன் நின்றுவிடாமல், தொடர்ந்தும் எனக்கு நல்லதோர் வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று முயற்சிக்கிறீங்களே! உண்மையில் நீங்கள் ஒரு மனிதப்பிறவியா? அல்லது மனித ரூபத்தில் வந்திருக்கும் தெய்வமா? எனக்கு எதுவுமே புரியவில்லை. இறைவன் என்னைச் சோதிக்கிறானா என்றுதான் எண்ணத் தோன்று கின்றது. இறைவனின் இந்தச் சோதனையில் நான் சித்தியடை வேனா? என்று மனம் ஏங்குகிறது. இது இறைவனின் சோதனையா யிருந்தால் அதில் நான் சித்தியடைந்தே ஆகவேண்டும், சித்திய டைந்தே ஆகவேண்டும். இதில் மறுபேச்சிற்கு இடமேயில்லை.

எது எவ்வாறிருந்தாலும், எல்லாவற்றையும் அலசி ஆராய்ந்து தீர்க்கமாகவும், அறுதியாகவும், உறுதியாகவும் நான் எடுத்த முடிவின்படி நீங்கள் விபரித்திருக்கும் செங்கமலத்தினுடைய தன்மைகள், தகுதிகள், பெறுமதிகள் எல்லாவற்றிற்கும் மேலாக மிகச்சிறந்த தன்மைகள், தகுதிகள், பெறுமதிகளை நீங்கள் கொண்டுள்ளீர்கள் என்றால் அதையாரும் மறுக்க முடியாது. என்னைப் பொறுத்தவரையில் நீங்கள் ஒரு சாதாரண பிறவியல்ல, ஒரு தெய்வப்பிறவி. தெய்வப்பிறவி என்று சொன்னபிற்பாடு அதற்கு மேல் வர்ணிப்பதற்கு ஒன்றுமில்லை. தெய்வத்தை வர்ணிப்பதற்கு எனக்குத் தகுதியுமில்லை தேவையுமில்லை. எனவே இனிமேல் எனக்கு திருமணம் ஒன்று நடப்பதாயிருந்தால், அது இந்த தெய்வப்பிறவியுடன்தான். மறு பேச்சுக்கு இடமேயில்லை.


இங்ஙனம்
உங்கள் அன்பிற்குரிய
முருகன்.

கடிதத்தை வாசித்து முடித்தபொழுது ஒரு கணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்புலன்களும் வேணிக்குச் செயலிழந்தன. ஆறாவது அறிவுக்குரிய மனமும் மௌனியானது. ஒருசில கணங்கள் சடப்பொருளானாள் என்றால் மறுப்பதற்கில்லை. சில வினாடிகள் கழித்துப் புலன்கள் மறுபடியும் செயற்படத் தொடங்கின. மனமும் எண்ணத் தொடங்கியது. தனக்குட் பேசத் தொடங்கினாள்.



"இந்த ஆளுக்கென்ன அறிவு மங்கிப்போய்ச்சா? என்னைப்போய்த் திருமணம் செய்யப்போகிறேன், இல்லையேல் கல்யாணம் இல்லை என்கிறார். இவருக்கு என்ன நடந்தது? நல்லாய்த்தானே இருந்தார். அதற்குள் என்ன நடந்தது? எங்கேயோ தப்பு ஏற்பட்டுள்ளது. இல்லையேல் இப்படி எழுதமாட்டார். எதற்கும் அவரை நேரிற் பார்த்துப் பேசினாற்தான் இவருடைய இந்தத் தப்பான முடிவிற்கான காரணத்தை அறிய முடியும்," என்று கருதிக்கொண்டு மறுநாட் தாமரைக்குளம் மகாவித்தியாலயத்திற்குப் புறப்பட்டாள். முற்பகல் பதினொன்றரை மணிக்குத் தாமரைக்குளம் சந்தைப் பகுதியை சென்றடைந்த வேணி, சரியாகப் பன்னிரண்டு மணிக்கு முருகன் சாப்பிட வரும் உணவகத்திற்குச் சென்றாள். சொல்லி வைத்தாற் போல் முருகனும் அந்த வேளையில் உணவகத்திற்கு வந்தான்.

வேணியைப் பார்த்ததும் ஆச்சரியம் அடைந்த முருகனுக்கு, அப்புறம் சிறிது பயமும் தயக்கமும் ஆட்கொள்ளத் தொடங்கியது. அவளை நெருங்க நெருங்க மனசில் அச்ச உணர்வு அதிகரித்துச் சென்றதை அவனால் உணர முடிந்தது. இருதயம் சற்றுப் பலமாக அடிக்க அதே வேளையில் உடல் சாதுவாய் வியர்த்தது. மனதிலும் உடலிலும் மெதுவான சோர்வு தென்பட்டது.

"எனக்கு என்ன நடந்தது? ஏன் இப்படியெல்லாம்?" அவனுடைய மனமே அவனைக் கேட்டது.

"என்ன சொல்லுவாளோ? ஏது சொல்லுவாளோ? ஏசிப்போடுவாளோ? என்ற பயம்தான்", மறுகணம் அடுத்த மனம் சொன்னது.

"டேய், நீ ஆண்பிள்ளை, தைரியமாய் இரு, சோர்ந்து போகாதே. நீ ஒரு தப்பும் பண்ணவில்லை. உனது ஆளுமையைக் காட்ட வேண்டிய நேரமிது. உசாராகு!," என இன்னொரு மனம் சொன்னது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் உசாராகிக் கொண்டான். நிலமையைச் சுதாகரித்துக் கொண்டு தைரியத்தோடு அவள் முன் சென்றான். அவன் தன்னை நெருங்கி வந்ததும்,

"எப்படி இருக்கிறீங்கள் முருகன்," என்றாள்.

"நல்லாய் இருக்கிறேன்," என்றான்.

"உங்களுடைய கடிதம் கிடைத்தது," என்றாள்.

"நல்ல முடிவுடன்தானே வந்துள்ளீர்கள்?" என்றான்.

"அதைப்பற்றிப் பேசலாம், கொஞ்சம் அப்பால் தள்ளிவாங்கோ. இங்கு சனமாயிருக்கு," என்று கூறிவிட்டு வீதியோரமாய்ச் சென்றாள். பின் தொடர்ந்தான் முருகன். திடீரென்று திரும்பியவள், "முருகன், உங்களுக்கென்ன அறிவு குழம்பிப் போய்ச்சா? என்னைப் போய்த் திருமணம் செய்யப்போகிறேன் என்கிறீர்கள். எனக்கு ஏற்பட்ட அனுபவத்தை உங்களுக்குத் தெரியுந்தானே? எல்லாவற்றையும் தெரிந்துகொண்டு, ஒன்றும் தெரியாதவர் போன்று என்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போவதாய்ச் சொல்லுகிறீங்கள் புத்திகெட்டுப் போனவன்மாதிரி. உங்களுக்கென்ன புத்தி பேதலிச்சுப்போய்ச்சா முருகன்?" என்று சொல்லிக்கொண்டுபோக, அவளைப் பார்த்து ஏளனப் புன்னகை ஒன்றை உதிர்த்துவிட்டு, நிதானமாக,

"எனக்கு புத்தி கெட்டுப்போகவுமில்லை, எனது புத்தி பேதலித்துப் போகவுமில்லை. எல்லாம் நல்லாகவே உள்ளன. நான் இப்பொழுது ரொம்பத் தெளிவாக உள்ளேன். அது ..சரி... என்னைப் போய்த் திருமணம் செய்துகொள்ளப் போகிறீங்களா? என்று ஒரு மாதிரிக் கேட்கிறீங்கள். அதன் அர்த்தம் என்ன? நீங்கள் வாழ்க்கைக்கு உதவாத ஒரு சடப்பொருளாக மாறிவிட்டீர்களா? உங்களுடைய அந்த வசனத்தின் அர்த்தம் என்னவென்று எனக்குப் புரியவில்லையே! சற்று விளக்கமாய்க் கூறுவீங்களா?" என்றதுதான் தாமதம், சிறிது உணர்ச்சிவசப்பட்ட வேணி,

"நான் என்னத்தைப் பற்றிச் சொல்லுகிறேன் என்று உங்களுக்கு உண்மையாகப் புரியவில்லையா? அல்லது எனது வாயாற் சொல்ல வேண்டுமென்று விரும்புகின்றீங்களா அந்த அசிங்கீனத்தை?" என்று சொல்லி வாய்மூடுவதிற்குள்,

"நிறுத்துங்கள் உங்கள் பேச்சை! அன்று சமூகப் பாதுகாப்பு நீதிமன்றில் நீதிபதி உங்களைப் பார்த்து 'உங்களுக்கு ஏற்பட்ட அனுபவம் தமிழ்க்குலத்திற்கு ஒவ்வாத ஒன்று. அதனால் உங்களுடைய மனம் பாதிக்கப்பட்டுள்ளதா?' என்று கேட்டபொழுது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வேளையில் நெருப்பாற்றைக் கடந்தேன், என்னை நான் மறந்திருந்தேன் என்று ஏதேதோ வெல்லாம் வீராப்புப் பேசினீங்கள், ஞாபகமிருக்கா? அவையெல்லாம் வெறும் சினிமா வசனங்களும் நடிப்புமா?" என்று கேட்டுவிட்டு அவளை விழித்துப் பார்த்தான் பதிலுக்காக. மௌனியானாள், அவளால் எதுவும் பேசமுடிய வில்லை. அவளுடைய தலை தரையை நோக்கியது. தொடர்ந்தும் மௌனம். அந்த வேளையில் அவளின் மனதைப் புரிந்துகொண்ட முருகன், தானும் சிறிது நேரம் மௌனமாய் நின்றான். அப்பறம் மௌனத்தைக் கலைத்துக் கொண்டு,

"சொல்லுங்கள் பதிலை, எனது கேள்விக்கு சொல்லுங்கள் பதிலை," என்று அழுத்திக் கேட்டான். அவளிடமிருந்து பதில் ஏதும் வராததைத் தொடர்ந்து,

"உங்களாற் பதில் சொல்ல முடியாது. உங்களால் எனது கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது. காரணம் உங்களை நீங்களே ஏமாற்றிக் கொண்டிருக்கிறீங்கள். வாழத்தகுதி அற்றவளென்று உங்களை நீங்களே ஏமாற்றிக் கொண்டிருக் கிறீங்கள். நீங்கள் மட்டுமல்ல எமது சமூகத்திற் பலர் வாழத்தகுதி அற்றவர்களென்று தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டிருக் கின்றார்கள். இந்த அவல நிலயை உங்களுக்கு ஏற்படுத்திய வர்கள், வேறு யாருமல்ல, எமது சமூகம். அதாவது எமது சமூகத்திற் புரையோடிப் போயிருக்கும் மனித நேயத்திற்கு ஒவ்வாத அர்த்தமற்ற கொள்கைகள்.

நான் கெட்டுப் போனவள், வாழத் தகுதியற்றவள் என்று உன்னை நீயே ஆக்கிக்கொள்கிறாய். அதற்குக் காரணம் எமது சமூகம். என்னைப் பொறுத்தமட்டில் நீங்கள் ஒரு பத்தினித் தேவதை. கற்பு என்பது உடலோடு சம்பந்தப்பட்டதல்ல. அது முழுக்க முழுக்க உள்ளத்தோடு சம்பந்தப்பட்டது. நீங்கள் உங்கள் உள்ளத்தில் ஒரு பத்தினித் தேவதை. கற்பு என்பது உள்ளத்தோடு சம்பந்தப்பட்டது என்பதற்கு ஒரு கதை சொல்லுகிறேன். கவனமாய்க் கேளுங்கள்," என்றவன் தொடர்ந்து,

ஓர் ஊரில் ஒரு இராசா இருந்தானாம். அவனுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை பிறக்கும்பொழுது அதனுடைய முகம் இருக்க வேண்டிய இடத்திலிருந்து நாற்பத் தைந்து பாகை இடப்பக்கமாய்த் திரும்பியிருந்ததாம். உதாரணத் திற்குச் சொன்னாற் கோவில்களில் இருக்கும் இடபவாகனத்திற்கு அதன் தலையை நாற்பத்தைந்து பாகையிற் திருப்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருப்பார்கள். அது வாகனத்திற்குப் பொருந்தும். மனிதனுக்குப்பொருந்துமா? இல்லை. இராசாவிற்கும் இராணிக்கும் ஒரே கவலை. ஏன்? எதிர்காலத்தில் நாட்டை ஆளப்போகும் வாரிசல்லவா? அப்பொழுது ஓர் அசரீரி கேட்டதாம். ஒரு பத்தினிப்பெண் அந்தப் பிள்ளையின் முகத்தைப் பார்த்து 'நேராகத்திரும்பு' என்று சொன்னால் முகம் திரும்பிச் சரியான இடத்திற்கு வருமென்று.

இந்த அசரீரியைக் கேட்டதும் அந்த இராசாவிற்கு ஒரு நளினச் சிரிப்பு வந்ததாம். ஏன்? இரண்டாம் பேர்வழிக்கும் தெரியாமல் தனது மனைவியை, அதாவது பிள்ளையின் தாயைக் கொண்டே காரியத்தை இலகுவாய் முடித்துவிடலாமென்று. உடனே இராசா தனது மனைவியிடம் அசரீரியைப் பற்றிச் சொல்லியபின், பிள்ளையைச் சுவாமி அறைக்கு எடுத்துச் சென்று, அங்கு இறை வனின் முன் வைத்துவிட்டு மனைவியிடம் கேட்டாராம், 'இறைவனை வணங்கிவிட்டுப் பிள்ளையின் முகத்தைப் பார்த்து நேராகத்திரும்பு' என்று கூறும்படி. இராசாவின் வேண்டுகோளுக்கிணங்க இராணி பயபக்தியோடு இறைவனை வணங்கிவிட்டு சிரமேற்கூப்பிய கைகளோடு 'நேராகத் திரும்பு' எனக் கூறினாவாம். நடந்ததென்ன? முகம் சிறிதுகூட அசையவில்லை. இதைக்கண்டு அதிர்ச்சியும் கவலையும் அடைந்த இராசா இந்த விடையத்தை வெளியிற் சொன்னால் வெட்கக்கேடு என்று எண்ணிக்கொண்டு, உடனே மந்திரியை அழைத்து இந்த ஊரிலுள்ள பெண்களையெல்லாம் இராசாவின் அரண்மனைக்கு வரும்படி உத்தரவிடும்படி கேட்டுக் கொண்டார்.

உடனே உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஊரிலுள்ள பெண்கள் ஆயிரக்கணக்கில் வந்து வரிசையாக நின்றனர். பெண்கள் வரிசையின் நீளம் மைல்க் கணக்கில் நீண்டு சென்றது. பிள்ளை அரண்மனையின் முற்பகுதியில் வைக்கப்பட்டிருந்தது. இராசாவின் சேவகர்கள் வரிசையாய் நின்ற பெண்களிடம் குழந்தையின் முகத்தைப் பார்த்து 'நேராகத் திரும்பு' என்று சொல்ல வேண்டுமென வேண்டிக்கொண்டனர். பல்லாயிரம் பெண்கள் இவ்வாறு வேண்டிக் கொண்ட போதும் குழந்தையின் முகம் சிறிதுகூட அசையவில்லை. பல்லாயிரம் பெண்கள் கடந்து சென்ற வரிசையில் நின்ற ஒரு பெண், சாதாரண கூலித்தொழிலாளியின் மனைவி, அந்தப்பிள்ளையின் முன் சென்றதும், அந்தக் குழந்தையின் பஞ்சு போன்ற பிஞ்சுப் பாதங்களைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொண்டு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது குலதெய்வத்தையும் அடுத்துத் தனது கணவரையும் மனதில் நிறுத்தி வணங்கிவிட்டுக் கண்ணீர் மல்கிய நிலையிற் சிரமேற்கூப்பிய கரங்களுடன் 'நேராகத்திரும்பு' என்று கூறிவிட்டு இதயம் உருக வீழ்ந்து வணங்கினாளாம். வீழ்ந்து வணங்கியவள் சில நிமிடங்களாகியும் எழுந்திருக்கவேயில்லை. அந்த வேளையில் முகமும் திரும்பவில்லை. அங்கு நின்றவர்களெல்லாம் 'ஒரு பயித்தியம் விழுந்து கிடக்கிறது, இதைத் தூக்கி வெளியில் எறியுங்கள்,' என்று கூச்சலிட்டார்களாம். வரிசையில் நின்ற பெண்களின் கூச்சலுக்கு மதிப்பளித்து விரைந்து சென்ற சேவகர்கள் குண்டுக்கட்டாய்ப் பிடித்து அவளைத் தூக்க ஆயத்தமாகிய வேளையில் அந்தப் பெண் மெதுவாக எழுந்தாளாம். அவள் எழுந்த மெதுவான வேகத்தில் அந்தப் பிள்ளையினுடைய முகம் நேராகத்திரும்ப ஆரம்பித்ததாம். அவள் எழுந்து நேராக நின்றபொழுது அந்தப்பிள்ளையினுடைய முகமும் நேராகத் திரும்பியதாம். அதைப் பார்த்து ஆச்சரியம் அடைந்த அந்தப் பெண் உடனே மறுபடியும் தரையில் வீழ்ந்து மறுபடியும் இறை வனையும் கணவனையும் தியானித்து நன்றி சொல்லிவிட்டு எழுந்த பொழுது எதிரில் மன்னன் நின்றானாம். திடீரென்று அவளின் பாதத்தில் விழுந்த மன்னன், அவளுடைய பாதத்தைத் தொட்டு வணங்கி என்னை ஆசீர்வதியுங்கள்,' என்றானாம். உடனே அந்தப் பெண், 'எல்லாம் அவன் செயல். எழுந்திரு மன்னா' என்றாளாம்.

இந்தக் கதை உண்மையோ அன்றி கற்பனையோ எனக்குத் தெரியாது. ஆனால் இதில் இருந்து நாம் கற்றுக் கொள்ளும் பாடம் என்ன? என்பதுதான் எமக்கு முக்கியம். இந்த இடத்தில் நான் கேட்கவிளையும் கேள்வி என்னவென்றால் இராணி உட்பட மற்றைய பெண்கள் அனைவரும் கற்பை இழந்தவர்களா? அல்லது கற்பே அற்றவர்களா? இன்றைய உலகத்திற் கற்பு என்ற சொல்லைத் தமிழ் அகராதியிலிருந்து நீக்கிவிடவேண்டும் என்றும், அது ஆண் வர்க்கம் பெண் வர்க்கத்தை அடிமைப்படுத்துவதற்காக அன்றைய காலத்தில் உருவாக்கியசொல் என்றும், அது இக்காலத்திற்கு ஒத்துவராது என்றும், அதை அடியோடு நீக்கிவிட வேண்டுமென்றும் கூறுபவர்களும் உண்டு.

கற்பு என்ற பதத்தை ஒரு பக்கத்தில் ஒதுக்கி வைத்துவிட்டு ஒழுக்கரீதியிற் பார்த்தால், ஒரு பெண் திருமணம் செய்வதற்கு முன்போ அல்லது திருமணம் செய்த பிற்பாடோ தனது கணவனைத் தவிர வேறு எந்த ஆணுடனும் பாலியல் ரீதியான உடலுறவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துக் கொள்ளக்கூடாது என்று ஒழுக்கத்தைப் போதிக்கும் எல்லாச் சமயங்களும் கூறுகின்றன. இன்று உலகில் வாழும் மக்களிற் பெரும்பான்மையானோர் பின்பற்றும் இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் சமயங்கள் இந்த விடயத்தில் முரண்பட்டவை அல்ல. ஒழுக்கத்தைப் பேணுமுகமாக எல்லாச்சமயங்களும் இவ்வாறு கூறுகின்றன. அதற்காகக் கணவனைத் தவிர மற்றயை ஆண் களுடன் பாலியல் ரீதியாக உடலுறவு வைத்துக்கொள்ளாத எல்லாப் பெண்களும் கற்புடையவர்கள் என்று கூறிவிடமுடியாது. விளக்கமாய்ச் சொன்னால், இராணி உட்பட அங்கு வந்த ஆயிரக் கணக்கான பெண்கள் அத்தனைபேரும் அவர்களைப் பொறுத்தவரை ஒழுக்கமுடையவர்கள்தான். நிச்சயமாக அவர்கள் அனைவரும் தமது கணவன்மார்களைத் தவிர வேறு ஆண்களுடன் பாலியல்ரீதியான உடலுறவு வைத்துக் கொள்ளாதவர்கள் தான். இதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

ஆனால் இராசாவின் குழந்தையின் விடயத்தில் அவர்களுடைய வேண்டுதல் வெற்றி அளிக்கவில்லை. வேறு வார்த்தையிற் சொன்னால் அவர்களுடைய வேண்டுதல் நிறைவேறும் அளவிற்கு அவர்களுடைய கற்பு வலிமை கொண்டதாயிருக்க வில்லை. இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடம் என்ன வென்றாற் கற்பு என்பது உடலோடு சம்பந்தப்பட்டதல்ல. அது முழுக்க முழுக்க உள்ளத்தோடு சம்பந்தப்பட்டது. கற்பு என்பது ஒருவகைான மனோசக்தி. மேலும் சிறிது ஆழமாய்ப் பார்த்தாற் கற்பு என்பது ஒருவகையான ஆன்மீக சக்தியும்கூட. மறுபடியும் சொல்லுகிறேன் இது முழுக்க முழுக்க உள்ளத்தோடு சம்பந்தப் பட்டது.

நாம் படித்த தமிழரின் இலக்கிய வரலாற்றில் ஒரு கண்ணகியினாற்தான் தனது கற்பின் வலிமையால் மதுரையை எரிக்க முடிந்தது. ஒரு நளாயினியாற்தான் உதயசூரியனை நிறுத்த முடிந்தது. ஒரு சீதாபிராட்டியாற்தான் தீயிற்குளிக்க முடிந்தது. இவர்கள் கற்பின் வலிமையை உலகுக்கு எடுத்துக் காட்டியவர்கள். இதனாற்றான் இவர்களைக் கற்புக்கரசிகள் என்றும் பத்தினித் தெய்வங்கள் என்றும் அழைக்கிறோம், போற்றுகிறோம், வணங்கு கின்றோம். இவை உண்மையா அன்றி கற்பனையா? என்பது இங்கு முக்கியமில்லை. கற்பு என்பது ஒருவகை மனோசக்தி அன்றி ஒருவகை ஆன்மீக சக்தி என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே சொன்னேன். உயர் மனோசக்தி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் ஆன்மீக சக்தி கொண்டவர்கள் எத்தனையோ அற்புதங் களைச் செய்ய முடியும். இது எல்லோரும் அறிந்தவிடயம். இந்த வகைச் சக்தி எல்லாப் பெண்களுக்கும் இருக்கப் போவது மில்லை, இருக்க வேண்டிய அவசியமுமில்லை,'' என்று சொல்லிக்கொண்டு போக முருகனின் நீண்ட புராணக் கதையைக் கேட்டுச் சிறிது சலிப்படைந்த வேணி, "முருகன், நீங்கள் சொல்லும் விடயங்கள் எல்லாம் எனக்கு ஓரளவு புரிகின்றது. இருந்தபோதும் ஒட்டுமொத்தமாய் நீங்கள் என்ன சொல்ல வருகிறீங்கள்? அதைக் கொஞ்சம் சுருக்கமாயும் விளக்கமாயும் சொல்லுங்களேன்," என்றாள். தனது புராணக் கதையைக் கேட்டு வேணி சலிப்படைகிறாள் என்பதைப் புரிந்து கொண்ட முருகன், சுருக்கமாகவும் அழுத்தம் திருத்தமாகவும் சொல்லுவம் என்று எண்ணிக்கொண்டு,

"பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பெண்கள் தங்களுடைய உள்ளத்தின் சம்மதத்தோடு பாலியல் உறவு கொண்டவர்கள் அல்ல. வேறுவார்த்தையிற் சொன்னால் அவர்கள் பாலியல் இன்பத்தை அனுபவித்தவர்கள் அல்ல. இன்னும் கொஞ்சம் விளக்கமாய்ச் சொன்னால் அவர்கள் சிற்றின்பத்தை அனுபவித்த வர்கள் அல்ல. மாறாக அவர்கள் பாலியற் கொடுமையை அனுபவித்தவர்கள். ஆண்களின் கொடுமைக்கு உட்படுத்தப்பட்ட வர்கள். ஆண்களின் காமவெறியாட்டத்திற்கு ஆட்பட்டவர்கள். அவர்களைப் பார்த்துக் கற்பிழந்தவர்கள், ஒழுக்கம் கெட்டவர்கள் என்று சொல்லுவது கொடுமையிலும் கொடுமை. பெண்களைப் பாலியல் வல்லுறவிற்குட்படுத்திய கொடியவர்களைவிட இவ்வாறு கூறுபவர்கள் மகாகொடியவர்கள். அவர்களை மன்னித்தாலும் இவர்களை மன்னிக்கவே முடியாது.


பாலியல் வல்லுறவுக்குட்பட்ட பெண்கள் அனுதாபத்திற்குரிய வர்கள், ஆதரவளிக்கப்பட வேண்டியவர்கள், வாழ்வளிக்கப்பட வேண்டியவர்கள். அவர்களுக்கேற்பட்ட வேண்டப்படாத அனுப வத்தை வைத்துக்கொண்டு அவர்கள் மனதை நோகடிக்கப்படாது. அப்படிச் செய்வது மிருகத்தனம். மன்னிக்க வேண்டும் 'மிருகத்தனம்' என்று சொல்லுவதற்கு. அப்படிச் சொல்லுவதற்கு நமக்கு அருகதையில்லை. காரணம் இந்த விடையத்தில் மிருகங்கள் மனிதனைவிட எவ்வளவோ மேலானவை.

பாலியற் பலாத்காரத்திற்குட்பட்ட பெண்களைப் பார்த்து இவர்கள் கற்பிழந்தவர்கள் ஒழுக்கம் கெட்டவர்கள், கெட்டுப் போனவர்கள் என்று கூறுவதற்கு இந்த ஆண் வர்க்கத்திற்கு என்ன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோக்கியதை உண்டு? அந்தப் பெண்களை இந்த நிலமைக்கு உட்படுத்தியவர்கள் யார்? ஆண்வர்க்கம் தானே! பெண்களை இந்தவகைப் பரிதாப நிலைக்குத் தள்ளிவிட்டு, அப்புறம் அவர்களைப் பார்த்து ஒழுக்கம் கெட்டவர்கள், கற்பிழந்தவர்கள், கெட்டுப்போனவர்கள், வாழத்தகுதி அற்றவர்கள் என்று கூறுவதற்கு ஆண்களுக்கு என்ன அருகதையுண்டு? யேசுகிறிஸ்து நாதர் கேட்டதுபோன்று, ஒழுக்கம் கெட்ட பெண்ணைக் கல்லால் எறிந்து கொல்லுவதற்கு எந்த ஆணுக்கு யோக்கியதை உண்டு? அந்த ஆண் முதலிற் கல்லை எறியலாம். எறிவதற்கு யாருமேயில்லை. ஏற்கனவே ஒழுக்கம் கெட்ட ஆண் வர்க்கத்திற்கு ஒரு பெண்ணைப் பார்த்து ஒழுக்கம் கெட்டவள் என்று கூறுவதற்கு என்ன தகுதியுண்டு? இதில் வெட்கப்படவேண்டியவர்கள் யார்? ஆண்களா? அன்றிப் பெண்களா?

பெண்களைப் பாலியல் வல்லுறவிற்குட்படுத்தும் ஆண்கள் தங்கள் தேவை முடிந்தபின் அவர்களைப் பார்த்துக் கெட்டுப்போனவர்கள், வாழத் தகுதி அற்றவர்களென்று ஒதுக்கி வைத்தால் அப்புறம் வேறு யாருடன் இந்த ஆண்கள் வாழ்க்கை நடாத்தப்போகின்றார்கள்? இந்திரலோகத்திலிருந்து கெட்டுப் போகாத பத்தினிப் பெண்களை இறக்குமதி செய்து அவர்களுடன் வாழப்போகின்றார்களா? இங்குதான் ஆண்களின் பரிதாபநிலை தென்படுகிறது. நீயே கெடுத்ததை நீயே அனுபவியடா!



## அங்கம் 10

இப்படியெல்லாம் பேசுகின்றபடியினால் ஒழுக்கம் பற்றி யாதும் அறியாதவனல்ல நான். 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்', என்று நம்முன்னோர் கூறிவைத்துள்ளார்கள். மனித வாழ்வில் ஒழுக்கம் உயிரினும் மேலானது என்று கூறுவதிலிருந்து அதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவத்தை நாம் இலகுவாய்ப் புரிந்து கொள்ள முடியும். அந்த வகையிற்தான் நாம் மிருங்களைவிட வித்தியாசமானவர்கள். மறுபடியும் மன்னிக்க வேண்டும் மிருகங்களுடன் ஒப்பிடுவதற்கு. மிருகங்கள் இந்தவிடயத்தில் மிகவும் கட்டுப்பாடுடையவை, மேன்மையானவை.

அந்த ஒழுக்கம் பெண்களுக்கு மட்டும் உரிய விடயமல்ல. ஆண்களுக்கும் உரிய விடையம்தான். ஒழுக்கம் கெட்ட பெண்களும் இருக்கிறார்கள், ஒழுக்கம் கெட்ட ஆண்களும் இருக்கின்றார்கள். அவர்கள் யார்? எப்படிப்பட்டவர்கள்? என்பது எனக்கும் தெரியும், உங்களுக்கும் தெரியும், நம் எல்லோருக்கும் தெரியும். நான் சொல்ல வருவதென்னவென்றாற் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப் பட்டுள்ளார்களே! பல பெண்கள், இவர்களிற் கொலை செய்யப்பட்வர்கள், இறந்தவர்கள் போக, மிகுதியாய் உயிருடன் இருக்கும் பெண்கள் அனைவரும் கற்பை இழந்தவர்களா? ஒழுக்கம் இல்லாதவர்களா? கெட்டுப்போனவர்களா? அன்றி வாழத்தான் தகுதி அற்றவர்களா? இவர்கள் வாழத்தகுதி யற்றவர்கள் என்று எந்தவொரு தமிழனாவது கூறுவானாயிருந்தால் இந்த தமிழினமே அழிந்துபோகட்டும். நான் என்ன சொல்லுகிறேனென்றால் இவர்கள் அனைவரும் ஒழுக்கசீலர்கள், வாழத்தகுதி உடையவர்கள். வாழவைக்கப்பட வேண்டியவர்கள்.

கணவனது முன்னிலையில் மனைவியும், பெற்றோரின் முன்னிலையில் மகள்மாரும், அண்ணனின் முன்னிலையில் தங்கையும், தம்பியின் முன்னிலையில் அக்காவும், பேரனின் முன்னிலையில் பேத்தியும் ஈவிரக்கமின்றிப் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டார்களே! இவர்களெல்லம் ஒழுக்கம் கெட்டவர்களா? இவர்கள் வாழத்தகுதி அற்றவர்களா? இவர்களை ஒழுக்கம் கெட்டவர்களென்றும் வாழத்தகுதி அற்றவர்களென்றும் கூறி வீட்டை விட்டு விரட்டியடித்து விடலாமா? அன்றி ஒதுக்கித்தான் வைத்துவிட முடியுமா? புத்தகப் பையுடன் பாடசாலைக்குச் சென்ற பச்சிளம் சிறுமிகள்கூடப் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டார்களே! இவர்களும் ஒழுக்கம் கெட்டவர்களா? எதிர்காலத்தில் வாழத்தகுதி அற்றவர்களா? இவர்களையும் வீட்டைவிட்டு விரட்டியடித்துவிடலாமா?

கடந்தகால உலக வரலாற்றைப் புரட்டிப்பார்த்தால் எத்தனை ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான அப்பாவிப் பெண்கள் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள், தெரியுமா? போர்க்காலக் குற்றங்கள் கணக்கில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்கப்படுவதில்லை. இதுதான் இதற்கு உலகம் சொல்லும் பதில். இவற்றையெல்லாம் தெரிந்திருந்தபோதும் நமது தமிழ்ச் சமூகத்தில் மனித நேயத்திற்கு ஒவ்வாத சில கொள்கைகள் இன்றுவரை புரையோடிப் போயிருக்கின்றன,'' என்று கூறிக்கொண்டு போக மறுபடியும் குறுக்கிட்ட வேணி,

''நீங்கள் சொல்லுவதெல்லாம் சரி. அதற்கு யாரும் மறுப்புச் சொல்ல முடியாது. அந்த வகையில் நீங்கள் மொத்தமாய் என்னதான் சொல்ல விளைகின்றீர்கள்? அதைக் கொஞ்சம் சுருக்கமாய் சொல்லுங்களேன்,'' என்றதுதான் தாமதம் சிறிது உணர்ச்சிவசப்பட்ட முருகன்,

''என்ன வேணி, நீ சின்னப்பிள்ளையாட்டம் கேள்வி கேட்கிறாய். 'எனக்கு ஏற்பட்ட அனுபவத்தைத் தெரிந்துகொண்டும் என்னுடன் வாழப்போகிறேன் என்று கூறுகின்றீர்களே, உங்களுக்கென்ன புத்திகெட்டுப் போச்சா?' என்று ஒரு கேள்வி கேட்டீங்களே, ஞாபகமிருக்கா?'' என்றதும்,

''ஞாபகமிருக்கு,'' என்றாள். உடனே ''அப்படி நீங்கள் கேட்டதிற்கான காரணம் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டுவிட்டு சில வினாடிகள் அவளை உற்றுப் பார்த்தவன் தொடர்ந்து,

''காரணத்தை நீங்கள் தெரிந்திருந்தாலும் அதை உங்கள் வாயினாற் சொல்லுவதற்குத் தயங்குவீர்கள். ஆனபடியினால் நானே சொல்லுகிறேன். நீங்கள் நினைக்கிறீர்கள் நீங்கள் கெட்டுப்போனவள், கற்பை இழந்தவள், ஒழுக்கம் கெட்டவள், வாழத்தகுதி அற்றவள் என்று. இப்படி நீங்கள் எண்ணுவதற்குக் காரணம் நமது சமுதாயத்திற் புரையோடியிருக்கும் மனித நேயத்திற்கு ஒவ்வாத சில கொள்கைகள்தான். நீங்களும், ஏன் நானும்தான், இதே குட்டையில் ஊறிய மட்டைகள்தான். ஆனபடியால் நமக்கு அப்படித்தான் எண்ணத் தோன்றும், அது தப்பு. ஏன் என்பதற்கான காரணத்தை இதுவரை நான் கூறியவற்றிலிருந்து நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஒன்றைமட்டும் சொல்லுகிறேன் நீங்களும் பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்ட ஓர் அப்பாவிப்பெண்தான். ஆனபடியால் நீங்களும் வாழவைக்கப்பட வேண்டியவள், வாழத்தகுதி உடையவள். நீங்கள் வாழ்ந்தே ஆகவேண்டும்.

மனித நேயத்திற்கு ஒவ்வாத ஈவிரக்கமற்ற கொள்கைகள் எமது சமுதாயத்தின் மத்தியிலிருந்து களையப்படவேண்டும். தமிழனுக்குப் புதுயுகம் பிறக்கவேண்டும். நீங்கள் வாழவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களைப்போன்ற உத்தமிகள் வாழவேண்டும். தமிழினம் ஒட்டுமொத்தமாய் மறுமலர்ச்சி பெறவேண்டும். சென்ரிமென்ரல் வாழ்க்கை முறை மாற்றப்பட வேண்டும். எமது வாழ்க்கையின் யதார்த்தம் என்னமாவோ இருக்கும் போதும் அதை மறைத்துவிட்டு வெளிவேசம் நிறைந்த வாழ்க்கை வாழ்வதன் மூலம் எம்மால் எதையும் இந்த உலகிற் சாதிக்கமுடியாது. யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டு முன்னேற்றமடையத் தொடர்ந்து முயற்சிக்கும் வாழ்க்கை முறைதான் தமிழ் இனத்திற்குத் தற்போது வேண்டியது. எதற்கும் உதவாத சென்ரிமென்ரல் வாழ்க்கை இனிமேல் தமிழ் இனத்திற்கு வேண்டாம்.


நீங்கள் வாழவேண்டும், அதுவும் என்னுடைய மனைவியாக வாழவேண்டும் என்பது எனது ஆசை. எனக்கென்று ஒரு வாழ்க்கை இருந்தால் அது உங்களுடன்தான். என்னுடைய காதலியைக் கொலைசெய்த கொலைகாரனைக் கண்டுபிடிப்பதற்காக இனியில்லை என்ற தவிர்க்கமுடியாத நிலையிற் சில நிமிடங்கள் உனது பெண்மையைப் பணயம் வைத்த காரணத்திற்காக வாழத்தகுதி அற்றவள் என்று எண்ணிக் கொண்டிருக்கும் நீங்கள் எனது எதிர்கால வாழ்க்கையைப் பற்றிக் கவலை கொள்ளும் பொழுது, உங்களுடைய வாழ்க்கையைப் பற்றிக் கவலை கொள்ளாமல் என்னால் எப்படி இருக்க முடியும்? நீங்கள் ஒரு பெண்ணாயிருந்து கொண்டு எனக்கு வாழ்வு தேடிக்கொடுக்க முயற்சிக்கும்போது, நான் ஓர் ஆணாயிருந்து கொண்டும் உங்களுடைய வாழ்க்கையைப் பற்றிக் கவலைப்படாமல் என்னுடைய காரியத்தை மட்டும் பார்த்துக் கொண்டு போவது எந்தவகையில் நியாயமானது? அப்படியானால் நான் ஒரு மனிதனாயிருக்கமுடியுமா? நினைத்துப் பார்க்கவே கேவலமாயிருக்கு. அந்தக் கேவலத்திற்கு எப்படி நான் ஒத்துக் கொள்ள முடியும்?" என்று கேட்டதும், புத்துணர்ச்சி பெற்ற வேணி,

"முருகன், நீங்கள் கணிதத்திற்தான் புலி என்று கேள்விப்பட்டிருந்தேன். இப்பொழுதுதானே தெரிகின்றது கணிதத்தில் மட்டுமல்ல மனித வாழ்வியலிலும் ஒரு வேங்கை என்று. அதுமட்டுமல்ல, பல்கலைக்கழகத்தில் விரிவுரைவகுப்பிற் பேராசிரியர் ஒருவர் பொழிந்து தள்ளியது போன்று பொழிந்து தள்ளிவிட்டீர்களே! அபாரம்! உங்களுடைய அறிவையும் மனிதாபிமானத்தையும் எண்ணிப் பெருமைப்படுகிறேன். இப்பொழுது எனது மனதிற் தெளிவு ஏற்பட்டு விட்டது. அதனால் ஆனந்தம்பொங்கி வழிகின்றது," என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிக்கொண்டு போகக் குறுக்கிட்ட முருகன்,

"என்னைப் பாராட்டியது போதும். அது இருக்கட்டும், என்னுடைய விருப்பத்திற்கு உங்களுடைய சம்மதம் கிடைக்கவில்லையே?" என்று கேட்டுவிட்டு அவளுடைய முகத்தை உற்றுப் பார்த்துப் புன்னகைத்தான். பதில் சொல்ல எண்ணியபொழுது நாணம் அவளைக் கௌவிக் கொண்டது. முகம் தரையை நோக்கியது. ஆனாலும் முகத்திலே மலர்ச்சி, இதழ்களில் சிறு புன்னகை. அவற்றை அவதானித்த முருகனுக்குச் செந்தாமரை ஒன்று மெதுமெதுவாக மலர்வது போன்ற காட்சி தென்பட்டது. அவனின் உள்ளம் துள்ளிக் குதித்தது. சில நிமிடங்களின் பின் மெதுவாகத் தலையை வலது பக்கம் சாய்த்துக் கடைக்கண் பார்வையுடன் வேணி அவனை நோக்கிப் புன்னகைத்தாள். மன்மதபாணம் முருகனின் நெஞ்சைத் துளைத்தது. ஆண்மை பெண்மையிடம் சரணடைந்தது.



இதை நன்கு புரிந்து கொண்ட வேணி ஆண்மையை மேலும் அடிமைப்படுத்தக்கூடாது என்று எண்ணிக் கொண்டு மெதுவாகத் தலையை நிமிர்த்தினாள். அந்தவேளையில் அவளின் வலது கை சரிந்த தாவணியைத் தூக்கிப் போட்டது, நிமிர்ந்து கொண்டாள். முத்துப்போன்ற பல்வரிசை பிரகாசிக்க மலர்ந்த முகத்துடனும் நிறைந்த சிரிப்புடனும், "அப்பவே எனது சம்மதத்தைத் தெரியப்படுத்திவிட்டேனே!" என்றாள். இதைக் கேட்டு ஆச்சரிய மடைந்த முருகன் வாயைப் பிழந்துகொண்டு, "எப்போ?" என்றான். "அதுதான், உங்களுடைய பெருமையைப் பாராட்டியபொழுது 'எனது மனதில் ஆனந்தம் பொங்கி வழிகிறதென்று' சொன்னேன், கவனிக்கவில்லையா?" என்று கேட்டதும் அசடுவழிந்த நிலையில், "அப்படியா! ஞாபகம் வருகுது, ஞாபகம் வருகுது. நான் ஒரு மொக்கு. அந்த வேளையில் எனக்கது புரியவில்லை," என்றான்.
"அப்படிச் சொல்லாதீங்க," என்றாள்.
"எப்படி," என்றான்
"மொக்கென்றுதான்," என்றாள்.
"ஓ அப்படியா!" என்று சொல்லிவிட்டு விழுந்து விழுந்து சிரித்தான். அவளும் சேர்ந்து சிரித்தாள். காதல் கனிந்தது. சில விநாடிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரிப்பு நீண்டது. அப்புறம் சிரிப்பை நிறுத்திய முருகன், "மிக்க நன்றி! போவமா? என்றான்.
"எங்கே?" என்றாள்.
"கடைக்குத்தான். சாப்பிட வந்தனான். இது என்னுடைய மதியச் சாப்பாட்டு வேளை. பசிக்குதப்பா," என்றான்.
"என்ன மரியாதை கூடுது.. அப்பா குப்பா என்று," எனச் சொல்லிக் கொண்டு முறாய்த்துப் பார்த்தாள்.
"சொறி வேணி.... தெரியாதா? வாய்தடுமாறிச் சொல்லிவிட்டது," என்றான்.
திடீரெனப் புன்னகைத்துவிட்டு,
"என்ன! பயந்திட்டீங்களா? சும்மா பகிடிக்குத்தான் சொன்னேன். வாய் தடுமாறவில்லை. அது சரியாய்த்தான் சொல்லியிருக்கு. இனியென்ன, அப்பாவென்று கூப்பிட்டாலென்ன அம்மாவென்று கூப்பிட்டாலென்ன, எல்லாம் ஒன்றுதான். எப்படியும் கூப்பிட உங்களுக்கு உரிமை உண்டுதானே," என்று கூறியவள் ஏதோ திடீரென்று ஞாபகத்திற்கு வந்தவள் போன்று,
"நான் ஓர் அறணைப் பிறப்பு. உங்களுடைய சாப்பாட்டு நேரத்தை மறந்து தொடர்ந்தும் பேசிக்கொண்டு நிற்கிறேன். நடவுங்கோ போவம்," என்று கூறிவிட்டுப் பின் தொடர்ந்தாள். தனது வழமையான உணவகத்திற்குச் சென்ற முருகன் வேணியுடன் உட்கார்ந்துகொண்டு ஏறிட்டுப் பார்த்தான். சொல்லிவைத்தாற்போல் திடீரென்று வந்த பையன்,
"வழமையான சாப்பாடா? அல்லது விசேடமான சாப்பாடா?"என்று புன்சிரிப்புடன் கேட்டான். பையனின் புன்முறுவலில் இருந்து அவனின் எதிர்பார்க்கையைப் புரிந்துகொண்ட முருகன் உடனே வேணியைப் பார்த்து புன்முறுவல் செய்தான். அதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட வேணி கண்ணைச் சிமிட்டினாள். மறுகணம் பையனைப் பார்த்து, "போடு கல்யாணச் சாப்பாடு," என்றான். சொன்னதுதான் தாமதம் வந்து குவிந்தது சாப்பாடு பத்துக் கறியும் பாயாசத்துடனும். அத்துடன் வடையும் வாழைப்பழமும் சேர்ந்து கொண்டன. ஜாம்ஜாம் என்று சாப்பிட்டு முடித்தவர்கள் கையை அலம்பிவிட்டு திரும்பியபொழுது சிட்டையுடன் நின்றான் பையன். சிட்டையைப் பெற்றுக்கொண்ட முருகன் நூறு ரூபாய் நோட்டைக் கொடுத்து,
"இதை நீ வைத்துக் கொள் தம்பி, எங்களுடைய அன்பளிப்பு" என்றதும்,
"சார், இவ்வளவு பெரிய பணம் எனக்கேன் சார்," என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தயக்கத்துடனும் பதட்டத்துடனும் கேட்டான்.

"தம்பி, நீ பதட்டப்படாதே, வாங்குவதற்குத் தயங்காதே. நான் உன்னுடைய அண்ணாமாதிரி. நான் இந்த உணவகத்திற்கு வரும்போதெல்லாம் நீ என்னமாதிரி என்னைக் கவனித்துக் கொள்ளுகிறாய்? உனக்குத் தெரியும்தானே! ஏன்? நானும் நீயும் உடன் பிறந்தவர்களா? இல்லை. நான் யாரென்று உனக்குத் தெரியாது, நீ யாரென்று எனக்குத் தெரியாது. இருந்தபோதும் நீ என்மீது அன்பு செலுத்துகிறாய். இதுதான் மனித நேயத்தின் பண்பு. அதற்காக மனித ரூபத்தில் இருப்பவர்களெல்லோரும் மனிதநேயம் கொண்டவர்கள் என்று சொல்லிவிட முடியாது. ஆனால் நீ மனித நேயம் கொண்ட பையன். அதனால் உன்னை நான் நேசிக்கிறேன். இன்று எங்களுடைய சம்பிரதாயமற்ற திருமண நாள். நான் உன்மீது வைத்திருக்கும் அன்பின் நிமித்தம் என்னு டைய ஆத்ம திருப்திக்காக இன்றைய நன்னாளில் இப்பணத்தைத் தருகிறேன். மகிழ்ச்சியோடு பெற்றுக்கொள் தம்பி," என்றான்.

"அப்படியா! ரொம்பச் சந்தோசம். நீங்கள் நல்லாயிருக்க வேண்டும். அதுசரி... அன்றொரு நாள் நான் கேட்டது ஞாபகமிருக்கா சார்?" என்று கேட்டதும்,

"என்ன கேட்டீங்க?" என்றான் முருகன்.

"அன்றொருநாள் இந்தப் பொண்ணு உங்களுடன் இங்கு சாப்பிட வந்தபோது 'மூக்கும் முளியுமாய் மகாலக்சுமி மாதிரி ரொம்ப அழகாயிருக்கிறாங்க. நீங்க கட்டிக்கப் போற பொண்ணா?' என்று கேட்டேன். நான் நினைச்ச மாதிரியே ஆகிவிட்டது. மிக்க மகிழ்ச்சி. நீங்க நீடூழி வாழ வேண்டும்," என்று வாழ்த்தினான். அந்த வேளையில் அவனுடைய கண்களிலிருந்து சில கண்ணீர்த் துளிகள் உதிர்ந்தன. அதை அவதானித்த வேணி,



"ஏன் தம்பி அழுகிறாய், நாங்கள் ஏதும் தப்புப்பண்ணி விட்டமா?" என்றாள். உடனே பையன்,

"இது அழுகையில்லை அக்கா, ஆனந்தக் கண்ணீர்,"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சிரித்துக் கொண்டே கூறி வழியனுப்பி வைத்தான். இருவரும் சென்று மறையும்வரை அவர்களைப் பார்த்துக் கொண்டே நின்றான் அந்தப் பையன். அன்புக்கும் உண்டோ அடைக்குந் தாள்.

இன்று நடந்ததுதான் முருகன் வேணி இருவரினதும் உண்மைத் திருமணம். அப்புறம் அவர்களுடைய பெற்றோர் உறவினர் சேர்ந்து கொண்டாடியதெல்லாம் வெறும் சம்பிரதாயச் சடங்குதான். திருமணம் என்பது இருமனம் சேர்வது. இயற்கை போடும் கோலங்கள் என்னென்னவோ. அவற்றினுள் ஒன்றுதான் இத்திருமணம். வாழ்க தமிழினம் மறுமலர்ச்சி பெற்று. இறைவன் கொடுத்த மனச்சாட்சி யாவர்க்கும் பொதுவானது. அதை உங்கள் தேவைக்கேற்ப மாற்ற முயற்சிக்காதீர்கள். அது தப்பு.



## அங்கம் 11

ஒருநாள் எழுத்தாளர் கோவிந் சங்கோடைப் பேருந்திற் காகப் புதுக்காட்டுச் சந்தியிற் காத்துநின்றார். அரைமணித்தி யாலத்திற்கு மேலாகக் காத்திருந்தும் பேரூந்து வராதபடியினால் கால் கடுக்கத் தொடங்கியது. அங்கு காணப்பட்ட ஒரு மரக்குற்றியில் உட்கார்ந்து கொண்டார். சிறிது நேரம் கழித்து அந்த பேருந்துத்தரிப்பிற்கு ஒரு பெரியவர் வந்தார். யாருமே இல்லாது தனித்திருந்த கோவிந்திற்கு அவர் வருகை சற்று மன ஆறுதல் கொடுத்தது. அவருடன் ஏதாவது பேசிக்கொண்டு நின்றால் நேரம்போவது தெரியாது என்று எண்ணிய கோவிந் உடனே அந்தப் பெரியவரைப் பார்த்து, "பெரியவர், நான் சங்கோடைக்குச் செல்வதற்குப் பேருந்திற்காகக் காத்திருக்கிறேன். நான் இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து ஒரு மணித்தியாலம் ஆகிவிட்டது. இன்னும் பேருந்தைக் காணவில்லை. எப்பொழுது வரும் என்று உங்களுக்கு ஏதாவது தெரியுமே பெரியவர்?'' என்று அன்புடனும் அடக்கத்துடனும் கேட்டார்.

கோவிந் இந்தப் பகுதிக்குப் புதியவர் போலும் என்று அவருடைய கதையிலிருந்து புரிந்து கொண்ட பெரியவர், "தம்பி இந்தப்பகுதிக்குப் புதியவர் போல? அதுதான் நேரகாலம் தெரியாமல் சங்கோடைப் பேருந்திற்காகக் காத்து நிற்கிறீர். சங்கோடைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு நாளைக்கு இரண்டு தடவைகள்தான் பேருந்துச் சேவையுண்டு. காலையில் ஒரு சேவை, பின்நேரத்தில் மறுசேவை. அதிஸ்டவசமாக நீங்கள் வந்திருக்கும் நேரம் பரவா யில்லை. ஆனால் இன்னும் ஒரு மணித்தியாலம் காத்திருக்க வேண்டும்,'' என்று கூறினார். அவரின் கதையிலிருந்து பெரியவர் உள்ளூர்வாசிதான் என்பதைப் புரிந்து கொண்ட கோவிந், "பெரியவர், நீங்கள் இங்கு கிட்டத்தான் வசிக்கின்றீர்களோ? உங்களுடைய பேச்சிலிருந்து நீங்கள் இந்த இடத்தைச் சேர்ந்தவர் என்பதை அறிந்து கொண்டேன், அதுதான் கேட்கிறேன். அப்படித்தானே?'' என்றார். தம்பியுடன் பேசிக்கொண்டு நின்றாற் பிராக்காய்ப் பொழுது போகும் என்று எண்ணிய பெரியவர், "நீர் நினைப்பது சரிதான் தம்பி, நான் இங்கு பக்கத்தில் நாவற்தோப்பு என்னும் கிராமத் திற்தான் வசிக்கிறேன். நானும் ஓர் அலுவலாய்ச் சங்கோடைக் குத்தான் போகவிருக்கிறேன். தம்பியைப் பார்க்கப் படித்தவர் போலத் தெரியுது, ஏதும் உத்தியோக விடையமாய்ப் போய்க் கொண்டிருக்கின்றீரோ தம்பி?'' என்று கேட்டதும் கதைப்பதற்கு வாய்ப்பை எதிர்பார்த்திருந்த கோவிந், "நான் ஓர் எழுத்தாளர் பெரியவர். பத்திரிகைகளிற் கதைகள் கட்டுரைகள் எழுதிவருகின்றேன்.

இவ்வளவு காலமும் எழுதிய கதைகளைத் தொகுத்து ஒரு புத்தகம் வெளியிட எண்ணியுள்ளேன். சங்கோடை மகாவித்தியாலத்தில் எனது நண்பன் ஒருவன் ஆசிரியராகக் கடமையாற்றுகிறார். அவரைப் பார்ப்பதற்காகத்தான் போகிறேன். புதிது புதிதாக இடங்களைப் பார்ப்பது எனக்கு ரொம்பப் பிடிக்கும். அது என்னுடைய எழுத்துத் துறைக்கும் பெரும் உதவியாக விருக்கின்றது. சங்கோடைக் கிராமத்தில் இரண்டு மூன்று தினங்கள் என்னுடைய நண்பனுடன் தங்கிநிற்கும் திட்டத்தோடுதான் அங்கு போய்க் கொண்டிருக்கிறேன்,'' என்று சொன்னார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளன் என்றால் பலதையும் பத்தையும் தெரிந்து வைத்திருப்பார் என்று எண்ணிய பெரியவர், "தம்பி, இரண்டு வருடங்களுக்கு முன் தாமரைக்குளம் பிரதேசத்தில் வாலாம்பிகை என்னும் ஓர் இளம்பெண் மர்மமான முறையிற் கொலை செய்யப்பட்ட புதினம் பத்திரிகைகளில் வந்தது. அதைப்பற்றி உமக்குத் தெரியுமே தம்பி?" என்று கேட்டு வாய் மூடுவதிற்குள் கோவிந் முந்திக்கொண்டு, "தெரியுமே என்றா கேட்கிறீங்கள்! அந்தக் கொலையைப்பற்றி அறியாதவர் யார் இருக்க முடியும்! பெரியவர். அந்த நாட்களில் அந்தப் பரிதாபக் கொலையைக் கேள்விப்பட்டு அதிர்ச்சியடைந்தவர்களில் நானும் ஒருவன். ஒருபுறம் அது பரிதாபமான மரணம், மறுபுறம் அது ஒரு கொடூரமான கொலை. அந்தக் கொலையைப் பற்றிய செய்திகளைப் பத்திரிகைகளில் ஒரு சொல்லுக்கூடத் தவறாமல் வாசித்திருக்கிறேன். அந்தப் பரிதாபக்கதை இப்பொழுதும் என்னுடைய மனதில் பசுமையாக இருக்கின்றது. அப்படிப்பட்ட ஈவிரக்கமற்ற கொலைகாரப் பாவிகள் நம்நாட்டில் இருக்கும்வரை எமது நாடு எப்படி உருப்படப் போகின்றது பெரியவர்!" என்று பரபரப்போடு சொல்லி முடிப்பதிற்குள் அந்தப் பெரியவர், "வாலாம்பிகை என்னும் அந்தப் பெண் என்னுடைய மகள்தான் தம்பி. என்னுடைய பெயர் மருதப்பு. நான்தான் அந்த மகளைப் பறிகொடுத்த பாவி," என்று கூறி வாய் மூடுவதிற்குள், கோவிந் அதிர்ச்சியோடு, "என்ன பெரியவர் சொல்லுகிறீங்கள்!!" என்று கூறியவர் உடனே பெரியவரைக் கட்டித்தழுவி முதுகிற் தட்டி, "நீங்கள் பாவியில்லை பெரியவர், நீங்கள் பாவியில்லை, அந்தக் கொலைகாரப் பாவிகள் செய்த பாவத்திற்கு நீங்கள் என்ன பெரியவர் செய்யமுடியும். அவன்கள் தான் பாவிகள், நீங்களல்ல பெரியவர், நிச்சயமாய் நீங்களல்ல," என்று கூறித் தனது அதிர்ச்சியையும் கவலையையும் அந்தப் பெரியவருடன் பகிர்ந்து கொண்டார்.

அந்த நேரத்தில் உண்மையிலேயே கோவிந்தின் கண்கள் கலங்கிவிட்டன. கண்களைக் கைக்குட்டையாற் துடைத்துக் கொண்டார். இதை அவதானித்த பெரியவர், "நீங்கள் கவலைப்பட வேண்டாம் தம்பி! கவலைப்பட வேண்டியது நான்தான்," என்றதும் உடனே கோவிந், "மனிதாபிமானம் கொண்ட எந்த மனிதனும் உங்களுக்கு ஏற்பட்ட கொடுமையை எண்ணிக் கவலைப்படாமல் இருக்க முடியாது. என்னை அறியாமலேயே கலங்கிவிட்டேன். பரவாயில்லை சமாளித்துக் கொள்ளுகிறேன்," என்று கூறியபொழுது சங்கோடைக்குச் செல்லும் பேருந்து வந்து நின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் ஏறி ஓர் இருக்கையில் அமர்ந்து கொண்டனர். பேருந்து புறப்பட்டது, கோவிந் பெரியவரைப் பார்த்து, "உங்களுடைய மகளுடைய கதையைப் பத்திரிகை வாயிலாக அறிந்ததைத் தவிர வேறொன்றும் எனக்குத் தெரியாது. பத்திரிகைகளில் வரும் செய்திகளையும் புதினங்களையும் முழுக்க முழுக்க உண்மையென்று எடுத்துக்கொள்ள முடியாது. அவற்றிற்கு மேலாக எத்தனையோ உண்மைகள் புதைந்து கிடக்கலாம். சட்டத்தைவிடச் சமூகத்திற்குத்தான் அதிகம் தெரியும். ஆட்சேபனை இல்லை யென்றால் உண்மையில் என்ன நடந்தது என்று சொல்ல முடியுமா பெரியவர்? கதையைத் திருப்பிச் சொல்லுவது உங்களுக்குச் சங்கடமாயிருக்கு மென்றால் வேண்டாம்," என்று தாழ்மையான தொனியிற் கேட்டார்.

"கதையை உங்களிடம் கூறுவதன் மூலம் எனது கவலையை உங்களுடன் பங்கிட்டுக்கொள்ள முடியும் என்று எண்ணுபவன் நான். அதன் மூலம் என்னுடைய மனப்பாரம் குறையும். கதையைச் சொல்லுகிறேன் கவனமாய்க் கேள் தம்பி," என்று கூறிய பெரியவர் தொடர்ந்து வாலாம்பிகையின் பள்ளிப் பருவத்திலிருந்து, அவளுடைய அசாதாரண அழகு, காதற் படலம், தொழில்தேடிய படலம், காணாமற் போனமை, நான்காம் நாள் உடல் கண்டு பிக்கப்பட்டமை, பொலிசாரின் விசாரணைகள், கொழும்பிலிருந்து வந்த புலன்விசாரணைப் பிரிவினருடைய செயற்பாடு, விசாரணை என்ற போர்வையில் அந்தப் பகுதி இளைஞர்கள் பொலிசாரால் தாக்கப்பட்டமை, காதலன் முருகன் சித்திரவதை செய்யப்பட்டது, காணாமற்போன மகளைத் தேடியபொழுது வேண்டுமென்று பரப்பப்பட்ட வதந்திகள், இறுதியிற் கொலையாளிகளைக் கண்டுபிடிக்க முடியவில்லையென்ற அறிக்கை, கடைசியில் கோவை நிரந்தரமாக மூடப்பட்டமை, அப்புறம் இளைஞர்கள் இந்த விடையத்திற் தீவிரம் காட்டியது, இளைஞரின் உழவாளிகளின் செயற்பாடு, அதைத் தொடர்ந்து நாகதேவனும் அவனுடைய கையாட்களும் கைதுசெய்யப்பட்டு இளைஞர்களின் நீதிமன்றில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டமை, விசாரணையில் பலருடைய சாட்சியம் பதியப்பட்டமை, இறுதியிற் தீர்ப்பு, அப்புறம் அது நிறைவேற்றப்பட்டமை, அதைத் தொடர்ந்து தாமரைக்குளம் மக்களின் மத்தியில் ஏற்பட்ட மகிழ்ச்சியும் நிம்மதியும் ஆகிய எல்லாவற்றையும் பற்றி ஆதியோடு அந்தமாகச் சொல்லி முடித்தார் பெரியவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை யாவற்றையும் பொறுமையாகவும் கூர்மையாகவும் கேட்டுக்கொண்டிருந்த கோவிந், "ஓ! இதற்குள் இவ்வளவு உண்மைகள் பொதிந்து கிடக்கின்றனவா? பெரியவர், நீங்கள் கூறுவதை வைத்துப் பார்க்கும்போது அந்த இளைஞர்கள் எவ்வளவு பொறுப்போடும் திறமையாகவும் இந்த விடையத்தைக் கையாண்டிருக்கின்றார்கள் என்பது ஒருபுறம் பெரும் ஆச்சரியமாயும் மறுபுறம் பெரும் மகிழ்ச்சியாயும் இருக்கின்றது. பொலிஸ் திணைக்களத்தினாற் குழிதோண்டிப் புதைக்கப்பட்ட உண்மைகளை வெளிக்கொணர்ந்து உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டனை வழங்கியதைப் பார்க்கும்போது அவர்களுடைய திறமையையும் நேர்மையையும் நீதியையும் பாராட்டாமலிருக்க முடியாது. குற்றம் செய்யாத எவரையும் தண்டித்து விடப்படாது என்பதிற் கண்ணும் கருத்துமாய் இருந்திருக்கிறார்கள் அந்த இளைஞர்கள். அதனாற்தான் தங்களுடைய உழவுப் பிரிவினரைப் பயன்படுத்தி உண்மைக் குற்றவாளிகளைப் பெரும் சிரமத்தின் மத்தியிலும் கண்டுபிடித்துள்ளார்கள். குற்றம் நூற்றுக்கு நூறு வீதம் நிரூபிக்கப்பட வேண்டுமென்பதற்காக ஓர் இளம் பெண் உளவாளி பாலியல் வல்லுறவுக்கு ஆளாக வேண்டியது தவிர்க்க முடியாமற் போய்விட்டது என்பதைக் கேட்கும்பொழுது எனது உடல் முழுவதும் புல்லரிக்கின்றது.

சிலர் இந்த இளைஞர்கள் சட்டத்திற்குப் புறம்பாகச் செயற்பட்டுள்ளார்கள் என்று கூச்சலிட்டாலும், சட்டத்திற்கு இல்லாத அக்கறை அந்த இளைஞர்களுக்கு இருந்துள்ளது என்பதைப் பார்க்கும்போது அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. என்ன பெரியவர் சொல்லுகிறீர்கள், நான் சொல்லுவது சரிதானே?" என்று கேட்டுவிட்டு பெரியவரின் வாயைப் பார்த்தார் கோவிந். உடனே பெரியவர், "நீங்கள் கூறுவது அத்தனையும் சரி தம்பி. கொலைகாரர்களுக்கு உரிய தண்டனை வழங்கியதின் மூலம் நீதி, நியாயம், தர்மம் என்பவற்றை நிலைநாட்டியதுடன், எதிர்காலத்திற் கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள், காமவெறியர்கள் உருவாகாமல் இருப்பதற்கு உரிய சூழலையும் உருவாக்கியுள்ளார்கள். அதுதான் அவர்கள் செய்த மிகப்பெரும் சாதனை. அந்த வகையில் இந்த மண் அவர்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

இந்தக் கிராமம் எனது மகளைக் களப்பலி கொடுத்துத் தங்களுக்கு ஒரு நிரந்தர பாதுகாப்பைப் பெற்றுள்ளது என்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணும்போது கவலையின் மத்தியிலும் ஒரு மனத்திருப்தி ஏற்படுகின்றது'' என்றார். உடனே "சரியாய்ச் சொன்னீர்கள் பெரியவர்,'' என்று சொன்ன கோவிந் தொடர்ந்து, "நீங்கள் கூறிய உண்மைகளை வைத்துக்கொண்டு பத்திரிகையில் ஒரு கதை எழுதட்டுமா பெரியவர்?'' என்று கேட்டார். அதற்குப் பெரியவர், "இந்தச் சமுதாயத்திற்கு நல்ல படிப்பனையாய் அமையக்கூடிய முறையிலும், சட்டம் சிலவேளை தடுமாறினாலும் தர்மம் எப்பொழுதும் பழிவாங்கியே தீரும் என்பதை நிரூபிக்கும் முறையிலும் ஒரு கதை எழுதுங்கோ தம்பி,'' என்று கூறிமுடித்தார்.

"தீர்ப்பு'' என்ற தலைப்புடன் எனது கதையை எழுதுகிறேன்,'' என்று கூறி விடைபெறத் தயாரான பொழுது ஏதோஞாபகத்திற்கு வந்தவர் போன்று, "பெரியவர் உங்களுடைய மகளைக் காலித்த பையன் இப்பொழுது எவ்வாறு வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதை அறியலாமோ?'' என்று கேட்டார். "அவர் தம்பி இரண்டு வருடங்களின் பிற்பாடு அண்மையிற்தான் உளவாளியாகச் சென்ற வேணி என்ற பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு தாமரைக்குளம் கிராமத்திற்தான் வாழ்ந்து வருகிறார்,'' என்று சொல்லி வாய் மூடியதுதான் தாமதம், "சபாஸ்! அவன் உண்மையில் ஓர் ஆண்மகன்தான். அவன் மனச்சாட்சி உடைய ஆண்மகன் மட்டுமல்ல, அவன் மனோதைரியம் கூடியவனாயும் இருக்கிறான்.

தன்னுடைய காதலியைக் கொலைசெய்த கொலை காரனைக் கண்டுபிடிப்பதற்காக அவள் தனது உயிரையும் பெண்மையையும் பணயம் வைத்து அந்தக் கொடியவனுடைய வங்களாவிற்குள்ளேயே உச்சக்கட்ட ஆபத்தில் நுழைந்து செயற்பட்டுள்ளாள். அதில் வெற்றியும் பெற்றுக் கொடுத்தாளே! அவளுக்கு செய்யவேண்டிய பொருத்தமான கைமாறுதான் இது. உண்மையிலேயே அவனைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.


இது அவனுடைய மனச்சாட்சியின் **தீர்ப்பு**த்தான். ஆண்டவன் கொடுத்த மனட்சாட்சி அனைவருக்கும் பொதுவானது. அதைச் சரியாகப் பயன்படுத்தியுள்ளான் முருகன். இவற்றையெல்லாம் ஆழமாகப் பார்க்கும்பொழுது, இதுகும் கலியுகக் கடவுள் கண்ணபிரானுடைய ஒரு செயற்பாடாய்த்தான் கருதவேண்டியுள்ளது,'' என்று கூறிய கோவிந் தொடர்ந்து, "எல்லாவற்றையும் விபரமாய்ச் சொல்லிவிட்டீங்களெல்லே பெரியவர், மிகுதியை நான் பார்த்துக் கொள்ளுகிறேன். கதையைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகையிற் படித்துப் பார்த்துவிட்டு அப்புறம் சொல்லுங்கோ என்னுடைய எழுத்தாற்றலையும் கற்பனா சக்தியையும்,'' என்று கூறிமுடித்தபின் கூப்பிய கைகளுடன் "போயிட்டு வாறன் பெரியவர்,'' என்று கூறி விடைபெற்றுச் சென்றார்.

முற்றும்

யாவும் கற்பனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா முதியவர்

## அங்கம் 1




கனடாவிலிருந்து தமிழ் ஈழத்திற்குத் திரும்பி வந்த விசாலாட்சி தனது வீட்டிற்குட் போகுமுன் படலையில் நின்று கொண்டு தானும் தனது கணவரும் பாடுபட்டு உழைத்துக் கட்டிய சிறிய வீடு களையிழந்து கிடப்பதைப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டாள். வீடு அளவிற் சிறியதாக இருந்தாலும் விசாலாட்சி கணவனுடனும் பிள்ளைகளுடனும் வாழ்ந்த காலத்தில் வீட்டைச் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருந்தாள். எப்படி இருந்த வீடு இப்படிக் களையிழந்து கிடக்கின்றதே! என்று தனக்குள் கூறி வேதனைப்பட்டுக் கொண்டு வீட்டு வாசலுக்குச் சென்றபொழுது வீட்டிற்குள் யாரோ நடமாடும் சத்தம் கேட்டது. யார் வீட்டினுள் இருக்கிறார்கள் என்பதை அறிவதற்காக, "யார் வீட்டுக்குள்? யார் வீட்டுக்குள்?" என்று சத்தமிட்டாள். உடனே ஒரு நடுத்தர வயதுப் பெண் வீட்டினுள்ளிருந்து வந்து, "நீங்கள் யார்? உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டாள்.

தன்னுடைய வீட்டினுள் இருந்துகொண்டு தன்னையே பார்த்து யார் நீங்கள் என்று கேட்கும் அப்பெண் மீது சிறிது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோபம் வந்தபொழுதும் நிலமையைச் சமாளித்துக் கொண்டு, ''நான்தான் பிள்ளை இந்த வீட்டுச் சொந்தக்காரி. எட்டு வருடங்களுக்கு முன் நான் கனடா விற்குப் போயிருந்தேன். இப்பொழுது திரும்பி வரவேண்டிய நிலமையாகி விட்டது. அதுதான் எனது வீட்டிற்கு வந்திருக்கின்றேன். நீங்கள் எப்படி இங்க?'' என்று கதையை முடிப்பதற்குள் வீட்டினுள் நின்ற அந்தப்பெண், "நாங்கள் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்தனாங் கள். எங்களுடைய பகுதி இராணு வத்தின் பிடியில் இருப்பதனால் நாங்கள் உங்களுடைய வீட்டில் அகதியாக வந்திருக்கின்றோம். உங்களுக்கு வீடு தேவையென்றால் நாங்கள் வேறு வீடு பார்த்துக் கொண்டு போகின்றோம். நீங்கள் உங்களுடைய வீட்டில் இருக்கலாம். என்ன.... வேறு இடம் பார்ப்பதற்கு கொஞ்சநாட்கள் தேவை. அதுவரைக்கும் எங்களோடு நீங்கள் இருக்கலாம்,'' என்று ரொம்ப அன்பாகவும் பண்பாகவும் அந்தப் பெண் கூறினாள்.

இதைக்கேட்ட விசாலாட்சி, ''நீங்கள் எங்கவும் போகவேண்டாம். இங்கயே இருக்கலாம். நானும் உங்களுடன் சேர்ந்து இருக்கிறேன்,'' என்று சொல்லி முடிப்பதற்குள் கதையைத் தொடர்ந்த அந்தப் பெண், "ரொம்பச் சந்தோசம். ரொம்பப் பெரிய மனசு படைத்த அம்மாவாக இருக்கின்றீங்க. ரொம்ப நன்றி,'' என்று கூறவே, இதைக் கேட்ட விசாலாட்சி, 'இந்தச் சின்ன விடையத்திற்குப் போய் நன்றி கின்றி என்று பெரிய வார்த்தையெல்லாம் சொல்லிக்கொண்டு... நாமள் யாரு? தமிழர்கள். நமக்கு வந்திருக்கின்ற அவலநிலை தீரும்வரை நாமள்தான் ஒருவருக் கொருவர் உதவி செய்ய வேண்டும். நம்மளுடைய மக்கள் நமது நாட்டை விட்டுச் சென்று வெளிநாடுகளில் அகதிநிலை கோரும்போது அந்த நாடுகள் நம்மளுடைய மக்களுக்கு இருப்பிடம், உணவு, உடை, மருத்துவ வசதி எல்லாம் கொடுத்து நமது மக்களுடைய அவல நிலையைப் போக்குகின்றார்கள். இப்படியிருக்கும்போது, நம்மளுடைய மக்களுக்கு நாமள் உதவி செய்யாமல் விட்டால் அதை ஆண்டவனே மன்னிக்கமாட்டான்.

அது சரி, நீங்கள் இங்கு எத்தனைபேர் இருக்கின்றீர்கள்?''


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கேட்கவே, அதற்குப் பதில் அளித்த அந்தப் பெண், "நாங்கள் இரண்டுபேர் தான். நானும் எனது கணவரும்தான் இருக்கின்றோம். எங்களுக்கு இரண்டு ஆண்பிள்ளைகள் இருந்தார்கள். ஒரு மகனை இந்திய இராணுவம் சுட்டுக் கொன்றுவிட்டது. மற்றையவர் மாவீரராகிவிட்டார்,'' என்று கூறியபொழுது அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் உதிர்ந்தன. அதை அவதானித்த விசாலாட்சி, "உன்னைப்போல எத்தனையோ பேர் கண்ணீருடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆண்டவன் விட்ட தீர்ப்பென்று ஆறுதலடைய வேண்டியதுதான். கண்ணைத் துடைத்துக்கொள் பிள்ளை,'' என்று ஆறுதல் வார்த்தை கூறினாள். கதையைத் தொடர்ந்த அந்தப் பெண், "என்னுடைய பெயர் பொன்னம்மா. எனது கணவருடைய பெயர் வடிவேலு. இப்பொழுது அவர் வெளியிற் சென்றுவிட்டார். இன்னும் சிறிது நேரத்தில் வந்துவிடுவார், நானொருத்தி வாசலில் நிற்கவைத்துக் கதைத்துக்கொண்டு நிற்கிறேன். உள்ளுக்கு வாங்கம்மா,'' என்று கேட்டதும் ஒரு புன்சிரிப்புடன் வலதுகாலை முன்வைத்து வீட்டிற்குள் நுழைந்தாள் விசாலாட்சி. அப்பொழுது அவளின் மனதில் ஏற்பட்ட உணர்வலைகளை அவளாலேயே வர்ணிக்க முடியாது. அவளின் அப்போதைய உணர்வுகளை வர்ணிப்பதற்கு அவளிடம் வார்த்தைகளே இல்லையெனலாம். வலதுகாலை முதலில் எடுத்துவைத்து உட்சென்றவுடன் மேலும் கீழும் மாறிமாறிப் பார்த்தாள். அப்பொழுது அவளின் முகத்தில் ஏற்பட்ட திடீர் மாற்றத்தை அந்தப் பெண்ணால் நன்கு அவதானிக்க முடிந்தது.

எப்படி இருந்த வீடு! இப்படிக் களையிழந்து கிடக்கே!! அண்ணாந்து பார்த்தபொழுது தென்பட்டதெல்லாம் சிலந்தி வலைகளும் அவற்றின்மீது நடனமாடிக் கொண்டிருந்த சிலந்திப் பூச்சிகளும், கீழே பார்த்தபொழுது அங்குமிங்குமாய் அழிந்து போய்க்கிடந்த சீமந்து நிலம், கண்ணுக்கெதிரே தென்பட்டதெல்லாம் காய்ந்து வரண்டு தேடுவாரட்டுக் கிடந்த எருமைமாட்டுத் தோல்போற் காட்சி கொடுத்த சுவர்கள், இவையெல்லாம் ஒருகணம் விசாலாட்சியின் உள்ளத்தைக் கசக்கிப் பிளிந்தன. அப்பொழுது அங்கிருக்கும் பெண்ணை ஏசவேண்டும்போல் தோன்றியது.

மறுகணம் நாட்டின் நிலமையை நினைத்துப் பார்த்தாள். உடனே அவளின் மனச்சாட்சி பேசத்தொடங்கியது. "இது யாரினதும் குற்றமல்ல. இது இந்த வீட்டிற் தற்போது இருப்பவர்களின் குற்றமுமல்ல. இது காலத்தின் கோலம். காலத்தின் கோலத்தினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனது வீட்டையும் நாட்டையும்விட்டு ஓடிப்போய் ஒதுங்கி யிருந்துவிட்டு இப்போ ஏதோ தேவை கருதித் திரும்பி வந்திருக் கிறாயே! நீ கனடாவில் இருந்த எட்டு வருடங்களில் இந்த நாட்டில் என்னென்ன நடந்தன, உனக்குத் தெரியுமா? தெரியாது, தெரியவே தெரியாது. ஏன்? நீ கனடாவில் உனது மகனுடன் சந்தோசமாயும் சௌகரியமாயும் எட்டு வருடங்கள் வாழ்ந்தனீ! உனக்கெங்க தெரியப்போகின்றது இங்கிருந்த மக்கள் பட்ட வேதனைகளும் சோதனைகளும்!!

அவ்வப்போது செய்தியில் சிலவற்றைக் கேட்டிருப்பாய். பட்டாற்தானே தெரியும் வலியின் வேதனையை! சொல்லக் கேட்பது புதினமாய்த்தானிருக்கும், வலியை அனுபவிப்பதாயிருக்காது. இங்கிருந்துகொண்டு வலியின் வேதனையை அனுபவித்தவர்கள் தான் உனது வீட்டில் தற்போது அகதிகளாய் வந்து இருப்பவர்கள். இவர்கள் ஏன் இந்த வீட்டை இப்படி வைத்திருக்கிறார்களென்று உனக்கு எண்ணத் தோன்றுகின்றது. கனடாவில் இருந்துவிட்டு வந்த உனக்கு அப்படித்தான் தோன்றும், அது உன்தவறல்ல. இங்கிருந்தவர்களைக் கேட்டுப்பாரேன்! ஏனென்று!!

விடிந்தாற் பொழுதுபட்டால் ஆகாயத்தில் அலுமினிய இராட்சத வல்லூறுகளின் அச்சுறுத்தல். அந்தக் காலத்தில் வல்லூறுகள் கோழிக்குஞ்சைத்தான் வேட்டையாடும் என்பார்களே! இன்று தமிழீழ வானில் நடமாடும் அலுமினிய வல்லூறுகளுக்கு ஈழத்தமிழர்கள் கோழிக்குஞ்சென்ன, இவர்களெல்லாம் தில்ல நண்டைப் போன்றவர்கள். கோழிக்குஞ்சுகள் கொஞ்சமாவது தங்களைக் காப்பாற்ற முயலக் கூடியவை, ஏன்? அவை ஐந்தறிவு படைத்தவைகள். தில்லநண்டிற்கு அதுவும் தெரியாது. காரணம் அவை நான்கறிவு படைத்தவை. அந்த அப்பாவித் தில்லநண்டை வல்லூறு நினைத்தபடி வேட்டையாடும். அதே நிலமைதான் தமிழீழத் தமிழர் நிலமை. சிங்கள வல்லூறுகள் ஒன்றும் அறியாத, தன்னையே காப்பாற்றிக்கொள்ள முடியாத அப்பாவி ஈழத்தமிழனை எப்படியும் வேட்டையாடும். ஏன்? கேட்பதற்கு யாருமில்லை, ஏன்? இவன் தமிழன். ஈழத்தமிழன் உலகத்தில் நாதியற்றவன். அவனை யாரும் வேட்டையாடலாம்.

சுடுகலன் பயிற்சி பெறவிரும்புபவர்கள்கூட அவர்களை வேட்டையாடலாம். நான் இங்கு ஒரு முக்கியவிடயத்தைச் சொல்லுகிறேன். சுடுகலன் பயிற்சி பெறவேண்டியவர்கள், உலகத்தில் யாராயிருந்தாலும், நீங்கள் உங்களுடைய காட்டிற்குப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகவேண்டியதில்லை. பதிலாக ஸ்ரீலங்காவிற்குச் செல்லுங்கோ! அங்கு ஈழத்தமிழர்களை வேட்டையாடலாம். அதன்மூலம் உங்கள் பயிற்சியை நிறைவுசெய்துகொள்ள முடியும்.

இவர்களைக் கொலை செய்தால் இந்த உலகில் அதைக் கேட்பதற்கு யாருமில்லை. மிருகங்களைக் கொலைசெய்தால் அவற்றைக் கேட்பதற்கு ஐ.நா. சபை உட்பட எத்தனையோ தேசிய, சர்வதேச அமைப்புகள் உண்டு. ஏன்? ஓர் அறிவுபடைத்த மரங்களை அழித்தாற்கூட அவற்றைக் கேட்பதற்கு ஐ.நா.சபை உட்பட எத்தனையோ தேசிய, உலக அமைப்புக்கள் உண்டு. ஆனால், ஈழத்தமிழனைக் கொலை செய்தால் அதைப்பற்றிக் கேட்பதற்கு இவ்வுலகில் யாருமேயில்லை. ஏன்? அவன் நாதியற்றவன். அவன் இந்த உலகில் சுதந்தரமாய் வாழத் தகுதியற்றவன்.

ஈழத்தமிழனைச் சுதந்திரமாய் வாழவிட்டால் புத்த தர்மமும் புத்தமதமும் அழிந்துவிடுமாம் புத்த தர்மத்தையும் புத்த சமயத்தையும் காப்பாற்றுவதற்கும் அதைப் பேணி வளர்ப்பதற்குமென்று புத்த பெருமான் இலங்கைத் தீவைச் சிங்களவனுக்கு அன்பளிப்பாய்க் கொடுத்தாராம். அதனால் அங்கு வாழும் மற்றைய இனங்கள் சிங்களவனுக்குக் கீழ்த்தான் வாழவேண்டுமாம். புத்த பெருமானின் ஆவலை நிறைவேற்றும் முகமாகவே சிங்களவன் இன்று மற்றைய இனங்களை கட்டியாழ்வதில் வீறுடன் செயற்படுகிறான்.

மக்கள் வாழ்விழந்து ஏன்? உணவிழந்து, உடையிழந்து, உறக்கமிழந்து, இருப்பிடமிழந்து அல்லாடிக் கொண்டிருக்கும் இந்தப் பூமியில் நீ உனது வீட்டிலுள்ள சிலந்திப் பூச்சியையும் உடைந்துபோன சீமந்து நிலத்தையும், பொருக்குக் கிளம்பியுள்ள சுவரையும் பற்றிக் கவலைப்படுகிறாயே! உனக்கென்ன மூளை கெட்டுப்போய்ச்சா? அல்லது கனடாவில் வாழ்ந்த நினைப்பு இன்னும் உன்னைவிட்டுப் போகவில்லையா? போகாவிட்டால் இன்னும் கொஞ்சநாட்களில், கொஞ்சநாட்களேன்? இன்னும் ஓரிரு நாட்களில் போகப்பண்ணும் இன்றைய தமிழீழநிலமை, கொஞ்சம் பொறுத்திரு, இன்று இரவே நிலமையைத் தெரிந்துகொள்வாய்.

கிபீர், மிக் எனப்படும் ஸ்ரீலங்கா இராட்சத வல்லூறுகள் எழுப்பும் பேரிரைச்சலுக்கு தமிழீழமே அதிர்கிறது. அவை வீசும் குண்டுகளுக்கு இப்பூமியே பிளக்கின்றது. இவற்றிற்கு மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கும் ஈழத்தமிழனுடைய இருதயம் என்னபாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படும்? இவையென்ன இரும்பாலயா செய்யப்பட்டிருக்கு ஈழத் தமிழனுக்கு? இல்லையே!! இவனுக்கு இருப்பதும் மற்றையவர்களுக்குப் போன்ற இருதயம்தானே! இதை இந்தப் பாழ்பட்ட உலகத்திலுள்ள மற்றையவர்கள்தான் எண்ணிப் பார்க்கவில்லை, ஏன்? அவன் கம்புக்குக் காலுக்கு எட்டாதவன், உனக்கேன் புரியவில்லை.

ஸ்ரீலங்கா இராட்சத அலுமினிய வல்லூறுகளின் பேரிரைச்சலால் எத்தனைபேருடைய இருதயம் வெடித்துச் சிதறியது, தெரியுமா? எத்தனைபேருடைய இருதயங்கள் பேச்சுமூச்சில்லாமல் நின்று போனது, தெரியுமா? தெரியாது. இவையெல்லாம் உனக்கெங்க தெரிந்திருக்கப் போகின்றது. நீ கனடாவில் இருந்தவளாச்சே. இருந்தபோதும், யாரும் சொல்லக் கேள்விப் பட்டிருப்பாய்.

அவைமட்டுமா செல்லடி, பீரங்கி, துப்பாக்கி வேட்டுக்கள், கிறனைற் வீச்சுக்கள் என்பன மழையாய்ப் பொழிகின்றன. பருவமழை தவறினாலும் இந்த மழைக்குக் குறைச்சலுமில்லை ஓய்வுமில்லை. இவற்றால் எத்தனைபேருடைய உடல்கள் சின்னா பின்னமாகச் சிதறடிக்கப்பட்டன, தெரியுமா? எத்தனைபேருடைய மண்டைகள் சுக்குநூறாகியது, தெரியுமா? ஒரே மரணக்குவியல், ஒரே மரண ஓலம், கேட்கயாருமில்லை. எம்மைப்படைத்த இறைவனே ஓடி ஒழித்துக் கொண்டான். அவன் இப்போது எங்கிருக்கிறானென்று எமக்குத் தெரியாது. மழை வெள்ளம் இல்லாவிட்டாலும் இரத்த வெள்ளத்திற்குக் குறைவேயில்லை. இங்கு இடம்பெற்றுக் கொண்டிருக்கும் அநியாயம், அக்கிரமம், கொடுமை, அராஜகம், கொலைவெறியாட்டம், கடத்தல், காணாமற்போதல், காம வெறியாட்டம், கப்பம் பெறுதல் இன்னும் என்னென்னமோவெல்லாம்! அப்பப்பா சொல்லிமாளாது!!

இவற்றின் மத்தியில் உண்ண உணவில்லை, உடுக்க உடையில்லை, இருக்க உறைவிடமில்லையென்று உயிரைக் கையிற் பிடித்துக்கொண்டு ஊரூராய் இடம்பெயர்ந்து, ஓடி ஓடி வாழ்ந்து கொண்டிருக்கும் பல லட்சம் மக்களில் இருவர்தான் உனது வீட்டில் இருப்பவர்கள். இவர்களைப் பார்த்து 'ஏனப்பா எனது வீட்டை இப்படி வைத்திருக்கிறீர்கள்?' என்று தட்டுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தறுமாறித் தானும் கேட்டுவிடாதயம்மா." என்று அவளின் மனச்சாட்சி கூறிமுடித்தது.

விழித்துக் கொண்டாள். சிறிது நேரம் மௌனமாய் நின்ற விசாலாட்சி அங்கு நின்ற பெண்ணின் முகத்தை உற்றுப்பார்த்தாள். அப்பொழுது விசாலாட்சியின் முகத்திலும் பார்வையிலும் அனுதாபம் தென்பட்டது. அதை நன்கு அவதானித்த அந்தப் பெண் "என்னம்மா, வீட்டைப் பார்த்துவிட்டு சில நிமிடங்கள் எதுவும் பேசாமல் நின்றீங்கள். அப்புறம் ஒரு மாதிரிப் பார்க்கிறீங்கள்? நாங்கள் ஏதும் தப்புப் பண்ணிப்போட்டமா?" என்று பயபக்தியோடு கேட்டாள். உடனே விசாலாட்சி இதழ்களில் மெல்லிய புன்சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, "இல்லை .. இல்லை... வீட்டைப் பார்த்தவுடன் ஒரு நிமிடம் தடுமாறிப் போனேன். அதனால் உங்களைத் தப்பாக எண்ண முற்பட்டேன். ஆனால், அடுத்த நிமிடமே என்னுடைய மனச்சாட்சி என்னை விழிப்படையப் பண்ணிவிட்டது. எப்படி? நானும் இங்கிருந்து போய்விட்டுத் திரும்பி வந்தவள்தானே!

எப்படி இருந்த வீடு! ஏன் இப்படி இருக்கின்றது? நீங்களெல்லாம் ஏன் இப்படி இருக்கிறீங்கள்?.. புரியுது, தெரியுது, எல்லாம் தெரியுது," என்று ஞானம் பெயர்ந்தவள் போன்று கூறினாள். தொடர்ந்து மேலேபார்த்து கையை ஏந்தியபடி, "இறைவா! ஏன் இந்தச் சோதனையும் வேதனையும் தமிழனுக்கு? நாங்கள் தமிழனாகப் பிறந்தது தப்பா? நீதானே எங்களைத் தமிழனாகப் படைத்தாய். அப்புறம் ஏன் எங்களைப் போட்டு இப்படி வருத்து கிறாய்? நாங்கள் அவ்வளவு பாவிகளா? இன்னும் எவ்வளவைத் தரப்போறாய்? இன்னும் எவ்வளவு காலத்திற்குத் தரப்போறாய்?" என்று கேட்டுவிட்டு கண்கலங்கினாள்.

இதைப் பார்த்துக்கொண்டு நின்ற அந்தப் பெண் செய்வதறியாத நிலையிலும் விசாலாட்சியைப் பார்த்து, "என்னம்மா, வந்தீங்கள் வீட்டுக்காரி என்று சொன்னீங்க, அப்புறம் வீட்டிற்குள் வந்து வீட்டைப் பார்த்துவிட்டு ஏதேதோவெல்லாம் இறைவனிடம் வேண்டுகிறீங்கள். ஆனால் உங்களைப் பற்றிய விபரம் ஒன்றும் சொல்லவில்லையே கனடாவிலிருந்து வந்திருக்கிறேன் என்பதைத் தவிர," என்று கேட்டுவிட்டு மிக்க ஆவலோடு விசாலாட்சியின் முகத்தைப் பார்த்துக்கொண்டு நின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அங்கம் - 2

**வி**சாலாட்சி வருமான ரீதியாக நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவள். அவளுடைய கணவர் அருணாசலம் எழுதுவினைஞராகக் கடமைபுரிந்தவர். விசாலாட்சிக்கு நான்கு பிள்ளைகள். மூத்த பிள்ளை பெண்பிள்ளை. மிகுதி மூவரும் ஆண்பிள்ளைகள். நால்வரும் சிறுபிள்ளைகளாயிருந்த பொழுது அருணாசலம் இருதய நோயினால் இறந்துவிட்டார். அப்புறம் பிள்ளைகளை வளர்த்து ஆளாக்குவதற்கு விசாலாட்சி பெரும் அல்லற்பட்டாள் என்றால் மிகையாகாது. மூத்த மகள் வளர்ந்து படித்து ஒரு எழுது வினைஞராக கல்வித்திணைக்களத்தில் வேலை பார்த்து வந்தாள். அங்கு அவள் வேலை பார்த்தபொழுது அதே அலுவலகத்தில் வேலைபார்த்து வந்த ஓர் இளைஞனைக் காதலித்து திருமணம் செய்துகொண்டு தனிக்குடித்தனம் போய்விட்டாள். இரண்டு பையன்களும் இயக்கங்களில் சேர்ந்து இறந்துவிட்டார்கள். இரண்டு ஆண்பிள்ளைகளையும் இழந்த நிலையில் விசாலாட்சி கடைசி மகனை மிகவும் பவுத்திரமாகவும் செல்லமாகவும் வளர்த்து வந்தாள். அவனுடைய எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கத் தொடங்கிய விசாலாட்சி நாட்டு நிலமையை கருத்திற் கொள்ளத் தவறவில்லை. இராணுவத்தின் அடாவடித்தனமும் அட்டகாசமும் ஒருபுறம் மனத்தை உறுத்த, மறுபுறம் இளைஞர்கள் இயக்கங்களில் சேர்ந்து இறந்து போவது விசாலாட்சிக்குப் பெரும் கவலையை அளித்தது.

இவைகளிலிருந்து இளைஞரையும் யுவதிகளையும் காப்பாற்றுவதற்காக பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவது விசாலாட்சியின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்திருந்தது. ஏற்கனவே இரண்டு பிள்ளைகளை இழந்திருந்தமையினால் இந்த மகனை எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்பதில் பெரும் அக்கறை கொண்டிருந்தாள் விசாலாட்சி. தற்பொழுது விசாலாட்சியின் மகன் முரளி க.பொ.த. உயர்தர வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். அவன் கணிதத்திலும் ஆங்கிலத்திலும் அதிசிறந்த மாணவனாகக் காணப்பட்டான். இவனைக் கனடாவிற்கு அனுப்பி வைத்தால், மேற்கொண்டு படித்து தனக்கென ஒரு நல்ல எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்ளுவான் என்று விசாலாட்சி நம்பினாள். கனடாவிற்கு அனுப்புவதானால் பிரயாணமுகவருக்கு பெருந்தொகைப் பணம் கொடுக்க வேண்டும். கணவனுடன் வாழ்ந்த காலத்தில் வாங்கி வைத்திருந்த நகைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவற்றையும் விற்றும் போதிய பணம் சேரவில்லை. மிகுதிப்பணத்திற்கு வீட்டையும் வளவையும் ஈடுவைத்து வேண்டிய பணத்தைச் சேர்த்து முரளியை கனடாவிற்கு அனுப்பிவைத்தாள்.

கனடாவிற்கு வந்த முரளி மேற்கொண்டு படித்து வங்கியொன்றில் நிதி ஆலோசகராகக் கடமை புரிகின்றான் என்ற செய்தியை விசாலாட்சி தனது கிராமத்தில் உள்ளவர்களுக்குச் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டாள். அத்துடன் தானும் விரைவில் கனடாவிற்குப் போகவிருப்பதையும் கூறிச் சந்தோசப் பட்டுக் கொண்டாள் என்றால் மறுப்பதற்கில்லை.

விசாலாட்சி கூறியபடியே மகன் அம்மாவை ஸ்பொன்சர் செய்து கனடாவிற்கு வரவழைத்துவிட்டான். இப்பொழுது இரு வருமாக ஓர் அபாட்மென்டில் வசித்து வந்தனர். அம்மாவினுடைய சமையல் சாப்பாட்டுடன் முரளியின் வாழ்க்கை சந்தோசமாய்ப் போய்க்கொண்டிருந்தது. விசாலாட்சியும் கனடாவிற்கு வந்து மகனுடனிருப்பதையிட்டு சந்தோசமும் பெருமையும் அடைந்து கொண்டாள் என்றால் மிகையாகாது.

நாட்கள் மாதங்களாயும், மாதங்கள் வருடங்களாயும் கடந்து சென்றுகொண்டிருந்தன. மற்றைய தமிழ்த்தாய்மார் போன்று விசாலாட்சியும் மகனுடைய வயதையும் அவனுடைய திருமணத்தையும் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினாள். ஒருநாள் விசாலாட்சி, "என்ன தம்பி முரளி, உனக்கு இப்ப இருபத்தியேழு வயதாகிவிட்டது. எனக்கும் வயதுபோய்க் கொண்டிருக்கின்றது. நான் உயிருடன் இருக்கும்போதே கல்யாணம் காட்சிகளைப் பார்க்க வேண்டாமே. ஊரில என்றால் பொருத்தமான ஒரு பெண்ணைப் பார்த்து செய்துவைத்துவிடுவேன். கனடாவில் எனக்கு யாரைத் தெரியும். யாரும் கல்யாணத் தரகர்மாரைத்தான் பிடிக்கவேண்டும். தரகர்மாரிடம் போவதற்குமுன் உன்னிடம் ஒரு கோள்வி கேட்க வேண்டாமே," என்று விசாலாட்சி கூறவே, அதைக் கேட்டுக் கொண்டிருந்த முரளி, "என்ன கேள்வி அம்மா கேட்கப் போகிறாய்?" என்று சொல்லி முடிப்பதற்குள், விசாலாட்சி, "நீ யாரையேனும் விரும்பியிருக்கிறாயா? அப்படியிருந்தால் சொல்லு தம்பி. தரகர்மாரிடம் போய் வீணாக அலைய வேண்டியதில்லை" என்று அக்கறையோடு கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அங்கம் - 3



முரளி வேலை செய்யும் வங்கியில் பல பெண்கள் வேலை செய்கிறார்கள். அவர்களில் ஒருத்தி யாழ்ப்பாணம் திண்ண வேலி யைச் சேர்ந்தவள். வயது இருபத்திநான்கு மதிக்கலாம். அவளுடைய பெயர் சஞ்சயா. அவள் பெற்றோருடனும் சகோ தரங்களுடனும் கனடாவில் வசித்து வருகிறாள் என்ற விபரத்தை முரளி அறிந்திருந் தான். சஞ்சயா இரு வருடத்திற்குமுன் ரெல்லராகக் கடமை புரிந்தவள். தற்போது பேர்சனல் பாங்கராகத் தரம் உயர்த்தப் பட்டுள்ளாள். அவளுடைய கடமையுணர்வும் சுறுசுறுப்பும் வாடிக்கை யாளர்களுடன் அவள் பழகும் விதமும் அவளுடைய பதவி உயர்விற்கு முக்கிய காரணிகளாய் அமைந்தன என்றால் யாரும் மறுப்பதற்கில்லை. அவளுடைய சுறுசுறுப்பும், மற்றையவர்களுடன் இனிமையாகப் பழகும் அவளுடைய சுபாவமும் முரளியைப் பெரிதும் கவர்ந்திருந்தன. ஆரம்பத்தில் உத்தியோக ரீதியாக மட்டும் பழகிவந்த முரளி காலகதியில் நட்புரீதியாகவும் பழகத் தொடங்கினான்.

மதிய உணவு நேரங்களில் இரண்டுபேரும் ஒன்றாக மதிய உணவு சாப்பிடுவதும், சில வேளைகளில் உணவகத்திற்குச் சென்று சாப்பிடுவதும் இவர்களுக்கிடையே மேலும் நெருக்கத்தை ஏற்படுத்தியது. ஒருநாள் இருவரும் மதிய உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தபொழுது சஞ்சயா,

"முரளி, நாளைக்கு என்னுடைய பிறந்தநாள். எங்களுடைய வீட்டில் சிம்பிளாய்க் கொண்டாடுகின்றோம். நீங்கள் கட்டாயம் வரவேண்டும்," என்று கூறினாள். அதற்குப் பதில் கூறுவதற்கு முன், "எத்தனையாவது பிறந்தநாள் என்று அறியலாமோ? இந்த நாட்டைப் பொறுத்தவரை இது சட்டவிரோத கேள்வியென்று எனக்குத் தெரியும். அதைப்பற்றிப் பறுவாய் பண்ணவில்லை என்றால்...." எனப் பகிடியாய்க் கேட்டான்.

"இருபத்திநான்காவது பிறந்தநாள்," என்று பதில் கூறிய சஞ்சயா,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து, ''என்னுடைய கேள்விக்கு நீங்கள் பதில் கூற வில்லையே!'' என்று சற்று உரிமை கலந்த தொனியிற் கேட்டாள். அதற்கு முரளி, "நான் கட்டாயம் உங்களுடைய பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கு வருவேன். அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம்,'' என்று தனது வரவை உறுதிப்படுத்தும் பாணியிற் கூறினான்.

பிறந்தநாள் கொண்டாட்டம் முடிந்து மறுநாள் அலுவலகத்திற்கு வந்த சஞ்சயா, "எப்படி முரளி என்னுடைய பிறந்தநாள் கொண்டாட்டம் இருந்தது? அந்தநேரத்தில் அதைப்பற்றி ஒன்றும் கேட்கமுடியவில்லை. அதுதான் இப்பொழுது கேட்கிறேன். சும்மா முகமனுக்காகச் சொல்லவேண்டாம். உண்மையைச் சொல்ல வேண்டும்,'' என்று கேட்கவே, பதிலுக்கு முரளி, ''சிம்பிளாகவும் சிறப்பாகவும் இருந்தது. எனக்கு ரொம்பவும் பிடிச்சுக் கொண்டது,'' என்று கூறினான், ''ரொம்ப தாங்ஸ்'' என்று சொல்லிவிட்டு கதையைத் தொடர்ந்த சஞ்சயா, "எல்லோரும் எனக்குக் கேக் தீத்தினார்கள். நீங்களும் கேக் தீத்தினீர்கள். நீங்கள் தீத்திய பொழுது இருந்த சந்தோசமும் ஒரு வித்தியாசமான உணர்வும் மற்றையவர்கள் தீத்தியபொழுது இருக்கவில்லை. அதற்குரிய காரணம் என்னவென்று எனக்குப் புரியவில்லை. இதைப்பற்றி இரவு முழுவதும் யோசித்தேன். காரணம் வெளிப்படவில்லை. இதைப்பற்றி உங்களுக்கு ஏதாவது தோன்றுகின்றதா முரளி?'' என்று வழிந்துகொண்டு கேட்டாள். உடனே முரளி,

"நீங்கள் என்னை விரும்புகின்றீர்கள், வேறு வார்த்தையில் சொன்னால் நீங்கள் என்னைக் காதலிக்கிறீர்கள்,'' என்று சொல்லி முடிப்பதற்குள் சஞ்சயா ஒரு புன்முறுவலோடு காதளவோடிய கடைக்கண் பார்வையைச் செலுத்திக்கொண்டு, ''அப்படி ஒன்றுமில்லை, அப்படி ஒன்றுமில்லை,'' என்று சொல்லிய பொழுதும், அவளுடைய கடைக்கண் பார்வையிலிருந்து வந்த மன்மதபாணம் அவளுடைய விருப்பத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது என்பதை உணர்ந்துகொண்ட முரளி, ''எல்லாவற்றிற்கும் காலம் பதில் சொல்லும்'' என்று கூறி நிலமையைச் சமாளித்துக் கொண்டான்.

அம்மா கல்யாணப் பேச்சை எடுத்த பொழுது காலம் கனிந்து வந்துள்ளது என்று உள்ளூர உணர்ந்துகொண்ட முரளி இந்தச் சந்தர்ப்பத்தைத் தொடர்ந்து சஞ்சயாவின் உண்மை நிலையை அறிய முடிவு செய்தான். வழமை போன்று இன்றும் சஞ்சயாவுடன் மதிய உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்த பொழுது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மா எனக்குக் கல்யாணம் பேச ஆரம்பித்துவிட்டா. நான் யாரையேனும் விரும்புகின்றேனா என்று என்னைக் கேட்டா," என்று கதையைக் தொடங்கியவன் அதை சொல்லி முடிப்பதற்குள், சஞ்சயா, "அதற்கு நீங்கள் என்ன சொன்னீர்கள்?" என்று ஏக்கம் கலந்த தொனியிற கேட்டாள்.

கேள்வியின் தொனியிலிருந்து சஞ்சயாவின் மனோநிலையைப் புரிந்து கொண்ட முரளி, "ஆம் என்று சொன்னேன்," எனக் கூறிவிட்டு சஞ்சயாவின் முகத்தை உற்று நோக்கினான். அவளுடைய முகம் திடீரென்று கறுத்து, மனதில் ஏற்பட்ட ஏக்க உணர்வை வெளிப்படுத்தியது. அதை முரளி நன்கு அவதானித்தான். உடனே சஞ்சயா அவசரப்பட்டுக் கொண்டு, "அது யார் முரளி?" என்று தழதழத்த குரலிற் கேட்டுவிட்டு வளர்த்த நாய் முகத்தைப் பார்ப்பதுபோன்று அவனுடைய பதிலுக்காக முரளியின் வாயைப் பார்த்துக் கொண்டிருந்தாள். சஞ்சயாவின் அவசரத்தையும் ஏக்கத்தையும் நன்கு புரிந்து கொண்ட முரளி அவளுடைய விருப்பத்தை அவளுடைய வாயால் சொல்ல வைக்க வேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டு "நான் உங்களுக்குச் சொல்ல மாட்டேன்," என்றான். இதைக் கேட்ட சஞ்சயா, "இனி மேல் நான் உங்களுடன் பேசமாட்டேன். நீங்களும் என்னோடு பேச வேண்டாம்," என்று சொல்லிக் கொண்டு சுறுக்கென்று கதிரையை விட்டு எழும்பினாள்.

அவள் கோபப்பட்டுக் கொண்டாள் என்பதை உணர்ந்த முரளி திடீரென்று எதிர்பாராத விதமாக அவளுடைய கையைப் பிடித்துக் கொண்டு, "இதில இருங்கோ... இருங்கோ" என்று சற்றுப் பணிவான குரலில் வேண்டினான். உடனே சஞ்சயா, "ஏன் இப்ப என்னுடைய கையைப் பிடித்தனீங்க," என்று சற்று கோபத்துடன் கேட்டாள். இதைக் கேட்ட முரளி சிறிது தயக்கத்துடன், "கையைப் பிடித்தது தப்பா?" என்று தாழ்ந்த தழதழத்த குரலிற் கேட்டான். உடனே சஞ்சயா, "கையைப் பிடித்தது தப்புத்தான். என்னைக் காதலிப்பவர்தான் எனது கையைப்பிடித்து இருங்கோ என்று உரிமையுடன் சொல்லமுடியும். வேறுயாரும் எனது கையைப் பிடிப்பதை நான் விரும்பவில்லை," என்று கடுகடுத்த தொனியிற் சொன்னாள். இந்த வேளையில் அவள் தன்னை உள்ளூர விரும்புகிறாள் என்பதைப் புரிந்துகொண்ட முரளி, "அப்ப...நான் உங்களைக் காதலித்தால் உங்கள் கையைப் பிடிக்கலாம். அப்படித்தானே?" என்று புன்சிரிப்புடன் கேட்டான். முரளியின் மனோநிலையைப் புரிந்துகொள்ளாத சஞ்சயா உடனே "நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே யாரையோ விரும்புகின்றீர்கள். பிறகு எப்படி என்னைக் காதலிக்க முடியும். நீங்கள் விரும்புகின்ற பெண்ணினுடைய கையைப் போய்ப் பிடியுங்கோ", என்று விரக்தியுடனான தொனியிற் சொன்னாள்.

மேலும் அவளுடைய பொறுமையைச் சோதிக்க விரும்பாத முரளி, "அந்தப் பெண் ஏன் நீங்களாக இருக்கப்படாது! யாரோ ஒரு பெண் என்றுதானே சொன்னேன். நீங்கள் இல்லை என்று சொல்லவில்லையே. இப்ப...சொல்லுங்கோ நீங்கள் என்னை விரும்புகின்றீர்களா? இல்லையா?" என்று சிறிது அழுத்திக் கேட்டான். உடனே பதில் சொல்லுவதற்குத் தயங்கியவள் திடீர் என்று நிலம் நோக்கினாள். அப்பொழுது இதழோரம் இழையோடும் மோகனப் புன்னகையை அவள் முகத்திற் காண முடிந்தது. சில விநாடிகள் கழித்து தலையைச் சாய்த்து விளிகளைக் காந்த சக்தியாக்கி அனைப் பார்த்தாள். அவளுடைய அந்தப் பார்வை அவனைக் காந்தம் போல் இழுத்தது. அவளுடைய மோகனப் புன்னகையும் மருண்ட பார்வையும் அவளுடைய உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தி நின்றனவென்றால் மறுப்பதற்கில்லை.

அவளுடைய பார்வையிலிருந்து வந்த மன்மதபாணம் முரளியைத் தாக்கவே அதில் அவன் மயங்கி நின்றான். அந்தவேளையில் அவனைப் பார்த்து, "நான் உங்களைக் காதலிக்கிறேன்," என்று பெண்ணுக்குரிய நாணத்தோடு கூறி அவனை விழிப்படையச் செய்தாள். மயக்கம் தெளிந்த முரளி, "நான் உங்களை எனது மனதில் வைத்துக்கொண்டுதான் நான் ஒருபெண்ணை விரும்புகிறேன் என்று அம்மாவிற்குக் கூறினேன்," என்று சொல்லவே அதைக் கேட்ட சஞ்சயா, "அப்படியா! தாங்ஸ், ரொம்ப தாங்ஸ்!" என்று சொல்லிக் கொண்டு முரளியின் கன்னத்தில் திடீரென்று ஒரு முத்தம் கொடுத்தாள்.

## அங்கம் 4

தனது கேள்விக்கு மகனிடமிருந்து இன்னும் பதில் கிடைக்கவில்லையே என்று சிறிது கவலையுடன் இருந்த விசாலாட்சி ஒரு மாதம் கழித்து மறுபடியும் ஞாபகமூட்டுவது போன்று மகன் மகிழ்ச்சியாய் இருந்த நேரம் பார்த்து, "முரளி, என்ன தம்பி என்னுடைய கேள்விக்கு இன்னும் பதிலைக் காணம். உனக்குச் சிலவேளை இப்போ அவசியமற்ற விடயமாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கலாம். ஆனால் எனக்கு அப்படியல்ல, எனக்கு இது அதிமுக்கிய விடயம். இன்று எனக்கு நீ பதில் சொல்லியே ஆகவேண்டும்,'' என்று சொன்னதுதான் தாமதம், " உங்களுடைய ஆதங்கம் எனக்குப் புரியுதம்மா. நானும் சொல்லவேண்டும் என்றுதான் இருந்தனான், அதற்குள் நீங்கள் முந்திவிட்டீர்கள். இதுதான் தாயுள்ளம்

விடையத்திற்கு நேரடியாகவே வாறேன் அம்மா. நான் வேலைசெய்கிற வங்கியில் என்னுடன் ஒரு தமிழ்ப் பிள்ளை வேலைசெய்கிறா. அவ யாழ்ப்பாணம் திண்ணவேலியைச் சேர்ந்தவா. இங்கு அப்பா அம்மா சகோதரங்களுடன் இருக்கிறா. மிகவும் தங்கமான பொண்ணு. நல்ல குணம் நடை, சுமாரான அழகும்கூட, வயதும் இருபத்தி நான்காம். அவவுக்கு என்மீது ஒரு பிடிப்பு. எனக்கும் அவவை நன்கு பிடித்துள்ளது...,'' என்று கதை முழுவதையும் சொல்லி முடிப்பதற்குட் குறுக்கிட்ட விசாலாட்சி, ''அப்ப....ஒருவரை ஒருவர் காலிக்கிறீங்கள் என்று சொல்லுகிறாய். அதுமட்டுமல்ல காதல் கல்யாணம்வரை வந்துவிட்டது என்றும் சூசகமாய் சொல்லுகிறாய். இதற்குமேல் நீ என்ன சொல்ல வேண்டும் - அப்பமென்றால் புட்டா காட்டவேண்டும் - புரியுது புரியுது, எல்லாம் புரியுது,'' என்று கூறிய விசாலாட்சி தொடர்ந்து, "என்ன தம்பி, நானும் அந்தப் பெண்ணைப் பார்க்க வேண்டும், அவவுடன் பேசவேண்டும். அந்தப் பெண் எப்படிப்பட்ட பெண் என்று நானும் அறிய வேண்டாமே?'' என்று கேட்கவே, அதைக் கேட்ட முரளி, "பார்த்தால் போச்சிது,'' என்றான். விளக்கமில்லாமல் மகன் கதைக்கிறான் என்று கருதிய விசாலாட்சி, "எப்படித் தம்பி பார்ப்பது?'' என்று கேட்டதற்கு முரளி, "கண்ணாலதான் பார்ப்பது,'' என்று பகிடியாகப் பதில் அளித்தான். மகனுடைய பகிடியை உணர்ந்துகொண்ட விசாலாட்சி, "உனக்கு எப்பவும் என்னோடு பகிடிதான். நான் சீரியசாகக் கதைத்துக் கொண்டிருக்கிறேன். நீ என்னடாவென்றால் என்னோடு பகிடி விடுகிறாய். எப்பொழுது, என்னத்தைப் பற்றி பகிடிவிடுகின்றது என்று ஒரு விளக்கம் கிடையாதா தம்பி,'' என்று கூறித் தன்னுடைய அதீத அக்கறையை வெளிப்படுத்தினாள். அம்மாவினுடைய அக்கறையைப் புரிந்து கொண்ட முரளி, "ஒரு நாளைக்கு சஞ்சயாவை நம்மளுடைய வீட்டிற்குக் கூட்டி வருகிறேன். நீங்கள் நல்லவடிவாய்ப் பார்த்து, பேசி, அவவைப் புரிந்து கொள்ளுங்கோ. அவளும் வரப்போகும் மாமியாரைப் பார்த்துப் பேசியதாக இருக்கட்டும்,'' என்று கூறினான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன் தமிழர் பண்பாடு தெரியாமற் பேசுகிறான் என்று எண்ணிய விசாலாட்சி, "என்ன தம்பி சொல்லுகிறாய்? ஒரு குமர்ப்பிள்ளையைப் போய்... ஒரு வாலிபப் பொடியன் கல்யாணம் பண்ணிக்கொள்ள முந்தி அவனுடைய வீட்டிற்குக் கூட்டி வருவது முறையே தம்பி? நீ சொல்லுகிறாய் என்று நானும் ஒத்துக் கொள்ளலாமே தம்பி?" என்று கேட்கவே, பதிலுக்கு முரளி, "அது... வடிவாய்க் கூட்டி வரலாம். இது தமிழீழமில்லை, இப்பொழுது நாமள் கனடாவில் இருக்கிறோம். இங்கு ஒரு நாளைக்கு மட்டுமல்ல ஒவ்வொரு நாளும்கூடக் கூட்டி வரலாம். நம்மளுடைய பண்பாட்டை உடைக்கப்படாது என்பதற்காகத்தான் ஒரு நாளைக்கு மட்டும் கூட்டி வரப்போறன். தமிழீழமும் இப்பொழுது உங்களுடைய காலம் மாதிரி இல்லை அம்மா. இப்போதைய இளசுகள் அங்கும் நல்லாய் மாறிவிட்டுதுகள். வெளிநாட்டுத் தொடர்பு தமிழீழத்தையும் நல்லாய் மாற்றிவிட்டது, புரியுதா அம்மா?" என்று கேட்கவே மகன் கூறியவற்றிற்கு ஒத்துப் போவது போன்ற தொனியில் விசாலாட்சி, "உன்னோடு கதைத்து என்னால் வெல்ல முடியாது தம்பி. ஏதோ நீ தீர்மானிக்கிறமாதிரிச் செய். எப்படியாயினும் நான் பெண்ணைப் பார்த்துக் கதைத்துப் பேசினாற் போதும்," என்று கூறி ஆறுதல் மூச்சு விட்டாள்.

மறுநாள் வேலைக்குச் சென்ற முரளி சஞ்சயாவை வழமைபோன்று மதிய உணவு அறையிற் சந்தித்தான். இருவரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தபொழுது கதையைத் தொடக்கிய முரளி, "எங்களுடைய அம்மா உங்களை ஒருமுறை பார்த்துப் பேசுவதற்கு ஆசைப்படுகின்றார். ஒரு நாளைக்கு எங்களுடைய வீட்டிற்கு என்னுடன் கூடிக்கொண்டு வாருங்கோவேன்," என்று எந்தவித தயக்கமும் இன்றி சாதாரணமாகச் சொன்னான். உள்மனதிற்குள் விருப்பம் இருந்தாலும் உடனே ஆம் என்று சொல்லுவதற்குத் தயங்கிய சஞ்சயா, "வரலாம்தான், ஆனால் கொஞ்சம் யோசிக்க வேண்டிக் கிடக்கு," என்று கூறித் தனது தயக்கத்தை வெளிப்படுத்தினாள். அவளுடைய மனோநிலையைப் புரிந்து கொண்ட முரளி உடனே, "நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். உங்களைப் பற்றி நான் அம்மாவிற்கு ரொம்பவும் நல்லாய்ச் சொல்லிவைத்திருக்கிறேன். அம்மா உங்களைப் பார்த்தால் மிகவும் சந்தோசப்படுவாங்க. நீங்கள் வருகின்ற புதன்கிழமை வேலை முடிந்து போகும்போது எங்கள் வீட்டிற்கு என்னுடன் வருகின்றீர்கள் சரியா," என்று அன்புகலந்த தொனியிற் கூறவே, அவனுடைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு வேண்டுகோளுக்கு மறுப்புத் தெரிவிக்க முடியாத சஞ்சயா, "சரி... நீங்கள் சொல்லுகின்றபடியே நடக்கட்டும்," என்று கூறித் தன்னுடைய சம்மதத்தை வெளிப்படுத்தினாள்.

வழமையாக வேலை முடிந்து மாலை ஆறுமணிக்கு முரளி வீட்டிற்கு வருவான். வருங்கால மருமகளின் வருகையை ஒட்டி அந்த நேரத்திற்கு முன்பே அபாட்மென்றை நன்றாக சுத்தம் செய்து வழமையைவிட அழகாக வைத்துக் கொண்டு, மகனுக்காகவும் வருங்கால மருமகளுக்காகவும் காத்திருந்தாள் விசாலாட்சி. இப்பொழுது சரியாக ஆறுமணி. கதவுமணி அடித்தது. விசாலாட்சி உடனே சென்று கதவைத் திறந்தாள். அவர்கள் இருவரையும்



ஒன்றாகப் பார்த்தபொழுது கண்ணனுக்கேற்ற ராதை என்ற சொற் தொடர் ஞாபகத்திற்கு வந்தது. அவ்வளவு சோடிப் பொருத்தம். விசாலாட்சிக்கு ஆனந்த அதிர்ச்சி. அப்பொழுதும் நிலை தடுமாறாது உள்ளுக்கு வலதுகாலை எடுத்து வைத்து வாருங்கோ மருமகள்," என்று தமிழீழக் கலாச்சாரத்திற்கே உரிய பாணியிற் கேட்டுக் கொண்டாள். பெண்ணைப் பாத்ததும் தனது மன உணர்வுகளை அடக்க முடியாத நிலையில் "மகாலட்சுமி மாதிரி எனது மகனுக்கு ரொம்பப் பொருத்தமாயிருக்கிறீங்கள். நீங்கள் இருவரும் நீடூழி வாழவேண்டும்," என்று உளமார வாழ்த்தினாள் விசாலாட்சி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அங்கம் 5




**அ**ப்புறம் திருமணம் குழந்தைகள் என்று வாழ்க்கைப் படகு ஓடத் தொடங்கியது. இப்பொழுது விசாலாட்சிக்கு அறுபத்தைந்து வயது. அதாவது முதியோர் பட்டியலில் சேர்க் கப்பட்ட வயது. வேலை நாட்களில் முரளியும் சஞ்சயாவும் வேலைக்குச் சென்றுவிடுவார்கள். அவர்களுடைய இரண்டு குழந் தைகளும் குழந்தை பராபரிப்பு நிலையத்திற்குச் போய்விடுவார்கள். விசாலாட்சி பகல் முழுதும் தனிமையில் இருப்பாள். ஊரில் பக்கத்து வீடுகள் அயலவர்கள் என்று கலகலப்பாயும் சுறுசுறுப்பாயும் வாழ்ந்து வந்த விசாலாட்சிக்குத் தனிமையில் இருப்பது மனதிற்குப் பெரும் வேதனையாக இருந்தது. இந்த வேதனையான வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் எண்ணத்துடன் ஒரு நாள் மகனிடம் சென்று, "தம்பி முரளி, வேலைநாட்களில் தனிமையாக இருப்பது பெரும் மன உளைச்சலாக இருக்கிது, படுத்தாலும் பகலில் நித்திரையும் வருகுதில்லை, அக்கம் பக்கத்தில் யாரும் தெரிந்தவர்களுமில்லை," என்று கதையைத் தொடக்கிய விசாலாட்சி அதைச் சொல்லி முடிக்குமுன், "அதற்கு நான் என்னம்மா செய்ய முடியும். கனடா வாழ்க்கை இப்படித்தான். இதென்ன நம்ம ஊரா? அக்கம் பக்கத்தில போய்ப் பொழுது போக்குவதற்கு, ஒரு மாதிரிச் சமாளிக்க வேண்டியதுதான்," என்று முரளி சொல்லி முடிக்கவே, கதையைத் தொடர்ந்த விசாலாட்சி "நான் என்ன சொல்லவாறன் என்றாற் தம்பி, தமிழ் றேடியோ ஒன்று வாங்கித்தந்தால் நான் அதைப்போட்டுக் கேட்டுக்கொண்டு இருப்பேன். அப்பொழுது பொழுதுபோவதும் தெரியாது அத்துடன் நல்ல நல்ல விடையங்களையும் செய்திகளையும் கேட்டறிய முடியும். மொத்தத்திற் பிரயோசனமாயும் பிராக்காயும் பொழுது போகும். ஒரு றேடியோ வாங்கித்தாறியே தம்பி," என்று ஆசையோடு கேட்டாள். தனிமையின் வேதனையையும் தாயின் உணர்வுகளையும் புரிந்து கொண்ட முரளி, "சரி அம்மா, தமிழ் றேடியோ ஒன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கிழமை வாங்கித் தாறன். அதைக் கேட்டுக் கொண்டாவது சந்தோசமாய் இருக்கப் பாருங்கோ,'' என்று கூறிவிட்டு, அந்தக்கிழமையே ஒரு தமிழ் ரேடியோவை வாங்கிக் கொடுத்தான்.

வானொலி கிடைத்த ஆரம்பநாட்களில் மிக ஆர்வத்துடன் ரேடியோவைக் கேட்டு வந்த விசாலாட்சிக்கு மாதங்கள் செல்லச் செல்லச் சலிப்புத்தட்டத் தொடங்கியது. இருந்தபோதும் ரேடியோவினுடைய பிரயோசனத்தை விசாலாட்சி உணரத் தவறவில்லை. அதைவிட்டால் வேறு வழியில்லை என்பதனால் அதைக் கேட்பதற்கும் தவறவில்லை. இடையிடையே முரளி கோயிலுக்குப் போகும்பொழுது அம்மாவையும் கோவிலுக்குக் கூட்டிப்போவது வழக்கம். அன்று சனிக்கிழமை முரளியும் சஞ்சயாவும் பிள்ளைகளும் ஸ்காபரோ முருகன் கோவிலுக்குப் போயிருந்தனர். அவர்களுடன் கூடிக்கொண்டு விசாலாட்சியும் கோவிலுக்குப் போயிருந்தாள். அன்று எதிர்பாராதவிதமாக விசாலாட்சியின் கிராமத்தைச் சேர்ந்த காவேரியை கோவிலிற் சந்திக்க நேர்ந்தது. விசாலாட்சிக்கு காவேரியைக் கண்டதும் வாய்விட்டுச் சொல்ல முடியாத சந்தோசம். சுவாமி வழிபாட்டை முடித்துக் கொண்டு இரண்டுபேரும் ஓர் இடத்தில் ஆறஅமர இருந்து தங்களுடைய ஊர்ப் புதினங்களையும் கனடாப் புதினங்களையும் கதைக்கத் தொடங்கினர். காவேரியும் விசாலாட்சியின் வயதை ஒத்தவள். அவளும் தனது மகனுடன் கனடாவில் வசித்து வருகிறாள்.

கனடாவில் விசாலாட்சியின் வாழ்க்கை நிலமையை அறிய விரும்பிய காவேரி, "எப்படி விசாலாட்சி இருக்கிறாய்? எப்படிப் பொழுது போகின்றது? கனடாச் சீவியம் என்ன சொல்லுது? மகன் எப்படி, நல்லாய்ப் பார்க்கின்றாரா?'' என்று கேள்விமேல் கேள்விகளைப் போட்டாள். தன்னையும் தன்னுடைய நிலமையையும் அறிவதற்குக் காவேரி ரொம்பவும் ஆசைப்படுகிறாள் என்பதை உணர்ந்து கொண்ட விசாலாட்சி, "நான் நல்லாயிருக்கிறேன் காவேரி. எனக்கொரு குறையும் இல்லை. மகன் நல்லாய்ப் பார்க்கிறான். ஆனால்,'' என்று கதையை இழுக்க அதைச் சொல்லி முடிப்பதற்குட் குறுக்கிட்ட காவேரி, "ஆனால் என்ன விசாலாட்சி, என்ன சொல்ல வாறாய்?'' என்று மிக ஆர்வத்துடன் கேட்டாள். கதையைத் தொடர்ந்த விசாலாட்சி, "ஆனால் பகற் பொழுது போவதுதான் ரொம்பச் சங்டமாயிருக்கு. மகனும் மருமகளும் வங்கியில் வேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கிறார்கள். இருவரும் காலை ஏழுமணிக்குப் போனால் மாலை ஆறுமணிக்குத்தான் வீட்டுக்கு வருவினம். இரண்டு பேரப் பிள்ளைகள், அதுகளும் குழந்தைகள் பராபரிப்பு நிலையத்திற்குப் போய்விடுங்கள். தனிய இருந்து நாலு சுவர்களுக்குட் பொழுது போக்குவதென்றால் மனதுக்கு ரொம்பப் பாரமாயிருக்கு. இதைப்பற்றி மகனிடம் சொல்லி மகனைக் கொண்டு தமிழ் ரேடியோ ஒன்று வாங்கி வைத்துக் கேட்கிறேன். அதற்குப் பிறகு பொழுது போவது பரவாயில்லை. இருந்தாலும் திரும்பத்திரும்ப அதையே கேட்கும்போது கொஞ்சம் சலிப்புத் தட்டத்தான் பார்க்குது. அதை விட்டால் வேறு வழியில்லை. அந்த வொனொலி இல்லையென்றால் இத்தறுதிக்கு மூளை பழுதாய்ப்போயிருக்கும். அதனுடைய உதவியுடன்தான் நின்மதியாய் இருக்கிறேன் என்றால் மறுப்பதற்கில்லை,'' என்று கூறிமுடித்தாள்.

விசாலாட்சியின் நிலமையை நன்கு புரிந்துகொண்ட காவேரி, "என்ன விசாலாட்சி சொல்லுகிறாய்! நீ சொல்லுகிற விடயம் பத்துப்பன்னிரண்டு வருடங்களுக்கு முன் என்றால் உண்மைதான். இப்ப எத்தனையோ பொழுதுபோக்குச் சாதனங்கள் வந்துவிட்டன. அவற்றின் உதவியோடுதானே நமது வயதுபோன சனங்கள் நின்மதியாகப் பொழுது போக்குதுகள். இப்பொழுது வானொலியில் ஒரு நிலையத்து நிகழ்ச்சிகளை மட்டும் கேட்கவேண்டுமென்ற அவசியம் இல்லை. மூன்று நான்கு நிலையங்களிலிருந்து வேறுவேறு நிகழ்ச்சிகளைக் கேட்கலாம். அத்துடன் இப்பொழுது தொடர்ந்து நாடகங்கள் வருகின்றன, அவற்றைப் பார்க்கலாம். அதுமட்டுமல்ல இப்பொழுது இருபத்திநான்கு மணி நேரமும் தமிழ் நிகழ்ச்சிகளை ரி.வி.யில் பார்க்க முடியும். எல்லாவற்றிற்கும் மேலாகத் தமிழ்ப் புத்தக நிலையங்களில் நல்ல நல்ல கதைப்புத்தகங்கள் சஞ்சிகைகள் பத்திரிகைகள் உள்ளன. அவற்றை வாங்கிப் படிக்கலாம். ஏன்? தமிழீழ எழுத்தாளர்களுடைய பல படைப்புகள் இங்கு வெளியிடப்படுகின்றன. அவற்றை வாங்கிப்படிக்கலாம். இப்பொழுது நம்மளுடைய நாட்டைவிட இங்குதான் பொழுதுபோக்குச் சாதனங்கள் நிறைய உண்டு. ஆனால் ஒன்று இவற்றையெல்லாம் வாங்கித்தருவதற்கு ஆள் வேண்டும்.

உனக்கென்ன மகனும் மருகளும் வங்கியில் வேலை செய்யினம். கை நிறையச் சம்பாதிப்பினம். வாங்கித் தரலாம் தானே,'' என்று எல்லாவற்றையும் விளக்கமாயும் விபரமாயும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக் கூறினாள். எல்லாவற்றையும் கேட்டு ஆச்சரியம் அடைந்த விசாலாட்சி, "இவைகள் எல்லாவற்றையும் உன்னுடைய மகன் உனக்கு வாங்கிக் கொடுத்திருக்கிறாரா?" என்று எதிர்பார்க்கை கலந்த தொனியிற் கேட்டாள். ஆம் என்று சொல்லி விசாலாட்சிக்கு மனக்கிலேசத்தை ஏற்படுத்த விரும்பாத காவேரி நிலமையைப் புரிந்து கொண்டு, "எல்லாம் என்று சொல்லுவதற்கில்லை, நான் கேட்டவைகளை வாங்கித் தந்துள்ளார். நான் நன்றாக வாசிப்பேன். ஆனபடியினாற் கதைப்புத்தகங்கள் சஞ்சிகைகள் பத்திரிகைகள் தான் என்னுடைய முக்கியமான பொழுதுபோக்கு. அத்தோடு வானொலி கேட்பதும் நாடகம் பார்ப்பதும் எனது சந்தோசமான வாழ்க்கைக்கு உதவியாயிருக்கின்றன," என்று உண்மையைக் கூறினாள்.

எல்லாவற்றையும் கேட்டு உள்வாங்கிக் கொண்ட விசாலாட்சி உரிய நேரத்தில் மகனிடம் பக்குவமாய் எடுத்துக்கூறி வேண்டியவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டாள். இன்று சனிக்கிழமை, முரளி மதிய உணவு சாப்பிட்டுவிட்டு இரண்டு பிள்ளைகளுடனும் சந்தோசமாய்ப் பொழுதுபோக்கிக் கொண்டிருந்தான். மகனுடைய மகிழ்ச்சியான நிலமையை அவதானித்த விசாலாட்சி இந்தத் தருணத்தைப் பயன்படுத்தித் தனது தேவையைப் பூர்த்திசெய்ய முடிவு செய்தாள். மகனுக்கு அண்மையில் வந்த விசாலாட்சி "இன்று சனிக்கிழமை, எல்லாரும் வீட்டில இருக்கிறம், நீயும் பிள்ளைகளோடு விளையாடுகிறாய், நானும் சந்தோசமாயிருக்கிறேன். திங்கட்கிழமை வந்தால் எல்லோரும் நான் முந்தி நீ முந்தி என்று வெளிக்கிட்டுப் போய்விடுவீங்கள். வீடு வெறிச்சோடிக் கிடக்கும். நான் நாலு சுவர்களைப் பார்த்துக்கொண்டு இருக்க வேண்டியதுதான். படுத்தாலும் நித்திரை வராது. எவ்வளவு நேரத்திற்கென்று படுப்பது," என்று முழுவதையும் சொல்லி முடிப்பதற்குட் தலையை நிமிர்த்திப் பார்த்த முரளி, "என்னம்மா சொல்லுகிறீங்க? உங்களுக்குப் பொழுது போகவென்றுதானே தமிழ் வானொலி வாங்கித் தந்திருக்கிறேன். அதைக் கேட்டுக் கொண்டிருந்தால் சந்தோசமாய்ப் பொழுது போகும்தானே. நீங்கள் கேட்டுத்தானே வாங்கித் தந்தனான்," என்றான்.

சரியான தருணத்தை எதிர்பார்த்திருந்த விசாலாட்சி, "வானொலியைத் திரும்பத் திரும்பக் கேட்டு சலிப்புத் தட்டிவிட்டது தம்பி. ஆனால் அது இருப்பது எவ்வளவோ ஆறுதல். அதை வாங்கித் தந்திராவிட்டால் இந்தளவிற்கு நின்றுபிடித்திருக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது,'' என்று கூறியதும் அதைக் கேட்ட முரளி, ''வானொலி யைக் கேட்டுச் சலிப்புத் தட்டினாற் தொலைபேசி மூலம் நிகழ்ச்சிகளில் பங்குபற்றலாந்தானே அம்மா. முதியோர் நிகழ்ச்சி போன்ற பல நிகழ்ச்சிகளை உங்களைப் போன்றவர்களுக்காகத் தானே நடாத்துகின்றார்கள்,'' என்று கூறினான். இதற்கு மேலும் தாமதித்து சந்தர்ப்பத்தை நழுவவிட விரும்பாத விசாலாட்சி, ''நீ சொல்லுவது சரிதான் தம்பி. இப்பொழுது நம்ம சனங்கள் நாடகங்கள் எல்லோ பார்க்கின்றார்கள். நாடகக் கொப்பி எடுத்து அதை எப்படிப் போட்டுப் பார்ப்பது என்று எனக்குக் காட்டித் தந்தால் நான் போட்டுப் பார்ப்பேன் தம்பி. நம்ம ஊர்க் காவேரி சொன்னாள் அவற்றைப் பார்ப்பது நல்ல பொழுது போக்குமட்டுமல்ல அவற்றிலிருந்து நல்ல பிரயோசனமான விடையங்களையும் அறிந்து கொள்ள முடியும் என்று. நீ என்ன தம்பி சொல்லுகிறாய்?'' என்று பக்குவமாய்க் கேட்டாள்.

அம்மாவின் மீது அதீத அன்பும் பாசமும் கொண்டிருந்த முரளி தாயின் ஆசையையும் தேவையையும் மழுங்கடிக்க விரும்பவில்லை. அப்பாவும் இரு அண்ணாமாரும் இறந்துபோக தன்னை அன்பாகவும் செல்லமாகவும் இடர்களின் மத்தியிலும் அம்மா வளர்த்தெடுத்ததை இரைமீட்டுப் பார்த்த முரளி அந்தக் கிழமையே நாடகக் கொப்பிகள் சிலவற்றை எடுத்து வந்து அவற்றை எப்படிப் போட்டுப் பார்ப்பது என்பதையும் காட்டிக் கொடுத்தான். இப்பொழுது விசாலாட்சியின் பொழுது சந்தோசமாயும் பிரயோசனமாயும் போகின்றது என்றால் மறுப்பதற்கில்லை. நான்கு சுவர்களுக்குள் அடைபட்டுக் கிடக்கிறேன் என்ற உணர்வு அறவே இல்லாமற் போய்விட்டது. வானொலி கேட்பது, வானொலி நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவது, நாடகங்களைப் பார்ப்பது என்று எப்பொழுதும் ஏதோவொன்றிற் தன்னை ஈடுபடுத்திக்கொண்டே இருந்தாள் விசாலாட்சி. இப்பொழுதெல்லாம் பொழுது போகுதில்லையே என்ற பேச்சுக்கே இடமில்லை அவளிடம். மகனும் மருமகளும் பேரப்பிள்ளைகளும் திரும்பி வரும்போதுதான் விசாலாட்சிக்குப் பின்னேரம் ஆறுமணி வருவதே தெரியும். அந்தளவிற்குச் சுறுசுறுப்பான பொழுதுபோக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் - 6

**மா**மியாருக்கு இவ்வாறான வசதிகளைச் செய்துகொடுத்தது மருமகள் சஞ்சயாவிற்கு உள்ளூர இனந்தெரியாத பொறாமையை ஏற்படுத்தியது. அதற்குரிய காரணத்தை அவளாலேயே புரிந்து கொள்ள முடியவில்லை. இது இயற்கையின் நியதியோ தெரியவில்லை. அன்றித் தமிழ் இனத்திற்கு இறைவன் கொடுத்த சீதணமோ புரியவில்லை. இந்த இயற்கை நியதிதான் மாமிமாருக்கும் மருமக்களுக்கும் இடையிற் பிரச்சினைகள் தோன்றுவதற்கு வழிவகுக்கின்றதோ என்றுகூட எண்ணத் தோன்றுகின்றது. காலகதியில் அந்தப் பொறாமை உணர்வு சிறிது சிறிதாக வளரத் தொடங்கியது. அந்தக் குடும்பத்திற்கு வேண்டிய மதிய உணவை விசாலாட்சி சமைப்பது வழக்கம். வேலை நிமித்தம் காரணமாக மதிய உணவை வேலையால் வந்து இரவு ஏழுமணிக்குச் சாப்பிடுவது முரளிக்கும் சஞ்சயாவிற்கும் பழக்கப்பட்ட ஒன்று. அவர்களுடைய இரவுச் சாப்பாடாகவும் அது அமையும். அது பெரும்பாலும் சோறும் கறியுமாயே இருக்கும். அம்மாவின் சாப்பாட்டை நீண்ட நாட்களாக ருசித்து சாப்பிட்டுப் பழக்கப்பட்ட முரளிக்கு அம்மாவின் சமையல் என்றால் ரொம்பவும் பிடிக்கும். விசாலாட்சியும் மகனுடைய விருப்பத்திற்கு ஏற்றபடி சமைத்து வைப்பாள்.

ஒரு நாள் வழமைபோன்று முரளி வேலையால் வந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கும்பொழுது "என்னம்மா, சோறு இன்று அடிப்பிடித்து மணக்கிது. என்ன காரணம்? அடிப்பிடிக்க விட்டிட்டீங்களோ?" என்று சொல்ல வந்ததை கூறி முடிப்பதிற்குள், இதைக் கேட்டுக் கொண்டிருந்த சஞ்சயா,

"உங்கம்மா அரிசியைப் போட்டிட்டு நாடகம் பார்த்துக் கொண்டிருந்திருப்பா. அது அடிப்பிடித்துவிட்டது. அவாவிற்கு இப்ப சமையலைவிட நாடகம் முக்கியமாய்ப் போய்விட்டது. இன்றைக்கு அடிப்பிடித்து விட்டது நாளைக்குப் பானையோட சோறு எரிஞ்சு போனாற்தான் என்ன! யார் கேட்பது? எந்த நேரமும் நாடகம்! நாடகம்!! நாடகம்!!! இதுக்குத்தானே எல்லாவற்றையும் வாங்கிக் கொடுத்து வைத்திருக்கிறீங்கள். உங்களுக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும்," என்று மாமியாரின் முகத்திற் செருப்பால் அடித்ததுபோன்று கூறினாள்.

இதைக் கேட்டதும் முரளி, "நான் இப்ப அம்மாவோட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லவா கதைத்தனான். அவ பதில் சொல்லுவதற்குள் நீங்களேன் தேவையற்றவற்றைக் கொட்டித் தீர்க்கிறீங்கள்," என்று சொல்லி முடிப்பதற்குட் கதையைத் தொடர்ந்த சஞ்சயா, "நான் சொல்லுறது உங்களுக்குத் தேவையற்ற விடயமாய்ப் படுகிது. உங்கம்மா உங்களுடைய கேள்விக்குப் பதில் சொல்லமாட்டா என்று தெரிந்துதான் நான் உண்மையைச் சொன்னனான். நான் ஒன்றும் இல்லாததைச் சொல்லவில்லை, உள்ளதைத்தான் சொன்னனான். அவ நாடகம் பார்க்கிற ரசனையில அரிசி போட்டதை மறந்திருப்பா," என்று மறுபடியும் வார்த்தைகளைக் கொட்டவே, சிறிது பொறுமையை இழந்த முரளி, "நீ கொஞ்சம் பொறுமையாயிருக் கின்றாயா? நான் கேட்டு என்ன நடந்ததென்று அறியிறேன்," என்று கண்டிப்பான தொனியிற் சொன்னான். முரளி கூறியதைச் சிறிதும் கவனத்திற்கு எடுக்காத சஞ்சயா, "நான் எப்படிப் பேசாமற் பொறுமையாக இருக்க முடியும்? இன்றைக்குச் சோறு அடிப்பிடித்துவிட்டது. நாளைக்குச் சோறு பானையோடு எரிந்து போகும். இன்னொரு நாளைக்கு வீடே எரிந்து போகும். அப்படி ஒன்று நடந்திட்டால் யார் தாக்குப் பிடிக்கிறது? இந்த நிலமையில் நான் எப்படிப் பேசாமலிருக்க முடியும்?" என்று மறுபடியும் வார்த்தைப் பிரயோகம் செய்யவே, நிலமையைச் சமாளிக்க முயன்ற முரளி, "நீ ஏன் இப்ப இல்லாத, பொல்லாத வற்றை எல்லாம் கற்பனை செய்துகொண்டு தேவையற்ற வார்த்தைகளை எல்லாம் கொட்டிறாய். மறுபடியும் சொல்லுகிறேன் கொஞ்சம் பொறுமையாய் இரு அப்பா," என்று தனது கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு கூறினான்.

இவை யாவற்றையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த விசாலாட்சி, "என்னால் நீங்கள் இரண்டு பேரும் பேச்சுவார்த்தைப்பட வேண்டாம். நடந்ததை நான் சொல்லுகிறேன். என்னைப் பேசவிடுங்கோ. சோற்றை வடித்துவிட்டு, அது சுண்டுவதற்காக கொஞ்ச நேரம் விட்டேன். அப்பொழுது அடுப்பைக் குறைத்து விடுவதற்கு மறந்து போய்விட்டேன். அதனால் கொஞ்சம் அடிப்பிடித்து விட்டது. மருமகள் கூறுவதுபோன்று நான் நாடகம் பார்த்துக் கொண்டிருந்த ரசனையில சமையலைக் கவனிக்காமல் விடவில்லை. சமையலைத் தொடங்கினால் நான் நாடகம் போடுவதில்லை. சமையல் முடிந்த பிற்பாடுதான் நான் நாடகம் போடுவது வழக்கம். வீட்டை எரியவிடுகின்ற அளவிற்கு நான் விபரம் கெட்டவள் அல்ல. எனக்கும் இந்த நாட்டு நடப்புக்கள் ஓரளவிற்குத் தெரியும். சோறு சாதுவாய்த்தான் அடிப்பிடித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய அளவிற்கு அடிப்பிடித்திருந்தால் நான் மறுபடியும் சோறு சமைத்திருப்பேன். இதைச் சாப்பிடலாம் என்ற முடிவோடுதான் மறுபடியும் சமைக்கவில்லை. மருமகளுடைய கதையைப் பார்த்தால் மனதில் வேறொன்றை வைத்துக் கொண்டு அதற்காக இதைச் சாட்டாக வைத்துக் கதைப்பது போன்று தோணுது. அதற்குக் காலம்தான் பதில் சொல்ல வேண்டும். இப்போதைக்கு நீங்கள் இரண்டு பேரும் என்னால் பேச்சுப்பட்டு மனவருத்தப்பட வேண்டாம். இனிமேல் நான் சமையல் விடையத்தில் ரொம்பக் கவனமாயிருப்பேன். இப்ப சந்தோசமாய்ச் சாப்பிட்டுவிட்டுப் போங்கோ. நாளைக்கு நடக்கப் போவதை நாளைக்குப் பார்க்கலாம்," என்று பொறுமையாயும் நிதானமாயும் கூறிமுடித்தாள்.

இதைக் கேட்ட முரளி, "பார்த்தியா அம்மா சொல்லுவதை, அம்மா நீ நினைக்கிற மாதிரி பெரிய தப்புப் பண்ணமாட்டா என்று எனக்குத் தெரியும். உண்மையைத் தெரிந்துகொள்ள முந்தி நீ அவசரப்பட்டு வார்த்தைகளைக் கொட்டிவிட்டாய். நெல்லைக் கொட்டினால் அள்ளலாம், சொல்லைக் கொட்டினால் அள்ள முடியாது என்று ஒரு பழமொழி இருக்கின்றது. இனிமேலாவது வார்த்தைகளைக் கொட்டுவதற்கு முதல் கொஞ்சம் சிந்திக்கப் பழகு சஞ்சயா," என்று அன்பாயும் பண்பாயும் எடுத்துக் கூறினான். இவ்வளவு வார்த்தைகளையும் கொட்டுவதற்குத் தன்னைத் தூண்டிய காரணி என்னவென்று இனம் கண்டுகொள்ள முடியாத சஞ்சயா தான் கூறியவற்றையிட்டுப் பெரியதாய்க் கவலைப்பட்டதாய்த் தெரியவில்லை.

முரளிக்கும் சஞ்சயாவிற்கும் இரண்டு பிள்ளைகள். மூத்த பிள்ளை ஆண் குழந்தை. பெயர் தமிழ்ச் செல்வன். இரண்டாது பெண் குழந்தை, பெயர் தமிழ்ச்செல்வி. தமிழ்ச் செல்வனுக்கு ஐந்து வயது. தமிழ்ச் செல்விக்கு மூன்று வயது. இருவரையும் குழந்தைகள் பராபரிப்பு நிலையத்திற்குக் கூட்டிச் செல்லும் பொறுப்பு விசாலாட்சியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. பின்னேரத்தில் வேலை முடிந்து வரும்பொழுது பிள்ளைகளைக் கூட்டிவருவது சஞ்சயாவின் கடமையாக இருந்தது. ஒரு நாள் இரண்டாவது பிள்ளை தமிழ்ச் செல்வி குழந்தைகள் பராபரிப்பு நிலையத்தில் இருந்தபொழுது சத்தி எடுத்து சற்று சுகயீனம் அடைந்திருந்தாள். அதைத் தொடர்ந்து நிலைய மேற்பார்வையாளர் சஞ்சயாவைத் தொலை பேசியில் அழைத்து பிள்ளையின் சுகயீனத்தைப் பற்றிக் கூறிப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையை வீட்டிற்கு அழைத்துச் செல்லும்படியும், தேவைப்படின் டாக்டரிடம் காட்டும்படியும் கேட்டுக் கொண்டார்.

சஞ்சயா வங்கி அலுவலகத்தில் வேலையுடன் மிகவும் சுறுசுறுப்பாய் இருந்தபடியினால் பிள்ளையை நிலையத்திலிருந்து கூட்டிவரும்படி மாமியாரிடம் கூறுவதற்காகத் தொலைபேசி அழைப்பு எடுத்தாள். வீட்டிற் தொலைபேசி வேலைசெய்துகொண்டு இருந்தது. ஒவ்வொரு பத்து நிமிடத்திற்கும் என்ற முறையில் அரை மணித்தியாலம் மூன்று தடவை முயற்சி செய்தும் அழைப்பு கிடைக்கவில்லை. தொலைபேசி தொடர்ந்தும் வேலை செய்துகொண்டே இருந்தது. தொலைபேசி மூலம் மாமியாருடன் தொடர்பு கொள்ள முடியாதுபோகவே, பொறுமையை இழந்த சஞ்சயா அலுவலகத்திற் தனது அவசர தேவையைச் சொல்லி லீவு பெற்றுக்கொண்டு குழந்தை பராபரிப்பு நிலையத்திற்குச் சென்று பிள்ளையை வீட்டிற்கு அழைத்து வந்தாள்.

ஏற்கனவே மாமியார் மீது ஏற்பட்டிருந்த உள்ளார்ந்த வெறுப்பும் எரிச்சலும் இந்த நிகழ்ச்சியுடன் மேலும் அதிகரித்து விட்டது என்றால் மறுப்பதற்கில்லை. சற்று கோபத்துடன் வந்த சஞ்சயா மாமியாரைப் பார்த்து என்ன மாமி தொலைபேசியோடு செய்துகொண்டிருக்கிறீங்கள்? எத்தனை தடவை நான் அலுவலகத் திலிருந்து ரெலிபோன் எடுத்தனான் என்று உங்களுக்குத் தெரியுமே? அரை மணித்தியாலம் மூன்று தடவை ரெலிபோன் எடுத்தனான். மூன்று தடவையும் ரெலிபோன் வேலைசெய்து கொண்டேயிருந்தது. பிள்ளைக்குச் சத்தியும் சுகயீனமும் என்று குழந்தை பராபரிப்பு நிலையத்திலிருந்து தொலைபேசி அழைப்பு எனக்கு வந்தது. அதை உங்களிடம் சொல்லிப் பிள்ளையைக் கூட்டி வரும்படி சொல்லுவம் என்று அவசரப்பட்டு எடுத்தேன், ஆனால் முடியவில்லை. இங்க என்ன நடக்கிது? ஏன் தொலைபேசி தொடர்ந்து வேலைசெய்துகொண்டு இருந்தது?" என்று கோபத்துடன் கேட்டாள்.

மருமகளின் கோபத்தையும் நியாயத்தையும் புரிந்து கொண்ட விசாலாட்சி பயபக்தியோடு, "அது... வந்து பிள்ளை...," என்று கதையைத் தொடங்க, குறுக்கிட்ட சஞ்சயா, "என்ன... வந்து...போய் நீங்கள் என்ன சொல்ல வாறீங்கள் என்று எனக்குத் தெரியும். வானொலியில் முதியோர் நிகழ்ச்சியிற் பங்குபற்று வதற்காகத் தொடர்பு கிடைக்கும்வரை தொலைபேசியைக் காதுக்குள்ள வைத்துக்கொண்டு இருந்திருக்கிறீங்கள். அதனால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் உங்களோடு தொடர்பு கொள்ள முடியவில்லை. அதுதானே நடந்தது?" என்று சற்று அதட்டலான குரலிற் சத்தமிட்டுச் சொன்னாள். மருமகள் கோபத்துடன் இருக்கும் இந்த நேரத்திற் தானும் அதிகம் கதைத்தால் நிலமை சிக்கலாகிப் போய்விடும் என்பதை உணர்ந்த விசாலாட்சி பொறுமையாக, "ஆம் மருமகள், அதுதான் நடந்தது. எனக்குத் தெரியுமா இப்படி உங்களிடமிருந்து அவசரமாக அழைப்பு வரும் என்று. அதுகும் முதியோர் நிகழ்ச்சி நடக்கின்ற நேரம் பார்த்து வருமென்று யாரு மருமகள் கண்டது." என்று கூறினாள். இந்த நேரத்தில் அதிகம் கதைக்க விரும்பாத சஞ்சயா, "உங்களோடு கதைக்க இப்பொழுது நேரமில்லை. பிள்ளைக்கு காய்ச்சல் காயிது. உடனே மருந்து கொடுக்க வேண்டும். அப்புறம் உங்களுடைய மகன் வந்தபிற்பாடு எல்லா வற்றையும் கதைக்கிறேன்," என்று கூறிக்கொண்டு மருந்து இருக்கும் இடத்தை நோக்கி நடந்தாள். பிள்ளைக்கு சாதாரண காய்ச்சல்தான், மருந்தைக் கொடுத்து பிள்ளையை நித்திரையாக்கி விட்டாள்.

இப்பொழுது நேரம் பின்னேரம் ஆறுமணி. பிள்ளை உறங்கிக் கொண்டிருந்தது. கதவில் யாரோ தட்டும் சத்தம் கேட்டது. முரளியை ஆவலோடு எதிர்பார்த்திருந்த சஞ்சயா விரைந்து சென்று கதவைத் திறந்தாள். முரளியைக் கண்ட சஞ்சயா, "வாங்க! உங்களைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். உங்களுடைய அம்மா செய்திருக்கிற வேலையை என்னென்று வந்து கேளுங்கோ. நான் என்னுடைய வேலையை இடையில் விட்டிட்டு வரவேண்டி ஏற்பட்டுவிட்டது," என்று கூறவே, அதற்கான காரணத்தை அறிவதிற் கரிசனை கொண்டவனாய் முரளி, "அப்படி என்னப்பா நடந்தது? வேலையை விட்டிட்டு வாற அளவிற்கு. அம்மா என்ன செய்தவா? அம்மாவைக் குறை சொல்லாட்டி உனக்குப் பொழுது போகாதே," என்று மெத்தனமாய்க் கதைத்தான்.

இதைக் கேட்ட சஞ்சயா சிறிது பொறுமையை இழந்து, "நான் சீரியேசாகச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் என்னடாவென்றால் மெத்தனமாய்க் கதைக்கிறது மட்டுமல்ல, உங்களுடைய அம்மாவைக் குறைகூறாவிட்டால் எனக்குப் பொழுது போகாதென்றும் சொல்லுகின்றீர்கள். வரவர உங்களுக்கும் செருக்குக் கூடிப்போய்விட்டது," என்று கூறி முடிப்பதற்குள் முரளி, "தேவையற்ற கதையை விட்டிட்டு என்ன நடந்தது என்று சொல்லப்பா," என்றான். மாமியார் மீது இனந்தெரியாத வெறுப்புடனும் காழ்ப்புணர்ச்சியுடனும் இருந்த சஞ்சயா கிடைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியவளாய் "நம்ம பிள்ளை தமிழ்ச்செல்விக்கு சத்தியும் காய்ச்சலும் என்று குழந்தை பராபரிப்பு நிலையத்திலிருந்து எனக்குத் தொலைபேசி அழைப்பு வந்தது. நான் உங்களுடைய அம்மாவிடம் கூறிப் பிள்ளையை நிலையத்திலிருந்து வீட்டிற்கு அழைத்து வரும்படி சொல்லுவம் என்று வீட்டிற்குத் தொலைபேசி எடுத்தேன். அரை மணித்தியாலமாய் மூன்று தடவை முயற்சி செய்தேன். தொலைபேசி தொடர்ந்து வேலைசெய்துகொண்டே இருந்தது.. அப்புறம் நான் விடையத்தை எனது மேற்பார்வையாளரிடம் கூறி அனுமதி பெற்றுக்கொண்டு நிலையத்திற்குச் சென்று பிள்ளையைக் கூட்டி வந்து காய்ச்சல் மருந்து கொடுத்து இப்பொழுது நித்திரையாக்கி விட்டிருக்கிறேன். ஏன் தொலைபேசி அரை மணித்தியாலத்திற்கு மேலாக வேலைசெய்துகொண்டு இருந்ததென்று அம்மாவிடமே கேளுங்கோ" என்று கூறிமுடித்தாள்.

நிலமையை நன்கு அவதானித்துக் கொண்டிருந்த விசாலாட்சி உடனே மகனைப் பார்த்து "மருமகள் தொலைபேசி எடுத்த நேரம் வானொலியில் முதியோர் நிகழ்ச்சி போய்க் கொண்டிருந்தது. அதிற் பங்குபற்றுவதற்காகத் தொலைபேசியைக் காதுக்குள் வைத்துக் கொண்டிருந்தேன். அரை மணித்தியாலத் திற்குப் பிற்பாடுதான் எனக்குத் தொடர்பு கிடைத்தது. என்னுடைய கூடாதகாலம் மருமகளும் அந்த நேரம் பார்த்து தொலைபேசி எடுத்திருக்கிறார்," என்று கூறினாள்.

அம்மா பெரிய தப்பொன்றும் செய்யவில்லை என்பதை உணர்ந்து கொண்ட முரளி, "அடா.. இதுதானா நடந்தது. இதுக்குப் போய் மனதைப் போட்டுக் குழப்பாதையப்பா," என்று சொல்லி வாய் மூடுவதிற்குட் கதையைத் தொடர்ந்த சஞ்சயா, "உங்களுக்கு இது சின்ன விடயமாய்ப் படலாம். எனக்கு இது பெரிய விடயம், வேலையை விட்டிட்டு வந்த விடையம். இன்று பிள்ளைக்கு வருத்தம் கடுமையாக இல்லை. கடுமையாக இருந்திருந்தால் என்னுடைய பிள்ளையின் நிலமை என்னாவது? இதைப்பற்றிக் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்," என்று கோபத்துடன் கூறினாள்.

சஞ்சயா தன்னுடைய கடமையை அம்மா மீது சுமத்து வதற்கு முயற்சிக்கிறாள் என்று உள்ளூர உணர்ந்து கொண்ட முரளி, "பிள்ளைக்கு ஒன்றும் ஆகியிருக்கமாட்டாது. உன்னுடைய பிள்ளையை நீதான் பார்க்க வேண்டும். அதற்காக வேலையை விட்டிட்டு வருவது ஒன்றும் தப்பல்ல. பிள்ளைக்கு வருத்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுமையாயிருந்திருந்தால் பிள்ளையை டாக்டரிடம் கொண்டு போகவேண்டியது என்னுடையதும் உன்னுடையதும் கடமை. இது அம்மாவினுடைய வேலையல்ல. அம்மாவால அந்த வேலையைச் செய்யவும் முடியாது. இந்த விடையத்தில் அம்மா பெரிய தப்பொன்றும் செய்யவில்லை. நீ தொலைபேசி எடுத்த நேரம் வானொலியில் முதியோர் நிகழ்ச்சி போய்க் கொண்டிருந்த நேரம். அதனாலதான் இந்தப் பிரச்சினை உண்டானது. இதைப் பெரிதுபடுத்தாமல் பேசாமல் விடு சஞ்சயா,'' என்று அறிவுரை கூறும் தொனியிற் கூறினான்.

இவை யாவற்றையும் கேட்டுப் பொறுமையை இழந்த சஞ்சயா, "உங்களுடைய அம்மாவைப் பற்றி ஏதும் சொன்னால் உங்களுக்குப் பிடிக்காதே! நான் உங்களுடைய அம்மாவைப் பற்றி பெரிய குறை ஒன்றும் சொல்லவில்லை, நடந்ததைத்தான் சொன்னனான். இனிமேல் நான் ஒன்றும் சொல்லவில்லை. அவ ரி.வி., நாடகம், வானொலி, தொலைபேசி என்று பதினெட்டு மணித்தியாலமும் பார்த்துக்கொண்டும் கேட்டுக்கொண்டும் இருக்கட்டும். வீட்டில இருக்கிறதென்று ஓர் அந்தரம் ஆபத்திற்கு உதவ வேண்டாம்? நீங்களும் என்னை ஒன்றும் சொல்லவிடாமல் அம்மாவிற்காக வக்காலத்து வாங்கிக்கொண்டு இருங்கோ. இதெல்லாம் என் தலைவிதி,'' என்று கூறித் தன்னுடைய தலையில் அடித்துக் கொண்டாள்.

இவை யாவற்றையும் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் இருந்த விசாலாட்சி, "நீங்கள் என்னாற் சண்டை போடவும் வேண்டாம், தலையில் அடிக்கவும் வேண்டாம். நான் இனிமேல் வானொலி நிகழ்ச்சிகளிற் பங்குபற்றுவதில்லை என்று முடிவெடுத்து விட்டேன். ஆனபடியினால் என்னால இனிமேற் பிரச்சினை ஒன்றும் வரமாட்டாது. நீங்கள் அமைதியாகச் சந்தோசமாக இருங்கோ. இன்று நடந்த சங்கடத்திற்காக நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறேன்,'' என்று கூறினாள்.

அம்மா மனவேதனையோடு இந்த முடிவை எடுத்திருக்கிறா என்பதை உணர்ந்து கொண்ட முரளி: "அம்மா, நீங்களேன் வானொலி நிகழ்ச்சிகளில் பங்குபற்றாமல் விடவேண்டும்? நீங்களேன் மன்னிப்புக் கேட்க வேண்டும்? நீங்கள் ஒரு தப்பும் செய்ய வில்லையே. ஆனபடியினால் நீங்கள் ஒன்றையும் நிறுத்தவும் வேண்டாம், மன்னிப்புக் கேட்கவும் வேண்டாம். தப்பு எங்கள் பக்கம் தானுண்டு,'' என்று கூறினான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு மாறிமாறிக் கதைத்தாற் பிரச்சினை பெரிதாகிவிடும் என்பதை உணர்ந்து கொண்ட விசாலாட்சி, "முரளி, நீ எனக்காகக் கதைக்க, மருமகள் தனக்காகக் கதைக்க, சின்ன விடயம் அப்புறம் பெரிய பிரச்சினையாக மாறிவிடும். ஆனபடியினால் இந்த விடயத்தை இத்துடன் விட்டுவிடுங்கோ," என்று சமாதானப்படுத்தும் பாணியிற் கதைத்து முடித்தாள்.



## அங்கம் -7

இன்று சனிக்கிழமை முரளியும் சஞ்சயாவும் பிள்ளைகளும் வெளியிற் சென்றுவிட்டனர். விசாலாட்சி மட்டும்தான் வீட்டில் இருந்தாள். கதவில் யாரோ தட்டும் சத்தம் கேட்டது. சென்று கதவைத் திறந்தாள் விசாலாட்சி. எதிரில் நின்றது முரளியின் நண்பன் நடேசன். ஏற்கனவே நடேசனை விசாலாட்சிக்கு நன்கு தெரியும். இதற்கு முதலும் பல தடவை நடேசன் முரளியைச் சந்திப்பதற்காக இங்கு வந்து போயிருக்கிறான். விசாலாட்சியைப் பார்த்த நடேசன், "எப்படி அம்மா இருக்கின்றீர்கள்? நான் முரளியைச் சந்திப்பதற்காக வந்தனான். முரளி இருக்கிறானா?" என்று கேட்கவே, ஏதோ எதிர்பார்த்த விருந்தினரைக் கண்டது போன்ற மகிழ்ச்சியோடு விசாலாட்சி, "நான் நல்ல சுகமாயிருக்கிறேன் தம்பி. முரளியும் சஞ்சயாவும் பிள்ளைகளுமாய் வெளியில போய்விட்டார்கள். நான் மட்டும்தான் வீட்டில் இருக்கிறேன்," என்று கூறியவள் ஏதோ திடீரென ஞாபகத்திற்கு வந்தவள் போன்று நான் ஒருத்தி வாசலில் நிற்க வைத்துக் கதைத்துக் கொண்டு இருக்கிறேன். உள்ளுக்கு வாரும் தம்பி," என்று கூறவே, பதிலுக்கு நடேசன், "முரளி இல்லையென்றால் நான் அப்புறம் வாறன் அம்மா," என்று கூறினான். நீண்ட நாட்களாக நடேசனுடன் தனிமையில் கதைக்கவேண்டும் என்று எதிர்பார்த்துக் காத்திருந்த விசாலாட்சி இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடப்படாது என்று எண்ணிக்கொண்டு: "ஏன் தம்பி நடேசன், என்னோடு கதைக்கப்படாதோ? நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களோடு கதைக்க வேண்டுமென்று நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருக்கிறேன். இன்றைக்குத்தான் சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு. உள்ளுக்கு வாரும் தம்பி" என்று கூறவே, விசாலாட்சியின் விருப்பத்தை உதாசீனப்படுத்த விரும்பாத நடேசன் உள்ளுக்கு வந்து விசாலாட்சி வேண்டிக் கொண்டபடி சோபாவில் அமர்ந்து கொண்டான்.

கனடாவைப் பற்றிய சில விடையங்களை அறிந்து கொள்ள வேண்டுமென்று ஆவலாயிருந்த விசாலாட்சி, "தம்பி, கனடாவிற்கு வந்து எவ்வளவு காலம்?" என்று முதலாவது கேள்வியைப் போட்டாள். கேள்வியைப் பற்றி அதிக அக்கறை கொள்ளாத நடேசன், "நான் கனடாவிற்கு வந்து பதினைந்து வருடங்கள் முடிந்து பதினாறாவது வருடம் நடந்து கொண்டிருக்கின்றது அம்மா," என்று பதில் அளித்தான். அப்படியானாற் பையனுக்கு கனடாவைப் பற்றிய சகல விடயங்களும் தெரிந்திருக்கும் என்று ஊகித்துக் கொண்ட விசாலாட்சி, "அப்ப... தம்பிக்கு கனடாவைப் பற்றி சகல விடயங்களும் அத்துபடி. அப்படித்தானே தம்பி?" என்று ஏதோ ஒரு முக்கிய விடையம் பற்றி அறிவதற்கு ஆவலாயிருக்கும் தொனியிற் கேட்டாள். அவவின் கேள்வியிலிருந்து ஏதோவொரு முக்கிய விடயம் பற்றி அறிய விளைகிறார் என்பதை உணர்ந்து கொண்ட நடேசன் தான் வில்லங்கத்தில் மாட்டிக் கொள்ளாத படிக்கு, "எல்லா விடயங்களைப் பற்றியும் தெரியும் என்றில்லை அம்மா, அநேகமான விடயங்கள் பற்றித் தெரியும்," என்று கூறிய நடேசன், தொடர்ந்து, "அம்மாவிற்கு ஏதாவது முக்கிய விடையம் பற்றி அறிய வேண்டிக்கிடக்கோ?" என்று கேட்டுக் கதையில் முந்திக் கொண்டான்.

தனது எதிர்பார்க்கையை பையன் உணர்ந்து கொண்டான் என்று தனக்குட் சந்தோசப்பட்டுக் கொண்ட விசாலாட்சி, விடயத்தைத் தயக்கமில்லாமல் அவிட்டு விடலாம் என்று எண்ணிக் கொண்டு, "நான் கேட்கப்போகும் விடயத்தை எனது மகனுக்கோ அல்லது மருமகளுக்கோ ஒருபோதும் நீங்கள் சொல்லப்படாது தம்பி. அப்படியென்றாற்தான் நான் இந்த விடயத்தை உங்களிடம் கேட்கலாம்," என்று வாக்குறுதி கேட்கும் பாணியிற் கூறினாள்.

நிலமையை நன்கு புரிந்து கொண்ட நடேசன், "நீங்கள் இரகசியமாய் வைத்திருக்க வேண்டும் என்று எண்ணுகின்ற விடையத்தை நான் ஏன் அம்மா யாருக்கும் சொல்லப் போகிறேன். நான் அப்படிப்பட்ட ஆளில்லை. அம்மாவையும் மகனையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழுவி விடுகின்ற வேலையை நான் ஒருபோதும் செய்யமாட்டன். நீங்கள் பயப்படாமல் கேளுங்கோ," என்று அழுத்தம் திருத்தமாய்க் கூறினான். நடேசனின் நேர்மையான போக்கைப் புரிந்து கொண்ட விசாலாட்சி, "என்னுடைய மகன்தான் தம்பி என்னை ஸ்பொன்சர் பண்ணிக் கூப்பிட்டது. நான் கனடாவிற்கு வந்த பிற்பாடு என்னைக் கொண்டு சமூகநல உதவிக்கு விண்ணப்பம் செய்து இப்பொழுது மாதாமாதம் பணம் பெறுகின்றார்கள். நான் மாதாமாதம் ஒரு துண்டில கையொப்பம் வைத்துக் கொடுப்பதைவிட வேறொன்றும் எனக்குத் தெரியாது. இதைப்பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா தம்பி?" என்று தாழ்மையான பயபக்தியோடு கூடிய தொனியிற் கேட்டாள்.

விசாலாட்சியின் எதிர்பார்க்கை முழுவதையும் புரிந்து கொண்ட நடேசன், "அப்படியானால் உங்களுக்கு மாதாமாதம் ஆயிரம் டொலருக்கு மேல் வரும், அத்தோடு மருந்து வாங்குவதற்கு மருந்துத் துண்டும் வரும். அந்தத் துண்டைக் கொடுத்து இலவசமாக மருந்து வாங்கலாம். வேறு ஏதும் அறிய வேண்டுமே அம்மா?" என்று வினாவினான். இதைக் கேட்ட விசாலாட்சி, "ஆயிரம் டொலர் என்றால் கனடாவில் பெரிய காசு தானே தம்பி. இதைப்பற்றி நான் ஏன் கேட்கிறேன் என்றால், என்னுடைய மகள் தமிழீழத்தில் வவுனியாவில் இருக்கின்றாள். அவளுக்கு மூன்று பிள்ளைகள். மருமகன் கல்விக் கந்தோரில் வேலை செய்கிறார். நாடு இப்ப இருக்கிற நிலமையில வாழ்க்கைச் செலவு மலைமாதிரி உயர்ந்துவிட்டது. அவர்களுடைய வருமானத்தைக் கொண்டு குடும்பத்தைக் காப்பாற்ற முடியாமல் பெரிய பாடுபடுவதாய்க் கடிதம் போட்டிருந்தாள். பெத்த மனத்திற்கு அவர்களுடைய பாடுபறுவைக் கேள்விப்பட்டதும் பெரும் வேதனையாயிருக்கு. இங்கு நாங்கள் இருக்கிற சாப்பாடுகளைச் சாப்பிட முடியாமல் இருக்கிறோம். அங்கு பேரப்பிள்ளைகள் சாப்பாட்டுக்கு அல்லற்படுகின்றார்கள் என்பதைக் கேட்கும்பொழுது மனதிற்குப் பெரிய சங்கடமாயிருக்கு.

அவர்களுடைய கடிதத்தைப் பார்த்த நாளிலிருந்து என்னால சரியாகச் சாப்பிட முடிவதில்லை. நிலமையை மகனிடம் எடுத்துக்கூறி மகளுக்கு கொஞ்சப் பணம் அனுப்பிவைக்கச் சொல்லுவம் என்ற எண்ணத்தோடுதான் இருக்கிறேன். அதற்கு முதல் மகனுடைய பண நிலமையை அறிவம் என்றுதான் உங்களிடம் இதைப்பற்றிக் கேட்டனான் தம்பி. மகளுக்குப் பணம் அனுப்பச் சொல்லும் விடையத்தை மருமகள் கேள்விப்பட்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தோசப்படமாட்டா. அதுதான் யோசினையாய் இருக்கின்றது,'' என்று கூறினாள்.

விசாலாட்சியின் நிலமையைப் புரிந்துகொண்ட நடேசன், "நீங்கள் கூறுவது உண்மைதான் அம்மா. நீங்கள் கேட்கப்போகும் விடையத்தில் நியாயமும் தர்மமும் இருக்கின்றபடியினால் பயப்படாமல் கேளுங்கோ. முரளி தனது தமக்கை குடும்பத்திற்கு உதவி செய்யப் பின் நிற்கமாட்டான். அவனைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும்,'' என்று விசாலாட்சிக்கு மனோதைரியத்தைக் கொடுக்கும் பாணியிற கூறினான். இவற்றை எல்லாம் கேட்டு மனதைத் திடப்படுத்திக் கொண்ட விசாலாட்சி மகன் சந்தோச மாயிருந்த ஒரு நேரத்தைப் பார்த்து, "தம்பி முரளி, அக்காவிட மிருந்து கடிதம் வந்திருக்கு,'' என்று கூறவே, அதைக் கேட்ட முரளி, "என்ன கடிதத்தில் எழுதியிருக்கிறா? சுகமாக இருக்கின மாமே?'' என்று கேட்டான். சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த விசாலாட்சிக்கு இந்த இரண்டு கேள்விகளும் வாய்ப்பாக அமைந்தன. உடனே விசாலாட்சி, "சுகமாயிருக்கினமாம். ஆனால்.....'' என்று இழுக்கவே, ஏதோ ஒரு முக்கிய விடையத்தைச் சொல்ல முனைகிறா என்பதை உணர்ந்து கொண்ட முரளி, "ஆனால் என்னவாம் அம்மா''? என்று கேட்கவே, மனதை வலுப்படுத்திக் கொண்ட விசாலாட்சி, "ஆனால் பண நெருக்கடியாம். பண உதவி செய்யும்படி கேட்டு எழுதியிருக்கிறாள். மூன்று பிள்ளைகளும் தாயும் தகப்பனும் ஐந்து சீவன்கள் அவர்களுடைய உழைப்பில சீவிப்பதென்றாற் கடினமான காரியம்தானே தம்பி. அங்கு சாமான்கள் விற்கப்படுகின்ற விலைக்கு அவர்களுடைய உழைப்பு எந்த மூலைக்குப் போதும். சாப்பாட்டுக்கே பெரிய இடஞ்சற் படுகினமாம். கேட்க மனதிற்கு வேதனையாயிருக்குத் தம்பி. கொஞ்சப் பணம் அனுப்பிவை தம்பி,'' என்று சொல்லி வாய்மூடவே, இவ்வளவு கதையையும் கேட்டுக் கொண்டிருந்த சஞ்சயா, "நான் நினைச்சேன், அம்மாவும் மகனும் கதைக்க வெளிக்கிட்ட பொழுது ஏதோ ஒரு பக்கம் இடியப் போகுது என்று. ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, ஆளைக்கடித்த கதையாக இப்ப எல்லாம் முடிஞ்சு மகளுக்குப் பணம் சேர்க்கும் படலத்தில் அம்மா இறங்கி இருக்கிறா. இது எங்க போய் முடியப் போகுதோ ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்,'' என்று பொரிந்து தள்ளினாள்.

மனைவி சஞ்சயா கூறிய யாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த முரளி, "ஏன் அம்மா, இப்ப மூன்று மாதத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல்தானே நூறு டொலர் அனுப்பினனான். அதற்குள்ள மறுபடியும் அனுப்புவதென்றால் இங்கு பணம் என்ன விளையுதா அம்மா. அங்க இருக்கிற சனங்களுக்கு இங்கு பணம் எப்படி வருகின்றது என்பது தெரியாததால், பணம் அனுப்பு பணம் அனுப்பு என்று அதுகள் கேட்கிதுகள். ஆனால் இங்கே இருக்கின்ற உங்களுக்கு நாங்கள் எப்படி பணம் உழைக்கிறம் என்று தெியும்தானே, தெரிந்து கொண்டும் பணம் அனுப்பு பணம் அனுப்பு என்று சொன்னால் நான் எங்கிருந்தம்மா பணம் எடுக்கிறது?" என்று கூறினான்.

இதை அவதானமாய்க் கேட்டுக் கொண்டிருந்த விசாலாட்சி, "நான் கேட்கிறேன் என்று குறை நினைக்காத தம்பி, என்னுடைய பெயருக்கு மாதாமாதம் ஆயிரம் டொலருக்கு மேல் சமூகநல உதவிப்பணம் வருகுதல்லவோ. இந்த மாதம் வருகின்ற ஆயிரம் டொலரில் ஐந்நூறு டொலரை அக்காவுக்கு அனுப்பலாம் தானே தம்பி," என்று கூறவே, இதைக் கேட்டுக் கொண்டிருந்த சஞ்சயாவிற்கு மாமியாரின் இந்தக் கேள்வி புண்ணில புளிப்பத்தியது போன்று இருந்தது. உடனே, "நான் ஏற்கனவே சொன்னேன் எங்கேயோ ஒரு பக்கம் இடியப் போகுதென்று. நல்லாய்த்தான் இருக்கு நன்னி சுட்ட பணியாரம். வருமானக் கணக்கும் பார்த்து அனுப்ப வேண்டி தொகையும் சொல்லுகிறா, பலே! பலே!! என்று சொல்லி கையைத் தட்டி எக்காளச் சிரிப்பு சிரித்தாள்.

அம்மாவின் கதையைக் கேட்டு ஆச்சரியமடைந்த முரளி, "யார் அம்மா சொன்னது உங்களுக்கு மாதாமாதம் ஆயிரம் டொலருக்கு மேல் பணம் வருகிறதென்று? நீங்கள் இப்ப எங்களுடைய உள்விவகாரங்களில் ஊடுருவி ஆராட்சி செய்கிற அளவிற்குத் தொடங்கிவிட்டீர்கள். மகளிலும் பேரப்பிள்ளைகளிலும் உள்ள பாசம் உங்களை இந்த அளவிற்கு செயற்பட வைக்கிது. ஏன் அம்மா நானும் உங்களுடைய மகன் தானே? என்னுடைய பிள்ளைகளும் உங்களுக்குப் பேரப்பிள்ளைகள்தானே. நாங்கள் இந்த நாட்டில எவ்வளவு பாடுபட்டு பணம் உழைக்கிறம் என் பதைப் பார்த்துக் கொண்டுதானே இருக்கின்றீங்கள். அப்படி யிருந்தும் ஏன் அம்மா உங்களுடைய மூளை இப்படி வேலை செய்கின்றது? என்னையும் உங்களுடைய பிள்ளையாக நினைச்சுப் பாரம்மா," என்று மனைவியின் கதைக்கு வக்காலத்து வாங்குவது போன்று கூறினான்.

எல்லாவற்றையும் உள்வாங்கிக் கொண்ட விசாலாட்சி சற்று உணர்ச்சிவசப்பட்டு, "நீ என்னுடைய பிள்ளையென்று நினைத்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் நான் கனடாவிற்கு வந்தனான். நீங்கள் இந்த நாட்டிற் கடினமாக உழைக்கின்றீங்கள் என்பது எனக்கு நன்றாகப் புரிகின்றது. நீங்கள் இங்கு மாடாக உழைத்தாலும் வேண்டிய எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்துகொண்டு வசதியாக வாழுகின்றீர்கள் என்பது வெளிப்படையான உண்மை. இந்த நிலையில் என்னுடைய பெயருக்கு வருகின்ற ஆயிரம் டொலர் பணத்தில் ஐந்நூறு டொலரை அக்காவிற்கு அனுப்பும்படி கேட்டதில் என்ன தப்பு இருக்கின்றது? ஒவ்வொரு மாதமும் அனுப்பென்றா கேட்டனான், இல்லையே! மூன்று நான்கு மாதத்திற்கு ஒரு தடவை அனுப்பலாம் தானே.

அவளும் புருசனும் பிள்ளைகளும் பொருளாதார நெருக்கடியில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்வதில் என்ன தப்புத் தம்பி, இதைச் சொல்லப் போனால் மருமகள் ஏதோ குடிமுழுகிப் போனது மாதிரிக் கதைக்கிறா. உன்னுடைய கதையைப் பார்த்தால் அவவிற்கு ஒத்து ஊதுகிறது போலத் தோணுது," என்று கதையைச் சொல்லி முடிப்பதற்குட் குறுக்கிட்ட சஞ்சயா, "பார்த்தீங்களா! பார்த்தீங்களா!! உங்கம்மா வினுடைய மன அழுத்தத்தையும், கதையினுடைய போக்கையும். உங்களையே எதிர்த்துக் கதைக்கிற அளவிற்குத் துணிந்து விட்டா. அவவினுடைய கதையைப் பார்த்தால் அவ சொல்லுகின்றபடி நாம் நடக்கவேணும் போலத் தோணுது. அம்மா சந்தோசமாய் இருக்க வேண்டும் என்று வானொலி, நாடகம், முதியோர் நிகழ்ச்சிகள் என்று எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தீங்கள். இவற்றின் பெறுபேற்றை இப்ப அனுபவிக்க வேண்டியுள்ளது. அவ எல்லாவற்றையும் தெரிந்துகொண்டு இப்ப நமக்கே கணக்குக் காட்டுகின்ற அளவிற்கு வளர்ந்து விட்டா. இப்ப என்ன செய்யப் போறீங்கள்?" என்று முரளியைப் பார்த்துக் கேட்டாள். இவ்வளவு காலமும் மனைவியைக் கண்டித்து வந்த முரளி இப்பொழுது அம்மாவின் போக்கினால் அம்மாவைக் கண்டிக்கும் விடையத்தில் மனைவியுடன் சேர்ந்து கொண்டான் என்றால் மறுப்பதற்கில்லை.

"மயிரோடு உறவாடிய நட்பு பொருளோடு உறவாடக் கெடும்" என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு. இது ஒரு பழமொழி மட்டுமல்லாமற் பெரிய வாழ்க்கைத் தத்துவத்தை வெளிக்கொணர்ந்து நிற்கின்றது என்றால் சாலவும் பொருந்தும். விசாலாட்சி மகனுடைய பணவிடையத்தில் தலையீடு செய்தபொழுது தாய்ப்பிள்ளைப் பாசமே ஆட்டம் காணத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கிவிட்டது என்பதை இங்கு காணக்கூடியதாக இருக்கின்றது.



## அங்கம் -8

இன்று சனிக்கிழமை, விடுமுறைநாள். மதிய உணவை முடித்துக் கொண்டு முரளியும் சஞ்சயாவும் பிள்ளைகளும் தமிழ்ச் சினிமாப்படம் பார்க்கச் செல்வதற்குத் தயாரானார்கள். சினிமாவிற்குப் புறப்படும் தறுவாயில் முரளி, "அம்மா, நாங்கள் தமிழ்ப்படம் பார்க்கப் போகிறம், நீங்களும் வாறீங்களோ?" என்று கேட்டான். படம் பார்க்கப் போவதற்கு விருப்பம் இருந்தபொழுதும், அன்று விசாலாட்சிக்கு உடல் நலம் குறைவாயிருந்தபடியினால், "எனக்கு நல்ல சுகமில்லை தம்பி. தலைச்சுற்றாயிருக்கிது, இரத்த அழுத்தம் கூடிவிட்டுதோ என்னவோ தெரியவில்லை. ஆனபடியினால் நான் இன்று வரவில்லை. நீங்கள் போயிட்டு வாருங்கோ," என்றாள். இதைக் கேட்ட மருமகள், "மகளுக்குப் பணம் அனுப்பவில்லை என்ற கவலையில் அம்மாவிற்கு இரத்த அழுத்தம் கூடிவிட்டு தாக்கும்," என்று மாமியாருக்குக் கேட்காதபடிக்கு முரளியிடம் புறுபுறுத்தாள்.

மனைவியினுடைய கதைக்கும் ஆட்சேபனை தெரிவிக்க விரும்பாத முரளி, "அப்படியென்றால் அம்மா, கட்டிலிற் படுத்து ஓய்வு எடுங்கோ. நாங்கள் போயிட்டு வாறம்," என்று கூறவே, பதிலுக்கு விசாலாட்சி, "போயிட்டு வாருங்க தம்பி," என்று கூறிவிட்டு அப்புறம் சென்று கட்டிலிற் படுத்துக்கொண்டாள். நேரம் செல்லச் செல்ல தலைச்சுற்று கூடிச் சென்றது. சாப்பிட்ட சாப்பாடு சமிக்காமற் சாதாரண வயிற்றுவலியும் ஆரம்பித்தது. வீட்டில் யாரும் இல்லாத நேரத்திற் சுகயீனம் கூடிச்சென்றதை உணர்ந்த விசாலாட்சிக்கு பயம் பீடிக்கத் தொடங்கியது. திடீரென்று வயிற்றைப் புரட்டிக் கொண்டு சத்தி வருமாப்போல் இருந்தது. குளியலறைக்குச் சென்று சிங்கில் சத்தி எடுக்கலாம் என்ற எண்ணத்துடன் எழும்பிக் கட்டிலில் இருந்தபொழுது தலைச்சுற்று மேலும் அதிகரித்தது. எழும்பிச் சென்றாற் தலைசுற்றி விழுந்து விடுவமோ என்ற பயத்துடன் யோசித்துக் கொண்டு இருந்தபொழுது எதிர்பாராத விதமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென்று சத்தி வந்துவிட்டது. கட்டிலில் இருந்தபடியே காப்பெற்றில் சத்தி எடுத்துவிட்டாள். எடுத்த சத்தியைச் சுத்தம் பண்ணுவதற்கு உடற் சோர்வும் தலைச்சுற்றும் இடம்கொடுக்க வில்லை. அப்படியே கட்டிலில் உறங்கிவிட்டாள்.

சினிமா பார்த்துவிட்டுத் திரும்பிய முரளியும் மனைவியும் கதவைத் திறந்து கொண்டு வீட்டிற்குள் நுழைந்தபொழுது ஏதோ துர்நாற்றம் வருவதை உணர்ந்த முரளி, "என்னப்பா ஏதோ மணக்கிது," என்று மனைவியைப் பார்த்துக் கூறவே, அதைக் கேட்ட சஞ்சயாவும், "ஓம் அப்பா, ஏதோ சத்தி மணக்குமாப்போல் மணக்கிது", என்று கூறினாள். உடனே முரளி, "அம்மா, அம்மா," என்று கூப்பிட்டான். ஒரு சத்தமும் வராதபடியால் அம்மாவினுடைய அறைக்கு விரைந்து சென்று பார்த்தான். காப்பெற்றில் ஒரே சத்தி. உடனே தாயாரின் நிலைமையை அறிய முற்படாமல் மனைவியைப் பார்த்து, "சஞ்சயா, இங்க வந்து பாரேன்! காப்பெற்றில ஒரே சத்தி. நீ சத்தி மணக்கிது என்று சொன்னது சரிதான். சத்தியையும் எடுத்துப்போட்டு ஆள் நல்ல நித்திரை அடிக்கிறா," என்று கூறவே, சஞ்சயா அவசரமாய்ப் போய்ப் பார்த்துவிட்டு, "ஆ!! கடவுளே! காப்பெற்றில சத்தி எடுத்து வைச்சிருக்கிது. இந்தக் கிழவியை என்ன செய்யிறது. செய்யிறதையும் செய்துபோட்டு ஒய்யாரமாய் நித்திரை கொள்ளுறா. முதலில் ஆளை எழுப்புங்கோ. எழுப்பி, சத்தியைச் சுத்தம் பண்ணச் சொல்லுங்கோ. இதை வேறு யாரு சுத்தம் பண்ணுகிறது. இந்தக் கிழவிக்கு எல்லாம் நீங்கள் கொடுத்த இடம். இப்ப அனுபவிச்சுப் பாருங்கோ," என்று கோபத்தோடு கூறினாள்.

மனைவியின் பாட்டைத் தொடர்ந்து முரளி தாயைத் தட்டி எழுப்பினான். நித்திரையால் விழித்துக் கொண்ட தாயைப் பார்த்து, "என்ன வேலை அம்மா, செய்து வைத்திருக்கிறாய்? சத்தி வந்தால் குளியலறைக்குச் சென்று அங்கு எடுக்கத் தெரியாதே? நீ என்ன குழந்தைப்பிள்ளையே? வரவர உன்னுடைய ஆய்க்கினை பெரும் பிரச்சினையாய் வந்துகொண்டிருக்கு," என்று கூறி முடிப்பதற்குள், கதையைத் தொடக்கிய சஞ்சயா, "இந்தக் கிழவி வேண்டுமென்று இந்த வேலை செய்து வைத்திருக்கு. மகளுக்குப் பணம் அனுப்பவில்லை என்ற கோபத்தில, நமக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டுமென்று திட்டம் போட்டு நாம வீட்டில இல்லாத நேரம் பார்த்துச் செய்திருக்கு. எனக்கு வாற கோபத்திற்கு இந்தக்கிழவியை என்ன செய்யிறது என்று தெரியவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிச்சுக் கொல்லிற ஆத்திரம் வருகிது," என்று கத்தினாள்.

தன்னுடைய உடல் நிலைமையைப் புரிந்து கொள்ளாமல் இவர்கள் இப்படிக் கதைக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொண்ட விசாலாட்சி, "வாயில வந்தபடியெல்லாம் பேசாதீங்கோ, எனது உடல் நிலைமையைக் கொஞ்சம் உணர்ந்து பாருங்கோ. நீங்கள் நினைப்பதுபோன்று நான் வேணுமென்று செய்யவில்லை. எனக்கு எழும்பிப்போகமுடியாத தலைச்சுத்து. எழும்பிப் போனால் விழுந்துவிடுவேனோ என்ற பயத்தில் இருந்தபொழுது திடீரென்று எதிர்பாராத விதமாகச் சத்தி வந்துவிட்டது. எடுத்த சத்தியை துப்பரவு செய்யும் அளவிற்கு என்னால முடியவில்லை. அத்தோடு படுத்தாற்போல நித்திரையாய்ப் போய்விட்டேன். இன்னும் தலைச்சுத்து குறையவில்லை. நீங்கள் ஒருவரும் சத்தியைத் துப்பரவு செய்ய வேண்டாம். தலைச்சுத்து குறைந்தவுடன் நானே துப்பரவு செய்கிறேன். உங்களுக்கு மணத்தாற் கதவைச் சாத்திவிட்டுப் போயிருங்கோ," என்று அமைதியாகக் கூறினாள்.

இவை யாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த சஞ்சயா, "சொன்ன உடனே ரோசம் பத்திவிட்டது. செய்யிறதையும் செய்துபோட்டுக் கதைக்கு மட்டும் குறைச்சல் இல்லை. காப்பெற் கிளீனிங் செய்யாமல் இந்த மணத்துடன் இந்த வீட்டில் மனிதர் இருக்கலாமா? ஏதோ அம்மாவும் மகனும் பட்டுப்பாருங்கள்," என்று கூறிக்கொண்டு கதவை அடித்துச் சாத்திவிட்டுச் சென்றாள். அப்புறம் முரளி, "உன்னால அம்மா, என்னுடைய நின்மதியும் கெட்டுப் போய்ச்சு. உதவி செய்யாவிட்டாலும் உபத்திரம் கொடுக்காமல் இருப்பாய் என்று பார்த்தால், நீ என்னடாவென்றால் உபத்திரக்காரியாய் மாறி இருக்கிறாய்," என்று கூறிக்கொண்டு அவனும் கதவை அடித்துச் சாத்திவிட்டுச் சென்றான். தன்னுடைய நிலமையை எண்ணி விசாலாட்சி மனதிற்குள் அழுதுகொண்டு மறுபடியும் படுத்துக்கொண்டாள்.

மாதங்கள் சில சென்றன. இன்று திங்கட்கிழமை, வேலைநாள். வழமையாக சஞ்சயா காலை ஐந்தரை மணிக்கும் முரளி ஆறுமணிக்கும் படுக்கையால் எழுந்து வேலைக்குச் செல்வதற்கான ஆயத்தங்களைச் செய்வார்கள். இன்று ஆறுமணி ஆகியும் சஞ்சயா படுக்கையை விட்டு எழும்பவில்லை. ஆறுமணிக்குப் படுக்கையை விட்டு எழுந்த முரளி சஞ்சயா இன்னும் படுத்திருப்பதைப் பார்த்து, "சஞ்சயா ஆறுமணி ஆகிவிட்டதப்பா, எழும்பப்பா எழும்பு," என்று சொல்லித் தட்டி எழுப்பினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழித்துக் கொண்ட சஞ்சயா, "எனக்குச் சுகமில்லை அப்பா, நான் இன்றைக்கு வேலைக்குப் போகமுடியாது. காய்ச்சற் குணமாயிருக்கு, தலை சுத்துது, சத்தி வருகிறது மாதிரி இருக்கு, எழும்ப முடியுதில்லை. மனைவியின் கதையைக் கேட்டு சற்று பரபரப்படைந்த முரளி, "என்னப்பா சொல்லுகிறாய்! அப்படியானால் அவசர வைத்தியப் பிரிவிற்கு போவமே?" என்று கூறி வாய் மூடுவதற்கிடையிற் சத்தி வரப்போவதை உணர்ந்த சஞ்சயா, "சத்தி வரப்போகிதப்பா, என்னை குளியல் அறைக்குப் பிடித்துக்கொண்டு போங்கோ. என்னால நடக்க முடியாது, தலை சுத்துது, ஐயோ, அம்மா," என்று அழுதுகொண்டு படுக்கையை விட்டு எழுந்தபொழுது திடீரென்று சத்தி எடுத்துவிட்டாள். "என்னுடைய தலையைப் பிடியுங்கப்பா! பிறகும் சத்தி வரப்போகின்றது, ஐயோ, அம்மா," என்று அழுதுகொண்டு மீண்டும் சத்தி எடுத்தாள். தலையை இறுக்கிப் பிடித்துக் கொண்ட முரளி, "காப்பெற்றைப் பற்றி யோசிக்காமல் வடிவாய்ச் சத்தியை எடுங்கோ. காப்பெற்றைச் சுத்தம் பண்ணலாம். காப்பெற் முக்கியமில்லை. உங்களுடைய உடல் நலந்தான் முக்கியம்," என்று சொல்லிக் கொண்டு நன்றாகச் சத்தி எடுப்பதற்கு உதவினான்.

சத்தி எடுத்து முடிந்த பிற்பாடு வாய் கழுவத் தண்ணீர் கொடுத்து, அப்புறம் படுக்கையிற் படுக்க வைத்துவிட்டுச் சத்தி எடுத்த இடத்தை நன்றாகச் சுத்தம் செய்தான். சுத்தம் செய்து முடிந்ததும் கோப்பி தயாரித்துக் கொண்டு வந்து, "சஞ்சயா, இந்தாங்கப்பா கோப்பி, இந்தக் கோப்பியைக் குடியுங்கோ. இந்தக் கோப்பியைக் குடித்தால் மேலும் சத்திவராது. தலைச்சுத்தும் நின்றுவிடும்," என்று கூறிக் கப்பைப் பிடித்துக் கொண்டு கோப்பியைக் குடிக்க உதவினான்.

உடனே சஞ்சயாவை டாக்டரிடம் கொண்டு செல்ல வேண்டும் என்று தீர்மானித்த முரளி, "நானும் இன்றைக்கு வேலைக்கு லீவு போடப்போகிறேன். நாமள் தாமதிக்காமல் அவசர வைத்தியப் பிரிவிற்குப் போவம்," என்று கூறவே, அவசர வைத்தியப் பரிவிற்குப் போகத் தேவையில்லை என்பதை உணர்ந்த சஞ்சயா, "அங்கு போகத் தேவையில்லையப்பா, குடும்ப டாக்டரிடம் போவம். அவர் என்ன சொல்லுகிறார் என்பதைக் கேட்டு அப்புறம் என்ன செய்யலாம் என்று தீர்மானிப்பம். சத்தி எடுத்த பிற்பாடு ஓரளவிற்குச் சுகமாயிருக்கு. தலைச்சுத்துத்தான் இருக்கிறது. அதுகும் போகப்போகச் சரியாகிவிடும் என்று நினைக்கிறேன். அவசர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியப் பிரிவிற்குப் போனால் மணித்தியாலக் கணக்கிற் தூங்க வேண்டும். அது உள்ள வருத்தத்தையும் கூட்டிவிடும். நான் மெல்ல மெல்ல வெளிக்கிடுகிறேன். நீங்கள் பிள்ளைகளை வெளிக்கிடுத்தி அம்மாவோடு அனுப்பிவிடுங்கோ. அம்மா பிள்ளைகளை விட்டிட்டு வந்தவுடன் நாமள் புறப்பட்டுப் போவம்,'' என்று கூறவே முரளி எல்லா ஆயத்தங்களையும் செய்து பிள்ளைகளை அம்மாவுடன் சிறுவர் பராபரிப்பு நிலையத்திற்கு அனுப்பிவைத்தான். அனுப்பி வைத்த பொழுது, "அம்மா, நான் சஞ்சயாவைக் குடும்ப டாக்டரிடம் கூட்டிப்போக வேண்டும் தாமதிக்காமல் கெதிப்பண்ணி வாருங்கோ,'' என்று கூறவே, விசாலாட்சி, "ஓம் தம்பி, எனக்கு நிலமை புரியுது. நான் தாமதிக்காமல் உடனே வாறன். நீங்கள் வெளிக்கிட்டு ஆயத்தமாயிருங்கோ,'' என்று கூறிவிட்டுப் பேரப்பிள்ளைகளைக் கூட்டிச் சென்றாள்.

சிறிது நேரத்திற் கதவில் யாரோ தட்டும் சத்தம் கேட்டது. அம்மாதான் வந்துவிட்டா என்று எண்ணிக் கொண்டு கதவைத் திறந்தான் முரளி. அம்மாவேதான். "என்னம்மா, இன்றைக்கு இவ்வளவு கெதியாய்த் திரும்பி வந்துவிட்டீங்கள். மருமகளுக்கு சுகயீனம் என்றதும் அம்மாவிற்கு உசார் வந்துவிட்டது,'' என்று கூறவே, "ஆபத்திற்கு உதவாமல் இருக்கலாமே தம்பி, அதுதான் கெதியாய்த் திரும்பி வந்தனான். நீங்கள் மேலும் தாமதிக்காமற் புறப்பட்டுப் போங்கோ. மருமகளைக் கவனமாய்க் கூட்டிப்போ தம்பி,'' என்று அன்பு கலந்த தொனியிற் சொன்னாள். மேலும் தாமதிக்க விரும்பாத முரளி, "சஞ்சயா, அம்மா வந்துவிட்டா, நீங்கள் வெளிக்கிட்டு வாங்கோ,'' என்று அறையில் நின்ற சஞ்சயாவிற்குக் குரல் கொடுத்தான். சஞ்சயாவை கையிற் பிடித்துக் கூட்டிச் சென்று முரளி காரில் ஏற்றிய பொழுது அதைப் பார்த்துக் கொண்டு நின்ற விசாலாட்சி, "கவனமாய்ப் போயிட்டு வாங்கோ மருமகள்,'' என்று கூறவே, பதிலுக்கு முரளி, "போயிட்டு வாறம் அம்மா,'' என்று கூறிக்கொண்டு காரைச் செலுத்தினான். கதவைச்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்திக் கொண்டு உள்ளுக்கு வந்த விசாலாட்சி மருமகளின் சுகயீனத்தையிட்டுக் கவலை அடைந்தபோதும், தனக்கு அதேமாதிரிச் சுகயீனம் வந்தபொழுது இந்தப் பிள்ளைகளால் அதன் வேதனையை உணர முடியவில்லையே என்று எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டாள்.



## அங்கம் 9

**வி**சாலாட்சி கனடாவிற்கு வந்த ஆரம்பகாலங்களில் நியாயத்தின் பக்கம் நின்று அம்மாவிற்காகக் கதைத்தும் அம்மாவிற்காகச் செயற்பட்டும் வந்த முரளி காலம் செல்லச் செல்ல அநியாயத்தின் பக்கம் நின்று மனைவியுடன் சேர்ந்து செயற்படுவதை நன்கு அவதானிக்க விசாலாட்சி தவறவில்லை. குறிப்பாக மகளுக்குப் பணம் அனுப்பும்படி கேட்டு சமூகநலப் பணத்தைப் பற்றிக் கதைத்த பிற்பாடு முரளியின் போக்கிற் பெரும் மாற்றம் ஏற்பட்டிருந்ததை விசாலாட்சியால் நன்கு அவதானிக்க முடிந்தது. இது விசாலாட்சிக்குப் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது. விசேடமாகத் தனது முதுமை நிறைந்த எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்த பொழுதெல்லாம் பெரும் பீதியும் கவலையும் அவளுக்கு ஏற்பட்டது என்றால் மிகையாகாது.

தனது கவலையை யாரிடம் சொல்லி ஆறுவதென்றும், யாரிடம் ஆலோசனை கேட்பதென்றும் எண்ணி மனவருத்தம் அடைந்து கொண்டிருந்த வேளையிற் கதவில் யாரோ தட்டும் சத்தம் கேட்டது. உடனே சென்று கதவைத் திறந்தாள் விசாலாட்சி. எதிரில் நின்றது முரளியின் நண்பன் நடேசன். உடனே விசாலாட்சி, "தம்பி நடேசன்! நீங்களா!! நான் யாரோ என்னவோ என்று யோசித்தேன். வாங்க தம்பி, வாங்க உள்ளுக்கு. வந்து இந்தச் சோபாவில் இருங்கோ. கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்துள்ளது என்பதைப் போல, நான் என்னுடைய சோதனை களையும் வேதனைகளையும் யாரிடம் சொல்லி ஆறலாம் என்று எண்ணிக் கொண்டிருக்க நீங்கள் வாறீங்கள்," என்று சொல்லவே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைக் கேட்ட நடேசன், "உங்களுக்கு என்னம்மா துன்பமும் துயரமும்? மகனும் மருமகளும் வங்கியில் வேலை செய்கிறார்கள், கொழுத்த சம்பளம். இரண்டு பேரப்பிள்ளைகள். எல்லாரோடும் சந்தோசமாய் இருக்கவேண்டிய உங்களுக்கு என்னம்மா குறை.? நீங்கள் செல்லப்பிள்ளைதானே அம்மா," என்று சொல்லி முடிப்பதற்குள் குறுக்கிட்ட விசாலாட்சி, "முட்டையிட்ட கோழிக்குத் தான் தெரியும் பூத்தெரிச்சல். பட்டவனுக்குத்தான் தெரியும் துன்பத்தின் வேதனையை. எனது வேதனைகளைச் சொன்னால் நீங்கள் நம்புவீங்களோ என்பதும் எனக்குச் சந்தேகமாயிருக்கு. இருந்தும் சொல்லித்தான் ஆகவேண்டும்...," என்று கதையை இழுக்க, அம்மாவிற்கு ஏதோ பிரச்சினை இருக்குத்தான் என்பதை உணர்ந்துகொண்ட நடேசன், "என்னம்மா சொல்ல வாறீங்க?" என்றான்.

சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த விசாலாட்சி, "தம்பி நடேசன், நான் சொல்லப் போறதை வடிவாய்க் கேளுங்கோ. என்னுடைய முதுமை நிறைந்த எதிர்காலத்தைப் பற்றி எண்ணிப் பார்க்கும் பொழுது எனக்குப் பயமாயிருக்கு. நான் கனடாவிற்கு வந்தகாலத்தில் என்னுடைய மகன் நியாயத்தின் பக்கம் நின்று என்னோடு ஒத்துப் போனான். இப்பொழுது மனைவியினுடைய கதையைக் கேட்டுக்கொண்டு என்னை எடுத்தெறிந்து நடக்கிறான். மருமகளும் தனது மாமியென்ற மட்டுமரியாதை இன்றிக் கிழவி கிழவி என்று ஏசுகிறாள். உங்களுக்கு ஞாபகமிருக்கும் தம்பி என்னுடைய மகள் பணம் கேட்டுக் கடிதம் அனுப்பியிருக்கிறாள் என்று நான் உங்களுக்குச் சொன்னது. அப்பொழுது மகளுக்குப் பணம் அனுப்பும்படி கேட்டுச் சமூகநல உதவிப் பணத்தைப் பற்றிக் கதைத்துப் போட்டன். அதிலிருந்து மகன் நல்லாய் மாறிவிட்டான்.

இரண்டு மூன்று மாதத்திற்கு முன் சத்தியும் தலைச்சுத்தும் வந்து சுகயீனமாய்க் கிடந்தனான். அப்பொழுது எழும்பிப் போகமுடியாத நிலமயிற் கட்டிலில் இருந்தபடி காப்பெற்றில் சத்தி எடுத்துப் போட்டன். அதற்கு இரண்டு பேரும் தாறுமாறாய் என்னை ஏசிப்போட்டார்கள். மருமகள்தான் அவள் பிறத்தியாள் ஏசினாள் என்றால் அதைப்பொறுத்துக் கொள்ளலாம். இது நான் பெத்த மகனும் நான் தன்னுடைய நிம்மதியைக் கெடுக்கிறேன் என்று சொல்லி ஏசிப்போட்டான். தலைச்சுத்து மாறிய பிற்பாடு நான்தான் சத்தியைத் துப்பரவு செய்தனான். ஒரு கோப்பித் தண்ணிகூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைச்சுத்தரவில்லை.

ஒரு கிழமைக்கு முதல் மருமகளுக்குச் சத்தியும் காய்ச்சலும் தலைச்சுத்தும் வந்து காப்பெற்றிற் சத்தி எடுத்தபொழுது கண்ணே மணியே என்று மனைவியைப் பார்த்து சத்தியெல்லாம் துப்பரவு செய்து டாக்டரிடமும் கூட்டிச் சென்றான். அதையிட்டு நான் பொறாமைப்படவில்லை. மனைவிக்குச் சுகயீனம் வரும்போது கணவன் கட்டாயம் பார்க்கத்தான் வேண்டும். அதேமாதிரி பெத்த தாய்க்கு சுகயீனம் வரும்போதும் எனது நிலமையையும் கொஞ்ச மாவது உணரவேண்டும் அல்லவா? அந்தளவு உணர்ச்சி இல்லாத பிள்ளையை நம்பி எப்படி நான் வயது முதிர்ந்த எதிர்காலத்தில் இங்கு இருக்க முடியும்.?

இப்பொழுது என்னுடைய கையும் காலும் இயங்குகின்ற படியினால் எதையும் சமாளிக்கக் கூடியதாக இருக்கு. அவர் களுக்கும் சமையல் வேலை, பிள்ளைகளைக் குழந்தை பராபரிப்பு நிலையத்திற்குக் கூட்டிச்செல்வது போன்ற உதவிகளையும் செய்கிறேன். அவர்களுக்கும் உதவி செய்கின்ற நிலமையில் இந்த நடப்பென்றால், என்னுடைய கைகால் இயங்காமற் போற காலத்தில் இவர்கள் என்னைப் பேணிப் பார்ப்பார்கள் என்று எப்படி நம்புவது? சொல்லு பார்ப்பம் தம்பி! நான் தமிழீழத்திற்குத் திரும்பிப் போய் என்னுடைய வீட்டில் இருப்பதாயும் இயலாத காலம் வரும்போது என்னுடைய மகளுடன் போய்க்கிடந்து சாவம் என்றும் முடிவெடுத்துவிட்டேன்.

அங்குபோனால் பொருளாதார நெருக்கடிதான். என்ன செய்வது நம்மநாட்டு மக்களோடு சேர்ந்து நாமளும் அனுபவிப்பம். தங்களுடைய நின்மதியைக் கெடுக்கிறேன் என்று கூறுகின்ற பிள்ளைகளோடு பொருளாதார வசதிக்காக எப்படி இருக்க முடியும். என்னால் மற்றையவர்களுடைய நிம்மதி, சந்தோசம் கெட்டுப் போகப்படாது. நீங்கள் என்ன தம்பி சொல்லுகிறீங்க? நான் எடுத்திருக்கின்ற முடிவு சரியோ?" என்ற கேள்வியோடு கதையை முடித்தாள்.

எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த நடேசன், "நீங்கள் அம்மா, சொல்லுவதில் அர்த்தம் இருக்கத்தான் செய்கின்றது. இப்படி முரளி மாறுவான் என்று கனவிற்கூட நான் நினைக்கவில்லை. உங்களை ஸ்பொன்சர் செய்த காலத்தில் உங்களைப் பற்றி ரொம்பப் பெருமையாய்ப் பேசிக் கொண்டான். அப்படிப்பட்டவன் இப்படி மாறிவிட்டான் என்னும்போது என்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பவே முடியவில்லை. இதைக் காலத்தின் கோலம் என்றுதான் சொல்ல வேண்டி உள்ளது. ஆனபடியால் நீங்கள் எடுத்திருக்கின்ற முடிவு சரிதான் அம்மா.

பிரயாணத்திற்கான உதவி ஏதும் தேவைப்பட்டாற் தயங்காமல் என்னைக் கேளுங்கோ. வேறென்னம்மா, நான் போயிட்டு வாறன்,'' என்று கூறி விடைபெற்றுக்கொண்டு சென்றபொழுது, ஏதோ திடீரென்று ஞாபகத்திற்கு வந்ததுபோன்று "தம்பி நடேசன், நான் கூறியவற்றை மகனுக்கு இப்போதைக்குச் சொல்லிப் போடாதீங்கோ. நான் போனபிற்பாடு சொல்லலாம்,'' என்று சொல்லவே, "என்னம்மா சொல்லுகிறீங்கள். இதைப்போய் நான் சொல்லுவேனா. அந்தளவிற்கு நான் மூளை கெட்டவனே? நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம்,'' என்று விசாலாட்சியின் மனதிலிருந்த அச்சத்தைப் போக்கும் பாணியிற் கூறிவிட்டுச் சென்றான் நடேசன்.

இன்று யூலை மாதம் முதலாம் திகதி. கனடாவின் பிறந்தநாள், எல்லோருக்கும் விடுமுறை. முரளி சஞ்சயா பிள்ளைகள் எல்லோரும் வீட்டில் இருந்தனர். மதிய உணவை முடித்துக் கொண்டு முரளி பிள்ளைகளோடு சந்தோசமாய்ப் பொழுது போக்கிக் கொண்டிருந்தான். நிலமையை நன்கு அவதானித்த விசாலாட்சி இந்த நேரத்தில் தமிழீழத்திற்குத் திரும்பிச்செல்ல விருக்கும் தன்னுடைய முடிவை பக்குவமாய் எடுத்துக் கூறுவம் என்று தீமானித்தாள். மகனுக்கு அருகிற் சென்று, "தம்பி முரளி, உன்னோடு ஒரு முக்கிய விடையமாய்க் கதைக்க வேண்டும். இந்த நேரத்திற் கதைப்பது ரொம்பவும் பொருத்தமாயிருக்கும் என்று நினைக்கிறேன். நான் சொல்லப்போகும் விடையத்தைச் சற்றுப் பொறுமையாய்க் கேட்கவேண்டும்,'' என்று கூறவே, அதைக் கேட்ட முரளி, "பொறுமையாய்க் கேட்கின்ற அளவிற்கு என்ன பாரதம் அம்மா சொல்லப் போறீங்கள்,'' என்று கேட்டான்.

கதையைத் தொடங்கிய விசாலாட்சி, "நான் தம்பி நம்ம நாட்டிற்கே திரும்பிப் போகலாம் என்று எண்ணுகிறேன். இந்த ஊர்ச் சீவியமும் வாழ்க்கை முறையும் எனக்கு சரிப்பட்டு வருகுதில்லை. கனடாவிற்கு வந்து எட்டு வருடம் முடியுது. இவ்வளவு காலத்தையும் ஒருவாறு ஓட்டிவிட்டன். நான் கனடாவிற்கு வரும்பொழுது நீ தனியனாக இருந்தாய். அப்பொழுது என்னுடைய உதவியும் அன்பும் உனக்குத் தேவைப்பட்டது. இப்ப உனக்கு மனைவி பிள்ளைகள் என்று வந்துவிட்டார்கள். இனிமேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய உதவியும் அன்பும் பெரிதாய்த் தேவைப்படாது. மருமகள் மாமியென்ற மரியாதை இல்லாமல் நடந்து கொள்கிறார். நீயும் முன்புபோல் இல்லாமல் நன்கு மாறிவிட்டாய். என்னால இடையிடையே உங்களுக்கிடையிற் சச்சரவும் வரப்பார்க்கிது. உங்களுடைய நின்மதியையும் சந்தோசத்தையும் கெடுக்கிறேன் என்றும் சொல்லுகின்றீர்கள். இதற்குப் பிறகும் நான் இங்கு இருப்பது உசிதமாய்ப் படவில்லை.

நானும் என்னுடைய மனுசனும் சேர்ந்து கட்டிய வீடு ஊரில் கிடக்கின்றது. நான் போய் என்னுடைய வீட்டில் இருப்பம் என்று முடிவு செய்துவிட்டேன். எனது கையும் காலும் இயங்கும் வரை எனது வீட்டில் இருப்பேன். இயலாத காலம் வரும்போது என்னுடைய மகளோடு அதுதான் உன்னுடைய அக்காவோடு போய்க்கிடந்து சாவம் என்பதுதான் என்னுடைய முடிவு. நீயும் மனுசியும் விரும்பி மாதம் நூறு டொலர் அனுப்பினால் என்னுடைய சீவியம் இடைஞ்சல் இல்லாமற் போகும். பணம் அனுப்பமாட்டேன் என்று சொன்னாற் சீவியம் தட்டுத் தடுமாறித்தான் போகவேண்டி யிருக்கும். வாழ்க்கை என்பது நாம செய்த தவப்பயனுக்கு ஏற்பத்தான் கிடைக்கும். என்னுடைய முடிவைப் பற்றி நீ என்ன தம்பி சொல்லுகிறாய்?" என்று பக்குவமாய்க் கேட்டாள்.

அம்மாவின் கேள்விக்கு முரளி பதில் கூறுவதற்கு முதல், கதையைக் கேட்டுக் கொண்டிருந்த சஞ்சயா, "பார்த்தீங்களா! பாத்தீங்களா!! உங்கம்மாவினுடைய கொழுப்பையும் செருக்கையும். இந்தக் கிழவிக்கு இவ்வளவு தடிப்பென்றால், மற்றைய மனிதருக்கு எவ்வளவு தடிப்பிருக்கும். போகப்போறாவென்றால் ரிக்கெற்றை எடுத்து ஆளை அனுப்பிவிடுங்கோ. நம்மைப் பிடித்த சனியன் விலகிவிட்டது என்று எண்ணிக் கொண்டு நின்மதியாய் இருப்பம். சும்மாயிருந்து எங்களுடைய நின்மதியைக் கெடுக்காமல் ஒரேயடியாய்ப் போய்ச்சேரட்டும். இவ போனால் இஞ்ச எங்களுக்கு ஒன்றும் குறைஞ்சுவிடாது," என்று கத்தினாள்.

சஞ்சயா கூறியவற்றை விரும்பாத முரளி, "நீ உன்னுடைய வாயை வைத்துக் கொண்டு சும்மா இருக்கிறாயா? அம்மா என்னோடுதான் கதைத்துக் கொண்டிருக்கிறா. உன்னோடு கதைக்க வில்லை," என்று மனைவியைப் பார்த்துக் கூறவே, பொறுமையை இழந்தவள் போன்று சஞ்சயா, "அம்மா திரும்பிப் போகப் போகின்றாவென்று மகனுக்கு கவலையாய்க் கிடக்கு, என்ன செய்வம். இதுதான் தாய் பிள்ளைப்பாசம்," என்று குத்தலாய்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைத்தாள்.

மருமகள் காலால் உதைக்கிறாள் என்பதை உணர்ந்த விசாலாட்சி, "பார்த்தியா தம்பி, உன்னுடைய மனைவியின் வாயிலிருந்து வருகின்ற வசனங்களை. இப்படிப்பட்ட நிலமையில் எப்படித் தம்பி நான் தொடர்ந்து இங்கு இருப்பது? என்னால உங்களுடைய நிம்மதியோ சந்தோசமோ கெட்டுப் போகப்படாது. நான் வாழ்ந்து முடித்தனான். நீங்கள் வாழப் போறனீங்கள். நீங்கள் சந்தோசமாயும் நின்மதியாயும் இருக்க வேண்டும். என்னால உங்களுடைய வாழ்க்கை கெட்டுப்போனதென்ற பேச்சே இருக்கப் படாது. பெத்ததாய் பிள்ளையை வாழவைக்க வேண்டுமேயொழிய பிள்ளையினுடைய வாழ்க்கை கெட்டுப்போவதற்கு ஒருபோதும் காரணமாயிருக்கப்படாது," என்று விளக்கமாய்க் கூறினாள்.

தாயார் கூறிய எல்லாவற்றையும் உள்வாங்கிக் கொண்ட முரளி, "நீங்கள் கூறியவற்றில் நிறையவே அர்த்தங்கள் இருக்கத்தான் செய்கின்றன அம்மா. சிலவேளைகளில் நானும் உங்களுடைய மனம் நோகும்படி நடந்துள்ளேன். அதை நான் மறுக்கவில்லை. நீங்கள் எடுத்திருக்கின்ற முடிவு சரியென்றுதான் நானும் நினைக்கிறேன். நான் மாதாமாதம் நூறு டொலர் அல்லது நூற்றிஐம்பது டொலர் உங்களுக்குத் தவறாமல் அனுப்புவேன். நீங்கள் அங்கு போய்ச் சந்தோசமாயிருங்கோ. நீங்கள் கூறியது போன்று இயலாதகாலம் வரும்போது அக்காவுடன் போயிருக்கலாம். ஏசினாலும் பேசினாலும் மகளோடு இருக்கலாம். மகளுக்கும் மருமகளுக்கும் இடையில் நிறையவே வித்தியாசம் உண்டு. அப்பாவும் இல்லாத நிலையில் என்னை நீங்கள் எவ்வளவு பாசமாயும் கவனமாயும் வளர்த்தனீங்கள் என்பது என்னுடைய மனதில் எப்பொழுதும் இருக்கின்றது, இனிமேலும் இருக்கும்," என்று கூறிமுடித்த மகன் இரண்டு கிழமையால் விமான ரிக்கற் எடுத்து தாயை ஊருக்குச் சந்தோசமாய் வழிஅனுப்பி வைப்பதற் கான ஆயத்தங்களைச் செய்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் 10







இன்று விமானப்பிரயாணம். விமான நிலையத்திற்கு தாயும் மகனும் மாத்திரம் போயிருந்தனர். விமான நிலையத்தில் மகனைவிட்டுப் பிரிய வேண்டிய நேரம் வந்துவிட்டது. பெத்தமனம் பித்து என்பார்களே, அது தன்னுள் அழுகின்றது. ஆனால் வெளிக்காட்ட முடியவில்லை. காரணம் இது கனடா. இங்க நமது நாட்டுப் பாரம்பரியங்களெல்லாம் பெரிதாய் எடுபடாது. ஏன்? அவையெல்லாம் இந்த நாட்டைப் பொறுத்தவரை செல்லாக் காசுகள். இருந்தபோதும் கடைசி நேரத்திற் தனது மனதிற் பட்டதைச் சொல்ல வேண்டும் என்று தோன்றியதன் எதிர்விளைவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனைப் பார்த்து, "தம்பி, நான் உன்மீதும் உனது மனைவிமீதும் கொண்ட வெறுப்பின் காரணமாய்த் திரும்பிப் போகிறேன் என்று தப்பாக எண்ணவேண்டாம். நான் உன்னுடைய அம்மா. உன்னைப் பெத்து வளர்த்து ஆளாக்கிய தாய். உன்மீது ஒருபோதும் எனக்கு வெறுப்புக்கிடையாது. அதுதான் தாய்ப்பாசத்தின் அர்த்தம்.

இருந்தபோதும் நீ கல்யாணம் பண்ணி உனக்கு பெண்சாதி பிள்ளைகுட்டி என்று வரும்போது நீங்களும் அப்பா அம்மா என்ற தகுதியைப் பெறுகின்றீர்கள். அதை நான் உணரவேண்டும். உங்களுடைய அந்தத் தகுதிக்கு நான் மதிப்பளிக்கவேண்டும். அந்த வகையில் உங்களுடைய சந்தோசத்தையும் நிம்மதியையும் கருத்திற்கொண்டுதான் நான் எனது பிறந்த மண்ணிற்குத் திரும்பிச் செல்லுகிறேன். இதற்கு மேலால் எந்தக் கோபதாபமோ மனக் கசப்போ எனக்குக்கிடையாது. ஆதலாற் பெரிதாய்க் கவலைப்படு வதற்கு இதில் ஒன்றுமில்லை. நாம் இருவரும் சந்தோசப்பட வேண்டிய விடையம் இது. ஏன்? இருவருக்கும் சந்தோசம் கிடைத்ததோ இல்லையோ, ஆனால் நிச்சயம் இருவருக்கும் நிம்மதி கிடைக்கப்போகின்றது. இதில் எந்தச் சந்தேகமும் இல்லை. எனது வாழ்நாளிற் கற்றுக் கொள்ளாத மிகப் பெரிய ஒருபாடத்தை இங்கு நான் கற்றுக் கொண்டேன். அதுதான் வசதிவாய்ப்பிற்கும் நிம்மதிக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என்பதாகும். எனவே நான் நிம்மதியைத் தேடிச் செல்கிறேன்," என்று கூறிமுடிக்க இவை யாவற்றையும் கேட்டுச் சிறிது உணர்ச்சிவசப்பட்ட முரளி, "அம்மா, நீங்கள் சொல்லுவது எல்லாமே எனக்கு நன்றாகப் புரிகின்றது. எனது நிலமையை நீங்கள் நன்கு புரிந்து வைத்துள்ளீர்கள் என்ற விடையம் எனக்கு மன ஆறுதலைக் கொடுக்கின்றது.

இது பாழ்பட்ட உலகம். அதிலும் இது கனடா. இங்க எனது வீட்டிற்தானும் எனது விருப்பத்திற்கேற்ப எதையும் செய்ய முடியாது. அதன் காரணமாய்த்தான் உங்கள் மீது சிலவேளை களில் எனது வெறுப்பைக் காட்டினேன். அது எனது தப்புமட்டுமல்ல இந்த நாட்டின் கோலமும்கூட. இதற்குமேல் நான் எதுவும் சொல்ல வேண்டியதில்லை. காரணம் உங்களுக்கு எல்லாமே நன்கு தெரியும். ஆனபடியினால் நீங்கள் விரும்பியபடி சந்தோசமாய்ப் போங்கோ. நான் என்னாலியன்ற எல்லா உதவிகளையும் தவறாது செய்வேன். எனது அம்மா, அப்பா இல்லாத நிலையிலும் என்னை வளர்த்து ஆளாக்கிய தெய்வம். அந்த நினைப்பு எப்பொழுதும் எனது மனதில் இருக்கும்," என்று கூறிமுடித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயாணத்திற்கான நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. மகன் அம்மாவை விட்டு விலகவேண்டிய வாசல் வந்துவிட்டது. அம்மா உட்செல்வதற்கு தயாராகிறாள். பெற்றதாயின் அடிவயிற்றிலிருந்து எழும் உணர்வுகளை வர்ணிப்பதற்கு வார்த்தைகளே இல்லையெனலாம். மகனைக் கட்டித்தழுவி முத்தமிட்டு முத்தமிட்டு, இறுதியில் உச்சிமுகர்ந்து அப்புறம் மெதுவாக தன்னை விலக்குகிறாள். அப்பொழுது அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் உதிரவில்லை, பதிலாக சொரிகின்றன. அவளாலேயே நம்ப முடியவில்லை. இப்படி ஓர் அனுபவத்தை இதற்கு முன் அவள் பெற்றிருக்கவில்லை என்றால் ஏற்புடைத்து. இவ்வளவு கண்ணீர் எங்கிருந்து வருகின்றது? அவளுக்கே ஆச்சரியமாயிருந்தது.

கணவனும் இரண்டு மகன்மாரும் இறந்துபோக, பொத்திப் பொத்தி வளர்த்த பிள்ளை இது. முந்தானையால் மூடிமறைத்து வளர்த்த பிள்ளை இது. வல்லூறுகளிடமிருந்து காப்பாற்றுவதற்காக கோழி தனது குஞ்சுகளை செட்டைகளுக்குள் மூடிமறைத்துக் காப்பதற்கும் மேலாக, ஆமிக்காரர் என்னும் கொடிய இராட்சத வல்லூறுகளிடமிருந்து தனது குஞ்சைக் காப்பதற்காக முந்தானைக்குள் மூடிமறைத்து வளர்த்த பிள்ளை இது. எப்படி விட்டுப்பிரிய முடியும்? நெஞ்சு பற்றி எரிகின்றது. நெஞ்சிலே கொழுந்துவிட்டு எரியும் தீ நிலத்திலும் தாவுகின்றது. அந்த விமானநிலையமே சூடாகின்றது. இதைக் கண்டுகொள்ள யார் இருக்கிறார்கள் இந்தப் பாழ்பட்ட உலகத்தில்? யாருமே இல்லை! யாருமே இல்லை!!

அந்தப் பெத்தமனம் வேதனையில் வெந்து கருகுகின்றது. இதை மகனும் அறியமாட்டான். ஏன்? இது ஓர் ஊமையின் அழுகை. அம்மாவின் அழுகையைப் பார்த்துவிட்டு மகனும் அழுகிறான். மகனின் அழுகையைப் பார்த்தவுடனேயே தாயின் அழுகை நின்றுவிட்டது. ஏன்? மகன் அழுவதை அந்தப் பெத்த மனத்தால் தாங்க முடியவில்லை. தான் எவ்வளவுதான் வேதனைப்பட்டாலும் அழுதாலும் பரவாயில்லை, ஆனால் என்னுடைய பிள்ளை வேதனைப்படக்கூடாது, அது அழக்கூடாது, அதனாற்தான் மகனின் கண்ணீரைக் கண்டதும் அத்தாயின் அழுகை திடீரென்று நின்றவிட்டது. இதுதான் தாய்ப்பாசம், இதுதான் தாய் உள்ளம், இதுதான் இறைவனின் தாய் என்ற அற்புதப்படைப்பின் வெளிப்பாடு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எது என்னவானாலும் பிரிந்துதான் ஆகவேண்டும், பிரயாணத்தைத் தொடர்ந்துதான் ஆகவேண்டும். ஏன்? இதுதான் உலகில் மனிதன் படைத்த நியதி, மனிதன் உருவாக்கிய சட்டம். இறுதியாக மகனின் இரு கன்னங்களையும் பற்றிக்கொண்ட தாயின் கைகள் மெதுவாக தோள்ப்பட்டைகளால் நழுவி, கைகளினால் இறங்கி, உள்ளங்கைகளில் நிறுத்தி, விரல்களில் விடைபெறுகின்றன.

வாசலில் நின்ற இயம தூதுவன் போன்ற பாதுகாப்பு உத்தியோகத்தர் மகனைப் பார்த்து அங்கால நில்லும் என்று சொல்லுவதுபோற் கையைக் காட்டினான். "போயிட்டு வாறன் ராசா" தாயின் வாய் முணுமுணுத்தது. பதிலுக்கு, "போயிட்டு வாங்கம்மா" மகனின் வாயும் முணுமுணுத்தது, எல்லைக்கோடு தாண்டப்பட்டது. இருவரும் கைகளாலும் தலைகளாலும் தத்தமது உணர்வுகளை இறுதியாய்ப் பரிமாறிக்கொண்டனர். கண்கள் மறுபடியும் பனித்து கடைசி வினாடி மன உணர்வுகளை வெளிப்படுத்திக் கொண்டன. அதைத் தொடர்ந்து மகனின் கைகள் பிரியாவிடை அளிக்க அதை ஏற்றுக்கொள்வது போன்று தாயின் கைகளும் அசைக்கப்பட விசாலாட்சி புறப்பட்டாள் தமிழ் ஈழம் நோக்கி.



தமிழீழம் என்று சொன்னால் சிங்களவனுக்கு சிம்மசொற்பனம். கனடாவில் இருந்த காலத்தில் தமிழீழம், தமிழீழம் என்று சொல்லிப் பழக்கப்பட்ட வாயும் மனமும் தட்டுத்தடுமாறிக்கூட அந்தச் சொல்லை இனி உச்சரிக்கப்படாது என்பதை உணர்ந்துகொண்ட விசாலாட்சி விமானத்தில் ஏறிய நேரத்திலிருந்து இலங்கையை ஸ்ரீலங்கா என்றே மனப்பாடம் செய்துகொண்டாள். தெரிந்தோ தெரியாமலோ அன்றி தற்செயலாகவேனும் தமிழீழம் என்ற சொல்லை சிங்கள நாட்டில், ஏன்! தமிழீழத்திலும்தான், சொல்லிவிட்டால் அதுவே கழுத்திற்கு கயிறாகும் என்பதை நன்கு தெரிந்து வைத்திருந்த விசாலாட்சி எக்காரணம் கொண்டும் எந்தச் சந்தர்ப்பத்திலும் அந்தச் சொல்லை உச்சரிக்காமல் இருக்கவேண்டுமென்பதில் மிகவும் எச்சரிக்கையாக இருந்தாள்.

இதென்ன கனடாவே? தமிழீழப் பாடல்கள் பாடுவதற்கும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழக் கதைகள் எழுதுவதற்கும், தமிழீழக் கட்டுரைகள் வரைவதற்கும், தமிழீழக் கோசம் எழுப்புவதற்கும்! இவற்றின் படைப்பாளிகளே தாம் இலங்கைக்குச் செல்லும்போது, நரி சந்தர்ப்பத்திற்கு ஏற்ப வாலைச் சுருட்டி வைத்துக் கொள்வதுபோன்று, சுருட்டிவைத்துக் கொள்ளுகிறார்கள். இந்தச் சூழலில் விசாலாட்சியின் நிலமை? நான் சொல்லித்தான் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமா? விசாலாட்சியை மிகவும் புத்திசாலிப் பெண் என்றுதான் சொல்ல வேண்டும்.

தனது வீட்டிற்குத் திரும்பிய விசாலட்சி தனது வீட்டிலிருந்த குடும்பத்துடன் ஆறு மாதங்கள் வசித்தாள். மகன் கனடாவிலிருந்து ஒவ்வொரு மாதமும் நூறு அல்லது நூற்றிஐம்பது டொலர் தவறாது அனுப்பி வந்தான். விசாலாட்சி எதிர்பார்த்த பணம் கிடைத்தமை விசாலாட்சிக்குச் சந்தோசத்தையும் மன ஆறுதலையும் அளித்தது என்றால் மறுப்பதற்கில்லை. இந்தப் பணம் தவறாது மாதாமாதம் வந்தமை அவளுடைய வாழ்க்கைக்குப் பெரும் உதவியாயிருந்தது. பிள்ளை தன்னை மறந்துவிடவில்லை என்று எண்ணிச் சிலவேளைகளில் மனதிற்குட் பெருமைப்பட்டுக் கொண்டதும் உண்டு. அம்மா பிள்ளை உறவு அறுந்துபோகாமல் இருப்பதற்கு இந்தப் பணம் உறவுப்பாலமாக இருந்தது என்றாலும் வாஸ்தவம்தான். அம்மா கனடாவைவிட்டு தாய்நாட்டிற்குப் போனபிற்பாடு அம்மாவின் மீது அவன் கொண்டிருந்த பாசம் அதிகரித்துச் சென்றதேயொழிய சிறிதும் குறைவடையவில்லை.

அப்பா இல்லாதபோதும் அம்மா தனது பாடுகளையும் பொருட்படுத்தாமல் தனது பிள்ளையை வளர்த்து ஆளாக்க வேண்டுமென்ற ஆர்வத்துடன் தன்னை வெளிநாடு அனுப்பும்வரை அம்மா பட்ட கஷ்டங்கள் எல்லாவற்றையும் நினைத்துப் பார்க்கும்போதெல்லாம் அவனுக்குத் தாய்மீது அனுதாபப்படுவதைத் தவிர வேறொன்றும் செய்யமுடியவில்லை. அம்மா கனடாவிலிருந்த காலத்திற்தான் திருமணமாகுமுன் அம்மாவிற்கும் தனக்கும் இடையிலிருந்த அன்பு, பாசம், பிணைப்பு, அக்கறை என்பவற்றையும், திருமணம் செய்தபிற்பாடு அவற்றில் எற்பட்ட தொய்வையும், காலகதியில் மனைவியுடன் சேர்ந்துகொண்டு அம்மாவின் மனம் வேதனைப்படும்படி தானும் நடந்து கொண்டதையும், அதனால் அம்மா இறுதியிற் தாய் நாட்டிற்குத் திரும்பிப் போனதையும் எண்ணிப் பார்த்தவேளைகளில் இருதயம் கனத்தது. அதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனையை அனுபவித்தான் முரளி. அப்போதெல்லாம் மனித வாழ்க்கையில் இதுவும் நடக்கும் இன்னமும் நடக்கும், எல்லாவற்றையும் எதிர்கொள்ளத் தயாராகவேண்டும் என்று எண்ணித் தனது மனதை தைரியப்படுத்திக் கொண்டான்.

நமது தமிழ் இனம் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன்தோன்றிய மூத்த இனம் என்று கூறிக்கொள்ளுகின்றோம். உலகில் உள்ள பல்வேறுபட்ட இனங்களில், பல ஆயிரம் வருடங்களுக்கு முன் நாகரீகம் அடைந்த இனங்களில் தமிழர்களாகிய நாங்களும் ஒன்று என்று சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்ளுகின்றோம். கேட்பதற்கு மிகவும் பெருமையாயும் சந்தோசமாயும் இருக்கின்றது. ஆனால் இன்று நமது நாட்டில் மாமிக்கும் மருமகளுக்கும் இடையில் ஏன் இந்த இடைவெளி? மற்றைய சமூகங்களிலும் இப்படித்தானா? அல்லது நமது சமூகத்தில் மட்டுந்தானா? என்ற கேள்விகள் பலமுறை அவன் மனதில் எழுந்தன. நமது தாய்நாட்டிற்தான் மாமிக்கும் மருகமளுக்கும் ஒத்துவரவில்லையென்றால் கனடாவிலும் அதே கதையாய்த்தானே இருக்கின்றது. நாட்டில் என்ன இருக்கின்றது! நாம் சந்திரமண்டலத்திற்குப் போனாலும் நம்மை நாம் மாற்றிக் கொள்ளும்வரை எந்த முன்னேற்றமும் ஏற்படப் போவதில்லை என்று பலவாறு சிந்திப்பது முரளிக்கு வழமையாகிவிட்டது.

மாமிக்கும் மருமகளுக்கும் இடையில் ஏற்படக்கூடிய சங்கடத்தை அனுபவரீதியாக ஏற்கனவே தெரிந்துகொண்ட படியாற்தான், ஐரோப்பியன் பிள்ளைகளைத் தனிக்குடித்தனம் அமைத்து வாழவிட்டு, தான் முதியோர் இல்லம் நோக்கிச் செல்லும் வாழ்க்கை முறையை ஏற்படுத்திக் கொண்டானோ? ஐரோப்பியன் எதையும் ஆழமாய்ச் சிந்திப்பவன். இதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. அதனாற்தான் அவனிடத்தில் இந்த அபார வளர்ச்சியும் முன்னேற்றமும்.

அவர்களால் உருவாக்கப்பட்டதுதான் முதியோர் இல்லங்களும் அந்த வாழ்க்கை முறையும். வருடத்தில் ஒரு தடவை அம்மா நாள், அப்பா நாள் என்று உருவாக்கி அந்நாட்களில் பெற்றோர் பிள்ளைகளின் அன்பை விசேடமாய்ப் பரிமாறிக்கொள்வதும் இவர்கள் அனுபவரீதியாகப் பெற்ற விளைவுகளின் பெறுபேறாய்த்தான் இருக்கவேண்டும். அவை சரியோ பிழையோ அவற்றை நாம் விரும்புகிறோமோ இல்லையோ, ஆனால் அவற்றினுள் பொதிந்துகிடக்கும் அர்த்தமுள்ள உண்மைகளைச் சிந்திக்காமலிருக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமியும் மருமகளும் ஒன்றாயிருக்கப் போய்த்தானே இந்தத் தீர்க்கமுடியாத பிரச்சினை உருவாகின்றது. அப்படி இருந்தபோதும் இதைத் தீர்த்துவைக்கக்கூடிய ஒரு வாழ்ககை முறையை பல ஆயிரம் ஆண்டுகள் கடந்துங்கூட தமிழனால் கண்டுபிடிக்க முடியவில்லை. இதனால் மாமி மருமகள் போராட்டம் தொடர்கதையாகவே இருக்கின்றது. இருவரும் வேறுவேறாய் இருந்துவிட்டால் இந்தப் பிரச்சினைக்கே இடமில்லை. கையாற் கிளிக்கும் பனங்கிளங்கை ஆப்பு வைத்தடிக்க முயல்வது போன்ற செயற்பாடுகள்தான் இதுவரை நமது சமுகத்தில் நடந்தேறியுள்ளது. இது எவ்வளவு அறிவீனம்? அந்தவகையில் ஐரோப்பியனின் வாழ்க்கைமுறை சரியாய்த்தான் படுகிறது. அது சரியாகாது என்று சொன்னாலும் நமது கலாச்சாரத்திற்கேற்ற நல்லதோர் வாழ்க்கை முறையைக் கண்டுபிடிக்கும்வரை அவனுடையதைப் பின்பற்றியே ஆகவேண்டும். இந்த நாட்டின் சட்டதிட்டங்களும் அதையே வேண்டிநிற்கின்றன.

முரளிக்கும் மனைவிக்கும் இடையிற் சில வேளைகளில் தகராறு வந்து கவலையோடு இருக்கும்போது தாய்ப்பாசத்தை நினைத்து அவன் ஏங்குவதுமுண்டு. காலவோட்டத்தில் போனவற்றைத் திரும்பப் பெறமுடியாது, இதுதான் இயற்கையின் நியதி என்று உணர்ந்து மனதைத் தேற்றிக் கொள்வான். இன்று இரவு அம்மாவைக் கனவிற்கண்ட முரளி காலையில் வேலைக்குப் புறப்பட்டுச் சென்றபொழுது அம்மா தனிய என்ன பாடுபடுகின்றாவோ துன்பப் படுகின்றாவோ என்று எண்ணி வேதனைப்பட்டுக்கொண்டான். வேலைமுடிந்து வந்தபொழுது அம்மாவிடமிருந்து கடிதம் வந்திருந்தது. உடையைக்கூட மாற்றாமல் உடனே பிரித்து ஆவலுடன் வாசித்தான்.

“அன்பும் பாசமும் நிறைந்த மகன், மருமகள், பேரப் பிள்ளைகளுக்கு நான் எழுதுவது,

நான் நலமே உள்ளேன். தாங்கள் அனைவரும் நலன் பெற நல்லூரானை வேண்டுகிறேன். மேலும் எழுதுவதாவது, இதுவரை எமது வீட்டிலிருந்த குடும்பம் கடந்த கிழமை விலகிச் சென்றுவிட்டார்கள். இப்பொழுது நான் தனியத்தான் இருக்கிறேன். நாட்டிற் பாதுகாப்பு நிலமை மோசமடைந்து வருகின்றது. இராணுவத் தினதும் அவர்களுடன் சேர்ந்தவர்களினதும் அச்சுறுத்தல்கள் நாளுக்குநாள் அதிகரித்துச் செல்லுகின்றன. வயது வேறுபாடின்றி மக்களைக் கண்டபடி கொலை செய்கின்றார்கள். கொலை நாளாந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வசாதாரண விடையமாய் மாறி விட்டது. வருத்தம் துன்பமென்று வரும்போதுகூட வைத்திய சாலைக்கு நிம்மதியாப் போய்வர முடியாதிருக்கின்றது. தடைமுகாம்களைத் தாண்டி வைத்தியசாலைக்குப் போய்விட்டு உயிருடன் வீட்டிற்குத் திரும்பிவர முடியுமா என்பது கேள்விக் குறியாகியுள்ளது. பிரசவ வேதனையில் அவஸ்தைப்படும் ஒரு பெண்ணைக் கொண்டு செல்லும் போதுகூட உரிய நேரத்திற செல்வதற்கு அனுமதிக் கிறாங்களில்லை. அநியாயமும் அக்கிரமமும் கோரத்தாண்டவம் ஆடுகின்றன.

இரவும்பகலும் ஒரேவெடிச்சத்தம் கேட்டவண்ணம் இருக்கின்றது. ஒரே பீதி. இந்த நிலையில் எமது வீட்டில் என்னால் தனித்து படுத்திருக்க முடியாதிருக்கின்றது. ஆனபடியால் வருகின்ற கிழமை நான் வவுனியாவிற்கு அதாவது மகள் வீட்டிற்குப் போகிறேன். இனிமேல் பணமோ கடிதமோ அனுப்பும்போது அக்காவீட்டு விலாசத்திற்கு வவுனியாவிற்கு அனுப்பவும். மிகுதியை வவுனியாவிற்குச் சென்ற பிற்பாடு மறுகடிதத்தில் எழுதுகிறேன். உங்களின் நலன் வேண்டி மறுபடியும் நல்லூரானை வேண்டிக் கொண்டு இத்துடன் முடிக்கிறேன்.


இப்படிக்கு,
அன்பும் பாசமும் நிறைந்த
அம்மா

கடிதத்தை வாசித்துவிட்டு சோபாவில் உட்கார்ந்த முரளி கவலையோடு யோசித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது அங்கு வந்த சஞ்சயா கடிதத்தை எடுத்து வாசித்துவிட்டு, ''இனி அம்மாவிற்கு மட்டுமல்ல மகளுக்கும் சேர்த்துப் பணம் அனுப்ப வேண்டுமாக்கும். வேறவேலையில்லை,'' என்று சினந்து கூறிக்கொண்டு கடிதத்தை வீசிப்போட்டுவிட்டுச் சென்றாள். ஒரு பக்கம் தாய்ப்பாசம், மறுபக்கம் மாமியார் தோசம். இரண்டிற்கும் இடையில் நிலமை மோசம். சென்றவளைப் பார்த்து, " என்ன சஞ்சயா, உனக்கு நம்மநாட்டு மக்கள் படுகின்ற துன்பம் துயரங்களைப் பற்றிக் கவலையில்லையா? எத்தனை சனங்கள் பசியாலும் பட்டினியாலும் வாடுதுகள், தெரியுமா?'' என்று சொல்லி முடிப்பதிற்குள், ''உங்களுக்குத்தான் பெரிய கவலையென்று நடிக்காதீங்கள். உங்களுக்குத் தெரியுமா எத்தனை தொண்டர் தாபனங்கள், அரச திணைக்களங்கள் உணவுப்பொருட்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கு இலவசமாகக் கொடுக்கின்றன என்று? அவற்றை வாங்கிச் சாப்பிட வேண்டியதுதானே! அப்படித்தானே சனங்கள் அங்கு சீவிக்கின்றார்கள். எல்லோருக்கும் கனடாவிலிருந்து பணம் போயா சீவிக்கின்றார்கள்? இல்லையே! எனக்கொன்றும் தெரியாததுபோன்று பெரிதாய்க் கதைக்கிறார்," என்று பொரிந்து தள்ளினாள்.

இவையெல்லாம் வானொலியிலும் ரீவியிலும் செய்தி வாசிக்கவும் அரசின் பிரசாரத்திற்கும்தான் உதவுமேயொழிய அவலப்படும் மக்களுக்கு உதவப்போவதில்லை. இவற்றில் உண்மை இல்லை என்று நான் கூறமுனையவில்லை. உண்மையிருக்கலாம். ஆனால் இந்த உதவிகள் உரிய நேரத்தில் உரிய மக்களுக்குப் போய்ச் சேர்வதில் முழுமை பெறவில்லை. இப்பவும் எங்களுடைய மக்கள் பசியிலும் பட்டினியிலும்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இலங்கை அரசாங்கமோ உலகமோ நமது மக்களைப் பார்ப்பது போன்று நாம் நமது மக்களைப் பார்க்க முடியாது. அவர்கள் உலக ஒப்பாசாரத்திற்காகப் பார்ப்பவர்கள். நாம் உண்மை அன்புடனும் பாசத்துடனும் அக்கறையுடனும் பார்க்கவேண்டும்.. அவர்கள் நமது இரத்த உறவுகள். மற்றையவர்கள் உதவி செய்கிறார்கள் என்று சாட்டுச் சொல்லிக்கொண்டு அமைதியாய் இருந்துவிடமுடியாது. தானாடாவிட்டாலும் தசையாடும் என்பார்களே. அதுதான் நமது நிலமை. இதெல்லாம் உனக்கெங்க புரியப் போகின்றது என்று கூறிவிட்டு எழுந்து அறையிற்குட் சென்றான் முரளி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் 11

அம்மா வவுனியாவிற்கு வந்த பிற்பாடு மாதாமாதம் நூற்றிஐம்பது அல்லது இருநூறு டொலர் அனுப்பி வந்தான். விசாலாட்சி வவுனியாவிற்கு வந்து நான்கு மாதங்கள் உருண்டோடிவிட்டன. நாட்டு நிலமை மேலும் மோசமடைந்து சென்றது. கொலை, கொள்ளை, கற்பழிப்பு, ஆட்கடத்தல், காணாமற் போதல், கப்பம் பெறுதல் நாளாந்த நிகழ்வாக மாறிவிட்டன. பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் வேலைக்குச் செல்லும் ஊழியர்கள் கமத்திற்குச் செல்லும் கமக்காரர்கள், மீன்பிடிக்கச் செல்லும் தொழிலாளர்கள் காலையிற சென்று மாலையில் வீட்டிற்குத் திரும்புவார்களா? என்பது கேள்விக் குறியாகிவிட்டது. இவைகளை நிறுத்தும்படி அரசாங்கத்திற்கு விடப்பட்ட கோரிக்கைகள், இவைகளுக்கு எதிராகச் செய்த ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் விளலுக்கு இறைத்த நீராகிப் போய்விட்டன. மக்கள் சாவா வாழ்வா என்று ஏங்கிக் கொண்டிருக்கும் நிலைதான்.



இந்நிலையில் ஒருநாள் காலை பத்துமணியிருக்கும், விசாலாட்சியும் அவளுடைய மகள் மங்களமுமே வீட்டில் இருந்தனர். மங்களத்தினுடைய கணவர் சங்கரன் வேலைக்குச் சென்றுவிட்டான். பிள்ளைகள் இருவரும் பாடசாலைக்குச் சென்றுவிட்டனர். திடீரென்று அவர்களுடைய நாய் வழமைக்கு மாறாக உக்கிரமாய்க் குரைத்தது. இதை அவதானித்த விசாலாட்சி சிறிய அச்சத்தோடு யன்னல் ஊடாகப் பார்த்தாள். ஒரு ஜீப்வண்டி வீட்டுக்கடவையில் நின்றது. மூன்று பேர் இராணுவ உடையிலும் ஒருவன் சாதாரண உடையிலும் ஜீப்வண்டியிலிருந்து இறங்கி நேரே



வீட்டிற்கு வந்தனர். இராணுவ உடையில் இருந்த மூவரும் ஆயுதம் தாங்கியிருந் தனர். அவர்கள் வருவதைக் கண்ட விசாலாட்சி வீட்டின் முன் விறாந்தைக்கு வந்தாள். வீட்டு முற்றத்தில் இயமதூது வர்கள் போல் நின்ற நால்வரில் ஒருவன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது இராணுவ உடை தரித்திருந்த ஒருவன் விசாலாட்சியைக் கண்டதும், "ஏய் கிழவி! இங்க வா," என்றான். விசாலாட்சி இயமதுாதுவன் அழைக்கிறான் என்று எண்ணிக்கொண்டு சிங்கத்தின் முன்சென்ற முயல் போன்று மெதுவாகச் சென்றாள். விசாலாட்சி அவனை நெருங்கியதும் அவளைப் பார்த்து, "ஏய்கிழவி! உன்னுடைய மகன் கனடாவில் இருக்கின்றானா?" என்று கேட்டான். செய்வ தறியாத விசாலாட்சி இவன்கள் உண்மை யாவற்றையும் தெரிந்துகொண்டுதான்



வந்திருக்கின்றாங்கள், இவன்களிடம் பொய் சொன்னால் இந்த இடத்திலேயே என்னைச் சுட்டுக் கொன்றுவிடுவாங்கள். ஆகையால் உண்மையைச் சொல்லிவிட வேண்டும் என்று எண்ணிக்கொண்டு, "ஆம்," என்றாள்.

உடனே அவன், "எத்தனை வருடங்களாய்க் கனடாவில் இருக்கிறான்?" என்று கேள்வியைத் தொடர்ந்தான். என்னத்தைச் சொல்லுவது என்னத்தை விடுவது என்று தெரியாமல் பீதி நிறைந்த நிலையில், "பன்னிரண்டு வருடங்கள்," என்று உண்மையைச் சொன்னாள். அப்பொழுது விசாலாட்சியைப் பார்த்து ஓர் எக்காளச் சிரிப்புச் சிரித்துவிட்டு, "அப்ப... மிச்சம் மிச்சம் டொலர் உழைச்சு பாங்கில் போட்டு வைத்திருப்பான், அப்படித்தானே?" என்று சற்றுக் கடுந்தொனியிற் கேட்டுவிட்டு விசாலாட்சியை முறாய்த்துப் பார்த்தான். அவனுடைய கொடிய பார்வையைக் கண்டு ஐம்புலன்களும் ஒடுங்கிநின்ற விசாலாட்சி, "அதைப் பற்றி எனக்கொன்றும் தெரியாது," என்று வாய் படபடக்கச் சொன்னாள். அதைக்கேட்டு கோபம் அடைந்த அந்த ஆமிக்காரன், "ஏய் கிழவி, பொய் சொல்லுகிறாய், என்ன? பொய் பேசினால் எனக்குக் கோபம் பத்தும். எனக்குக் கோபம் வந்தால் என்ன நடக்குமென்று தெரியும்தானே?" என்று அச்சுறுத்தினான். நடுங்கிக் கொண்டு கதையெல்லாம் தழதழக்க, "உண்மையாகத்தான் எனக்குத் தெரியாது ஐயா. இதையெல்லாம் அவர் எனக்குச் சொல்லமாட்டார். என்னை ஒன்றும் பண்ணிவிடாதீங்கோ ஐயா," என்று கூப்பிய கரங்களுடன் கெஞ்சிக் கேட்டாள் விசாலாட்சி.

அந்த வேளையில் அந்த ஆமிக்காரன் சாதாரண உடையில் நின்ற நபரைப் பார்த்து, "இந்தக் கிழவி உண்மையைச் சொல்ல மாட்டாள் போல் தோன்றுகின்றது, என்ன செய்யலாம்," என்று கேட்டதும் அந்த நபர் அரைகுறை ஆங்கிலத்தில் ஏதோ சொன்னான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைத் தொடர்ந்து அந்த ஆமிக்காரன், "ஏய் கிழவி, நீ கனடாவில் உன்னுடைய மகனுடன் இருந்தனியல்லோ?" என்று கேட்டான். அப்பொழுது விசாலாட்சி ஊகித்துக் கொண்டாள் ஆமிக்காரன் சிங்களவன் என்றும், சாதாரண உடையில் நிற்பவன் தமிழன் என்றும். அவர்களுடைய பேச்சிலிருந்து அவளால் இவைகளைப் புரிந்துகொள்ள முடிந்தது. என்னைப் பற்றிய எல்லா விபரங்களையும் அந்தத் தமிழன் தெரிந்துகொண்டுதான் இந்த ஆமிக்காரரைக் கூட்டி வந்திருக்கிறான் என்பதை உணர்ந்துகொண்ட விசாலாட்சி மேலும் மேலும் ஒன்றும் தெரியாது என்று சொன்னால் நிச்சயம் சுட்டுக் கொன்றுவிடுவான்கள் என்று எண்ணிக்கொண்டு, "ஆம் ஐயா," என்றாள். இதைக் கேட்ட அந்த ஆமிக்காரன் கோபத்தோடு, "அப்படியானால் ஏன் உனக்குத் தெரியாமலிருக்கின்றது? பொய் சொல்லுகிறாய், என்ன?" என்று அதட்டிக் கேட்டான். பயந்து நடுங்கிய விசாலாட்சி கூப்பிய கைகளுடன், "உண்மையாக எனக்குத் தெரியாது ஐயா. பண விடையங்களைப் பற்றி எனக்கு ஒன்றும் சொல்லமாட்டினம். என்னை ஒன்றும் செய்துவிடாதீங்கள் ஐயா," என்று இரந்து வேண்டியபொழுது அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகி உதிர்ந்தது.

இரக்கமற்ற அந்தப் பாவிக்கு கிழவியினுடைய அழுகையென்ன, உயிர்தானென்ன பெரிய விடயமா? அவன் விட்டபாடில்லை. ஏய் கிழவி! உன்னுடைய மகனும் அவனுடைய பெண்டாட்டியும் எங்க வேலை செய்கிறாங்கள்? என்று கேட்டு மறுபடியும் அதட்டினான். பயத்தினால் மனம் பேதலித்த விசாலாட்சி, அவர்கள் பாங்கில் வேலை செய்கிறார்கள் என்று உண்மையைக் கூறினாள். இவற்றையெல்லாம் வீட்டினுள் மறைந்துநின்று பார்த்துக் கொண்டிருந்த மகளுக்கு வேதனை தாங்க முடியவில்லை. பெத்த தாய் அழுவதைக் கண்டதும் பொறுத்துக்கொள்ள முடியாத நிலையில் விறாந்தைக்கு வந்தாள் மங்களம். அவளைக் கண்ட ஆமிக்காரன் விசாலாட்சியைப் பார்த்து, "ஏய் கிழவி, இவ யார்? உன்ர மகளா?" ஆம் என்பதுபோல் தலையை ஆட்டினாள் விசாலாட்சி. வழிந்த சிரிப்பொன்று சிரித்துக் கொண்டு, "ரொம்ப அழகாய் இருக்கிறா பொண்ணு," என்று சொல்லிக்கொண்டு காமப்பார்வை பார்த்து பல்லை இழித்தான். அவனுடைய பார்வையிலும் பல்லிழிப்பிலுமிருந்து தனக்குப் பேராபத்து வரப்போகின்றது என்பதைப் புரிந்துகொண்ட மங்களம் திடீரென்று திரும்பி வீட்டிற்குள் சென்றுவிட்டாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தபோதும் தாய்க்கு என்ன நடக்கப் போகின்றதோ ஏது நடக்கப் போகின்றதோ என்றும், ஆமிக்காரன்கள் வீட்டிற் குள்ளும் வருவாங்களோ என்றும் எண்ணி ஏங்கினாள். உடம்பெல்லாம் பயத்தினால் வியர்த்தது. இருதயம் படபடவென்று அடித்தது. செய்வதறியாது திகைத்துப்போய் நின்றாள். சிறிது நேரம் கழித்து விசாலாட்சி வீட்டினுள் வந்தாள். கிலிபிடித்து நின்ற மகளைப் பார்த்து, "அவன்கள் போய்விட்டாங்கள் பிள்ளை," என்றதும் உடனே தாயைக் கட்டிப்பிடித்து அழுதாள். மகளின் வேதனையையும் பீதியையும் புரிந்துகொண்ட தாய், "அழாத பிள்ளை அழாத. அவன்கள் போயிட்டாங்கள், பிறகேன் அழுகின்றாய்," என்று சொன்னதும் வியப்போடு, "உங்களுக் கொன்றும் ஆகவில்லையே அம்மா! உங்களுக்கொன்றும் ஆகவில்லையே!! உனது அழுகையைப் பார்த்துத் தாங்கிக் கொள்ள முடியாமற்தான் நான் அங்கு வருவதற்கு முயற்சித்தனான். அப்பொழுது அந்த ஆமிக்காரனின் பார்வையையும் பல்லிழிப்பையும் பார்த்ததும் எனக்குப் புரிந்துவிட்டது எனக்கு ஆபத்து வரப்போ கின்றது என்று. அதுதான் அம்மா, உடனே திரும்பி உள்ளுக்கு வந்துவிட்டேன். நான் வேறென்னம்மா செய்ய முடியும்?" என்று கேட்டுக்கொண்டு அம்மாவின் கையைப்பிடித்து அழுதாள்.

"அழாத பிள்ளை, நான் எல்லாற்றையும் அவதானித்துக் கொண்டுதான் நின்றனான். நீ அங்கு வராமல் நின்றதுதான் புத்திசாலித்தனம், நீ அங்கு வந்து உனக்கு ஏதும் நடந்திருந்தால் என்னுடைய இருதயம் அந்த இடத்திலேயே நின்றிருக்கும். அந்த இயம தூதன்களிடம் நீ வராமல் நின்றதுதான் புத்திசாலித்தனம்," என்று கூற சிறிது ஆறுதலடைந்த மங்களம், "என்ன அம்மா அவன்கள் சொல்லிவிட்டுப் போறாங்கள்?"என்று ஏக்கத்தோடு கேட்டாள். அதை நினைத்தாற்தான் பிள்ளை கையும் ஓடுதில்லை காலும் ஓடுதில்லை. இனி நாமள் இங்கு இருப்பது ஆபத்துப் போற்தான் தெரிகின்றது. இந்த ஈவிரக்கமற்ற கொலைகாரப் பாவிகள் நம்மை இனி நின்மதியாய் இருக்க விடமாட்டான்கள், என்று அம்மா சொல்லிக் கொண்டுபோக மேலும் கலவரம் அடைந்த மங்களம், "என்னம்மா? என்னம்மா சொல்லவாறாய்?" என்று பயத்தோடும் பதட்டத்தோடும் கேட்டாள்.

சொல்லவும் முடியாது மெல்லவும் முடியாது அவஸ்தைப் பட்ட விசாலாட்சி இறுதியில், இங்கு வந்தவன்களில் ஒருத்தன், அதாவது சாதாரண உடையில் வந்தானே அவன் தமிழன். அவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மைப்பற்றிய எல்லா விபரங்களையும் அறிந்து கொண்டு நம்மை மிரட்டிப் பணம் பறிப்பதற்காக ஆமிக்காரரைக் கூட்டி வந்துள்ளான். என்னுடன் கதைத்த ஆமிக்காரன் முரளியின் விபரம் எல்லாவற்றையும் கேட்டுவிட்டு முரளியிடமிருந்து ஐந்து லட்சம் ரூபாய் பணம் பெற்றுத் தங்களுக்குத் தரவேண்டுமென்று கட்டளையிட்டு விட்டுப் போகிறான். பணம் பெற்றுத்தரத் தவறினாற் குடும்பத்தோடு எல்லோரையும் அழித்துவிடுவம் என்று மிரட்டிவிட்டும் போகிறான். அதைக் கேட்டதிலிருந்து எனக்குக் கைகால் எல்லாம் பதறுது. தலையிற்குள்ளும் ஏதோ செய்கின்றது. இனிமேல் நாம் இங்கு இருப்பது புத்திசாலித்தனமல்ல பிள்ளை. அவன்கள் பணம் வாங்காமல் நம்மை வாழவிடமாட்டாங்கள். என்ன பிள்ளை செய்யலாம்,'' என்று கேட்டுவிட்டு மகளுடைய முகத்தை ஏக்கத்தோடு பார்த்தாள். தாயின் பார்வையிலிருந்து அவவினுடைய வேதனையையும் கலக்கத்தையும் புரிந்துகொண்ட மகள் எதையுமே சொல்ல முடியாத நிலையில், "எதற்கும் அவர் வேலையால் வரட்டுங்கள் அம்மா. அவருடன் இதைப்பற்றிக் கதைத்துவிட்டு என்ன செய்யலாம் என்று யோசிப்பம்,'' என்று கூறிவிட்டு மதிய உணவு சமைக்கும் எண்ணத்தோடு குசினிக்குள் சென்றாள்.

என்னுடைய வீட்டில் இருந்தபொழுது என்னுடைய நின்மதிதான் குலைந்துபோனது. உதவி வேண்டி ஆதரவு தேடி இங்குவர என்னுடைய நின்மதி மட்டுமல்ல மகள் மருமகன் பேரப்பிள்ளைகள் என எல்லோருடைய நின்மதியும் கெட்டுப்போச்சு. ஒட்டுமொத்தக் குடும்பமே பேராபத்தில் மாட்டிக்கொண்டதுபோல் தெரிகின்றது. நிலமை எண்ணையாற் பாய்ந்து நெருப்பில் விழுந்த கதையாய்ப் போச்சு. கனடாவிற்குப் போனால் அங்கு ஒருவகையான பிரச்சனை. அதிலிருந்து விடுபட்டு நிம்மதியாய் நமது வீட்டிற் போய்க் கிடப்பமென்றால் அங்கும் ஆபத்தான நிலைமை. கடைசி காலத்தில் இங்கு வந்து பெத்த மகளுடன் இருந்து சாவம் என்றால் இங்கோ பேராபத்துக் காத்துக் கிடக்கின்றது. எப்போது இந்தப் பேராபத்து ஒட்டுமொத்தக் குடும்பத்தையும் விழுங்கப் போகின்றதோ தெரியவில்லை. ஆண்டவா உனக்குத்தான் வெளிச்சம்! ஏன் இப்படி எங்களைப் போட்டு வருத்துகிறாய்? இந்தத் தமிழ் இனம் செய்த பாவம் என்ன? அது இன்னும் தீரவில்லையா? இவன்களுடைய கையாற் சாவதற்குமுன் பேசாமல் இந்தியாவிற்குப் போய்விடுவதுதான் புத்திசாலித்தனம். இதற்கு மகளும் மருமகனும் ஒத்துவருவார்களா? என்று தனக்குட் பலவாறு யோசித்து யோசித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாலாட்சி ஏங்கிக் கொண்டிருக்க நேரம் பிற்பகல் நான்குமணி ஆகிவிட்டது.

பேரப்பிள்ளைகள் பாடசாலை முடிந்து வந்தார்கள். பிள்ளைகள் வீடு திரும்பும்வரை ஏங்கிக் கொண்டிருந்த மங்களம் அவர்களைக் கண்ட பிற்பாடுதான் நிம்மதிப் பெருமூச்சுவிட்டாள். அந்த நிம்மதியும் சில நிமிடங்கள்தான் நீடித்தன. பாடசாலையால் வந்ததும் மூத்த மகன், "அம்மா, நான் இனிமேற் பள்ளிக்கூடம் போகமாட்டேன்," என்று கூறிவிட்டு புத்தகப்பையைச் சுழற்றி எறிந்தான். பிள்ளைக்கு ஏதோ பிரச்சினை எற்பட்டுள்ளது என்பதை உணர்ந்துகொண்ட மங்களம், ஏனப்பன் பள்ளிக்கூடம் போக மாட்டேன் என்கிறாய்?" என்று பக்குவமாய்க் கேட்டாள். இன்று நாங்கள் பாடசாலை முடிந்து வீட்டிற்கு வரும்போது ஆமிக்காரன் மறித்து, "நீங்கள் புலிக்குட்டிகளா?' என்று கேட்டான். நாங்கள் 'இல்லை' என்று சொன்னோம். அப்பொழுது அந்த ஆமிக்காரன், ""இவங்களை வளரவிட்டால் நமக்குத்தான் ஆபத்து," என்று மற்றைய ஆமிக்காரருக்குச் சொன்னான். எங்களுக்குப் பயமாய்க்கிடக்கு அம்மா. நான் இனிமேற் பள்ளிக்கூடம் போகமாட்டேன். ஆமிக்காரன் சுட்டுப்போடுவான். அவன் சுட்டால் நான் செத்துப்போய்விடுவேன் அம்மா. அப்புறம் நான் வீட்டிற்கு வரமுடியாது அம்மா. நீதான் என்னுடைய உடலை அங்கு வந்து பார்க்க வேண்டும்," என்று சொல்லி முடிப்பதிற்குள் பதறிப்போன மங்களம், "ஓ! அப்படியா சங்கதி!! அப்பா வரட்டும் என்ன செய்யலாமென்று யோசிப்பம், இப்போ நீங்கள் சாப்பிடுங்கோ," என்று கூறிவிட்டு பிள்ளைகளுக்கு உணவைப் பரிமாறினாள்.

இப்போது நேரம் பிற்பகல் ஐந்துமணி. சங்கரன் வேலை முடிந்து வீட்டிற்கு வந்தான். வந்ததும் வராததுமாய்ப் பிரச்சினையைச் சொல்லி கணவனுக்குத் தலைவலியைக் கொடுக்க விரும்பாத மங்களம் தேனீர் கொடுத்துவிட்டுச் சொல்லுவம் என்று எண்ணிக் கொண்டு தேனீர் தயாரிப்பதில் ஈடுபட்டாள். அப்பொழுது எதிர்பாராத விதமாக மூத்தமகன் ஓடிவந்து, "அப்பா நான் இனிமேல் பள்ளிக்கூடம் போகமாட்டேன். ஆமிக்காரர் சுட்டுப்போடுவாங்க, எனக்குப் பயமாயிருக்கு. பள்ளிக்கூடத்தால் வந்தவுடன் அம்மா விடமும் சொல்லிப்போட்டன். இனிமேல் நான் பள்ளிக்கூடம் போகமாட்டேன்," என்று உறுதியான தொனியிற் கூறினான். இதைக் கேட்டுக் கலவரம் அடைந்த சங்கரன் குசினிக்குள் நின்ற மனைவியிடம், இவன் என்னப்பா சொல்லுகிறான்? கேட்டீரே? என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாவினான்.

தேனீரைக் கொடுத்துவிட்டு ஆறுதலாய் இதைப்பற்றிச் சொல்லுவமென்றிருக்க அதற்குள்ள சொல்லிப்போட்டான் என்று தன்னுக்குள் புலம்பிக்கொண்டு தேனீர்க் கப்புடன் வெளியே வந்தாள் மங்களம். இந்தாங்கப்பா தேனீர். எனக்கும் சொன்னவன்தான். முதலில் நீங்கள் தேனீரைக் குடியுங்கோ, அப்புறம் நான் கதையைச் சொல்லுகிறேன் என்று கூறிக்கொண்டு தேனீரைக் கொடுத்தாள். கையோடு இரண்டு பிஸ்கற்றையும் கொடுத்தாள். பிஸ்கற்றைச் சாப்பிட்டுவிட்டு தேனீரைக் குடித்து முடித்த சங்கரன் களைத்துப் போன முதுகெலும்பிற்கு கொஞ்சம் ஆறுதல் கொடுப்பதற்காக ஈசிக்கதிரையில் சாய்ந்து கொண்டு, "இப்ப சொல்லப்பா விடையத்தை," என்றான். வழமை போன்று ஊர்ப்புதினமாய்த்தான் இருக்குமென்று சங்கரன் எதிர்பார்த்திருக்க மெதுவாகக் கதையைத் தொடக்கிய மங்களம், "இன்று காலை பத்துமணியளவில் நமது வீட்டிற்கு வந்த மூன்று ஆமிக்காரரும் ஒரு நம்மினத்தவனும்," என்று கதையைத் தொடங்கி எல்லாவற்றையும் படம்பிடித்துக் காட்டியது போன்று அப்படியே கூறினாள். அத்துடன் நின்றுவிடாது மகன் வந்து சொன்ன கதையையும் அச்சொட்டாய்ச் சொன்னாள்.

இவையெல்லாவற்றையும் கேட்டு அதிர்ச்சியும் பீதியும் அடைந்த சங்கரன், 'இனிமேல் உங்கள் அம்மாவை இங்கு வைத்திருப்பது ஆபத்தப்பா. வேறு எங்காவது அனுப்பிவிடுவம்,' என்றான் எடுத்த எடுப்பில். இந்த மனுசன் இதன் எதிர்விளைவு களைப் பற்றி ஆழமாகச் சிந்திக்காமல் எடுத்த எடுப்பில் இப்படிக் கூறுகிறார் என்பதை உணர்ந்து கொண்ட மங்களம், "நீங்கள் மேலோட்டமாய் யோசித்துவிட்டு இப்படிக் கூறுகின்றீர்கள் என்று நம்புகிறேன் அப்பா. நாங்கள் அம்மாவை வேறெங்காவது அனுப்பி விட்டால், நீங்கள் நினைக்கின்றீங்களா அம்மா இல்லையென்று அவன்கள் போய்விடுவாங்கள் என்று? உடனே எம்முடைய கழுத்தைத்தான் பிடிப்பாங்கள், நாமள்தான் திட்டம்போட்டு அனுப்பிவிட்டோமென்று.

நீங்கள் இல்லாத நேரத்தில் இன்றுபோல் வந்தால் என்னுடைய கழுத்திற்தான் அப்பா கையை வைப்பான்கள். அப்புறம் என்ன நடக்குமென்று நான் சொல்லித்தான் உங்களுக்குத் தெரிய வேண்டுமென்றில்லை. இந்த நாட்டில் நமது மக்களுக்கு என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பது தெரியும்தானே," என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையைச் சொல்லி முடிப்பதிற்குட் தலையில் கையை வைத்த சங்கரன் அதிர்ந்து போன நிலையில், "நீ சொல்லுவது சரிதான் அப்பா. நம்ம ஆட்கள் ஆமிக்காரரை வழிநடத்துகின்றபடியால் நிம்மதியாய் நம்மை வாழவிடமாட்டாங்கள்," என்றதும், நிம்மதி போனாலும் பரவாயில்லை, தற்போதைய நிலையில் நமது உயிர்கள் கூட தப்புமோவென்பது கேள்விக்குறியாக உள்ளது என்று கூறிய மங்களம் சிறிது யோசித்துவிட்டு, "நான் ஓர் ஐடியா சொல்லட்டுமே அப்பா?" என்றாள் எதையோ கண்டுபிடித்தவள் போன்று. மனுசிக்குச் சிலவேளைகளில் மூளை சுத்திவேலை செய்யும் என்று மனதிற்குள் நினைத்துக் கொண்ட சங்கரன் கவலையின் மத்தியிலும் ஒரு புன்சிரிப்பை வரவழைத்துக்கொண்டு, "சொல்லு பாப்பம் உன்னுடைய ஐடியாவை," என்று கூறிவிட்டு மனைவியின் வாயைப் பார்த்துக் கொண்டிருந்தான்.


என்னப்பா நாட்டு நிலமை சீரழிந்துகொண்டு போகின்றது. நிலமை சீராகி நாம் இந்த நாட்டில் நிம்மதியாய் வாழலாம் என்று எண்ணுவதும் நமது பிள்ளைகளுக்கு எதிர்காலம் இருக்கின்றது என நம்புவதும் நமது மடமைத்தனத்தின் உச்சக்கட்டமாய்த்தான் இருக்க முடியும். நிலமையைப் புரிந்துகொண்ட சனங்களெல்லாம் இந்தியாவிற்குப் போகின்றார்கள். பேசாமல் நாங்களும் இந்தியா விற்குப் போய்விடுவமே? அங்கு பேனால் கஸ்டமென்றாலும் நிம்மதியாய் இருக்க முடியும், பிள்ளைகளும் படிக்கலாம். அப்புறம் நமது நாடு திருந்தினாற் திரும்பிவரலாம்தானே? என்று கேட்டுவிட்டு என்ன பதில் வரப்போகின்றது என்று அமைதியாக இருந்தாள் மங்களம்.

அறையிலிருந்து கொண்டு மகளின் கேள்விகளைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த விசாலாட்சி தான் எண்ணிய படியே மகளும் நினைக்கிறாள் என்று பெரிதும் சந்தோசமடைந்தாள். இந்தியாவிற்குப் போனால் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் மகன் அனுப்பும் பணத்தையும் கொண்டு நிம்மதியாய் இருக்கலாம், நாட்டிற் பிரச்சினை தீரும்பொது திரும்பிவரலாம் என்பதுதான் விசாலாட்சியின் எண்ணமாயுமிருந்தது. மகளின் கேள்விக்கு மருமகனிடமிருந்து என்ன பதில் வரப்போகின்றது என்பதைக் காதுகொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தாள் விசாலாட்சி. மனைவியின் ஆலோசனையை உடன் ஏற்றுக் கொள்ளவோ அல்லது ஒரேயடியாய் உதாசீனம் செய்துவிடவோ முடியாத நிலையில், "அதற்கான நேரம் இன்னும் வரவில்லை என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதுகிறேன். உரிய நேரம் வரும்போது அதைப்பற்றி யோசிப்பம்," என்று கூறிவிட்டு எழுந்து சென்றுவிட்டான் சங்கரன்.



## அங்கம் 12

**ப**லவாறான எண்ணங்களுடனும் ஏக்கத்துடனும் ஒரு கிழமை உருண்டோடிவிட்டது மங்களத்திற்கும் தாய்க்கும். இன்று புதன்கிழமை, வழமைபோன்று வேலைக்குச் சென்ற சங்கரன் பிற்பகல் ஆறுமணியாகியும் வீடு திரும்பவில்லை. மங்களத்திற்கு ஒரே யோசனை. என்ன ஆச்சோ ஏது ஆச்சோ என்று ஏங்கிக் கொண்டிருந்தாள். வழமையாக ஐந்துமணிக்கெல்லாம் வீடு திரும்பும் மனிதனைக் காணவில்லையே என்று வாய் அடிக்கடி முணு முணுத்துக் கொண்டிருந்தது. மகளின் நிலையைப் பார்த்து தாய்க்கும் ஒரே கவலையும் யோசனையும். இருவரும் வழிமேல் விழிவைத்துப் பார்த்துக் கொண்டிருந்தனர். நேரம் ஆறரையையும் கடந்து ஏழுமணியை அண்மித்துக் கொண்டிருந்தது. கவலையும் பயமும் அதிகரிக்க அதிகரிக்க இருதயம் பலமாக அடிக்கத் தொடங்கியது மங்களத்திற்கு. அந்த வேளையில் திடீரென்று ஓர் ஆட்டோ வந்து கேற்றில் நின்றது. பதறியடித்துக் கொண்டு ஓடினாள் மங்களம். ஆட்டோவிலிருந்து மெதுவாக இறங்கிய சங்கரன் தலையில் ஒரு கட்டுப்போடப்பட்டிருந்ததை அவதானித்தாள் மங்களம். என்னப்பா நடந்தது? என்று பதட்டத்துடன் கேட்டாள். பதட்டப்படாத, வா வீட்டிற்குள் போய்க் கதைப்பம் என்று கூறிவிட்டு மெதுவாக நடந்து சென்றான். பின் தொடர்ந்தாள் மங்களம். வீட்டினுட் சென்ற சங்கரன் கைப்பெட்டியை வைத்துவிட்டு ஈசிக்கதிரையிற் சாய்ந்தான்.

கணவன் களைத்துச் சோர்ந்து போயிருப்பதை அவதானித்த மங்களம் மேற்கொண்டு எதுவும் கேட்காமல் உடனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குசினிக்குட் சென்று காப்பி தயாரித்துக் கொண்டு வந்து, "இந்தாங்க அப்பா, காப்பியை முதலிற் குடியுங்கோ, அப்புறம் கதைக்கலாம்," என்று சொல்லிக் கொடுத்துவிட்டுப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள். காப்பியைக் குடித்து முடித்த சங்கரனுக்கு மறுபிறவி எடுத்ததுபோன்ற ஓர் உணர்வு ஏற்பட்டது. மனைவியின் எதிர்பார்க் கையைப் புரிந்துகொண்ட சங்கரன், "இன்று வேலை முடிந்து வந்தபொழுது சில சாமான்கள் வாங்கிவருவம் என்று எண்ணி வவுனியா ரவுணிலுள்ள கடையொன்றிற்குப் போயிருந்தேன். சாமான்கள் வாங்கிக் கொண்டிருந்தபொழுது திடீரென்று ஒரு வெடிச்சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து இரண்டு மூன்று வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. சனங்கள் விழுந்தடித்து ஓடியவர் களும், விழுந்து படுத்தவர்களும், ஒரே அல்லோல கல்லோலம். நான் விழுந்து படுத்தேனா அல்லது விழுந்தேனா அல்லது சனங்களால் தள்ளி விழுத்தப்பட்டேனா ஒன்றுமே தெரியாது. ஆனால் விழுந்து கிடந்தேன்.


அரைமணித்தியாலம் கழித்து காயப்பட்டவர்களையும் இறந்தவர்களையும் வாகனங்களில் ஏற்றினார்கள். என்னையும் ஏற்றினார்கள். வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றனர். டாக்டர் என்னைச் சோதித்துவிட்டுச் சொன்னார், "தோட்டாச் சன்னமொன்று தலையை உராய்ந்து சென்றுள்ளது. அதனால் தோல் மட்டும் சேதமடைந்துள்ளதேயொழிய மண்டை ஓட்டிற்கோ உள்ளுக்கோ எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. உம்மைக் கடவுள் காப்பாற்றிவிட்டார்," என்று. அத்துடன் மருந்துகட்டி வீட்டிற்கு அனுப்பிவைத்தார், வந்துள்ளேன். தலையை உராய்ந்து சென்ற சன்னம் தலையை ஊடுருவிச் சென்றிருந்தால் என்று எண்ணும்போது இந்தியாவிற்குப் போவம் என்ற உன்னுடைய திட்டந்தான் எனக்கும் சரியாய்ப்படுகின்றது. இனிமேலும் இங்கிருந்து அநியாயமாய் நமது உயிரைப் பறிகொடுக்காமற் பேசாமல் இந்தியாவிற்குப் போய்விடவேண்டும்," என்று கூறினான். கணவனின் நிலமையை எண்ணி கவலையும் அதிர்ச்சியும் அடைந்திருந்த மங்களத்திற்கு இந்தியாவிற்குப் போவம் என்ற சங்கரனின் முடிவு ஓரளவிற்கு மன ஆறுதலை அளித்தது. மாமி ஆத்தைக்குப் பெரும் சந்தோசத்தை அளித்தது என்றால் மறுப்பதற்கில்லை.

இரண்டு கிழமைக்குள் இந்தியாவிற்குப் போவதற்கான ஆயத்தங்கள் எல்லாம் செய்தாகிவிட்டன. இன்று பிரயாணத் திற்கான நாள். ஒழுங்குபடுத்தியவர்களின் வேண்டுகோளுக்கிணங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார் பிரதேச கடற்கரைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பல்வேறு இடங்களிலிருந்தும் முப்பத்தைந்து பேர் வந்திருந்தனர். தற்போது நேரம் இரவு ஒன்பதுமணி. ஒன்பது பதினைந்துக்கு ஒரு வள்ளம் கரையை வந்தடைந்தது. எல்லோரும் கவனமாக வள்ளத்தில் ஏற்றப்பட்டனர். மொத்தமாகப் பத்து ஆண்களும் பதினைந்து பெண்களும் பத்துப்பிள்ளைகளும் வள்ளத்தில் அமர்ந்து கொண்டனர். சரியாகப் பத்துமணிக்கு வள்ளம் புறப்பட்டது. எந்தவித ஆபத்துமின்றிப் போய்ச்சேரவேண்டுமென்று எல்லோரும் தத்தமது குலதெய்வங்களை வேண்டிக் கொண்டனர்.




ஆரம்பத்தில் மெதுவாகச்சென்ற வள்ளம் அரைமைல் தூரம் சென்றதும் அதன் வேகத்தை அதிகரித்துக் கொண்டது. கடல் அலைகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து வள்ளத்தில் மோதிக் கொண்டிருந்தன. மோதிய அலைகளைப் பிளந்துகொண்டு வள்ளம் பாய்ந்து சென்று கொண்டிருந்தது. இயந்திரத்தின் கர்ச்சிக்கும் சத்தமும் கடல் அலைகளின் குமுறல் சத்தமும் ஒருவித அச்சத்தை எல்லோர் மனதிலும் ஏற்படுத்தியவண்ணம் இருந்தனவென்றால் மறுப்பதற்கில்லை.

இன்று பௌர்ணமி. பூரண சந்திரன் வெள்ளைவெளேர் என்று காட்சி கொடுத்தவண்ணம் மேல்நோக்கி நகர்ந்துகொண்டிருந் தான். நிலா ஒளியில் கடல் அலைகள் ஒன்றன்பின் ஒன்றாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைவிடாது வந்துகொண்டிருந்ததையும், சில அலைகள் நுரைகளைக் கக்கியபடி இரைச்சலுடன் வந்ததையும் தெளிவாகப் பார்க்கக்கூடியதாயிருந்தது. விண்மீன்கள் வானம்முழுவதும் நிறைந்து பரந்து கிடந்தன. குளிர்காற்று உடலை வருடிச் சென்றுகொண்டிருந்தது. இயற்கை எவ்வளவு அற்புதமானது என்று எண்ணி சங்கரன் மகிழ்ச்சியடைந்த போதும், இடையில் இலங்கைக் கடற்படையினர் வந்தால் அல்லது புயற்காற்று திடீரென்று எழுந்தால் என்று நினைத்தபொழுது மனதில் ஓர் அச்ச உணர்வு எழத்தான் செய்தது. இதை மனைவி பிள்ளைகளுக்குச் சொல்லி அவர்களையும் பீதியில் ஆழ்த்த விரும்பாத சங்கரன் தனது மனதிற்குள் வைத்துக்கொண்டு இறைவனையே தம்மைக் காப்பாற்றும்படி வேண்டிக் கொண்டிருந்தான்.

இப்பொழுது வள்ளம் பாக்குநீரிணையின் நடுப்பகுதியிற் சென்றுகொண்டிருக்கிறது. திடீரென்று ஒரு முகிற்கூட்டம் உருவாகியது. அதைத் தொடர்ந்து காற்று பலமாக வீச ஆரம்பித்தது. படிப்படியாகக் காற்று உக்கிரமடைந்து சென்றதைக் காணமுடிந்தது. எதிர்பாராதவிதமாக வானம் கறுத்தது. சந்திரன் நட்சத்திரங்களெல்லாம் மறைக்கப்பட்டுவிட்டன. ஒரே இருள் சூழ்ந்துகொண்டது. மழையும் புயலும் வருவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன என்று எல்லோரும் பேசிக்கொண்டனர். ஒவ்வொருவரிடமும் ஏற்கனவே குடிகொண்டிருந்த அச்சம் பெரும்பீதியாக மாறியது என்றால் மறுப்பதற்கில்லை. காற்று உக்கிரமடைந்ததைத் தொடர்ந்து அலைகள் பேர் இரைச்சலுடன் மலைபோல் எழுந்துவந்தன. வள்ளம் தொடர்ந்து வந்து கொண்டிருந்த மலைபோன்ற அலைகளை எதிர்த்துப் போராடியபடி சென்று கொண்டிருந்தது. இயந்திரத்தின் கர்ச்சிப்பும் அலைகளின் குமுறலும் காதுகளைப் பிளந்தன என்றால் வாஸ்தவம்தான். அபாய நிலமையை உணர்ந்த படகோட்டி அணியத்தில் இருந்தவர்களை இறங்கி உள்ளுக்கு இருக்கும்படி வேண்டினான்.

சிறிதாக மழைபெய்யத் தொடங்கியது. மலைபோன்று வந்த அலைகளில் மேலெழுந்த வள்ளம் அவற்றைத்தாண்டும்போது குதிப்பது போன்று உணரப்பட்டது. அப்போதெல்லாம் வள்ளம் பிளந்துவிடுமோ என்ற அளவிற்கு அதிர்வு ஏற்பட்டது. அத்துடன் கிறிச் கிறிச் என்ற சத்தமும் வள்ளத்திலிருந்து எழுந்தது. வள்ளம் மேலெழுந்து கீழே குதிக்கும்போது அடுத்துவந்த அலைகள் கடல்நீரை அள்ளி வள்ளத்தினுட் சொரிந்த வண்ணமிருந்தன. வள்ளத்தினுட் சொரியப்பட்டுக்கொண்டிருந்த கடல்நீரை இருவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைவிடாது அள்ளி வெளியே கொட்டிக்கொண்டிருந்தனர். எல்லோரும் நனைந்து தோய்ந்துவிட்டனர். வள்ளம் கவிழ்ந்து போகாத குறையாக ஆட்டம் கண்டது. எல்லோரையும் மரண பயம் பீடித்துக் கொண்டது. வள்ளம் மலைபோன்று வந்த அலைகளில் மேலெழுந்து அப்புறம் குதிக்கும்போது ஏற்பட்ட அதிர்வினாற் சிலர் வாய்விட்டுக் குழறத்தொடங்கினர். மற்றும் பலர் கடவுளே எங்களைக் காப்பாற்று, கடவுளே எங்களைக் காப்பாற்று என்று தொடர்ந்து வேண்டிக்கொண்டிருந்தனர். பெய்துகொண்டிருந்த மழையும், அடித்துக் கொண்டிருந்த குளிர்காற்றும் சொரிந்து கொண்டிருந்த கடல் நீரும் மக்களைக் குளிரில் நடுங்க வைத்தன. பிள்ளைகள் எல்லாம் சத்தமிட்டு அழத் தொடங்கினார்கள். அவர்களைப் பார்த்து தாய்மாரும் அழத்தொடங்கிவிட்டனர்.

காற்றின் உக்கிரமும் அலைகளின் குமுறலும் குறைந்தபாடாயில்லை. மரணப்பீதி தொடர்ந்து அதிகரித்துச் சென்றது. சங்கரனின் பிள்ளைகள் மனைவி மாமி எல்லோரும் அழத்தொடங்கிவிட்டார்கள். சங்கரனும் அழாக்குறையாக மரணபயத்தில் நடுங்கினான். சுக்கானி எல்லோரையும் அமைதியாக இருக்கும்படி உரத்துக் கேட்டுக் கொண்டான். அந்த அல்லோல கல்லோல நிலமையில் அதை யாரும் கருத்திற் கொண்டதாய்த் தெரியவில்லை. சுக்கானி வருகின்ற அலைகளைக் கூர்ந்து கவனித்து தனது திறமை முழுவதையும் பயன்படுத்திப் போராடிக் கொண்டிருந்தான். எப்படியும் மக்களைப் பாதுகாத்துவிட வேண்டுமென்பதே அவனுடைய குறிக்கோளாயிருந்தது.

இதுவரை வராத மிகப்பெரிய அலையொன்று மலைபோல் வள்ளத்தை நோக்கி வருகின்றது. அதிலிருந்து வள்ளத்தைக் காப்பாற்ற சுக்கானி தயாராகிறான். வந்துவிட்டது, வள்ளம் அலையின் உச்சத்திற்கு எழும்புகின்றது. அடுத்து வந்த பள்ளத்தில் பாய்ந்து குதிக்கின்றது, பயங்கர அதிர்வு. ஒரே மரண ஓலம். கடவுளே எங்களைக்காப்பாற்று என்று எல்லோரும் ஓலமிட்டு அழுகிறார்கள். அந்தப் பள்ளத்திலிருந்து வள்ளம் எழுவதிற்குள் அடுத்துவந்த இராட்சத அலையொன்று உருண்டு வந்து வள்ளத்தை மூடியது. அதைத் தொடர்ந்து வந்த அலைகள் மிதந்த மக்களை அடித்துச் சென்றன. வள்ளம் மூழ்கத் தொடங்கியது.

நீரில் மூழ்கிய சங்கரன் உயிருக்காகப் போராடியபொழுது கையில் ஒரு மரப்பெட்டி அகப்பட்டது. அதை இறுகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிப்பிடித்துக் கொண்டான். டீசல் வெற்றுரின்கள் நிரப்பப்பட்ட பெட்டி அது. நல்ல மிதவை. சங்கரனுக்கு நீச்சலும் ஓரளவிற்குத் தெரியும். முதலில் அலைகளின் நுரைகளினால் மூச்சுத்திணறி அவஸ்தைப்பட்ட சங்கரன் நேரம் செல்லச் செல்ல சமாளித்து அவற்றிற்கு ஈடுகொடுக்கப் பழகிவிட்டான். ஏறக்குறைய ஒரு மணித்தியாலம் கொந்தளித்த கடலோடும் குமுறிய அலைகளோடும் கடுமையாகப் போராடினான். அப்புறம் காற்றின் வேகம் படிப்படியாகத் தணியத் தொடங்கியது. வானம் மறுபடியும் வெளித்தது. சந்திரனும் நட்சத்திரங்களும் திரும்பவும் காட்சி கொடுத்தன, சமுத்திராதேவி சாந்தமடைந்தாள். இப்போது பெரிய போராட்டம் குறைந்து சங்கரனாற் தனது நீச்சற் பயிற்சியைக் கொண்டும் தனது வல்லமையைக் கொண்டும் தாக்குப்பிடிக்க முடிந்தது. ஆட்டம் கண்ட மனோதைரியம் மறுபடியும் வந்தது. பெட்டியைப் பிடித்த பிடியிலிருந்து சிறிதுகூட கைகள் நழுவவில்லை. சந்திரன் சங்கரனைப் பார்த்தபடி கீழ்நோக்கி நகர்கிறான். "ஆண்டவா! இன்னும் எத்தனை மணித்தியாலங்களுக்கு எனக்கு இந்த அவலம்? என்னைக் காப்பாற்றுவாயா?" என்று மனதிற்குட் கேட்கிறான்.

திடீரென்று வெளிச்சமொன்று அவன்மீது விழுகின்றது. வெளிச்சம் வந்த திசையை நோக்கிப் பார்க்கிறான். ஏதோவொரு கடற்கலத்திலிருந்துதான் அந்த வெளிச்சம் வருகின்றது. அது நேவியாயும் இருக்கலாம் அல்லது சரக்குக் கப்பலாயுமிருக்கலாம் என்று ஊகித்துக் கொண்டவனுக்கு நம்பிக்கை ஒளி பிறக்கின்றது. வைத்தகண் வாங்காமல் பார்க்கிறான். அதைப்பார்த்துக் கொண்டு அதை நோக்கி நீந்த ஆரம்பிக்கிறான். மெதுமெதுவாக அந்தக்கலம் அவனை நோக்கி வருகின்றது. மனதில் தைரியம் பிறக்கின்றது. அந்தக்கலம் நன்றாக நெருங்கிவிட்டது. பளிச்சென்ற நிலா ஒளியில் அதில் எழுதப்பட்டிருந்த எழுத்துக்கள் நன்கு தெரிகின்றன. றோயல் இந்தியன் நேவி. நன்றாக நெருங்கிவிட்டது.

அவர்கள் தன்னைக் கண்டுவிட்டார்கள் என்று உறுதிப்படுத்திக் கொண்டதும், "என்னைக் காப்பாற்றுங்கள் என்னைக் காப்பாற்றுங்கள்" என்று முடிந்த அளவிற்கு உரத்துக் கத்தினான். கயிறு ஒன்று வந்து அவனுக்கு முன் விழுந்தது. அதைத் தொடர்ந்து, "கயிற்றைப்பிடி," என்று ஒருவன் தமிழில் உரத்துச் சொன்னான். உடனே கயிற்றைப் பிடிப்பதற்கு முயன்றான் சங்கரன். கைகள் பெட்டியைவிட்டு விலக மறுத்தன. அப்பொழுது தான் புரிந்தது அவனுக்குக் கைகள் இரண்டும் விறைத்துவிட்டன என்று. பல மணித்தியாலங்கள் மரணப் போராட்டத்துடனும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பீதியுடனும் பெட்டியை இறுகப் பிடித்திருந்தபடியினால் கைகள் இரண்டும் விறைத்துவிட்டன. பெட்டியைவிட்டு அகற்றமுடியாத அளவிற்கு மரத்துப்போயின. இதை உணர்ந்து கொண்ட சங்கரன், "எனது கைகள் இரண்டும் விறைத்துவிட்டன. பெட்டியைவிட்டு எடுக்க முடியாதிருக்கின்றது" என்று உரத்துச் சொன்னான். ஒருசில நிமிடத்தில் நீச்சல் உடையில் வந்த ஒரு நேவிக்காரன் கடலில் குதித்தான். குதித்தவன் நீந்திவந்து கயிற்றை எடுத்து கமக்கட்டிற்குக்கீழ் சங்கரனைச் சுற்றி ஒரு கட்டுப்போட்டுவிட்டு, "மெதுவாக இழுத்துப்பிடியுங்கோ," என்று மேல்நின்றவர்களைக் கேட்டான். அவர்கள் இழுத்துப்பிடித்துக் கொண்டிருக்க மெதுவாகச் சங்கரனுடைய கைகளைப் பெட்டியிலிருந்து பிரித்தெடுத்தான். இதைத்தொடர்ந்து சங்கரனை இழுத்தும் தாங்கியும் படகின் மேல் தட்டிற்கு எடுத்தனர். உடனே முதல் உதவி அளிக்கப்பட்டது. கைகளை இயங்கச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. ஏறக்குறைய ஒரு மணித்தியாலத்தின் பின் சாதாரண நிலைக்குத் திரும்பினான் சங்கரன்.

ஏதோ திடீரென்று ஞாபகத்திற்கு வந்ததுபோன்று சுற்றுமுற்றும் விழித்துவிழித்துப் பார்த்தான். பார்த்துவிட்டு விம்மிவிம்மி அழத்தொடங்கினான். அப்பொழுது அங்கு நின்ற தமிழ் நேவிக்காரன் ஒருவன்," ஏன் அப்பா அழுகிறாய்? உன்னைத்தானே நாங்கள் காப்பாற்றி விட்டோமே!" என்றதும் "எங்கே என்னுடைய மனைவியும் பிள்ளைகளும் மாமியும்?" என்று கேட்டுவிட்டு வீரிட்டு அழுதவன் சில நிமிடங்களில் மயங்கிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாய்ந்தான்.

விழித்துப் பார்த்தபொழுது ஒரு வைத்தியசாலையிற் கிடப்பதை அவன் உணர்ந்தான். அப்பொழுது அங்கு ஒரு பெண்தாதி வந்தாள். இவன் விழித்துக் கொண்டதைப் பார்த்த அந்த தாதி அவனிடம் சென்று, "எப்படி சார் இருக்கிறீங்கள்?" என்று அனுதாபத்தோடு கேட்டாள். அவளையும் அந்த றூமையும் தான் கிடந்த கட்டிலையும் வியப்போடு பார்த்துவிட்டு, "எப்படி நான் இங்கு வந்தனான்? இது வைத்தியசாலைதானே?" என்று கேட்டான். அவனின் நிலமையைப் புரிந்துகொண்ட அந்தத் தாதி, 'ஆம் சார், இது இராமனாதபுரம் வைத்தியசாலை. நீங்கள் நடுக்கடலில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தபொழுது உங்களை இந்தியன் நேவி காப்பாற்றி மயங்கிய நிலையில் உங்களை இங்குகொண்டு வந்து சேர்த்தனர். இப்பொழுது நடந்தவைகள் உங்களுக்கு ஞாபகத்திற்கு வருகின்றதா சார்" என்று கேட்டதும், "ஆம்" என்று சொல்லிவிட்டு அழத்தொடங் கினான். "அழாதையுங்கோ சார்," என்று கேட்டு விட்டு வெளியே சென்றாள் அந்த தாதி. சில நிமிடங்களில் டாக்டரும் பொலிஸ் உத்தியோகத்தர்களும் வந்தனர். சிறிதுநேரம் கழித்து உணவுடன் வந்தாள் அந்தத் தாதி. டாக்டர் சங்கரனைச் சோதித்த பிற்பாடு உணவைச் சாப்பிடும்படி வேண்டினார். அப்புறம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் நடந்தவை எல்லாவற்றையும் கேட்டறிந்த பிற்பாடு சங்கரனை மண்டபம் அகதிகள் முகாமில் சேர்த்தனர்.

மண்டபம் அகதி முகாமிற்கு அனுப்பப்படுவதற்குமுன் பொலிஸ் திணைக்கள பொறுப்பதிகாரி சங்கரனை பூரண விசாரணைக்கு உட்படுத்தினார். விசாரணை ஆரம்பமாகியது.

பொறுப்பதிகாரி: (சங்கரனைப் பார்த்து) உமது முழுப்பெயர் என்ன?

சங்கரன்: எனது முழுப்பெயர் சரவணமுத்து சங்கரன். சார், உங்களுடைய பெயரை அறியலாமா சார்.

பொப்பதிகாரி: என்னுடைய பெயர் கருங்காலிக் கண்ணன்.

சங்கரன்: (வாய்நிறையச் சிரித்தபடியே) அற்புதமான பெயர் சார்.

பொறுப்பதிகாரி: என்ன நக்கலா?

சங்கரன்: (வழிந்த சிரிப்பும் அச்சமும் கலந்த பார்வையுடன்) அப்படியொன்றுமில்லை சார்.

பொறுப்பதிகாரி: எனது பெயர் கண்ணன். எனது நிறத்தையும் உடலமைப்பையும் பார்த்துவிட்டு எனது கிராம மக்கள் கருங்காலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணனென்று என்னை அழைக்கத் தொடங்கி விட்டார்கள் (புன்சிரிப்புடன்)

சங்கரன்: அப்படியா சார்........................ நல்லது ....................

பொறுப்பதிகாரி: நீர் இலங்கையில் எந்த இடத்தைச் சேர்ந்தனீர்?

சங்கரன்: நான் தமிழீழத்திற் கீழக்கரை மாவட்டத்திற் குஞ்சிக்குளம் கிராமத்தைச் சேர்ந்தனான்.

பொறுப்பதிகாரி: (சங்கரனை முறாய்த்துப் பார்த்துக்கொண்டு) இங்கு தமிழீழம் என்ற சொல்லைப் பயன்படுத்தக்கூடாது, புரியுதா? (அதட்டிச் சொன்னார்)

சங்கரன்: (பயத்துடன்) உண்மையைத்தானே சொன்னேன் சார், அது தப்பா?

பொறுப்பதிகாரி: தப்புத்தான், தமிழீழம் என்று ஒரு நாடு கிடையாது, தெரியுதா?

சங்கரன்: (ஆச்சரியத்தோடு) என்ன சார் சொல்லுகிறீங்கள்? நான் உண்மையாகத் தமிழீழத்திலிருந்துதான் வந்துள்ளேன் சார்.

பொறுப்பதிகாரி: What non sense you are talking? இதற்குமேலும் தமிழீழம் என்னும் சொல்லைப் பயன்படுத்தினால் உம்மை உள்ளே தூக்கிப் போடுவேன், ஜாக்கிரதை!

சங்கரன்: (பயந்து நடுங்கிக்கொண்டு) ஏன் சார் அப்படிக் கூறுகின்றீர்கள்?

பொறுப்பதிகாரி: தமிழீழம் என்ற சொல்லைப் பாவிப்பது இலங்கை அரசாங்கத்திற்குப் பிடிக்காது, புரியுதா?

சங்கரன்: சிங்களவனுக்குப் பிடிக்காது என்று எனக்கு ஏற்கனவே தெரியும். ஆனால் நான் இப்போ தமிழ் நாட்டிலல்லோ இருந்து உங்களுடன் பேசிக்கொண்டிருக்கிறேன். இது எப்படி சார் சிங்களவனுக்குத் தெரியவரும்?

பொறுப்பதிகாரி: மிஸ்ர சங்கரன், நான் இந்திய அரசாங்கத்தின் பொறுப்புள்ள ஒரு பொலிஸ் உத்தியோகத்தர். இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் ஒரு இணைப்பு, பிணைப்பு, ஒரு நட்பு, ஒரு காதல் உண்டு. இதற்கு நான் மதிப்பளிக்க வேண்டும். இது எனது கடமை. நீயும் ஒரு தமிழன் நானும் ஒரு தமிழன் என்றபடியாற்தான் இதை உனக்குச் சொல்லுகிறேன். என்னுடைய தொழிலுக்கு ஆப்பு வைப்பதுபோற் பதில் சொல்ல வேண்டாம். புரியுதா மிஸ்ர சங்கரன்? (சிறிது கடுந்தொனியிற் சொன்னார்)

சங்கரன்: (பொறுப்பதிகாரியின் தர்மசங்கடத்தைப் புரிந்துகொண்டு) புரியுது சார், புரியுது. நான் இனி தமிழீழம் என்ற சொல்லைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தாமல் பார்த்துக்கொள்ளுகிறேன்.
பொறுப்பதிகாரி: நல்லது, நீர் இலங்கையில் எந்த இடத்தைச் சேர்ந்தனீர்?
சங்கரன்: நான் இலங்கையில் கீழக்கரை மாவட்டத்திற் குஞ்சிக்குளம் கிராமத்தைச் சேர்ந்தனான்.
பொறுப்பதிகாரி: Good! அப்படியே இலங்கை அல்லது ஸ்ரீலங்கா என்ற சொல்லைப் பயன்படுத்தவும்.
சங்கரன்: சார், மன்னிக்கவேண்டும். இலங்கையென்ற சொல்லைப் பயன்படுத்துவேன், ஆனால் ஸ்ரீலங்கா என்ற சொல்லை என்னால் பயன்படுத்த முடியாது.
பொறுப்பதிகாரி: ஏன் அப்படிச் சொல்லுகிறீர்?
சங்கரன்: சார், ஸ்ரீலங்கா என்பது சிங்களச் சொல். இலங்கை என்பது தமிழ்ச்சொல். நான் ஒரு தமிழன். நான் ஏன் சார் ஸ்ரீலங்கா என்று சிங்களச் சொல்லைப் பாவிக்கவேண்டும். நான் இலங்கை என்ற தமிழ்ச் சொல்லையே உபயோகிப்பேன்.
பொறுப்பதிகாரி: ஓ! அப்படியா விசயம்!! அது சரி, இலங்கை என்ற சொல்லு இலங்கை அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதா?
சங்கரன்: ஆம் சார், அதுதான் எங்களுடைய தமிழர் விடுதலைக் கூட்டணி புரிந்த பெரிய சாதனை.
பொறுப்பதிகாரி: ஓ! அப்படியா விசயம்!! அப்படியானால் நீங்கள் இலங்கை என்ற சொல்லையே பயன்படுத்தலாம்.
சங்கரன்: ரொம்ப நன்றி சார்.
பொறுப்பதிகாரி: எப்படி நீங்கள் இந்தியாவிற்கு வந்தீங்கள்?
சங்கரன்: நீந்தி வந்தேன் சார்
பொறுப்பதிகாரி: What? நீந்தியா?
சங்கரன்: (பதட்டத்துடன்) சார், மன்னிக்க வேண்டும். கடலில் நீந்திக் கொண்டிருந்தபொழுது இந்தியன் நேவி என்னைக் காப்பாற்றி இங்கு கொண்டுவந்து சேர்த்தது.
பொறுப்பதிகாரி: என்னப்பா சொல்லுகிறாய்? தமிழீழத்திலிருந்து நீந்தியா இந்தியாவிற்கு வந்து கொண்டிருந்தாய்? O! My God!! எனக்கும் தமிழீழம் என்ற சொல்லு வாயில வருகிது. Sorry, ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியாவிற்கு நீந்தியா வரப்புறப்பட்டாய்?
சங்கரன்: சார், உங்களுடைய கேள்விக்கு பதில் அளிப்பதற்கு முன் ஒரு விடையத்தைச் சொல்ல விரும்புகிறேன்.
பொறுப்பதிகாரி: என்ன சொல்லப் போறாய்?
சங்கரன்: பாத்தீங்களா சார், உங்களுக்குத் தெரியாமலேயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுடைய வாய் தமிழீழம் என்ற சொல்லை உச்சரித்து விட்டது, ஏன்? நாமள் தமிழர். அந்த உணர்வு உங்களுக்கும் உண்டு. அதனாற்தான் தமிழீழம் என்ற சொல்லை சட்டமறுப்பாயிந்தபோதும் சொல்லிவிட்டீர்கள்.

பொறுப்பதிகாரி: (அங்காலும் இங்காலும் பார்த்துவிட்டு) மெதுவாய்ச் சொல்லப்பா, யாரும் கேட்டிடப் போறாங்கள். அப்புறம் என்னுடைய தொழிலே போய்விடும்.

சங்கரன்: சார், புரியுது புரியுது உங்களுடைய நிலமை எனக்கு நன்றாகப் புரியுது. சார், நான் நீந்தியும் வரவில்லை, பறந்தும் வரவில்லை, எல்லோரையும் போன்று நானும் கள்ளத் தோணியிற்தான் வந்தேன். சார் நான் மட்டுமல்ல, எனது மனைவி, மூன்று பிள்ளைகள், எனது மாமியார், அத்தோடு இன்னும் முப்பது தமிழர்கள் கள்ளத்தோணியில் வந்துகொண்டிருந்த பொழுது எதிர்பாராதவிதமாய்த் திடீரென்று ஏற்பட்ட சுழற்காற்றினாலும் மழையாலும் கடல் குமுறிக் கொந்தளித்தது. அதில் அகப்பட்ட கள்ளத்தோணி கடலில் மூழ்கிவிட்டது. அப்பொழுது குமுறிவந்த கொலைகார அலைகள் அவ்வளவு பேரையும் அடித்துச் சென்றுவிட்டன என்னைத்தவிர. (என்று கூறியபொழுது மயங்கி விழுந்தார் சங்கரன்)

பொறுப்பதிகாரி: O! my God! இங்க ஓடி வாங்கோ, ஓடி வாங்கோ (அங்கு நின்ற சிலர் ஓடிவந்து தண்ணீர் தெளித்து சங்கரனை மறுபடியும் சாதாரண நிலமைக்குக் கொண்டுவந்தனர். விசாரணையைத் தொடரவேண்டிய இக்கட்டான கட்டத்திலிருந்த பொறுப்பதிகாரி, தொடர்ந்து) அப்புறம் என்ன நடந்தது?

சங்கரன்: கள்ளத்தோணி கடலில் மூழ்கிப்போக நான் நீந்தத் தொடங்கினேன். நீந்திக் கொண்டிருந்த வேளையிற் சில மணித்தியாலம் கழித்து அங்கு வந்த இந்தியன் நேவி என்னைக் காப்பாற்றி இங்கு கொண்டு வந்து சேர்த்துள்ளது.

பொறுப்பதிகாரி: O! My God!! அப்ப... உங்களுடைய பெண்டாட்டி பிள்ளைகள், மாமி எல்லோரும் இறந்து போய்விட்டாங்களா? சரி... சரி... இதற்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டியதில்லை. எனக்கு எல்லாமே புரியுது

சங்கரன்: ரொம்ப நன்றி சார்.

பொறுப்பதிகாரி: நீங்கள் ஒரு நீச்சல் வீரனா?

சங்கரன்: அப்படிச் சொல்லமுடியாது சார். காரணம் என்னுடைய வீரத்தை நிரூபிக்கவில்லை. ஆனால் இரண்டு மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணித்தியாலங்கள் என்னாற் தொடர்ந்து நீந்த முடியும்.
பொறுப்பதிகாரி: நீ பெரிய நீச்சல் வீரனப்பா!
சங்கரன்: நன்றி சார்.
பொறுப்பதிகாரி: நீங்கள் புலிகள் உறுப்பினராய் இருந்துள்ளீர்களா? அல்லது அவர்களுக்கு உதவி ஒத்தாசை புரிந்துள்ளீர்களா?
சங்கரன்: நல்ல கேள்வி சார், புலிகளிற் பல வகை உண்டு. சிறுத்தைப் புலி, வேங்கைப்புலி, கரும்புலி என்று. நீங்கள் எந்தப் புலியை சார் கருதுகிறீங்கள்?
பொறுப்பதிகாரி: என்ன நக்கலா? நான் கேட்பது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் அதாவது LTTE இல் அங்கத்தவராயிருந்தீரா? அல்லது அவர்களுக்கு உதவி ஏதும் புரிந்தீரா?
சங்கரன்: ஓ! அதுவா!! இதுவும் நல்ல கேள்விதான் சார். நான் வாழ்ந்த கிராமம் புலிகள் நிறைந்த கிராமம். அங்கு சிறுத்தைப் புலிகள் அதிகம், வேங்கை ஒரு சில, கரும்புலி அங்கு அறவே இல்லை. ஆனால் நீங்கள் கூறுகின்ற விடுதலைப் புலிகளை நான் பார்த்ததில்லை. ஆனால் அவற்றின் வாலைப் பார்த்திருக்கிறேன்.
பொறுப்பதிகாரி: என்ன மறுபடியும் நக்கலா?
சங்கன்: இல்லை சார், உண்மையைத்தான் சொல்லுகிறேன். நான் கூறுவது உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை. நான் ஓர் இலங்கை அரசாங்க ஊழியன். புலிகள் என்றால் எனக்குப் பயம். புலிகள் வருகுதென்றால் நான் எங்காவது உடனே ஓடி ஒழித்துக் கொள்வேன். அவை போனபிற்பாடு எட்டிப் பார்ப்பேன். அப்பொழுது அவற்றின் வாலைத்தான் பார்க்க முடிந்ததேயொழிய புலியை முழுவதாய் ஒருக்காலும் பார்க்க முடியவில்லை. அப்படிப்பட்ட நான் எப்படி சார் அவைகளுக்கு உதவி பண்ண முடியும்?
பொறுப்பதிகாரி: சரி, புலிகளைப்பற்றி ஏதாவது கேள்விப் பட்டிருக்கிறாயா?
சங்கரன்: நிச்சயமாய்க் கேள்விப்பட்டிருக்கிறேன். எனக்குப் பொய் சொல்லிப் பழக்கமில்லை. நான் சொல்லுபவை யாவும் உண்மை. உண்மையில் இலங்கையில் சிங்கம் இல்லை சார். ஆனால் சிங்கத்தின் தோல் போர்த்த கழுதைகள் உண்டு. அத்தோடு புலித்தோல் போர்த்த நரிகளும் உண்டு. புலி வருகிறது என்றால் இவை எல்லாம் கிலி பிடித்து ஓடி ஒழித்துக்கொள்ளுங்கள். அப்புறம் புலிகளுக்கென்ன வேலை. ஓர் எக்காளச் சிரிப்புடன் வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்கும் புலிகள். இவையெல்லாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கேள்விப்பட்டதுதான் சார். இதற்கு மேல் எனக்கு புலிகளைப் பற்றி ஒன்றும் தெரியாது சார்.

பொறுப்பதிகாரி: ஏன் இந்தியாவிற்கு நீர் வந்தனீர்?

சங்கரன்: இது நல்ல கேள்வி மட்டுமல்ல, கேட்கப்பட வேண்டிய கேள்வியும்கூட. சார், இதற்கான பதிலை மிகச்சுருக்கமாய்ச் சொன்னால் என்னுடைய உயிருக்கு இலங்கையில் உத்தரவாதமில்லை. சிறிது விளக்கமாய்ச் சொன்னாற் கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு, பாலியல் கொடுமை, பாலியல் கொலை, ஆட்கடத்தல், காணாமற்போதல், கப்பம் பெறுதல், காட்டிக்கொடுத்தல் என்பன சர்வசாதாரணமாய் இடம்பெறும் நாளாந்த நிகழ்வுகளாய் மாறிவிட்டன. அத்தோடு, விமானக் குண்டுவீச்சு, பீரங்கித் தாக்குதல், ஷெல் அடி, துப்பாக்கி வேட்டுக்கள், கிறனைட் வீச்சு என்பன இடைவிடாது பொழிந்த வண்ணம் இருக்கின்றன.

மழைபொழியத் தவறினாலும் இவை பொழியத் தவறுவதில்லை. மழை வெள்ளம் குறைந்தாலும் இரத்த வெள்ளம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருபோதும் குறைவதில்லை. எங்கும் மரணக்குவியல், ஒரே மரண ஓலம். உண்ண உணவில்லை, உடுக்க உடையில்லை, இருக்க வீடில்லை, குடிக்க நீரில்லை, நோய்க்கு மருந்தில்லை. உயிரைக் காப்பாற்றுவதற்காக அதைக்கையிற் பிடித்துக் கொண்டு ஓடிஓடி இடம்பெயர்தல் தொடர்கதையாய் இருக்கிறது. இந்த நிலையில் எப்படி சார் நான் என்னுடைய உயிரைக் காப்பாற்ற முடியும்?

பொறுப்பதிகாரி: நிலமை சீராகினால் திரும்பிப் போவீரா?

சங்கரன்: சார், இந்தக் கேள்விக்கு இப்போது என்னால் பதில் சொல்ல முடியாது சார், மன்னிக்க வேண்டும்.

பொறுப்பதிகாரி: ஏன் பதில் சொல்ல முடியாது

சங்கரன்: சார், சுருக்கமாயும் விளக்கமாயும் சொன்னால், ஈழத்தமிழனைக் கொத்தடிமையாக்கி வைத்திருக்கவேண்டும் என்பதுதான் சிங்களவனின் அடிப்படை எண்ணம். இதற்கு அடிபணியாது எதிர்க்கும் அத்தனை தமிழனையும் கொன்று குவித்துவிட வேண்டுமென்பதுதான் தற்போதைய அவனுடைய செயற்பாடு. இந்த நிலமையில் எப்படிச் சார் நான் திரும்பிப் போக முடியும்?

பொறுப்பதிகாரி: அதென்னப்பா கொத்தடிமை என்பது? எனக்குப் புரியவில்லையே!

சங்கரன்: தொத்தடிமை என்பது சார், நான் என்னுடைய வீட்டில் எனது பெண்டாட்டி, வயது வந்த பெண்பிள்ளைகளுடன் இருக்கிறேன் என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது ஆயுத தாரிகள் வந்து எனது பெண்டாட்டியை அல்லது எனது மகளை வலோர்க்காரமாய் இழுத்துச் செல்லும்பொழுது நான் கைகட்டி வாய்மூடி நிற்கவேண்டும். அவர்கள் திரும்பி வந்தாலென்ன வராது போனாலென்ன அதைப்பற்றி நான் யாரிடமும் சொல்லப்படாது. இதுதான் இன்று வடக்கிலும் கிழக்கிலும் காணப்படும் உண்மை நிலவரம். இதற்கு மேலும் என்ன சொல்லவேண்டும் சார்?

பொறுப்பதிகாரி: புரியுது புரியுது எல்லாம் புரியுது

சங்கரன்: நன்றி சார்.

பொறுப்பதிகாரி: இதிற் கையொப்பம் போடும்.

சங்கரன்: இந்தாங்க சார் போட்டாச்சு.

பொறுப்பதிகாரி: விசாரணை முடிந்து விட்டது. நீங்கள் மண்டபம் அகதிமுகாமிற்கு போய் அங்கு தங்கியிருக்கலாம். சரியா?

சங்கரன்: சார், இறுதியாக ஒரு கேள்வி, இலங்கையில் தமிழர்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து சிங்களவன் கள்ளத்தோணி என்கிறான். இப்பொழுது தமிழீழத்திலிருந்து, மன்னிக்கவேண்டும், இலங்கையிலிருந்து சிங்களவனின் கொலை வெறியாட்டத்திற்குப் பயந்து வரும் தமிழ் அகதிகளை இந்திய அரசு கள்ளத்தோணி என்கிறது. அதனால் முகாமில் அடைக்கிறது. இந்த ஈழத்தமிழனுக்கு வெள்ளத்தோணியே கிடையாதா சார்? இவனுடைய ஆரம்பமும் முடிவும் கள்ளத் தோணிதானா சார்?

பொறுப்பதிகாரி: நல்லதோர் கேள்வி. இதற்கு பதில் கூறுவதற்கு என்னால் முடியாது. நானும் ஒரு தமிழன் என்ற ரீதியில் உங்களுடைய ஆதங்கம் எனக்குப் புரிகின்றது. இதற்குரிய பதிலை ஈழத்தமிழர்களாகிய, மன்னிக்க வேண்டும், இலங்கைத் தமிழர்களாகிய நீங்கள்தான் கண்டுபிடிக்கவேண்டும்.

சங்கரன்: நீங்கள் சொல்லுவது சரிதான் சார். அழுதழுதும் பிள்ளை அவளே பெறுவாள். பிள்ளை பெறுவதில் ஒருத்திக்கு வலி என்பதற்காக இன்னொருத்தி அவளுக்காகப் பிள்ளை பெற்றுக் கொடுக்க முடியாது. என்ன பாடுபட்டாலென்ன அவளுடைய பிள்ளையை அவளே பெற்றாகவேண்டும். அதேகதிதான் தமிழீழத் தமிழனின் இன்றைய கதையும்.

பொறுப்பதிகாரி: சரியாய்ச் சொன்னீங்கள். இதற்குமேல் சொல்லுவதற்கு என்னிடமொன்றுமில்லை. நீங்கள் அகதிமுகா மிற்குப் போய் அங்கு தங்கலாம். விசாரணை முடிவடைந்துவிட்டது.

சங்கரன்: கடைசியாக ஒரு கடைசிக் கேள்வி சார், சிங்களவனின் ஆரம்பகர்த்தா விஜயன் இலங்கைக்கு வந்தது கள்ளத் தோணியிலா? அல்லது வெள்ளத் தோணியிலா? இதற்கு நீங்கள் பதில் சொல்லவேண்டியதில்லை சார். நானே கண்டுபிடிக்க முயற்சிக்கிறேன். ரொம்ப நன்றி சார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் 13

மறுநாள் இரவு முரளியின் தொலைபேசி மணி ஒலித்தது. திடீரென்று விழித்து மணிக்கூட்டைப் பார்த்தான். இரவு ஒருமணி காட்டியது மணிக்கூடு. "யாரப்பா இந்த நேரத்தில்," என்று அலுத்துக் கொண்ட முரளி, மனதில் ஏதோ திடீரென்று தோன்றியவன் போன்று, "வெளிநாட்டுக் கோல் போன்ற சத்தம் கேட்கின்றது," என்று கூறிக்கொண்டு உடனே றிசீவரை எடுத்து "ஹலோ" என்றான். சில விநாடிகளின் பின், "ஐயோ அம்மா! என்னைவிட்டுப் போய் விட்டாயா! என்னைவிட்டுப் போய்விட்டாயா! உன்னைக் காப்பாற்ற முடியாத பாவியாகப் போய்விட்டேனே அம்மா," என்று ஓலமிட்டு அழுதான். இதைக்கேட்டுத் துடித்துப் பதைத்து எழுந்த சஞ்சயா, "என்னப்பா நடந்தது?" என்று அங்கலாய்ப்போடு கேட்டாள். அம்மாவும் அக்காவும் பிள்ளைகளும் இந்தியாவிற்கு வந்துகொண்டிருந்தபொழுது படகு மூழ்கி எல்லோரும் இறந்துவிட்டார்களாம்," என்று கூறிவிட்டுத் தொடர்ந்து அழுதான். "கடவுளே! என்ன கொடுமை அப்பா! இந்த மக்களுடைய மரணத்திற்கு முடிவே இல்லையா," என்று தனது அனுதாபத்தை வெளிப்படுத்துபவள் போன்று கூறிவிட்டு அமைதியாக இருந்தாள் சஞ்சயா.

சிறிதுநேரம் அழுதால் கவலை குறையும் என்று எண்ணிய சஞ்சயா அதற்குமேல் எந்தக் கேள்வியும் அவனிடம் கேட்கவில்லை. கணவனுடைய அழுகை முடிவிற்கு வந்தபிற்பாடு, "யார் அப்பா கோல் எடுத்தது?" என்று கேட்டாள். அத்தான் இந்தியாவிலிருந்து எடுத்தவர். அவர்கள் வந்த படகு கடலில் மூழ்கியபோது அவரைத்தவிர மற்றைய எல்லோரும் இறந்துவிட்டார்களாம். இப்பொழுது அவர் மண்டபம் முகாமில் இருக்கிறாராம் என்றான் முரளி. "எப்படியப்பா அவர்...' என்று கதையைத் தொடக்க குறுக்கிட்ட முரளி, "இந்தியன் நேவியால் காப்பாற்றப்பட்டுக் கொண்டுவரப்பட்டாராம்," என்று கூறிமுடித்தான். இதைக் கேட்டுவிட்டு சிறிதுநேரம் அமைதியாக யோசித்துக் கொண்டிருந்த சஞ்சயா ஏதோ ஞானம் பெற்றவள்போன்று, "மாமி திரும்பிப் போனதிற்கு நானும் ஒரு காரணம் அப்பா. நான் பெரிய தப்புப்பண்ணிவிட்டேன் என்று நினைக்கிறேன். என்னை மன்னித்துவிடுங்கோ. யாரப்பா கண்டது இப்படி வருமென்று," கவைலயோடு கூறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காலம் கடந்த ஞானத்தால் என்ன பிரயோசனம் உண்டாகப்போகின்றது? இறந்துபோன அம்மாவும் அக்காவும் பிள்ளைகளும் திரும்பியா வரப்போகின்றார்கள், என்று விரக்தியோடு கூறினான் முரளி. குற்ற உணர்வால் உந்தப்பட்ட சஞ்சயா, "நீங்கள் கூறுவது சரிதான் அப்பா. இருந்தபோதும் இந்த நிகழ்வு எனக்கு மட்டுமல்ல எங்கள் மக்களுக்கும் ஒரு படிப்பனையாக அமைய வேண்டும். கனடாவில் வந்திருக்கும் முதியோரை இயன்ற அளவிற்கு அன்பாதரவாக நடத்தவேண்டும். அவர்களுக்குப் பெரிய சந்தோசத்தை அளிக்க முடியாவிட்டாலும் கவலையைக் கொடுக்காத நின்மதியான வாழக்கையையாவது வழங்க வேண்டும் என்ற உண்மை இப்போது புலப்படுகின்றது," என்று கூறியபொழுது சிறிது உணர்ச்சிவசப்பட்ட முரளி, "ஆலோசனை சொல்லுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரொம்ப இலகுவானது. அதைச்செய்து காட்டுவதிற்தான் இருக்கின்றது சிக்கல். எல்லோரும் இலகுவான காரியத்தைத்தான் செய்யப்பாாக்கினம்,'' என்று புறுபுறுத்துக் கொண்டான்.

எல்லாவற்றையும் கேட்டுச் சிறிது மனம் நொந்துபோன சஞ்சயா, ''ஆண்டவா! நான் செய்த தவறுக்கு என்னை மன்னித்துக்கொள்,'' என்று வாய்திறந்து கேட்டுக்கொண்டாள். மனைவி மனம் வருந்துவதைப் பார்த்த முரளி மேலும் குத்தல் கதைகளைச் சொல்லி வேதனைப்படுத்த விரும்பாதவனாய் "சரி...உன்னாலயாவது மற்றையவர்கள் திருந்தட்டும். தாய் தகப்பன் மாமன் மாமி உயிரோடு இருக்கும்போது செய்யாத நன்றிக்கடனை வேறு எப்போது செய்வது? யாருக்குச் செய்வது? தங்களுடைய கடமையைச் செய்யாதவர்கள் ஆண்டவனுடைய அருள்வேண்டிக் கோவிலுக்குப்போனால் கடவுள் அருள்புரிவாரா? நாமள் செய்த பாவத்திற்குப் பிராயச்சித்தமாக இவ்வளவு நாளும் அம்மாவிற்கு மாதாமாதம் அனுப்பிய நூற்றிஐம்பது டொலரை தமிழீழத்தில் இயங்கும் தர்மஸ்தாபனம் ஒன்றிக்குக் கொடுப்பம். அதன் மூலம் கிடைக்கும் பயனினாலாவது நாம் செய்த பாவம் அழியட்டும்,'' என்று கூறிவிட்டுப் படுத்தான். நீங்கள் சொல்லுவது சரிதான் அப்பா என்று கூறிவிட்டு மனைவியும் படுத்தாள். அந்த வேளையில் அவ்வாறு கூறிவிட்டு அவனால் படுக்க முடிந்தபோதும் உள்ளுணர்வுகளை அவனாற் கட்டுப்படுத்த முடியவில்லை, அழுதுகொண்டே படுத்திருந்தான்.

ஐந்து நாட்களின் பிற்பாடு ஒரு கடிதம் கிடைத்தது. பெற்றுக்கொண்டதும் அதன் மேல் விலாசத்தைப் பார்த்தான். அம்மாவிடமிருந்து வந்திருக்கிறது, "அம்மா போட்டிருக்கிறா," என்று வாய் முணுமுணுத்தது. கடிதத்தை விரைந்து திறந்தான். கண்கள் பார்க்க மனம் வாசிக்கத் தொடங்கியது.

அன்பின் மகன், மருமகள், பேரப்பிள்ளைகளுக்கு எழுதிக்கொள்வது,

நலம். நலமறிய ஆவல். இந்தக் கடிதத்தை அவசரமாய் எழுதுகிறேன். நாளைக்கு நாங்கள் இந்தியாவிற்குப் போகவிருக்கிறோம். காரணம் நாட்டு நிலமை நினைக்க முடியாத அளவிற்கு மோசமடைந்து செல்லுகிறது. உயிருக்கே உத்தரவாதமில்லாத அளவிற்கு நிலமை பயங்கரமாகிவிட்டது. இவற்றை எல்லாம் விபரமாய் எழுதுவதற்கு நேரமும் இல்லை, உகந்த சூழலுமில்லை. விடையத்தை உனக்குத் தெரியப்படுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென்பதற்காகவும், இனிமேல் நீ பணமோ கடிதமோ இங்கு அனுப்பக்கூடாது என்பதற்குமாகவே இதை அவசரமாய் எழுதி அனுப்புகிறேன்.

அதற்கும் மேலாக எங்களுடைய பிரயாணத்தில் என்ன நடக்கும் ஏது நடக்கும் என்று தெரியாத நிலையில், ஏதாவது துர்ப்பாக்கியமான நிகழ்வுகள் நடந்துவிட்டால் உனக்கு எதுவும் தெரியாமற் போய்விடுமே என்ற எண்ணத்துடனும்தான் இதை அனுப்பிவைக்கிறேன். அப்படி ஏதும் நடந்துவிடாது என்று நம்பினாலும் இயற்கையின் கோலங்களை எம்மாற் கட்டுப்படுத்தவா முடியும்? இல்லையே! நமது மக்களுக்கு ஏற்பட்ட ஏற்பட்டுக் கொண்டிருக்கும் அனுபங்களை வைத்துப் பார்க்கும்போது இவ்வாறு எண்ணாமலும் இருக்க முடியாது. எல்லாம் அவன் செயல்.


மிகுதி யாவற்றையும் இந்தியாவிற்குச் சென்ற பிற்பாடு தெரியப்படுத்துகிறேன்.

இப்படிக்கு

என்றும் பாசமுள்ள

அம்மா

வாசித்து முடிந்ததுதான் தாமதம், "அம்மா இயற்கையின் கோலங்களை எம்மால் கட்டுப்படுத்தவா முடியும், இல்லையே! என்று சொன்னீங்களே! அது உண்மையாய்ப் போய்விட்டதே அம்மா! உண்மையாய்ப் போய்விட்டதே!"! என்று ஓலமிட்டு அழுதான், அழுதுகொண்டேயிருந்தான்..





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் 14

எழுத்தாளர் கோவிந் வடஅமெரிக்காவில் உள்ள மிகப்பெரிய நிதிநிறுவனங்களில் ஒன்றான சி.ஐ.பி.சியில் வேலை பார்த்து வருகிறார். அவருடைய அலுவலகம் யங் அன் டண்டாஸ் சந்தியில் அமைந்துள்ள மிகப்பெரிய உயர்மாடிக் கட்டிடத்தில் அமைந்துள்ளது. இவர் மதிய உணவு இடைவேளிற் தரை மாடிக்குச் சென்று உடல் நலத்திற்காக நடந்துசெல்வது வழக்கம். அவ்வாறு செல்லும் வேளைகளில் முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒரு நபர் அந்தத் தரைமாடிக்கு இடை யிடையே வந்து செல்வதை அவதானித்துள்ளார். நாளாந்தம் பல்லாயிரக் கணக்கான மக்கள் வந்துபோகும் அந்த இடத்தில் இவர் ஏன் அவரை மட்டும் கவனித்தார். காரணம் அவரின் நடவடிக்கைகள்தான். சிலவேளைகளில் அந்நபர் தன்பாட்டில் பேசிக்கொண்டுசெல்வார். வேறு சிலவேளைகளில் அங்கு போடப்பட்டிருக்கும் இருக்கைகளில் அமர்ந்துகொண்டு தனது கைப்பையிற்குள் எதையோ தேடிக்கொண்டிருப்பார். இன்னும் சில வேளைகளிற் சில பேப்பர்களைக் கையில் வைத்துக் கொண்டு எதையோ கண்டுபிடிக்க முயல்பவர் போன்று திரும்பத்திரும்பப் புரட்டிக் கொண்டிருப்பார். அப்போதெல்லாம் அவருடைய வாய் மெதுவாக தொடர்ந்து எதையோ சொல்லிக் கொண்டிருக்கும். அவர் இவ்வாறு செயற்பட்ட பொழுதும் அவருடைய உடை தூய்மையாயும் நேர்த்தியாயும் இருந்தது.

அந்நபருடைய தாடியும் அவருடைய செயற்பாடுகளும் அவர் உளநலம் பாதிக்கப்பட்ட ஒருவர் என்ற எண்ணத்தை கோவிந்தின் மனதில் ஏற்படுத்தியிருந்தன. அவருடன் ஒருதடவை பேசிப்பார்க்க வேண்டுமென கோவிந்தின் மனம் உந்தியது. ஒருநாள் அந்நபர் அங்குள்ள இருக்கை ஒன்றில் இருந்து தனது கைப்பையிலிருந்த பேப்பர்களில் ஏதோவொன்றைத் தேடிக்கொண்டிருந்தபொழுது அவருடன் பேசுவதற்கு இதுதான் தக்கதருணம் என்று எண்ணிய கோவிந், மெதுவாகச் சென்று அந்நபரின் அருகில் உட்காந்து கொண்டார். அப்புறம் அவரைப் பார்த்து ஒரு புன்சிரிப்பை உதிர்த்தபடி 'ஹலோ!'' என்றார். அந்நபர் பதிலுக்கு 'ஹலோ' என்று சொல்லாதபோதும் சாதுவாய்ச் சிரித்தபடி கோவிந்தை ஏறவிறங்கப் பார்த்தார். அப்பொழுது கோவிந், "நீங்கள் தமிழ்தானே,'' என்று மறுபடியும் சிரித்துக்கொண்டே கேட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே அந்நபர் "நான் தமிழ்தான்," என்று பதிலளித்தார்.

அவருடைய பதிலில் இருந்து அவருடன் மேற்கொண்டு கதைக்கலாம் என்று ஊகித்துக் கொண்ட கோவிந் தொடர்ந்து, "ஏதோ ஒன்றை அக்கறையோடு தேடிக்கொண்டிருக்கிறீங்கள், என்னவென்று அறியலாமோ?" என்று பக்குவமாய்க் கேட்டார். உடனே பதில் ஏதும் சொல்லாத அந்நபர் சிறிது நேரம் கோவிந்தின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு மறுபடியும் கைப்பையிலிருந்த பேப்பர்களில் எதையோ தேடத்தொடங்கினார். சில நிமிடங்களின் பின் "அம்மாவினுடைய கடிதத்தைக் தேடுகிறேன்," என்று சொல்லிவிட்டுத் தொடர்ந்தும் தேடினார். அவருடைய ஞாபக சக்தியைப் புரிந்துகொண்ட கோவிந் அவருடன் தொடர்ந்து பேசுவதில் ஓர் ஆபத்தும் வராது என்பதை உறுதிப் படுத்திக்கொண்டு தொடர்ந்தும் பேசுவதற்கு முயன்ற வேளையில் திடீரென்று ஒரு பேப்பரை எடுத்து கோவிந்திடம் நீட்டினார். உடனே, அதை வாங்கிப்படிக்கத் தயங்கிய கோவிந், "என்ன இது?" என்று மெதுவாய்க் கேட்டார். அம்மாவின் கடிதம், என்று பதில் அளித்த அந்நபர் தொடர்ந்து அதைப்படித்துப் பாருங்கோ என்பதுபோல் சைகை காட்டினார். அவருடைய மனநிலையையும், அவருடைய ஆவலையும் புரிந்துகொண்ட கோவிந் மறுக்காமல் அதை வாங்கிப் படித்துப் பார்த்தார். அது அவருடைய அம்மாவிடமிருந்து இறுதியாகப் பெற்றுக்கொண்ட கடிதம், அதாவது அவருடைய தாயார் இந்தியாவிற்குப் புறப்படுவதற்கு முதல்நாள் மகனுக்கு அனுப்பிவைத்த கடிதம்.

அன்றிலிருந்து அந்நபருடன் உறவை மெதுமெதுவாக வளர்த்துக் கொண்ட கோவிந் காலகதியில் அந்நபரை ஓர் உளநல வைத்திய நிபுணரிடம் அழைத்துச் சென்று அவரின் நோய் குணமடையச் செய்ய உதவினார். நன்கு குணமடைந்த பிற்பாடு அவரைத் தனது உற்ற நண்பனாக ஆக்கிக்கொண்டு கால கதியில் அவரிடமிருந்து பெற்றுக்கொண்ட உண்மை விபரங்களையும் தனது கற்பனாசக்தியையும் சேர்த்து அவரது எழுத்தாற்றல் மூலம் படைக்கப்பட்டதுதான் இந்த நாவல்.


பெற்றோரைப் பேணுங்கோ, அவர்களை அம்போவென்று விடவேண்டாம். வெறும்காட்சிப் பொருட்களான ஆடம்பர வீடும் காரும் உங்களுக்குப் புண்ணியத்தைத் தேடித்தரமாட்டா. "தன்னைப் பெத்த ஆத்தாள் கிண்ணிப் பிச்சை எடுக்க தம்பி கும்பகோணத்தில் கோதானம் கொடுக்கிறானாம்," என்பது எமது முன்னோர்வாக்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் இந்த வாக்கைச் சொல்லி வைத்தார்கள் என்பது உங்கள் எல்லோருக்கும் இலகுவாய் புரியும். உயிருடன் இருக்கும்போது உங்கள் பெற்றோரை இயன்ற அளவிற்கு பேணிப் பாதுகாக்க வேண்டும். அதைச் செய்யாதுவிட்டிட்டு இறந்த பிற்பாடு காசி கதிர்காமம் சேது சிதம்பரம் என்று யாத்திரை செய்து கோதானம் கொடுப்பதில் எந்தப் பிரயோசனமும் ஏற்படப் பாவதில்லை. மாறாக பாவமே வந்து சேரும்.

முற்றும்

யாவும் கற்பனை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைப்பு -1

## வாசகர் வட்டம்

(வாடாத றோசா)

எனது முதலாவது நூலாகிய வாடாத றோசாவை முழுமையாக வாசித்து ரசித்த பல வாசகர்கள் அளித்த விமர்சனங்கள், அபிப்பிராயங்கள், கருத்துக்கள் என்பனவற்றிற் சிலவற்றை இந்த வாசகர் வட்டத்தில் தருகிறேன்.

இவற்றுள் பெரும்பாலானவை ஏற்கனவே கனடா முரசொலிப் பத்திரிகையிற் பிரசுரிக்கப்பட்டவையாகும். இருந்தபோதும், அப்பொழுது வாசிக்க வாய்ப்புக் கிடைக்காத வாசகர்களுக்காக அவற்றை இதில் மறுபிரசுரம் செய்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

## விமர்சனம் - வாடாத றோசா

My Dear Kovinthan,

I am understuck at the talents in you after reading your book. Your creative talent is out-of-this world.

I wish you all the best and hope you will keep exploiting your inborn talents and entertaining Tamils at large.

Congratulations and Love,

Dr. S. Gopalapillai Ph.D.
OHIO, USA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் விருந்து உண்டேன்

இது................
பூவிரியும் சோலை
இங்கே வாடாத ரோஜாக்கள் மலர்கின்றன என்று
வாசகத் தேனீக்கள் வாழ்த்தியது கேட்டு
வாடாத ரோஜாக்களை தரிசிப்பதற்காக
அந்த நந்தவனத்திற்குள் நுழைந்தேன்
வாசித்தேன் இலக்கியச் சாரலை சுவாசித்தேன்
அந்த சிலமணித் துளிகளுக்குள்
ரோஜாத் தேனில் பசியாறி
வாசனைக் காற்றை சுவாசித்து
நான் வாழ்ந்த அனுபவத்தை பந்திவைக்கிறேன்

முகப்பில் .......
ரோஜாத் தோட்டம்
உயிர்கொண்டு நடக்கின்றது ஒரு வெள்ளை ரோஜா
சிவப்பு ரோஜாவை கையில் கொண்டு
பின்தொடரும் வாலிபன்
அவள் இடை வெளி ஈர்ப்பில்
இருவருக்கும் இடைவெளி நெருக்கமாவது போல்
முன் அட்டையில் அழகிய வண்ணக் கோலம்

தங்கநகைகள் அழகானவை அதற்குமேல்
முத்து வைரங்களைப் பதித்தால் மேலும் அழகாகும் என்பதை
பொற்கொல்லருக்குச் சொல்லித் தெரியவேண்டிய அவசியம் இருக்காது
வாடாத ரோசாவின் அழகிற்கு தமிழ் எழுத்துலக சிற்பி இரா தணி அவர்களின் அணிந்துரை மேலும் அழகு சேர்த்திருக்கிறது.

மொழி அறிவுமட்டும் ஒருவனை எழுத்தாளன் ஆக்கிவிட முடியாது
என்பதில் எனக்கு திடமான நம்பிக்கை உண்டு
சூழலெனும் கொள்ளிடத்திற்குள் சமூகத்தின் தேடல்கள் என்ன
அதை தேடும் பயணத்தில் எடுக்கும் வலியும் சுகமும் என்ன
என்பதையெல்லாம் கண்டு கேட்டு உணர்ந்து
படைக்கும் படைப்பாளிகளின் படையல்களே
இலக்கிய அந்தஸ்த்தை பெறுகின்றன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தவகையில் பசுந்தீவு கோவிந்தன் அவர்களின் இந்தப் படையல்
வாசகருக்கு நல்லதோர் வரப்பிரசாதம்
கலையிழந்து வாடும் தமிழ் இலக்கியச் சோலைக்குள்
வாடாமல் வீசும் பூவாசம்.

வாழும் சூழலால் சுவீகரிக்கப்படுபவன் சராசரி மனிதன்
வாழும் சூழலை சுவீகரித்துக்கொண்டு
தன் வாழ்வியல் வடிவங்களுக்கேற்ப
அதனை உள்வாங்க முயல்பவன் இலட்சியவாதி
நல்ல சுவைமிகு இலக்கியப் படைப்பாளி

புலம்பெயர்ந்த மண்ணிலே
வாழும் சூழலால் சுவீகரிக்கப்பட்டு
கலையிழந்து, பேசும் மொழி மறந்து
வாடும் தமிழ் ரோஜாக்களை வாடாத ரோஜாக்களாக
மாற்றவேண்டிய கடமையை சரிவரச் செய்வதற்கு
பசுந்தீவு கோவிந்தன் போன்ற
படைப்பாளிகளின் பங்களிப்பே இன்றைய காலத்தின் கட்டாய தேவை
என்பதை இந்த நூல்கொண்டு அறிய முடிகிறது
ஒரு நூல் மற்றொரு புதிய எழுத்தாளனின் நூலுக்கு அளவுகோலாக
பயன்படுமானால்
அதுவே அந்த நூலின் வெற்றி
நட்சத்திரப் பரல்களும், நிலவும், சூரியனும்
வாரிக்கொடுக்கும் மாரிக் கொடையும்
வான்சிறப்பிற்குக் காரணம். அதுபோலத்தான்

பசுந்தரையும், அற்றார் பசியகற்றும்
பயிர் விளைபுலமும் நாடிவந்தோர்க்கு நல்விருந்தளித்து
வருவிருந்து காத்திருக்கும் மக்களும்
நூலோர் அறிஞர் ஆன்மீகப் பெரியோர்களும்
மண்ணின் பெருமைக்குக் காரணம்
இந்த எழுத்தாளனைத் தந்த மண் எதுவென்றால்
பூகோள சுழற்சி வஞ்சிப்பால்
போதுமான மழை சுரக்காதபோதும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றைக் காடுகளின் நடுவேயும்
பசும் புற்தரைகள் நிறைந்ததனால் அங்கே
மடிசுரக்கும் பசுநிரைகள் நிறைந்திருக்கின்றன
சிறுதானியப் பயிரினம் பெருவிளைச்சல் தருகின்றது

விசும்பின் துளிவிழா சமுத்திரத் தாரகை என்றாலும்
இதற்கு பசுந்தீவு என்ற பெயரும் உண்டு
மற்றைய தீவுகளைவிட சற்றே நெடுந்தூரத்தில் இருப்பதால்
இதற்கு நெடுந்தீவு என்ற பெயர் வழக்கத்தில் உள்ளது

மண்ணின் பெயரையே தன் முகவரியாகக் கொண்டு
பசுந்தீவு கோவிந்தன் என உலாவரும்
இந்த எழுத்தாளனின் படையலில்
நான்கு குறுங்கதைகள் இருக்கின்றன.

வாடாத ரோஜாக்களுக்குள்
வாழும் தமிழ் என்னும் வரலாற்றுத் தடம் கண்டேன்
யதார்த்தத்தை விட்டு முரண்படாத கதாபாத்திரங்கள்
சொல்லும் பொருளும் செல்லும் இடமறிந்து சொல்வதே
எழுத்தின் வெற்றிக்கு காரணம் என்பதை நன்கு உணர்ந்து
கதாபாத்திரங்களை பேசவைத்திருக்கின்றார் ஆசிரியர்

தாங்யூ, வெரி மச் குட் மோனிங் ஐ ஆம் சொறி
இதற்கு தமிழில் வார்த்தைகள் இல்லையா!
சைவர் பூஜ்ஜியம் இவற்றை எல்லாம் தள்ளிவிட்டு சுழியத்தை
கண்டுபிடித்து தமிழுக்கு அழகு சேர்க்க முயலும் வேளையில்
இப்படிக் கதைகளில் எழுதுவது நியாயமா?

வாசகர் உள்ளங்களிலும் இப்படி கேள்விகள் எழுவதும்
நியாயம்தான்
பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல்ல என்று
சொல்லிக்கொள்ளும் நாம்
நடைமுறையில் நாம் பேசும் வார்த்தைகளோடு
கலந்துவிட்ட சொற்களை ஏன் புறக்கணிக்க வேண்டும்
அடுத்த தலைமுறைக்கு எமது தமிழ் வாழ்வியல் கலை
கலாச்சாரம்
பண்பாடு இவற்றைக் கொண்டுசென்று கொடுக்கும் மிகப்
பெரிய கடமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய எழுத்தாளனின் தலையாய பொறுப்பாக உள்ளது
அப்படியானால் அவர்களுக்கு பழக்கத்தில் உள்ள மொழியில்
நாம் பேச வேண்டும்
தேவைப்பட்டால் ஓரிரு சொற்கள் மட்டுமல்ல
ஒட்டுமொத்தமாக அவர்களுக்கு புரியும் மொழியைப் பாவித்துக்
கொள்வதிற் தப்பே இல்லை என்பதே என் பணிவான கருத்து

செல்வி கிராமத்து ரோஜா
இவள் வாடி உதிரும் தோட்டத்து ரோஜா அல்ல
கிராமத்து மண்ணில் விளைந்த ரோஜாக்கள் வாடுவதில்லை
என்று
வாழ்ந்து காட்டியிருக்கிறாள் கதையின் நாயகி

கிராமிய வாசனை வீசும் பூக்களின் மெல்லிய காதல்
வரிகளுக்கு
கோவிந்தன் பூசிய தமிழ்முலாம் தனி அழகு

மற்றும் 'இலட்சியம்' 'கனடா மாப்பிளை' 'கானல் நீர்'
ஒவ்வொரு கதையிலும் காலத்தின் தேவை என்ன
எம்மை விட்டு மேலைக் கலைக் காற்றில் பறந்து போகும்
இளைய தலைமுறையை நாம் இழந்துவிடக் கூடாது என்ற
அங்கலாய்ப்பு
எழுத்தாளனின் மனச்சுமையாக, அவற்றை சுமை இறக்கி
வைத்திருப்பது
தெளிவாகத் தெரிகிறது

'இலட்சியம்' இந்த ஒற்றைச் சொல்லில் எத்துணை வலிமை
என்பதை
வாசகர்களுக்கு உணர்த்துகின்றது இந்தக் கதை.

கணப்பொழுதும் நில்லாது வீசும் காற்றின் இலட்சியம்
தவறிவிட்டால் உயிர்பிழைக்க வாய்ப்பே இல்லை
எடுப்பதும் மழையாய்க் கொடுப்பதும் வானம் நிறுத்திக்
கொண்டால்
விளைச்சல் இன்றி பஞ்சம் பசிப்பிணியில் உலகம் அழியும்
இயற்கை ஒருபோதும் தன் இலட்சியத்தில் இருந்து
விலகுவதில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் மட்டும் இலட்சியம் என்றால்
மலையைப் புரட்டி தோளில் சுமப்பதுபோல்
இது நமக்கு சரிப்பட்டு வராது என்று
பயந்து ஒதுங்கிக் கொள்கிறான்.

பயணத்திற்கு முன்பாகவே பாதை அமைத்துக் கொள்வதே
இலட்சியம் என மிக அழகாகவும் எளிமையாகவும்
இந்தக் கதையிற் பேசவைத்திருக்கிறார் கதாசிரியர்

இந்தக் கதையில் முக்கியமாக
இரண்டு வேறுபட்ட தளங்களில்
தாயக விடுதலை இலட்சியங்களை நேசிக்கும்
இரண்டு உள்ளங்களை உரசவைத்து இலட்சிய வேள்வியை
நடாத்தியிருப்பது எழுத்தாழுமைக்கு உரம் சேர்த்திருக்கிறது

புலம்பெயர்ந்த மண்ணில் வாழ்ந்து கொண்டு
தாயக விடுதலையை நேசித்து அதற்காக தன்பங்களிப்பை
செய்து கொண்டுவரும் கதாநாயகன்
தாயக விடுதலைக் களத்தில் நின்று போராடும்
ஓர் இலட்சியப் பூவோடு தன் மணவாழ்க்கை அமையவேண்டும்
என்று
விரும்புகிறான்.

இந்த இரண்டு இலட்சியங்களும் ஒன்றுக்குள் ஒன்றாகி
கரைந்து போகுமா!
இலட்சியப் போர் நடத்தியிருக்கிறார் கதாசிரியர்
நான்கு கதைகள் தங்கத் தமிழிற் பதித்த நான்கு வைரங்கள்
பசுந்தீவு கோவிந்தன் அவர்களின் எழுத்துலகப் பயணம்
வெற்றியோடு தொடர வாழ்த்தி முடிக்கின்றேன்.

Toronto
Canada
Dec. 14, 2009

கலாராஜன்
தலைவர்
தமிழ் ஆலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வாடாத றோசா" நூல்பற்றி வாசகி ஒருவரின் விமர்சனம்

கனம் எழுத்தாளர் பசுந்தீவு கோவிந்தன் அவர்கட்கு!

உங்கள் "வாடாத றோசா" என்ற கதைப்புத்தக வாசகர்களில் நானும் ஒருத்தி. நீங்கள் எழுதியிருக்கும் கதைகளில் உள்ள கதாபாத்திரங்கள் நடமாடும் உயிரோட்டம் கொண்டவை. கதாசிரியரின் புரட்சி எண்ணங்கள் கதாபாத்திரங்களின் வாயிலாக உயிரூட்டப்பட்டுள்ளமை மிக்க அழகு.

இவை நான் அந்தக் காலத்தில் படித்த சமூக நாவல் எழுத்தாளர்கள் லக்ஸ்மி. வாசந்தி, ராஜம் கிருஷ்ணன் அவர்களது எழுத்தாற்றலைவிட நயங்கொண்டதாகவும் எழுத்தோட்டம் விறுவிறுப்புக் கொண்டதாகவும் அமைந்துள்ளதைப் பார்த்து பெரும் வியப்படைந்தேன். தமிழ் ஈழத்தில் இந்திய எழுத்தாளர்களை விஞ்சும் அளவிற்கு படைப்பாற்றல் கொண்ட எழுத்தாளர் ஒருவரைக் கண்டதில் மிக்க மகிழ்ச்சி.

அத்துடன் யாழ்ப்பாணப் பேச்சுவழக்கில் இனிய தமிழ் உரையாடல், இதமாக வருடிச் செல்லும் இலக்கிய நயமுடைய எழுத்தோட்டம், பிரச்சினைகளைச் சாதுரியமாக வெல்லும் திறமைமிக்க யுக்திகள் கையாளப்பட்டுள்ளமை எழுத்தாளனின் வளர்ச்சிமிக்க செயற்திறனைக் காட்டி நிற்கின்றன.

எதிர்ப்பு இல்லாது செயற்திறன் இல்லை. அதைப் போட்டு உடைத்து விடாமல் வெல்லும் யாழ்ப்பாணத் தமிழ் மகனின் சாதுரியம், ஒவ்வொரு கதையிலும் பிரச்சினைக்குத் தீர்வு சொல்லும் விதம், அவற்றை அணுகி ஆராயும் தன்மை என்பன கதாபாத்திரப் படைப்புக்களின் உச்சக்கட்டத்தை நிலைநிறுத்துகின்றன.

இதிலிருந்து கதாசிரியரின் நோக்கம் தனித்துக் கதை சொல்லுவதல்ல, அறிவியற் கண்ணோட்டமுடைய ஒரு சமுதாயத்தை உருவாக்குவதும் என்பது தெளிவு. இன்னும் இப்படிப்பட்ட பல நல்ல நூல்களை உங்களிடமிருந்து எதிர்பார்க்கும் வாசகி.

நன்றி

மரியா ஜெயவீரங்கம்
Markham, Ont.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் வட்டம்
# வாடாத றோசா (குறுநாவல் தொகுப்பு)

ஆசிரியர் அவர்கட்கு,

புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்து தமது இளஞ்சந்ததிக்கு தமது மொழி கலை கலாச்சாரம் பண்பாடு பாரம்பரியங்களை புகட்டுவது எப்படி என கவலை கொள்ளும் நம்மவர்களுக்கு ஒரு விடிவெள்ளியாய் பசுந்தீவு கோவிந்தன் அவர்களின் குறுநாவல்கள் படிப்போரின் உள்ளத்தில் தாயக நினைவுகளையும் பெருமைகளையும் மீள நினைக்கத் தூண்டுகின்றன. மண்ணை மிதியாத நம் இளஞ் சந்ததியினரும் இக்குறு நாவல்களைப் படித்தால் உள்ளத்தில் தமது மூதாதையரைப் பற்றியும் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களைப் பற்றியும் உயர்வான கருத்தை உருவாக்க ஏதுவாயும் அமைகின்றது.

பசுந்தீவு கோவிந்தன் அவர்களின் குறுநாவலில் வரும் வாடாத றோசா, இலட்சியம், கனடா மாப்பிள்ளை, கானல்நீர் ஆகிய கதைகளில் வரும் கதாபாத்திரங்கள் அப்படியே உண்மைச் சம்பவங்கட்போலவே இருக்கின்றன. சிலருக்கு இது உண்மைச் சம்பவங்களாகவே இருக்கும். மேலும் புலம்பெயர்ந்தோரின் இனிவரும் தலைமுறையினர் தமது மொழி கலை கலாச்சாரம் பண்பாடு பாரம்பரியங்களை அறிந்து கொள்ள சிறந்த உசாத்துணை நூலாக இக்குறுநாவல் தொகுப்பு விளங்குகின்றது. புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள நம்மக்கள் எப்படி எப்படியெல்லாம் வாழ்கின்றார்கள் ஏமாற்றப்படுகின்றார்கள் என்பதையெல்லாம், தனது நாவலில் வரும் கதாபாத்திரங்கள் மூலம் எடுத்துக்காட்டியிருக்கின்றார். பசுந்தீவு கோவிந்தன் அவர்களின் குறுநாவல்கள் வாசகர்களிடம் பெருவரவேற்பைப் பெற்றுள்ளன.

முரசொலிப் பத்திரிகை எப்போ வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டே வாசகர்கள் இருப்பார்கள். முரசொலிப் பத்திரிகை வந்தவுடன் பசுந்தீவு கோவிந்தன் அவர்களின் குறுநாவல் தொடர் வந்திருக்கிறதாவென முதலில் பார்க்கின்றார்கள். இவருடைய பணி மேன்மேலும் தொடர வாசகர்களாகிய நாங்கள் பேராதரவு வழங்குவோம். மேலும் இதுபோன்ற குறுநாவல்களை எழுதவேண்டுமென இறைவனிடம் கேட்டு விடைபெறுகின்றேன்.

க. கனகரத்தினம்
இளைப்பாறிய அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் வட்டம்
# வாடாத றோசா (குறுநாவல் தொகுப்பு)

ஆசிரியர் அவர்கட்கு,

உங்களுடைய "வாடாத றோசா" என்னும் குறுநாவல்களை வாசித்து ரசித்தேன, மிகவும் அற்புதம். தமிழ்நாட்டு வெளியீடுகளுக்குச் சளைக்காத படைப்புக்கள் என்று தயக்கமின்றிக் கூறலாம். கற்பனைப் படைப்புக்கள் என்று கூறினாலும், அவை யாவும் உண்மைக் கதைகள் போன்று அமைந்துள்ளன. அந்தளவிற்கு அவை யதார்த்தமானவை என்றால் மிகையாகாது. அதன் யதார்த்தப் போக்குத்தான் என்னைப் பெரிதும் கவர்ந்ததிற்கு முக்கிய காரணமாக அமைந்தது. கதாபாத்திரங்களை உருவாக்கி கதையைச் சம்பாசணைப் பாணியில் எழுதியிருப்பதும், கதாபாத்திரங்களுடைய உணர்வுகளையும் அதற்குரிய சந்தர்ப்பம் சூழ்நிலையையும் உரியபடி வெளிப்படுத்தியிருப்பதும் உங்களுடைய எழுத்துக்குரிய தனிச்சிறப்பாகும். இவைதான் கதைகள் நிறைந்த யதார்த்தமுள்ளதாய் அமையக் காரணமாய் இருக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும். எவரும் இலகுவில் விளங்கக்கூடிய வசன அமைப்பும், ஓட்டமும், நடையும் உங்களுடைய எழுத்தின் சிறப்பம்சங்களில் ஒன்றாகும்.

உங்களுடைய முதலாவது குறுநாவலாகிய வாடாத றோசாவில் செல்வி என்ற பாத்திரத்தை உருவாக்கியதின் மூலம் கதையின் முற்பகுதியில் நமது சமூகத்திடையே புரையோடிக் கிடக்கும் மனித நேயத்திற்கு ஒவ்வாத பிற்போக்குவாதக் கொள்கையைப் புடம்போட்டுக் காட்டியதுடன், மோகன் என்னும் கதாபாத்திரத்தை உருவாக்கி அதில் சீர்திருத்தத்தை நிலை நிறுத்தியுள்ளீர்கள். காலத்தின் தேவைகருதிச் செய்த இந்த மாற்றம் மிகவும் வரவேற்கத்தக்கது. காலத்திற்கு ஒவ்வாத பழமைவாதக் கொள்கைளுக்குச் சாவுமணி அடித்து மனிதநேயக் கருத்துக்களுக்கு வரவேற்பளிப்பது வாடாத றோசா மூலம் நீங்கள் எமது சமூகத்திற்கு அளிக்கும் பரிசாகும்.

பொறாமை, எரிச்சல், சுயநலத்தை உயிரோட்டமாய்க் கொண்ட நமது சமூகத்தில் செல்லாச்சிப் பாட்டி போன்ற ஒரு சிலர் இருப்பதனாற்தான் நமது சமூகம் இன்னும் அழியாமல் இருக்கின்றது என்று கூறுவது சாலவும் பொருத்தமாகும். செல்வி காட்டும் அன்பிற்கு மோகனைக் கடிக்க வந்த நாய் அடங்கிப் போவதையும், அது வெளிப்படுத்தும் நன்றியையும் படம்பிடித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுவதன் மூலம் நன்றி கெட்ட மனிதர்களுக்கு அன்பின் சக்தியையும் நன்றியின் மகத்துவத்தையும் ஓர் ஐந்தறிவு படைத்த பிராணியின் மூலம் எடுத்துக் காட்டுவது மிகவும் பாராட்டுக்குரியது. செல்வியை எதற்கும் சோரம்போகாத மனோதைரியமும் தன்னம்பிக்கையும் நற்குணமும் அன்பும் உடைய ஒரு பெண்ணாகச் சித்தரிப்பதன் மூலம் பெண்களுக்குப் பெருமை தேடிக் கொடுத் துள்ளீர்கள். இன்றைய உலகில் இது மிகவும் வரவேற்கத்தக்க அம்சமாகும்.

இலட்சியம் என்ற இரண்டாவது குறுநாவல் மூலம் காலத்தின் தேவை கருதி இலட்சிய புருசர்களை உருவாக்க முயல்கிறீர்கள். நாட்டின் தற்போதைய தேவையைக் கருத்திற் கொள்ளும்போது இது வரவேற்கத்தக்க விடையம். இலட்சியத்தை அடைவது இலகுவான காரியமல்ல என்பதையும், போராட்டத்தின் மத்தியிற் பல தடைகளைத் தாண்டினாற்தான் இலட்சியத்தை அடையமுடியும் என்பதையும் இக்குறுநாவல் மூலம் விளங்க வைத்திருப்பது ஆரோக்கியமான அம்சமாகும். தமிழீழம் அமையும் என்பதையும் அதற்கு களநிலையில் நிலைத்திருக்க வேண்டிய சில அம்சங்களையும் சூசகமாய்க் கூறியுள்ளீர்கள். உங்களுடைய கூற்று தீர்க்கதரிசனமாய் அமைய எனது வாழ்த்துக்கள். சோழனை இலட்சிய புருசனாக உருவாக்கிய நீங்கள் அவருடன் சேர்த்து இறுதிவரை அரசியையும் இழுத்துச் செல்வதன் மூலம் ஓர் ஆணின் முன்னேற்றத்திற்கு ஒரு பெண் எவ்வளவு உறுதுணையாக அமைய முடியும் என்பதை தத்ரூவமாய் எடுத்துக்காட்டியுள்ளமை பெண்களுக்குப் பெருமைதேடும் விடையமாகும். சோழனை ஓர் இலட்சிய புருசனாய் மட்டுமல்ல அவரை ஒரு நல்ல உள்ளம் படைத்த மனிதனாகவும், கயவன் ஒருவனால் வஞ்சிக்கப்பட்ட ஓர் இளம் பெண்ணுக்கு உதவ முன்வந்ததின் மூலம் நிரூபித்துக் காட்டியுள்ளமை எமது இளஞ்சந்ததியினர்க்கு முற்போக்கான வழியைக் காட்டி நிற்கின்றது.

மூன்றாவது கனடா மாப்பிள்ளை என்னும் குறுநாவல் அதிக அளவு யதார்த்தம் உடையது. எமது சமூகத்திற் பல இளைஞர்களும் யுவதிகளும் இதுபோன்ற அனுபவங்களைப் பெற்றுள்ளனர் என்றால் மறுப்பதற்கில்லை. ரதி என்ற பாத்திரத்தின் மூலம் தன்நம்பிக்கையும் மனோதைரியமும் கொண்ட எந்தப் பெண்ணும் இடர்களையும் துயரங்களையும் தாண்டி வாழ்க்கையில் முன்னேற முடியும் என்பதையும் பல விடையங்களைச் சாதிக்க முடியும் என்பதையும் நிரூபித்துக் காட்டியுள்ளீர்கள். இளம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களுக்கு இது சிறந்த ஒரு வழிகாட்டியாக அமையுமென்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. நாம் செய்யும் பாவம் ஒருபோதும் பழிதீர்க்கத் தவறுவதில்லைப் போலும் என்ற சாராம்சமும் இந்தக்கதை மூலம் வெளிப்படுகின்றது. மனிதர்களை நல்வழிப்படுத்துவதற்கு இந்தக் கருத்து உதவும் என்பது எனது எண்ணம்.

உங்களுடைய நான்காவது குறுநாவல் கானல் நீரும் நிறைந்த யதார்த்தம் கொண்டது. பல பெண்களும் ஆண்களும் இப்படியான அனுபவங்களில் அகப்பட்டுள்ளார்கள். இல்லற வாழ்க்கை சரியானபடி அமையாமல் எத்தனையோ இளம் சந்ததியினர் அவதியுறுவதை இந்த நாவலின் மூலம் வெளிக்கொணர்ந்துள்ளீர்கள். உண்மை சிலருக்குக் கசப்பாயிருந் தாலும் கதை வாசிப்பதற்குச் சுவாரஸ்யமாய் இருக்கின்றது. ஆரம்பத்தில் ஏமாற்றமும் விரக்தியும் நிறைந்து காணப்பட்ட நகுலனின் வாழ்க்கை பிற்பகுதியில் சோகமாய் முடிவடைவது வாசகர்களின் மனதை உண்மையிலேயே நெகிழவைக்கின்றது. தேவிகாவின் மரணப்படுக்கையையும் அவ்வேளையில் நகுலனின் மனோநிலையையும் மிகத் தத்ரூபமாக எடுத்துக் காட்டியுளமை உங்களுடைய எழுத்தாற்றலையும் மொழி ஆளுமையையும் எடுத்துக் காட்டுகின்றது.

தேவிகாவின் உயிர் பிரிந்தபோது இருந்த காட்சி இப்பொழுதும் எனது மனக்கண்முன் வந்துகொண்டிருக்கின்றது. நேரிலே பார்த்தது போன்ற உணர்வு உங்களுடைய கதையை வாசித்தபொழுது எனக்கு ஏற்பட்டது என்றால் மிகையாகாது. நகுலனின் மாஜிக்காதலி மஞ்சுவை அவன் கொழும்பில் சந்தித்தபொழுது அவன் அடைந்த ஏமாற்றத்தையும் வேதனையையும் வெளிபபடுத்திய முறை வாசகர்களின் மனதை உண்மையாகத் தொட்டிருக்கும். மிகவும் தத்ரூபமாக அந்தக் காட்சியைப் படம்பிடித்துக் காட்டியிருந்தீர்கள். தியேட்டரில் அந்தக் காட்சியைப் பார்த்ததுபோன்ற உணர்வு அதை வாசித்தபொழுது எனக்கு ஏற்பட்டது. உங்களுடைய எழுத்தாற்றல் ரொம்பப் பிரமாதம். இந்த நாவலை வாசித்து முடித்தபொழுது "பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த" பழமொழி எனக்கு ஞாபகத்திற்கு வந்தது. சிலருடைய வாழ்க்கை இப்படியும் அமைந்து விடுகின்றது. எல்லாம் இயற்கையின் கோலங்களே

இந்நூலைப் பற்றி மொத்தமாக சில வார்த்தைகள் கூறுவதாயிருந்தால் முதலாவது கதையில் செல்வியையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது கதையில் அரசியையும், மூன்றாவது கதையில் ரதியையும் நான்காவது கதையில் தேவிகாவையும் உயர்ந்த ஸ்தானத்திற்கு எடுத்துச்சென்று பெண்களுக்குப் பெருமை தேடிக் கொடுத்துள்ளீர்கள். இதையிட்டுப் பெண்கள் மகிழ்ச்சியடைய வேண்டும், பெருமைப்படவேண்டும். புத்தகம் முழுவதும் நிறையவே பழமொழிகளைப் பயன்படுத்தியிருப்பதன் மூலம் கருத்துக்களை இரத்தினச் சுருக்கமாய் விளங்க வைத்துள்ளீர்கள். இது மிகவும் வரவேற்கத்தக்கது. கதைகளுக்கு முக்கியமாய் வேண்டப்படும் காசியமும் விறுவிறுப்பும் எல்லாக் கதைகளிலும் நிறையவே காணப்படுகின்றன. இதனால் சோர்வடையாது வாசகர்களால் வாசிக்க முடியும்.

நல்ல படிப்பனைகள், அறிவுரைகள், ரசனைகள், உணர்வுகள் எல்லாம் நிறையப் பெற்ற படைப்புக்களாக எல்லா குறுநாவல்களும் காணப்படுகின்றன. நவரசம் பொருந்திய கதைகள் என்று கூறினால் மிகையாகாது. இந்நூலை வாசித்து முடித்தபொழுது இலங்கைக்கும் கனடாவிற்கும் இடையே பாலம் போட்டு அங்குமிங்கும் அடிக்கடி போய் வந்த உணர்வு ஏற்பட்டது. தமிழீழம் சென்று அங்குள்ள கோவில், குளம், கிராமம் என்பவற்றைப் பார்த்ததுடன் திருமண வைபவங்களிலும் பங்குபற்றிவிட்டு மகிழ்ச்சியோடு திரும்பியது போன்ற பிரமையை மனதில் ஊட்டிவிட்டீர்கள். கதைகள் யாவும் அற்புதமான படைப்புக்கள். சிலருக்குச் சில விடையங்கள் கசப்பாயும் இருக்கலாம். எல்லோரையும் ஒரேயடியாய்த் திருப்திப்படுத்த இயலாது தானே. மொத்தத்தில் உங்களுடைய பணி பாராட்டுக்குரியது. தொடரட்டும் உங்களுடைய சேவை. இக்குறு நாவற் தொகுப்பை எல்லோரும் வாங்கிப்படிக்க வேண்டும் என்பது எனது அசைக்க முடியாத கருத்து.

எனது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்

இங்ஙனம்
அபிமான வாசகர்
க. சண்முகநாதன்
(ஓய்வு பெற்ற உதவி ஆணையாளர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் வட்டம்
## வாடாத றோசா (குறுநாவல் தொகுப்பு)

ஆசிரியர் பசுந்தீவு கோவிந்தன் அவர்கட்கு,

வாடாத றோசா என்னும் தலைப்புடன் உங்களால் வெளியிடப்பட்ட குறுநாவற் தொகுப்பில் உள்ள நான்கு குறுநாவல்களையும் நன்கு வாசித்து ரசித்தேன். இதைப்பற்றி ஒரு வார்த்தையிற் கூறுவதாயின் "ரொம்பப் பிரமாதம்". நான் யாழ்ப்பாணம் கச்சேரியில் பல வருடங்கள் கடமையாற்றியவன் என்ற வகையில் முதலாவது குறுநாவலை வாசித்தபொழுது உண்மையாகவே யாழ்ப்பாணம் கச்சேரிக்கு மறுபடியும் சென்று கடமை புரிந்துவிட்டுத் திரும்பிய உணர்வு எனக்கு ஏற்பட்டது. காரணம் உங்களுடைய எழுத்தாற்றல் அந்தளவிற்கு யதார்த்தம் கொண்டதாக இருக்கின்றது. அந்தக் குறுநாவலின் கதாநாயகி செல்வி ஓர் அயோக்கியனை இனம் கண்டு விரட்டியபொழுது அவன் ஓடிய ஓட்டம் என் கண்முன் அடிக்கடி வந்துபோகின்றது. யதார்த்தமும் சுவாரஸ்யமும் நிறைந்த காட்சி அது. செல்லாச்சிப்பாட்டி என்னும் கதாபாத்திரம் மனித சமுதாயத்திற் பிறந்த சில அற்புதப்படைப்புக்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

செல்வியின் திருமண வைபவத்தை வாசித்தபொழுது நானும் அந்தத் திருமண வைபவத்திற்குச் சென்று பங்குபற்றிய பிரமை ஏற்பட்டது, அற்புதமான வர்ணனை. திருமணத்திற்கு செல்லாச்சிப் பாட்டி வருவாவா என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த எனக்கு அவாவினுடைய வருகை பெருமகிழ்ச்சியை ஏற்படுத்தியது. உங்களுடைய குறுநாவலை வாசித்தபொழுது இவற்றையெல்லாம் என்னால் அனுபவிக்க முடிந்ததென்றால் அதற்கு உங்களுடைய உயிரோட்டமுள்ள எழுத்துத்தான் காரணம்.

கனடா மாப்பிள்ளை என்னும் குறுநாவல் நிறைந்த யதார்த்தம் கொண்டது. அதன் கதாநாயகி ரதி கார்த்திக்கினதும் மாதுரியினதும் அபாட்மென்றிற்குப் போனதையும் திரும்பி வந்து மாமாவிடம் நடந்தவற்றைக் கூறியதையும் கொண்ட காட்சி மறக்க முடியாத நினைவாக என் மனதிற் பதிந்துவிட்டது. அவற்றை நேரில் நின்று பார்த்தவன் போன்ற உணர்வலைகள் என்னுள்ளத்தில் அதை வாசித்தபொழுது எழுந்தன. இதிலிருந்து என்ன அறிகிறேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றால் காட்சிகளை உயிரோட்டத்துடன் அப்படியே படம் பிடித்துக் காட்டும் திறன் உங்களுடைய எழுத்திற்கு உண்டு என்பதாகும்.

கதைகளை வாசிக்கும்பொழுது அடுத்து என்ன நடக்கப் போகின்றது அடுத்து என்ன நடக்கப்போகின்றது என்று வாசகர்களை ஆவலுடன் இழுத்துச் செல்லும் வலு உங்களுடைய கதைகளிற் காணப்படு கின்றது. இது சிறந்த கதைகளுக்கு அமையவேண்டிய முக்கிய அம்சமாகும். விறுவிறுப்பும், காசியமும், பழமொழிகளும் கதைகளை மெருகூட்டி நிற்கின்றன என்றால் மிகையாகாது.

தொடரட்டும் உங்களுடைய முயற்சி. எனது வாழ்த்துக் களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

சோ நடராஜசர்மா
ஆ.ப.தி. முன்னாள் எழுதுவினைஞர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுந்தீவு கோவிந்தன் அவர்கட்கு,

தங்களால் வெளியிடப்பட்ட "வாடாத றோசா" என்னும் தலைப்பைக் கொண்ட குறுநாவல் தொகுப்பு எல்லோராலும் மிகவும் வரவேற்கத்தக்க கதைப்படைப்புக்களைக் கொண்டது என்பது எனது அசைக்க முடியாத அபிப்பிராயமாகும். தொடங்கிய கதையை வாசித்து முடித்துவிட்டுத்தான் வைக்கவேண்டும் என்ற அளவிற்கு வாசகர்களை இழுத்துச் செல்லும் சக்தி உங்களுடைய எழுத்தாற்றலுக்கு உண்டு. இதன் காரணமாகத்தான் உங்களுடைய நூலை இரண்டு நாட்களிலேயே வாசித்து முடித்துவிட்டேன். வாசித்து ரசித்தேன். வாசிப்பதற்கு விறுவிறுப்பாகவும் அத்தோடு சுவாரஸ்யமும் காசியமும் நிறைந்தவையாயும் இருந்தன. பொழுது போக்கிற்காக எழுதப்பட்டவையென்று நீங்கள் கூறியிருக்கின்றபோதும் அவை ஆழ்ந்த கருத்துக்களையும் சிறந்த படிப்பனைகளையும் கொண்டவை என்றால் யாரும் மறுக்கமுடியாது.

உங்களுடைய கனடா மாப்பிள்ளை என்னும் குறுநாவலை வாசித்தபொழுது எனது மனதிலே ஓர் ஆதங்கம். அதாவது அதன் கதாநாயகி ரதி கார்த்திக்கினதும் மாதுரியினதும் முடிவுகளை அறிந்த பிற்பாடு மறுபடியும் கார்த்திக்கின் அபாட்மென்றிற்குச் சென்று தாலியைக் கழற்றிக் கொடுக்கும்போது, "இனி இதற்கு எனது கழுத்தில் வேலையில்லை," என்று கூறிவிட்டு, கண்களிலிருந்து சில நீர்த்துளிகள் சொட்ட எதுவும் பேசாமல் செல்கிறாள். அந்தக் கட்டத்தில் எனது இதயம் கனத்தது. அந்த அயோக்கியனைப் பார்த்து நாலுவார்த்தை அவனது செயலின் கொடூரத்தன்மையை வெளிப்படுத்துமாப்போற் கேட்காமல் போகின்றாயே என்று. என்ன பொண்ணு இது.! அந்தக் கட்டத்திலும் அவளுக்குக் கோபமே வரவில்லையா? என்று என்னுக்குள் கேட்டுக் கொண்டேன். இதுபோன்ற உண்மைச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதை நான் அறிவேன். அந்தக் கட்டத்தில் நாலுவார்த்தை கிழியக்கிழியக் கேட்டிருந்தால் இந்தவகை அயோக்கியன் களுக்கெல்லாம் ஒரு பாடமாக அமைந்திருக்கும். பெண்பிள்ளை களைப் பெற்ற எங்களுக்குத்தான் அதன் வேதனை புரியும்.

உங்களுடைய சேவை தொடரவேண்டும். உங்களுடைய எதிர்கால வளர்ச்சிக்கு எனது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

இங்ஙனம்
சு. மார்க்கண்டு
(ஓய்வுபெற்ற நில அளவையாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணர் கோவிந்தன் அவர்கட்கு,

உங்களுடைய 'வாடாத றோசா' என்னும் நூலில் உள்ள குறுநாவல்கள் யாவும் அற்புதமான படைப்புக்கள். தமிழீழத்தில் வேலணையில் அயல்வீட்டுக்காரன் என்பதற்காக முகமனுக்காக சும்மா இவ்வாறு சொல்லவில்லை. உண்மையாக எனது மனத்தில் பட்டதைத்தான் வெளிப்படையாய்ச் சொல்லுகிறேன். எல்லாக் கதைகளும் அருமையாக இருக்கின்றன. இவ்வளவு காலமும் உங்களுடைய திறமையை ஏன் வெளிப்படுத்தாமல் வைத்திருந்தீர்கள்? நீங்கள் வேலணையில் இருந்தபொழுதே எழுத ஆரம்பித்திருந்தால் அன்றைய பிரபல்யமான எழுத்தாளர்களுடன் போட்டி போட்டு முன்னேறியிருக்க முடியும். இன்னும் காலம் போய்விடவில்லை. தொடர்ந்து எழுதுங்கள், பிரபல்யமான எழுத்தாளராக வரமுடியும். அந்தளவிற்கு உங்களுக்குத் திறமையுண்டு. இதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

உங்களுடைய கதைகள் எல்லாம் நிறைந்த யதார்த்தம் கொண்டவை. உண்மையும் கற்பனையும் சேர்ந்தவைகள்தான் கதைகள் என்பது யாவரும் அறிந்த உண்மை. எதைச் சேர்த்து எழுதினாலும் கதைகள் உயிரோட்டமுள்ளதாய் அமைவதற்கு எழுத்தாளனின் கைவண்ணம்தான் முக்கிய காரணம் என்பது உண்மையான உண்மை. உங்களுடைய கதைகளில் இன்னொரு சிறப்பம்சம் என்னவென்றால் தொடக்கத்திலிருந்து முடிவுவரை கருவைச் சுற்றித்தான் எழுதியுள்ளீர்களேயன்றி ஒருபோதும் கருவைவிட்டு வெளியே செல்லவில்லை. சில எழுத்தாளர்கள் அடிக்கடி கருவை விட்டு வெளியே சென்றுவிடுவார்கள். அப்பொழுதெல்லாம் வாசகர்களுக்கு என்னத்தைப் பற்றிச் சொல்லுகிறார் ஏன் கூறுகிறார் என்றெல்லாம் புரியாமலிருக்கும். அடுத்த சிறப்பம்சம் கதையை வாசிக்கும்பொழுது அடுத்து என்ன நடக்கப்போகின்றது அடுத்து என்ன நடக்கப்போகின்றது என்னும் ஆவலுடன் வாசகர்களை இழுத்துச் செல்லும் விறுவிறுப்பு உங்களுடைய எல்லாக் கதைகளிலும் உண்டு. இதனால் சில நாட்களிலேயே வேலைப்பழுவின் மத்தியிலும் வாசித்து முடித்துவிட்டேன். கதைகளில் அடங்க வேண்டிய விடையங்களை ஏற்கனவே சிந்தித்து அவற்றை நிரல்படுத்தி எழுதும் எழுத்தாற்றற் தான் இந்தவகையான விறுவிறுப்புடன் கதைகள் அமைக்கக் காரணம். எல்லாமே சிறப்பாக அமைந்துள்ளன. தொடரட்டும் உங்களுடைய பணி. எனது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

இங்னம்
க. நந்தகுமார்
மிசிசாகா, கனடா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடாத றோசாவின் ஆசிரியர் அவர்கட்கு,

உங்களுடைய குறுநாவல் தொகுப்பைப் படித்து ரசித்தேன். எல்லாக் கதைகளும் மிகச் சிறந்தவை என்பது எனது கருத்து. கதைகள் எல்லாம் உண்மைச் சம்பவங்கள் போன்று தென்படுகின்றன. வேறு வார்த்தையிற் சொன்னால் நிறைந்த யதார்த்தம் கொண்டவை. வாசிப்பதற்கு விறுவிறுப்பாயும் சுவாரஸ்யமாயும் இருக்கின்றன என்றால் மிகையாகாது. பொழுதுபோக்கிற்காக மட்டுமல்ல இவற்றை வாசிப்பதின் மூலம் அறிவையும் அனுபவத்தையும் கூடப் பெற்றுக்கொள்ளக்கூடியதாய் இருக்கின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது.

கனடா எழுத்தாளர் சங்கத்தில் ஓர் அங்கத்தவராகச் சேரும்படி அழைப்பு வந்ததாயும், அதில் சேருவதற்கு உரிய தகுதி உங்களுக்கு இருக்கின்றதா என்பதில் நீங்கள் சந்தேகம் கொண்டிருப்பதனால் அதிற் சேருவதற்குத் தயக்கம் காட்டுவதாயும் என்னுடன் தொலைபேசியில் உரையாடியபொழுது கூறியிருந்தீர்கள்.

நான் உங்களுடைய புத்தகத்தை முழுவதாய் ரசித்துப் படித்தவன் என்ற முறையில் கூறிவைக்க விரும்புவது "எந்தவித தயக்கமும் இல்லாமல் எழுத்தாளர் சங்கத்தில் நீங்கள் அங்கத்தவராகச் சேரலாம். அதற்குரிய தகுதி உங்களுக்கு உண்டு. அதாவது ஓர் எழுத்தாளனுக்குரிய எல்லாத் தகுதிகளும் உங்களுக்கு உண்டு என்பதை உங்களுடைய வாடாத றோசா என்னும் நூலையும் மற்றும் கனடா முரசொலிப் பத்திரிகையில் வந்த படைப்புக்களையெல்லாம் அடிப்படையாய்க் கொண்டு உறுதிபடக் கூறுகிறேன்." தொடரட்டும் உங்களுடைய சேவை. பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

இங்ஙனம்
க. கோபாலபிள்ளை
(ஸ்காபரோ, கனடா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் பசுந்தீவு கோவிந்தன் அவர்கட்கு,

உங்களுடைய குறுநாவல் தொகுப்பு "வாடாத ரோசா" என்னும் நூலை முழுமையாகப் படித்து ரசித்தவன் என்ற வகையில் எனது சுருக்கமான விமர்சனத்தை இங்கு தருவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இலக்கியம் மனித வாழ்க்கையின் இலட்சியங்களை அடைய உதவ வேண்டும் என்ற நோக்கில் உங்களுடைய கதைகளின் கருக்கள் நல்வாழ்க்கைக்கு எம்மை நெறிப்படுத்திச் செல்பவவையாய் அமைந்துள்ளமை இலக்கியப் படைப்பு என்ற தகுதியை இந்நூலுக்குப் பெற்றுக் கொடுத்துள்ளது. கதைகள் எல்லாம் யதார்த்தமும் கற்பனையும் நிறைந்தவையாய் இருப்பதனால் இவற்றின் நிதர்சனம் வாசகர்களை விளிப்படையச் செய்கின்றது. கதைகளிற் கலந்துள்ள காசியம் வாசகர்களைச் சோர்வடையாது பார்த்துக்கொள்வதுடன் மனதிற்கு மகிழ்ச்சியையும் ஊட்டுகின்றது. கதைகள் முழுவதும் பரந்து கிடக்கும் பழமொழிகள் சில உண்மைகளையும் கருத்துக்களையும் இரத்தினச் சுருக்கமாய் வெளிப்படுத்தி நிற்கின்றன என்றால் மறுப்பதற்கில்லை.

கதைகளை வாசிக்கும்போது அவற்றின் முடிவை ஊகிக்க முடியாதிருப்பதனாலும் அடுத்து என்ன நடக்கப் போகின்றது என்ற ஆர்வத்தைத் தூண்டி நிற்பதனாலும் இவை விறுவிறுப்பான கதைகள் என்ற தகுதியைப் பெற்றுள்ளன என்று கூறிவைக்க விரும்புகிறேன். கனடா மாப்பிள்ளை, கானல் நீர் ஆகிய கதைகள் இந்த நாட்டில் நமது சமூகக் குறைபாடுகள் பலவற்றை வெளிப்படுத்தி நிற்கின்றன என்பதை கசப்பாயிருந்தபோதும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். கனடியன் என்ற தகுதியைப் பெற்ற பெருமையுடன் வாழும் நம்மவர்களில் சிலர் அத்தகுதியைத் துர்ப்பிரயோகம் செய்வதையும் நீங்கள் எடுத்தியம்பத் தவறவில்லை. கனடா மாப்பிள்ளை என்ற கதையில் கார்த்திக்கிற்கும் மாதுரிக்கும் இடையில் வளர்ந்த காதல் திருமணத்தில் முடிகின்றது. திருமணம் முடிந்து ஓர் ஆண்டிற்குள் அது விவாகரத்தில் முடிவடைகின்றது. இதன் மூலம் காதலை நிதானமாக எடுத்துச் செல்லவேண்டும் என்றும் காதல் இளமை உணர்வுகளுக்கு அடிபணிந்ததாய் இருக்கப்படாது என்றும் எமது இளஞ் சந்ததியினர்க்கு எடுத்துக் கூறுகின்றீர்கள். இது மிகவும் ஆரோக்கியமான விடையம்.

மேலும், சில எழுத்தாளர்கள் மறைந்து நின்றே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதுவார்கள். இங்கு எழுத்தாளன் தோன்றியும் தோன்றாமலும் நிற்கும் போக்கைக் காணமுடிகின்றது. இது எழுத்தாளனின் மனோவளர்ச்சியைக் காட்டி நிற்கின்றது என்றால் மிகையாகாது. எமது எழுத்தாளர்களில் அநேகர் ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் நின்று எழுதுவதுதான் இதுவரை நான் அறிந்த உண்மை. சேரன் போன்ற ஒரு சில எழுத்தாளர் வட்டத்திற்கு வெளியே சென்று எழுதுவதையும் பார்த்திருக்கிறேன். நீங்களும் வட்டத்திற்கு வெளியே சென்று எழுதியிருப்பதை என்னால் அவதானிக்க முடிகின்றது. இது இலக்கிய வளர்ச்சியிற் பெரும் ஏற்றத்தை ஏற்படுத்துமென்று துணிந்து கூறுகிறேன்.

அத்துடன் கதாபாத்திரங்கள் சம்பாசணை செய்யும் பாணியில் கதைகள் எழுதப்பட்டிருப்பது உங்கள் கதைகளை மேலும் யதார்த்த நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது என்பது எனது உறுதியான முடிவாகும். உங்களை புதிய ஓர் எழுத்தாளன் என்று நீங்கள் கூறிக்கொள்ளுகின்றபோதும், இதுதான் உங்களுடைய முதலாவது நூலாக இருந்தாலும் ஓர் எழுத்தாளனுக்குரிய எல்லாத் தகுதிகளும் உங்களுக்கு உண்டு என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை.

தொடரட்டும் உங்கள் பணி, வாழட்டும் எமது தமிழ்.

இப்படிக்கு
நா. சுப்பிரமணியம் B.A.(Hon)
முன்னாள் அபிவிருத்தி உத்தியோகத்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுந்தீவு கோவிந்தனின் 'வாடாத றோசா' நூல் பற்றிய ஒரு கண்ணோட்டம்

கலாநிதி எஸ். சிவநாயகமூர்த்தி
முன்னாள் பிரதி கல்விப் பணிப்பாளர்

பசுந்தீவு கோவிந்தனின் வாடாதறோசா என்னும் நூல் சமகால நிகழ்வுகளையும், சமூகத்திற் புரையோடிப்போயுள்ள மூடநம்பிக்கைகளையும் சாடி பாதிக்கப்பட்டவர்களிடத்தே நம்பிக்கையையும் புத்துணர்வையும் ஊட்டத்தக்கதாகவும் தாயக விடுதலைப்போரின் நியாயங்களையும், கனடாவிற் சில குடும்பங்களிற் காணப்படும் தன்மானப் பிரச்சனைகளையும், கனடாவின் தொழில் அதனால் ஏற்படும் விவாகரத்துக்கள், கனடா மாப்பிள்ளைகளை நம்பி ஏமாறும் பெண்கள், கனடாவிற்கு வருவதற்காக ஆண்களை ஏமாற்றும் பெண்கள் எனப் பலரின் செயற்பாடுகளையும் வெளிக்கொணரும் நான்கு கதைகளைக் கொண்ட ஒரு நூலாகவே காணப்படுகிறது.

அவற்றுள் முதலாவது கதையான வாடாத றோசா காதலன் ஆமியினால் சுடப்பட்டு இறந்ததைத் தொடர்ந்து திருமண வாழ்க்கை இல்லை என்று இருந்த பெண்ணுக்குப் புதுவாழ்வளிப்பதாக அமைந்துள்ளது. அதாவது நம் சமுதாயத்தில் இளம் வயதிலே ஒரு பெண் கணவனையிழந்தால் அவள் சமூகத்திலே அமங்கலியென்றும் சுபகாரியங்களில் முன்னிற்கக்கூடாதென்றும், வெள்ளைப் புடவையையே அணிய வேண்டுமென்றும் சில வரையறைகளுக்குட்பட்டே வாழவேண்டுமென்றிருந்தது. இதற்கமையவே காதலனை இழந்த அபிவிருத்தி உத்தியோகத் தராகத் தொழில்புரிந்த செல்வநாயகி என்னும் பெண் காரியாலயத்திற்கும் வெள்ளைப்புடவை அணிந்து வேலைக்கு வருகிறாள். மற்றைய பெண்கள் போலிராது மனக்கவலையுடனும் சோகம் நிறைந்த முகத்துடனும் வேலைக்கு வந்து போகிறாள்.

இதே காரியாலயத்திற்கு வேலைக்கு அபிவிருத்தி உத்தியோகத்தராக நியமனம் பெற்று வந்த மோகன் அவளை அவதானிக்கிறான். அவளின் நிலமைகளை அறிந்த மோகன் தனது அறிவுரைகளாலும் அவள்மேற் காட்டிய அன்பினாலும் அவளின் மனத்தை மாற்றுகிறான். அத்துடன் அவளின் உடைநடை பாவனைகளையும் மாற்றி அவளை ஒரு சாதாரண பெண்ணாக மகிழ்ச்சியாக வாழவைக்க வேண்டுமென விரும்புகிறான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்காகப் பல வழிகளிலும் முயற்சி செய்கிறான். அவனது அறிவுரைகளினாலும் அவன் கொடுத்த மனோதைரியத்தினாலும் அவளின் மனமும் நடை உடை பாவனைகளும் மாறுகின்றன. அவளின் மாற்றம் கண்டு அவளுடன் வேலை செய்யும் பெண்களே பொறாமைப்படக் கூடிய அளவிற்கு அவளின் மாற்றங்களிருந்தன.

அவள் கொழும்பிற்கு மாற்றலாகிச் சென்றபொழுது அவளின் பிரிவினால் வேதனை அடைந்த மோகன் கொழும்பிற்குச் சென்று அவளின் சித்தப்பா வீட்டிற் சந்திக்கிறான். அவளின் மனமாற்றத்திற்கும் வாழ்விற்கும் புத்துயிரூட்டியது மட்டுமன்றி அவளையே காதலித்து அவளைத் திருமணம் செய்து அவளுக்கு மறுவாழ்வு கொடுத்து அவளை ஒரு வாடாத றோசாவாக மாற்றுகிறான். இக்கதையில் ஆசிரியர் எடுத்தாண்ட பழமொழிகள், அறிவுரைகள், அதற்காக ஏற்படுத்தப்பட்ட பின்னணிகள் யாவும் வாசிப்பவர்களுக்கு உற்சாகத்தையும் அடுத்து என்ன நடக்கப் போகிறதென வாசித்தறிய வேண்டும் என்ற ஆவலையும் தூண்டுவதாக அமைந்துள்ளமை வாசகர்களால் வியக்கக் கூடியதாகும்.

அடுத்து இலட்சியம் என்னும் கதை இடம்பெறுகிறது. இக்கதையில் இன்றயை தாயக நிலமைகளையும் விடுதலைப் போருக்குப் புலம்பெயர்ந்த நாடுகளிலுள்ளவர்களின் உதவிகளின் தேவைகள் பற்றியும் தாயகத்திற் போராளிப் பெண்கள் பொதுவாழ்விற்குத் திரும்பும்போது அவர்களுக்கும் வாழ்வு கொடுக்க ஆண்கள் முன்வரவேண்டும் என்ற இலட்சிய வேட்கையையும் ஆசிரியர் தனது கதையில் எடுத்தாளப்படும் கலந்துரையாடல்கள், அறிவுரைகள் என்பவற்றின் மூலம் வலியுறுத்தியுள்ளார். இதில் சோழன் என்ற கனடா இளைஞன் திருமணம் செய்வதானால் தான் தாயகம் சென்று போராளியாகவிருந்து பொதுவாழ்விற்குத் திரும்பிய ஒரு பெண்ணையே மணப்பேன் என்ற இலட்சியத்துடன் தாயகம் செல்கிறான். இவனுக்கென அவனது தாய்மாமன் மகள் அரசியைத் திருமணம் செய்துவைக்கப் பெற்றோர் ஆயத்தங்களைச் செய்து வைத்திருந்தனர். அரசியும் இவனைத் திருமணம் செய்யவே எண்ணியிருந்தாள்.

தாயகம் சென்ற சோழன் தனது முறைப்பெண்ணான அரசிக்குத் தன் இலட்சியத்தையும் தான் வந்த நோக்கத்தையும் கூறி அவளின் உதவியுடனேயே எவ்வளவோ எதிர்ப்புக்களுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடையிலும் தன் இலட்சியத்திலிருந்து மாறாதவனாய் பத்து வருடங்கள் போராளியாயிருந்து அவளது இரு சகோதரர்களும் மாவீரர்களாகிய காரணத்தினாலே பெற்றோரை பார்ப்பதற்கு ஒருவரும் இன்மையால் தலைமையின் அனுமதியுடனேயே பொதுவாழ்வுக்குத் திரும்பிய காஞ்சனா என்னும் பெண்ணையே திருமணம் செய்கிறான். இதற்கிடையில் ஆசிரியர் காஞ்சனாவை சோழனுக்குத் திருமணம் செய்துவைக்கும் முயற்சியில் அரசியின் தியாகத்தை பாராட்டக்கூடிய வகையில் அமைத்துள்ளார். அவற்றை அவர் எடுத்தாண்டமுறை வெகு சிறப்பாக அமைந்துள்ளது. இவற்றை வாசகர்கள் வாசித்துப்பார்க்கும்போது அவற்றிலுள்ள நயங்களும் கதையின் போக்கும் இரசிக்கத் தக்கதாகவிருக்கும்.

மூன்றாவது கதையாக கனடாமாப்பிள்ளை என்னும் கதை இடம்பெறுகிறது. இக்கதையிலே தற்சமயம் கனடாவிலே நடைபெறுகின்ற திருமணங்களையும் அவற்றில் காணப்படும் சில மாற்றங்களையும், ஆண்கள் பெண்களுக்கடையே காணப்படும் தான்தோன்றித்தனமான போக்குகளையும், அதனால் ஏற்படும் விவாகரத்துக்கள், ஏமாற்றுக்கள் போன்றவற்றையும் ஆசிரியர் இக்கதைமூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

கார்த்திக் என்ற கனடா மாப்பிள்ளை மாதுரி என்னும் பெண்ணைக் கனடாவிற் காதலிக்கிறார். பெற்றோரைப் பார்ப்பதற்காகத் தாயகம் செல்கிறார். அவர்களுக்கு உண்மையைக் கூறாமற் பெற்றோரின் விருப்பத்திற்கிணங்க ரதி என்னும் பெண்ணை அங்கு விவாகஞ் செய்துவிட்டு ஏழாவது நாள் கனடா வந்து விடுகிறார்.

அவர் கனடா வந்ததும் தான் தாயகத்தில் ரதியைத் திருமணம் செய்தது ஒரு விபத்தென்றும் தன்னை மறந்து விடுமாறும் ரதிக்குக் கடிதம் எழுதினார். கடிதத்தை ரதி வாசித்துவிட்டுப் பெற்றோருக்குக் காட்டுகிறாள். கடிதத்தை வாசித்த தந்தை மாறன் கோபத்துடன் கடிதத்தைக் கார்த்திக்கின் தந்தையான கந்தப்பு மாஸ்ரரிடம் காட்டி அவரைக் கடும் வார்த்தைகளால் ஏசவே கந்தப்பு மாஸ்ரர் தன்மகனின் செயலை எண்ணி மயங்கிக்கீழே விழுந்து மாரடைப்பால் மரணமடைகிறார்.

கார்த்திக் தந்தையாரின் மரணச் சடங்கிற்கும் வரவில்லை. ரதி கவலையுடன் பெற்றோரின் உதவியுடன் கனடா வந்து கார்த்திக்கிடம் தன்னை ஏற்றுக்கொள்ளும்படி கேட்கிறாள். அவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுக்கவே மாதுரியிடமும் நடந்ததைக் கூறிக் கேட்க அவளும் தான் முதலிலேயே கார்த்திக்கைக் காதலித்ததாகவும் விடமுடியாதென்றும் கூறிவிட்டாள். ரதி கார்த்திக்கை விவாகரத்துச் செய்கிறாள். பின்னர் கார்த்திக் மாதுரியைக் கல்யாணம் செய்து கொஞ்சக்காலம் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தான். இருவரும் வேலைக்குச் சென்று வந்தனர். மாதுரியும் ஒரு கொம்பனியில் வேலை செய்துவந்தாள். ஒருநாள் மாதுரி வேலை செய்துவிட்டு நேரம் பிந்தி வந்தாள். அடுத்த நாளும் நேரம் பிந்தி வந்தாள். வரும்போது ஒரு பிளான்ற் மனேச்சரான வெள்ளையன் கொண்டுவந்து இறக்குவதையும் அவன் மாதுரி இறங்கும்போது அவளின் கன்னத்தில் முத்தம் இடுவதையும் கார்த்திக் பார்த்துவிட்டான். இதனால் இருவருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. யார் அந்த வெள்ளையன் என்றும் ஏன் முத்தம் கொடுத்தான் என்றும் கார்த்திக் கேட்கவே அது தன்னுடைய கம்பனியில் வேலை செய்யும் பிளான்ற் மனேச்சர் என்றும் அவன் தனக்குப் பதவி உயர்வுக்காக உதவி செய்தவன் என்றும் மாதுரி கூறினாள். அவனுக்கு ரெஸ்ரோறன்ரில் ஒரு பாட்டி கொடுத்ததாகவும் அதனாலேதான் பிந்தி வந்ததாகவும் கூறினாள்.

அவன் முத்தம் கொடுத்தது பற்றிக் கடும் தொனியில் கார்த்திக் பேசவே மாதுரி பதவி உயர்வுக்காக எதையும் செய்வேன் என்ற தொனியில் கதைத்தாள். இதனால் ஆத்திரமுற்ற கார்த்திக் பளார் என அவளது கன்னத்தில் அறைந்தான். இதனால் மாதுரி வீட்டை விட்டு தாய்வீட்டிற்குச் சென்று விடுகிறாள். அதைத் தொடர்ந்து கார்த்திக் தனிமையில் கவலையுடன் வாழ்ந்தான். பின்னர் விவாகரத்துப் பத்திரம் வந்தது. இருவரும் விவாகரத்தும் செய்து கொண்டனர்.

கார்த்திக்கால் ஏமாற்றப்பட்ட ரதி மொன்றியலுக்குத் தன் சினேகிதி தேவகி வீட்டிற்குச் செல்கிறாள். செல்லும் வழியில் பேரூந்தில் எழுத்தாளர் கோவிந்தை சந்தித்த ரதி தனது வாழ்க்கை நிலையைக் கூறவே கோவிந்தும் அவளுக்கு ஆலோசனை கூறி தன்நம்பிக்கையுடன் இருக்கும்படியும், மறுமணம் செய்து வாழ்க்கையிற் சிறப்பாகவிருப்பாயென்றும், வேண்டிய நேரம் தேவையான உதவிகளைச் செய்வதாகவும் இதைத் தான் ஒரு நாவலாக எழுதுவதாகவும் கூறிச் செல்கிறார். இவளின் தோழியின் கணவரும் ஒரு சாத்திரியானபடியால் இவளின் எதிர்காலம் சிறப்பாக அமையும் என்று கூறினார்.

இவற்றால் தன்னம்பிக்கையுடன் ரொறன்ரோ திரும்பிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரதி தன்னுடைய கம்பனியில் வேலை செய்யும் பிரபா என்னும் இளைஞனைக் காதலித்துத் திருமணம் செய்து மகிழ்ச்சியுடன் வாழுகிறாள். இவர்களின் காதல் கைகூடிய விதம் பற்றி ஆசிரியர் மிக அழகாக வர்ணித்துள்ளார். ஏமாற்றம் அடைந்த கனடா மாப்பிள்ளை கார்த்திக் மீண்டும் தாயகம் சென்று புறோக்கர் புரட்சியிடம் தாயுடன் செல்கிறார். அங்கு மூன்றாவது கல்யாணமாக குணமான பெண்ணைப் பார்த்துத் தரும்படி கேட்டுக் காத்திருந்தார். இந்தக் கதைமூலம் ஆசிரியர் கனடாவில் சில ஆண்கள் இங்கு ஒருவரைக் காதலித்துவிட்டு தாயகத்திற்போய் அப்பாவிப் பெண்களைத் திருமணம் செய்வதும், இங்குள்ள பெண்கள் சிலரினதும் ஆண்கள் சிலரினதும் தான்தோன்றித்தனங்களாற் குடும்பப் பிரிவினைகள் ஏற்படுவதையும் தெளிவாக விளக்கியுள்ளார்.

நான்காவது கதையான கானல்நீர் என்னும் கதையில் நகுலனின் திருமணம் பல எதிர்பாராத சம்பவங்களால் நிறைவேற முடியாத கானல் நீராகப் போகிறதென்பதை வெகுதுல்லியமாக எடுத்துக் காட்டியுள்ளார். இக்கதையில் நகுலன் என்னும் இளைஞன் தாயகத்திலிருக்கும்போது அயலில் வசித்த மஞ்சு என்னும் பெண்ணைக் காதலித்தான். பின்னர் நாட்டு நிலமையால் பெற்றோரின் விருப்பப்படி கனடா வந்து சேர்கிறான். அவன் கனடா வந்ததும் மஞ்சுவும் தாயகத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வுகளால் வேறு இடத்திற்குச் செல்லவே இருவரின் தொடர்பும் இல்லாது போகிறது. இவனது அகதிக்கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டு அப்பீலில் இருந்தது. ஏழு வருடங்களாகியும் மஞ்சுவைப் பற்றியும் எதுவும் அவனால் அறிய முடியவில்லை. பின்னர் சினேகிதன் அரவிந்தனின் அறிவுரையின்படி அரவிந்தனின் சகோதரனின் மனைவியின் தங்கை பைரவியைத் திருமணம் செய்கிறான். பைரவி தனது புத்திசாலித்தனத்தாலும் உழைப்பாலும் தனது சகோதரனை கனடாவிற்குக் கூப்பிட்டு விடுகிறாள். இதனால் அவளின் கையோங்கவே பணத்திற்காக நகுலனுடன் அடிக்கடி சண்டை போட ஆரமபித்தாள்.

சிங்கிள்மதர் பணத்தாலும் வரி செலுத்தாத உழைப்பாலும் பணத்தைச் சேகரித்த பைரவி கணவன் நகுலனை மதியாது வாய்காட்டத் தொடங்கினாள். இதனால் கோபமுற்ற நகுலன் ஒருநாள் அடித்துவிடுகிறான். அதனால் கோபமுற்ற மனைவி பைரவி பொலிஸிற்கு அறிவித்துவிட்டு வீட்டைவிட்டு தன் பெற்றோரிடம் செல்கிறாள். பின்னர் பொலிஸ் வந்து நகுலனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவிலங்கு மாட்டித் தங்கள் பாதுகாப்பில் மூன்றுநாள் வைத்திருந்து பிணையில் செல்ல அனுமதித்தனர். பின்னர் கோட்டிலே நீதவான் விளங்கி அவளைப் பார்க்கக்கூடாது அவளுடன் பேசக்கூடாதென நிபந்தனை விதிக்கிறார். இறுதியில் விவாகரத்தும் இடம்பெறுகிறது. நகுலனுக்கும் லான்டட் பேப்பரும் கிடைத்து விடுகிறது. ஆசிரியர் நகுலனை வைத்து கனடாவின் நீதிச் சட்டங்களையும் நீதவான் கேட்கும் கேள்விகளையும் அழகாகச் சித்தரித்துள்ளமை கனடாவில் நடைபெறும் விளக்கமுறைகள் பற்றி வாசிப்போரைக் கவரக்கூடியமுறையில் எழுதியுள்ளார்.

அதைத் தொடர்ந்து சோகம் கலந்த தனிமை வாழ்வில் நகுலன் வாழ்ந்து கொண்டிருந்தான். திருமணத்தால் ஏற்பட்ட விரக்தியாலும் தனிமையினாலும் வாடிய நகுலன் தான் தாயகத்திற்குச்சென்று மஞ்சுவைக் கண்டுபிடித்துத் திருமணம் செய்து வரவேண்டுமென விரும்புகிறான். இதற்கிடையில் இவனது சினேகிதனான அரவிந்தன் பெற்றோர் பெண்பார்த்திருப்பதாக அறிந்து கொழும்பு சென்று பெண் பிடித்ததால் திருமணத்தை எழுதிவிட்டுக் கனடாவிற்கு வருகிறான். இதை நகுலனுக்குக் கூறி நகுலன் போகும்போது தனது மனைவிக்குச் சில பொருட்களை கிவ்ற்றாகக் கொடுத்தனுப்பினான். நகுலன் கொழும்பு சென்று அரவிந்தன் கொடுத்த விலாசத்திற்குச் சென்று அரவிந்தனின் மனைவியான தமிழ்ச்செல்வியிடம் கிவ்ற்றைக் கொடுத்தான். அப்பொழுது அவனுக்கு பேரதிர்ச்சியே ஏற்பட்டது. நகுலன் யாரைக் காதலித்திருந்தானோ, யாரைத் தொலைத்திருந்தானோ, யாரைக் கண்டு பிடித்துத் திருமணம் செய்ய வேண்டுமென தாயகத்திற்குச் சென்றானோ அந்த மஞ்சுவே அரவிந்தனின் மனைவியான தமிழ்ச்செல்வியாக, இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து சுகம் விசாரித்ததுடன், நகுலன் தன் ஏமாற்றத்தையும் கவலையையும் அடக்கிக் கொண்டு கிளிநொச்சிக்குச் செல்லலானான்.

பின் புறோக்கரைச் சந்தித்து ஒரு மாதலீவிற்குள் ஒரு பெண்ணைத் திருமணம் செய்யவேண்டுமென முடிவுசெய்தான். புறோக்கர் தம்பரை அணுகினான். புறோக்கர் திருமணம் பேசி ஒழுங்காக்கினார். திருமணமும் நிறைவேறியது. திருமணம் முடிந்த கையோடு நகுலன் கனடா வந்து பெண்ணை ஸ்பொன்சர் செய்தான். இதில் புறோக்கர்மார்கள் சிலரின் திருகுதாளங்களையும், பொய் சொல்லித் திருமணங்களைச் செய்வது பற்றியும் சம்பாசனைகள் மூலம் ஆசிரியர் சிறப்பாக வெளிக்கொணர்ந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளார்.

ஸ்பொன்சரில் கனடா வந்த காவேரியை வரவேற்பதற்காக நகுலன் விமான நிலையம் சென்றான். அங்கே காவேரியை வரவேற்பதற்காக அவளின் சித்தப்பாவும் சித்தியும் இன்னும் ஓர் இளைஞனும் வந்திருந்தனர். காவேரி அவர்களை நகுலனுக்கு அறிமுகஞ் செய்தாள். பின்னர் நகுலன் காவேரியை தனது வீட்டிற்குப் போகலாம் வாருங்கள் என்றதும், திருமணம் முடிந்தபின் வருவதாகவும் அதுவரை சித்தி வீட்டிலேயே தங்கப் போவதாகவும் கூறிச்சென்றுவிட்டாள். அடுத்தநாள் நகுலனுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அதில் காவோரி நகுலனை அழைத்து ஒரு குண்டைத் தூக்கிப் போட்டாள். தான் அன்று சித்தியின் நண்பரென அறிமுகம் செய்த இளைஞன் தன் காதலனென்றும் அவனை ஆறு ஆண்டுகளுக்கு மேலாகக் காதலித்து வந்ததாகவும் அவனுக்கு கனடாவில் லாண்டட் பேப்பர் இல்லாதபடியால் வேறு வழியின்றிக் கனடா வருவதற்கு இந்தவழியைத் தான் பாவித்ததாகவும் தன்னை மன்னித்துவிடுமாறும் தனக்கு என்ன தண்டனை தந்தாலும் ஏற்றுக் கொள்வதாகவும் கூறினாள். இதைக் கேட்ட நகுலன் எல்லாம் தன் தலைவிதி என்று கூறிக்கொண்டு இருவரையும் பிரிக்க நான் எதையும் செய்ய மாட்டேன் என்று கூறினான்.

தனது திருமண விடயம் மான்கள் தேடியோடும் கானல் நீர் போலாகிறதெனக் கவலையடைந்தான். பின்னர் அவன் வேலை செய்யும் தொழிற்சாலையில் தன்னுடன் ஒன்றாக வேலைசெய்யும் கயானா நாட்டைச் சேர்ந்த தேவிகா என்னும் இந்துப் பெண்ணைக் காதலித்தான். காதல் வளர்ந்து காதலை வெளிப்படுத்தத் தயாராகும் வேளையில் அவளுக்கு இரத்தப் புற்று நோய் வருகிறது. இறுதியில் அவள் இறக்கிறாள். நகுலனின் திருமண வாழ்க்கையே கானல் நீராகிறது.

இக்கதையில் ஆசிரியர் இருவரின் காதலையும் கண்முன் நிசமாக நடப்பதைக் காட்டுவது போலவும், தேவிகா நோயுற்ற பொழுது அவள்படும் வேதனைகளை வாசிப்போர் கண்கலங்கத் தக்கதாகவும் எழுதியுள்ளார். ஓர் எழுத்தாளனின் எழுத்து வாசிப்போருக்கு உரிய இடங்களில் கோபம், கவலை, கண்ணீர், துணிவு, இரக்கம், காதல் என்பவற்றை உணரச் செய்யும்போதே அவை வாசகர்களின் நெஞ்சைத் தொடுகின்றன.

இவரின் கதைகளில் காணப்படும் எழுத்தோட்டம், யாவரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கக்கூடிய மொழிநடை, எடுத்தாண்டுள்ள பழமொழிகள், ஒவ்வொரு நிகழ்வுகளையும் வாசகர்கள் தொடர்ந்து வாசிக்க ஊக்கும் தன்மை என்பன மிகவும் பாராட்டத்தக்க முறையில் அமைந்துள்ளன. கதைகள் நான்கும் சமூகத்திற் காணப்படும் யதார்த்தத்தையும், கிராமியச் சூழலையும், தற்போதைய தாயகப் போர்ச்சூழலின் பாதிப்புக்களையும் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளன. இவ்வாறான தன்மைகள் ஆசிரியரின் எல்லாக் கதைகளிலும் காணப்படுவது ஆசிரியரின் எழுத்துக்குக் கிடைத்த ஒரு பெருவெற்றியாகும்.

இவரின் கதைகளை இரசிக்க வேண்டுமானால் அவர் எழுதிய நடையிலே வாசிக்கவேண்டும். அப்பொழுதுதான் கதைகளை பூரணமாக ரசித்து அவற்றின் பயனை முற்றாகப் பெறமுடியும்.

## ஆதி அருள்நெறி மன்றத்தில் பொங்கல் விழா

"கண்டேன் பொங்கல் விழா உண்டேன் சர்க்கரைப்பால் பொங்கல்" எங்கே? என்ற கேள்விதானே! தமிழ்த் திருநாளாம் தைப்பொங்கல் திருநாளில் மாலையில் (14-01-2008) ஆதி அருள்நெறி மன்றப் பாடசாலை மண்டபத்தில் மேற்படி விழா நடைபெற்றது.

"சின்னக்குழந்தை விழிகளிலே தெய்வம் வந்து சிரிக்குதம்மா, வண்ணப் பூவிதழ் மழலையிலே வாய்ச்சொல்லின் தத்துவம் தெரியுதம்மா" என்ற கவிஞரின் வரிகள்தான் இந்த விழாவுக்குச் சான்றாகும். சின்னஞ் சிறு பெண்போலே சிற்றாடை உடை உடுத்திய சிறுமியரும், வேட்டி கட்டித் தலைப்பாகையுடன் சிறுவர்களும் வந்து ஆடினார்கள், பாடினார்கள், சிறுகதைகள் சொன்னார்கள். மேடைப்பேச்சாளராய்ப் பேசினார்கள். விடுகதைகள் விடுத்து சபையோரைச் சிந்திக்கவும் சிரிக்கவும் செய்தார்கள். தானும் சுற்றி உலகையும் சுற்றவைக்கும் பகலவனைக் கூட்டிவந்து அம்பலம் ஆடும் ஐயனையும் அழைத்துவந்தார்கள். தடவரையில் உழன்றுநின்ற தகப்பன் சாமியையும் வாங்கியுண்ணும் வயிற்றுச் சாமி என்று ஒரு புலவரால் நையாண்டிப் பக்திப் பாடலாக பாடப்பெற்ற ஆலமரத்தடிப் பிள்ளையாரையும் வேப்பிலையும் பொற்கரகம் முத்துமாரி என்று போற்றப்படும் உலக மாதாவாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மனையும் தங்கள் ஆடல் பாடல்கள்மூலம் கூட்டிவந்து சபையோரைப் பக்தியில் ஆழ்த்தினார்கள்.

இத்தனை அற்புதங்களையும் யார் செய்தார்கள் என்றால் நான்கு வயதுமுதல் பன்னிரு வயது வரையுள்ள சிறுவர்களும் சிறுமியர்களும்தான் என்றால் வியப்பாய் இருக்கிறதல்லவா? தாங்கள் பயின்ற பயிலுகின்ற தமிழையும் சைவத்தையும் குழைத்து வந்தோர் அனைவருக்கும் சர்ககரைப் பொங்கலாய்த்தான் படைத்தார்கள். மேற்சொன்ன ஆதி அருள்நெறி மன்ற அமைப்பாளர் டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம் அவர்களும் குடும்பத்தினரும் அவர்களுக்கு உறுதுணையாக நின்றனர். உழைக்கும் நல்மனம் கொண்ட நல்லாசிரியர்களுக்கும் அவர்களின் உண்மையான உழைப்பிற்கும் கிடைத்த ஊதியம்தான் இந்தப் பொங்கல் விழாப்படைப்புக்கள்.

இந்த விழாவில் நிகழ்ந்த இரு விடயங்களையும் இந்த நேரத்திற் குறிப்பிட்டாக வேண்டும். தமிழர் புலம்பெயர்ந்து கூடுதலாக வாழும் நாடு கனடா. இங்கே மாதந்தோறும் புத்தக வெளியீடுகளும் கௌரவங்களும் தொடரும் இவ்வேளையில் தன்னை யாரென்று காட்டிக்கொள்ளாதவகையில் 'பசுந்தீவு கோவிந்தன்' என்ற புனைபெயரில் தன் அனுபவத்தையும், நிசமாக நடந்தவற்றையும் தனது எழுத்தாற்றல் மூலம் வாசிப்போரை அந்தப் பசுந்தீவுக்கு அழைத்துச் செல்லும் எழுத்தாளரை அறிமுகம் செய்து **'கற்பனைச் சிற்பி'** என்ற பட்டம் அளித்து கௌரவித்தனர்.

நாம் எல்லாம் இவரா? என்று வியப்பான பார்வை எல்லார் மனதிலும் ஏற்பட்டது. அத்தனை அடக்கமும் ஆற்றலும் உடைய ஒருவரைப் பார்த்தோம். தமிழ் கூறும் நல்லுலகின் சார்பில் நன்றி சொன்னோம்.

மேலும் இரண்டாமவராக ஒருவரை அறிமுகம் செய்தார்கள். இவர் தமிழ் பேசுவாரா? எழுதுவாரா? என்ற கேள்விக்கு அவர் முத்தமிழிலும் வித்தகராய் இலங்கையின் மும்மொழிகளிலும் கற்றுத் தேர்ந்தவராய் பல்கலைக் கழகங்களில் பட்டம் பெற்றவராய் ஆங்கெல்லாம் ஆராய்ச்சிகள் செய்தவரான முஹமத் ஹன்ஸீர் அவர்களாவர். இவருக்குச் **'சிந்தனைச் செம்மல்'** என்ற பட்ட மளித்துக் கௌரவித்தனர்.

இப்படியான விழாக்கள் மூலம் எதிர்காலத் தமிழ்ச் சந்ததியினரின் தமிழ்மொழி வளர்ச்சிக்கும், சைவநெறி உயர்வுக்கும் தொண்டாற்றும் ஆதி அருள்நெறி மன்றத்திற்கு நன்றி கூறுவதோடு, நாமும் முடிந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவில் உறுதுணையாய் நிற்போம் என்று கூறி விடைபெறுவோம். இன்னும் வரும் விழாக்களில் சந்திப்போம்.

நன்றிகள்!

அன்புடன்,
பூர்வீகன்

## நன்றி நவிலல்

அன்பார்ந்த வாசக நேயர்களுக்கு பசுந்தீவு கோவிந்தனின் இதயம் கனிந்த வணக்கம்!

எனது முதலாவது வெளியீடான "வாடாத ரோசா" என்னும் குறுநாவல் தொகுப்பை வாங்கிப் படித்து இன்புற்ற அனைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதிற் பெருமகிழ்ச்சியடைகிறேன். இந்நூலைப் படித்து இன்புற்ற வாசகர்களிற் பலர் தங்களுடைய கருத்துக்கள், அபிப்பிராயங்கள், விமர்சனங்கள் என்பவற்றை எனக்கு நேரிலும், தொலைபேசி மூலமும், எழுத்துவடிவிலும் தெரியப்படுத்தியிருந்தனர். அவற்றிற் சிலவற்றை கனடா முரசொலிப் பத்திரிகையிற் பிரசுரித்திரிந்தேன். அவற்றை வாசித்து மகிழ்ந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். இந்நூலை வாங்கிப்படித்து இன்புற்றவர்களுக்கும் அத்தோடு நின்றுவிடாமல் தங்களுடைய இந்நூலைப் பற்றிய கருத்துக்கள், அபிப்பிராயங்கள், விமர்சனங்களைத் தெரியப்படுத்திய அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றிகளை மறுபடியும் தெரிவித்துக் கொள்வதில் உளம் நிறைந்த உவகை அடைகிறேன்.

இத்துடன் நின்றுவிடாமல் எனது தொடர் முயற்சியாக "தீர்ப்பு" என்னும் நாவலை உங்களுக்குத் தரவிருக்கிறேன். இதுவரை வெளிவந்த எனது குறுநாவல்களைவிட இது சற்று நீளமானது. இந்தப் பத்திரிகையில் இது முற்றுப்பெறுவதற்குப் பல மாதங்கள் பிடிக்கும். இது மிகச் சுவாரசியமானதும், நிறைந்த யதார்த்தம் கொண்டதும், துப்பறியும் பாணியிலான அம்சங்களை அடக்கிய நாவலாகும். வாராந்தம் புதன்கிழமைகளில் வெளியாகும் கனடா முரசொலிப் பத்திரிகையைத் தவறாது வாங்கிப் படிப்பதன் மூலம் இந்த நாவலை நீங்கள் பூரணமாகப் படித்து இன்புற முடியும் என்பது எனது தீர்மானம். எனவே தொடராக வரவிருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நாவலை தவறாது படித்து இன்புறுமாறு வினையமாக வேண்டுகிறேன்.

வாசகர்களாகிய உங்களுடைய ஆதரவே இத்துறையில் எனக்கு வெற்றியைப் பெற்றுத் தரும். எதிர்காலத்திலும் உங்களுடைய ஆதரவு நிச்சயம் கிடைக்கும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை எனக்குண்டு. புலம்பெயர்ந்த நாட்டிலும் எமது தமிழ் உயிர்வாழ என்னாலான முயற்சியைத் தொடருவேன். வாசக நேயர்களாகிய உங்களுடைய ஆதரவு அதற்கு மிகமிக அவசியம். சிலர் குறை காணலாம். அதுகும் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு வேண்டியதுதான். எல்லாவற்றையும் உள்வாங்கிக் கொண்டு சிறந்த படைப்புக்களை எதிர்காலத்தில் உருவாக்க உங்களுடைய பேராதரவை வேண்டி நிற்கிறேன்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!!

இங்ஙனம்
உங்கள் அன்பிற்குரிய
பசுந்தீவு கோவிந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைப்பு - 2

## ஆசிரியர் கௌரவிக்கப்படுதல்

**ஆதி அருள்நெறி மன்றம்**
றொறன்ரோ - கனடா

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியின் முன்னாள் போதனாசிரியரும், பேராலை கிராமத்தின் முன்னாள் கிராம அபிவிருத்தி சங்கத்தலைவரும், தற்போது கனடாவில் CIBC World Markets Inc.இல் Account Processing Officer ஆக கடமையாற்றுபவருமான கனடா முரசொலிப் பத்திரிகையின் தொடர்கதை எழுத்தாளர்

**பசுந்தீவு கோவிந்தன்**

அவர்களுக்கு, அவரது படைப்பாற்றலைப் பாராட்டி ஆதி அருள்நெறி மன்றம்

**கற்பனைச் சிற்பி**

என்ற சிறப்புப் பட்டத்தை மிக மகிழ்வுடன் வழங்கிக் கௌரவிக்கிறது.

ஆதி அருள்நெறி மன்றம்
தை 14, 2008





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுந்தீவு கோவிந்தன் அவர்களுக்கு ஆதி அருள்நெறி மன்றம் வழங்கிய கற்பனைச் சிற்பி என்ற பட்டமளிப்பின்போது முரசொலிப் பத்திரிகை ஆசிரியர் பல்கலைச் செல்வன் முஹம்மத் ஹன்சீர் அவர்களால் வாசிக்கப்பட்டது பின்வருமாறு:

ஆதி அருள்நெறி மன்றத்தின் அன்புமிக்க தலைவர் அவர்களே இப்பொங்கல் விழாவுக்குச் சமூகம் தந்துள்ள பெரியோர்களே, தாய்மார்களே, சகோதர சகோதரிகளே, பிள்ளைகளே இப்புனிதமான பொங்கல் விழாவில் பசுந்தீவு கோவிந்தன் அவர்களை அறிமுகப்படுத்துவதிலும் கௌரவப் படுத்துவதிலும் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய நெடுந்தீவு ஒரு வரலாற்றுப் புகழ்பெற்ற தீவாகும். அது பசுமையான மரங்களையும் புற்றரைகளையும் கொண்ட பூமி. அத்தோடு போத்துக்கேயரின் வருகைவரை அங்கு பசுக்கள் நிறைந்து காணப்பட்டன. அதனால் அது பசுந்தீவு என்னும் பெயர் பெற்றது. அப்பூமி மருந்து மூலிகைகளைக் கொண்டதாக இருந்ததனால் அதற்கு மூலிகைத்தீவு எனும் பெயருமிருந்தது. வியாதிகைளக் குணப்படுத்தும் மூலிகைகள் அங்கு வளர்ந்த மையால் மக்கள் அத்தீவில் வாழ விரும்பினர். அப்படிப்பட்ட பசுந்தீவில் ஒரு சாதாரண கமக்காரக் குடும்பத்திற் பிறந்தவரே இப்பசுந்தீவு கோவிந்தன்.

அவர் தனது ஆரம்பக் கல்வியை தனது சொந்தக் கிராமமான வெட்டாக்காட்டில் அமைந்துள்ள பாரதி வித்தியாசாலை யிலும் ஆறாம் வகுப்பு முதல் க.பொ.த. சாதாரண வகுப்புவரை நெடுந்தீவு மகாவித்தியாலயத்திலும் கற்றார். அதனைத் தொடர்ந்து க.பொ.த உயர்தரக் கல்வியை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கற்று முடித்தார். அன்று இலங்கைப் பல்கலைக்கழகம் கொழும்பிலும் பேராதனையிலுமாக இருந்தது. இவர் தனது க.பொ.த. உயர்கல்வியைத் தொடர்ந்து இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனைக்குத் தெரிவு செய்யப்பட்டார். அங்கு தனது பட்டக் கல்வியைத் தொடர்ந்து கற்று பொருளியற் துறையில் சிறப்புப் பட்டதாரியானார்.

பின் யாழ்ப்பாணத் தொழில் நுட்பக் கல்லூரியில் பல வருடங்கள் போதனாசிரியராகக் கடமையாற்றினார். இங்கு கடமையாற்றிக் கொண்டிருக்கும் காலத்தில் பேராலை என்னும் கிராமத்தில் சில வருடங்கள் கிராம அபிவிருத்திச் சங்கத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவராகப் பணியாற்றினார். அவரது சிறந்த பணிகளை அக்கிராம மக்கள் போற்றியதோடு, அவர் அக்கிராம மக்களின் அன்பிற்கும் மதிப்புக்கும் ஆளானார். அவரது தன்நலங்கருதா சமூக சேவை மிகவும் மெச்சத்தக்கதாக இருந்தது. பின் வெளிநாடு சென்று தொழில்புரிய வேண்டுமென்ற ஆர்வம் அவரை மேற்கொண்டதால் சவூதி அரேபியாவுக்குச் சென்று டமாம் நகரிலுள்ள SEPCO என்று அழைக்கப்படும் துறைமுக சரக்கு இறக்குமதிக் கம்பனியில் சரக்கு இறக்குமதிக் கணக்கராக தொழில் புரிந்தார். பின் நாடு திரும்பியதும் நாட்டின் நிலமையில் நல்லொரு சூழ்நிலை அமைவதாகக் காணப்படவில்லை என்பதை உணர்ந்தார்.

இதன் காரணமாகக் கனடாவுக்குப் புலம்பெயர்ந்தார். அப்பொழுது கனடா தொழிற்சந்தையின் நிலமையைப் புரிந்துகொண்ட அவர் கம்பியூட்டர் மயமான கனடாத் தொழிற்சந்தைக்கு தன்னைத் தகுதியுடையவராய் ஆக்கிக் கொள்ளும்பொருட்டு East York Adult Learning Centre இல் சேர்ந்து கம்பியூட்டரோடு சம்பந்தமான கல்வியைக் கற்று டிப்ளோமா பட்டம் பெற்றார். பட்டமளிப்பு விழாவின்போது இவருக்கு Academic Award கிடைக்கப்பெற்றது குறிப்பிடத்தக்கதாகும். அதன் பிற்பாடு CIBC வங்கி நிறுவனத்தில் சேர்ந்த இவர் கடந்த 12 வருடங்களாக CIBC World Markets Inc. இல் Account Processing Officer ஆகக் கடமையாற்றி வருகிறார், எனினும் ஓய்வு நேரத்தை வீணாக்காது எழத்துத் துறையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்.

இன்று இவரது எழுத்துப் பணி தமிழ் மொழி வளர்ச்சிக்கு உதவிக்கொண்டிருக்கின்றது. பெருமளவிலான வாசகர்கள் இவருக்கு இருக்கின்றனர். 2003ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை கனடா முரசொலிப் பத்திரிகையின் தொடர்கதை ஆசிரியராக பணி புரிந்துகொண்டிருக்கிறார். இதுவரை வாடாத றோசா, படுக்கையின் கீழ் பாம்பு, கானல் நீர், மண் வாசனை, இலட்சியம், கனடா மாப்பிள்ளை, கனடா முதிவர் ஆகிய சமூக நாவல்களை எழுதியுள்ளார்.

இவர் தற்பொழுது தீர்ப்பு என்னும் தொடர்கதையை எழுதிக் கொண்டிருக்கின்றார். இவரது குறுநாவல்களின் கரு, கதைப்போக்கு, அமைப்பு இவையாவும் ஒரு தனிப்பாணியிலும், படிப்பினையாகவும் சமூகத்தைப் படம்பிடித்துக் காட்டுபவவையாகவும் அமைந்துள்ளன. வாசகர்களின் சிந்தனையைக் கிளறுபவைகளாகவும், அடுத்த கட்டமென்ன என ஆவலைத் தூண்டுபவைகளாகவும் அவை இருப்பது பாராட்டப்பட வேண்டிய தொன்றாகும். எனவே அவையாவும் என்றும் வாடாத றோசாக்களாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தான் எழுதிய குறுநாவல்களில் நான்கினைத் தொகுத்து "வாடாத றோசா" என்ற பெயரில் சென்ற வருடம் அதாவது 2007 ஜனவரி 13 இல் தனது முதலாவது நூலை வெளியிட்டிருந்தார். இப்பொழுது அந்நூல் விற்பனையில் இருக்கின்றது. இந்நூலுக்கு வாசகர்களிடமிருந்து கிடைத்த வரவேற்பு வரவேற்கத்தக்கதே. படித்து ரசித்த, படித்தறிந்த வாசகர்களிடமிருந்து கிடைத்த வரவேற்புக்குச் சான்றாக வாசகர்களுடைய விமர்சனங்களும் அபிப்பிராயங்களும் அமைந்திருந்தன. அவற்றுட் சில கனடா முரசொலிப் பத்திரிகையில் வெளியாயின.

இன்று கனடாவில் குறுநாவல் எழுத்துத்துறையில் ஈடுபட்டிருப்பதன் மூலம் சிறந்த, இனிமையான தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் தேவைப்பட்ட சேவையை வழங்கிக்கொண்டிருக்கும் பசுந்தீவு கோவிந்தன் அவர்களுக்கு **கற்பனைச் சிற்பி** என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கிக் கௌரவிப்பதில் ஆதி அருள்நெறி மன்றம் மிக்க மகிழ்ச்சியடைகின்றது.

வணக்கம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துத் துறையில்
பசுந்தீவு கோவிந்தனின்
ஐந்து வருட சேவையை முன்னிட்டு
பிரபல பல்வைத்திய நிபுணர்

## டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம் அவர்கள்

## வழங்கிய வாழ்த்தும் பாராட்டும்

# கற்பனைச் சிற்பி



கற்பனைச் சிற்பி பசுந்தீவு கோவிந்தன் கடந்த ஐந்து வருடங்களாக கனடா முரசொலிப் பத்திரிகையிற் தொடர் கதைகளை எழுதி வருகிறார் என்பது வாசகர்கள் அறிந்த விடயம். இவருடைய படைப்புக்கள் கற்பனைக் கதைகளென்று சொல்லப்பட்டாலும் நிறைந்த யதார்த்தம் கொண்டவை என்பதை யாரும் மறுக்கமுடியாது. இலங்கையிலும் தமிழ் ஈழத்திலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் வாழுகின்ற தமிழ் மக்களின் நிகழ்கால நிகழ்வுகளைப் பிரதிபலிப்பவையாகவே இவருடைய படைப்புக்கள் அமைந்துள்ளன. காலத்திற்கு ஒவ்வாத கொள்கைகள் பழக்கவழக்கங்கள் களையப்பட வேண்டுமென்பதிலும், மனித நேயத்திற்கு ஒவ்வாத பண்பாடுகள் ஒழிக்கப்பட வேண்டுமென்பதிலும் இவர் கொண்டுள்ள அக்கறையை தனது எழுத்துக்களின்மூலம் வெளிப்படுத்துகிறார். அத்தோடு ஏமாற்று, நம்பிக்கைத் துரோகம், செய்நன்றி மறத்தல் ஆகிய தீயபண்புகளை தனது கதைகளில் அழுத்தம் திருத்தமாகச் சாடுகிறார்.

இறுதியாக வந்த “தீர்ப்பு” என்னும் தொடர்கதையிற் சட்டம் நீதித்துறை சில வேளைகளிற் தடுமாறினாலும் தருமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருபோதும் தடுமாறுவதில்லை என்பதையும், தருமத்தை யாரும் விலைகொடுத்து வாங்கமுடியாது என்பதையும் தத்ரூபமாகக எடுத்துக் காட்டியுள்ளார். அதர்மத்தின் உக்கிரத்தாற் தருமம் சரிவதுபோன்று சிறிது காலம் தோன்றினாலும் தருமம் மறுபடியும் முழுவீச்சுடன் நிமிர்ந்து நிற்குமென்பதையும் "தீர்ப்பு"மூலம் நிரூபித்துள்ளார். இவருடைய படைப்புக்கள் நிறைந்த உயிரோட்டம் கொண்டவை என்பது வாசகர்கள் அறிந்த உண்மை. கதாபாத்திரங்களை உருவாக்கி அவற்றிற்கு உயிரூட்டி அவற்றை நடமாடவிடும் ஆற்றல் விடையத்தில் அவருக்கு நிகர் அவரே.

இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது கதாசிரியரின் நோக்கம் தனித்துக் கதை சொல்வது மட்டுமல்ல, ஆரோக்கியமான ஒரு சமுதாயத்தை உருவாக்குவதுமாகும் என்பது வெள்ளிடைமலை. இத்தனை திறமையும் ஆற்றலும் கொண்ட பசுந்தீவு கோவிந்தனை பாராட்டுவதிற் பெருமகிழ்ச்சி அடையும் அதேவேளை சிவனருளால் எல்லா நலன்களும் பெற்றுச் சிறப்புடன் வாழவேண்டுமென்றும் உளமார வாழ்த்துகிறேன்.

இங்ஙனம்
டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம்
பிரபல பல் வைத்தியநிபுணர்
Toronto, Canada
June 25, 2008

07084


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைச்சி பிரதேச சபை

## கிளிநொச்சி

## பொது சன நூலகம்

கிளிநொச்சி/முரசுமோட்டை/வட்டக்கச்சி/ ஸ்கந்தபுரம்

இப்புத்தகம் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள திகதி அல்லது அதற்கு முன்னர் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். குறித்த தவணைக்குள் கொடுக்கப்படாத புத்தகம் ஒவ்வொன்றுக்கும் வாரம் ஒன்றுக்கு குற்றப்பணமாக ரூபா 10/- அறவிடப்படும் என்பதனை அறியத் தருகின்றோம்.

| | | |
|---|---|---|
| 26/09/94 | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பசுந்தீவு கோவிந்தன் கடந்த ஆறு வருடங்களாக தொடர்கதைகளை எழுதி வருகிறார். இவருடைய படைப்புக்கள் கனடா முரசொலிப் பத்திரிகையிற் கிரமமாய்ப் பிரசுரிக்கப்பட்டு வருவதை வாசகர்களாகிய நீங்கள் அறிவீர்கள். இவர் ஒரு முழுநேர வங்கி ஊழியராகத் தொழில் புரிந்து வருகின்றபோதும், கிடைக்கும் சிறிதளவு ஓய்வு நேரத்தை எழுத்துத் துறையிற் பயன்படுத்துகிறார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். அந்த வகையில் இவர் கொண்டிருக்கும் ஆர்வம் பாராட்டுக்குரியது.

இவர் தனது படைப்புக்களில் நான்கினைத் தொகுத்து "வாடாத றோசா" என்ற பெயரில் முதலாவது நூலை 2007ஆம் ஆண்டில் வெளியிட்டிருந்தார். இவருடைய இந்நூல் வாசகர்களின் வரவேற்பைப் பெற்றதென்பது ஒரு நற்செய்தியாகும். இவருடைய கற்பனா சக்தியும் பாத்திரங்களை உருவாக்கி அவற்றிற்கு உயிரூட்டும் திறனும் வாசகர்களின் பெரும் பாராட்டைப் பெற்ற அம்சங்கள் என்பதை பலர் ஏற்கனவே அறிந்திருப்பீர்கள்.

வாசகர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற வரவேற்பைத் தொடர்ந்து, தனது படைப்புக்களில் இரண்டினைத் தொகுத்து "தீர்ப்பு" எனும் தலைப்பில் இந்நூலை வெளியீடு செய்கிறார். இந்நூல் எழுத்துத் துறையில் இவர் பெற்றிருக்கும் அனுபவத்தையும் அடைந்திருக்கும் வளர்ச்சியையும் வெளிப்படுத்துமாற்போல் அமைந்துள்ளது என்றால் இதைப் படிக்கும் அனைவரும் ஏற்றுக் கொள்வீர்கள்.

வாசகர்களுடைய ஓய்வு நேரத்தை மகிழ்ச்சியோடு கழிப்பதற்கு இந்நூல் பெரிதும் உதவுமென்பது எங்களுடைய அசைக்க முடியாத நம்பிக்கை. இவருடைய இரண்டாவது நூலாகிய "தீர்ப்பையும்" பிரசுரிப்பதில் நாங்கள் பெரு மகிழ்ச்சியடைகிறோம். வாசகர்களின் ஆதரவே எழுத்தாளனை இயக்கும் சக்தியாகும்.

பதிப்பகத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org